# வெற்றியின் வாசலில்...



மவ்லானா வஹீதுத்தீன் கான்

# வெற்றியின் வாசலில்...

*மனிதன் தனக்குள் மறைந்திருக்கும் ஆற்றலை அறிந்து உயர்ந்த இலக்குகளை அடைய ஒரு வழிகாட்டி நூல்.*

**மவ்லானா வஹீதுத்தீன் கான்**

*தமிழில்*

**கொள்ளு நதீம்**

*மீளாய்வு*

**பைஸ் காதிரி**

**குட்வேர்ட் புக்ஸ்**

# வெற்றியின் வாசலில்...

ஆசிரியர் : மவ்லானா வஹீதுத்தீன் கான்

ஆங்கிலத்தில் : Dr. ஃபரிதா கானம்

தமிழில் : கொள்ளு நதீம்

மீளாய்வு : பைஸ் காதிரி

முதற்பதிப்பு : ஜனவரி 2023

English Version : The Secret of Success

Urdu Version : Raz e Hayat

This book is copyright free.

CPS International
Centre for Peace and Spirituality International
1, Nizamuddin West Market, New Delhi – 110013, India.
e-mail: info@cpsglobal.org
www.cpsglobal.org

Goodword Books
A-21, Sector 4, Noida – 201301, Delhi NCR, India.
e-mail: info@goodwordbooks.com
www.goodwordbooks.com

Center for Peace and Spirituality USA
2665, Byberry Road, Bensalem, PA 19020, USA.
e-mail: kkaleemuddin@gmail.com

Goodword Books – Chennai
324, Triplicane High Road, Chennai-600005, India.
e-mail: chennaigoodword@gmail.com
Mob: +91 97908 53944 / +91 96001 05558

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 10 |
| 1 | தேன் தரும் பாடம் | 13 |
| 2 | இயற்கையின் எடுத்துக்காட்டுகள் | 14 |
| 3 | வாழ்வின் விசையாற்றல் | 15 |
| 4 | மரம் ஆசிரியராக | 16 |
| 5 | எளிய தீர்வு | 17 |
| 6 | குறிப்புணர்தல் | 18 |
| 7 | பேரழிவுக்குப் பின்பும் | 19 |
| 8 | இயைந்து போதல் | 20 |
| 9 | முயற்சி திருவினையாக்கும் | 21 |
| 10 | முன்னேற்றத்துக்கான முன்னெடுப்பு | 23 |
| 11 | இருபது ஆண்டுகளுக்குப் பிறகு | 24 |
| 12 | சொந்தத் தவறுகளிலிருந்து பாடம் கற்போம் | 26 |
| 13 | விசையும் திசையும் | 27 |
| 14 | இது காலம் குறித்த கேள்வி | 29 |
| 15 | துன்பத்திற்குப் பின்பான இன்பம் | 30 |
| 16 | தவிர்க்க முடியாத தீமை | 31 |
| 17 | வெற்றியின் இரகசியம் | 32 |
| 18 | முறையீடு | 34 |
| 19 | வாய்ப்புகளுக்கு முடிவே இல்லை | 35 |
| 20 | எதையும் பெறுவதற்கு முன்பு | 36 |

21 இயற்கையின் அடிப்படை 37
22 இயற்கை விதிகள் 38
23 உடைந்த பிறகு 39
24 உலகம் தட்டச்சு இயந்திரமில்லை 39
25 இறைவனின் படைப்புத் திட்டம் 41
26 இம்மையும் மறுமையும் 43
27 மனிதனுக்கு ஏற்படும் சோதனைக்கான காரணங்கள் 44
28 தெய்வீகத் திட்டம் 45
29 தற்கொலை ஒரு தீர்வு அல்ல 46
30 சோதித்துப் பார்த்தல் 47
31 தொலைநோக்குத் திட்டம் 48
32 வெற்றி பதினைந்து ஆண்டுகளில்... 49
33 யதார்த்த வழிமுறை 51
34 இரண்டாம் வாய்ப்பு இல்லை 52
35 வீண் பகட்டு 54
36 உடனடி பதில் 55
37 பொறுத்தார் பூமியாள்வார் 56
38 பகைமை வேண்டாம் 57
39 பாய்ச்சல் கூடாது 59
40 தப்பிப் பிழைத்தல் 60
41 பெருமையின் ஆணிவேர் 61
42 ஒற்றுமையின் விலை 62
43 ஒற்றுமையின் இரகசியம் 63
44 சரியான பதிலடி 64
45 ஒப்புதல் வாக்குமூலம் 65
46 வாழ்க்கை உணர்த்தும் செய்தி 66
47 அறிவியல் மனநிலை 67
48 அவர் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேற்றப்பட்டார் 68
49 கோபத்தைக் கட்டுப்படுத்துதல் 70
50 சாதகமற்ற சூழல் 71
51 நீ ஏழையல்ல, பெருஞ்செல்வந்தன் 71
52 ஊனமே பலமாக 73
53 வருந்தாதீர் 74

| | | |
|---|---|---|
| 54 | வரலாறு படைத்தல் | 75 |
| 55 | பாதுகாப்பான பயணம் | 77 |
| 56 | மேன்மையான இடம் | 77 |
| 57 | தார்மீக வாரிசுரிமை | 79 |
| 58 | வேரிலிருந்து | 81 |
| 59 | எல்லைகளை வென்று | 82 |
| 60 | கல் தந்த பாடம் | 84 |
| 61 | முன்னறிதலின் நன்மை | 85 |
| 62 | முறையிடாத பொறுமை | 86 |
| 63 | நேர்கொண்ட பார்வை | 87 |
| 64 | தற்கொலை | 88 |
| 65 | ஆசிரியர் இன்றி | 89 |
| 66 | அதே செலவில் | 91 |
| 67 | சூழலைக் கருத்தில் கொண்டு | 92 |
| 68 | தொடங்குவதற்கு முன்பே... | 93 |
| 69 | மகிழ்ச்சியைப் பெறுவது எப்படி? | 94 |
| 70 | நிகழ்வுகளில் நீக்குப்போக்கு | 95 |
| 71 | தலைகீழ் முடிவு | 97 |
| 72 | சச்சரவுகளிலிருந்து விலகி... | 98 |
| 73 | இரண்டாவது முறை தவறு வேண்டாம் | 100 |
| 74 | கதை உருவானது | 101 |
| 75 | பொருள் பொதிந்த வாழ்க்கை | 102 |
| 76 | முழுமையான ஈடுபாடு | 103 |
| 77 | குறிக்கோள் | 104 |
| 78 | முழு அர்ப்பணிப்பு  பாரிய சாதனை | 106 |
| 79 | கற்பேன், கற்பிப்பேன் | 107 |
| 80 | புதிய ஆற்றல் எழுந்தது | 108 |
| 81 | பயனற்ற ஈடுபாடு | 109 |
| 82 | செய்ய வேண்டிய பணி இன்னும் இருக்கிறது | 110 |
| 83 | நில், கவனி, செல்! | 111 |
| 84 | நற்பண்பின் வலிமை | 112 |
| 85 | நன்னம்பிக்கை ஏற்படுத்துங்கள் | 113 |

| | | |
|---|---|---|
| 86 | ஆர்வம் போதுமானது | 114 |
| 87 | தடைகளுக்கு அப்பால் | 116 |
| 88 | அறிவைப் பயன்படுத்துதல் | 117 |
| 89 | கொடுத்தால் பெறுவோம் | 118 |
| 90 | வெறுமனே... | 119 |
| 91 | தாமதம் கூடாது | 120 |
| 92 | சிறந்ததை உருவாக்கு | 121 |
| 93 | பெரிய பாய்ச்சல் எப்போது? | 123 |
| 94 | பூச்சியத்திலிருந்து | 124 |
| 95 | மேன்மேலும் திடம் | 125 |
| 96 | மேலிடம் எப்பொழுதும் நிரப்பப்படாமல் இருக்கும் | 126 |
| 97 | எல்லாம் நமக்குள்ளே | 128 |
| 98 | கனவும் வெற்றியும் | 129 |
| 99 | வெற்றியின் உளவியல் | 130 |
| 100 | கொடுத்து பெறுவதன் விதிகள் | 131 |
| 101 | பெருஞ் சாதனையாளர்கள் | 132 |
| 102 | திறனை நிரூபித்தல் | 133 |
| 103 | தனித்திறன் | 136 |
| 104 | புது யுகம் | 137 |
| 105 | வாய்ப்புகளை பயன்படுத்துதல் | 138 |
| 106 | ஒவ்வொரு புலர்ச்சியும் | 139 |
| 107 | குறையை ஈடுசெய்தல் | 140 |
| 108 | அவநம்பிக்கை வேண்டாம் | 141 |
| 109 | தோல்வி : ஒரு பகுப்பாய்வு | 142 |
| 110 | தோல்வியே வெற்றியாக மாறும் | 143 |
| 111 | காலமாற்றத்திற்கு எதிராக | 144 |
| 112 | யார் அறிவாளி? | 145 |
| 113 | தலைகீழ் பாய்ச்சல் | 146 |
| 114 | சுயமாக அறியவேண்டும் | 146 |
| 115 | வெற்றியின் எளிய விதிகள் | 148 |
| 116 | வெற்றிக்கான திட்டமிடல் | 149 |
| 117 | வேலை உண்டு, பணியாளர் இல்லை | 150 |
| 118 | கொடுப்பவராக மாறுங்கள் | 151 |

119 கடின உழைப்பின் மூலமாக 152
120 தொழிலில் ஈடுபாடும் முனைப்பும் 153
121 சிறந்த திட்டமிடல் 154
122 தவறு செய்யும் துணிவு 155
123 சொல்லாமலே 156
124 சாதாரண முன்னெடுப்பு 157
125 பிரச்சனைகளும் வாய்ப்புகளும் 159
126 புலியிடமிருந்து கற்றல் 160
127 அடிப்படைக் கட்டுமானம் 161
128 தவற்றை ஏற்றுக்கொள்வதால்... 162
129 பிராயசித்தம் 164
130 வணிக இரகசியம் 164
131 உச்சித் தொட்ட மனிதர்கள் 166
132 அதீத எதிர்ப்பார்ப்பு 167
133 வெற்றியின் விலை 167
134 பெரிய வெற்றிக்கு 168
135 பொருள் பொதிந்த வாழ்க்கை 169
136 ஆளுமையைக் கட்டமைத்தல் 171
137 பழியெனும் வெஞ்சினம் 172
138 இரட்டை நிலைப்பாடு வேண்டாம் 173
139 மனநிறைவான வாழ்க்கை 174
140 மிகப் பெரிய உத்திரவாதம் 175
141 முன் தயாரிப்பு 176
142 பொறுமையின்மையின் விளைவு 178
143 அமைதி காத்தல் 179
144 இப்படியும் ஒரு வழி உண்டு 180
145 எதிர்வினையின்றி 181
146 விரும்பத்தகாத சூழல் 183
147 தோல்வியை ஏற்றுக் கொள்ளுதல் 184
148 நொறுங்கிய பின் 185
149 உறுதியான தியாகம் 186
150 மெய்ப்பொருள் காண்பது அறிவு 187
151 தன்னம்பிக்கையின் இரகசியம் 188

| | | |
|---|---|---|
| 152 | பெரிய மனிதன் | 189 |
| 153 | அங்கீகரிக்காமல் | 190 |
| 154 | தொடர் பிழை | 191 |
| 155 | மாபெரும் வெற்றி | 192 |
| 156 | பிறருக்கு எதிரான முறையீடு | 193 |
| 157 | மனித ஆளுமை | 194 |
| 158 | நற்குணத்தின் வலிமை | 195 |
| 159 | உறுதியான பண்பு | 198 |
| 160 | தனி நபர் மீது கவனம் | 200 |
| 161 | சுய மதிப்பீட்டின் தேவை | 201 |
| 162 | தம் குறைகளை அறிதல் | 202 |
| 163 | பொறுமை, உறுதி, அன்பு | 204 |
| 164 | நல்லிணக்க வாழ்வின் இரகசியம் | 205 |
| 165 | நடைமுறைத் தீர்வு | 206 |
| 166 | சமூக ஒற்றுமை | 207 |
| 167 | காலமாற்றம் | 208 |
| 168 | உண்மையை ஏற்க மறுத்தல் | 209 |
| 169 | கடினமான சூழ்நிலையை எதிர்கொள்ளல் | 210 |
| 170 | ஆய்வு செய்யுங்கள் | 211 |
| 171 | இளைஞர்களை ஊக்குவித்தல் | 212 |
| 172 | குழு விசுவாசம் | 215 |
| 173 | தலைகீழ் பிரமிடு | 216 |
| 174 | சந்தேகங்கள் | 217 |
| 175 | ஆரோக்கியமான விமர்சனம் | 218 |
| 176 | அறிவின் போதாமை | 219 |
| 177 | நமது பாத்திரம் | 220 |
| 178 | இணைந்து / ஒன்றுகூடி பணியாற்றுதல் | 222 |
| 179 | தாமாக அறிந்து கொள்ளல் | 223 |
| 180 | உண்மையான தீர்வு | 224 |
| 181 | ஒருங்கிணைந்த பணி | 225 |
| 182 | நற்குணத்தின் முக்கியத்துவம் | 226 |
| 183 | உறுதியான நாட்டைக் கட்டமைத்தல் | 227 |
| 184 | ஆக்கப்பூர்வமான நடத்தை | 228 |

185 ஜப்பானிய அனுபவம் 229
186 சுய முயற்சியில்... 232
187 ஒன்றன்பின் மற்றொன்று 233
188 பீனிக்ஸ் பறவைப் போல் 234
189 பொருளாதாரத் தாக்குதல் 236
190 கல்வியின் முக்கியத்துவம் 238
191 கவனமின்மை என்பது அறநெறிக் குறைபாடு 239
192 நிலைத்தன்மை 240
193 விழுமியங்களும் தொழில்நுட்பமும் 241
194 புதிய தலைமுறை 242
195 தொடக்கம் கீழிருந்து 244
196 மனவுறுதியின் தேவை 245
197 நோபல் பரிசை வெல்வது எப்படி? 246
198 வேறுபாட்டிற்கான காரணம் 247
199 கூட்டுச் செயல்பாடு 248
200 கொடுத்தால் பெறுவோம் 249
201 ஆக்கப்பூர்வ சிறுபான்மை 250
202 நெகிழ்வான அணுகுமுறை 250
203 உலகத் தலைமை 252
204 ஒரு நாட்டின் வளர்ச்சி 253
205 அமைதியான கட்டமைப்பு 254
206 தவறான முன்னெடுப்பு 255
207 முதலில் மனவிழிப்பு 256
208 சமூக மரம் நடும் முன் 257
209 பிறருக்கு வழிவிடுதல் 258

## முன்னுரை

புகழ்பெற்ற உளவியலாளர் Alfred Adler (1870-1937) என்பவர் தனி மனித ஆளுமையில் அதிக கவனம் செலுத்தியவர். Alfred Adler இயங்கிய துறையை கவனித்துக் கொண்டிருக்கும் ஒரு ஆய்வாளர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்:

“குறைகளை நிறைகளாக்கும் தன்மையே மனிதர்களின் அற்புதமான பண்புகளில் ஒன்று” என வாழ்நாள் முழுவதும் மனிதர்களையும் அவர்களுக்குள் மறைந்திருக்கும் ஆற்றல்களை ஆய்வு செய்த பிறகு Alfred Adler கூறினார்.

இறைவன் மனிதர்களை அசாதாரண திறன்களுடன் படைத்துள்ளார். இந்த மேற்கோள் இறைவனுடைய திருப்பணியின் சுருக்கமான ஒப்புதலாகும். உண்மையில் மனிதனிடம் இருக்கும் திறன்களில் மிகப்பெரிய அம்சங்களில் ஒன்று ஒரு நபர் இருளில் கூட வெளிச்சமான ஒன்றைக் காணமுடியும் என்பதே ஆகும். சாதகமற்ற சூழ்நிலைகளைச் சாதகமாக மாற்ற முடியும் என்று அவர் காண்கிறார். தோல்வியில் கூட, அவர் வெற்றியை அடைய புதிய வாய்ப்புகளைக் காணலாம்.

தன் குறைகளை நிறைகளாக்கும் அம்சத்தை மனிதன் தன் இயல்பில் கொண்டிருக்கிறான் என்பதே உண்மை. பிரச்சனையை நிர்வகிக்கத் தெரிந்திருக்க வேண்டும், மாறாகப் பிரச்சனையுடன் மோதல் போக்கைக் கைவிட வேண்டும் என்பதே அதனுடன் இணைந்துள்ள ஒரே நிபந்தனையாகும். ஒரு நபர் தான் எதிர்கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். பிறகு தன் நடவடிக்கையை அவர் புறவயமாக திட்டமிட வேண்டும்.

மோதலைக் கைவிட்டு பிரச்சனையைச் சரிவரக் கையாளக் கூடியவரால் மட்டுமே வெற்றி அடையமுடியும். மோதலில்லாத முறைகள் எப்போதும் நேர்மறையான முடிவுகளைத் தருகின்றன. மோதல் போக்கு சிக்கல்களை மேலும் மோசமாக்கும்.

செயல்பாட்டில் விருப்பம் கொண்டிருப்பதே மனித வாழ்க்கையில் முக்கியமான ஒன்றாகும். பாதகமான சூழ்நிலகளைக் கண்டு அச்சப்படாமல், புலம்பாமல், நேரத்தை வீணாக்காமல் இருப்பவர்களால் மட்டுமே இறுதியில் வெற்றி பெற இயலும். சிரமங்களில் கவனம் செலுத்தக் கூடியவர்கள் அதைச் சமாளித்து விடுவார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கஷ்டங்களை சந்திக்காதவர் வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் அல்ல. எத்தனை தடை வந்தாலும் தன் குறிக்கோளை நடைமுறைப்படுத்தியவரையே வெற்றிகரமானவர் என நம்மால் கூற இயலும். தன் பாதையில் கண்ட அத்தனைத் தடைகளையும் மீறிச் சென்ற நபரால் மட்டுமே இலக்கை அடைய முடியும். நெருப்பிலும், நீரிலும் கடைசி வரை போரிடத் தயாராக இருப்பவர் அவர்.

இறைவன் இந்த உலகை குறிப்பிட்ட சாத்தியக்கூறுகளுடன் படைத்துள்ளான். இங்கே ஒரு முயற்சி தோல்வியடையும்போது இருளிலில் ஒரு ஒளி பிறக்கும். இடிந்து விழும் ஒவ்வொரு வீட்டிற்குக் கீழும் ஒரு இடம் காலியாகக் கிடக்கிறது. மனித வாழ்க்கையும் அப்படித்தான். இங்கே ஒவ்வொரு தோல்வியின் போதும், வெற்றிக்கான புதிய வாய்ப்பு பிறக்கிறது. இரு நாடுகளின் போட்டியில் ஒரு நாடு வளர்ச்சி அடைகிறது, மற்றது பின் தங்கிவிடுகிறது. விஷயம் அங்கு முடிந்துவிடுவதில்லை.

அதனைத் தொடர்ந்து வளர்ந்த நாடுகளில் ஆடம்பரமான வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து வசதி வாய்ப்புகளை அனுபவிக்கும் செயல்முறை வடிவம் பெறத் தொடங்குகிறது. பின் தங்கிய நாடுகளின் மக்கள் கடின உழைப்பு, பெரு முயற்சிகளில் ஈடுபட்டு முன்னேறி வருவார்கள்.

இறைவனின் இந்த உலகில் ஏமாற்றம் அடைய வேண்டியதில்லை, மனச் சோர்வு கொள்ளத் தேவையில்லை என்பதே இதன் பொருளாகும். நம்பிக்கை இழக்க வைக்கும் சூழ்நிலையிலும் வெற்றிக்கான புதிய வாய்ப்புகள் எப்பொழுதும் இருக்கும். தோல்வியை வெற்றியாக மாற்ற புதிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும், அவ்வளவுதான்.

மேலும், இவ்வுலகில் பற்றாக்குறை என்பது மதிப்பற்ற ஒன்றல்ல, போதாமைதான் பேரார்வத்தைத் தூண்டக்கூடியது. அது குழுவைச் சுறுசுறுப்பாக மாற்றுகிறது. அவ்வாறு வெற்றிக்கான வாய்ப்பாக அது உருமாறுகிறது.

உரிய நிலைகளைக் கடக்காமல் வாழ்க்கையில் முன்னேற்றம் காணமுடியாது. அவ்வாறு நினைக்கக் கூடியவர்கள் தமக்குரிய உலகத்தைத் தாமே சுயமாகப் படைத்துக் கொள்ள இயலுமா? இது இறைவன் படைத்த உலகம், இங்கு அவனுடைய விதிகளே செல்லுபடியாகும், வீண்கற்பனைகளுக்கு இங்கு இடமில்லை.

வஹீதுத்தீன் கான்,
8 மே 2019, புதுடில்லி

# தேன் தரும் பாடம்

தேனீக்கள் மலர்களிலிருந்து தேனை உறிஞ்சிவிடுகின்றன. அவ்வாறு எடுப்பவற்றில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே தேனாக மாறுகிறது. இருபது இலட்சம் பூக்களிலிருந்து சேமிக்கப்படுவது ஒரு பவுண்ட் (அரை கிலோவுக்கும் சற்றே குறைவான அளவு) தேனாகும். இதற்காகக் குறைந்தபட்சம் முப்பது இலட்சம் முறை பூவுக்கும், கூட்டுக்குமென தேனீக்கள் பறக்கின்றன. அந்தப் பயணங்களைக் கணக்கிட்டால் தோராயமாக ஐம்பதாயிரம் மைல்கள் ஆகும். தேவையான அளவு சேகரித்த பின்பே தேன் உற்பத்தியென்பது தொடங்குகிறது.

தொடக்க நிலையில் தேன் தண்ணீரைப் போலவே இருக்கும். காற்றாடியைப் (fan) போல இருக்கும் தேனீயின் சிறகுகள் இந்த அதிகப்படியான நீரை ஆவியாக மாற்றி வெளியேற்றி விடுகின்றன. அதன்பிறகு எஞ்சுவதைத் தன் வாயில் உறிஞ்சிக் கொள்ளும். இனிய நீர்மத்தைத் தேனாக மாற்றும் பணியைத் தேனீயின் வாயிலுள்ள சுரப்பி கவனித்துக் கொள்கிறது.

இப்படியாகக் கடும் உழைப்பால் வேலைக்காரத் தேனீக்களால் உருவாக்கப்படும் மெழுகுக் கூட்டிலுள்ள துளையில் தேன் செலுத்தப்படுப்படுகிறது. இந்தச் சேமிப்பு முறையில் மனிதர்களுக்குப் பயனளிக்கும் பாதுகாப்பான, தூய்மையான தேன் கிடைக்கிறது.

இதைப் போன்ற ஏராளமான வேறு முறைகளிலும் தேன் சேமிக்கப்படுகிறது. ஒரேயொரு மந்திரச் சொல்லைக் கொண்டு ஒரே நொடியில் இறைவனால் தேனாற்றையும் கொண்டு வந்திருக்க முடியும்? இறைவன் யாவற்றினும் வல்லவன்; பேராற்றல் கொண்டவன் என்பது உண்மை அல்லவா? ஆனால் இறைவன் ஒழுங்கமைப்பில் தேன் உறுபத்தியைப் பொருந்த வைத்துள்ளான். இதன்மூலம் மனிதர்களுக்குப் படிப்பினை அளிக்கப்பட்டிருக்கிறது. பிரபஞ்ச விதிகள், முறைகள் ஆகியவற்றைக் கூர்ந்து கவனித்துப் பின்பற்றும்போது இவ்வுலகை மனிதனால் வெற்றி கொள்ளமுடியும்.

தேன் உற்பத்தியைத் திட்டவட்டமான முன்னேற்பாடுகளைக் கொண்டது என்று சொல்லலாம். மனிதர்களும் இம்முறையைப் பின்பற்றலாம். முன்கூட்டிய முறையான செயல்பாடுகள் வாழ்க்கையில் பொருட்படுத்தத்தக்க வெற்றிக்கு உதவும். தேனீக்களுக்குக் கிடைக்கும் அதே வெற்றி மனிதர்களுக்கும் நிச்சயம் கிடைக்கும்.

## இயற்கையின் எடுத்துக்காட்டுகள்

முதுமை, உடற்காயம் போன்ற காரணங்களால் தனது இரையை ஓடியாடி வேட்டையாட முடியாமல் போகும்போது மட்டுமே ஒரு புலி ஆட்கொல்லியாக மாறுகிறது. புலிக்கு ஏற்படும் காயமானது பெரும்பாலான நேரங்களில் அரைகுறை வேட்டைக்காரர்களால் ஏற்படுவதே என்று இத்துறையின் நிபுணர் கூறுகிறார். (The Times of India, May 12, 1984)

"புலி ஓர் ஆட்கொல்லி" என்பதில் உண்மையில்லை. ஆனால் பிற விலங்குகளவிட புலி தன் எதிரியைக் கொல்வதில் கெட்டிக்கார விலங்கு. "எதிரி"யாக தான் பாவிக்கும் ஒரு மனிதனை அல்லது ஒரு விலங்கை புலி கொல்லாமல் விடுவதில்லை. புலி மனிதனைக் கண்டு விலகி ஓடும் இயல்புள்ளது.

போதுமான பயிற்சியின்மை, உரிய ஆயுதங்கள் இல்லாமை, குறி தவறிய வேட்டை ஆகியவை காயங்களுடன் புலியைத் தப்ப வைத்துவிடுகின்றன. இதனால் உணவுக்காக பிற கால்நடைகளை வேட்டையாடும் வலிமையை இழந்து போகும் புலி, கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டு மனிதனைத் தன் எதிரியாக கருதத் தொடங்கி "ஆட்கொல்லி"யாக உருவாகிறது. மனிதனை எதிரியாக நினைத்த பிறகு தன் எதிரில் வரும் எந்தவொரு மனிதனையும் புலி கொல்லாமல் விடுவதில்லை.

இது இயற்கையின் விதிகளில் ஒன்று. புலி மனிதன் என்கிற எதிர்நிலையைப் போல மனிதன் மனிதன் என்கிற எதிர்நிலைக்கும் இது பொதுவானதே. தனி மனிதன், சமூகம், எதுவானாலும் இந்த விதி பொருந்தக் கூடியதே. முழுமையாக ஒழித்துக் கட்ட முடியாத நிலையில் "எதிரி"யைக் கூட பழிவாங்கக் கூடாது. காயமடைந்த எதிரி முன்பைவிடக் கடுமையாக மாறிவிடுவது இயற்கை.

போதுமான தயாரிப்புகள் இல்லாமல் எதிரியோடு மோத நேருவதென்பது தன் குழியைத் தானே வெட்டும் நிலையைப் போன்றது. பொறுமையின்மை எந்தவிதத்திலும் உதவப் போவதில்லை. சரியான திட்டமிடுதல் இல்லாமல்நிதானமான செயல்பாடுகளால் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளாது சாதாரண எதிரியைப் பெரிய எதிரியாக்கும் நிலையை உருவாக்கி அதன்பின் இடும் வெற்றுக் கூப்பாடுகளுக்கும் முறையீடுகளுக்கும் எந்தவித அர்த்தமும் இல்லை.

# வாழ்வின் விசையாற்றல்

முற்றத்தில் கொடிகள் படர்ந்து கிடந்தன. வீட்டைப் புதுப்பிக்கின்ற பணியின்போது அவை பூமிக்கு அடியில் அமுழ்ந்திப் போயின. வீட்டுக்காரர் வேர்களையும், கிளைகளையும் முடிந்தவரை வெட்டியெறிந்து விட்டார். இனி எந்தவொரு செடியும், கொடியும் வீட்டினுள் உயிர்த்தெழவே முடியாதபடி சிமிண்ட் பூசி செங்கற்களைப் பரப்பி விட்டார்.

செடி, கொடிகளைப் பிடுங்கி எறிந்த இடத்தில் சில வாரங்களுக்குள் அற்புதமொன்று நிகழ்ந்தது. செங்கற்கள் ஓர் இடத்தில் மேலெழுந்திருந்தன. அந்தச் செங்கற்களை யாரோ தட்டியெடுத்ததுபோல காணப்பட்டது. சிலர் அங்கு எலிப் பொந்து இருந்திருக்குமென்று கூறினர். அங்கிருந்த செங்கற்களை அப்புறப்படுத்திப் பார்த்தபோது புதைக்கப்பட்ட கொடி இன்னும் உயிர்த்திருந்ததும் அதனால் மேலிருந்த செங்கல்லை நெட்டித்தள்ளி மேலெழுந்ததன் விளைவே அதற்குக் காரணம் என்கிற புதிரும் அவிழ்ந்தது. எவ்வளவுதான் செடிகொடிகளை வெட்டியெறிந்திருந்தாலும், வேர்களில் உயிரிருக்கும்பட்சத்தில் ஒரு நேரத்தில் அது துளிர்க்கும், கையில் பிசைந்து நசுக்கிவிட முடிகிற, தழைகளுக்குச் செங்கற்களையும், சிமிண்ட் தரையையும் பெயர்த்து விடுகின்ற உயிர் விசை, எத்தனை பலமானது.

செடி கொடியை வெட்டியெறிய நினைத்ததற்கு வருந்திய வீட்டுக்காரர், உயிர்வாழும் விருப்பத்தை இந்தச் செடி தெரிவிப்பதாகக் கருதினார். இந்தச் செடியின் வழியில் இனி ஒருபோதும் தான் குறுக்கே நிற்கப் போவதில்லை என்றும், இன்னும் ஒரு சில செங்கற்களைப் பெயர்த்தெடுத்து அந்தச் செடி நன்கு செழித்து வளரப் போதுமான இடைவெளியும் விட்டார். அதன் பிறகு செடிகொடி வெட்டியெறியப்பட்ட அதே இடத்தில் ஓர் ஆண்டுக்குள் 15 அடிகள் உயரத்தில் கொடிமரமாகக் கிளைவிட்டுப் படர்ந்திருந்தது.

சிறிய கூழாங்கல்லைக் கூட பெரும் பரப்பளவில் உயர்ந்து நிற்கும் மலையால் எட்டித்தள்ளிவிட முடியாது. ஆனால் பெரும் பாறையை மீறி சிறியதொரு விதை முளைத்துக் குருத்தாக துளிர்த்துவிட முடியும். இந்த ஆற்றலை அது எங்கிருந்து பெறுகிறது? உயிர் என்பது இயற்கைப் பேராற்றலின் அற்புதம் அல்லவா? பிரபஞ் சத்தின் தொடர் செயல்பாட்டில் "உயிர்" என்பது தன் "உரிமை"யைப் பெற்றே தீரும். வேரை வெட்டியெறிந்தபோதும், அது நிலைத்திருக்கும். அசைவற்றுக் கிடந்தாலும் வாய்ப்புள்ள பிறிதொரு இடத்தில் அது

மீண்டெழும். இனி எதுவுமே எஞ்சவில்லையென்று குப்பைமேடாகத் தோன்றும் இடத்தில்கூட "உயிர்" தலையெடுக்கும்.

## மரம் ஆசிரியராக

மரத்தின் ஒருபாதி, தண்டுப் பகுதியெனவும் மறுபாதி வேர் எனவும் அறியப்படுகிறது. இன்னொரு வகையில் சொன்னால் மரத்தின் மேற்பரப்பு எவ்வளவு விரிந்திருக்கிறதோ அதுபோல் பூமிக்கடியில் வேரும் படர்ந்திருக்கும் என்று தாவரவியலாளர்கள் கணிக்கின்றனர். வேர்கள் மண்ணில் ஆழப்புதைந்து போகிற அதே அளவு மரத்தின் மேற்புறமும் பூத்துக் குலங்கும். மரங்கள் மனித குலத்திற்கு அளிக்கும் முன்மாதிரிப் பாடம் இது. மனிதன் தன் வாழ்க்கையைத் திடமாக்கிக் கொள்ளும் பாடத்தை எவ்வாறு கற்றுக் கொள்ளமுடியும் என்பது பற்றி ஞானியொருவர் இவ்வாறு குறிப்பிடுகிறார் :

"கீழ்நோக்கிய வேர்கள், மேல்நோக்கிய கனிகள்" என்பதே இயற்கையின் விதி, தெய்வீக நியதி. தண்டுக்கு மேலே நீண்ட கிளையிலிருக்கும் ரோஜாவின் நிறமும் மணமும் அழகின் சரிவிகிதக் கலவை. வேர் பூமிக்கடியில் போகும்போதே இந்த முழுமை சாத்தியமாகிறது. பயிரிடும் விவசாயியும், தோட்டக்காரரும் இந்த ஒப்புமையை உணர்ந்திருக்கின்றனர். வேரின் தியாகத்தால் மட்டுமே இந்த நறுமணச் செடி என்பதை மறந்து விடுவது முறையா? வேர் மண்ணுக்கு அடியில் போவதும், பூக்கள் வெளியே கிளைகளில் மலர்வதும் தொழிற் பங்கீடு–அங்குதான் செழுமை இருக்க முடியும். கூட்டு வாழ்க்கையில் வேர்களை அகல பரப்புவதால் மட்டுமே முழுமையான மகிழ்ச்சி உண்டாகும்.

வேர்களை மண்ணுக்கு அடியில் ஊன்றுவதன் மூலமே தரையில் மரம் நிற்க முடிகிறது. அது மண்ணுக்கடியிலிருந்து மேல்நோக்கி வளர்கிறது. பூமியில் வேர்கள் பரவுகிற அளவில், வேகத்தில் மரமும் பெரியதாகும். இயற்கை ஆசிரியராகி நமக்குக் கற்றுத் தரும் பாடமாகும், இது. வெளிப்புறமாக முன்னேற வேண்டுமானால் முதலில் உள்நோக்கி வலுப்படுத்திக் கொள்ளவேண்டும். அதேபோல சமூகத்தை, நாட்டை கட்டியெழுப்ப நினைப்பவர்கள் தம் அடித்தளத்தை உறுதியாக்கிக் கொள்ளவேண்டும். தொடக்கம் இங்கிருந்தே என்பதை அறிந்து வைத்திருக்க வேண்டும்.

# எளிய தீர்வு

முன்பு (யூனானி) மருத்துவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரிடம் ஒருவர் கையடக்கப் பெட்டி ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தார். "இதில் தங்க நகையுள்ளது. இதன் மதிப்பு இருபதாயிரம் ரூபாய்க்கும் குறைவில்லை. எனக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுக்கவும். எனக்கு அவசரத் தேவை உள்ளது. ஒரு மாதத்தில் பணத்தைத் திருப்பிக் கொடுத்து இந்த நகையை மீட்டுக் கொள்கிறேன் என்றார். இது போன்ற வேலைகளில் நான் ஈடுபட்டதில்லை என்று அந்த மருத்துவர் சொன்னார். ஆனால், அந்த நபர் தன் இயலாமையை விளக்கிய விதம், மருத்துவரின் மனதை இளகச் செய்தது. ஐயாயிரம் ரூபாய் அம்மருத்துவர் அவருக்குக் கொடுத்து அனுப்பினார். பிறகு அந்த நகையை அவர் இரும்புப் பெட்டகத்தில் வைத்துப் பூட்டினார்.

பல மாதங்கள் கழிந்தன. ஆனால் அடகு வைத்த அந்த நபர் திரும்பவில்லை. மருத்துவருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. பிறகு இரும்புப் பெட்டகத்திலிருந்து நகையை வெளியே எடுத்த மருத்தவர் அதை விற்பதற்காக (நகைக்) கடைவீதிக்கு அனுப்பி வைத்தார். "நகை"யை வாங்கிப் பார்த்த பொற்கொல்லர் "இது போலியானது; வெறும் கோல்டு கவரிங் நகை" என்று சொன்னார். மருத்துவருக்குக் கடுமையான மன உளைச்சல் ஏற்பட்டது. எனினும் பணத்தை இழந்ததுபோல தன் உடல்நலத்தை இழக்க விரும்பாத மருத்துவர் இந்த ஏமாற்றம் குறித்து அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. கிட்டத்தட்ட மறந்துவிட்டார். இதற்கு முன்பு இரும்புப் பெட்டகத்தில் வைத்திருந்த அந்த நகையை வெளியே எடுத்து வெறுமனே தன் மேசையில் இடம் மாற்றியது மட்டுமே அவர் புதிதாகச் செய்த செயல். தங்க நகை இருந்த இடத்திலிருந்து கவரிங் பொருள் வைக்கும் சாதாரண இடத்திற்கு மாற்றியது மட்டுமே வேறுபாடு.

மனிதர்களுக்கு இடையில் நடக்கும் விவகாரங்களிலும் இதுவே சரியான வழிமுறை. அதிகமான புகார்கள் ஏற்படுவது இதனால்தான். ஒருவர் மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம். ஆனால் அவர் நம்பிக்கைக்குத் தகுதியானவர் இல்லை என்று பிறகு அறிய நேரிடுகிறது. ஒருவரை நாம் "நலம்விரும்பி" என்று நினைத்திருப்போம். ஆனால் அவர் நம்பிக்கைக்குரியவராகத் திகழமாட்டார்.

இது போன்ற நேரங்களில் அந்த மருத்துவர் செய்ததைப் போல நடந்து கொள்ளவேண்டும். நம் பிரச்சனையை, இரும்புப் பெட்டகத்திலிருந்து வெளியே எடுத்துச் சாதாரண மேசைக்குப் போலி நகையை இடம் மாற்றியது போல உடனுக்குடன் செய்துவிட

வேண்டும். இல்லாவிட்டால் இந்த விவகாரம் நம் மனதைக் குடைந்து கொண்டே இருக்கும்.

ஐஐஐ

## குறிப்புணர்தல்

வாகனங்களின் பெருக்கத்தால் போக்குவரத்து நெரிசல் என்பது பெருநகரங்களில் காணப்படும் தீர்க்கப்படாத பிரச்சனையாக உள்ளது. ஆகவே முக்கியமான சந்திப்புகளில் மக்கள் பார்வைக்குச் சாலை விதிகள் தொடர்புடைய அறிவிப்புப் பலகை வைக்கப்படுகிறது. "பாதுகாப்பான பயணத்திற்கு உரிய சாலையைத் தேர்ந்தெடுக்கவும்; வரிசை மாறிச் செல்ல வேண்டாம்" என்பன போன்ற அடையாளக் குறிகளை தாங்கள் கண்டிருக்கலாம்.

அதிவேகம், மிதமான வேகம் என தனக்குப் பொருத்தமான வரிசையில் பயணிக்கும் வாகன ஓட்டி, சாலைப் பாதுகாப்பில் சிறந்து இருப்பார். எந்தவொரு விபத்திலும் சிக்கிக் கொள்ளாமல் அவர் தொடர்ந்து தன் இலக்கை நோக்கி முன்னேறலாம்.

இங்கிலாந்தில் வெளியாகும் போக்குவரத்துக்கான பிரத்யேக தனிப் பத்திரிகை ஒன்றில் நிபுணர் ஒருவருடய கட்டுரை வந்திருந்தது. அதில் சுவராசியமான, முக்கியமான பல தகவல்கள் அடங்கியிருந்தன. அதாவது பிரதான சாலையில் பயணிக்கும் நபர், அருகிலுள்ள துணைச் சாலையிலிருந்து ஒரு பந்து வருவதைக் கண்டால் அருகில் குழந்தைகள் இருக்கும் என்று கட்டாயம் எதிர்பார்க்க வேண்டும். அவர் வெறுமனே எதிர்பட்ட ஒரு பந்தை மட்டுமே காண்கிறார், அங்கே குழந்தையிருக்கும் என்று நினைக்கவில்லை என்றால் அவர் நல்லதொரு வாகன ஓட்டி அல்ல. எதிர்கொண்ட பந்தை வைத்துக் கண்ணால் காணாத குழந்தையின் இருத்தலை உணர்ந்து வேகத்தைக் குறைத்துப் போதுமான எச்சரிக்கையுடன் சாலையில் கவனம் கொள்பவர் மட்டுமே நல்லதொரு வாகன ஓட்டியாக, ஒரு குழந்தையின் உயிருக்கு மதிப்பளிப்பவராக இருக்க முடியும்.

சாலைப் பயணத்தில் வாழ்க்கைக்கான பாடம் உள்ளது. சாலை விதிகளை மதிக்கக் கூடிய நபர்களால் நிறைய பாடங்களைக் கற்க முடியும்.

செயற்பாடுகளை எப்பொழுதும் அவரவர் எல்லைக்குள் வைத்துக் கொள்ள வேண்டும். தமக்குரிய வட்டத்தை மீறிச் செல்பவர்கள் பிறரோடு மோதக் கூடிய நிலைக்குத் தள்ளப்படலாம். இதனால் அவர்களது பயணம், முன்னேற்றம் தடைப்படக் கூடும். ஆகவே வெளிப்பார்வைக்குப் புலப்படும். ஆகவே வெளிப்பார்வைக்கு

புலப்படும் அறிகுறிகளைக் கொண்டு மறைந்திருக்கும் அபாயத்தை முன்கூட்டியே கணிக்கும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். எதிரில் தோன்றும் ஒன்றை மட்டுமே நேர்கொள்ளும் ஒருவரால் அதற்குப் பின்னால் பொதிந்திருக்கும் அபாயத்தைக் கணிக்க முடியாமல் போகும் வாய்ப்புண்டு. ஆகவே சாலை விதிகள் எவ்வளவு முக்கியமானவையோ, வாழ்க்கையில் தென்படும் அறிகுறிகளை கண்டுணர்வதும் அவ்வளவு முக்கியமானதே.

## பேரழிவுக்குப் பின்பும்

ஜப்பானில் பதினோரு ஆண்டுகள் தங்கி அந்த மொழியைக் கற்ற Ian Nash ஜப்பானியர்களைப் பற்றியும் அந்த நாட்டைப் பற்றியும் ஆய்வு செய்த இங்கிலாந்து அறிஞராவார். ஜப்பானியர்களின் வலிமை அவர்களின் அரசியல் ஆதிக்கத்தில் இல்லை என்று “The Story of Japan” என்ற நூலில் எழுதியுள்ளார். Kanto என்கிற இடத்தில் 01-09-1923 ஆம் தேதியன்று பூகம்பம் ஏற்பட்டபோது கிழக்கு ஜப்பானின் மக்கள் செறிவுள்ள பகுதி பேரிழப்பிற்குள்ளானது. 1945இல் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி மீது வீசப்பட்ட அணுகுண்டு இந்த இரட்டை நகரங்களைத் தரை மட்டாமாக்கிய பின்பு இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.

இருபதாண்டுகளின் இடைவெளியில் இவ்வளவு பெரிய இழப்பைச் சந்தித்த எந்தவொரு நாடும் மீண்டெழுவது முடியாத செயலே. புனர்வாழ்வு பெற்றதோடு அல்லாமல் உலகின் மிகப்பெரிய வணிக, தொழில் வளமிக்க நாடாகவும் மாறிய ஜப்பானின் சாதனை வியக்கத்தக்கது. இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் தொழில்நுட்பத்துறை செயல்படத் தொடங்கி பல ஆண்டுகள் கழித்து ஜப்பான் இத்துறையில் நுழைந்தபோதிலும் குறுகிய காலத்திற்குள் ஈடு இணையற்ற நாடாக அது மாறத் தொடங்கியது. இங்குச் சுட்டிக்காட்டப்பட்ட நாடுகளுக்கு இயற்கையாகவே கிடைத்த கனிம வளங்கள் எதுவுமே ஜப்பானிடம் இருந்தது இல்லை.

“வினையூக்கமிக்க வாழ்வு” மனிதனுக்குத் தேவையானது. இழப்பை எண்ணியெண்ணி விரக்தி உணர்வுகளுக்குள்ளாகி பயனற்ற எதிர்ப்பரசியலில் ஈடுபட்டிருந்தால் எஞ்சியிருக்கும் ஆற்றலையும் இழந்து ஜப்பானில் வீழ்ச்சி நிலைகொண்டிருக்கும். தாழ்வு மனப்பான்மையிலிருந்து விடுபட்டு நாட்டைக் கட்டியெழுப்பும் மந்திரச் சொல்லுக்கு ஜப்பானியர்கள் கட்டுப்பட்டனர். இயற்கையாக நிகழ்ந்த பூகம்பமும் அணுகுண்டுத் தாக்குதலும் இலட்சக் கணக்கான

மக்களிடம் மரண ஓலத்தை ஏற்படுத்தியது. இருந்தபோதும் அவற்றைப் புறந்தள்ளி அவர்கள் புது வாழ்வைப் பெற்றனர்.

இந்த அசாதாரண சூழ்நிலையில் மனவுறுதி கொண்டவர்களின் உள்ளாற்றல் பேருரு கொண்டு அரிய செயலைச் செய்துவிடும். சிறப்பாகச் சிந்தித்து, கடுமையாக உழைத்துத் திட்டமிட்ட பணிகளை நிகழ்த்திக் காட்டிவிடும். உறுதியற்ற மனம் உள்ளவர் வெறுமனே செயலிழந்த மோட்டார் போல எதற்கும் பயனற்றுக் கிடப்பார்.

பேரழிவின் கழிவிரக்கத்தை மனநிறைவும், ஆறுதல் உணர்வும் அடைந்து இனி ஆகப் போவதை, செய்ய வேண்டியதை முன்னோக்கும் காரணியாக மாற்ற முடியும் என்பது ஜப்பானிய அனுபவம். துன்பமும், நாசமும் நன்மை பயக்கும் பொருள் கொள்ள வேண்டியதில்லை. பெருஞ்செயலுக்குத் தூண்டிவிடும் வகையில் மனித ஆன்மாவைப் பற்ற வைக்கும் தீப்பொறியாக இது மாறியுள்ளது. முன்னோக்கிச் செலுத்தும் ஆற்றலும், இடைவிடா முன்முயற்சியும் தேவை. தன் முனைப்பு பேருதவி புரியும். கீழே வீழ்வது பற்றிய பச்சாதாப உணர்வு கொள்வதைவிட மீண்டெழும் செயலில் இறங்க வேண்டும்.

“ஒரு மனிதன் கொண்டிருக்கும் வளங்கள் அல்ல, மாறாக அவன் படுகின்ற சிரமங்கள்தான் அவனை உருவாக்கும் காரணிகள்” என்று சரியாகவே சொல்லப்பட்டுள்ளது.

ஐஐஐ

## இயைந்து போதல்

துணிக்கடைக்கு வந்த வாடிக்கையாளர் ஒருவர், தனக்குச் சட்டையைக் காட்டும்படி கேட்டார். சட்டையைத் தேர்ந்தெடுத்த வாடிக்கையாளர் நெடுநேரமாக விலையைக் குறைக்கும்படி கேட்டபடியே இருந்தார். கடைக்காரரும் விலையைக் குறைக்க விரும்பவில்லை. வாடிக்கையாளரும் குறிப்பிட்டிருந்த விலையைத் தர முன்வரவில்லை. இறுதியில் நச்சரிப்பைப் பொறுக்கமுடியாமல் வாடிக்கையாளர் கேட்ட குறைந்த விலைக்கே கடைக்காரர் அந்தச் சட்டையை விற்றுவிட்டார்.

அப்பொழுது கடையில் இருந்த கடைக்காரரின் நண்பரும் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார். அந்த நபர் போன பின்பு “வாடிக்கையாளர் கேட்ட குறைந்தபட்ச விலைக்கே அந்த சட்டையை முன்பு கொடுத்திருக்கலாமே? ஏன் இவ்வளவு தாமதம்?” என்று கேட்க, ஒரு விஷயத்தைத் தாங்கள் புரிந்து கொள்ளவில்லை என் நண்பரே என்று கடைக்காரர் பதிலளித்தார். “முதலிலேயே

வாடிக்கையாளர் கேட்ட விலைக்கு நான் ஒப்புக் கொண்டிருந்தால் அந்த வாடிக்கையாளர் அதை வாங்கியிருக்க மாட்டார், வேறு எங்கேனும் இதைவிடக் குறைந்த விலைக்குக் கிடைக்கக் கூடும் என்று அவர் கருதியிருப்பார். மேலும் இந்தப் பேரத்தில் அவர் எந்த அளவுக்கு இறங்கி வருவார் என்பதையும் பேசிக் கொண்டே கணிக்க முயன்றேன். இறுதியாக அவர் அடக்கவிலைக்கே இந்தச் சட்டையைக் கேட்டபோது, இழப்பில்லாமல் வேறு வழியின்றி நானும் சம்மதித்தேன். இதனால் ஒருவேளை அடுத்தமுறை அவர் என் கடைக்கு வேறொரு சட்டையை வாங்க மீண்டும் வரக்கூடும்".

போட்டியென்று வந்துவிடும்போது இரண்டு தரப்பினரும் தம் விருப்பப்படியே பேரங்கள் படிய வேண்டுமென்று நினைப்பர். அவ்வாறான நேரங்களில் தம் கோரிக்கையை வலியுறுத்தத் தமது எல்லையை அவர் அறிந்திருக்க வேண்டும். எவ்வளவு தூரம் தன்னால் போக முடியும் என்பதை கணிக்க முடிவதே அறிவுடைமை. முதல் விஷயம் தனக்கு இழப்பு ஏதுமில்லை, அடுத்து தன் வாடிக்கையாளர் அதிருப்தியுடன் திரும்பவில்லை என்பது தனது லாபம். இதுவே வியாபார சூட்சுமம் என்றார் கடைக்காரர்.

விட்டுக் கொடுத்தல் வாழ்க்கையின் அடிப்படையான விதிகளில் முதன்மையானது. தனி மனிதனோ, நாடோ எதுவானாலும் இணங்கிப் போதல் வெற்றியின் திறவுகோல் என்பதைப் புரிந்து கொள்வது அவசியம். மறுதரப்பின் எதிர்ப்பார்ப்பு என்ன என்பதைப் புரிந்துக் கொள்வதன் மூலம், தான் அடைய சாத்தியமுள்ள பங்கு எவ்வளவு என்பதை முன்கூட்டியே மதிப்பிட முடியும். நாணயத்தின் இரண்டு பக்கத்தைப் பார்க்கத் தெரிந்தவன், மறுதரப்பின் நியாயத்தை உணரக் கூடியவனாக இருப்பான். மறுதரப்பைப் பொருட்படுத்தாதவன் இவ்வுலகில் இழப்பை அடைவான்; தடைகளை சந்திப்பான்; படுகுழியின் வீழ்வான். பிறகு அழுகையும், துக்கமும் கதவை உடைத்து வீட்டில் குடியேறும்

ஐஐஐ

## முயற்சி திருவினையாக்கும்

அறையில் தூங்கிக் கொண்டிருந்த ஒருவர் தூக்கம் கலைந்து காலையில் கண் விழித்தபோது, உடைந்த முட்டை தரையில் கிடந்ததைப் பார்த்தார். கூரையின் இடைவெளியில் ஏற்பட்டிருந்த பொந்தில் குருவிக் கூடு ஒன்றை வீட்டுக்காரர் கண்டார். இந்தக் கூடும் அறையில் குருவிகளின் ஒலியும் எப்பொழுதும் கேட்டுக் கொண்டே இருக்கும் என்றெண்ணிய அவர் விழுந்து கிடந்த

முட்டையை அகற்றிய பிறகு நாற்காலியின் மீதேறி கூட்டினுள் இருந்த வைக்கோலையும், குச்சிகளையும் எடுத்தெறிந்தார். இவ்வாறு சிறிது நேரம் வீட்டைச் சுத்தம் செய்யும் பணியில் கழித்தார்.

ஆனால், மறுநாளும் வீட்டில் குருவிகளின் அதே ஒலி கேட்கத் தொடங்கியது. குருவிகள் தமது கூட்டைக் கட்டும் பணியில் உற்சாகமாய் ஈடுபடத் தொடங்கிவிட்டன. இந்தத் தொந்தரவை மீண்டும் விரும்பாத வீட்டுக்காரர் பாதி கட்டப்பட்டிருந்த கூட்டைக் கலைத்தார். அதனால் அவை வேறெங்கோ சென்றுவிடும் என்றும் அவர் நினைத்தார்.

ஆனால், குருவிகளும் விடுவதாக இல்லை. இழந்துபோன முட்டையும் கலைந்துபோன கூடும் துக்கம் நிறைந்த ஒன்றாக இருந்தபோதிலும், திரும்ப ஒரு வாழ்க்கையைத் தொடங்க அவை குறியாய் இருந்தன. இதற்குக் காரணமான வீட்டுக்காரரை பழிவாங்க, அவை (தன் குருவிக்) கூட்டத்தைத் திரட்டவும் இல்லை. அவை செய்ததெல்லாம், இடைவிடாமல் வீட்டிற்கு வெளியே பறந்து சென்று சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டுவந்து மீண்டும் கூடுகட்டும் முயற்சியை தொடர்ந்ததுதான். நேரத்தை வீணாக்கும் எந்தவொரு செயலிலும் குருவிகள் ஈடுபடவில்லை.

கூடு கட்டும் குருவிகளின் முயற்சியும், அதைக் கலைத்து விடுவது என்கிற வீட்டுக்காரரின் செயலும் ஏட்டிக்குப் போட்டியாக ஒருமாதம் நீடித்தது. குருவிகளின் அலகுகளில் வைக்கோலும் கூரையின் மேல் அமைக்கப்பட்டிருந்த கூட்டைக் கலைக்க நீண்டதொரு குச்சியை வீட்டுக்காரர் பயன்படுத்துவதும் தொடர்கதையானது. குருவியை வீட்டுக்காரரால் வெற்றி கொள்ளவே முடியவில்லை. வீட்டுக்காரர் குருவியைவிட வலிமையானவராக இருந்தார். அவரது வெறுப்பைத் தன் இடைவிடாத உழைப்பால் குருவிகள் தோற்கடித்தன. வீட்டுக்காரரின் முயற்சிகள் எள்ளளவும் பலனளிக்கவில்லை. இதை புரிந்துகொண்ட வீட்டுக்காரர் குருவிகளின் கூடுகட்டும் முயற்சிக்குக் குறுக்கே நிற்பதில் இனியும் பொருளில்லை என்கிற முடிவுக்கு வந்தார். குருவிகளும் கூட்டினுள் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கத் தொடங்கின. எதிரியை வெறுப்பதில் பயனில்லை. தமது ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளைத் தொடர்ந்து கொண்டிருந்தால் இறுதியில் வெற்றி கிடைக்கும் என்பது இதிலிருந்து கற்க வேண்டிய பாடம்.

# முன்னேற்றத்துக்கான முன்னெடுப்பு

20-01-1987ஆம் தேதி இந்தியன் ஏர்லைன்ஸ் எண் 439இல் டெல்லி ஹைதராபாத் தடத்தில் விமானப் பயணம் செய்தேன். கேப்டன் முஸ்தபா விமானத்தை இயக்கப் போகிறார் என்ற அறிவிப்பைக் கேட்டேன். நான் இந்தியன் ஏர்லைன்ஸ் மூலமாகத் தொடர்ந்து விமானப் பயணம் செய்து கொண்டிருப்பவன். ஆனால் முதன்முறையாக ஒரு முஸ்லிம் பெயரை அதுவும் விமான ஓட்டியாகக் கேட்டது இதுவே முதன்முறை. சாதாரணமாக முஹம்மது, முஸ்தபா, அப்துல்லா போன்ற கேப்டன்களைக் குறைந்தபட்சமாக இந்தியப் பயணங்களில் கண்டதில்லை, கேட்டதில்லை. நாட்டின் பிற துறைகளைப் போலவே மதிப்புமிக்க சேவைத்துறையான விமானப் போக்குவரத்தில் முஸ்லிம்கள் தம் திறமையால் இடம்பெறும் விஷயம் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. இது பின்தங்கிய நிலைமையிலிருந்து வேகமாக அவர்கள் விடுபட்டுப் போட்டிப்போட்டு முன்னேறத் தொடங்கியிருப்பதையும், வெற்றிப் படிகளில் அடியெடுத்து வைத்திருப்பதையும் காட்டுகிறது.

குறிப்பாக இந்தியாவில் முஸ்லிம்கள் ஒதுக்கப்படுவதாகவும், பின்னுக்குத் தள்ளப்படுவதாகவும் முஸ்லிம் தலைவர்கள் குற்றஞ் சாட்டிக் கொண்டே வந்துள்ளனர். இதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. நாணயத்தின் இரண்டு பக்கங்களையும் நாம் பார்க்க வேண்டும். வேலை நீக்கம் எந்தளவுக்கு பேசப்படுகிறதோ, பரபரப்பாக விவாதிக்கப்படுகிறதோ அதே அளவுக்கு வேலைக்கு ஆட்கள் எடுக்கப்படுவதும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. முஸ்லிம் தலைவர்கள், பத்திரிக்கைகள் ஆகியவற்றின் இந்த ஓரவஞ் சனையான, உண்மைக்குப் புறம்பான வதந்திகள் அநீதியானவை. இதனால் முஸ்லிம் இளைஞர்களுக்கு நன்மையைவிடக் கேடே விளையும்.

இந்த நாட்டில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட "முஸ்தபா"வின் கதை ஒரு பக்கமென்றால், வேலைக்கு எடுத்துக் கொள்ளப்படாத, வேலை நீக்கத்துக்கு உள்ளான வேறொரு "முஸ்தபா"வின் கதையும் இருக்கத்தான் செய்கிறது. இதை பாரபட்சம் என்று அழைப்பதும், யாரோ சிலருக்கு சலுகை கிடைக்கிறது என்று கூறுவதும் முஸ்லிம்களுக்கு முன்னுரிமை தரப்படுவதில்லை என்று கூறுவதும் எதார்த்தமில்லை.

போட்டி மிகுந்த உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தனி மனிதனோ, சமூகமோ, முழு நாடோ ஓடிக் கொண்டேயிருக்க வேண்டியிருக்கிறது. இதில் ஒரு பிரிவு முன்னேறிச் செல்வதும்,

மற்றொரு பிரிவு பின்தங்கிவிடுவதும் இயல்பான ஒன்றே. வனவிலங்குக் காப்பகமான மிருகக் காட்சிசாலையில் விலங்குகள் அடைப்பட்டு இருப்பதால் சோம்பேறியாகி விடும். அவற்றுக்கான உணவை அவை வேட்டையாடி பெறாமல் போவதால் மந்தபுத்தி கொண்டவையாக மாறக்கூடிய நிலையில் அவைகளைத் தூண்டிவிட வேண்டியிருக்கிறது. அதற்காக அதைவிட வலுவான அல்லது போட்டி விலங்கை (அதாவது மான்கள் அடைபட்ட காப்பகத்தில் புலியை, சிங்கத்தை) அடைப்பதன் மூலம் அங்கு ஒரு சமநிலை பேணப்படுகிறது. இதனால் அவை தம் இயல்புக்கேற்ற இயக்கத்தையும், சுறுசுறுப்பையும் பெறமுடியும். உயிர் பிழைக்க அவை எடுக்கும் ஓட்டத்தால் காட்டின் சமநிலையும், வனவிலங்குகளின் ஓட்டப் பயிற்சியின் திறனும் தக்க வைக்கப்படும். இதுவே இயற்கையின் நியதியுமாகும். போட்டியும், முன்னேறிச் செல்வதும், என்றும் இருக்க வேண்டிய கள எதார்த்தம். விலங்கு, மனிதன் ஆகிய எல்லோருக்குமான பொதுநீதி இதுவே. இதைப் பாகுபாடு என்று அழைத்தால் கசப்பும் காழ்ப்புணர்ச்சியும் உருவாகும். வகுப்புவாதம் தலையெடுக்கும். வெறுமனே புகார் சொல்வதால் வேலைகள் கிடைத்துவிடப் போவதில்லை. இது வழக்கமான போட்டியென்று எடுத்துக் கொண்டால் செயலாற்ற வேண்டும் என்கிற எண்ணம் பிறக்கும்.

வெற்றி, தோல்வி என்பது வாழ்க்கையின் பகுதி. தோல்வியை வகுப்புவாத கண்ணோட்டத்தில் அணுகுவது பிரச்சனையை மேலதிகமாக்கும். சக மனிதர்களுக்கு இடையில் நடக்கும் போட்டி மனப்பான்மை என இதை எடுத்துக் கொண்டால் சட்டத்தை மதிக்கும் போக்கு உண்டாகி வளர்ச்சியை நோக்கி அடியெடுக்க வாய்ப்புள்ளது. எதிர்மறை எண்ணம் படுநாசத்தை விளைவிக்கும்.

## இருபது ஆண்டுகளுக்குப் பிறகு

ஜப்பான் கனரக தொழில்நுட்பத்தை 1950–1970 ஆகிய இடைப்பட்ட இருபது ஆண்டுகளில் மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருந்தது. வாடகைக்கு எடுத்தல், கடனாகப் பெறுதல், விலைக்கு வாங்குதல் என்கிற வகையில் இந்தக் கொடுக்கல் வாங்கலை நிகழ்த்தி வந்த ஜப்பான், இன்று பொருளாதார தன்னிறைவடைந்து சொந்தக் காலில் நிற்கிறது. பொருட்களையும் தொழில்நுட்பத்தையும் இன்று ஜப்பான் பிற நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்கிறது.

தொழில்துறையின் நிபுணத்துவம் பிற நாடுகளின் நட்பை ஜப்பானுக்கு பெற்றுத் தந்துள்ளது. உதவி செய்வதன் மூலம் இந்த உறவுகளை ஜப்பான் தன் பக்கம் ஈர்த்துள்ளது. வர்த்தகம், ஒப்பந்தம் என இது பன்மடங்காப் பல்கிப் பெருகியிருக்கிறது. சொட்டு நீர்ப்பாசன திட்டத்தை தாய்லாந்திலும், கணிணி நிரலாக்கம் Computer Programming தொடர்பான திட்டத்தை சிங்கப்பூரிலும், எஃகு இரும்பாலையைத் தென் கொரியா, சீனா ஆகியவற்றிலும் பெட்ரோலிய ஞெகிழி தொழிற்பேட்டையை (Petro-Chemical Industry) மத்திய கிழக்கின் அரபு நாடுகளிலும் நிறுவி வருகிறது.

ஜப்பானியர்கள் உருக்கு, இரும்பு உற்பத்திக்கான தொழில்நுட்பத்தை அமெரிக்கர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர். என்றாலும் இன்று குருவை மிஞ்சிய சீடர்களாக அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யக் கூடிய திறமையை ஜப்பானியர்கள் வளர்த்துக் கொண்டனர். தொலைத் தொடர்பு, மின்னணுவியல் போன்ற துறைகளில் அவர்கள் பெற்றிருக்கும் வளர்ச்சியை உணர்ந்து கொண்ட அமெரிக்கா தனது இராணுவத்தை நவீனப்படுத்த ஜப்பானின் சேவையைப் பெறும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதை வேடிக்கையாக “உட்புறமாக வந்த நீரோட்டம், இப்பொழுது ஜப்பானின் வெளிப்புறமாகப் பாயத் தொடங்கியுள்ளது” என்று ஒரு பத்திரிகையாளர் (Hinudstan Times, June 11, 1981) எழுதியுள்ளார்.

தொழில்நுட்பத்தில் பிற நாடுகளின் மேலாதிக்கத்தில் ஜப்பான் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இருந்துவந்தது. ஜப்பானின் பெரும் பாய்ச்சலுக்குக் கற்றல், விடாமுயற்சி, உழைப்பு போன்றவை காரணிகளாகும். பிற நாடுகளை அங்கீகரிக்காமல், அவற்றின் செல்வாக்கை எதிர்த்துப் போராடியிருந்தால் அதுவே முழுநேர வேலைத்திட்டமாக ஆகியிருக்கும். தன் நாட்டின் மீது அணுகுண்டை வீசிய அமெரிக்காவிடமிருந்தே ஜப்பான் கற்கத் தொடங்கிய பிறகே ஜப்பானியர்களால் இதை சாதிக்க முடிந்ததையும் நாம் கவனத்தில் கொண்டாக வேண்டும். இன்று ஜப்பானில் அமெரிக்காவுக்குப் பெரிய வேலை ஒன்றுமில்லை.

சிலவற்றைப் பெற நினைத்தால் வேறு சிலவற்றை இழக்க முதலில் முன்வர வேண்டும். உலக வழக்கம் இதுவே. முன்னோக்கிய பாய்ச்சலுக்கு நம் காலை பின்வைக்கவும் பழக வேண்டும். சிகரங்களை எட்ட பள்ளங்களில் இறங்கவும் முன்வர வேண்டும். இதை ஏற்பவர்களுக்கே வாய்ப்பு கிடைக்கும். தாழ்வு மனப்பான்மை என்றுமே வெற்றிக்கு உதவியாக வருவதில்லை. இவ்வாறு

செயல்படுவதை விட்டுவிட்டவர்களால் தமது வீழ்ச்சிக்குப் பிறரை குறைகூறுவதே வேலையாகப் போய்விடும்.

ஜஜஜ

## சொந்தத் தவறுகளிலிருந்து கற்போம்

(இஸ்லாமிய, கிறிஸ்துவ நம்பிகையின்படி) ஆதாம் முதல் மனிதராகக் கருதப்படுகிறார். அவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். இந்த இருவருக்கு இடையிலான வாக்குவாதம் கோபமாக மாறி, முதல் நபர் இரண்டாம் நபரைக் கொன்றுவிட்டார். இதுவே உலகில் நிகழ்ந்த முதல் கொலை. இதற்கு முன்பு அப்படியொரு சம்பவமே நிகழவில்லை என்பதால் கொலைகாரனுக்கு கொல்லப்பட்ட நபரின் உடலை என்ன செய்வது என்பது குறித்தத் தெளிவில்லை.

இந்நிலையில் தன் சகோதரரின் சடலத்தை எவ்வாறு புதைப்பது என்பதை அவருக்குக் கற்றுக்கொடுப்பதற்காக ஒரு காகத்தை அல்லாஹ் அனுப்பினான். அது பூமியைத் தோண்டிற்று. அதைக் கண்ட அவர், “அந்தோ! நான் இந்தக் காகத்தைப் போலக்கூட இல்லாமல் ஆகிவிட்டேனே, அப்படியிருந்திருந்தால் என் சகோதரனின் உடலை நான் மறைத்திருப்பேனே” என்று எண்ணி வருத்தப்பட்டார். (திருக்குர்ஆன் 05:31)

இந்நிகழ்வு உடலைப் புதைப்பது எப்படி என்பதைக் கற்றுக் கொடுக்கத்தான் என்பதாக பொருள் கொள்ள முடியுமல்லவா? மனித வரலாற்றில் எல்லா முதல் நிகழ்வுகளுக்குமான முன்மாதிரிகள் இப்படியான வழிகாட்டலின் ஊடாகவே வளர்ச்சி பெற்றுள்ளன. விலங்குகள், பறவைகள், பூச்சிகளின் செயல்பாடுகளில் மனிதர்களுக்கான பாடங்கள் அடங்கியுள்ளன. ஆனால் மனிதன் எதையும் கவனிப்பதில்லை என்பதே பிரச்சனையின் மையக் காரணியாகும். இங்கு உண்மை நிகழ்வு ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ராஜோரி நகரின் தன்னா மண்டியில் வசிக்கும் குர்ஷித் பிஸ்மில் (பிறப்பு 1947) என் நண்பர். அவர் வீட்டுக்கு 19-09-1979ஆம் தேதி நான் சென்றிருந்தபோது, மேல்நோக்கி பார்க்கும்படி கூறினார். அங்குக் கூரையின் கீழே சிட்டுக் குருவிகள் அருகிலுள்ள குளக் கரையிலிருந்து எடுத்த களிமண்ணைக் கொண்டு கூடு கட்டிக் கொண்டிருந்தன. சில நாள் உழைப்பில் கூடு ஒன்று தயாராகி விட்டது.

அங்கு இந்தச் சிட்டுக் குருவிகள் முட்டையிட்டன. நான்கு முட்டைகள், இரண்டு சிட்டுக் குருவிகளின் கனத்தைத் தாங்கும்

அளவுக்கு அது இல்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாகக் குஞ்சு பொரிக்கும் நாட்களில் பளு தாங்காமல் அந்தக் கூடு கீழே விழுந்துவிட்டது. அதன்பிறகு அவை நாலாபுறமும் இங்கும் அங்குமாகப் பறக்கத் தொடங்கின. இருந்தபோதிலும் அவற்றின் இயக்கத்தை எதனாலும் கட்டுப்படுத்த முடியவில்லை. அவை வீட்டின் மேலடுக்கில் இன்னும் சற்று உறுதியான பொந்து ஒன்றை அமைத்தன.

சிட்டுக் குருவிகள் முதலில் சேற்றுக் களிமண்ணால் கூட்டை உருவாக்கியிருந்தன. ஆனால், அடுத்தமுறை கூடு கட்டும்போது புற்களைக் குழைத்த களிமண்ணைப் பயன்படுத்தியது. அது வெறுமனே இருந்த களிமண்ணைப் போல் இல்லாமல், சற்று வலிமையான கலவையாக இருந்ததால் உறுதியாக அங்கு நிலைகொண்டது. பின்னர் அந்த முட்டைகள் குஞ்சுகள் பொரித்தன. பிறகு தாய்ப் பறவையோடு அவை வானில் மறைந்தன.

நம் அனைவருக்கும் இதில் சிறந்ததொரு படிப்பினை உள்ளது. அதாவது ஒரு பறவை, ஒரு விலங்கு தன் முயற்சியில் தோற்கும்போது அதற்கான காரணம் என்னவென்பதைக் கண்டடைகிறது. பிறகு திட்டமிட்டு அதைவிடச் சிறந்த வழிமுறையில் தன் பிரச்சனையை தீர்க்கிறது. மனிதர்களாகிய நாம் செய்யும் பல்வேறு முயற்சிகள் தோல்வியில் முடிகின்றன. அறிவாளியே தன் தவறுகளிலிருந்து பாடம் கற்கமுடியும். அந்தத் தவறுகளைக் களைவதற்காக நாம் சிந்திக்கிறோமா என்பதையும் பார்க்க வேண்டும்.

## விசையும் திசையும்

“விசையும் திசையும் பொருந்திவிடும்போது வெற்றிப் பாதைகளிலுள்ள தடைகளை நீங்கள் உடைத்தெறிந்து விட்டீர்கள் என்று பொருள்” என்பார் மேற்கத்திய சிந்தனையாளர் ஒருவர்.

செயலின் தரம் விசையின் உள்ளீடாகும். மிதி வண்டியை மோட்டார் பைக் ஓட்டும்போது, குதிரையேற்றம் செய்யும்போதும் நீங்கள் பயணிக்கிறீர்கள். இலக்கு எது என்பது குறித்தத் தெளிவு உங்களுக்கு இருக்க வேண்டும். இலக்கை நோக்கிய பயணமா அல்லது எதிர்திசைப் பயணமா என்பது (வெளிப்) பார்வையாளர்களுக்குத் தெரியாது. இலக்கை நெருங்கும் பயணம், இலக்கிலிருந்து விலகிச் செல்லும் பயணம் என்பது உள்ளுக்குள் நிச்சயம் தெரிந்திருக்கக் கூடும். இரண்டு பயணங்களில் உள்ள வேறுபாடு என்னவென்றால் முதல் இயக்கம் இலக்கிற்கு அருகில் கொண்டு செல்லும், இரண்டாம்

இயக்கம் இலக்கைவிட்டுத் தொலைவாக்கும். இயக்கம் ஒன்றுதான், இயக்கத்தின் தரம் வெவ்வேறு என்பதே காரணம். ஆகவே விசையின் திசை மிக முக்கியமான ஒன்று. மெல்ல நகரும் காளை மாட்டு வண்டியாகட்டும், சைக்கிள் ரிக்‌ஷாவாகட்டும் சரியான திசையில் பயணித்தால் என்றாவது ஒருநாள் தன் இலக்கை எட்டக் கூடும். ஆனால் திசையறியாத விமானியின் வேகம் வீணானதே.

தனிப்பட்ட வாழ்க்கை அல்லது கூட்டு வாழ்க்கை எதுவாக இருந்தாலும் நம்மிடம் இருக்கும் வளங்களையும் சூழல்களையும் கணக்கிலெடுத்துச் சரியான திசையும், வழிமுறையும் எதுவென கண்டறிந்து பயணிக்க வேண்டியுள்ளது. இதனால் குறித்த காலத்திலோ, சற்று தாமதமாகவோ இலக்கை நோக்கி போய்ச் சேர்ந்து விட முடியும். இதற்கு மாறாக இலக்கிற்கு நேரெதிரான திசையில் புறப்பட்டு விட்டால் இழப்பு, பேரழிவு நிச்சயம்.

தங்களின் உண்மையான திறன் என்ன என்பதை மதிப்பிடாமல் பெரும்பாலான மக்கள் முன்யோசனையின்றி, அல்லது அறிவார்ந்து இல்லாமல், உணர்ச்சிவசப்பட்டு நேரடியாக செயல்பட்டு விடுகின்றனர். பிடிவாதம், பொறாமை, உணர்ச்சிக் கொந்தளிப்பு கருத்து குருட்டுத்தனத்தை உருவாக்கிவிடும். இதனால் எந்த நற்பலன்களும் கிடைக்காதபோது முறையிட்டுக் கொண்டு இருப்பதே நடக்கும். கவனக்குறைவால் வழிதவற விட்டவர்களைக் குறித்துச் சொல்வதற்கு என்ன இருக்கிறது? செயல்தான் சிறந்தது என்று அவர்கள் நினைத்ததே இதற்குக் காரணம், ஆழ்ந்து சிந்தித்தால் தவறு எங்கு நேர்ந்தது என்பது விளங்கும். செய்திருக்க வேண்டியதெல்லாம், பொருத்தமான விசையில், சரியான திசையில் புறப்பட்டிருக்க வேண்டியதே. இது ஒன்றுதான் வழி.

இல்லாவிட்டால் அவர்கள் எதிர்ப்பார்க்காதது நடந்தே தீரும். இழப்பும், தோல்வியும் தொடர்ந்து வரும். பிறரை குறைக் கூறிப் புலம்பிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். தப்பெண்ணம் ஏமாற்றங்களைத் தரும். வாழ்க்கை பாழாய்ப் போனது தெரியவரும். திட்டமிடாத, இலக்கற்ற செயல்களிலிருந்து விடுபட்டுப் புது முயற்சியைத் தொடங்க வேண்டும். அப்பொழுதுமட்டுமே தோல்வி வெற்றியாக மாறும். செயலற்று இருப்பது அல்ல பிரச்சனை, இலக்கற்று இருப்பதே பலவீனம். இலக்கு உறுதியான பின், பயணத்தின் திசையும் விசையும் தானே கைகூடிவரும்.

மக்கள் தமது தோல்விக்குப் பிறரை காரணமாக்குகின்றனர். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திச் சரியான திசையில்

முன்னேறினால் எவராலும் இதை திசை மாற்றிவிட முடியாது. வெற்றிப் பயணம் தோல்வியில் முடியாது.

## இது காலம் குறித்த கேள்வி

உலகிலேயே பழைய பல்கலைக் கழகங்களில் ஒன்றான University of Oxford 1163ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நிறுவப்பட்டது. பசுமையால் சூழப்பட்ட அப்புல்வெளி கோடீஸ்வரர் ஒருவருக்குப் பிடித்துப் போனது. ஆகவே ஆக்ஸ்போர்ட் தோட்டக்காரரிடம் அமெரிக்காவிலுள்ள தன் வீட்டிற்கு இதுபோல ஒரு புல்தரையை உருவாக்க எவ்வளவு செலவாகும் என்று கேட்டார்.

“ஒன்றும் செலவாகாது” என்றார் தோட்டக்காரர். “அது எப்படி” என்று வியப்புற்றார் கோடீஸ்வரர். தாங்கள் வெறுமனே தரையை சமன்படுத்திக் கொள்ளுங்கள். பிறகு புற்களை தேவையான உயரத்துக்கு வெட்டிக் கொண்டும், அதை தொடர்ந்து வளர்த்துக் கொண்டும் வரவும்” என்றார் தோட்டக்காரர். “ஓ அப்படியா” என்று கோடீஸ்வர் கேட்டார். “ஆனால், இதை நீங்கள் குறைந்தபட்சம் ஐநூறு ஆண்டுகளுக்குச் செய்து வரவேண்டும், உங்களுக்கான புல்வெளி தயாராகிவிடும்” என்றார் தோட்டக்காரர் முத்தாய்ப்பாக.அந்த ஆங்கிலேயரின் நகைச்சுவையை அறிந்துகொண்ட அமெரிக்கர், பணத்தால் எல்லாவற்றையும் வாங்கிவிட முடியாது என்பதையும் உணர்ந்து கொண்டார்.

எல்லா விஷயங்களுக்கும் நேரம் என்பதே அடிப்படையானது. மாலையில் இருளத் தொடங்கிவிடுகிறது. அப்பொழுது ஒருவருக்கு சூரியனைப் பார்க்க வேண்டும் என்று விருப்பம் எழுந்தால் முழு இரவு கழியும்வரை காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை. கையில் விதையை வைத்துக் கொண்டு அதன் மரக்கன்றைக் காண விரும்பும் ஒருவர் குறைந்தபட்சம் இருபது, முப்பது ஆண்டுகள் பொறுத்திருக்க வேண்டும். அப்போதுதான் வலுவுடனும் செழிப்புடனும் முழு வளர்ச்சியுற்றிருக்கும் மரத்தைக் காணமுடியும்.

குறிப்பிட்ட காலத்தை எடுத்துக் கொண்டே இயற்கையின் அனைத்துச் செயல்பாடுகளும் நிகழ்ந்து வருகின்றன. நேரத்தை முற்படுத்தக் கூடிய பொறிமுறைக்கு நியதிகளின் ஒழுங்கில் ஒருபோதும் இடமில்லை. பிற உயிரினங்கள், பிரபஞ்சம் அனைத்துமே இறைவனின் விதிகளுக்கு கட்டுப்பட்டவையாக உள்ளன. மனிதர்களுக்குப் பகுத்தறிவு உள்ளதால் தேர்வுச் சுதந்திரம் கிடைத்திருக்கிறது. அதைக் கொண்டு இயற்கையைப் புரிந்துகொண்டு இவ்வுலகில் வாழக் கற்றுக்

கொள்ள வேண்டும். இயற்கையின் விதிகளுக்கு செயல்படும்போது வெற்றி கிடைப்பது உறுதி.

தனி மனித விஷயங்களோ, கூட்டு வாழ்க்கையோ சரியான புள்ளியிலிருந்து தொடங்க வேண்டும். ஒரு செயலுக்குரிய முழு காலத்தைக் கொடுக்காமல் அதன் பலனை எதிர்ப்பார்க்காமல் இருக்க வேண்டும். அதைவிட்டு விட்டு ஓடும் இரயில் வண்டியிலிருந்து தன் ஸ்டேஷன் வருவதற்கு முன் இறங்க நினைக்கும் ஒருவரைக் குறித்து என்ன சொல்ல முடியும்? அவர் கதவிலிருந்து இருப்புப் பாதையில் தவறி விழுந்து விடுவார். அதனால் விபத்தில் சிக்கி இறந்துபோக நேரிடும். அது ஒருபோதும் அவர் போக நினைத்த வீடோ, அலுவலகமோ அல்ல என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எல்லா வெற்றியும் நேரத்தைக் கோரி நிற்கின்றன. ஆனால் மனிதன் அந்த நேரத்தைத் தர ஒருபோதும் தயாராவதில்லை என்பதே துரதிர்ஷ்டம்.

## துன்பத்திற்குப் பின்பான இன்பம்

பாலைவனங்களில் அவ்வப்போது கோடையில் எழும் புழுதிப் புயல் பெரும் பிரச்சனையாக இருப்பது அரபு நாடுகளில் வசித்த, வேலைப் பார்த்தவர்களுக்குத் தெரியும். கடும் வெப்பத்தை உமிழும் கண்மூடித்தனமான இந்தக் காற்று நன்மை எதையும் செய்யவில்லை என்று தோன்றும். வானிலை ஆய்வாளர்கள் சோவியத் ருஷ்யாவின் Karakoram பாலைவனத்தில் புழுதிப் புயலின் பண்புகளை ஏற்படுத்துவதாக அந்த ஆய்வுகள் கூறின. கோடை வெயிலின் சுட்டெரிப்பிலிருந்து புவியைக் காப்பாற்ற காற்று வளிமண்டலத்தில் போர்வையைப் போல இந்தப் புழுதிப் புயல்கள் தடுப்பை உருவாக்குகின்றன என்று அதிநவீன கருவிகள், விமானங்கள் வானில் ஏவப்பட்ட துணைக்கோள்கள் அளித்த ஆய்வுகள் உறுதிப்படுத்தின. கோடை வெயிலில் எழும் புழுதிப் புயல்கள்அரேபியா, மத்திய கிழக்கு, தென்னமெரிக்கா, ஆர்ட்டிக் நிலப்பரப்பு, பெருங்கடலில் பரவுகிறது. வெப்பநிலை மாற்றம் இவ்வளவு தொலை தூரம் கடக்கிறது.

பெரும் சிரமத்துக்குப் பிறகே நன்மைகள் விளையக்கூடும், கடினமான செயல்களுக்குப் பின்பே நற்பலன் அடைய முடியும் என்பதே இயற்கை நமக்குக் கற்பிக்கும் பாடமாகும். பூமியில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதும் இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளலாம். இந்த உலகைப் படைத்தவன் இதை இப்படித்தான்

படைத்துள்ளான். அதிகமான அறுவடை வேண்டுமெனில் நிலத்தில் நன்கு உழைத்திருக்க வேண்டும் என்று இறைவன் விரும்புகிறான். இயற்கை விதிகளுடன் இணங்கிப் போவதன் மூலமே இது சாத்தியமாகும். புழுதிப் புயலின் கடுமை நமக்கு வேண்டியதில்லை என்றால் குளிரும் மேகங்களையும் வெப்பக் காற்றையும் வேறொரு பூமியில் நமக்கேற்றபடி உருவாக்க வேண்டியிருக்கும்.

உடனடி வெற்றி, நொடிப் பொழுது பலன் விரும்பி செய்யப்படும் செயல்களே தோல்வியாக மாறுகின்றன. குறுக்கு வழிகள் சாலைகளில் வேண்டுமானால் இருக்கலாம், வாழ்க்கையில் அல்ல. மீறிய செயல்கள் விரும்பத்தகாத விதமாகவே முடிவடையும்.

குஜராத்தின் சூரத் நகைக் கடையில் நுழைந்த ஓர் இளைஞன் வைரம் ஒன்றைத் திருடி விட்டான். வேகமாக வெளியேற முயன்றபோது காவலர்கள் படிகட்டுக்களை மறிக்கக் குறுக்கே நின்றனர். வேறு வழியறியாத திருடன் அருகிலுள்ள ஜன்னலைத் திறந்து குதித்து விட்டான். விளைவு கோரமான மரணம். ஜன்னலிலிருந்து குதித்தது வீரமல்ல, முட்டாள்தனம். (The Times of India, 21-January-1980)

இந்த முட்டாள்தனம் விதிவிலக்கான சம்பவமல்ல. படிக்கட்டுகள் அடைபட்டுக் கிடக்கும்போது ஜன்னலிலிருந்து குதித்தவனைப் போல பல அறிவுஜீவிகளும் சில நேரங்களில் இவ்வாறான தவறுகளைச் செய்துவிடுகின்றனர். நீடித்த உழைப்பிற்குப் பதிலாக உடனடியாக குறுக்குவழியில் செல்பவன் மேல் மாடியிலிருந்து தரையில் விழுந்து உயிரிழக்க நேரிடும். சமூக முன்னோடிகளும் தேசத் தலைவர்களும் மக்களைத் தவறாக வழிநடத்தினால் இதுவே நேரும்.

## தவிர்க்க முடியாத தீமை

திரு.தாஸ் மூத்த IAS அதிகாரி, புதுடில்லியின் போஷ் காலனியில் “மதுபன்” என்று பெயரிட்ட பெரியதொரு ஆடம்பரமான வீட்டில் வசித்து வந்தார். இவ்வளவு இருந்தும் 03-08-1985 அன்று தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மனைவி ஹெனா தாஸ், மதியம் ஒரு மணியளவில் அறைக்குள் நுழைந்தபோது கூரையில் பொருத்தப்பட்டிருந்த மின்விசிறியில் சுருக்குப் போட்டுச் சடலமாகத் தொங்கியதைக் கண்டார். இறந்தபோது வெறும் 54 வயதான தாஸ் புதுடில்லி சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் மேலாண்மை இயக்குனராக இருந்ததால் அதிகமான மாதச் சம்பளமும் பெற்று வந்தார். அவரது

தற்கொலைக்கான காரணம் என்ன? எது அவரை இவ்வளவு பெரிய முடிவை எடுக்கத் தூண்டியது? 04-08-1985 தேதியிட்ட டைம்ஸ் ஆஃப் இந்தியா, ஹிந்துஸ்தான் டைம்ஸ் நாளிதழில் கீழ்க்காணும் செய்தி வெளியாகி இருந்தது.

திரு.தாஸ் அவர்களுடன் நட்பு கொண்டிருந்த ஒரு தொழிலதிபர் கூறினார் : இறந்துபோன தன் நண்பர் வகித்த பொறுப்புக்களைப் பற்றி பெரிய அதிருப்தி கொண்டிருந்தார். தனக்கு எப்பொழுதும் அற்பமான, சாதாரண பதவிகளே வழங்கப்பட்டு வந்துள்ளன என்றும் கூறிக் கொண்டிருந்ததை நினைவு கூர்ந்தார். அவர் தம் படிப்புக்கும், அனுபவத்துக்கும் ஏற்ற பொருத்தமான நியாயமான பணியில் தான் இல்லையென்ற மனச்சோர்வுக்கு உள்ளாகியிருந்தார்.

ஒரு மனிதர் பெரும்பான்மைக் குழுவைச் சார்ந்தவராகவோ, சிறுபான்மைக் குழுவைச் சார்ந்தவராகவோ சாதாரண பணியாளராகவோ, பெரிய அதிகாரியோ எதுவாகவும் இருக்கலாம். இப்படிப்பட்ட நியாயமற்ற அனுபவங்களுக்கு அவர் ஆட்படுவார். இந்த உலகில், மனிதர்கள் அனைவரும் தகுதிக்கு ஏற்ற வேலை தனக்குக் கிடைக்கவில்லை என்கிற உணர்வுடனேயே இருக்கின்றனர். சிறிதேனும் அறிவுள்ளவர் இந்த உலகின் இயல்பை, சூழ்நிலையின் நெகிழ்வை புரிந்துகொள்ளவே செய்வார். இந்த எதார்த்தத்தைப் புரிந்துகொள்ள மறுப்பது விரக்தி மனநிலைக்கும் இறுதியில் தற்கொலைக்கும் இட்டுச் செல்லும்.

## வெற்றியின் இரகசியம்

நன்கு பயிற்சி பெற்ற நீச்சல் வீரர்கள் இருவர் நல்ல நண்பர்கள். ஒருமுறை (மெட்ராஸ்) சென்னையில் நீந்தக் கடலுக்கு சென்றனர். அன்றைய வானிலையும் சாதாரணமாகவே இருந்தது. கடலும் வழக்கம்போல அமைதியாக இருந்தது. விளையாட்டாக சில நேரங்களில் கடலின் மேற்பரப்பிலும், ஓரிரு முறை கடலின் அடியிலும் அவர்கள் நீந்தத் தொடங்கினர். அப்படியே அவ்விருவரும் நடுக்கடல் வரை சென்றுவிட்டனர். திடீரென்று பெரும் அலை முழு ஆற்றலுடன் எழுவதைக் கரையிலிருந்தவர்கள் பார்த்தனர். உயிர் பிழைக்க அவ்விருவரும் நடத்திய போராட்டம் தொடங்கியது. அதிலிருந்த இளைஞர் கரையை நோக்கிப் பாய்ந்து செல்லக் கடும் முயற்சிகளை மேற்கொண்டார்.

முடிந்தவரை தன் முழு ஆற்றலுடன் அவர் நீந்தினார். இருந்தபோதிலும் கரையை அவரால் தொட முடியவில்லை.

அலையின் வீச்சு வலிமையாக இருந்ததை மற்றொரு நீச்சல் வீரர் உணர்ந்து கொண்டார். எதிர்நீச்சல் பயனற்றது என்பது விளங்கியது. கடலின் சீற்றம் மேற்பரப்பில் மட்டுமே விசையுடன் இருக்கும் என்பதும், கடலின் ஆழம் அமைதியாக இருக்கக் கூடியது என்பதும் முன்பு எங்கோ கேள்விப்பட்டது நினைவுக்கு வந்தது. ஆகவே இதற்கேற்றபடி கடலின் ஆழத்துக்குள் இறங்கத் தொடங்கினார். தப்பிக்கும் வழி பிறந்தது.

அங்குக் கடல்நீர் ஏரியைப் போல் சலனமற்று அமைதியாக இருந்தது. நுரையீரல் பொருமியது. தசைகளில் வலி ஆரம்பித்தது. களைப்பு மேலோங்கியது. எனினும் கரையை நோக்கி அவரால் நீந்த முடிந்தது. மயக்கமுற்ற நிலையில் கிடந்தவரைப் படகோட்டிகள் தமது படகில் ஏற்றி பாதுகாப்பாகக் கரைச் சேர்த்தனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சில நாட்களின் சிகிச்சைக்குப் பிறகு குணமடைந்தார். அலைகளுடன் போரிடுவதைத் தேர்ந்தெடுத்தவர் இறந்து போனதும், கடலின் ஆழத்திற்குச் சென்றதன் மூலம் மற்றவர் தப்பித்ததும் எப்படி? தந்திரங்களை மாற்றியதன் வழியாக ஆட்டத்தில் வெற்றி பெற முடியும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உடல் வலிமையின் மீதான நம்பிக்கையை வீரம் என்பதா? இல்லை அறிவுடன் இயங்கி மீண்டு வந்து நடந்ததைப் பற்றிக் கூறுவதை வீரம் என்பதா? இயற்கைக்கு எதிரான மனித ஆற்றல் முட்டாள்தனமானது, பயனற்றது என்பதே உண்மை.

வாழ்க்கையில் முன்னோக்கி வைக்கும் முழு பொருத்தப்பாடு உடையவிதி இது. மோதல்கள் சாதகமான எதையும் தருவதில்லை. இதனால்தான் சூறாவளி நெருங்கும்போது மீன்கள்கூட ஆழ்கடலில் மூழ்கி விடுகின்றன. ஆகவே பிரச்சனைகள் தாக்கும்போது கரையேறும் வழி என்னவென்பதைக் கண்டறிய வேண்டும். செயல்பட எளிமையானதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அலைகளின் மேலே இருப்பதைத் தவிர்த்துவிட்டு அடியாழத்துக்குச் செல்லும் வழியறிந்திருக்க வேண்டும். மேற்பரப்பில் மட்டுமே கொந்தளிப்பு இருக்கிற வகையில் இயற்கை தன் நிகழ்ச்சி நிரலை அமைத்துக் கொண்டுள்ளது. இறைவனின் ஏற்பாடும் இதுவே. சில நேரங்களில் புயலோடு போராட வேண்டியிருக்கும். அப்பொழுது எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

# முறையீடு

நாடு விடுதலை அடைவதற்கு முன்பு நடந்த சம்பவம் ஒன்று. கிராமவாசியொருவர் தனக்கு அறிமுகமான நண்பரின் வீட்டில் தங்கினார். முலாம்பழத்துடன், அதை வெட்டுவதற்கு அந்த தட்டில் கத்தியொன்றும் வைக்கப்பட்டிருந்தது. இதைக் கண்ட அவர் வியப்புற்றார். முலாம் பழத்துடன் கத்தி ஏன் தட்டில் இருந்தது என்பது தனக்கு விளங்கவில்லை என்று கூறி அந்தப் பழத்தைச் சாப்பிடாமல் திருப்பி அளித்துவிட்டார்.

இது குறித்து ஒருவர் கேட்டபோது, முலாம்பழங்களை கைகளால் அழுத்துவதன் மூலம் அதைப் பிளந்து துண்டு துண்டுகளாக உடைத்துதான் இதுவரை முலாம்பழத்தைச் சாப்பிட்டு வந்திருக்கிறேன். தட்டில் இருந்த கத்தி என்னை துணுக்குறச் செய்தது. இது ஏதோ வேடிக்கை, சூனியம் என்று கருதிக் கொண்டேன். அதனால்தான் பழங்களைச் சாப்பிடவில்லை" என்று அவர் கூறினார்.

அதே நபருக்கு வேறொரு வேடிக்கையான நிகழ்வும் நடந்தது. அவருக்கு ஒதுக்கப்பட்ட படுக்கையில் தலையணையும் இருந்தது. இரவு முழுவதும் அதை அவர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு "அந்தத் தலையணைக்குள் ஏதோ மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்றும், புதையல் என்று நினைத்ததாலும், அதை பாதுகாக்கும் வகையில் இரவு முழுவதும் தான் காவல் காத்துக் கொண்டிருந்ததாகவும் அவர் கூறினார்."

இதுபோல பிறரைக் குறித்து முறையீடு செய்வதைச் சிலர் வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். இது சில நேரங்களில் எரிச்சலூட்டுவதாக அமைந்து விடுவதுண்டு. அதுபோக அந்த நபர், தன் முறையீடும் பதற்றப்படும் தன்மையும் நியாயமானதே என்று கருதிக் கொள்கிறார்.

இது அறியாமை. முழு விபரங்களற்ற முறைப்பாடுகள் அடிப்படையற்றவை என்பது அவருக்குத் தெரிவதேயில்லை. ஏதேனுமொரு செய்தி கிடைக்கிறது என்றால் முழுமையாக அதைக் குறித்து விசாரித்துக் கொள்ளும்படி திருக்குர்ஆன் கூறுகிறது. இதனால் இத்தகைய தீமைகளிலிருந்து விலகி இருக்க முடியும். உள்ளபடியே கேள்விப்பட்ட விஷயம் மிகத் தீவிரமானது என்றால் இரண்டில் ஒன்றைத்தான் செய்யமுடியும். முதல் அணுகுமுறை கெட்டதை மறந்துவிடுவது, இரண்டாவது அணுகுமுறை அமைதியாக இருந்துவிடுவது. இதைக் குறித்து விவாதிக்க விரும்பினால் அந்தக்

குறிப்பிட்ட துறையின் நிபுணருடன் பேசிய பிறகு கிடைக்கும் முடிவுகளை ஏற்க வேண்டும். எந்த ஆய்வும் செய்யாமல் வெறுமனே புகார் செய்து கொண்டிருப்பது எவ்வளவு தவறோ அதே அளவுக்கு நிபுணரின் பரிசீலனைகளை ஏற்க மறுப்பதும் தவறானதே.

## வாய்ப்புகளுக்கு முடிவே இல்லை

மேற்குத் திசையிலிருந்த மலைகளின் பின்னால், முகட்டில் பாதி சூரியன் மறைந்து கொண்டிருந்தது. மறுபாதி உச்சியில் தெரிந்து கொண்டிருந்தது. சிறிது நேரம் கழித்து மலைத் தொடர்களில் அது காணாமல் போய்விட்டது.

இப்போது இருள் எல்லா இடங்களிலும் பரவுவது ஒரு பக்கம் இருக்க, வெளிச்சம் மறுபுறம் பின்வாங்க ஆரம்பித்தது. இனி எல்லா திசைகளிலும் அடர்ந்த இருள் கோலோச்சியது. அதேநேரம் எதிர்புறத்தில் ஒளிக் கதிர்கள் தென்படத் தொடங்கின. பன்னிரெண்டாவது நிலவொளியின் ரேகையது. கணப் பொழுதில் ஒளிவீசும் சந்திரன் தென்படத் தொடங்கியது. சூரியன் மறைந்ததால் உண்டான இருளின்மீது நிலவொளியின் ஆதிக்கம் பரவி விட்டது.

இதுவே இயற்கையின் பேரடையாளம். ஒரு வாய்ப்பு பறிபோகிறது எனில் பிறிதொரு வாய்ப்பு கட்டாயம் இருக்கும். சூரியன் மறைந்த பிறகு உலகில் உருவாகும் இருளை நிலவொளி நிச்சயம் விரட்டிவிடும்.

தனிநபரோ, குழுவோ, நாடோ யாருக்கும் வாய்ப்புகள் ஒருபோதும் எழாமல் போவதில்லை. மோசமான காலத்தில் வாழும் அனைவருக்கும் மறுவாய்ப்பை இறைவன் தருவான். கிடைக்கும் புதிய வாய்ப்புகள் தன்னை நோக்கி இழுக்கக் கற்றிருக்க வேண்டும். ஏமாற்றமடையாமல் அறிவார்ந்த வகையில் முயல வேண்டும்.

இறைவன் பல்வேறு சாத்தியங்களுடனேயே இந்த உலகை படைத்துள்ளான். தோல்வியொன்று எழும்போது, இருளை அகற்றும் புதிய ஒளி பிறக்கிறது.

வீடு விழும்போது அதே இடத்தில் புதிய வீடு கட்டிக்கொள்ள காலியிடம் ஒன்றும் அங்கே உருவாவது இயல்பு. இதே போலத்தான்வாழ்க்கையில் ஒவ்வொரு தோல்வியிலும் புதிய வாய்ப்பும் இணைந்தே உள்ளது. இரு நாடுகளின் போட்டியில் ஒன்று முன்னேறிச் செல்கிறது. மற்றது பின்தங்கி விடுகிறது எனக் கொண்டால் அத்துடன் முடிவடைந்து விடுவதில்லை.

அதற்கொரு தொடர்ச்சியுள்ளது. வென்ற அணி ஆடம்பரத்தில் மயங்கி சொகுசுக்குப் பழகி விடுகிறது. தோற்று போன குழு கடின உழைப்பில் ஈடுபடுகிறது.

ஏமாற்றம், மனச்சோர்வு நிலையானதல்ல, எதிர்நீச்சல் போட்டால் நிலமையில் மாற்றத்தை இறைவன் தருவான். சூழ்நிலை எவ்வளவு மோசமாக தோன்றினாலும் வெற்றிக்கான வாய்ப்பு உள்ளது. மனிதன் அதைக் கண்டறிய வேண்டும். தோல்வியிலிருந்து வெற்றிக்கான விதியும் அதிலேயே அடங்கியுள்ளது.

## எதையும் பெறுவதற்கு முன்பு

"கொடுப்பதால்தான் நாம் பெற்றுக் கொள்கிறோம்" என்பதாக ஆங்கிலப் பழமொழி ஒன்றுள்ளது.

இந்த உலகத்தைப் படைத்த இறைவன் ஒரு விதியை வகுத்துள்ளான். இந்த உலகிற்கு, ஊருக்குத் தராதவர் பதிலுக்கு எதையும் பெறவும் முடியாது. இந்த உலகில் இறைவன் சில நியதிகளை வகுத்து வைத்துள்ளான்.

எடுத்துக்காட்டாக மரத்தை எடுத்துக் கொள்வோம். அது பூமியிலிருந்து தண்ணீரையும், தாதுக்களையும், காற்றிலிருந்து நைட்ரஜனையும், சூரியனிலிருந்து வெப்பத்தையும் எடுத்துக் கொள்கிறது. பிரபஞ்ச ஒழுங்கு இவ்வாறு முழுமையாகிறது. இதன் பிறகு என்ன நடக்கிறது எனில் மரத்தின் முழு இருப்பும் இனி மக்களுக்கென அர்ப்பணிக்கப்படுகிறது. மக்களுக்கு அது நிழலையும் பூக்களையும் பழங்களையும் தருகின்றன. கடைசியில் தன் முழு உடலையே விறகாகக் கொடுத்து விடுகிறது.

மரத்தின் முழு வாழ்வும் பிறருக்கு உதவுவதிலேயே கழிகிறது. பிரபஞ்சத்தின் எல்லா படைப்புகளும் இதே மாதிரியை பின்பற்றுகின்றன. சூரியன், ஆறு, மலை, காற்று என அனைத்துமே பிறருக்குத் தருகின்றன. அவை ஒருபோதும் உரிமையைக் கோரி நிற்பதில்லை.

இந்த உலகில் கொடுப்பதற்குப் பதிலாக பெற விரும்பும் ஒரே உயிரினம் மனிதன் மட்டுமே. சுரண்டல் என்பது இங்குதான் உள்ளது. தருவதைவிட பெறுவதே குறிக்கோளாக கொண்டிருப்பவர்கள் மனிதர்கள் மட்டுமே.

# இயற்கையின் அடிப்படை

சில மாதங்களுக்கு நீங்கள் உங்கள் வீட்டிலுள்ள அறையைப் பூட்டி வெளியில் சென்றுவிட்டுத் திரும்பினால் எங்கும் புழுதி படர்ந்து கிடப்பதைக் காண்பீர்கள். அதைத் துடைத்து தூய்மையாக்கும் வரை அங்கு அமர உங்கள் மனம் இடங்கொடுக்காது. அந்தத் தூசுப் படலம் முகத்தில் படிந்து ஏற்படுத்தும் அசூசையைத் தூய்மையான காற்று நீக்கிவிடுகிறது.

பிறகு ஏன் தூசி நமக்குப் பிடிக்காமல் போகிறது. தூசி என்பது என்ன? வளமான மண்ணின் மேற்பரப்பின் மீதுள்ள மென்படலமே அது. காய்கறிகள், பழங்கள், தானியங்கள் போன்ற அனைத்தும் இந்த மண்ணிலிருந்தே உற்பத்தியாகிறன்றன. மண் இல்லாவிட்டால் பூமியில் வாழ்க்கை, உயிர்த்தன்மை என்பதே இல்லாமல் போய்விடும்.

பூமியில் தண்ணீர் ஆவியாக மாற வளிமண்டல தூசியே வினையாற்றுகிறது. இந்த அடர்த்தி நீராக மேலெழுந்து மழை பொழிவு ஏற்படுகிறது. மழை இல்லாவிட்டால் உயிரியக்கம் இல்லை.

சூரிய உதயம், மறைவு ஆகியவற்றின்போது அழகிய பொன்னிறமாக தோன்ற தூசியே காரணம். இதைத் தவிர தூசியால் நடைமுறைப் பயன்களும் இருக்கின்றன.

விரும்பத்தகாத விஷயங்களுடனே விரும்பத்தக்க விஷயங்கள் உள்ளன. கூர்மையான முட்களுடன் ரோஜா பூத்திருப்பதை இதன் நேரடி எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். மகிழ்ச்சி, துக்கம் இரண்டின் கலவையே வாழ்க்கையாகும். இறைவன் இவ்வுலகை இந்த விதமாகவே படைத்துள்ளான். இயற்கையின் ஒழுங்கோடு பொருந்திச் செல்வதன் மூலமே இயங்க முடியும். நாம் எவ்வளவு முயற்சி செய்தாலும் இயற்கையின் நடைமுறையில் நம்மால் எந்தவொரு மாறுதலையும் செய்துவிட முடியாது.

வாழ்க்கையை குற்றஞ்சாட்ட விரும்பினால் நூறு விஷயங்கள் கொட்டிக் கிடக்கின்றன. முறையிட காரணங்கள் கிடைக்கலாம். அது நியாயமாகவும் படும். இதனால் பயனேதுமில்லை. விரும்பத்தகாத நினைவுகளை மறந்து, மனக்கசப்பைத் துறந்து வாழ்க்கையின் உண்மையான நோக்கத்தை அடைய முற்பட்டால் அதுவே அறிவார்ந்த செயலாக மாறும். அதை விடுத்துப் புகார் செய்து கொண்டிருப்பது நேரத்தை வீணடிப்பதில்தான் கழியும்.

# இயற்கை விதிகள்

Harry Emerson Fosdick (1878 - 1969) வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க ஒரு உண்மையை இவ்வாறு விளக்கினார்:

“நீராவியும் வாயுவும் கட்டுப்படுத்தப்படாத வரை வெப்ப ஆற்றலாக மாறி இயந்திரத்தை ஓட வைப்பதில்லை. நயாகரா நீர்வீழ்ச்சியின் தண்ணீர் குறுகிய பாதையில் செலுத்தப்படாத வரை மின்சாரத்தையும் ஒளியையும் தருவதில்லை. அதேபோல அர்ப்பணிப்பும் ஓர்மையும் ஒழுங்கும் இல்லாத வரையில் வாழ்க்கையில் முன்னேற்றம் இல்லை” என்று ‘Living Under Tension’ என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

இயற்கையின் நிலைமாறா விதிகள் உயிருள்ளவவை, உயிரற்றவை ஆகியஇரண்டுக்கும்பொருந்துவதாகஇருக்கின்றன.ஒவ்வொன்றுக்கும் ஒரு விலை உண்டு. அந்த விலையைக் கொடுக்காதவரை அடைய விரும்பும் எதுவும் நமக்குக் கிடைப்பதில்லை.

மூழ்கத் தயாராக இருப்பவருக்கே இங்கு மேலே எழுவது சாத்தியமாகிறது. தன்னை இழக்க முன்வருவோருக்கே பெரிய பொறுப்புகள் கைவசமாகின்றன. பின் தங்கிய நிலையேகூட முன்னேற்றத்துக்குக் காரணமாக மாறலாம். தோல்வியடைந்தவரே வெற்றி பெற முடியும்.

தான் உருவாக்கிய உலகில் மனிதன் வாழவில்லை. இந்த பூமியை, பிரபஞ்சத்தை இறைவன் படைத்திருக்கிறான். ஆக, அவனுடைய இயங்குவிதி என்னவென்பதை நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும். அந்தச் சட்டங்களைப் பின்பற்றுவதால் நமக்கான ஓர் இடத்தைப் பெற முடியும். இது மிக எளிய உண்மை. நடைமுறையில் மனிதன் இதை அடிக்கடி மறந்துவிடுகிறான். இறைவனின் சட்டங்களுக்கேற்ப வாழ பழகிக் கொள்வதைத் தவிர வேறு வழியெதுவும் இங்கே இருப்பதாகத் தெரியவில்லை.

எல்லாச் செயல்களுக்கும் பரிணாமக் கட்டங்கள் உள்ளன. அதைக் கடக்காமல் வாழ்க்கையில் நேரடியாக வெற்றியின் எல்லைக்குத் தாவிச் செல்ல நினைக்கின்றனர். அவ்வாறான எண்ணம் கொண்டிருந்தால் அவர் தமக்கான தனியொரு உலகைப் படைக்க வேண்டி இருக்கும். இந்த உலகில் இறைவனின் சட்டங்களே நிலைக்கொண்டிருக்கின்றன. சொந்தத் தேவைகளுக்கேற்ப வாழ நினைப்பது பகல் கனவாகவே முடியும்.

## உடைந்த பிறகு

மரத்தை உடைத்துப் போட்டால் அவை வெறும் விறகுத் துண்டுகள் மட்டுமே. அந்த விறகு இனி ஒருபோதும் மரமாக முடியாது. ஆனால் உயிர்ப் பொருள் வெட்டிய பிறகும் வாழ்கிறது. அதாவது ஒரு செல் (Amoebae) நுண்ணுயிரியை இரண்டாகத் துண்டித்து விடும்போது அது இன்னுமொரு ஜீவனாக உயிர்த்தெழும்.

உயிருள்ள மனிதனுக்கு இந்த உலகில் எந்த அளவிற்கு வாய்ப்புகள் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இது காட்டுகிறது. உறுதியாக இது இறைவனின் பேரருட்கொடையாளமாகும். எந்தத் தோல்வியும் இறுதியானது அல்ல. எந்த இழப்பும் நிரந்தரமாக யாரையும் முடக்கிப் போட்டு விடுவதில்லை. உயிர்த் துடிப்புள்ள மனிதனை எவரும் சிதைத்துவிட முடியாது. உடைக்கப்படும் மனிதனால் புதிதாகப் பிறவியெடுக்க முடியும். அது முன்பைவிட வலிமையாக பேருரு கொள்ளும்.

மனிதனைப் பொறுத்தவரையில் தோல்வி என்பது பேரழிவு அல்ல. அது ஏன் ஏற்பட்டது என்கிற ஆழமான கவலை ஒருவருக்கு இருந்தால் சிந்தனையாளனாக மாறி மீட்பின் வழியை அவனால் கண்டறிய முடியும். தடைகள் புதிய வழிகளின் திறப்பாக மாறிவிடும். பின்னடைவுகள் வளர்ச்சி நிலையை வேகப்படுத்தும். நசுக்கப்படும் துண்டுகள் ஒவ்வொன்றும் புதிய உயிர் இயக்கத்தைப் பெறும் திறனை அளிக்கும்.

தான் உயிர்ப்புடன் இருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளும் மனிதனுக்கு முடிவேயில்லாத சாத்தியக்கூறுகளுடன் இந்த உலகை இறைவன் உருவாக்கியுள்ளான். சிதைவுகளின் எச்சங்களில் மூலவளங்களை மீட்டெடுத்து பயனுற முடியும். இழப்புகளின்போது இதயத்தைத் தளரவிடக் கூடாது. படகு உடைந்த பிறகு அதைப் பழுது பார்த்துப் பயணத்தைத் தொடரத்தான் வேண்டும். வாழ்க்கையும் அப்படித்தான்.

ஐஐஐ

## உலகம் தட்டச்சு இயந்திரம் அல்ல

தட்டச்சுப் பொறியின் முன்னால் ஒரு நபர் அமர்ந்திருந்தார். அவருக்கு ஏதோ நினைவுக்கு வர இயந்திரத்தில் காகிதத்தைச் சொருகியவாறு விசைப்பலகையில் தட்டச்சு செய்யத் தொடங்கினார். அவரது எண்ணங்கள் சொற்களாக வடிவம் எடுக்கத் தொடங்கின. அந்த வாக்கியங்கள் கீழ்க்கண்டவாறு இருந்தன.

“நானே சரியானவன், என்னைத் தவிர மற்ற எல்லோரும் தவறானவர்களே!”

என்னிடம் எந்தத் தவறும் இல்லை, எல்லா விஷயங்களிலும் பிறரே குற்றவாளிகள்.

நான் எல்லோரை விடவும் பெரியவன், மற்றவர்கள் அனைவரும் என்னைவிடக் குறைந்தவர்கள், தாழ்ந்தவர்கள்.

நான் இறைவனுக்கு மிகவும் வேண்டியவன். இவ்வுலகமும் எனது; மறுமையில் சொர்க்கமும் எனக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

தான் விரும்பியதைத் தாளில் கண்ட அந்த மனிதன் பெரும் மகிழ்ச்சியுற்றான். ஆனால் உலகம் தட்டச்சுப் பொறியல்ல என்பது இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவனுக்குத் தெரியவில்லை என்பதை துரதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டியிருக்கும். தட்டச்சு செய்து தன் மனதில் தோன்றியவற்றை எழுத்துக்களாக மாற்ற முடிந்தவாறு எதார்த்தத்தில் செய்து விட முடியுமா என்ன? தட்டச்சுப் பொறியின் விசைப் பலகையில் கைவிரல்களை அதற்குரிய விதிப்படி செலுத்திக் கொண்டிருந்தால் அவை அச்சேறி விடும். ஒருவன் வாழ்க்கையில் தன் எண்ணங்களை நனவாக்க நீண்ட காலத்துக்குப் பெரும் உழைப்பு செலுத்த வேண்டியிருக்கும். வெள்ளைத் தாளில் தன் எண்ணங்களை பதிய வைத்ததற்கு மாறாக புற உலகில் இந்தச் சாதனை மேற்கொள்ள முடியுமா என்ன? வெறும் கனவுகளாலும் நப்பாசைகளாலும் கிடைப்பது எதுவுமில்லை. காரணம் வெளிப்படையான உண்மையும் நிதர்சனமும் இதுவே.

இந்த உலகம் ஒன்றும் தட்டச்சுப் பொறியல்ல என்பதே விரும்பத்தகாத உண்மை. வெறும் தட்டச்சு செய்துவிடுவதால் மட்டுமே நினைத்ததை எல்லாம் வரவழைத்து விட முடியாது அல்லவா? நம் கைவிரல்களின் போக்கின்படி எழுத்துக்களாக மாறிவிட வாழ்க்கையொன்றும் தட்டச்சு விசைப் பலகை அல்ல. கடும் எதார்த்தங்களைச் சூழ்ந்த உலகம் இது. இதைப் புரிந்து கொண்டவர்களால் மட்டுமே சாதிக்க முடியும். மனிதன் தன்னிடமுள்ள நாக்கு, பேனா ஆகியவற்றைக் கொண்டு தன் வெளிப்பாட்டை நிகழ்த்திவிட முடியும். அதைக் கொண்டு விரும்பியதைக் கூறவும் நினைத்ததை எழுதவும் செய்யலாம். தட்டச்சின் எழுத்தும் ஓவியத்திலுள்ள புள்ளிகளும் படங்கள் மட்டுமே. உச்சரிக்கும் பேச்சும் காற்றில் கலந்து மறைந்துவிடுகின்றன. இந்தப் பேச்சும் எழுத்தும் நிதர்சனங்களாக மாற உழைப்பு அவசியம். உறுதியான செயல்கள் முக்கியம். இந்த மாற்றம் நிகழாதபட்சத்தில் இருப்பதும்கூட தொலைந்து போகும்.

# இறைவனின் படைப்புத் திட்டம்

நான் யார்? நான் ஏன் இந்த பூமியில் இருக்கிறேன்? மனித வாழ்க்கையின் நோக்கம் என்னவாக இருக்கக் கூடும்? வெற்றி, தோல்வி என்பது என்ன? என்று எல்லோரும் ஒன்றையே வெவ்வேறு மாதிரி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இறைவனின் படைப்புத் திட்டம் என்றால் என்ன என்று இந்தக் கேள்விகளை ஒரே வாக்கியமாகத் தொகுத்துக் கூறலாம்.

குர்ஆனின் அல்முல்க் (ஆட்சி என்கிற) அறுபத்து ஏழாவது அத்தியாயம் இந்தக் கேள்விக்கான பதிலைத் தருகிறது. தொடர்புடைய வசனத்தின் மொழிபெயர்ப்பு பின்வருமாறு:

“உங்களில் செயல்களால் மிக அழகானவர் யார் என்பதைச் சோதிப்பதற்காக அவன் இறப்பையும் வாழ்வையும் படைத்தான்; அவன் யாவற்றிலும் வல்லவன்; பெரும் மன்னிப்பாளன் (67:2)

திருக்குர்ஆனின் கூற்றுப்படி மனிதன் நிலையான (நித்திய) ஜீவனாகப் படைக்கப்பட்டான். ‘மரணமும் வாழ்வும்’ என்பது வாழ்க்கையில் இறப்பிற்கு முந்தைய, அதற்குப் பிந்தைய ஆரிய இரண்டு காலத்தையும் மேற்கண்ட வசனம் குறிக்கிறது. எனவே மரணமும் வாழ்வும் மனிதர்களின் நித்திய வாழ்க்கை முழுவதையும் உள்ளடக்கியது.

உண்மை என்னவென்றால், மனிதனை இறைவன் சீரிய சிந்தனையுயில் உரிய திட்டங்களுடன் படைத்திருக்கிறான். அதாவது மனிதனுக்கு முழு சுதந்திரம் அளிப்பது இதன் சாராம்சமாகும். இது வெகுமதியாக அல்ல, இதில் ஒரு சோதனை அடங்கியுள்ளது. தன் சுதந்திரத்தை முறைகேடாகப் பயன்படுத்தியது யார், சரியாகப் பயன்படுத்தியது யார் என்பதை இறைவன் இந்தத் தேர்வின் மூலம் அறிய விரும்புகிறான். இதுவே இறைவனின் படைப்புத் திட்டமாகும்.

மனித குலத்தைச் சோதிப்பது மட்டுமல்ல இதன் பொருள். மனிதனைப் படைப்பதற்கு முன்பு இறைவன் ‘சொர்க்கம்’ என்கிற உயர்ந்த / சிறந்த உலகத்தை உருவாக்கியிருந்தான். இப்போது இறைவன் அங்கு அதாவது சொர்க்கத்தில் குடியேற இங்கு இந்த உலகில் சிறந்து விளங்கும் ஆண் / பெண்களிலிருந்து தேர்வு செய்ய விரும்புகிறான். ஆகவே இந்த உலகம் சொர்க்கத்திற்கான தேர்வு மையமாகும்.

இறைவனின் இந்தத் திட்டத்தின்படி, தற்போதைய வாழ்நாள் மனிதனுக்குச் சிறந்ததொரு வாய்ப்பை வழங்குகிறது. அதற்கேற்ப இறந்து போவதற்கு முன்பு வாழ்ந்துக் கொண்டிருக்கும் காலக்கட்டத்தில் மனிதர்கள் சொர்க்கத்திற்குத் தன்னை தகுதிப்படுத்திக் கொள்ள இயலும். அவ்வாறுமட்டுமே இறந்த பிறகுள்ள நிலையான வாழ்க்கைக்கான தகுதி கிடைக்கும்.

இறைவனின் இந்தத் திட்டம் மனிதனுக்குப் பெரும் நம்பிக்கையை அளிக்கிறது. தற்போதுள்ள இந்த உலகம் பிரச்சனைகள் நிறைந்ததாக இருக்கலாம். ஏனெனில் இந்த உலகில் துக்கம், வலி, விரும்பத்தகாத சூழ்நிலைகள் அமைந்துள்ளன. திருக்குர்ஆனின் கூற்றுப்படி இறைவனின் படைப்புத் திட்டம் பெரிய ஆறுதலை அளிக்கிறது, அது இருளில் வீசும் ஒளியைப் போன்றது. இந்த உலகில் ஆண் / பெண் எல்லோரும் அனுபவிக்கக்கூடிய துன்பங்கள் தற்காலிகச் சோதனைக்கானவை. இங்கு வைக்கப்பட்டுள்ள தேர்வில் தேர்ச்சி பெற்றவுடன், அவர்கள் நிலைப்பேறான சொர்க்கத்தில் அதிர்ஷ்டசாலிகள் ஆவர் என்பது நம்பிக்கையளிக்கும் செய்தியல்லவா?

இந்தக் குர்ஆனின் கருத்து மனித வாழ்க்கையை விளக்குகிறது. இது மனிதனின் இருப்பை மட்டுமல்ல, இந்த உலகில் அவன் எதிர்கொள்ளும் அனைத்து தவறான செயல்களைப் பற்றியும் பேசுகிறது. வாழ்வில் உள்ள நன்மை தீமைகள் அனைத்திற்கும் பெரும் அர்த்தத்தை தருகிறது.

மனிதன் தனித்துவமான குணங்களுடன் பிறக்கிறான், அவன் வரம்பற்ற ஆசைகளுடன் பிறக்கிறான், அவனது மனது மகத்தான ஆற்றலைக் கொண்டுள்ளது, ஆனால், தன் திறனை உணர்ந்து, தனக்குரிய ஆசைகளை அடைந்து கொள்ளும் முன், அவனது வாழ்க்கை முடிவுக்கு வருகிறது.

இறப்பு என்பதை அடிக்கடி பார்க்கும் மனிதனுக்கு அது தவிர்க்க இயலாத நிகழ்வாக தோன்றுகிறது. ஆனால் மேலேயுள்ள இறைவனுடைய திட்டத்தின் ஒளி தெளிவானது. மனித வாழ்க்கை முற்றிலும் விளக்கப்படக் கூடியதாகவும், புரிந்துக் கொள்ள இயலக்கூடியதாகவும் இருக்கிறது. இதிலிருந்தே இவை எல்லாம் எப்படி சரியாகிறது என்பதை உணரமுடியும்.

# இம்மையும் மறுமையும்

வயலில் விதைக்கும்போதே அறுவடை செய்ய நினைக்கும் விவசாயி கையில் வைத்திருக்கும் விதையையும் இழப்பான். அறுவடையும் கனவாக முடியும். இந்த உலக வாழ்க்கையிலும், இறந்தபிறகு வர இருக்கும் மறு உலக வாழ்க்கையிலும் இதே நிலைமைதான். இந்த உலகம் செயல்படுவதற்கான இடம், மறுமையோ அதற்குரிய கூலி பெறக்கூடிய இடமாகும். இந்த உலகிலேயே வெகுமதியைப் பெற நினைப்பவரால் இங்கு செய்ய வேண்டிய பணிகளைக்கூட ஒழுங்காக செய்ய முடியாது. மறு உலக வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரே வாய்ப்பையும் அவர் இழந்துவிடுவார்.

மறு உலகில், சொர்க்கத்தில் கிடைக்க இருப்பதை இவ்வுலகில் அடைய நினைப்பது பேதமை. அதனால் இரண்டையும் இழக்க நேரிடும். இவ்வுலகச் சுழலில் சிக்கிக் கொள்ளாமல் மறு உலகில் தனக்குரிய இடத்தை, பரிசைக் கண்டறிய வேண்டும். ஆக, யார் இவ்வுலகை விற்று மறு உலகை வாங்கிக் கொள்கிறாரோ அவரே புத்திசாலி.

நம் வீட்டிலிருக்கும் வசதியை, பயணத்தில் எதிர்ப்பார்க்க முடியுமா என்ன? அப்படி தேடிப் போகக் கூடியவரைக் குறித்துச் சொல்ல என்ன உள்ளது? அந்த முயற்சி ஒருபோதும் வெற்றி பெறாது. இந்த உலகம் மற்றும் மறு உலகம் குறித்து ஓர் எடுத்துக்காட்டின் மூலம் புரிந்து கொள்ள முயல்வோம். நம் செயல்பாடுகள் எப்படி இருந்தன என்பதைக் கண்டறிய விரும்பும் இறைவன், அதன் துணை விளைவின் பயனை, முடிவுகளை மறு உலகில் தருவான் என்பது அடிப்படையான கோட்பாடு. இந்த உலகம் பயணம் என்று கொண்டால் மறு உலகம் போய்ச் சேரும் இலக்காகும்.

இவ்வுலகிலேயே இறுதி முடிவுகளை பெற்றுக் கொள்ள விரும்பியவரின் செயல் திட்டங்கள் முழுக்க மோசமாகவே போய் முடியும். அதேபோல வழியில் இறுதி இலக்கின் வசதிகளை எதிர்பார்ப்பவரின் பயண திசையும் மாறிப் போகவாய்ப்புள்ளது.

இவ்வுலகம் மறு உலகம் என இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்பவரே அறிஞர். ஒருவர் இறப்புக்குப் பிறகு உள்ள வாழ்க்கையை இறப்புக்கு முன்பு இங்கேயே இப்பொழுதே பெற விரும்பாதவராக இருக்க வேண்டும்.

மனிதன் எப்பொழுதும் இயல்நிலையின் களநிலவரம், எதார்த்தம் அறிந்தவனாக இருப்பது அவசியம். ஆசைகளின்

பின்னால் போகாதவனாக இருக்க வேண்டும். விருப்பங்கள் எப்பொழுதும் அழிவுக்கு இட்டுச் செல்லக்கூடியவை.

## மனிதனுக்கு ஏற்படும் சோதனைக்கான காரணங்கள்

இறைவன் தன் படைப்புத் திட்டத்தின்படி, மனிதனைச் சோதனைக்கு உட்படுத்தும் நோக்கத்திற்காக இந்த பூமியில் குடியேற்றினான். இந்தப் படைப்புத் திட்டம் திருக்குர்ஆனில் பல்வேறு முறை தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் படைப்புத் திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதைக் குறித்த தகவல் திருக்குர்ஆனின் 'யூனுஸ்' அத்தியாயத்தில் உள்ளது.

"பிறகு நீங்கள் எவ்வாறு செயல்படுகிறீர்கள் என்பதை காண்பதற்காக அவர்களுக்குப் பின் பூமியில் வழித்தோன்றல்களாக உங்களை நாம் ஆக்கினோம்." *(10:14)*

இது ஒருவரின் தார்மீகப் பொறுப்புணர்வைச் சோதனை அடிப்படையில் அறிய முயல்வது. எந்தவொரு மனிதனும் தான் விசாரணை நிலையில் இருப்பதாகவும், தன் எல்லா செயல்களும் பதிவாகிக் கொண்டிருக்கின்றன என்பதையும் புரிந்து கொள்ளும் போது அந்த நபருக்குப் பொறுப்புணர்வு கூடும் என்பதே உண்மை. அந்த நபர் தன் சிந்தனை, பேச்சு, சமூக உறவாடல் என ஒவ்வொரு அம்சத்திலும் தன் செயல்பாடுகளை இதற்கேற்பக் கவனத்துடன் தகவமைத்துக் கொள்வார். உண்மையில், அவர் எவ்வாறு சோதிக்கப்படுகிறார் என்பதைப் பற்றிய இந்தப் புரிதல் சுயபரிசோதனையை ஊக்குவிக்கும் பொறிமுறையாக இயங்குகிறது. இதுவே அவனை நல்ல மனிதனாகவும், சமூகத்தின் சீரிய உறுப்பாகவும் மாற்றக்கூடிய முக்கியமான காரணியாகும்.

ஆனால் எதற்காக இந்தப் பரிசோதனை? மனிதனின் இறுதி இலக்கு என்பது சொர்க்கம், ஆனால் அந்த வாசலை நல்லவர்களால் மட்டுமே கடக்க இயலும். ஆகவே சொர்க்கவாசியாகத் தேர்ந்தெடுக்கப்பட அதற்குரிய தகுதி இருக்கிறதா என்பதை அறியவே இந்தச் சோதனை. அறிவார்த்தமாகவும், தார்மீகமாகவும் இந்தச் சோதனை பெரிய ஊக்கமாக இருக்கக் கூடியது. சொல்லப் போனால் ஒழுக்கமாக வாழ்க்கையை அமைத்துக் கொள்வதே சுயநலம் சார்ந்தது. நன்னெறிகளுடன் இருப்பதை உணர்த்தக் கூடியது. இல்லையெனில் அவர் சொர்க்கத்தில் நுழைவதற்கான வாய்ப்பை இழக்க நேரிடும்.

“உண்ணவும், குடிக்கவும் மகிழ்ச்சியாக இருக்கவும்” என்கிற விதியைப் பின்பற்றுபவர்களுக்குத் தம் சுய விருப்பத்துக்கு அப்பால் உள்ள எதுவுமே தெரியாது. இது மோசமான, ஆபத்தான மாற்றாகும். இதில் அவர்களால் விலங்கு நிலையிலிருந்து மேம்பட்டுச் செல்ல இயலாது. இது சமூக அமைப்பைச் சீர்குலைக்கும் விதிமுறையாகும்.

ஆனால் மேற்கூறிய குர்ஆனிய சூத்திரம் மனிதனைத் தனது சமூகத்தின் பொறுப்பான உறுப்பினராக நடந்து கொள்ளும்படி கட்டாயப்படுத்துகிறது. மனிதகுலம் முழுவதுமே அவனுடைய கவலையாகிவிடுகிறது. பிறகு அவனால் ஒரு பொறுப்பற்ற மனிதனாக வாழ முடியாது. இதுதான் நேர்மையான சமுதாயத்தை நமக்குத் தருகிறது. மறுமை நம்பிக்கையின் அடிப்படையிலான இந்தச் சூத்திரம், நமது உலக வாழ்க்கைக்கும் முழுமையாகப் பொருந்தும். ஒருவன் ஒழுக்கமான பண்புடன் பொறுப்பான நபராக மாறி, சாத்தானின் சோதனைகளுக்கு ஆளாகாமல் தன்னால் இயன்றதைச் செய்தால், அவன் மறுமையின் அடிப்படையில் மட்டுமல்ல, நிகழ்காலத்தின் அடிப்படையிலும் ஒரு நல்ல மனிதனாக மாறுகிறான்.

தன்னளவில் நிற்க தார்மீகக் குணத்திற்கு சிறு ஊக்கம் தேவைப்படுகிறது. ஏனெனில் அந்த ஊக்கம் இல்லாமல் யாரும் அற விழுமியங்களை நிலைநிறுத்தப் போவதில்லை. மேலே குறித்துள்ள திருக்குர்ஆனின் வசனம் அதற்குரிய உத்வேகத்தை அளிக்கிறது. ஆணும், பெண்ணுமாக, சமூகமாக, தனிமனிதனாக எல்லோரும் பொறுப்புணர்வை வெளிப்படுத்த வேண்டும். அனைவரும் இறைவனின் கண்காணிப்பில் உள்ளனர். இறைவன் இந்த உலகில் வெளிப்படுத்திய செயல்களுக்காக அவர்களிடம் விசாரணை நடத்துவான். இந்த விதியிலிருந்து விலக்கு ஒருவருக்கும் இல்லை. இறைவனுக்கு முன் அனைவருக்கும் சமமான பொறுப்பு இருக்கிறது.

மேற்கண்ட திருக்குர்ஆனின் கொள்கை நபிகள் நாயகத்தின் சமகாலத்து மக்களைப் பற்றிப் பேசுவது மட்டுமல்ல, முழு படைப்புக்கும் பொருந்தக் கூடிய நிலையான போதனையாகும்.

## தெய்வீகத் திட்டம்

திருக்குர்ஆனின் கூற்றுப்படி மனிதன் நிலைப்பேறான ஜீவனாகப் படைக்கப்பட்டுள்ளான். தற்போதைய உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் (மரணத்திற்கு முந்தைய) காலக்கட்டம்

தற்காலிகமானது. அதே சமயம் மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையின் காலம் நித்தியமானது. இறைவன் மனிதனை நன்கு சிந்தித்து வடிவமைத்த திட்டத்தின்படியே படைத்தான் என்பதே உண்மை. அதன் சாராம்சம் மனிதனுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்குவதாக இருக்கிறது. எதை வேண்டுமானாலும் செய்து கொள்ளக் கூடிய இந்த விடுதலை உணர்வு வெகுமதி அல்ல, நிச்சயம் இதில் சோதனை உள்ளடங்கியுள்ளது. இந்தச் சோதனையில் முடிவாக, தன் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்தியது யார்? சிறப்பாகப் பயன்படுத்தியவர் யார் என்பதை இறைவனிடம் காட்டியாக வேண்டும். இதுவே மனிதனுக்கான தெய்வீகத் திட்டமாகும். மனித குலத்தைச் சோதிப்பது மட்டுமே இதன் நோக்கம் அல்ல, இதைவிடப் பெரிய நோக்கம் இதில் பொதிந்துள்ளது. மனிதனைப் படைப்பதற்கு முன், இறைவன் ஒரு சிறந்த உலகத்தை, அதாவது சொர்க்கத்தை உருவாக்கினான். அந்த இடத்தில் நித்தியமாகக் குடியேறத் தகுதியுள்ள சிறந்த ஆண்களையும் பெண்களையும் அவன் விரும்புகிறான். எனவே தற்போதைய உலகம் ஒரு தேர்வு மைதானமாகும்.

இந்தத் தெய்வீகத் திட்டத்தின்படி, தற்போதைய வாழ்நாள் மனிதனுக்கு ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. இறந்து போகும் முன்பு மனிதன் சொர்க்கத்திற்குத் தகுதிபெறும் வாய்ப்பைப் பெறுகிறான். அதனால் மரணத்திற்குப் பிந்தைய காலத்தில் அவன் இந்தச் சரியான உலகில் தகுதியான வேட்பாளராகக் குடியேற முடியும்.

ஐஐஐ

## தற்கொலை ஒரு தீர்வு அல்ல

(ஓய்வுபெற்ற ஜெனரல்) அதீக்குர் ரஹ்மான் இப்பொழுது பாகிஸ்தான் நாட்டு மத்திய அரசுப்பணி தேர்வாணையக் குழுவின் தலைவராக இருந்து வருகிறார். பிப்ரவரி 1984யில் அரசு முறைப் பயணமாக புதுடில்லி வந்திருந்தார். இவருடைய பெற்றோர்கள் இந்திய விடுதலைக்கு முன்பு அகதிகளாகப் பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்தவர்கள். இரண்டாம் உலகப் போரின்போது பர்மாவில் இவர் ஃபீல்ட் மார்ஷல் மானக்ஷாவுடன் பணியாற்றியிருக்கிறார்.

பர்மாவில் பணியாற்றிக் கொண்டிருந்த போது மானெக்ஷா உடனான தமது பழைய நினைவுகளை ஊடகவியலாளர்களின் சந்திப்பில் பகிர்ந்து கொண்டார். மானெக் ஷா படுகாயம் அடைந்திருந்த நிலையில் வலி தாங்காமல், தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துகொள்ள நினைத்தார். துப்பாக்கி

ஒன்றை கொண்டு வந்து தரும்படி மானெக்ஷா கேட்டுக் கொண்ட போது தான் மறுத்துவிட்டதாக அதீகுர் ரஹ்மான் தெரிவித்தார். ஆனால் "1971ஆம் ஆண்டு மானெக்ஷா பாகிஸ்தானுக்கு என்ன செய்யப் போகிறார் என்று தெரிந்திருந்தால் நான் கண்டிப்பாக என் கைத்துப்பாக்கியைக் கொடுத்திருப்பேன்" என்று சிரித்தபடியே கூறினார்.

இரண்டாம் உலகப் போரின்போது தற்கொலை போன்ற தீவிர முடிவை நோக்கிப் போகும் அளவுக்கு மானெக்ஷா வெறுப்புற்று இருந்திருக்கிறார். ஆனால் வெறும் கால் நூற்றாண்டுக்குள்ளாக வங்க தேசப் பிரிவினையின்போது 1971ஆம் ஆண்டு போரில் வெற்றி வீரராக வந்தது வியப்பான உண்மை.

இறைவனின் ஆதரவு மீதான நன்னம்பிக்கையைத் தகர்க்கும் செயலாக தற்கொலை இருப்பதால அதற்கு இஸ்லாத்தில் அனுமதியில்லை. இறப்புக்குப் பிறகான வாழ்க்கையை மறுதலிக்கும் தற்கொலை என்பது மோசமான செயல். இறந்து போவதால் தன் வாழ்க்கை முடிந்து விடுவதில்லை என்பதை உணர

## சோதித்துப் பார்த்தல்

இறைவன் இருக்கிறான் என்றோ, இறைவன்தான் அனைவருக்கும் உணவு அளித்துக் கொண்டிருக்கிறார் என்றோ ஏற்றுக் கொள்ளாத ஒருவன் இருந்தான். இறைவனின் உள்ளமையைப் புரியவைக்க அவனுடைய நண்பர்கள் எவ்வளவோ முயன்றும் பயனில்லாமல் போய்விட்டது. "இதை நானே அனுபவிக்க விரும்புகிறேன்" என்று அவன் இறுதியாகச் சொன்னான். எனவே, ஒரு நாள் அதிகாலையில் வீட்டிலிருந்து புறப்பட்டு காட்டிற்குச் சென்று மரக்கிளையின் மீது அமர்ந்து கொண்டான். இறைவன் எல்லோருக்கும் உணவளிப்பவன் என்றால், அவன் நிச்சயமாக எனக்கும் இங்கே உணவை அனுப்புவான்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

நாள் முழுதும் அவன் மரத்தில் அமர்ந்திருந்தான், ஆனால், காலை, மதியம், இரவு என மூன்று வேளையும் பட்டினி கிடந்தான், உணவு எதுவும் கிடைக்கவில்லை. இறைவன் உணவளிப்பவன் என்பது தவறான நம்பிக்கை என்று இதன் மூலம் தெரிந்து கொண்டான். சிறிது நேரம் கழித்து ஒரு பயணக் கூட்டத்தைக் கண்டான். அவர்கள் அன்றைய இரவைப் பெரியதொரு மரத்தின் கீழ் கழிக்க எண்ணிக் கொண்டிருந்தனர். அங்கும் இங்கும் பார்த்துவிட்டு, கடைசியில்

அந்த மனிதன் எந்த மரத்தில் அமர்ந்திருந்தானோ அதே மரத்தை அந்தப் பயணிகள் தேர்ந்தெடுத்தனர்.

தான் மரத்தின் மீது அமர்ந்திருப்பதை இந்தப் பயணிகள் பார்த்துவிடாதவாறு அவன் அமைதியாக இருந்தான். இரவில் தங்கும் சிறிய கூடாரத்தை அமைத்த பின்னர் பயணிகள் நெருப்பு கொளுத்த விறகுச் சுள்ளிகளைச் சேகரித்தனர். தாங்கள் வைத்திருந்த பையிலிருந்து அரிசி, பருப்பை வெளியே எடுத்து அடுப்பைப் பற்ற வைத்தனர். குழம்பைத் தாளிக்க மிளகாய், எண்ணெய் சட்டியை சூடாக்கினார்கள். மிளகாயின் காரம் மரத்தில் அமர்ந்திருந்தவரின் நாசியை எட்டியதும் அவனால் தும்மலைக் கட்டுப்படுத்த இயலவில்லை. தும்மல் சத்தம் கேட்ட பயணிகள், மரத்தின் மீது அமர்ந்திருப்பவரை நோக்கி, தங்களுடன் உணவு உண்ண கீழே இறங்கி வரும்படி அழைத்தனர்.

இறைவன் மீது சந்தேகம் கொண்டிருந்த அந்த மனித காலையில் வீடு திரும்பினான். “நீங்கள் சொல்வது நூறு சதவீதம் சரி” உணவைப் பெருவதற்குத் தகுதியான எதையும் நாம் செய்யாவிட்டாலும் நிச்சயமாக இறைவன்தான் நமக்கு உணவை அளிக்கிறான் எனத் தன் நண்பர்களிடம் கூறினான்.

ஜஜஜ

## தொலைநோக்குத் திட்டம்

சீனப் பொதுவுடைக் கட்சியின் முன்னாள் தலைவர் Mao Tse tung (1893 - 1976) சிந்தனையைத் தூண்டும் பின்வரும் கதையைக் கூறினார்.

பழங்காலத்தில் வட சீன கிராமம் ஒன்றில் முதியவர் ஒருவர் இருந்தார். மலைத் தொடர் ஒன்றின் அடிவாரத்தில் வசித்த அவர் வீட்டின் எதிர்ப்புறம் உயரமான மலைகள் இருந்ததால் எப்பொழுதும் நிழல் கவ்வியிருக்கும். சூரிய வெளிச்சத்தை மலைகள் தடுப்பதாக அம்முதியவர் நினைத்துக் கொண்டது ஒரு பிரச்சனையாக உருவெடுத்தது. ஒரு நாள் அந்த மனிதர் தன் இரண்டு இளம் மகன்களை அழைத்து இந்த மலைகளை வெட்டியெடுப்பதன் வாயிலாக சூரிய வெளிச்சம் நம் வீட்டில் விழக்கூடும். ஆகவே வேலையைத் தொடங்குங்கள் என்றார்.

அந்த வயதான மனிதரின் பக்கத்து வீட்டுக்காரர் இதைக் கேள்விப்பட்டு இத்திட்டம் பைத்தியக்காரத்தனமானது என்று உரக்கச் சிரித்தார். தாங்கள் ஒரு முட்டாள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், அந்த முட்டாள்தனத்திற்கு எல்லையே

இல்லை போல் உள்ளதே என்றார். உயரமான மலைகளை இந்த வினோதமான காரணத்திற்காகத் தோண்டியெடுப்பதை இந்த உலகில் முன்பு எவரும் செய்ததில்லை. மலைகளை எவராலும் அகற்றிவிட முடியுமா, என்ன?

நீங்கள் சொல்வது சரியே என்று அந்த முதியவர் பொறுப்புணர்வுடன் பதிலளித்தார். இறக்கும்வரை நான் தோண்டியெடுப்பேன், அதன் பிறகு என் பிள்ளைகள், அதற்கடுத்து என் பேரப் பிள்ளைகள் என தலைமுறைகள் தோறும் இது தொடர்ந்து கொண்டிருக்கும். மலைகள் வளரப் போவதில்லை என்பது உண்மை. அதேநேரம் கொஞ்சம் கொஞ்சமாக நாம் தோண்டியெடுக்கும் அளவு அதிகரித்துக் கொண்டிருக்கும். சூரியனை வழிமறித்து என்னைத் தொந்தரவு செய்து கொண்டிருக்கும் இதன் பிரமாண்டம் இறுதியாக நீக்கப்படும் ஒருநாள் வந்தே தீரும் என்றார்.

பிரச்சனைகளுக்கு எல்லையுண்டு, அவை திட்டவட்டமானவை. மட்டுப்படுத்தப்பட்டவை. ஆனால் சிக்கல்களை விடத் தீர்வுகள் வலிமையானவை. வரம்பற்றவை. பிரச்சனைகளுக்கு ஏற்ப பல்வேறு அணுகுமுறைகள் பரிசோதிக்கப்படுவது இயல்பானதே. நீண்டகாலத் திட்டமிடல், பற்றுறுதி, முடித்து வைக்க வேண்டும் என்கிற பெருங்கனவு எல்லாம் அற்புதமான படிப்பினைகளைக் கொண்ட கதையாகிறது.

பெரிய வெற்றி எப்பொழுதும் திட்டவட்டமான, தொடர் முயற்சிகளால் முடித்து வைக்கப்படும் என்று இந்த அழகான கதை கூறுகிறது. இந்த உலகில் பெரிய செயல் எதையும் செய்ய விரும்பினால் பெருந்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். தலைமுறை, தலைமுறையாக தங்கள் திட்டங்கள் முன்னெடுத்துச் செல்லும் மனத்திடம் கொண்டவர்களுக்கு மலையும், மகாநதியும் பொருட்டல்ல, அவர்களுக்கு வெற்றி என்பது கைவசமாகும் கலையாக மாறும்.

ஐஐஐ

## வெற்றி பதினைந்து ஆண்டுகளில்

சாதாரண பீடித் தொழிலாளியாக இருந்த ஒருவர் அதன் முழு கலையையும் படிப்படியாகக் கற்றுக் கொண்டு வந்தார். பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு வெறும் ரூ.5000/ முதலீட்டில் அதே போன்ற கம்பெனி ஒன்றை நிறுவினார். வணிகமும் அதிகரித்து, அது தொழிற்சாலையாக மாறியது. “இது ஒருநாளில் நடந்து முடிந்த மாயமில்லை சிறு குழந்தை இளைஞனாக வளர்ந்து நிற்பதைப் போல

பதினைந்து ஆண்டுகால கடும் உழைப்பின் விளைவைக் கண்டு மகிழ்கிறேன்” என்று தனது கதையை நண்பர்களிடம் விவரித்துக் கூறினார்.

தனி நபரோ, நாடோ, சமூக சேவையோ எதுவானாலும் எந்தவொரு வேலையும் தன் முழு வெளிப்பாட்டை வெளிக்கொணர குறைந்தபட்சம் பதினைந்துஆண்டுகள் தேவைப்படுகின்றன என்பதே உண்மை. முட்டாள்களின் சொர்க்கத்தில் வாழக்கூடியவர்களே உடனடி வெற்றியை எதிர்பார்க்கிறவர்கள்.

பாய்ச்சலைக் கொண்டு வெற்றி இலக்கில் தாவ முடியும் என்று ஒரு பேச்சுக்காகச் சொல்ல முடியுமே தவிர நடைமுறை அப்படியில்லை. உண்மையில் எதார்த்தத்தை நேருக்கு நேர் காணும்போது இது ஒரு மாயை என்பது விளங்கிவிடும்.

Glen Cunnigham சிறுவனாக படித்துக் கொண்டிருந்த போது பள்ளிக்கூடத்தில் தீவிபத்து ஏற்பட்டது. பெரும் தீப்பிழம்பு சிறுவன் கிளென்னைச் சூழ்ந்தது.

பயங்கரமான நிகழ்வு அது. உடல் கருகியது. கால்களை நகர்த்த முடியவில்லை, ஓட்டப்பந்தய வீரன் அவன். ஓடுவது இருக்கட்டும், திரும்ப நடப்பானா என்ற ஐயத்தில் அற்புதம் மட்டுமே உன்னைக் காப்பாற்றும் என்று மருத்துவர்கள் கூறினர். இந்த இயலாமை சிறுவன் க்ளென் கன்னிங்ஹாமில் புதிய வைராக்கியத்தை உருவாக்கியது. எழுந்து நின்று நடை பழகி, ஓடும் பயிற்சியில் மெல்ல ஈடுபட ஆரம்பித்தான். தன் திறன் முழுவதையும் முடிவாக அதில் மட்டும் கவனம் செலுத்தினான். நகரும் கலப்பையின் கைப்பிடியை இழுத்துக் கொண்டு போகும் புது யுக்தி ஒன்று திடீரென்று தோன்றியது.

கால்கள் தரையில் பதிய ஆரம்பிக்க பலனளிக்கும் என்கிற நம்பிக்கை பிறந்தது. இந்தப் பயிற்சியைத் தீவிரமாகச் செய்ய ஆரம்பித்தான். மருத்துவர்கள் சொன்னபடி அற்புதம் நிகழ்த் தொடங்கியது. க்ளென் நிற்கவும், ஓடவும் தயாராகி விட்டான். அதனால் (ஓட்டப்) பந்தயத்தில் சேரவும் பதிவு செய்து கொண்டான்.

இது ஓரிரு நாட்களில் நிகழ்ந்து விடவில்லை. இந்தச் சாதனை பதினைந்து ஆண்டுகாலக் கடும் உழைப்பிற்குக் கிடைத்த பலனாகும்.

பதினைந்து ஆண்டுகள் வேலை செய்யாமல் இந்த உலகில் எந்த வெற்றியும் சாத்தியமில்லை. ‘ஆகு’ என்றால் ஆக்கிவிடும் ஆற்றல் இறைவனுக்கு மட்டுமே உண்டு. ‘உடனடி வெற்றி’ என்கிற

கோட்பாட்டில் இந்த உலகத்தை இறைவன் உருவாக்கவில்லை. பயனற்ற முயற்சிகளில் மனிதன் தன் நேரத்தைச் செலவழிக்கக் கூடாது என்கிற பாடத்தை மனிதன் கற்றுக் கொள்ள வேண்டும். இரவும், பகலும் எண்ணற்ற நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை அனைத்தும் இயற்கைச் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுப்படுத்தப்படுகின்றன. மண்ணிலிருக்கும் சிறு புல்கூட தன் விருப்பம், தன் எண்ணம் என்று தரையில் வளரவில்லை. நிலைமாறா பிரபஞ்ச ஒழுங்கைப் புறக்கணித்துச் சிறு எறும்பும் வாழவில்லை. பிறகு மனிதன் மட்டும் விதிவிலக்கா என்ன? ஏன் மனிதன் மட்டும் இறைவனின் விருப்பத்திற்கு எதிராக இயங்க முனைய வேண்டும்?

இது இறைவனின் உலகம். இங்கு எதையும் மனிதன் பெற விரும்பினால் அந்த இயற்கையின் விதிகளுக்கேற்பத் தொடர் முயற்சிகளைக் கொண்டு தனக்குரியதைப் பெற்றுக் கொள்ள முடியும். இவ்வுலக வெற்றி அல்லது மறு உலக வெற்றி இரண்டுக்குமுள்ள நிபந்தனையை இந்தக் கொள்கையை பின்பற்றுவதன் மூலம் வெற்றி அடைய முடியும்.

## யதார்த்த வழிமுறை

தோட்டம் ஒன்றை அமைப்பது என்பது 'தோட்டக்கலை ஆய்வரங்கம்' நடத்துவதிலிருந்து தொடங்குவதில்லை. ஒரு விதையோ, மரக்கன்றோ அது வளர்ந்து கிளை பரப்புவதற்குரிய சூழ்நிலை அமைத்துத் தருவதனூடாக மட்டுமே பெருமரமாக உயர்ந்து நிற்கும்; அடர் தோப்பாக மாறும்.

ஒரு சமூகமோ, நாடோ நிமிர்ந்து நிற்க வேண்டுமென்றாலும் இதே வழிமுறைதான் உள்ளது. சமூக முன்னேற்றமும் நாட்டின் வளர்ச்சி ஆகியவையும் தனி நபர்களின் முன்னேற்றத்தில் அடங்கியுள்ளன. ஒவ்வொரு தனி நபரும் தம் கடமைகளைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் தனக்குள் மறைந்திருக்கும் சிறப்பியல்புகளைக் கண்டறிந்து மாமனிதன் நிலைக்கு உயர்த்த வேண்டும். பிறகு தொந்தரவு அளிக்காத மனிதனாக ஒவ்வொரு தனி நபரையும் வளர்த்தெடுக்க வேண்டும். உற்சாகமான தனி மனிதர்களின் தொகுப்பே அறிவு வேட்கையுள்ள சமூகம். இதைத் தவிர பிற கூச்சல்கள் அனைத்தும் பயனற்றவை. இதனால் நாடு வளர்ச்சிப் பாதையில் பீடு நடை போட முடியாது.

எதிரிகள் இல்லாத களம் இல்லை. தடைகளற்ற வாய்ப்புகள் என்பது இங்கு எவருக்கும் கிடைப்பதில்லை. வரலாற்றில் எப்பொழுதும் போட்டியாளர் இருந்து கொண்டிருக்கிறார். இனியும் போட்டியாளர் இருப்பார். தடைக்கற்கள், தடுப்பரண்களைத் தாண்டி நமக்கான இலக்கை நோக்கிப் போய்க் கொண்டே இருக்க வேண்டும்.

எவ்வளவோ தடைகளையும் பிரச்சனைகளையும் வரலாறு முழுக்கக் காண முடிகிறது. அதைக் கடக்கக் கூடிய வழி எப்போதும் இருந்து கொண்டிருக்கும். முட்டுச் சந்தில் விழி பிதுங்கி இருப்பவர்களுக்கு அல்ல, திசை மாறி புதிய பாதையையும் கடந்து செல்ல முயல்பவர்களுக்கு அந்தப் பாதை திறக்கப்படும்.

விபத்தும் இடர்களும் பெருமளவு இருந்தாலும் ஈடு செய்யப்பட்ட வரலாறும் உண்டு. பேரழிவு என்பது நிலையானதோ, இறுதியானதோ அல்ல. சிறந்த திட்டமிடல்களுடன் புதிய வேலையைத் தொடங்க மனிதனால் முடியும். குறிக்கோள் சரியாக அமைந்தால் சிறிய வாய்ப்பும்கூடக் கரைக் சேர்த்துவிடும்.

விருப்பங்களும் ஆசைக் கற்பனைகளாக மட்டுமே காணமுடியும். நடைமுறை சமரசமே இலக்குகளை நோக்கி அழைத்துச் செல்லும். இவ்வுலகில் இயங்க எதார்த்தங்களைப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

ஸஞஸஞஸஞ

## இரண்டாம் வாய்ப்பு இல்லை

“வாழ்வு என்பது ஒருமுறை மட்டுமே கிடைக்கக் கூடியது. அதில் இரண்டாம் வாய்ப்பு என்பது அனேகமாக இல்லை; முன்னேறிச் செல்லும் சூழல் இப்பொழுது எனக்கு அமைந்து கொண்டிருக்கின்றன; ஆனால் அவற்றைப் பயன்படுத்த முடியாதபடிக்கு என் நிலை உள்ளது” என்று கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் என்னிடம் மனக்கசப்புடன் கூறினார். ‘அது எப்படி’ என்று வியப்புடன் அவரிடம் காரணம் கேட்டேன்.

“B.Sc. இளங்கலை அறிவியல் பட்டப்படிப்புடன் நான் வேலைக்குச் சேர்ந்தேன். M.Sc. முதுகலை நான் படிக்கவில்லை. அதற்குப் பிந்தைய காலக்கட்டத்தில் மேற்படிப்பின் முக்கியத்துவத்தை நான் உணர்ந்த போதிலும் செய்து கொண்டிருந்த வேலையையும் என்னால் உதற முடியவில்லை. படித்து என்னை மேம்படுத்திக் கொள்ளவும் இயலவில்லை. உயர் பொறுப்புகளுக்குப் பெரிய

திறமைகள் தேவைப்படுகின்றன. அதில்லாமல் பெரும் பதவிகளுக்குச் செல்ல முடியாது” என்று வருத்தப்பட்டார்.

நம் சமூகத்தில் 99% பேர்களின் நிலை இதுவேயாகும். இளம்பருவம் மனிதனின் வாழ்க்கைத் தயாரிப்புக்கான காலமாகும். “இளமையில் கல்” என்கிற பழமொழியின்படி வாழ்க்கையின் அடிப்படை இதிலேயே அடங்கியுள்ளது. இந்தப் பருவத்தில் கற்பதில் அர்ப்பணிப்பும் ஈடுபாடும் காட்ட வேண்டும். குழந்தைப் பருவத்தை வேடிக்கையும் விளையாட்டுமாக நேரத்தைக் கழித்துத் தங்கள் ஆற்றலின் பெரும்பகுதியைப் பறிகொடுக்கிறார்கள். எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையிருந்தால் இளமையை இவ்வளவு அலட்சியமாகக் கழித்திருக்க முடியாது. காலங்கள் கழிந்தபின் விரும்பினாலும் அவர்களால் புதிதாகத் தொடங்க முடிவதில்லை. அதன் பிறகு எல்லா வழிகளும் மறிக்கப்பட்ட முட்டுச் சந்தில் போய் நிலைகுத்தி நின்று விடுகின்றனர். இயலாமை, ஆற்றாமை உணர்வு நிரம்ப எஞ் சியிருக்கும் வாழ்க்கை கொடுங்கனவாக மாறி, கைசேத நிலையில் செத்துப் போகின்றனர்.

குறைந்த தயாரிப்புகளுடன் வாழ்க்கைப் பயணத்தில் இறங்கினால் தமக்குரிய பங்கை இங்குப் பெறமுடியாது. விதைக்காமல் அறுவடை செய்துவிட முடியுமா என்ன? அதேபோலஅறுவடைக் காலத்தில் விதைக்கிறேன் என்றும் புறப்பட முடியாது. நழுவவிட்ட வாய்ப்பை மீளவும் கைப்பற்ற முடியாது. அதிர்ஷ்டம் ஒருமுறை மட்டுமே கதவைத் தட்டும், மீண்டும் மீண்டும் அது நம் வாசலுக்கு வருவதில்லை.

முன்தயாரிப்பு இல்லாமல் செய்யக்கூடிய பணிகள் எவை? கல் கடினமான பொருள். வெறுங்கையால் கல்லை உடைக்க முடியாது. அந்த முயற்சி தோல்வியில் முடியும். ஆனால் கடப்பாரையைப் பயன்படுத்தத் தெரிந்த ஒருவரால் நொடிப் பொழுதில் பெரும் பாறாங்கல்லையும் உடைத்துவிட முடியும். தொழில்நுட்ப அறிவும் கடும் உழைப்பும் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவை.

வாழ்க்கையின் பாடமே இதுதான். உரிய திறன்களுடன் வாழ்க்கைக்குள் நுழைந்தால் சரியான இடம் உங்களுக்குக் கிடைக்கும் குறைந்த திறன்களைக் கொண்டவர்கள் புலம்பிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். பிறர் மீதான புகார்களும் எதிர்வினைகளும் நீங்கள் உருவகித்துக் கொள்ளும் எதிரிகளுடன் களமாடிக் கொண்டே இருக்க வேண்டியதுதான். சொந்த இயலாமைக்காக மற்றவர்களைக் குறை கூறிக் கொண்டே இருப்பது

பொருளற்றதாகத் தெரியவில்லயா? உரிய அடித்தளம் போடாமல் உயரவும் மேன்மையும் கிடைத்துவிடுமா என்ன?

நல்ல காலம் பிறக்கும் என்று காத்திருக்க வேண்டாம், கடும் உழைப்பையும் தனித்திறனையும் முதலீடாகக் கொண்டால் நேரம் சரியில்லை என்று குறைகூறிக் கொண்டிருக்க மாட்டீர்கள். எப்பொழுதும் கரித்துக் கொண்டிருப்பது அப்பட்டமான இயலாமை. தேவைப்படக்கூடிய திறமை, உழைப்பு, கவனம், ஒழுக்கம் போன்ற எதையும் தராமல் மதிப்பும் மாண்பும் பெருஞ்செல்வத்தையும் எங்கும் எப்பொழுதும் யாரும் பெற்றதில்லை.

## வீண் பகட்டு

குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களை இழந்த பேரனின் கதையிது. அவனது முப்பாட்டன் வெற்றிகரமான தொழிலதிபராக இருந்தார். சொத்து எதையும் மரபுரிமையாக அவன் பெறவில்லை என்றாலும், 'நானொரு பெரிய இடத்துப் பிள்ளை, என் தாத்தா பெருஞ்செல்வந்தர்' என்கிற உணர்வு அவனிடம் இருந்தது.

அரசு அலுவலகத்தில் எழுத்தர் பதவி ஒன்று காலியாக இருந்ததை அறிந்து விண்ணப்பித்த போது அவனுக்கு வேலை கிடைத்தது. நடுநிலை வகுப்பு முடித்திருந்தவரை மேல்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்துவிடுமாறு உறவினர்கள் அறிவுறுத்தினர். உயர் கல்வியின் மூலம் பதவி உயர்வு அடைய முடியும் என்று கருத்து தெரிவித்தனர். வீடு ஒன்றும் சிறிதளவு விவசாய நிலமும் உனக்கு உள்ளது. இவ்விரண்டைக் கொண்டு வாழ்க்கைத் தேவையை ஈடு செய்யலாம் என்றனர்.

ஆனால் குடும்பப் பெருமையால் எவருடைய ஆலோசனைகளையும் ஏற்க அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. வறட்டு கௌரவத்தில் சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் அலுவலகத்திலிருந்த சக ஊழியர்களுடன் சண்டை பிடிக்கத் தொடங்கினான். ஒருநாள் மேலதிகாரியுடன் வாக்குவாதம் செய்து வேலையைத் துறந்துவிட்டான்.

அதன் பிறகு படிப்பையும் தொடரவில்லை, வெட்டியாக சுற்றிக் கொண்டிருந்தான். தற்பெருமையடித்துக் கொண்டு ஊரில் திரிவது ஒன்றே அவனது முழுநேர வேலையானது.

அரசு வேலையை விட்டு வந்தபிறகு விவசாய நிலத்தில் கிடைத்த வருமானத்திலிருந்து தன் குடும்பச் செலவை ஓரளவு சமாளித்தான்.

காலப்போக்கில் ஆறு குழந்தைகளையும் பெற்றுக் கொண்டான். பெரிய குடும்பமாக மாறியதால் கவலைகள் கூடிக் கொண்டே போயின. தவறு எதுவெனக் கண்டறிவதை அவனிடமிருந்த வீண் பெருமித உணர்வு தடுத்தது. பின்தங்கிய நிலைக்கு வளர்ச்சி தடைபட்டுப் போனதற்கும் தன் உறவினர்கள் காரணமென்று எண்ணி அவர்களுடன் பிணங்கத் தொடங்கினான். இதனால் மனச்சிதைவுக்கு ஆளாகி பல்லாண்டுகள் நோய்வாய்ப்பட்டான்.

இந்த உலகம் எதார்த்த நோக்குடையது. நடைமுறை ஒழுகுதல் மூலமே உலகில் எதையும் பெற முடியும். இது இறைவனின் உலகம், பழம் பெருமை எந்தப் பயனும் அளிக்காது. இந்த மனநிலை அழிவைத் தரக்கூடியது.

## உடனடி பதில்

முன்னேறிய நாடுகளில் கணினி மயமாகத் தொலைபேசித்துறை தொழில்நுட்ப ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்டது. மேற்கத்திய நாடுகள் நவீன தகவல் தொடர்பில் புரட்சிகர மாற்றத்திற்கு உள்ளாகியுள்ளன. எடுத்துக்காட்டாக "அவசர உதவி எண் 911" என்கிற தானியங்கி அமெரிக்காவில் நல்லவிதமாக செயல்பட்டு வருகிறது. அவசர உதவி தேவைப்படுவோர் இதைக் கொண்டு உரிய உதவியைப் பெற முடியும்.

எதிர்முனையில் எதையும் பேசாவிட்டாலும், எங்கிருந்து அழைக்கிறார்கள் என்று சொல்லாவிட்டாலும் அழைப்பவரின் எண்ணும், முகவரியும் இந்தத் தானியங்கி சேவை பதிவு செய்து கொள்கிறது. அதுபோக தொலைபேசி இணைப்பகத்தின் கணினி மையம் மாநகர காவல்துறை, தீயணைப்புத்துறை, முதலுதவிக்கான மருத்துவத்துறை என கண்டறிந்து உடனடியாக வகைப்படுத்தி உரிய எண்களுடன் இணைக்கிறது.

புளோரிடா, ஆர்லாண்டோவில் பீதியடைந்த பெண் ஒருவர் 911 எண்ணுக்கு டயல் செய்தார். துப்பாக்கிக் குண்டுகள் சுடப்படும் ஓசை தெளிவாகக் கேட்டார். காவல்துறை கட்டுபாட்டு ஓசை தெளிவாகக் கேட்டது. காவல்துறை கட்டுப்பாட்டு அறை சில நிமிடங்களில் சரியான முகவரிக்குக் காவலர்களை அனுப்பி வைத்தது. அந்தப் பெண்ணின் உறவினர் சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் அங்குக் காணப்பட்டார். துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தப்பட்டு பிறகு நடத்தப்பட்ட விசாரணையில் அவர்தான் குற்றவாளியென்பதால் கைது செய்யப்பட்டார்.

அதேபோல, காது கேளாத, வாய் பேச முடியாத மாற்றுத்திறனாளிகளும் உதவி பெற முடியும். The Times of India April 16, 1985)

தாமதமின்றி உடனுக்குடன் காவல்துறைக்கு வயர்லெஸ் மூலம் தொலைபேசி அழைப்பை எண்ணாகவும் முகவரியாகவும் கணினி மாற்றி தெரியப்படுத்தி விடுவதை மேற்கண்ட நிகழ்வுகள் காட்டுகின்றன.

மனிதன் இறைவனை அழைப்பதன் மூலம் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே தொடர்பு நிறுவப்படுகிறது என்று திருக்குர்ஆனும் நபிமொழியும் கூறுகின்றன. அதற்கு பதில் கிடைப்பதில் இறைவனிடமிருந்து தாமதம் ஏற்படுவதில்லை.

கணினி மயமாக்கப்பட்ட தொலைத் தொடர்புத்துறை ஆன்மிக தளத்திலான நடைமுறை பொருள் ஒப்புமையாகும். இறைவனை நினைப்பது உணர்வலையின் தன்னெழுச்சி அழைப்பாகும். அப்பொழுது எல்லோருமே இறைவனை மிக நெருக்கமாகக் காணமுடியும். கணநேரத்தில் இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

## பொறுத்தார் பூமியாள்வார்

பசுமையான பயிர்கள், தங்கக் கட்டி, வெள்ளி ஆகியவற்றின் பாளங்களிலிருந்து அல்ல, பூமியின் நிலத்திலே விளைகின்றன. இறைவன் இது போன்ற அமைப்பை விவசாயத்திற்கு மட்டுமல்ல, பிரபஞ்சம் முழுவதற்கும் அடிப்படையாக அமைத்துள்ளான். இந்த நடைமுறைப்படியே உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதைத் தவிர வேறு எந்த முறையிலும் நாம் எதையும் வெளிப்படுத்த முடியாது.

மனிதர்களின் நிலையும் இதேதான். வாழ்க்கையின் சோதனையை பொறுமை என்கிற குடுவையில் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். பொறுமையின் நிலத்திலே வாழ்க்கையெனும் பயிர் விளைகிறது. மறுமை நாள் வரை நிலைமாறா இவ்விதிப்படியே செயல்பட வேண்டியுள்ளது. புதிய பூமி ஒன்றை நம்மால் உருவாக்க முடியாது. ஆகவே வாழ்க்கையைச் செழிப்பாக்கிக் கொள்ள இந்த அடிப்படைகளை பயில வேண்டும்.

பொறுமை எதிர்மறையான விஷயம் அல்ல. அது நேர்மறையான நடத்தையாகும். மேம்போக்காக இல்லாமல் பொறுமையானது

ஆழ்ந்த சிந்தனையுடன் செய்யப்படும் கடமை. உணர்ச்சிகரமான எதிர்வினையாக இல்லாமல் சுய உணர்வுடன் இயங்குவது. தோல்விகள் தற்காலிகமானவை. ஆகவே நம்பிக்கையிழக்கக் கூடாது. மாறாக சூழ்நிலைகளின் அழுத்தத்தை மறு மதிப்பீடு செய்து முன்னேறிச் செல்ல வேண்டும். கணநேர நிகழ்பொழுதில் முடிவெடுக்காமல் சூழலை மீறி மேலுயர்ந்து இயங்க வேண்டும்.

இந்தப் பிரபஞ்சம் எவ்வளவு வளங்களைக் கொண்டிருக்கிறது. ஆனால் விதையை தங்கத் தட்டில் வைத்துவிட்டால் வளராது. ஒருபோதும் விதையில் உயிர் வந்துவிடாது.

மனிதனின் நிலையும் இதுவேதான். மனிதருள் பொறுமையற்றவரால் ஏராளமான இயற்கை வளங்களைப் பயன்படுத்த முடியாமல் போகும். பொறுமையாளர்களால் தம் வேர்களை மண்ணுக்குள் செலுத்திவிட முடியும். படிப்படியாக குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு மரமாகப் படைப்பூக்கத்துடன் அது பிரமாண்டமாக மேலெழும்.

பொறுமையை உறுதியுடன் கடைப்பிடிப்பவர்களால் தெய்வீக வீச்சுடன் இயங்க முடியும். பொறுமையில்லாதவர்கள் மனித நிலையைவிடத் தாழ்ந்து செல்ல வேண்டியதுதான். இந்த உலகம் வரையறைக்குட்பட்டது. மறு உலகமோ வரம்பற்றது. பொருளற்ற வாழ்க்கையிலிருந்து பொருளுள்ள வாழ்க்கையில் நுழைய பொறுமை அவசியம்.

பொறுமையாளனே இறைநம்பிக்கையாளன் ஆவான். அவனுக்கு நிலையான வெகுமதி காத்துக் கொண்டிருக்கிறது. பொறுமையுள்ளவர்களே சொர்க்கம் செல்லத் தகுதியானவர்கள்.

## பகைமை வேண்டாம்

போக்குவரத்துத் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தவரிடம் லாரி ஒன்று இருந்தது. அவர் அந்த வண்டியை வேறு ஒருவரின் பெயரில் பதிவு செய்திருந்தார். அந்த நபரின் எண்ணம் மாறத் தொடங்கியது. வண்டியின் அசல் ஆவணமும் அவரிடமே இருந்தது.

ஆகவே சட்டப்படி தன் பெயரில் பதிவு செய்யப்பட்ட அந்த வண்டியை அபகரிக்கத் திட்டமிட்டார். அல்லது பெருந்தொகை ஒன்றை இழப்பீடாகத் தர வேண்டுமென வற்புறுத்தத் தொடங்கினார்.

இது பெரிய அநீதி என உண்மையான முதலீட்டாளர் கடுஞ்சினம் கொண்டு தன் பழைய நண்பரை பழிவாங்க நினைத்தார்.

அந்த எதிரியைப் புழு பூச்சியை நசுக்குவதைப் போல எப்படியேனும் அழித்துவிடத் துடித்தார். தன் வீடு, பிள்ளைகள் மீதான அக்கறையில்லாமல் வேலையில் கவனம் செலுத்தாமல் ஆறு மாதங்களுக்கு இரவு பகலை இப்படியே கழித்தார். இறுதியில் அவர் வாழ்க்கையின் போக்கைப் புரட்டிப் போட்ட ஒரு புதிய அனுபவம் ஏற்பட்டது.

ஓர் இடத்துக்கு போய்க் கொண்டிருந்தபோது, "பழிவாங்கினால் அந்தப் பழிக்குப் பழி என தொடர் கதையாகும். ஆகவே நன்றாக சிந்தித்துக் கொள்ளுங்கள்" என்று சொற்பொழிவாளர் கூறியதை உன்னிப்பாகக் கேட்டார். பல்வேறு எடுத்துக்காட்டுகள், மேற்கோள்களுடன் அந்த உரை தொடர்ந்து கொண்டிருந்தது. இந்தச் சொற்பொழிவின் பேரொளி அவரது மனதுக்குள் ஊடுருவியது. புதிய நபராக அவர் அங்கிருந்து புறப்பட்டார்.

எதிர்மறைச் சிந்தனையைக் கைவிட்டு தனக்குச் செய்யப்பட்ட அநியாயத்தை இறைவன் பொறுப்பில் விட்டுவிட்டார். தன் வாழ்வில் நடந்த வருத்தமான விஷயத்தை மறந்துவிட்டு தன் நேரம், ஆற்றல் ஆகியவற்றைக் குடும்பத்திலும் வணிகத்திலும் செலவிட உறுதிகொண்டார். தனக்குத் துன்பத்தைத் தந்த எதிரியை இறைவனிடம் சாட்டிவிட முடிவெடுத்தார். இப்பொழுது முழு விடுதலை அடைந்த உணர்வு ஏற்பட்டது.

தன் தொழிலைப் பற்றி அவருக்குப் பகுதி பகுதியாகத் தெரிந்தது. ஆக்கப்பூர்வமாக அணுக முடிவெடுத்ததால் முழுமையான கோணம் புரியத் தொடங்கியது. எல்லோரும் பயணிக்கும் பொதுப் பாதையைவிட தனக்குரிய தனி வழியைக் கண்டறிவது எப்படி என விளங்கியது. பிறரின் பின்னால் ஓடுவதைவிட தனியாளாக பெரும் பயணம் சாத்தியமானது. பெருவெற்றி நேரில்வந்து ஆரத் தழுவியது. இந்த நபர் பழி வாங்கும் முதல் வழியைக் கைவிட்டுச் சகிப்புத்தன்மை என்கிற இரண்டாம் வழியில் பயனடைந்தார். முன்பைவிட மனநிம்மதியுடனும் தொழிலில் திருப்தியுடனும் வெற்றியடைந்தவராகவும் 06-09-1983-ஆந்தேதி என்னைச் சந்தித்தார்.

## பாய்ச்சல் கூடாது

“அறிவொளி பெறுவது எப்படி? ஞானம் பெற எத்தனை ஆண்டுகளாகும்” என்று ஒருவன் மூத்த துறவியிடம் கேட்டான். “பத்தாண்டுகளாகும்” என்று அவர் சொன்னார். “ஏன் அவ்வளவு நீண்ட காலம்” என்று மீண்டும் அவன் கேட்டான். “மன்னிக்கவும், தவறாகச் சொல்லிவிட்டேன் இருபதாண்டுகளாகும்” என்றார் குரு. “இரண்டு மடங்காக்கி விட்டீர்களே” என்று அவன் மனக்குறையை வெளிப்படுத்தியபோது “இல்லை உன் விஷயத்தில் அது முப்பதாண்டுகளாகும்” என்று சொன்னார் குரு. (Readers Digest ஜனவரி 1983 இதழில் எழுதிய கட்டுரையில் Philip Kapleau 1912 - 2004)

ஆண்டுக் கணக்கில் அடையக்கூடிய இலக்கை சில நாட்களில் அடைய நினைப்பது ‘பெரும் பாய்ச்சல்’ என்று பொருள். தாண்டிச் செல்வதாலும், தாவ நினைப்பதாலும் பயண தூரம் குறைவதில்லை. மாறாக அது பயணத்தை நீட்டித்து விடுகிறது என்பதே உண்மை. அவசரப்படும் பயணத்தில் குறைவான வேகமே துணை புரியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வில்லிலிருந்து புறப்படும் அம்பைப் போல ஒரு பயணியால் நேர்க்கோட்டில் செல்ல முடியாது. வழியில் தடைகள் இருப்பது இயல்பு. அதைக் கடந்து போகவும், மீறிச் செல்லவும் தெரியவேண்டும். இல்லாவிட்டால் வருத்தப்பட நேரிடும். வழியில் தடுக்கி விழ நேரிடும். காயம் குணமடைய நேரம் பிடிக்கும். மீண்டும் பயணத்தை மூலப் புள்ளியிலிருந்து தொடங்க வேண்டியிருக்கும். பாய்ச்சல் பாறையில் மோத வைக்கும். நீண்ட தாவல் பெரும் பள்ளத்தில் தள்ளிவிடும். சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட நேரும். விலை மதிப்பற்ற நேரம் விரயமாவதைத் தவிர்ப்பது அறிவுடைமை அல்லவா? இயல்பான வேகத்தில், சலிக்காத உழைப்பில் முன்னேறியிருந்தால் தன் இலக்கைக் குறித்த காலத்திற்குள் அடையலாம். அவசர கதியிலான செயல்பாடுகள் பின்னடைவு ஏற்படுத்தி பயணத்தை நீட்டிக்கின்றன.

தாமதப்படுத்துவது எப்படி தவறோ, அவசரமும் சமமான ஒன்றே. எல்லா செயல்களும் குறித்த நேரத்திலே முழுமையடையும்; பயனளிக்கத் தொடங்கும், செயல்படத் தாமதிப்பது சோம்பேறித்தனம். அவசரப்படுவது பொறுப்பின்மை. பொறுமையின்மை விழுந்து நொறுங்க வைக்கும். இறைவன் படைத்த இந்த உலகில் அவசரம்

தேவையற்ற தாமதம் இரண்டுக்கும் இடமில்லை. குறித்த நேரத்தில் அனுமதிக்கப்பட்ட விதத்தில் செயல்படுவதே சிறப்பானது.

## தப்பிப் பிழைத்தல்

அமெரிக்காவின் ஒஹியோ மாகாண பல்கலைக்கழகத்தின் பேரிடர் ஆய்வு மையம் 1963இல் அமைக்கப்பட்டது. மனித குலத்திற்குப் பெரும் தீங்கிழைத்த நூற்றுக்கணக்கான பேரழிவுகள் குறித்து இது ஆய்வு செய்தது. அசாதாரண சூழல்களில் வெளிப்படும் உயர் பண்புகள் மனித குலத்தைப் பெரும் நாசத்திலிருந்து தடுத்து விடுகின்றன என்பதை இது கண்டறிந்துள்ளது.

1961ஆம் ஆண்டு டெக்சாஸ் மாநிலத்தின் கடற்கரைப் பகுதிகள் பெரும் புயலால் பாதிக்கப்படப் போகின்றன என்று நான்கு நாட்களுக்கு முன்பே முன்னெச்சரிக்கை அளிக்கப்பட்டது.

ஆனால் மக்கள் தொகையில் சரிபாதியினர் மட்டுமே அந்த ஊரை, மாநிலத்தைவிட்டு வேறு பாதுகாப்பான இடங்களுக்குப் புலம்பெயர முன்வந்தனர். மற்றவர்கள் அங்கேயே வீட்டிற்குள் தங்கிவிட்டது வியப்பான நடத்தையாகும். 1971ஆம் ஆண்டு கலிஃபோர்னியாவிலுள்ள பெரிய அணை ஒன்று பூகம்பத்தால் பலவீனமடைந்துவிட்டது. எழுபதாயிரம் மக்கள் ஆபத்தில் சிக்கியிருந்தனர் ஆனால் வெறும் 7% மக்கள் மட்டுமே அங்கிருந்து வெளியேறி இருந்தனர். இதுவும் ஆய்வாளர்களுக்கு வியப்பூட்டியது.

வாழ்க்கை குறித்த நம்பிக்கை பேரழிவு நிகழ்வதற்கு முன்பும் சரி, பின்பும் சரி மக்களிடம் அசாதாரணமாகச் செயல்படுகிறது. டெக்சாஸ் மாநிலம் முழுவதும் பதற்றத்தன்மை கொண்டிருந்ததையும் பெரும்பாலோர் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கித் தயாராகி விட்டிருந்ததும் விசாரணையில் கண்டறியப்பட்டது.

“மனிதர்கள் இயற்கைப் பேரழிவுகளின்போது சுயகட்டுப்பாட்டுடன் இருப்பதையும் துன்பங்களை ஏற்கும் மனப் பக்குவத்தையும் வெளிப்படுத்துகின்றனர்” என்றும் பேரிடர் ஆய்வு மையம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கட்டான நேரங்களில் மனிதர்கள் வீர சாகசங்களுக்குத் துணிந்துவிடுவதும் பீதியுறுவதோ, அதிர்ச்சியில் உறைந்துபோவதோ இல்லையென்பதும் விளங்குகிறது.

முழு நாசம் போன்ற அச்சுறுத்தலின்போதும் மனிதன் தன் வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் திறனை கண்டடைவான், வழிமறிக்கும் இடர்களை கடந்துச் செல்வான் என்பதும் புலப்படுகிறது.

இறைவனின் பெரும் அருட்கொடையாக மட்டுமே இந்த ஆக்கப்பூர்வ ஆற்றல் மனிதனுக்கு வந்திருக்க முடியும். இது நெருக்கடிக் காலங்களில் விசையுடன் வெளிப்படுத்தி விடுகிறது.

இந்த ஆற்றல் எல்லா மனிதர்களிடமும் இருக்கிறது. புலம்பல்களால் பயனில்லை. அதில் ஒரு பொழுதையும் வீணாக்க வேண்டாம். இழப்புக்களை ஈடுகட்டுவதும் செயல்யோகத்தில் மூழ்கிவிடுவதுமே முதலடியாகும். தன்னம்பிக்கையை முழு ஊக்கத்துடன் கைக்கொள்ள வேண்டும்.

புனரமைப்பு இறைவன் அளித்த பெரும் வாய்ப்பாகும். அந்தத் திறன் இழக்கப்படக் கூடாது. அதுவே நம்மை எதிர்காலத்துக்கு அழைத்துச் செல்லும் ஒளியாகும். இயற்கைப் பேரழிவு கலைத்துப் போட்ட வாழ்வை புதிய தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

## பெருமையின் ஆணிவேர்

“பெருமையிலிருந்து தீமை தொடங்குகிறது, அதேபோல பணிவுகொண்டால் தீமை முடிந்தும் போகிறது” என்று ஒழுக்கவியல் தொடர்பாக William Law (1686 - 1761) என்கிற ஆங்கில எழுத்தாளர் கூறுகிறார்.

ஆனால் இவற்றை ஆன்மிகத் தளத்தில் இன்னும் எளிமையாக புரிந்துகொள்ளலாம். மனிதனின் பெரிய பாவங்கள் தற்பெருமையும் இணைவைப்புமாகும். எல்லா பாவங்களும் மன்னிக்கப்படும் நிலையில் இவ்விரண்டு பாவங்களுக்கும் மன்னிப்பில்லை என்று இறைவன் கூறுகிறான்.

மனிதனின் அநீதிகள், அட்டூழியங்கள் அனைத்திலும் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ பெருமையே அடிவேராக இருப்பதைக் காணமுடியும். தம் குற்றத்தை ஒப்புக்கொள்ளத் தவறு செய்தவரைப் பெருமை தடுக்கிறது. ஆனால் உண்மையை மறுப்பதன் மூலம் சத்தியத்தைவிடத் தன்னைப்‘பெரியவன்’ என்று கூறுவது விளங்குவதில்லை.

வாய்மையைப் புறக்கணிப்பது முட்டாள்தனம். உண்மையைவிட மேலானது எந்தவொரு தனிநபரின் மாண்பும் அல்ல. உண்மை எல்லாவற்றினும் உயர்வானது.

இறைவனின் அருளைப் பெறும் தகுதி பணிந்துபோகும் நபர்களுக்கே உரியது. இறைவனுக்கு அஞ்சி நடப்பவர்களுக்கு மட்டுமே வாய்மை அனைத்தையும்விட உயர்வானது என்பது விளங்கும். தம்மை மட்டுமே முக்கியமானவர்களாகக் கருதக் கூடியவர்களால் அவ்வாறு செய்ய இயலாது. சத்தியத்தின் முன் வணங்குவதற்குப் பதிலாகச் சத்தியம் தமக்குத் தலைவணங்க வேண்டும் என நினைப்பது மடமை.

அறநெறி முறையோடு இசைவாக இருப்பதற்குப் பதிலாக மனம்போன போக்கில் சுய விருப்பங்களுக்கு முன்னுரிமை கொடுக்கக் கூடாது. இது அநியாயக்காரனின் பெரும் பலவீனம். அவன் நடைமுறை விஷயங்களைக்கூடப் புரிந்துகொள்ள முடியாதவன் என்பதால் உலகியல் வெற்றி கைகூடாமல் திவால்நிலைக்குத் தள்ளப்படுகிறான். இறைவனின் அருட்பெருங்கருணை அவன் மீது படுவதேயில்லை.

ஐஓஐஓஐஓ

## ஒற்றுமையின் விலை

ஒற்றுமை குறித்துக் கூட்டங்களில் அதிகம் பேசப்படுகிறது. பத்திரிகைகளில், நூல்களில் நிறைய எழுதப்படுகிறது. கிட்டத்தட்ட எல்லா தரப்புமே ஒற்றுமை குறித்து சிந்திக்கிறது. ஆனால் ஒற்றுமையானது கனவாகவே எஞ்சியிருக்கிறது. எல்லாவற்றிற்கும் ஒரு விலை இருக்குமென்பதைப் போல, ஒற்றுமைக்கான விலையைத் தர மக்கள் முன்வருவதில்லை. ஆதலால்தான் ஒற்றுமை எங்கும் நிறுவப்படுவதில்லை.

ஒற்றுமை ஏன் சிதைகிறது என்கிற கேள்விக்குப் பதில் ஒன்று மட்டுமே அகமுரண் உணர்வுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் தவறுவதே இதற்கான காரணமாக இருக்க முடியும். இந்த உலகம் ஒரு சோதனைச் சாலை. வெவ்வேறு காரணங்களுக்காக வேற்றுமை உணர்வுகள் எழ ஆரம்பிக்கின்றன. இந்த உணர்வு தோன்றும்போதே அடக்கிவிட்டால் ஒற்றுமை நீடிக்கும். இல்லாவிட்டால் அது நல்லிணக்கத்திற்கு உலை வைத்துவிடும்.

சில நேரங்களில் வெற்றிப் பாதையில் குறுக்கிடுபவரை குறை காணவும் யாரோ சிலரால் கசப்புணர்வுக்கு ஆளாகவும் நேரிடுகிறது.

சில நேரங்களில் மற்றவர்களின் சாதனை பொறாமைப்படச் செய்யும். தற்பெருமையால் பிறரை அவமதிக்கவும் சிலரைப் பயனற்றவர் என நிரூபிப்பதிலும் மகிழ்ச்சியடைய நேரும்.

இத்தகைய எதிர்மறையுணர்வு சரிசெய்யப்பட வேண்டுமானால் தொடர்புடையவர்கள் அதற்குரிய விலையைச் செலுத்த முன்வரவேண்டும். ஒற்றுமையின் காற்று வீச வேண்டுமானால் தன்னடக்கம் அவசியம். பொறுமை மேற்கொண்டு, முறையிடும் கசப்பைத் தவிர்க்க வேண்டும். சுயநலன்களைத் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். முன்னேறிச் செல்பவர்களை வளர்ச்சிப் பாதையில் நடைபோடுபவர்களைக் காணும்போது மகிழ்ச்சியடைய வேண்டும்.

செருக்கு மிகும்போது பணிவை கைக்கொள்ளப் பழக வேண்டும். தியாக இயல்பு கூட்டுணர்வின் அடிப்படை இரகசியமாகும்.

ஆத்திரமூட்டும் சூழ்நிலையை எதிர்கொள்ளநேரிடும். இந்த உலகம் ஒரு சோதனைச் சாலை என்பதால் எதிர்மறை நிகழ்வுகள் இல்லாமல் போவது சாத்தியமற்றது. இதுவே ஒற்றுமை, வேற்றுமையின் பிரிகோடாகும். ஒற்றுமைக்கு இடையூறான காரணிகளை நெஞ்சுக்குள் புதைக்க வேண்டும். இதனால் சமூக ஒற்றுமைக்கு உதவி கிடைக்கும். விரும்பத்தகாத செயல்களைப் பொதுவெளியில் அனுமதிப்பதன் மூலம் சமூக ஒற்றுமை சீர்குலையும்.

பிறருடனான மோதலைத் தவிர்க்க வேண்டுமானால் தன் சுயத்துடன் ஒருவர் போராட வேண்டும். ஆனால் எவருமே தன் சுயத்துடன் மல்லுக்கட்ட நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. அதனால் பிறருடனான சண்டைகள் ஓய்வதேயில்லை.

ಬಲಬಲಬಲ

## ஒற்றுமையின் இரகசியம்

(zoo) வனவிலங்குக் காப்பகத்தில் நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் இருந்தனர். திறந்த புல்வெளியில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டும், நின்றபடி குளிர்பானங்களைக் குடித்துக் கொண்டும் இருந்தனர். வேறு சிலர் வனவிலங்குகளை வேடிக்கை பார்த்துக் கொண்டும் மற்ற சிலர் நோக்கின்றி அங்குமிங்கும் உலவியபடி இருந்தனர்.

பெரும் சத்தம் ஒன்றுக்குப் பிறகு புலி ஒன்று கூண்டிலிருந்து தப்பியதாக வதந்தி பரவியது. இதைக் கேட்ட மக்கள் வெளியேறும் முக்கிய வாயிலை நோக்கி ஓடத் தொடங்கினர். இதுவரை

தனிநபர்களாக இருந்தவர்கள் ஓரெண்ணத்தில் ஒற்றை இலக்கை நோக்கி ஓடத் தொடங்கியது எப்படி? முற்றிலும் வேறான செயல்பாடுகள் ஒற்றைச் சிந்தனையாக மாறியது எப்படி?

இது பேரச்சம், கருத்து வேறுபாடுகளை முடித்து வைக்கிறது என்பதன் எடுத்துக்காட்டு. இதுபோன்ற தீவிரமான சூழ்நிலையில் எல்லோருமே மிக முக்கியமான, அவசரமானதை மட்டுமே கவனிக்கிறார்கள். பெரிய அபாயம் மட்டுமே மக்களை பயப்பட வைக்கிறது. ஒரு கட்டத்தில் அறுதியான மாற்றமுடியாத பிரச்சனைகளில் மட்டுமே அனைவரின் கவனமும் குவிகிறது.

ஓர்மையும், ஒற்றுமை இலக்கம் அற்று இருப்பதும் வேறுபாடு எழக் காரணமாகும். பேரச்சம் எழுப்பும் அபாயச் சங்கு ஒலிக்கத் தொடங்கியவுடனே முக்கியத்துவமற்ற இரண்டாம் நிலைக் காரணிகள் தானாகவே பின்வாங்கிவிடுகின்றன. எல்லோரையும் பாதிக்கும் பிரச்சனை பேருருவம் எடுக்கும்போது குறைந்த முக்கியத்துவமுள்ள விஷயங்கள் அனைத்தும் மறந்துபோகின்றன. இதுவே உலக நடைமுறை.

மிக முக்கியமான, இறுதி முடிவை நோக்கிச் செலுத்தப்படாத மக்களிடம் கருத்து வேறுபாடுகள் எழுகின்றன. இதனால் ஒற்றுமைக்காக ஒரே வெற்றிகரமான வழி, அற்ப விஷயங்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவது மட்டுமே. எதிரி படையெடுத்துத் தாக்கும்போது நாட்டு மக்கள் ஒன்றுபடுவது இயல்பாகவே நடக்கும்.

அச்சுறுத்தலின்போது விலங்குகள் ஒன்றுபடுகின்றன என்பதை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நாய், பூனை, பாம்பு, கீரிப்பிள்ளை போன்ற ஒன்றுக்கொன்று சண்டையிடும் விலங்குகள்கூட பெருவெள்ளம் வரும்போது அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. விலங்குகளில் அதனளவில் இது நடந்திருக்கிறது. இறைவனுக்கு அஞ்சும் மறுமைச் சிந்தனையில் மனித குலத்தின் வெற்றியுள்ளது. இது உயர்ந்த, நீடித்த ஒற்றுமையாகும்.

ஐ௸ஐ௸ஐ௸

## சரியான பதிலடி

ஒருமுறை பள்ளிவாசல் ஒன்றில் வயதான மனிதர் ஒருவர் அமர்ந்திருந்தார். மேற்கத்திய பாணி உடையில் காந்தி குல்லாய் அணிந்திருக்கும் குறுந்தாடி வைத்துள்ள ஒருவரைக் கவனித்தார். அங்கு இதற்கு முந்தைய கூட்டு வழிபாட்டில் இந்தப் புதியவரை

முன்பு பார்த்ததில்லை. அந்தத் தோற்றத்தில் ஏதோவொரு ஈர்ப்பு இருந்ததால் ஆர்வத்துடன் அணுகித் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அந்தப் புதியவரிடம் திருக்குர்ஆன், நபிமொழி தொகுப்புகள் ஏராளம் இருப்பதும், ஆழ்ந்த மத ஈடுபாடு கொண்டிருப்பதும் உரையாடல் வழியாக தெரிய வந்தது.

நவீன தோற்றத்துடன் காணப்பட்டதால் அவர் அவ்வாறு இருப்பான் என்று நினைக்க முடியாமல் போய்விட்டதாக அந்தப் பெரியவர் தெரிவித்தார். அந்தப் புதியவருக்கு இந்தக் கருத்தால் மனம் புண்பட்டது, ஆனால் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டார். சில நிமிட மௌனத்திற்குப் பிறகு, "பாவிகளைக் கொண்டும் தன் பணிகளைச் செய்துக் கொள்வதில் இறைவன் வல்லமையுள்ளவன்" என்று கூறினார்.

இந்தச் சீரான பதிலால், அந்த முதியவர் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகி, வாயடைத்துப் போனார்.

நாம் சீண்டப்படும் பொழுதுகூட எதிர்வினையாற்றாதவாறு சரியான பதிலைச் சொல்வது எப்படி என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. யாராவது உங்களை விமர்சிக்கும்போது கோபப்படுகிறீர்கள். கடுமையாகப் பேசியவரை விமர்சித்து பதிலடி தர விரும்புகிறீர்கள். அதிர்ச்சியளிப்பதை விழுங்கிக் கொள்வதே அறிவார்ந்த செயலாகும். கசப்பை நாமே எவர் மீதும் திரும்பவும் எறியக் கூடாது. இவ்வாறு செய்யும்போது புதிய வலுவைப் பெறுவீர்கள்.

மோசமான சொற்களுக்கு நல்லவிதமாக பதிலளிப்பது கடினம். ஆனால் அதுவே பயனுள்ள, பொருள்பொதிந்தது, ஞானம்மிக்கது என்பதையும் புரிந்து கொள்வீர்கள்.

கோபப்படும்போது பொறுமையாக இருந்து, தன்னைப் புண்படுத்தியவரை மன்னிக்கத் தெரிந்தவர் இதற்கெல்லாம் தான் பழி வாங்கத் தேவையில்லை என்கிற உண்மையை உணர்ந்து கொள்வார்.

## ஒப்புதல் வாக்குமூலம்

கால்பந்து விளையாட்டில் முதன்முறையாக பங்கேற்ற இளம் வீரர் ஒருவர் இருந்த அணி தேசிய அளவிலான போட்டியில் தோற்றுப் போனது. "தற்காப்பு அரணில் விழுந்த விரிசலை அறிந்துகொண்ட எதிரணி எங்களை துவம்சம் செய்துவிட்டது.

தோல்விக்கு நான் முக்கிய காரணி" என்று பிறகு இது குறித்து தன் தந்தைக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

தன் குறையை ஏற்றுக்கொள்ள மனவுறுதி தேவை. அது இல்லாமல் சமூக முன்னேற்றம் அடையமுடியாது. தற்காப்பு அரணில் விழும் விரிசலே பெரும்பாலான தோல்விக்குக் காரணமாகும். இதிலிருந்து மேலெழ வேண்டுமானால் குறையைக் கண்டறிவதிலும் அதற்கான பொறுப்பை ஏற்பதிலும் உள்ளது. உடனே பிரச்சனையில் பாதி தீர்க்கப்பட்டு விடும். இதனால் நிலைமை மோசமடைவது தவிர்க்கப்படும்.

தவறிழைத்தவர் அதற்கான பொறுப்பேற்பதன் மூலம் களத்திலிருந்து விலகி விடுகிறார். இதனால் அவரைவிட திறமையானவர் அந்த இடைவெளியை நிரப்பமுடியும். அல்லது செயல்திறனை மேம்படுத்தும் பயிற்சியில் ஈடுபட முடியும். இதனால் எதிர்காலத்தில் வெற்றி கிடைக்கக் கூடும்.

வாழ்க்கையில் மிக முக்கியமான அறிவாற்றல் மற்றும் தார்மீக செயல் உண்மையை அங்கீகரிப்பதாகும். ஒரு மனிதனாக இறைநம்பிக்கை கொள்வதென்பது இறைவனின் மாட்சிமையை ஏற்பதும் சக மனிதர்களுக்கான கடமையைச் செலுத்துதலுமாகும். பாவமன்னிப்பு என்பது இறைவனுடைய பார்வையில் சரியாக இருப்பதைச் சரியானது எனவும் இறைவனுடைய பார்வையில் தவறாக இருப்பதைத் தவறானது எனவும் ஏற்றுக் கொள்வதாகும்.

## வாழ்க்கை உணர்த்தும் செய்தி

வாழ்க்கை ஒரு சோதனை போன்றது. உலகின் நடைமுறையும் இதுவே. இந்த உண்மையைப் புரிந்துகொண்டு, அதை மனமுவந்து ஏற்பதில்இவ்வுலக, மறுஉலக வாழ்க்கையின் இரகசியம் தங்கியுள்ளது.

அவை எந்த வடிவத்தை எடுத்துக் கொண்டாலும் அவை சோதிப்பதற்காகவே வழங்கப்படுகின்றன. ஆகவே அவை தனியுடைமையல்ல. இறைவனுக்குச் சொந்தமானவை என்கிற உணர்வு கொண்டிருக்க வேண்டும்.

அந்தச் சொத்துக்கள் சோதனைக்காலம் முடியும் வரை அவரது ஆதிக்கத்தில் இருக்கும்; அதன்பிறகு பறிபோய்விடும். எஞ்சியிருக்கப் போவது நற்செயல் மட்டுமே. இன்று மனிதனை சூழ்ந்திருக்கும் வாழ்வாதாரங்கள் எங்கே என்று தேட வேண்டியிருக்கும்?

சுதந்திரம் என்பது பிறப்புரிமை, அது எல்லோருக்கும் பொதுவானது. நமக்கு இருக்கும் அதே சுதந்திரம் பிறரிடமும் இருக்குமல்லவா? அதனால் இவ்வுலகமும் ஒரு போட்டிக்களமாக மாறியுள்ளது. தனி நபர், சிறு குழு, சமூகம், ஊர், நாடு என அந்தப் போட்டி பகிரங்கமானதானகும்.

இந்த உலகில் வெற்றிகரமானவராக இருக்க வேண்டுமானால் அது பிறருடனான போட்டியின் மூலம் நிறுவப்படும் என்பதே உண்மை. பிறரை முந்திச் செல்லக்கூடிய மனவுறுதி கொண்டவரால் மட்டுமே போட்டியில் வெற்றி பெற முடியும்.

இறைவனைத் தவிர பிறரிடம் ஆதரவுக்கான நம்பிக்கை கொண்டிருந்தவர் மறுமையில் பயன்மதிப்பு இழந்திருப்பார். முன்முடிவு, மேட்டிமை குணம் போன்றவை சிந்தனை வகுப்புவாதமே என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அவர்களால் போட்டி மிக்க இவ்வுலகில் ஒருபோதும் தமக்கான குறைந்தபட்ச இடத்தை அடைய முடியாது. அவர்களுக்கு வெற்றி என்பது தொலைதூர கானல் நீர் மட்டுமே.

ஐஐஐ

## அறிவியல் மனநிலை

அறிவியல்துறையில் செயல்திறனுக்கான சிறந்த அங்கீகாரம் நோபல் விருது. அப்பரிசுக்கு ஒருவர் எவ்வாறு தகுதி பெறுகிறார்?

வேதியியலுக்கான நோபல் விருது பெற்ற H.A.Krebs எது ஒரு சிறந்த விஞ்ஞானியை உருவாக்குகிறது என்று ஆராய்ந்தார். நல்லதொரு ஆய்வகம், தரமான நூலகம் ஆகியவை நமக்குப் பயன்படுத்தக் கிடைக்கின்றன என்பது நல்லதே. ஆனால் அதைவிட முக்கியம் சிறந்த விஞ்ஞானிகள் சிலருடன் அருகில் இருக்கும் வாய்ப்பை உருவாக்கிக் கொள்வது பெரும் பலனளிக்கக் கூடியது. Otto Warburg என்கிற அறிஞருடன் பணியாற்றியதும் அவருடன் இருக்க நேர்ந்ததும்தான் தனது வெற்றிக்கு காரணம் என்கிறார். பெரும் விஞ்ஞானிகளுடன் என் வாழ்வின் ஆரம்பகாலங்களில் நான்கு ஆண்டுகள் செலவிட்டிருக்கவில்லை என்றால் உண்மையில் விஞ்ஞானக் கண்ணோட்டம் வளர்ந்திருக்குமா என்பது சந்தேகமே என்கிறார்.

Krebs மட்டும் இக்கருத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆன்றோரின் அவையில் அமர்ந்திருப்பது ஒரு மனிதரிடம் அறிவியல் சுவை வளர்ப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது என்கிறார். அந்த நட்பு விஞ்ஞான உண்மைகள், சான்றுகளின் குறிப்பைத் தருகிறது

என்பதல்ல விஷயம். அந்தத் தரவுகளை வேறுவிதமாகப் பெற்றுவிட முடியும். ஆனால் கற்றறிந்த பெரிய ஆளுமைகளின் சபை சிறப்பு மனநிலையாக மாறுவதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. (அது ஒரு வகையான ஆசிரியர் மாணவர் உறவின் ஆன்மிகப் பரவசம் போன்ற) “பொதுவான அறிவொளி / உள்ளெழுச்சி”. ஆக தனித்துவமான கண்ணோட்டமே உண்மையான அறிஞரின் அடையாளமாகும்.

அவர் மேலும் எழுதுகிறார் :

பணிவு மற்றும் உற்சாகம் / ஆர்வம் ஆகிய நற்பண்புகளைப் பெற்றுக்கொள்வதே பெரிய விஷயமாகும். முன்னேற்றத்தின் உயரமான படிகளில் ஏற அறிஞர்களின் அண்மை உற்சாகம் ஊட்டுகிறது. ஆர்வ உணர்வுகளால் மனது உற்சாகப்படுத்தப்படுகிறது. உண்மையை அடைய தயார்ப்படுத்துகிறது. தனக்குள் தேடுவது அற்புதமான செயலாகும். தற்பெருமையுடையவர் உயர்ந்த எதார்த்தத்தின் முன்னால் தன்னைத் தாழ்த்திக் கொள்வதைத் தவிர்ப்பார். தனது இருப்பும் முயற்சியும் குறைந்த தரத்தில் இருப்பதை அங்கீகரிக்கும் ஒருவரே தன் தவறுகளை உடனடியாக ஒப்புக்கொள்ள முடியும். உண்மையான விஞ்ஞானியின் இன்றியமையாத பண்பு இதுவாகும். தன் பிழைகளை ஏற்றுக் கொள்வதால் கண்ணியக்குறைவு ஒன்றுமில்லை. உண்மையான அறிவியல் மனம் கொண்டவர்களுக்கு சத்தியமே எல்லாவற்றுக்கும் மேலாக இருக்க முடியும்.

## அவர் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்

இருபதாம் நூற்றாண்டின் அறிவியலைப் புரட்சிகரமாக மாற்றியமைத்ததில் Albert Einstein (1879-1955)க்கு முக்கியப் பங்குள்ளது. ஒரு பாமரத் தந்தையின் மகனாக மூன்று வயது வரையில் பேச இயலாதவராக இருந்தார். அவருடைய வாழ்க்கையின் தொடக்கம் மிகவும் சாதாரணமாக இருந்தது. ஒன்பது வயது வரை பிற எவரையும் போல சாதாரணமாகவே இருந்தார். பிற மாணவர்கள் கற்பதற்கு இவரது கற்றல் குறைபாடு தடையாக இருக்கும் என்று கருதிய ஆசிரியர் ஐன்ஸ்டீனை ஒருமுறை பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேற்றினார்.

பள்ளிப்படிப்பு முடிந்தபிறகு Zurich நகர தொழில்நுட்பக் கல்லூரியின் நுழைவுத் தேர்வில் தோற்றுப் போனார். இரண்டு தடவை முயன்ற பிறகே கல்லூரியில் சேருவதற்கு தகுதி பெற்றார்.

இருபது வயது வரை ஆல்பெர்ட் ஐன்ஸ்டீனிடம் அசாதாரண ஆற்றல் எதுவும் இருப்பதாக வெளியில் தெரியவில்லை. “சோம்பேறி நாய்” என்றொரு முறை ஆசிரியர் ஐன்ஸ்டீனை குறிப்பிட்டிருந்தார். பிற்பாடு எந்தவொரு விஞ்ஞானியைவிடவும் கடினமாக உழைத்து உயர்ந்தார். “ஐன்ஸ்டீனாக உருவெடுக்க நல்ல மாணவனாக இருக்க வேண்டுமென்கிற கட்டாயம் எதுவும் இல்லை” என்று அவரின் வரலாற்றை எழுதியவர் கூறுகிறார்.

முதல் அறிவியல் நூலை ஐன்ஸ்டீன் தமது இருபத்தியாறாம் வயதில் எழுதினார். அதன் பிறகு அவரது புகழ் திசையெங்கும் பரவியது. எளிமையான வாழ்க்கையில் சாதாரண உணவு உட்கொண்டு இரவு நடுநிசி வரை வேலை செய்தார். ஒரு கட்டத்தில் இஸ்ரேலின் குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்.ஆனால் அரசியல் மனித குலத்தின் புற்றுநோய் என்று நம்பிய ஐன்ஸ்டீன் புறங்கையில் அக்கோரிக்கையை உதறித் தள்ளினார். ஹிட்லரின் ஜெர்மனியில் அவரது தலைக்கு இருபதாயிரம் மார்க் விலை குறிக்கப்பட்டது. (அக்காலத்தில் அது பெரிய தொகை) ஆனால் அறிவியல் உலகில் ஐன்ஸ்டீனுக்கு இருந்த உயர்ந்த இடத்தின் காரணமான எவருமே முன்வந்து ஐன்ஸ்டீனைக் காட்டிக் கொடுக்கவில்லை.

பெரிய சாதனை புரிய மகத்துவமிக்க குழந்தையாகப் பிறக்க வேண்டும் என்கிற கட்டாயமில்லை என்று வரலாற்றில் ஏராளமான நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிறிய தொடக்கத்திலிருந்து பெரிய உயரத்திற்குச் செல்ல கடுமையாக உழைக்க வேண்டும். கடினமான சூழலில் வாழ்க்கைக்குச் சான்றளிப்பவர்கள் பாக்கியசாலிகள். அவர்களுக்கு உள்ளே மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்படத் தொடங்குகிறது. பெரிய மனிதன் சொகுசிலிருந்து அல்ல, சாதகமில்லாத நிலைமைகளில் உருவாகிறான். கடினமான நிலவரங்களே உயர்வான இலக்கை நோக்கி மனிதனை உந்தித் தள்ளுகின்றன. வளமான காலத்தைவிடக் கடினமான காலங்களில் மாண்பை கண்டடைய முடியும் என்கிறார், Francis Beacon.

இறைவனின் படைப்பில் மனித சாத்தியங்களுக்கு எல்லையில்லை. எளிமையான ஆரம்பம் என்பதற்காக வருத்தபட்ட ஏதுமில்லை. மிகச் சாதாரண வாழ்க்கைச் சூழல் வெற்றிக்கான படிக்கட்டாக மாறும் என்பதை உணர வேண்டும். ஆனால் அதற்கு Francis Beacon சொல்வதைக் கேட்டாக வேண்டும். “அச்சமும் விரும்பத்தகாதவையும் இல்லாமல் வளமான காலம் இல்லை; சொகுசும் நம்பிக்கையும் இல்லாமல் கடினம் இல்லை”.

# கோபத்தைக் கட்டுப்படுத்தல்

Bertrand Russell (1872 - 1970) *சுதந்திரச் சிந்தனையாளர். அவர் தன் விதிவிலக்கான, அசாதாரண பேச்சால் மரபான, வழக்கான வாழ்க்கை நடத்தும் பலரின் கோபத்தை கிளறியது.*

*தான் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தபோது ஒருவர் நிகழ்ந்த சம்பவத்தை அவர் இவ்வாறு எழுதுகிறார். "கோபத்தில் எழுந்துவந்து குரங்கு போல் நான் தோன்றுவதாகத் தெரிவித்தார். அவ்வாறெனில் உங்கள் மூதாதையரின் குரலை கேட்ட இன்பம் உனக்கு ஏற்பட்டிருக்குமே" என்றேன். (சுயசரிதை தன் வரலாறு பக்கம் 565)*

*குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்கிற பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டின் பின்னணியில் ரஸ்ஸலின் இக்கூற்று உள்ளது. அக்கோட்பாட்டைச் சரிகண்டு நான் இங்கு அதை மேற்கோள் காட்டவில்லை. மாறாக எரிச்சலடையாமல், கோபம் கொள்ளாமல் ஒருவர் எப்படி பதிலளிக்க முடியும் என்பதைச் சுட்டிக்காட்டவே இதைக் குறிப்பிடுகிறேன். யாராவது உங்களை விமர்சித்தால் இரண்டு விதமாக அதை எதிர்கொள்ளலாம். யாரேனும் கோபப்படும் போது பதிலுக்கு நாமும் கோபப்படுவது அல்லது ரஸ்ஸல் செய்தது போலக் கோபப்படாமல் அதற்கு பதிலளிப்பது.*

*கோபம் நிறைந்த சொற்களைக் கேட்டும் அமைதி காக்க வேண்டும். எதிராளி எவ்வளவுதான் கோபத்தில் பேசினாலும் நிதானம் இழந்துவிடக் கூடாது. உங்களது பதில் எதிர்வினையாக இல்லாமல் நேர்மறையானதாகவும் சிந்தனைக்குரியதாகவும் இருக்க வேண்டும்.*

*முதல் வகையான பதில் எரிச்சலையும் அத்துமீறலையும் கூட்டிவிடுகிறது. இரண்டாம் பதில் நிதானம் அடையச் செய்கிறது. நெருப்பின்மீது தண்ணீர் ஊற்றுவதைப் போல. இரண்டாம் பதில் கேள்வி கேட்பவனை வாயடைக்கச் செய்வதாகும். ரஸ்ஸலின் பதில் தாக்கம் நிறைந்தது. அதே நேரம் அவர் எதிர்மறை பதிலைத் தந்திருந்தால் அது அவ்வளவு பொருள் பொதிந்ததாக இருந்திருக்காது.*

## சாதகமற்ற சூழல்

Sir Walter Scott (1771 - 1832) இன்று ஆங்கில இலக்கியத்திற்குப் பங்களித்தவர்களில் முக்கியமானவராகக் கருதப்படுகிறார். அவர் தம் ஆரம்ப நாட்களில் கடன் சுமையால் அழுத்தப்பட்டு நொடிந்து போயிருந்தார். ஆனால் கடுமையாக உழைத்து அதிலிருந்து மேலெழுந்தார்.

நடுத்தர வயது வரை மிகச் சாதாரணமாகவே மூன்றாந்தர கவிஞராக அவர் காணப்பட்டார். கடன் சுமையால் அழுத்தப்பட்டு இருந்தபோது தெரிந்து வைத்திருந்த கவிதையும் அவருக்குக் கைக்கொடுக்கவில்லை. ஆற்றாமையால் உடைந்துபோக இருந்த நேரத்தில் அவருள் புதிய மனிதன் பிறந்தான். வரலாற்றுப் பின்புலத்தில் காதல் கதைகளை நாவல் வடிவமாக எழுதிக் குவித்தார். கடன் சுமை நீடித்துக் கொண்டிருந்த காலத்தில் முடிந்த அளவுக்குக் கவரும் விதமாக எழுதினார். அதற்காக அவர் தன் முழு ஆற்றலையும் செலவிட்டார். அவரது நல்லநேரம், அவை மக்களைக் கவர்ந்தன. வாசகர்கள் மயங்கினர். எழுதப்படுவது விற்கும்படியாக இருப்பதை உறுதி செய்தார். பிரபலம் அடைந்துவிட்டதால் பதிப்பாளர்கள் பணத்தைக் கொட்டினர். சூடான கேக்கைப் போல இவரது நாவல்கள் விற்பனையில் சாதனை படைக்க, கடன் சுமையிலிருந்து விடுபட்டார்.

ஆங்கில இலக்கியத்துக்கு இவரது பங்களிப்பு மதிப்புடன் ஏற்கப்பட்டது, அங்கீகாரம் கிடைத்தது. கடன் சுமை இல்லாமல் இருந்திருந்தால் இவ்வளவு தீவிரமாகவும் இலக்கியத் தரத்துடன் எழுதிருப்பாரா என்பது ஐயத்துக்குரியதே. சாதாரண மனிதனாக இருந்தவருக்கு மதிப்பிற்குரிய ‘சர்’ பட்டம் பெற்றுத் தந்தது அவர் எதிர்கொண்ட கஷ்டமான சூழலே.

வாழ்க்கையின் சவால் மனிதனை உருவாக்குகிறது. தோற்றால் உடைத்துப் போட்டு விடுகிறது.

ஐஐஐ

## நீ ஏழையல்ல, பெருஞ் செல்வந்தன்

வீதியில் இரந்து கொண்டிருந்தார் பிச்சைக்காரர். ஆனால் ஊனம் ஏதும் அவரிடம் தென்படவில்லை. இதைக் கவனித்த ஒருவர் ‘உனக்கு ஏன் தானம் தர வேண்டும்’ எனக் கேட்டார்? ‘நானொரு ஏழை’ என அவர் பதிலளித்தார். ‘நீதான் பணக்காரனாச்சே’ எனச் சொன்னார். இல்லை என்னைக் குறித்து ‘வேடிக்கையாக

பேச வேண்டாம்' என அந்த ஏழை சொன்னார். சரி, உன்னிடம் இருப்பதை என்னிடம் கொடுத்து விடு, அதன் ஈடாக ரூ.50,000/ நான் உனக்குத் தருகிறேன். உடனடியாகத் தோளிலிருந்த பையை எடுத்து நீட்டினார். அதில் சில்லறை நாணயங்கள் மட்டுமே இருந்தன. 'இல்லை, இவை இவை தவிர வேறு சில உன்னிடமுள்ளன. உன்னிடம் இரண்டு கால்கள் உள்ளன. அதில் ஒன்றை எனக்குத் தந்துவிடு, பத்தாயிரம் ரூபாய் தருகிறேன்' என்றார். ஏழை மறுத்துவிட்டார். உன்னிடமுள்ள இரண்டு கைகளில் ஒன்றை எனக்குக் கொடுத்துவிடு, நான் இருபதாயிரம் தருகிறேன் என்றார். மறுபடியும் அந்த ஏழை மறுத்துவிட்டார். சரி, உன்னிடமுள்ள கண்களில் ஒன்றை எனக்குக் கொடுத்துவிடு, தனியாக இருபதாயிரம் தருகிறேன் என்றார். அதற்கும் அவர் மறுத்துவிட்டார்.

'உன்னிடமுள்ள கால்கள், கைகள், கண்கள் இரண்டிரண்டு உள்ளன. ஒவ்வொன்றை மட்டுமே கேட்கிறேன். ரூ.50,000/ தர முன்வருகிறேன். ஜோடியாக இரண்டையும் நான் கேட்கவில்லை. அப்படி கூட்டினால் ரூ. ஒரு இலட்சம் சேர்ந்துவிடும் என்றார். உன் உடலிலுள்ள ஏராளமான உறுப்புகளில் வெறும் மூன்றின் விலை மட்டும் இலட்சம் ரூபாய். பிறகு எப்படி நீ ஏழை என்று உன்னை ஏற்றுக் கொள்ள முடியும்' என்று கேட்டார். நீயோ பெரும் பணக்காரன். ஆகவே பிச்சையெடுப்பதை நிறுத்திவிட்டு விலை மதிக்க முடியாத இந்த உறுப்புக்களைப் பயன்படுத்தி முன்னேறு, வெற்றி பெறுவாய் என்றார். இறைவன் பெரும் தனித்திறன்களுடன் நம்மைப் படைத்துள்ளான். ஆனால் அவற்றின் பயன்மதிப்பை உள்ளபடியே நாம் அறிவதில்லை. இழந்த பின்பே அவற்றின் இருப்பை உணரமுடிகிறது.

James Thomas 24 வயது இளைஞர். அவரது இரண்டு சிறுநீரகங்களும் பழுதடைந்துவிட்டன. புது டில்லியிலுள்ள (அகில இந்திய மருத்துவ அறிவியல்) AIIMS மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது சிறுநீரக தானம் பெற்று பிழைத்துக்கொள் என்று மருத்துவர்கள் கூறினர். சிறுநீரகம் போன்ற உடல் உறுப்புகளை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்ய முடியாது அல்லவா! கோடி கோடியாக கொட்டிக் கொடுத்தாலும் சிறுநீரகம் கிடைக்காது, தானமாகக் கிடைத்தாலும் ரூ.45000/ வரை செலவுக்குத் தேவைப்படும். அறுவை சிகிச்சையில் மருத்துவரின் சம்பளம், மருந்துகள் என அவற்றை உரிய முறையில் பொருத்திச் செயல்படச் செய்ய ஆகும் செலவுகள் உள்ளன. (The Times of India, January 10, 1980)

ஒருவரிடம் எதுவுமில்லையென்றாலும் அவரிடம் ஏதோ ஒன்றுள்ளது என்பதே உண்மை. இந்த உடலும் மூளையும் விலை மதிப்பில்லாதவை. அவற்றை உரிய முறையில் பயன்படுத்துபவரால் உலகில் அடைய முடியாதது எதுவுமில்லை. நீங்கள் கைகளைக் கொண்டு பொருள்களைப் பற்றிக் கொள்கிறீர்கள். கால்களைக் கொண்டு நடக்கிறீர்கள். நாவைக் கொண்டு பேசுகிறீர்கள். கண்களால் பார்க்கிறீர்கள் என்றால் உங்களிடம் எல்லாம் உள்ளது என்று பொருள். ஏனெனில் இதன் மூலம் உலகில் அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

ஊனமே பலமாக

அண்ணல் காந்தியடிகள் ஓர் ஆன்மிகத் தலைவரும்கூட. அடிப்படையில் வெட்க உணர்வு கொண்டவராக அவர் ஆரம்பத்தில் இருந்திருக்கிறார். ஆனால் அவர் மாபெரும் தலைவராக மலர்வதற்கு முன்புள்ள காலம் நிறைய பேருக்குத் தெரியாது. பதற்றப்படும் இயல்பால் பல நேரங்களில் மௌனமாக வாயை மூடிக் கொள்ள நேர்ந்தது போன்ற வியப்புகள் நிறைந்த காலம் அது. அவருடைய ஆரம்ப வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே கூச்ச இயல்பு தொடர்ந்து வந்தது.

கல்வி கற்க இலண்டன் சென்றபோது vegetarian society சைவ உணவுக் கழகம் ஒன்றில் இணைந்திருந்தார். அப்பொழுது மேடையில் பேச அழைக்கப்பட்ட போது அவரால் ஒன்றுமே பேச முடியவில்லை என்பதோடு தன் உணர்வுகளை வெளிப்படுத்தவும் முடியவில்லை. மிக்க நன்றி என்று கூறிவிட்டு அமர்ந்துகொண்டார். பிறிதொரு சூழலில் இதேபோல ஒரு கூட்டத்தில் அழைத்தபோது எழுதிச் சென்றதைக் கூட அவரால் ஒழுங்காகப் படிக்க முடியவில்லை.அவரது இக்கட்டான நிலையைப் பார்த்து வேறு யாரோ அதை வாங்கிப் படித்துக் காட்டினார்.

சட்டப்படிப்பை இலண்டனில் முடித்துவிட்டு மும்பையில் வழக்கறிஞராக பணிபுரியத் தொடங்கினார். கூச்ச உணர்வுக்கு ஆட்பட்டு நீதிமன்றத்தில் தன் கட்சிக்காரருக்காக வாதாட இயலாமல் நீதிபதியைப் பார்த்ததும் வாயடைத்துப் போனார். ஆகவே வேறொரு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ளவும் எனக் கேட்டுக் கொண்டார்.

ஆனால் காந்தியடிகள் My Experiments with the Truths (தமிழில் : சத்தியச் சோதனை) என்கிற தன் வரலாற்று நூலில் தன் குறையை எப்படி நிறையாக மாற்றிக் கொண்டார் என்பதை எழுதுகிறார்.

“பேசுவதில் நான் கொண்டிருந்த அச்சம் இப்பொழுது என் மனதுக்குப் பிடித்த விஷயங்களில் ஒன்றானது, வெட்க உணர்வு சொற் சிக்கனத்தைக் கற்றுக் கொடுத்தது. இயற்கையாக எண்ணங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கவும் அது கற்றுக் கொடுத்தது. பொருளற்ற பேச்சு, எழுத்துக்கள் என்னில் வெளியாகாமல் அது தடுத்தது”

காந்தியடிகள் எப்பொழுதும் சிந்தித்துப் பேசவும், எழுதவும் கைவரப்பெற்றவர் நேரடியான பேச்சு அவருடையது. பேச முடியாத நிலையிலிருந்துதான் கோடிக்கணக்கானோரை மயக்கவைக்கும் பேச்சாளராக மாறினார்.

வெளிப்படையான குறைபாடுகளிலிருந்து காந்தியடிகள் வெற்றிகரமாக மீண்டார். எளிமையான நேரடியான பேச்சு அவருடையது. சிந்தித்துப் பேசக்கூடியவராக மாற அவரது ஆரம்ப வாழ்க்கையின் இடர்கள் உதவின. இது கூச்ச உணர்வு தந்த பரிசு. ஆதலால்தான் உள்ளம் ஈர்க்கும் உரையாற்றும் சிறப்புத்தன்மை காந்தியடிகளுகுக் கிடைத்தது.

## வருந்தாதீர்

தன் தவறான செயல்களுக்கான வருத்தத்தில் மனிதன் பெரிதும் கவலைக்கு உள்ளாகிறான். அதில் அவனுடைய பெரும் நேரம் செலவாகிறது என்றும், கடந்த கால நினைவுகளில் ஏராளமானோர் மூழ்கியுள்ளனர் என்றும் அமெரிக்காவின் மனவியல் அறிஞர் தெரிவிக்கிறார். தான் இப்படி செய்திருந்தால் அப்படி ஆகியிருக்கும் என்று தவறாக முடிந்த செயல் தவறான விளைவைத் தராமல் நற்பலனை அளித்திருக்கும்; நான் இந்தத் திட்டத்தைக் கையாண்டிருந்தால் நட்டப்படுவதிலிருந்து தப்பியிருக்க முடியும். நான் இன்னாரை மணமுடித்திருந்தால் வாழ்க்கை இனிமையாகக் கழிந்திருக்கும். வயதான தம்பதிகள், தவணை முறையில் வீட்டை வாங்கி இருந்திருந்தால் இத்தனை ஆண்டுகள் கட்டி வந்த மாத வாடகை வீணாகி இருக்காது, வீடே நமக்குச் சொந்தமாகி இருக்கும். இதுபோன்ற எண்ணங்கள் முடிவில்லாது தோன்றிக் கொண்டேயிருக்கும்.

இது போன்ற உணர்வுகளில் வாழ்ந்து நம் நேரத்தையும், ஆற்றலையும் செலவழிப்பது வீண். இழந்த நேரத்தை ஒருபோதும் நம்மால் மீளப் பெற முடியாது. பிறகு கவலைப்படுவானேன்? இந்த நிலையில் சரிசெய்ய வாய்ப்புகள் உண்டா? ஏதேனும் ஆக்கப்பூர்வமாகச் செயல்பட இன்னும் வழியுண்டா? உறவுமுறை

*சீராகுமா? புதிய நிலவரம் சாதகமாக மாறுமா? இல்லை, நிலைமை தீவிரமாகிவிட்டது. மோசமாகிப் போனது என தெரிய வந்தவுடனே வருத்தப்படுவதைக் கைவிட்டுப் புதிய கோணத்தில் சிந்திக்க வேண்டும். அடுத்தமுறை சரியாகச் செய்வேன் என்று முடிவு செய்ய வேண்டும். இன்னும் ஆழமாக சிந்தித்து எதிர்காலத்தில் முடிவெடுக்க வேண்டும். உறவு முறியும் அளவுக்குப் போக நான் விட மாட்டேன் என உறுதி பூண வேண்டும்.*

*“இப்படிச் செய்வதன் மூலம் கடந்த கால துர்கனவிலிருந்து மீண்டெழ முடியும். பயனற்ற எண்ணங்களிலிருந்து உங்களால் விடுதலை பெற முடியும். எதிர்காலம் உரிய திட்டங்களுடன் போதிய முன்னேற்பாடுகளிலில் கழியும்”* (Readers Digest Septermber 1981)

*இதன் பயனாகக் கவலையில் ஆற்றல் வீணாவது தடுக்கப்பட்டு விடும். எது உங்களை துக்கமுற வைத்திருந்ததோ அதுவே உங்களுக்குப் பயனளிக்கும். நல்லனுபவமாக மாறி இருக்கும். எதிர்காலம் குறித்த பாடம், வாழ்வின் ஒளிவிளக்காக இருக்கும்.*

*இறந்தகாலம் அல்லது எதிர்காலம் குறித்துதான் நமது கவலை துக்கம் இருக்கின்றன. பழைய நிகழ்வு எதோ ஒன்றின் தாக்கம், நடந்துபோன இழப்பு மீண்டும் வந்து விடுமோ என்கிற கவலை மனிதனை ஆட்டிப் படைக்கிறது. ஆனால் அது அனாவசியம். ஏற்பட்ட இழப்பு என்பது முடிந்து விட்ட ஒன்று, திரும்ப ஏற்படாது. இதற்காக துக்கமடைய என்ன உள்ளது. வருங்காலத்தில் மீண்டும் விரும்பத்தகாதவை என்பது வெறும் அச்சம் மட்டுமே. பொதுவாக மிகைக் கற்பனை.*

## வரலாறு படைத்தல்

*“தவறான நிகழ்வுகளை மீள்பரிசீலனை செய்வதும் மறுமதிப்பீடு செய்வதுமே வரலாறு” என்கிறார்* B.Tuchman (1912 - 1989) *என்ற அமெரிக்க அறிஞர். மக்களின் விருப்பத்துக்கு மாறாகவே வழக்கமாக வரலாறு வளர்ச்சியடைகிறது. இது வேறு விதமாகவும் சொல்லப்படுகிறது. அதாவது வரலாற்றில் நேரடியாக ஈடுபட்டப் பலரின் பங்களிப்பு தவறானது என மதிப்பிட சிறிது காலம் தேவைப்படுகிறது. வரலாற்றுப் போக்கின் முடிவு அதன் ஆரம்பக் கட்டத்தில் இருந்ததைப் போல இருக்காது.*

*எடுத்துக்காட்டாக இஸ்லாமிய நாட்காட்டியான ஹிஜ்ரி 6ஆம் ஆண்டு (கி.பி. பொது ஆண்டு 629/630ல்) நபிகள் நாயகத்துக்கும்*

மக்காவின் குறைஷிகளுக்கும் ‘ஹுதைபியா உடன்படிக்கை’ ஏற்பட்டது. முஸ்லிம்கள் தரப்புக்குப் பெரும் இழப்பிலும் மீண்டெழ முடியாத நட்டத்திலும் இந்த ஒப்பந்தம் தள்ளப்போகிறது என பெரும்பாலோர் எண்ணினர். ஆனால் தோல்வி போல தோற்றமளித்த இந்த உடன்படிக்கையை முஸ்லிம்களின் மாபெரும் வெற்றியாக வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது.

வரலாற்றில் இதுபோன்ற பல்வேறு நிகழ்வுகள் திரும்பத் திரும்ப நடந்து வருகின்றன. 1945ஆம் ஆண்டு அமெரிக்க விமானங்கள் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி மீது அணுகுண்டுகள் வீச புறப்பட்ட போது இனி இவை என்றைக்கும் சாம்பல் மேடாக காட்சியளிக்கும் என கருதியிருக்கலாம். ஆனால் வெறும் நாற்பதே ஆண்டுகளில் ஜப்பான் உலகின் பொருளாதார வலுவைக் கொண்டு உலகின் தொழில்துறை வல்லரசாகப் பேருருவம் எடுத்தது.

செலவழிக்கப்பட்ட ஆற்றல்கூட நிவாரணமும், ஆதரவுமுள்ள வரலாற்று உண்மைகளாகி விடுகின்றன. பல்லாண்டுகளாக உறங்கிக் கிடந்த எரிமலையிலிருந்து பிழம்புகள் வெளிப்பட்ட அனுபவங்கள் இருக்கிறது அல்லவா? செலவழிக்கப்பட்ட ஆற்றல் உயிர்த்தெழுவதைப் போல நிர்மூலமான தன்மையும் முழு நாசமும் அடைந்த இடங்களில் புதிய ஆற்றல் மீண்டெழுந்துள்ளதையும் பூமியில் பார்க்கலாம்.

ஆக, நிகழ்வனவற்றைக் கண்டு யாரும் நம்பிக்கை இழக்க வேண்டியதில்லை. வரலாற்றுப் பக்கங்கள் திரும்பும்போது நிகழ்வுகளின் போக்கு நேரெதிர் திசையில் மாறும், எதிர்பாராதவை நடந்தேறும்.

வரலாறு என்பது மனிதனால் மட்டுமே எழுதப்படுவதில்லை. வரலாறு இறைவனின் திட்டத்திற்கேற்ப மாற்றியமைக்கப்படுகிறது. வெளிப்படையான காரணிகளால் அல்ல, மறைமுகமாக இறைவனின் செயல் திட்டங்களுக்கு ஏற்ப வரலாறு வடிவம் கொள்கின்றது.

இந்தப் படிப்பினைகள் மனிதனுக்கு ஆறுதல் தரக்கூடியவை. தாம் தப்பித்து விட்டோம். அவர்களை அழித்து விட்டோம் எனக் கருதக் கூடியவர்கள் சாம்பலிலிருந்து பீனிக்ஸ் பறவை மீண்டெழுவதைப் போல அழிந்து போன பின்பும் உயிர் பெறுவதை வரலாறு ஏராளமாகக் கண்டுள்ளது.

## பாதுகாப்பான பயணம்

*1969ஆம் ஆண்டு அமெரிக்கா மனிதர்களை நிலவுக்கு விண்கலத்தில் அனுப்பியது. அந்த ராக்கெட்டின் முதல் அடுக்கை இயக்கி வைத்தபோது பலநூறு கி.மீ. சுற்றளவு வரை அதிர வைக்கும் பெரும் ஓசை கேட்டது. ஆனால் விண் கலத்திற்குள் இருந்த வீன்வெளி வீரர்களுகு இந்த சப்தம் பத்து நொடிகளுக்கு மேல் கேட்கவில்லை. காது பிளக்கும் இப்போரோசையை பின்னுக்கு தள்ளி விட்டு ஆபத்திலிருந்து அவர்களால் பயணத்தை தொடர முடிந்தது.*

*காரணம் விண்கலம் மிக வேகமாகப் பறந்தது. ஒலி அலைகளின் வேகம் மணிக்கும் 700 கி.மீ. எனில் ராக்கெட் மணிக்கு 25000 கி.மீ. வேகத்தில் சீறியது. அதை ராக்கெட் 10 நொடிகளில் கடந்து விட்டபோது அந்த விண்கலம் எழுப்பிய பேரோசை ராக்கெட்டினுள் இருந்த வீரர்களுக்கே கூடக் கேட்கவில்லை.*

*விமானம், விண்கலம் இரண்டுக்கும் வேறுபாடு உள்ளது. ஆயிரம் கி.மீ. வேகம், விமானம், 25000 கி.மீ. வேகம் விண்கலம். ஆகவே விமானப் பயணத்தின் பேரிரைச்சல் கேட்டபடியே இருப்பதுபோல வாழ்க்கையிலும் தொந்தரவுகள் இருந்து கொண்டே இருக்கும். தம் முயற்சியில் வேகத்தைக் கூட்டுவதன் மூலம் தொல்லைகளின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்கும்.*

*மனிதனுக்கு சுயமாகவோ பிறராலோ பிரச்சனைகள் இருக்கும். இதற்கான எளிய தீர்வு எது? அவற்றின் தீங்கிலிருந்து விடுபடுவது எப்படி? பிறர் அவசரப்பட்டால் நீங்கள் பொறுமை காக்க வேண்டும் பிறர் எதிர்மறை செயலில் ஈடுபட்டால் நீங்கள் நேர்மறையான நடவடிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டும் பிறர் உலகியல் வளங்களைக் கைப்பற்றினால் நீங்கள் தார்மீக / அறநெறி வலுவோடு முன்னேறுங்கள். வெளிப்படையாக மனித இயல்போடு போரிட்டால் நீங்கள் உள்முகமாக நோக்குங்கள். மனிதனின் கேட்டிலிருந்து உங்களை நீங்கள் தற்காத்துக் கொள்ளமுடியும். ராக்கெட்டின் ஓசையிலிருந்து விண்வெளி வீரர் பாதுகாப்பாக இருப்பதுபோல!*

## மேன்மையான இடம்

*பிறருடைய தேவையை நிறைவேற்றி வைப்பதில்தான் மக்கள் மனதில் இடம் பிடிக்கும் இரகசியம் அடங்கியுள்ளது. உதவி*

செய்வதை நீங்கள் உறுதிப்படுத்திவிட்ட பிறகு யாராலும் உங்களை அலட்சியமாகப் புறந்தள்ளிவிட முடியாது.

இளம் வயதுள்ள இருவர் திருமணம் செய்து கொண்டனர். மணமகன் நிறைய படித்தவர். குடும்பத்தாரின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப மணமகள் அழகாக இல்லை. நாத்தனார்கள் மணமகளை ஏற்கவில்லை. குடும்பத்தில் யாருமே அம்மணப்பெண்ணைச் சேர்த்துக் கொள்ளவில்லை. தேவைப்படாத ஒருவளாக அந்த இளம்பெண் நடத்தப்பட்டாள். எந்தப் பற்றுக்கோலுமின்றி வீட்டிற்குள் அடியெடுத்து வைத்தாள்.

அழகில் வேண்டுமானால் குறைவாக இருந்திருக்கலாம். ஆனால் அறிவாளி. குடும்பத்தில் தனக்குரிய அங்கீகாரம் கிடைக்காததை அவள் பொருட்படுத்தவில்லை. அழகு என்பது தற்காலிகமானது. சில ஆண்டுகள் நீடிக்கக் கூடியது என்பதையும் மனித நடத்தைக்கு நீடித்த மதிப்புள்ளது என்பதையும் அவள் புரிந்து வைத்திருந்தாள்.

உடல் அழகில் குடும்பத்தாருக்குத் தான் வேண்டப்படாதவளாக இருந்துவிட்டுப் போகட்டும். அக அழகில் தான் மேன்மையான இடத்தைப் பிடித்துவிட முடியும் என அவள் கருதினாள். அலட்டிக் கொள்ளாமல் குடும்ப பொறுப்பை ஒவ்வொன்றாக மேற்கொள்ளத் தொடங்கினாள். வீட்டு நிர்வாகம், விருந்தோம்பல், சமையலறை பொறுப்பு, அனைவரின் தேவையறிந்து உடனுக்குடன் செயல்படல் என்பவை நாள்தோறும் இடைவிடாமல் செய்துவந்தாள். இதை தம் கடமையாக வரித்துக் கொண்டாள். சொன்னதையும் செய்தாள், சொல்லாததையும் செய்துமுடித்தாள்.

குத்தல் பேச்சுக்குப் பதிலளிக்கவில்லை. குற்றம்பிடித்தவர்களை மன்னித்தாள். செயலே தக்க பதில் எனக் கொண்டாள். தன் பங்களிப்பை உறுதி செய்துவந்தாள். இது குடும்ப உறுப்பினர்களிடம் பெருத்த வரவேற்பையும் வீட்டுச் சூழல் மாறவும் வழிவகுத்தது. வரவேற்கப்படாதவளாக இருந்தவர் பிறகு கொண்டாடப்பட்டாள்.

இதுவே வாழ்க்கையின் இரகசியம். வீடு, ஊர், நாடு, சமூகம் எல்லோருக்கும் பொதுவான விதி இது. உங்களால் பயனடைய முடியும் என நிரூபித்துவிட்டால் ஏற்புத் தானாக கிடைக்கும். மக்கள் உங்களைக் கொண்டாடியே தீருவர். நீங்கள் இன்றி அவர்களால் தனித்தியங்க முடியாதபடி நிலைமை உங்களுக்குச் சாதகமாக மாறும்.

# தார்மீக வாரிசுரிமை

கரீம் பக்ஷ் மதப் பற்றுமிக்க பாமரர். கிராமத்தில் கிடைக்கும் மிகச் சொற்பத் தொகையில் தன் வாழ்க்கையை நடத்தி வந்தார். 65வது வயதில் இறந்தபோது நான்கு பிள்ளைகளுக்கு எந்தப் பொருள் வளங்களையும் வாழ்வாதாரமாக விட்டுச் செல்லவில்லை. மூத்த மகன் ரஹீம் பக்ஷ் பெருநகரில் பிழைக்க வழியுண்டா என வேலை தேடினார். மிகச் சிறிய முதலீட்டில் ஒரு வியாபாரத்தைத் தொடங்கினார்.

கரீம் பக்ஷ் சொத்து எதையும் மீதம் வைக்கவில்லை என்பது என்னமோ உண்மை. எனினும் எளிய வாழ்க்கை, எவருடனும் மோதலில் ஈடுபடாதிருத்தல் போன்றவை குடும்பப் பாரம்பரியமாக ரஹீம் பக்ஷுக்குக் கிடைத்தது. இது உண்மையில் பயனளித்த பெருங்கொடை. குறைந்த லாபமே என்றாலும் சீரான வளர்ச்சி அடைந்து வந்தார். யாருடனும் பிணங்காதிருக்கும் இயல்பு கொண்டிருந்ததால் வியாபாரம் வளர்ந்து கொண்டிருந்தது. எல்லோருக்கும் பிடித்தவராக மாறிப் போனார். ஆகவே உதவி தேவைப்பட்ட போதெல்லாம் கேட்காமலே கிடைத்தது. மெதுவாக வணிகம் நடந்தபோதிலும் நிற்காமல் அது முன்னேறியது.

கொடுக்கல், வாங்கலில் சண்டை சச்சரவு ஏற்பட்ட போதெல்லாம் ஒருதலைப் பட்சமாக அமைதி காத்தார். பிரச்சனைக்குரிய நபர்களுடனும் அவர் சமாதானமாகப் போய்க் கொண்டிருந்தார். இன்னும் அவர்களுக்காக பிரார்த்தனை செய்தார். பிறருடன் பிரச்சனை ஏற்பட்டால் தம் தந்தையின் ஆன்மா புதைக்குழியில் வேதனைப்படும் என்று நினைத்தார். அதனால் தன் மனதை அடக்கிக் கொள்வார்.

தவறான எண்ணங்கள் எழும்போதும் மனம் ஊசலாடும்போதும் தம் தந்தையின் வழிகாட்டுதலைக் கொண்டு உடனடியாக தம்மை சமன்படுத்திக் கொள்வார். ரஹீம் பக்ஷின் உயர் குணம், தன்னலமற்ற இயல்பு, நாணயம் போன்றவை அந்த கடைவீதியில் தனி மரியாதையை அளித்தன. இது பெரிய மனிதர் எவருக்கும் கிடைத்த தோற்றத்தைவிட அதிகம். அவரது மூலதனம் குறைவு. நேர்மை, வாக்கு மீறாமை போன்ற குணத்தால் கடைவீதியின் பெரிய முதலாளிகள் அவருக்குப் பொருட்களை கடனில் அளிக்க முன்வந்தனர்.

ரஹீம் பக்ஷின் வியாபாரம் பெருகியது. துணைக்கு ஆள் தேவைப்பட்ட போது தம்பிகளை அழைத்துக் கொண்டார். ஒருவர்

பின் ஒருவராக சகோதரர்கள் அனைவரும் கிராமத்திலிருந்து இவருடன் நகரத்திற்கு வந்துவிட்டனர். ஒரு கட்டத்தில் நான்கு தம்பிகளும் அண்ணனுடன் தங்கி ஒன்றாக உணவு உட்கொண்டு வணிகத்தைக் கவனித்துக் கொண்டனர். பிறகு நிர்வாக வசதிக்காக நான்கு பிரிவாகப் பிரித்துச் சுதந்திரமாக இயங்க வழிவகை செய்தார். கூட்டுக் குடும்பமாக மகிழ்ச்சியாக அவர்கள் வாழ்ந்து வந்தனர்.

ஆனால் சில ஆண்டுகள் கழிந்த நிலையில் தன் தம்பிகள் வியாபாரத்தை உரிய அக்கறையுடன் கவனிப்பதில்லை என்பதைக் கண்டார். ரஹீம் பக்ஷிடம் இரண்டு தேர்வுகள் இருந்தன. ஒன்று மீண்டும் வியாபாரத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஒழுங்காக பணிபுரியாத தம்பிகளைத் தொழிலிருந்து அகற்றிவிடுவது. இதனால் குடும்பம் சிதறும். பகைத் தோன்றும், அல்லது இரண்டாவது தேர்வு நிகழ்வுகளை அதன் போக்கில் செல்லவிட்டு. நடப்பதை வேடிக்கை பார்த்து விஷயத்தை பிறகுக் கவனித்துக் கொள்ளலாம் என்பது.

ரஹீம் பக்ஷ் தீவிரமாக சிந்தித்தார். கூட்டுத் தொழில் பாகப் பிரிவினை செய்தாக வேண்டிய கட்டத்தில் நுழைந்தது. மூன்றாவது திட்டம் தோன்றியது.

தன் சகோதரர்களை ஒன்றுகூட்டினார். நிலைமையின் தீவிரத்தை அவர்களுக்கு எடுத்துரைத்தார். பாகம் பிரித்து ஒவ்வொரு துறைக்கும் ஒருவரை பொறுப்பு ஏற்கும்படி கூறினார். சுதந்திரமாக அவை இயங்கத் தொடங்கும். இதனால் நம் தந்தையின் மனம் குளிரும். அனைவருக்கும் உரிய இலாபம் கிட்டும்.

அதோடு நம் தந்தையின் ஆன்மா சாந்தியடையும். இது அவரது ஆசிர்வாதங்களையும் நமக்குப் பெற்றுத் தரும் என்று அவர் கூறினார். நீங்கள் எங்களில் மூத்தவர், நாங்கள் உங்களுக்குக் கடன்பட்டிருக்கிறோம். உங்களுடைய தீர்ப்பை ஏற்கிறோம் என்றனர். பிறகு சீட்டுக் குலுக்கி எடுக்கும் முடிவுக்குக் கட்டுப்படுவதாக தம்பிகள் அனைவரும் ஒருமித்துக் கூறினர். வணிகம் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு தம்பிக்கும் ஒரு துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இப்பொழுது நான்கு சகோதரர்களும் வணிகத்தில் கவனம் செலுத்தினர். கூடுதல் ஒத்துழைப்பில் இயங்கத் தொடங்கினர். தத்தம் பிள்ளைகளையும் துணைக்கு அழைத்துக் கொண்டனர்.

இரவும் பகலும் உழைத்தனர். முன்பைவிட பரஸ்பர அன்பும் புரிந்துணர்வும் குடும்பத்தில் அரும்பியது. ஒருவருக்கு மற்றவர் எந்நேரமும் உதவத் தயார் நிலையில் இருந்தனர். நால்வரும்

தனித்தனி வீடுகளில் குடிபெயர்ந்தனர். முன்பைப் போல ரஹீம் பக்ஷ் இப்பொழுதும் மூத்த மகன் என்கிற முறையில் பெரிய மனிதர் என்று மதிக்கப்பட்டார். அவர் பேச்சுக்கு மறுபேச்சு எவரும் சொன்னதில்லை. குடும்பத்தில் தேவை எதுவும் உருவானால் அனைத்து மருமகள்களும் பேத்திகளும் இவரது பேச்சை அப்படியே ஏற்றுக் கொண்டனர்.

பொதுவாகப் பெற்றோர்கள் சொத்து, பணம் ஆகியவற்றை விட்டுச் செல்ல விரும்புவர். உண்மையில் நற்குணத்தை வாரிசுரிமையாக மரபில் கிடைக்கப் பெற்றவர்களே நற்பேறுள்ளவர்கள். முன்மாதிரிக்குரிய வாழ்க்கையை நிகழ்த்திக் காட்டியவர்கள். நேர்மையானக் கடும் உழைப்பு, மோதல் போக்கைத் தவிர்த்தல், கடமையைச் சரிவர நிறைவேற்றல், வெறும் கற்பனையில் மிதந்து கொண்டு இருப்பதைவிட நடைமுறை பயில, தற்கால லாபத்தைவிட எதிர்கால வாய்ப்புக்களைத் தொலைநோக்குடன் முன் உணர்வு கொள்ளுதல், பொருளியல் சொத்தைவிட அறநெறி மதிப்பீடு பெரிய மரபுரிமையாகும். ஆனால் மிகக் குறைவான தந்தைகளே இந்த உண்மையை அறிந்து வைத்துள்ளனர்.

## வேரிலிருந்து

"அவர் என்னைவிட மிகப் பெரும் மனிதர்; எனினும் அவரது தோளின்மீது நான் நின்று கொண்டிருக்கிறேன்" என்று George Bernard Shaw (1856 - 1950) ஒருமுறை Shakespeare (1546 - 1616)-ஐப் பற்றிக் கூறியிருந்தார்.

ஆங்கில இலக்கியத்துக்குப் பெரும் கொடையளித்த ஷேக்ஸ்பியர் இறந்து இரண்டு நூற்றாண்டுகள் கழிந்தபின் பிறந்தவர் பெர்னாட்ஷா. இந்த கட்டமைப்பின் மீது பிற்காலத்தில் வந்த பெர்னாட்ஷா மெருகேற்றி வளம் சேர்த்தார். உச்சிக்குக் கொண்டு சென்றார். ஷேக்ஸ்பியர் போன்ற முன்னோடிகளின் தோளின் மீது நின்றபடி இந்தச் சாதனை நிகழ்த்தப்பட்டது.

வாழ்க்கையின் அனைத்து துறைகளுக்கும் பொருந்தும் ஆக்கப்பூர்வ, புத்தாக்கச் செயல்முறையும் இதுவே. முன்னத்தி ஏர்களின் பங்களிப்பின்றி உரிய இலக்கை அடைவது சாத்தியமற்றது. பல நேரங்களில் நம் இலக்கு எது என்பதும்கூட நமக்குப் புரிவதில்லை.

எல்லா துறைகளிலும் எப்பொழுதும் நின்று கொண்டிருக்கிற இடத்திலிருந்து தொடங்குவதே பயணம். மாறாக இலக்கிலிருந்து

புறப்படுவதல்ல. வீட்டின் கீழே அடித்தளம் அமைக்கப்படா விட்டால் எதன்மீது மாடி நிலைகொள்ளும்? முன்னோர்கள் தமக்குரிய பங்களிப்பை அளித்திருக்கா விட்டால் பின்னால் வரக்கூடியவர்கள் தம் பயணத்தை எங்கிருந்து ஆரம்பித்திருப்பார்கள்?

காதல் கவிதைகளையும் ஆவேச உணர்ச்சியைத் தூண்டும் உரைகளை மட்டும் முன்னோர்களிடமிருந்து பெற்ற சமூகம் எப்படி இருக்கும்? அவர்களால்தர்க்கரீதியாக பகுத்தறிந்து செயல்பட முடியுமா? பகல் கனவு காணக்கூடியவர்களால் நடைமுறை உண்மைக்கு முகங்கொடுக்க முடியுமா? அடிப்படை சமூகக் கட்டுமானம் அற்றவர்களால் அரசியல் ஆசையில் வீணாவது மட்டுமே மிச்சம். கல்வி, தொழில், வணிகம், கால நடப்பு போன்ற அனைத்திலும் பிற மக்களைவிட பின் தங்கிவிட்டவர்களைப் பற்றி என்னவென்று சொல்ல? கோரிக்கை, பேரணி, ஆர்ப்பாட்ட அரசியல் என்பது என்ன? கேட்டுப்பெறும் இடத்திலிருப்பதைவிட தரக்கூடிய நிலைக்கு நம்மால் செல்ல முடியாதது ஏனென்று யோசித்ததுண்டா?

பின் தங்கிவிட்ட சமூகத்தின் பிற்கால சந்ததியால் பயணத்தைத் தொடரவே முடியாது. அவர்களின் முன்னோர்கள் எங்கு இடைநிறுத்தம் செய்தார்கள் எனக் கண்டறிந்து அங்கிருந்து தொடங்குவது ஒன்றே நம் முன்னிருக்கும் வாய்ப்பு. வெறும் வீர உரைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தால் நேரம் விரயமாகுமே தவிர வேறு பயன் எதுவும் கிடைக்கப்போவதில்லை. ஆக்கப்பூர்வ செயல்களால் மட்டுமே நற்பலன்கள் கிடைக்கும். சொற்களின் வயலிலிருந்து செயல்களின் அறுவடை கிடைக்காது. மரம் வேண்டுமெனில் விதையிலிருந்தே இயற்கை தொடங்குகிறது. இது இயற்கை தரும் மௌனப் பாடம். விதையிலிருந்து தொடங்கி மரம் வரை நடக்கும் பயணம் எல்லோருக்குமானது. மரத்திலிருந்து தொடங்கி மரத்திற்கு போக நினைப்பது இந்தப் புவியில் ஒருபோதும் நிகழாது.

ஐஐஐ

## எல்லைகளை வென்று

என் நண்பர் ஒருவருக்கு கண் பார்வையைப் பரிசோதிக்கும் வசதிகளைக் கொண்டிருக்கும் மூக்குக் கண்ணாடி கடையொன்று இருந்தது. அது மிகச் சிறியதாகவும் அதே இடத்தில் கண் பார்வையைப் பரிசோதிக்கும் இடம் பற்றாக்குறையுடனும் இருந்தது. பொதுவாக தூரப் பார்வையைப் பரிசோதிக்கும் அட்டவணை குறைந்தபட்சம் 18

அடிகள் தொலைவில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே ஒருவரின் கண் பரிசோதிக்கப்பட்டு அவருக்குரிய கண்ணாடியை வழங்க முடியும். ஆனால் இந்தக் கடையோ வெறுமனே 9 அடி நீளத்தை மட்டுமே கொண்டிருந்தது.

அந்தக் குறுகிய இடத்தில் எப்படி கண் பரிசோதனையைச் செய்கிறீர்கள் என்று கேட்டபோது "எளிய வழியுள்ளது" என்றார் நண்பர். எதிர் சுவற்றில் கண்ணாடி ஒன்றை மாட்டிவிட்டேன். நீங்கள் அங்கு அமர்ந்துள்ள இடத்திலிருந்து கண்ணாடியைப் பார்க்க வேண்டும். இப்பொழுது இடைவெளி இரட்டிப்பாகி விடும். பெரிய கடைகளில் செய்வதைப் போலவே இந்தச் சிறிய கடையிலும் கண் பரிசோதனை எந்தத் தடையுமின்றி செய்ய முடியும்" என்று கூறினார். உண்மையில் இந்தக் கடைக்காரர் தன் பிரச்சனையை அற்புதமாகத் தீர்த்துக் கொண்டுள்ளார்.

வாழ்க்கையிலும் கடைபிடிக்க வேண்டிய விதி இது. உங்களிடம் குறைவான வாய்ப்புகள் மட்டுமே உள்ளதெனில் உங்களின் வானம் குறுக்கப்பட்டு விட்டதென்று மனச்சோர்வு அடைய வேண்டியதில்லை. அறிவைப் பயன்படுத்தி 9 அடி கொண்ட கடையை 18 அடி கொண்ட கடையாக மாற்றிக் கொள்ள முடியும்.

உங்களது வீடு சிறியதாக இருந்தால் மேலே மாடி கட்டி அதை இரட்டிப்பாக விரிவுபடுத்திக் கொள்ள முடியும். குறைவான வளங்கள் இருக்கும்பட்சத்தில் நேர்மையான நடத்தையால் அதை மாற்ற முடியும். பல்கலைக்கழகப் படிப்பு உங்களிடம் இல்லையெனில் நற்குணத்தால் அதை ஈடுகட்டி விட முடியும். எதிரியை போராடித் தோற்கடிக்க முடியாதபோது மதிநுட்பத்தால் அவரைத் தன் கட்டுக்குள் வைக்க முடியும். உங்களது அரசியல் அதிகாரம் பறிபோகிறது எனில் பொருளாதரத் துறையில் முன்னேறிச் செல்ல முயல வேண்டும். சிறுபான்மையாக நீங்கள் எண்ணிக்கையில் குறைந்துபோனீர்களானால் ஒற்றுமை, அமைப்பு வலிமையால் பெரும்பான்மைக்கு ஈடுகொடுக்க முடியும்.

எல்லாச் சிறிய கடைகளும் பெரிய கடைகளாகும் சாத்தியம் கொண்டவையே. சிறியதாகக் கருதும் வரை மட்டுமே எக்கடையும் சிறிய கடையாகும். மதிநுட்பத்தால் பெரிதாக்கிவிடும் பட்சத்தில் அது சிறிய கடையே அல்ல.

## கல் தந்த பாடம்

ராஜஸ்தானில் ஒரு மாணவர் பள்ளித் தேர்வில் தேர்ச்சி பெறவில்லை. மறுதேர்வு எழுதினார். அப்பொழுதும் அவருக்குத் தோல்வியே கிடைத்தது. விரக்தியடைந்து தம் குடும்பத்தினரிடம் முகம் காட்ட முடியாமல் வீட்டை விட்டு வெளியேறினார்.

இலக்கற்ற பயணம் அது. அவருக்குத் தாகம் எடுத்தது. வழியில் ஒரு கிணற்றைச் சுற்றிப் பெண்களும், குழந்தைகளும் பானையில் தண்ணீர் நிரப்பிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் இரண்டு மண்பானைகள் இருந்தன. அங்கு ஆர்வமூட்டும் ஒன்று காணக் கிடைத்தது. சிறிய விஷயமாக இருந்தபோதிலும் அதில் பெரிய செய்தி இருந்தது. தாகம் மறந்துபோகும் அளவுக்கு அதனால் அவர் ஈர்க்கப்பட்டார். தேடி வந்த தண்ணீரைவிட இது மிகப் பெரியதாக இருந்தது. நடந்த விஷயம் எளிய ஒன்று.

கிராமவாசிகள் கிணற்றில் தண்ணீரை இறைத்துச் செல்ல வரும்போது தம்முடன் இரண்டு பானைகளை கொண்டு வந்தனர். ஒரு பானையை கிணற்றின் அருகிலுள்ள கல்லின் மீது வைத்துவிட்டு இன்னொரு பானையை கிணற்றினுள் விட்டனர். இவ்வாறு நீரிறைப்பது நடந்து கொண்டு வந்திருக்கிறது. பானை வைத்த கல் மீது அடையாளமாக சிறு பள்ளம் உருவாவதைஅந்த மாணவர் கண்டார். மண் பானையாகவே இருந்தபோதும் தொடர்ந்து கல்லின் மீது வைக்கும் நிலையில் அப்பாறையில் பானையின் தடயம் உருவாகியுள்ளது எனில் ஒரே இடத்தில் கடினமான கற்பாறை மண்பானைக்கு இடமளித்து வடுவைப் பெற்றுக்கொள்கிறது. இது அவரது சிந்தனையைத் தூண்டியது. நான் ஏன் படித்து தேர்வில் வெற்றி பெற முடியாது? என் இயலாமையை கடும் முயற்சியால் வெற்றி கொள்ள முடியும் என்பதை விளங்கிக் கொண்டார்.

இந்த எண்ணம் ஏற்பட்டவுடன் அந்த மாணவர் தம் பயணத்தில் மேற்கொண்டு செல்ல முடியாமல் நின்றார். உடனே வீடு திரும்பினார். மீண்டும் படிக்கத் தொடங்கினார். மேல்நிலைப் பள்ளித் தேர்வு நான்காம் முறை எழுதினார். மூன்று முறை தோற்றவர் இப்பொழுது முதல் நிலை மாணவனாகத் தேர்ச்சி அடைந்தார்.

இந்த அனுபவம் அவரது வாழ்க்கைத் திசையைத் திருத்தி அமைத்தது. தோல்வியைத் தாங்கிக் கொள்ளமுடியாமல் வீட்டைவிட்டு ஓடி வந்தவர், சாதாரண பள்ளிக்கூட தேர்வுகளில் தோற்றுப் போன மாணவன் இன்று M.A. பட்ட மேற்படிப்பில் சிறந்து விளங்கி வெளிநாடு செல்ல கல்வி உதவித் தொகையும் பெற்று Ph.d. ஆய்வையும் முடித்தார்.

இது ஏதோவொரு கிராமத்தில் நடந்த தனிப்பட்ட நிகழ்வல்ல. எல்லா ஊர்களிலும் இந்தக் கற்பாறை இருக்கக் கூடும். தோல்வியிலிருந்து வெற்றி பெறுவது என்பது பற்றி எவர் வேண்டுமானாலும் படிப்பினைகள் பெறலாம். கூர்ந்து கவனிக்கக் கூடியவர்கள் தம் அருகில் இதுபோன்ற படிப்பினை அளிக்கும் "கற்பாறையை"க் காணக்கூடும். ஒரு சாதாரண கல் ஒரு இளைஞருக்கு சரியான வழியைக் காட்டியது.

## முன்னறிதலின் மேன்மை

1970களில் (பெயர் குறிப்பிடாத) இந்திய அரசியலர் ஃபிரான்ஸ் சென்றிருந்தார். ஆளும் கட்சியான Gaullist கட்சியின் தலைவருடன் சந்திப்பு நிகழ்ந்தது. அப்பொழுது நடந்த உரையாடலை 18-07-1983 தேதியிட்ட The Times of India நாளிதழ் கீழ்க்கண்டவாறு வெளியிட்டிருந்தது.

பாரிஸ்சில் குறிப்பிடத்தக்க யாரையும் தாங்கள் காண வேண்டுமா என்ற அங்கிருந்த உள்ளூர் Gaullist கட்சி நிர்வாகி கேட்டிருக்கிறார்.

"Charles de Gaulle (1890 - 1970) அவர்கள் என் மனங்கவர்ந்த தலைவர், அவரைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்குமா?" என்று இந்திய விருந்தினர் கேட்டிருக்கிறார்.

"அவர் ஏற்கனவே இறந்துவிட்டார்" என பதிலளித்திருக்கிறார்.

"என்ன! யாரும் இதை இந்தியாவில் என்னிடம் கூறவில்லையே" என்றிருக்கிறார்.

"சரி! உங்களுக்கு இது தெரிந்திருக்கலாம் என்று தூதரகம் கருதியிருக்கும்" என்று பதிலளித்தாராம் பிரெஞ்சுக்காரர்.

எல்லாமே வாயால் உச்சரிக்கப்பட்டு விளக்கப்படுவதில்லை என்பது இதிலிருந்து விளங்குகிறது அல்லவா! சில தகவல்களை நாமே தேடி அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவருக்குப் பாதி செய்தி தெரிந்திருக்கும் என்று உணர்ந்து மீதி மட்டுமே கூறப்படும். இந்த முன் பாதித் தகவல் யாரிடமில்லையோ அவரால் முழு தகவலை ஒருபோதும் உணரமுடியாது.

எவ்வளவு உயர்ந்த விவரங்களும் தர்க்க நியாய வாதங்களும்கூட விவரமற்ற மனிதர்களுக்குப் பயனைத் தராது. இந்த கிரிக்கெட்

வீரர் 'செஞ்சுரி' அடித்தார் எனக் கூறினால் அந்த விளையாட்டில் நூறு ஓட்டங்கள் ரன் எடுப்பதை 'செஞ்சுரி' என்ற அளவுக்காவது தெரிந்திருக்க வேண்டும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு 'செஞ்சுரி' தேவையெனில் அது பொருளற்ற பேச்சு. யாராலும் விளங்கிக் கொள்ள முடியாதது. சமூகக் கட்டமைப்பை (நூறு என்ற) செஞ் சுரியுடன் பொருத்திப் பேசும் வழக்கம் இல்லை.

ஐஐஐ

## முறையிடாத பொறுமை

முகலாய அரசர் Shahjahan (1592–1666) ஆட்சிக் காலம் (1628–1658); அவருடைய மகன் Aurangazeb (1618–1707) ஆட்சிக் காலம் (1658–1707). அரசியல் கருத்து வேறுபாடுகளால் இளவரசன் அவ்ரங்கஸேப் அரசராக இருந்த ஷாஜஹானை பொறுப்பிலிருந்து அகற்றிவிட்டுத் தாமே அரசராக பட்டமேற்றுக் கொண்டார். ஷாஜஹான் ஆக்ரா கோட்டையிலிருந்து தாஜ்மஹாலைப் பார்த்துக் கொண்டு கவிதை பாடியபடியே நாட்களைக் கழித்து வந்தார். அப்பொழுது வாழ்வின் அடிப்படைத் தேவைகளும் அவருக்குச் சரிவர செய்து தரப்படவில்லை என்று கூறப்படுகிறது. அதாவது 1658இல் சிறைப்பட்ட ஷாஜஹான் 74வது வயதில் 1666ஆம் ஆண்டு இறந்து போனார்.

"கடைசி காலத்தைத் தொழுகையிலும் தியானத்திலும் மகள் Jahanara-வின் அன்பிலும் கழித்தவருக்கு ஆன்மிகம் ஆறுதலைத் தந்தது.

An Advanced History of India இந்திய வரலாறு என்கிற நூலில் Dr.R.C.Majumdar, Dr.H.c.Raychaudhuri and Dr.Kalinkar Dutta பக்கம் 477இல் எழுதியுள்ளார்.

சிறை வாழ்வு வெறுத்துப் போன ஒரு கட்டத்தில் ஷாஜஹான் தன் மகனுக்கு செய்யுள் வடிவில் ஒரு செய்தி அனுப்பினார்.

என்னைக் கொன்றுவிடு, பணம் கொடு அல்லது விடுதலை செய் என்பது அதன் பொருளாகும்.

"வலையில் சிக்கிவிட்ட பின் பொறுமையாக இருப்பதே அறிவாளி பறவைக்கு அழகு" என்று பதில் அனுப்பினார் அவ்ரங்கஸேப்.

இது உண்மையா, கற்பனையா என்பது தெரியவில்லை. ஆனால் இதில் படிப்பினைக்குரிய பாடம் ஒன்றுள்ளது. தனி மனிதத் தவறுகள், விபத்து போன்ற காரணங்களால் வலையில்

சிக்கிக்கொள்ள நேரிடுகிறது. அதிலிருந்து உடனடியாக விடுபடுவது கிட்டத்தட்ட சாத்தியமற்றதாகவும் சகிக்க முடியாத வேதனையிலும் ஆழ்த்தி விடுகிறது.

இந்தச் சூழலில் பதற்றமடைந்து விடுபட செய்யும் முயற்சிகள் பெரிய ஆபத்தில் கொண்டு விட்டு விடுகின்றன. வலையில் சிக்கிய பறவை அதிகமதிகம் இறக்கை அடிப்பது மேலும் தன்னைச் சிறைப்படுவதில்தான் முடியும். அதேபோல மிகவும் இக்கட்டான சூழலுக்குள் அகப்பட்டால் அவசரப்பட்டு முன் யோசனையின்றி ஏதும் செய்துவிட்டால் அது சுருக்குக் கயிறு போலாகி விடும். இது தனி நபர், சமூகம், நாடு என எல்லோருக்குமானது.

ஐஐஐ

## நேர்கொண்ட பார்வை

இஸ்லாமிய ஆன்மிக மரபில் Shafeeq Balkhi (718 - 777) மற்றும் Ibrahim Adhm (810) ஆகியோர் மிக முக்கியமான சூஃபி ஞானிகள். இருவரும் ஏறக்குறைய சமகாலத்தைச் சேர்ந்தவர்கள். ஷஃபீக் பல்கி பல மாதங்கள் நீடிக்கும் வணிக பயணமொன்றில் செல்ல இருந்ததால் தன் நண்பர் இப்ராஹிம் அத்ஹமை சந்தித்திருக்கிறார். ஆனால் ஒரு சில நாட்களிலேயே ஷஃபீக் பல்கியை பள்ளிவாசலில் இப்ராஹிம் அத்ஹம் கண்டார்,

‘இவ்வளவு விரைவில் தாங்கள் திரும்பி வந்து விட்டிருக்கிறீர்களே’ என்று கேட்டார். அதற்கு ஷஃபீக் பல்கி “இந்தப் பயணத்தில் மக்கள் அதிகமில்லாத பாழடைந்த இடமொன்றில் கூடாரம் அடித்துத் தங்க நேரிட்டது. யாரும் அங்கு வசித்திருக்கவில்லை. கண் பார்வையற்ற, பறக்கவும் வலுவில்லாத பறவை ஒன்றைக் கண்டேன். அதன் மீது எனக்கு இரக்கம் ஏற்பட்டது. ஆள் நடமாட்டமில்லாத ஓர் இடத்தில் இப்பறவைக்கு எங்கிருந்து உணவு கிடைக்கும், கைவிடப்பட்ட இது எப்படி உயிர் வாழும் என்று எனக்கு வியப்பு மேலிட்டது. இந்தச் சிந்தனையில் இருக்கும்போதே அங்கு வேறொரு பறவை வந்தது. அதன் அலகில் ஏதோ தானியம் இருந்தது. ஊனமுற்ற பறவையின் முன் அதைக் கொட்டியது. ஊனமுள்ள பறவை அதை கொத்தித் தின்றது. பிறகு ஆரோக்கியமான பறவை எங்கோ பறந்து சென்று விட்டதைப் பார்த்தேன்.

உடனே,‘இறைவன் மேன்மையானவன்! அவன் அனைவருக்கும் உணவளிப்பவன்! என்று துதித்தேன் ”என்றார் ஷஃபீக் பல்கீ. சிந்தனையில் ஆழ்ந்து ஏன் ஊர் ஊராகச் சுற்ற வேண்டும். இந்த ஊனமுற்ற பறவைக்கு உணவளித்த இறைவன் எனக்கும்

உணவளிப்பான். ஆகவே என் பயணத்தைத் தொடராமல் இடைநிறுத்தி வீடு திரும்பிவிட்டேன்” என்றார். இதைக் கேட்ட “இப்ராஹிம் அத்ஹம் ‘என் நண்பனே! நீ ஏன் ஊனமுற்ற பறவையோடு உன்னை உருவகித்துக் கொண்டாய். இன்னொரு பறவையின் மீது மனமிரங்கி அதற்கும் உணவைத் தேடியெடுத்து வந்து கொடுத்த நன்மனமுள்ள சிறந்த பறவை போல் நீ ஏன் ஆகக் கூடாது, அது தானும் உண்டு, பிறருக்கும் உதவி செய்கிறதே என்றார். இதைக் கேட்ட ஷஃபீக் பல்கி இப்ராஹீம் அத்ஹமின் கைகளைப் பற்றி முத்தமிட்டார். ‘அபு இஸ்ஹாக்! என் கண் மீது படர்ந்திருந்த திரையை விலக்கி விட்டீர், தாங்கள் சொன்னதே சரியானது’ என்றார்.

ஒரே செய்தி, ஒரே நிகழ்வு. ஒருவருக்கு அது உற்சாகமிழந்த எடுத்துக்காட்டாக இருந்தது. மற்றவருக்கோ அது ஆர்வமூட்டும், நேர்மறை எடுத்துக்காட்டாக மாறியது. குறிப்பிட்ட நிகழ்வை ஒருவர் எந்தக் கோணத்தில் எடுத்துக் கொண்டார் என்பதில் அம்மனிதரின் தரம், தகுதி, திறன் அடங்கியுள்ளது. ஒரு பார்வையில் சரியாகத் தெரிவது இன்னொரு கோணத்தில் தவறாகத் தோன்றலாம். எதிர்மறையாக எடுத்துக் கொள்வதும் நேர்மறையாக அணுகுவதும் சம்பந்தப்பட்ட நபரின் அறிவும், ஞானமும் அடைந்திருக்கும் நிலையைப் பொறுத்தது.

## தற்கொலை

பெங்களூரைச் சேர்ந்த Iana Devangaddy இலண்டன் மாநகர கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திற்குச் சென்ற போது பிற்காலத்தில் இந்தியாவின் பிரதமராக வந்த Jawahral Nehru (1889 - 1964) அவர்களுடன் சக மாணவராக படித்தார். இருவரும் நெருங்கிய நண்பர்களானார்கள். அவரது மகன் Deren Angaddy சிறுவனாக இருந்த போதிருந்து தன் தந்தையிடம் நேரு அவர்களைப் பற்றி நிறைய கேட்டு வளர்ந்தார். நேருவை நகலெடுக்கும் ஆர்வம் அவரை நடிகராகவும் மாற்றியது. Attenborough (1923 - 2014) அண்ணல் காந்தியடிகளைப் பற்றிய திரைப் படமொன்றை 25 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கத் திட்டமிட்டார். அதில் நேருவின் பாத்திரத்தில் நடிக்க Deren Angaddy தேர்வு செய்யப்பட்டார்.

ஆனால் சில காரணங்களால் Roashan Seth அவ்வேடமேற்க Deren Angaddyயின் வாய்ப்பு பறிபோனது. Deren Angaddyக்கு அந்தப் பாத்திரம் என ஆரம்பத்தில் சொல்லப்பட்டதால் அவர் கடுமையாக

தன்னைத் தயார்படுத்தி வந்தார். அதனால் தரம் மிக்க, எதார்த்த நடிப்பைத் தன்னால் மேற்கொள்ள முடியும் எனக் கருதினார். இந்தத் திடீர் முடிவு அவர் எதிர்பாராதது. Deren Angaddy துக்கம் தாளாமல் 05-12-1981 அன்று தற்கொலை செய்து கொண்டார். Hindustan Time 16-09-1986

Deren Angaddy ஏன் இவ்வளவு தீவிரமான முடிவை எடுத்தார். கடுமையாக உழைத்து வளர்த்த திறமை பயன்படுத்த முடியாமல் போனது அவரை வாட்டியது. சீண்டப்பட்ட அகமும், மன உளைச்சலும் வெறுமையும் கடைசியில் உயிரைப் போக்கிவிட்டது.

மனிதர்கள் கடும் முயற்சி செய்து தம் திறமையை வளர்த்துக் கொள்கின்றனர். விலை மதிப்பற்ற அது பயன்பாட்டில் வராமல் போனாலும் அது புதையலைப் போல அவர்களுக்குள் தங்கியிருக்கும். வீணாகிவிட்டது என்கிற பேச்சுக்கு இடமில்லை. தனித் திறனை நிரூபிக்க வேறு ஏதும் வாய்ப்பு அமையும் போது அதன் பயன்மதிப்பை முழுமையாக வசூலித்துவிட முடியும். நம்பிக்கை இழந்து மனம் தளர்ந்துவிட வேண்டியதில்லை.

ஐஐஐ

## ஆசிரியர் இன்றி

என் இஸ்லாமிய நண்பர் ஒருவர் மதப்பற்றுள்ளவர். அவரது மகள் சில ஆண்டுகளுக்கு முன் நவீன பள்ளிக்கூடத்திற்குச் செல்ல விரும்பினாள். அவள் குறிப்பாக ஆங்கிலக் கல்வியில் ஆர்வம் காட்டினாள். ஆனால் அது அனுமதிக்கப்படவில்லை. அதற்காக நேரத்தை வீணாக்காமல், எதார்த்த நிலவரத்திற்கு முகங்கொடுத்து சுயமாகவே கற்கத் தொடங்கினாள். தொடர் முயற்சியாலும் கடின உழைப்பாலும் மேல்நிலைப் பள்ளிக் கல்வியைத் தனித்தேர்வு முறையில் எழுதினாள்.

துரதிர்ஷ்டவசமாக ஒரு பாடத்தில் முதல் முறையாகத் தோற்றுப் போனாள். அதற்காக அவள் வருந்தவில்லை. இன்னும் கடினமாக உழைத்து மீண்டும் தேர்வு எழுதி நல்ல மதிப்பெண்கள் பெற்றாள். அருகிலிருந்த குடியிருப்புவாசிகளிடம் சிறிய உதவிகள் மட்டுமே கிடைத்து வந்தன.

+2 தேர்ச்சி அடைந்த பின் B.A., M.A., என முடித்த பின்பும் தன் திறமைகள் குறித்து அவள் திருப்தியுறவில்லை. பல்கலைக்கழப் பட்டம் பெற்றிருந்தும் ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுத வரவில்லை. 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு' என நம்பி முயற்சி எடுத்தாள்.

மனவுறுதியும் அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்டு இலண்டனில் பதிப்பிக்கப்பட்ட ஒரு நூலின் துணையுடன் ஆங்கிலம் கற்கத் தொடங்கினாள்.

அதை ஓர் ஆங்கிலேயர் பிற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட அயல் நாட்டினருக்காக எழுதியிருந்தார். ஆசிரியர் எவருமில்லாத நிலையிலுள்ளவர்கள் தாமாகவே கற்கும் விதமாக பாடங்கள் எளிமையாக அமைக்கப்பட்டு இருந்தன. தன் தாய் மொழியிலுள்ள பத்தியை மாணவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பயில வேண்டும்.

பிறகுமூலத்துடன் அது ஒப்பிட்டுப் பார்க்கப்படும். மனனத் திருத்தங்கள் சரி செய்யப்படும். இது இரண்டாண்டுகள் நீடித்த பயிற்சி. வெவ்வேறு தலைப்புகளில், கட்டுரைகள் பல்வேறு பத்திரிகைகளிலிருந்து எடுக்கப்பட்டு இவ்வாறு மொழிப் பயிற்சி செய்யப்பட்டது.

தனியாக எல்லா கடிதப் போக்குவரத்துகளையும் வெற்றிகரமாகக் கையாளும் அளவுக்கு மேலதிகமாக நாளேடுகளிலும், பருவ இதழ்களிலும் கட்டுரைகள் எழுதும் நிலைக்கு வளர்ந்துவிட்டாள். தன் சகோதரரின் ஏற்றுமதி வணிகத்தில் சேர்ந்து அங்குத் தன் திறமையைக் காண்பிக்கத் தொடங்கினாள்.

இந்த இளம்பெண் பயன்படுத்திய உத்தியை வேறு எவரும் எந்தவொரு அன்னிய மொழியைக் கற்கவும் பயன்படுத்தலாம். நம்மை உச்சிக்குக் கொண்டு செல்லும் பல்வேறு மரபான புதிய வழிகள் ஏராளம் உள்ளன.

சில கதவுகள் பூட்டப்பட்டிருக்கலாம். ஆனால் வேறு பல கதவுகள் திறந்தே கிடக்கின்றன. அவற்றைக் கண்டடைந்து நம் இலக்கை அடைவதே வாழ்க்கையின் சவால். யாரெல்லாம் உஷாராக தன்னைச் சுற்றியுள்ள வாய்ப்புகளைக் கண்டு கொள்கிறார்களோ அவர்களே வெற்றியாளர்கள்.

வாய்ப்பு கிடைக்காதது தோல்வி அல்ல. இருக்கும் வாய்ப்புகளை மனவுறுதியுடனும் ஆற்றலுடனும் பற்றிக்கொள்ளும் மனம் இல்லாமல் இருப்பதே தோல்வி.

ஜஜஜ

# அதே செலவில்

வறுமையில் வாழ்ந்து கொண்டிருந்த அறிஞர் ஒருவருக்கு மகள் ஒருத்தி இருந்தாள். அவர் தம் ஆயுள் முழுவதையும் வாசிப்பு, எழுத்து என கழித்தவர். மகளின் திருமணத்திற்கு எதுவும் செலவழிக்கும் நிலையில் அவர் இல்லை. இருந்தபோதிலும் எஞ்சியிருந்த 10,000/ ரூபாய்க்கான காசோலையை மணமக்கள் கையில் கொடுத்தார். மகளை மாமியார் வீட்டிற்கு அனுப்புகையில் பிரியாவிடை கொடுத்து "இதுவே என் முழு ஆயுளின் சேமிப்பு; இந்தப் பணத்தைச் சீதனமாக வைத்துப் புதிய வாழ்க்கை அமைத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

மணமக்கள் மகிழ்ச்சி அடைந்து நன்றிப் பெருக்குடன் பணத்தைப் பெற்றுக் கொண்டனர். தாமதிக்காமல் சிறிய தொழில் ஒன்றில் முதலீடு செய்து கடுமையாக உழைத்தனர். தொழிலில் இடர்களுடன் வெவ்வேறு கட்டத்தைக் கடந்தனர். அவர்கள் இருவருமே நம்பிக்கை இழக்கவில்லை. பிறகு நிலைமை ஓரளவு சீராகி இலாபம் ஈட்டினர். வறுமையின் நாட்கள் விடைபெற்று, குடும்பத்தில் மகிழ்ச்சி குடியேறியது.

திருமணம் என்பது மனித வாழ்க்கையில் பொறுப்பான செயல்பாடு. அதை ஆடம்பரக் கொண்டாட்டமாக மாற்ற வேண்டியதில்லை. அது ஆணும் பெண்ணும் ஒருவர் மற்றவருக்குத் துணையாக இருப்போம் என உறுதியளித்துக் கொள்கிற நாள். நண்பர்கள், உறவினர்கள், குடியிருப்புவாசிகளிடம் தம் செல்வப் பகட்டை விருந்தின் மூலம் காட்ட வேண்டியதில்லை.

"அவர்கள் உங்களிடம் உறுதியான வாக்குறுதியைப் பெற்று நீங்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து இன்பம் அனுபவித்திருக்கும் நிலையில் நீங்கள் அதனை எவ்வாறு திரும்பப்பெற முடியும்" (திருக்குர்ஆன் 4:21)

திருமண நிகழ்வு எளிமையாகவும் சிக்கனமாகவும் இருப்பது அவசியம். பகட்டு அறவே இல்லாதிருப்பதும் முக்கியம். பணம் மேற்கூறிய வழியில் பயனுள்ளதாக செலவழிப்பது சிறப்பு. இளம் தம்பதிகள் வாழ்க்கையைத் தொடங்க இருக்கும் நேரத்தில் அளிக்கப்படும் உதவிகள் முன்னேற்றத்துக்கு உதவிக்கரமாக இருக்க வேண்டும். குடும்ப நிலைத்தன்மை நாட்டின் பொருளாதார கட்டமைப்புடன் நேரடி தொடர்புடையது. திருமண ஆடம்பரங்கள் நாட்டின் வளத்தை சூறையாடுவதாகவே பொருள் கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே இதுபோன்ற நிகழ்வுகளை தவிர்ப்பதன்

மூலம் தேச கட்டுமானம் திடமாகும். உண்மையில் வீண் செலவுகளைத்தவிர்த்துக் கூடுதல் பயனளிக்கும் நிகழ்ச்சி இது.

## சூழலைக் கருத்தில் கொண்டு

டெல்லி அகமதாபாத் மெயில் ரயில் வண்டி 19, ஜுலை 1981ஆம் தேதி அட்டவணையில் இருந்த குறித்த நேரத்தில் புறப்பட்டது. வழியில் Mahsanah என்கிற ஊரில் முக்கால் மணிநேரம் தாமதமாகி விட்டிருந்தது. ஆகவே நேரத்தை ஈடுகட்ட ஓட்டனர் வண்டியின் வேகத்தைக் கூட்டினார். Dangarwa என்னும் ஊரை நெருங்க இரண்டு கி.மீ. இருந்தபோது சற்று தொலைவில் இருப்புப் பாதையில் விரிசலும் கோளாறும் இருப்பதை டிரைவர் கண்டுபிடித்து விட்டார். ஆனால் வேகத்தைக் கட்டுப்படுத்த பிரேக் அடித்தபோதும் வண்டியை நிறுத்த முடியவில்லை. இன்ஜினும் பனிரெண்டு பெட்டிகளும் தண்டவாளத்திலிருந்து தடம் புரண்டு அருகிலிருந்த பள்ளத்தில் கவிழ்ந்தன. சிலர் இறந்துவிட்டனர், பலர் காயமுற்றனர்.

நிலவரத்தை அறியாமல் உங்கள் வாழ்க்கை வண்டியை நினைத்த நேரத்தில் வேகத்தில் எடுத்துவிட முடியாது. காரணம் இந்த உலகில் இருப்பது நீங்கள் மட்டுமல்ல. உங்களுடன் பலரும் பிணைக்கப்பட்டு உள்ளனர். உங்கள் செயலூக்கம் பிறருடன் மறைமுகமாகத் தொடர்பு கொண்டுள்ளது. இதனால் புறச்சூழலோடு தம்மைப் பொருத்திக் கொண்டே நம் வண்டியை இயக்க வேண்டியுள்ளது. இதைக் கவனத்தில் கொள்ளாவிட்டால் ஏதாவதொரு காரணி எதிர்பாராமல் குறுக்கிட்டு நம் திட்டங்களைத் தவிடுபொடியாக்கி விடும்.

நம் சமகாலத்தில் முஸ்லீம்களின் பெரிய திட்டமிடல்கள் எல்லாமே ஏன் பலனளிக்காமல் போயின. ‘எதிரிகளின் சதித் திட்டம்’ என்கிற உடனடி காரணத்தை கிட்டத்தட்ட அனைவருமே கூறி வருகின்றனர். ஆனால் இது மட்டுமே காரணம் என்பது அறியாமை; பொறுப்பின்மை.

வழியில் தண்டவாளத்தில் விரிசல் ஏற்பட்டிருப்பதைக் கண்டுகொள்ளாமல் வேகமெடுத்த இரயில் இன்ஜின் போல முஸ்லிம் சமூகம் எந்த முன்னேற்பாடுகளும் இல்லாமல் சென்று கொண்டுள்ளது.

வண்டி என்னவோ உங்களுடையதுதான். ஆனால் தண்டவாளம் எல்லோருக்கும் பொதுவானது. விரிசலையும் வேறு காரணங்களையும் குறுக்கீடுகளையும் நீங்கள் சந்திக்க நேரிட்டால்

அதை எதிர்கொள்ள மிதமான வேகம் அவசியம். இதைப் பொருட்படுத்தாமல் உலகில் வெற்றி சாத்தியமில்லை.

இந்த எதார்த்த நடைமுறையைப் பொருட்படுத்தா விட்டால் உங்களது வாழ்க்கை இரயில் இலக்கிற்குப் போய்ச் சேருவதில் எந்த உறுதியும் இல்லை. தம் செயல்பாடுகளில் தோல்வி அடைந்துவிட்ட பின் ‘இன்னாரின் சதி’ என்று முறையிடுவது மட்டுமே அவர்களின் தலைவிதி.

## தொடங்குவதற்கு முன்பே

இஸ்லாமிய நம்பிக்கையின்படி புனித நகரங்களில் ஒன்று மெக்கா மாநகரம். அங்கு ‘ஜபலுன்நூர்’ எனப்படும் ‘ஒளி மலை’ உச்சியில் ‘ஹிரா’ குகை உள்ளது. நபிகள் நாயகம் தன் பிரச்சாரப் பயணம் தொடங்கும் முன்னர் தனித்திருக்கும் பொழுதுகளை இங்கு கழித்துக் கொண்டிருந்தார். ஆகவே புனிதப் பயணம் செல்லும் முஸ்லிம்கள் மெக்கா நகரத்திலிருந்து டாக்சி போன்ற வாடகை வாகனங்களில் இந்த மலையடிவாரம் வரை சென்று பிறகு மலையுச்சியிலுள்ள ஹிரா குகை வரை நடந்து செல்வது வழக்கம். சிலர் பக்தியின் மிகையுணர்வில் செருப்பு அணிவதைத் தவிர்த்து விடுகின்றனர். காலையில் புறப்பட்டபோது வெறுங்காலில் மேற்கொண்ட நடைப் பயணத்தில் கஷ்டம் தெரியவில்லை. ஆனால் குகையைப் பார்த்துவிட்டு கீழே இறங்கும்போது உச்சிவெயில் சுட்டெரித்தது. கீழே கற்பாறைகள். வெறுங்காலுடன் மலையேறியவர்களின் பாதங்களில் கொப்புளம் ஏற்பட்டுச் சிரமங்களை அனுபவித்தனர்.

மலைப் பயணம் வாழ்க்கை எதுவாக இருந்தாலும் ஒரு விஷயத்தில் ஈடுபடுவதற்கு முன்பு அதன் முடிவு எப்படி இருக்கக் கூடும் என்பதை கணிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அந்த முன்னுணர்வு இல்லாதவர்களின் புனிதப் பயணி என்பதற்காக இயற்கை தன் விதிகளில் சமரசம் செய்து கொள்வதில்லை. செயல்களின் நோக்கம் கெட்டதோ, நல்லதோ எதுவாக இருந்தாலும் வினைப் பயனிலிருந்து சலுகையும் கிடைப்பதில்லை. நேர்மையாளன் தவறுகளின் விளைவிலிருந்து பாதுகாக்கப்படுவர் என்றோ விதிவிலக்கு பெற்றவர் என்றோ பொருளில்லை.

# மகிழ்ச்சியைப் பெறுவது எப்படி?

மகிழ்ச்சி என்பதைப் பெரும்பாலோர் உடனடியாகவோ தாமதமாகவோ அடைய வேண்டிய இலக்கு என்று கருதியுள்ளனர். ஆனால் “மகிழ்ச்சி ஒருபோதும் இலக்கு அல்ல, மாறாக அது பயண முறையாகும்” என்கிறார் Margaret Lee Runbeck. மகிழ்ச்சியுற மேற்கொள்ளப்படும் எல்லா உழைப்பும் பரிதாபமாகத் தோல்வியைத் தழுவி விடுகின்றன.

செல்வத்தைச் சேகரித்தல், உடைமைகளைச் சொந்தமாக்கிக் கொள்ளல், பகட்டாக உடையணிதல், பெரிய நட்பு வட்டத்தைப் பெற்றிருத்தல், இன்பச் சுற்றுலா மேற்கொள்ளல் என எத்தனையோ விஷயங்கள் உள்ளன. இவற்றால் நாம் அவசியம் மகிழ்ச்சியாக இருக்கக் கூடும். அமைதியின்மை, போதாமை, விரக்தி போன்ற உணர்வு பெரும்பாலும் ஒருவர் கற்பனை செய்வதைவிடக் கனமானது. ஏனென்றால் மகிழ்ச்சியைப் பல்வேறு வகையான இன்பங்களின் தொடர்ச்சியாக நினைக்கும் தவறை நாம் செய்துள்ளோம். அதுபோன்ற ஓர் இலக்கை நோக்கிப் பாடுபட வேண்டிய ஒன்றாகவும் கருதிக் கொள்கிறோம்.

ஆனால் இந்த இலக்கில் நாம் எவ்வளவு அதிகமாக நம்மைக் கொண்டு செல்கிறோமோ அவ்வளவு அது நம் பிடியிலிருந்து நழுவிச் சென்றுவிடுகிறது. சிரமங்கள், பொறுப்புகள், விரும்பத்தகாத தன்மையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அடைய முடியும் என்ற கருத்தும் உள்ளது. ஆனால் இந்த எதிர்மறை அணுகுமுறை இன்பங்களுக்குப் பிறகு கவலையைச் சரிவர கையாள முடிவதில்லை என்பதால் சிறந்த முடிவுகளை அளிக்காது. இந்தப் பிரச்சனையின் வினோதமான அம்சம் என்னவென்றால், பெரும்பாலும் தங்கள் சொந்த மகிழ்ச்சியைப் பற்றி ஒருபோதும் எண்ணாதவர்களே மிகவும் விரும்பத்தக்க மனநிறைவு அடைகிறார்கள்.

பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்த கர்மவீரர்கள் குறிக்கோளாக இல்லாமல் நடவடிக்கையில் இறங்கிய செயல்வீரர்கள் மகிழ்ச்சி அடைவர். எதிர்பாராத விதமாக இவர்களால் மகிழ்ச்சியைக் கண்டறியமுடியும்.

மகிழ்ச்சி உண்மையில் வரையறுக்கப்படாத எளிதில் புரிபடாத பூடகமான மனநிலை. மகிழ்ச்சியாகவே இருக்கக் கூடாது என்றும் பெரும் இழப்பு, துன்பகரமான சூழ்நிலைகளில் வாழ வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம் என்றும் எண்ணிக் கொள்வதாக வைத்துக் கொள்வோம். இந்தச் சூழ்நிலையைச் சமாளிப்பதற்கான

சிறந்த வழி, அதை அப்படியே ஏற்றுக் கொள்வதும், அதன் நேர்மறையான அம்சங்கள் என்னவாக இருக்கக் கூடும் என்பதைக் கருத்தில் கொள்வதுமே ஆகும்.

முதலாவதாக, அத்தகைய சூழ்நிலையை நாம் ஏற்றுக் கொள்ளவதென்பது நம் மனதை வலுப்படுத்துவதையும் இயல்பை உறுதிப்படுத்துவதையும் காட்டுகிறது. இரும்பை மென்மையாகப் பதமாக்குவதைப் போல, அடிப்படை உலோகத்தை தங்கம் போல மின்னும்வரை நெருப்பில் பொசுக்குவதைப் போல ஒவ்வொரு கஷ்டத்தையும் எதிர்கொள்ளும் வகையில் நம் செயல்முறை மாற வேண்டும். மகிழ்ச்சியை மறந்துவிட்டு, பணியில் நாம் முழு ஈடுபாடு காட்டும்போது மனித இருப்பின் உன்னதநிலையை உயர்த்திக் கொள்கிறோம். எதிர்பார்ப்பே இல்லாத அந்த நேரங்களில் பெரும்பாலும் மகிழ்ச்சி கைக்கூடுவதைக் காணலாம்.

மகிழ்ச்சி, என்றும் நீடிக்கும் நிலையா? மாயையா? வருவதும் போவதுமாக இருக்கக் கூடியதா? மகிழ்ச்சியற்ற நிலையைத் தொடர்ந்து கவனித்து வருவது யாரையும் வெறுப்படைய வைக்கும். மகிழ்ச்சியில்லாத நிலை அப்படியே ஏற்கப்படவோ புறக்கணிக்கப்படவோ அல்லது குறைந்தபட்சம் நேர்மறையான அனுபவமாகவோ கருதப்பட வேண்டும். ஆனால் கசப்பபானதாக மட்டும் மாற அனுமதிக்கக் கூடாது.

மகிழ்ச்சியோ மகிழ்ச்சியின்மையோ நிலைபேறு கொண்டவையல்ல. ஒரு தனிநபரின் மகிழ்ச்சிக்காக மற்ற அனைவரும் புறந்தள்ளுவது மோசமான பிழை. ஒருவரது மனம், ஒருவரது பாசம், ஒருவரது கரிசனம், ஒருவரது வளங்கள் ஏன் ஒருவரது முழு வாழ்க்கையை பிறருக்குக் கொடுப்பதிலும் உண்மையான மகிழ்ச்சியைக் காணலாம்.

ஐஐஐ

## நிகழ்வுகளில் நீக்குப்போக்கு

முகலாயப் பேரரசர் அக்பர் (1542 - 1605) தன் அமைச்சர் பீர்பாலிடம், ஓ அமைச்சரே! ஆட்சி நிலையானதாக என்றென்றும் நீடிக்கக் கூடியதாக இருந்தால் எத்தனை நன்றாக இருந்திருக்கும், நீ என்ன நினைக்கிறாய்!” என்று கேட்டாராம்.

அதற்கு Birbal (1528 - 1586) மன்னா! ஆனால் அப்படி முன்பு ஆண்டவர்கள் நினைத்திருந்தால் நீங்கள் எப்படி இப்பொழுது ஆட்சிக்கு வந்திருக்க முடியும்” என்று பதிலளித்தாராம்.

அக்பர் சிந்தித்தார். ஆட்சி என்பது தனியுடைமை என்றும் தான் மட்டும் நிரந்தரமானவன் என்ற அவரது சிந்தனை என்றென்றைக்குமான அரசராகக் கருத வைத்தது.

அக்பர் பிறப்பதற்கு முன்பிருந்தே அரசர்கள் இருந்ததும், ஆட்சிகள் அதற்கேற்ப அமைந்திருந்ததையும் அவர் மறந்து விட்டிருந்தார். அக்பரின் ஆசைப்படி நடந்திருந்தால் அக்பரேகூட மன்னராக வந்திருக்க முடியாது.

இது தன் மையச் சிந்தனை. காலங்காலமாக மனிதன் இப்படியே நினைத்து வருகிறான். சுயநலமான திட்டங்களை மனதில் தேகி வைத்திருக்கிறான். அவன் இந்த உலகில் தனித்திருக்கவில்லை என்பதை மறந்து விடுகிறான். புறக்காரணிகள் நம் செயல்பாடுகளில் குறுக்கிடுகின்றன. பொது நன்மையுடன் நம் நோக்கம் இணங்கிச் செல்லும்போது பெரும்பாலும் ஏற்கப்படுகிறது.

நீங்கள் சுயநலத்துடன் இருக்கிறீர்கள் என்றாலும் பிறரின் நலன் குறித்து சிந்திக்க வேண்டியிருக்கும். பெரும்பான்மை நன்மையில் நம் நன்மையும் உள்ளது. இங்கு உலகில் மக்கள் ஒரே கப்பலில் பயணிக்கின்றனர். அந்தக் கப்பலைப் பராமரிப்பதில் நம் பாதுகாப்பு அடங்கியுள்ளது.

இந்த உலகில் சிலர் கிடைத்த வாய்ப்பில் தம்மை மையமாக வைத்து விதிகளையும் மரபுகளையும் உருவாக்கி விடுகின்றனர். அவர்களுக்குச் சாதகமாகவும் நன்மையாகவும் உள்ள விஷயத்தில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். இது அவர்களுக்கேகூட எதிராகவும் போகக் கூடும். யாரும் இந்த உலகில் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை.

உலகில் சிலருக்கு வாய்ப்பு கிடைத்தவுடன் தம் விருப்பத்துக்கு ஏற்ப சட்ட திட்டங்களை வகுக்க முனைகின்றனர். தமக்கு நல்லதாகத் தெரிகிற விஷயங்களைச் செயல்படுத்துகின்றன. ஆனால் இது கிட்டத்தட்ட பெருஞ்சுமை. வாய்ப்புகள் இந்த பக்கம் அந்த பக்கம் மாறக் கூடியவை. மனிதனின் நிலைமை மாறுதலுக்கு உட்படாது. சுயநலத்துடன் திட்டங்கள் வகுப்பது அறிவுடைமை.

ஆகவே சூழல் மாறும்போது நமக்குச் சாதகமாகத் தெரிந்த ஒன்று நமக்கு எதிராகவும் திரும்பக் கூடும். ஆகவே தன் மையச் சிந்தனை எந்தவொரு தனி மனிதருக்கோ பொதுவாக மனித குலத்துக்கோ நன்மையைத் தராது.

ജജജ

## தலைகீழ் முடிவு

The Times of India, Hindustan Times நாளிதழ் 14-12-1983 தேதிய செய்திக் குறிப்பின்படி டெல்லி மாநகர காவல்துறையினர் சிலர் வருமானவரித் துறையினர் அலுவலகம் அருகில் மெட்டடுர் வேனில் சாவடி அமைத்து இருந்தனர். வெண்ணிற ஃபியட் கார் u-turn அடித்துத் திடீரென வந்த வேகத்தில் வாகனத்தை திருப்பினர்.

காவலர்களுக்கு ஐயம் ஏற்பட்டது. ஆகவே விசாரிக்கப் பின் தொடர்ந்தனர். இதைக் கண்ட காரில் இருந்தவர்கள் காவலர்களை நோக்கி துப்பாக்கியால் சுட ஆரம்பித்தனர். குற்றப் பின்னணி உள்ளவர்கள் காரில் உள்ளனர் என்பது காவலர்களுக்கு உறுதியாகி விட்டது.

ஆனால் கார் மின்னல் வேகத்தில் மக்கள் நெரிசலில் மறைந்து போனது. அதே நாள் மாலை Shahadara மருத்துவமனை அருகே ஒரு சடலம் கிடைத்தது. இது சுபாஷ் என்கிற கொள்ளைக்காரனின் உடல் என பின்னர் விசாரணையில் தெரியவந்தது. அவன் மீது இருபதுக்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருந்ததும் அவனை உயிருடனோ பிணமாகவோ பிடித்துக் கொடுப்பவருக்கு Rs.15,000/ பரிசு அறிவிக்கப்பட்டிருந்தது. காவலர்களின் துப்பாக்கிச் சூட்டில் காயமுற்றிருந்த சுபாஷை அவனது கூட்டாளிகள் வெளியே தள்ளி விட்டிருப்பதும் தெரிய வந்தது.

சில நேரங்களில் தப்பிக்க எடுக்கும் முயற்சிகளுக்காக பெரும் விலையைத் தர வேண்டியுள்ளது. வெண்ணிற கார் பயணிகள் சாதாரணமாகக் கடந்து போயிருந்தால் வழக்கமான ஒன்றாக இருந்திருக்கும். இது போன்ற விபரீத முடிவு ஏற்பட்டிருக்காது.

தர்க்க புத்தியை, ஞானத்தை இந்த உலகில் பயன்படுத்த முடியாமல் போய் விடுவதும் உண்டு. இவ்வுலகில் வெற்றி பெற எப்போது செயல்பட வேண்டும்? எப்போது செயல்படாமல் விலகி இருக்க வேண்டும்? என்பதை நாம் அறிந்து வைத்திருக்க வேண்டும். சில நேரங்களில் நேர்க்கோட்டுப் பயணம் சில நேரங்களில் இடது திருப்பம், வேறு சில நேரங்களில் வலது திருப்பம் என மாறுவது அவசியம். உலகில் தினசரி செயல்பாடுகளில் மதிநுட்பம் தேவை. உயர் மதிப்பீடுகள் வாழ்க்கை சிறக்க உதவும். சில நேரங்களில் எதிர் நீச்சல் போட வேண்டியதும் சில நேரங்களில் சூழலை மௌனமாகக் கடந்தும் போக வேண்டியுள்ளது.

# சச்சரவுகளிலிருந்து விலகி...

இரண்டு விவசாயிகளுக்கிடையே வயல் வரப்புத் தகராறு ஏற்பட்டது. சிறிய நிலத்துண்டு அது. ஆனால் மானப் பிரச்சனையாக அது உருமாறியது. இந்த வாதத்திலிருந்து பின்வாங்குவது பிறரின் பார்வையிலிருந்து தம்மைக் குறைத்து மதிப்பிட வைக்கும் என இருவரும் கருதினர். இந்தப் பிணக்கு எல்லா மீறல்களையும் கடந்து போய்விட்டது. இருவரும் இணங்கிப் போகத் தயாராக இல்லை. நிலைமை மோசமடைந்து இருவரும் கொலைத் தாக்குதலில் இறங்கினர். அறுவடைப் பயிர்கள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன. நீதிமன்றத் தீர்ப்பு பல்லாண்டுகள் நீடித்தது. இதனால் வயல்வெளி, தோட்டம், நகை என சொத்து அனைத்தையும் அவர்கள் இழந்துவிட்டனர்.

வேறொரு விவசாயிக்கும் இது போலவே நிகழ்ந்தது. அவர் உடனடி நடவடிக்கையில் இறங்கவில்லை. நிலைமையைத் தீவிரமாக ஆய்வு செய்தார். விபரறிந்த நண்பர்களுடன் கருத்தைக் கேட்டறிந்தார். வயல்வெளியின் வாய்க்கால் வரப்புத் தகராறு என்பது அதனுடன் மட்டும் முடிந்து போவதில்லை.

பிரச்சனை "இன்று" என்ற நிலையிலிருந்து பார்ப்பதைவிட "நேற்று" என்பதில் உள்ளது எனப் புரிந்து கொண்டார். பிறருக்கு எப்படி பொருள் இழப்பு ஏற்பட்டதோ, அவமானம் உண்டானதோ அதே அளவு இவருக்கும் ஏற்பட்டது. இருந்தபோதும் தம் உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொண்டார்.

அந்த நிலத்தின் மீது எதிரி மூர்க்க வெறியுடனும் உள்ளதை கவனித்தார். ஆகவே நேரடி நடவடிக்கையில் இறங்குவதை கைவிட்டு திட்டமிட்டுச் செயல்படுவதே அறிவுடைமை எனக் கருதினார். "எதிராளி என் வாய்க்கால் மீது கண் வைத்தது ஏன்?, நான் பலவீனமாக இருக்கிறேன்" என்று கருதியிருப்பது முதல் காரணம் என்பதை அவர் புரிந்துகொண்டார். ஆகவே நிதானமாக யோசித்துத் தம் தகுதியை வளர்த்துக் கொள்ள முடிவெடுத்தார். அதன் பிறகு சட்டபூர்வமான உரிமைகளின் மீது எவருக்கும் கைவைக்கும் துணிவு ஏற்படாது அல்லவா?

மேலும் போட்டியாளர் தன் உரிமைகளை தவறாகப் பயன்படுத்த முயல மாட்டார். ஆகவே கடுமையாக உழைக்கத் தொடங்கினார். எதிரியை அழிக்கப் பயன்படுத்தும் ஆற்றலை ஆக்கப்பூர்வ செயல்களில் செலவழித்தார். இது புதிய நம்பிக்கையையும் தைரியத்தையும் அளித்தது. தன் நிலத்தில் உழைப்பதோடு சிறியதாக

ஒரு வியாபாரத்தையும் ஆரம்பித்தார். விழித்துக் கொண்ட தன்முனைப்பு வாழ்க்கையைப் புதிய கோணத்தில் அணுக வைத்தது. வருமானம் பெருக்கும் வழிவகைகளைக் கண்டறிந்தார். குழந்தைகளை நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்த்துத் தரமான கல்வியை உறுதி செய்தார்.

முதல் எடுத்துக்காட்டில் கூறப்பட்டவர்கள் இருபது ஆண்டுகள் வழக்கு தொடுத்து இருந்த சொத்தை இழந்தனர். இரண்டாம் எடுத்துக்காட்டில் கூறப்பட்ட நபர் அதே இருபது ஆண்டுகளில் பொருள்வளத்தைப் பெருக்கிக் கொண்டார். பிள்ளைகளைப் படிக்க வைத்து வாழ்க்கையில் அவர்கள் முன்னுக்கு வந்துவிட்டனர். எருது வைத்திருந்ததைக் கைவிட்டுப் புதிய டிராக்டர் வாங்கி உழுதனர். முன்பு பிரச்சனை செய்தவரின் முழு நிலத்தையும் வாங்கிக் கொண்டார்.

வாய்க்கால் வரப்புத் தகராறில் ஈடுபட்ட நபர் எல்லாவற்றையும் இழந்து நட்டப்பட்டார். ஆனால் மோதல் போக்கைக் கடைப்பிடிக்காமல் தம் சொந்த வாழ்க்கையில் கவனம் செலுத்தியவர் தகராறில் ஈடுபட்டவரின் முழு நிலத்தையும் விலைக்கு வாங்கிக் கொண்டார்.

வீட்டில் மின் விளக்கு, மின் விசிறி பழுதடைந்து விட்டால் விளக்கு விசிறியிடம் நாம் மல்லுக்கட்ட வேண்டியதில்லை. பிரச்சனை மின் விளக்கு, மின் விசிறிக்கு இருப்பதே உண்மை. அதைச் சரி செய்துவிட்டால் மின் விளக்கு, மின் விசிறி செயல்படத் தொடங்கும். டியுப் லைட்டின் ஃபியூசை மாற்றுவதால் மின்விளக்கு எரிவதுபோல மின் விசிறியின் ஃபியூசைச் சரிப்படுத்தி விட்டபின் மின்விசிறி இயங்குவதைப் போல மனிதன் பிரச்சனையின் மூல காரணத்தைக் கண்டறிந்து பழுது நீக்குவதற்குப் பதிலாக பிரச்சனையின் வெளிப்புறத்தை மட்டுமே பார்க்கிறான்.

ஒரு சிக்கல் ஏற்படும்போது அதை அங்கேயே நிலவும் சூழ்நிலைக்கேற்ப தீர்க்க முயல்வது மனிதனின் பலவீனம். தற்போதைய நிகழ்வுகளின் தொகுப்பிலிருந்தே பிரச்சனைகள் உருவாகின்றன என்றாலும் மூல காரணங்களை வேறு இடங்களில் இருக்கக் கூடும். மோதலை எல்லா நிலையிலும் தவிர்க்க வேண்டும். நேர்மறையான பலனளிக்க கூடிய எந்த காரணியும் மறுக்கப்படவோ, புறக்கணிக்கப்படவோ கூடாது. அத்தகைய அணுகுமுறை நீண்டதாகவோ சிக்கலானதாகவோ தோன்றினாலும் சமூகத்தில் இணக்கமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் ஒரே நடைமுறை இதுவே.

இறைவன் "நன்றி வெளிப்பாட்டைக் காட்ட விரும்பினால் தன் அருட்கொடையைத் திறக்கிறான். தொழுதுகொள்ள வழி ஏற்படுத்துகிறான். முழுமையின் அறிதலை திறக்கிறான். பாவமன்னிப்புத் தருகிறான். மனம் திரும்புதலை ஏற்கிறான்" என்று Ibnu Majah (824 - 887) தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிவார்ந்த மதிநுட்பமுள்ள நபிமொழி இது.

## இரண்டாவது முறை தவறு வேண்டாம்

அரசு ஊழியர் ஒருவருக்கு நகரத்தில் சொந்த வீடு இருந்தது. வாழ்க்கையும் நல்லபடியாகப் போய்க் கொண்டிருந்தது. மகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் காலம் வந்தபோது அலுவலகத்தில் பெருந்தொகையைக் கடனாகப் பெற்றார். சம்பளத்தில் சரிபாதி தொகை மாதத் தவணையாக கழிக்கப்பட்டு வந்தது. இந்தப் பணம் அவருக்குப் போதுமானதாக இல்லை. பற்றாக்குறை அதிகரித்தது. தம்பதிகள் வீட்டை வாடகைக்கு விட முடிவு செய்தனர். வீட்டின் குளியல் அறையைக் கொண்ட பெரிய படுக்கையறை ஒன்றைத் தமக்கும் மற்றதை வாடகைதாரருக்கும் பிரித்துக் கொண்டனர்.

இவ்வாறு ஐந்தாண்டுகள் கழிந்தன. ஆனால் பிறகு வாடகைக்கு வந்தவரின் எண்ணம் மாறத் தொடங்கியது. முழு வீட்டையும் அபகரிக்கத் திட்டமிட்டார். திருமணம் ஒன்று தன் குடும்பத்தில் நடக்க இருப்பதாகவும் இரண்டு வாரங்களுக்கு வீட்டை தம்மிடம் தரும்படியும் கேட்டுக் கொண்டார். வீட்டு உரிமையாளரும் சம்மதித்தார். வாடகைதாரர் வீட்டு உரிமையாளருக்குத் தற்காலிகமாக அறையை வெளியில் ஏற்பாடு செய்தார். திருமணத்திற்கு வந்த விருந்தினர்கள் இங்குத் தங்கிக் கொண்டனர். இதை ஏற்று உரிமையாளரும் வீட்டை விட்டு வெளியேறினார். அவரது அனைத்துப் பொருட்களும் உரிமையாளர் வசம் ஒப்படைக்கப்பட்டன. பிறகு இரண்டு மாதங்கள் கழித்து வீட்டு உரிமையாளர் பேசியபடி திரும்ப நினைத்தபோது வாடகைதாரர் மிரட்டத் தொடங்கினார். இந்த வீடு இனி எனது, உங்களுக்குத் தொடர்பில்லை என்றார். வீட்டிற்குள்ளே அனுமதிக்காமல் திருப்பி அனுப்பிவிட்டார்.

இதைக் கேள்விப்பட்ட வீட்டு உரிமையாளரின் நண்பர்கள் இது குறித்து வழக்குத் தொடுத்தால் பத்தாண்டுகள் பிடிக்கும். ஆகவே சிலரை அழைத்துக் கொண்டு வலுக்கட்டாயமாக வீட்டிற்குள் நுழைந்துவிட அறிவுறுத்தினர். வீட்டு உரிமையாளரும்

அதன்படி நடந்தார். ஆனால் வாடகைதாரர் இவர்களைவிட கூடுதல் புத்திசாலித்தனம் செய்தார். அதாவது உரிமையாளரும், நண்பர்களும் வீட்டிற்குள் நுழைய முற்பட்ட போது காவல்துறையில் முறையிட்டார். உடனே காவல்துறையும் தலையிட்டது. வீட்டு உரிமையாளர் மீது குற்றவியல் வழக்கு தொடுக்கப்பட்டது. நீண்டகாலம் வழக்கு நடந்தது. இதனால் அரசுப் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டார். உரிமையாளருக்கு வீடு திரும்பக் கிடைப்பது தாமதமாகி வந்தது.

தவறு நடந்துவிட்டால் அத்தோடு முடித்துக்கொள்ள வேண்டும். இரண்டாவதாகவும் தவறு செய்தால் கையில் இருப்பதும் இழந்துவிடக் கூடிய சூழல் உருவாகும் என்பது இதன்மூலம் கிடைக்கும் நீதியாகும்.

ஐஐஐஐஐ

## கதை உருவானது

பேயர் போர் என்ற ஒன்று (1899 - 1902-இல்) நடந்தது. இங்கிலாந்தின் பிரதமராக பிற்காலத்தில் வந்த Winston Churchill (1874 - 1965) அப்பொழுது Morning Post என்கிற பத்திரிகையில் போர்க்கள செய்தியாளராக இருந்தார். பணிக்காலத்தில் இங்கிலாந்து இராணுவ வீரர்களைப் போராளிகள் சிறைப்படுத்தியபோது சர்ச்சிலையும் தங்களுடன் அழைத்துக் கொண்டனர். போர் வீரர்களுக்கும் செய்தியாளர்களுக்கும் வேறுபாடு பார்க்கவில்லை.

இந்த நிலையில் தென்னாப்பிரிக்காவின் அன்றைய பிரதமர் John Chiritian Smutsஇற்குக் கோரிக்கை அனுப்பினார் சர்ச்சில். பன்னாட்டு உடன்படிக்கையின்படி செய்தியாளர்களுக்கு விலக்கு அளிக்கப்படும் மரபை சுட்டிக்காட்டினார். பிற்காலங்களில் அமெரிக்க வெள்ளை மாளிகையில் நடந்த விருந்தொன்றில் இருவரும் சந்தித்துக் கொண்டனர். ‘சர்ச்சிலின் விண்ணப்பம் என் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. பரிசீலித்து அவரை விடுவிக்க உத்தரவிட்டேன். ஆனால் அதற்கு முன்பே சர்ச்சில் சிறையிலிருந்து எப்படியோ தப்பித்து போய் இருந்தார்’ என்று பழைய நிகழ்வைக் குறித்து John Chiritian Smuts (1870 - 1950) பதிவு செய்துள்ளார்.

பல்லாண்டுகள் கழிந்தன. இங்கிலாந்து அமைச்சராக சர்ச்சில் இருந்தபோது இது குறித்து John Christian Smuts நினைவுபடுத்திப் பேசினார். தன் விடுதலை தாமதம் ஆனது குறித்து சர்ச்சில் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இந்தத் தாமதமும் தமக்குப் பயனளித்தது என்று வேடிக்கையாகக் கூறினார்.

அதாவது தாங்கள் என்னை உடனடியாக விடுதலை செய்திருந்தால் €9000-ஐ இழந்திருப்பேன். சிறையிலிருந்து தப்பித்தது சுவையான அனுபவம். அதை விறுவிறுப்பான நடையில் பத்திரிகைக்கு எழுதி கொடுத்ததால் அந்தப் பணம் கிடைத்தது என்றார். வாழ்க்கையில் சில நேரங்களில் இப்படி நடந்துவிடுகிறது.

நல்லவிதமாக இல்லாதவற்றை நினைத்து வருத்தப்படத் தேவையில்லை. தான் முதலில் நினைத்தது தவறே என்று இறுதியில் தெரிய வருகிறது. விரும்பத்தகாத நிகழ்விலும் விரும்பத்தக்க அம்சங்கள் மறைந்திருக்கக் கூடும். தொடக்கத்தில் நட்டம் கொண்டதாக தெரிந்த ஒன்று. பிறகு பயனளிக்கக் கூடியதாக முடியவும் வாய்ப்புள்ளது.

## பொருள் பொதிந்த வாழ்க்கை

அதிவிரைவு ரயில் வண்டி தன் இலக்கை நோக்கி மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது. பசுமையான வயல்வெளி. ஓடைகள், நதிகள் இருபுறமும் கடந்து சென்றன. ஆனால் எதையும் பொருட்படுத்தாமல் ரயில் தன் வேகத்தில் போய்க் கொண்டே இருந்தது. மலைகள், வெறுங் கட்டாந்தரை, அருவிகள், சமவெளிகள் என குறுக்கிட்ட அனைத்தையும் அது கடந்து போய்க் கொண்டிருந்தது. வழியில் சிறிய ரயில் நிலையங்கள் நிலையம் வந்து கொண்டே இருந்தபோதிலும் ஓர் இடத்திலும் நிறுத்தாமல் போய் கொண்டே இருந்தது.

பொருள் பொதிந்த வாழ்க்கையும் இப்படிப்பட்டதே. வாழ்க்கைக்குப் பொருள் இருப்பதாக உணரும் நபருக்குக் குறிக்கோள் ஒன்றில் மட்டுமே முழு கவனம் இருக்கும். கவனச் சிதறலைக் கோரும் எதிலும் அவர் ஈடுபட மாட்டார். பொருள் பொதிந்த வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்த நபர் இலக்கை நோக்கி விரையும் பயணியைப் போன்றவர். மனங்கவரும் உலக விஷயங்களை அவர் முழுக் கண் திறந்து பார்ப்பதில்லை. இளைப்பாறும் நிழல்அவரைக் கவர்வதில்லை. அதை விட்டுவிட்டுத் தன் இலக்கு ஒன்றில் மட்டும் குறியாக இருப்பார். பயணக் களைப்பை அவர் பொருட்படுத்த மாட்டார். எல்லாவித இடையூறுகளும் குறுக்கிடத்தான் செய்கின்றன. ஆனால் அவரது ஒரே நோக்கம் போய்க் கொண்டே இருப்பதுதான். வழியில் வரும் மேடு பள்ளங்கள் அவருக்கு ஒருபோதும் தடையாக மாறுவதில்லை. திசையும் வேகமும் அவரது பயணத்தில் சீராக அமைந்திருக்கும்.

குறிக்கோள் கொண்ட மனிதர் திக்குத் தெரியாத பயணி அல்ல; பொருள் பொதிந்த மனிதர் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்பது போல அலைக்கழிப்புடன் செல்வதில்லை. வாழ்க்கைக்குப் பொருள் இருந்தால் திட்டவட்டமான குறிக்கோள் இருந்தாக வேண்டும். அந்தப் பொருள் பொதிந்த வாழ்க்கை மீது அதன் நம்பகத்தன்மை மீது பற்றுறுதி வேண்டும். இதயம், மனம் அதில் துய்க்க வேண்டும். இந்தப் பண்பே விலங்கிலிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. வாழ்க்கைக்குப் பொருள் இருந்தால் மட்டுமே அது வாழ்க்கை. ஒருவருக்குக் குறிக்கோள் இருந்தால் உண்மையில் அது பொருள் சார்ந்த வாழ்க்கை. அப்படிப்பட்டவர் சிறிய சிறிய விஷயங்களில் ஈடுபாடுகொள்ளாமல் இறுதி இலக்கில் கவனத்தைக் குவித்து முழு ஈடுபாட்டுடன் ஓடிக் கொண்டே இருப்பார்.

ஜஜஜ

# முழுமையான ஈடுபாடு

Elias Howe (1819 - 1867) அமெரிக்காவின் Massachusetts நகரில் பிறந்தவர். வெறும் 48 வயதில் இறந்துபோன சாதாரணத் தொழிலாளி. 1845ஆம் ஆண்டு அவரது 26ஆம் வயதில் கண்டுபிடித்த / வடிவமைத்த தையல் இயந்திரம் ஆடை தயாரிப்பில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியது. அதற்காக அவர் என்றும் நினைவு கூரப்படுவார்.

Elias Howe காலத்திலும் தையல் இயந்திரம் அப்படியே இருந்தது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனித சமூகம் ஊசியின் கொண்டையில் துளையிட்டே ஆடைகளைத் தைத்துக் கொண்டிருந்தது. ஆகவே Elias Howe-யும் ஊசியின் கொண்டையில் துளை இருப்பது போலவே தையல் இயந்திரத்தை உருவாக்கினார். இதனால் ஒழுங்காக ஆடைகளைத் தைக்க முடியவில்லை. அதிகபட்சம் காலணிகளைத் தைக்கக் கூடிய தரத்தில் அந்த தையல் இயந்திரம் இருந்தது. இந்தப் பெரிய பிரச்சனை குறித்தே அவர் எப்பொழுதும் சிந்தித்தார். தீர்வு எதுவும் கிடைக்கவில்லை.

ஒருநாள் தூக்கத்தில் இருந்தபோது கண்ட கனவில் இதற்கு பதில் கிடைத்தது. பழங்குடி மக்கள் Elias Howe-வை பிடித்துக் கொண்டனர். 24 மணிநேரத்தில் தையல் இயந்திரம் ஒன்றைத் தயாரிக்கும்படியும் இல்லாவிட்டால் தலை துண்டிக்கப்படும் என்றும் அவர்கள் கூறினர். ஒரு முழு நாள் கழிந்த பின்பும் அப்படியான தையல் இயந்திரம் உருவாகவில்லை. கெடு முடிந்தபின் பழங்குடியினர் Elias Howe-வைக் கொல்ல வந்தனர். அவர்கள் தம் கையில் பிடித்திருந்த ஈட்டியின்

முனையில் துளை இருந்தது. உடனே கனவும் கலைந்தது.

இப்பொழுது Elias Howeவுக்கு ஒரு தொடக்கப் புள்ளி கிடைத்தது. ஊசியின் கொண்டையில் துளை போடாமல் முனையில் துளையிட்டு நூலைச் செலுத்தினார். இப்பொழுது இயந்திரம் வேகமாகவும், ஒழுங்காகவும் தைக்கத் தொடங்கியது. 1845இல் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இயந்திரம் நிமிடத்துக்கு 250 தையல்களை வேகமாகப் போடும் திறன் கொண்டிருந்தது.

கனவு என்பது என்ன? உண்மையில் கனவு என்பது முழு ஈடுபாட்டின் விளைவு. பகலில் சிந்திப்பது இரவில் கனவாக மாறுகிறது. Elias Howe அல்லது அவருக்கு முன்பிருந்த அனைவரும் மரபார்ந்த சிந்தனையில் இருந்தனர். ஆயிரம் ஆண்டுகால தொடர்ச்சியில் உண்மை இருக்கும் என்ற குருட்டுத்தனம் அது. பிரச்சனையில் முழுமையாக ஈடுபட்டபோது அவரது ஆழ்மனம் கனவு வழியில் தீர்வு சொன்னது. இந்தக் கண்டுபிடிப்பு ஆடை உற்பத்தியில் புரட்சிகர மாற்றத்திற்கு வித்திட்டது. ஒருவரது ஈடுபாடு அதன் எல்லையைத் தொட்டு விடும்போது இரகசியச் சாவி கிடைத்து விடுகிறது. அதனைக் கொண்டு ஆயிரமாண்டு பூட்டைக்கூட திறக்கச் செய்யும் அற்புதம் நிகழ்ந்து விடுகிறது.

ஐஐஐ

## குறிக்கோள்

1931ஆம் ஆண்டு வடகிழக்கு சீனாவின் Manchuriaவைக் கைப்பற்றி தனக்குக் கட்டுப்படக்கூடிய அரசு ஒன்றை ஜப்பான் அமைத்தது. இதனால் இரு நாடுகளுக்குமிடையே தூதரக உறவு சீர்குலைந்தது. 07-07-1937ஆம் தேதி Beijing (முன்பு Peking) நகரில் மார்க்கோ போலோ நிகழ்வு ஒடுக்கப்பட்டிருந்த உணர்வை கிளறிவிட்டது. உடனே இரு நாடுகளும் இராணுவ நடவடிக்கையில் இறங்கின. இதுவே உலகப் போரின் (1939 - 1945) ஊற்றுக்கண்ணாகும்.

வெறுப்பும் பகைமையும் இருபுறமும் சேர்ந்தன. அதற்கு முன்பு ஏற்கனவே ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகி இருந்தது. அதன்படி ஜப்பானுக்கு சீனாவில் இரும்பு உருக்காலை அமைக்கும் பணி கிடைத்திருந்தது. ஆனால் சீனா ஒருதலைப்பட்சமாக இதை முறித்துக்கொண்டது.

பிரதமர் Deng Xiaoping (1904 - 1997) பொதுவுடைமை, தீவிர சோசலிச கொள்கையைக் கைவிட்டுத் திறந்த சந்தை முறைக்கு மாறினார். இது சீனாவில் கால் பதிக்க ஜப்பானியர்களுக்கு ஒரு

வாய்ப்பாக மாறியது. மீண்டும் ஜப்பான் வெள்ளமென சீனாவின் உள்ளே நுழைந்தது. இப்பொழுது ஜப்பானிலிருந்து யாரேனும் சீனாவுக்குப் பயணம் செய்வதாக இருந்தால் மூன்று மாதங்களுக்கு முன்பு விமானச் சீட்டை முன்பதிவு செய்தாக வேண்டியிருந்தது. இருவழிப் பயணமும் பயணிகளை முழுமையாக கொண்டிருக்கும்.

ஜூன் 1987இல் நான் Tokyo-வில் இருந்தேன். அப்பொழுது Beijing வானொலியில் ஓர் அறிவிப்பை செவிமடுத்தேன். ஜப்பான் 1935ஆம் ஆண்டு சீனா மீது நிகழ்த்திய ஆக்கிரமிப்பை நினைவுகூரும் விதமாக 50ஆம் ஆண்டு நினைவுதினம் கொண்டாடப்படும் என்றும் அதற்காக ஒரு அருங்காட்சியகம் கட்டப்படும், அதில் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்படும் என்றும் சீன வானொலி கூறியது என்று ஒரு பயணி எழுதுகிறார்.

அருங்காட்சியகத்தில் வைக்கப்படும் புகைப்படம் அநியாயமும், சர்வாதிகாரமும் கொண்டிருந்த ஜப்பானிய கொடுங்கோன்மையின் நினைவுகள் புதுப்பிக்கப்படும் என்றும் ரேடியோ பீஜிங்கின் அறிவிப்பை விரிவாக பதிவு செய்தது. மார்கொ போலோ நிகழ்வின் பொன்விழா 50ஆவது நினைவுநாள் கடைபிடிக்கப்படும் என்றும் தெரிவித்தது.

ஜப்பானியர்கள் இதற்கு எந்தக் கருத்தையும் தெரிவிக்காமல் மௌனம் காத்தனர். சீன நண்பர்கள் நமது மனசாட்சியை தட்டி எழுப்பி இப்படிச் செய்கின்றனர் என்று ஒரு பத்திரிகையில் ஜப்பானியர்கள் பதிலளித்தனர். 13-06-1985 Times of India

வணிக நலனில் அக்கறை கொண்டிருந்த ஜப்பான் பொறுமையால் தன் பண்பு நலனை மேம்படுத்தியது. ஞானம், சகிப்புத்தன்மை, கண்டுகொள்ளாதிருத்தல், தேவையின் பொருட்டே பேசுதல் ஆகியவற்றை கற்றிருந்தது. கடந்த கால நினைவுகளை துறக்கவும், சண்டை சச்சரவு குறித்த முறையீடு எதுவும் செய்யாமலும் நல்லெண்ண முன்னெடுப்புகளில் ஈடுபடவும் தொடர்ந்து செல்லவும் ஜப்பான் பழகியது. இதனால் இலக்கை நோக்கிப் போகவும் வழியிலுள்ள தடைகளைக் கடக்கவும் உதவியது.

வணிகமாக இருந்தாலும் வேறு எந்த திட்டங்களாக இருந்தாலும் பொருள் பொதிந்த வாழ்க்கையின் உளவியல் இது. இந்த இயல்பை இழந்துவிடும் குழுவுக்கு இலக்கு எதுவும் இருப்பதில்லை. அப்படிப்பட்ட குழுவிலுள்ள உறுப்பினர்களிடம் நற்குணம் காணப்படுவதில்லை. எல்லா துறைகளிலுமுள்ள முஸ்லிம்களைப் பாருங்கள். இன்று நம் சமூகத்தில் பெரிய குறைபாடு நற்பண்புகளை

இழந்திருப்பது மட்டுமே. அவர்கள் பெரிய திட்டங்களில் ஈடுபடுத்த முடியாத வகையில் உள்ளனர். சூடுபடுத்தப்படாத செங்கற்களாக வெறும் களிமண்ணாக இருந்தால் அவர்களை எங்குதான் பயன்படுத்த முடியும்?

இவர்களது வாழ்க்கை பொருளற்று இருப்பதால் அவர்கள் விழிப்புணர்வு இன்றி உள்ளனர். இவ்வுலக வாழ்க்கையில் அவர்களுக்குக் குறிக்கோள் இல்லை. மறுவுலக வாழ்க்கையில் அக்கறையில்லை. இதுவே உண்மையான பலவீனம். இலக்குக் குறித்த விழிப்புநிலை அளித்துவிட்டால் உயிரோட்டம் வந்துவிடும். வரலாற்றில் அவர்கள் இதற்கு முன்பு துடிப்புடன் இருந்திருக்கின்றனர். குறிக்கோளுடன் இருப்பது முழுமையுடன் வாழ்வதாகும். விழிப்பு நிலை மனித ஆற்றலை அவர்களிடம் மறைந்திருக்கும் உயர் விழுமியங்களைப் புது மனிதனாக மாற்றுகிறது.

ஜஜஜ

## முழு அர்ப்பணிப்பு பாரிய சாதனை

இங்கிலாந்தைச் சேர்ந்த பேராசிரியர் Paul Dirac (1902 - 1984) அமெரிக்காவின் Florida-வில் இறந்தார். இவர் Isaac Newton (1643 - 1727); Albert Einstein (1879 - 1955) ஆகியோருக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படும் அறிவியலாளர் ஆவார். அணுக்களைப் பற்றிய Quantum இயங்கியல் கோட்பாட்டுக்காகவும் (Anti-matter) எதிர்ப்பொருள் அல்லது எதிர்த்துகள் என்பன சோதனை முறையில் கண்டுபிடிப்பதற்கு முன்பே இது குறித்த இவரது முன்னறிவிப்புக்காகப் போற்றப்படுபவர். பிறகு நடந்த ஆய்வுகளில் அது உறுதியானது.

பிரபஞ்ச இயல்பு, அதன் உள்ளடக்கம் பற்றி “Anti-matter” மற்றும் “Anti-universe” என்று பேரண்டத்தின் மூலத்தோற்றம், வளர்ச்சிப்படிநிலை வரலாற்றை விளக்கிய இயற்பியல் சிந்தனை அவருடையது. Paul Dirac மறைவின்போது J.G. Crowther (1899 - 1984) எழுதிய நினைவஞ்சலியை The Guardian (November 4, 1984) வெளியிட்டிருந்தது. “Prophet of the Anti-universe” “எதிர் பிரபஞ் சத்தின் தீர்க்கதரிசி” என்று மிகவும் பொருத்தமான தலைப்பை அது அவருக்கு கொடுத்திருந்தது.

மின்னணுவின் எதிர்த்துகள். அதைப் போன்ற நிறையும் சுழற்சியும் கொண்ட நேர் மின்னேற்றம். இதை Paul Dirac 1931இல் கண்டறிந்தார். Positron என விளக்கப்பட்ட எதிர்த்துகள் அல்லது எதிர்ப் பொருள் என்பது அணு இயற்பியலைப் புரட்சிகரமாக மாற்றி அமைத்தது. உலகை அதிரச் செய்த இந்தக் கண்டுபிடிப்பை

Paul Dirac எப்படி மேற்கொண்டார் என்பதை அறிந்துகொள்ள மாணவர்கள் இயற்கையாகவே ஆர்வம் காட்டினர்.அவர் எல்லா நேரங்களிலும் சீண்டும்விதமான தொந்தரவளிக்கும் கேள்விகளுக்குப் பதில்களை அளித்து வந்தார். அணுக்கூறு பருப்பொருள் குறித்து ஆரம்பக்கட்ட சிந்தனை எங்கிருந்து தொடங்கியது என்று ஒருமுறை மக்கள் கேட்டபோது, “தன் வாசிப்பு அறையில் மேல்புறம் கால் நீட்டி படுத்திருந்தபோது இரத்தம் Paul Diracன் தலை (அதாவது, மூளை)க்கு பாய்ந்தது” என்று Crowther எழுதுகிறார். இந்த பதில் வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் உண்மையான பதிலையே அவர் அளித்துள்ளார். உடலின் மொத்த இரத்தத்தையும் தலைக்குப் பாய்ச்சுவதன் மூலமே மாபெரும் அறிவார்ந்த சாதனைகள் எட்டப்படுகின்றன. அது முழு ஆற்றலை உறிஞ்சி எடுத்த பின்பே சாத்தியப்படுகிறது.

வெகு சிலரால் மட்டுமே இவ்வாறான கவனக் குவிப்பைச் செய்ய முடிகிறது. பாமர மக்கள் தம் ஆற்றலை சிதறடித்து விடுகின்றனர். சாதாரண வாழ்க்கையில் முடிந்து போகின்றனர். பெரிய சாதனைகள் முழு உழைப்பையும் கடும் அர்ப்பணிப்பையும் உயர் வீச்சையும் கோரி நிற்பவை. தன்னிடம் இருக்கும் அனைத்தையும் அளிப்பவரால் மட்டுமே பெரிய வெற்றியை ஈட்ட முடியும்.

ஐஐஐ

## கற்பேன், கற்பிப்பேன்

Fr.Henry Heras (1889 - 1956) ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்தவ மறைப்பணியாளர். 1922ஆம் ஆண்டு மும்பை துறைமுகம் வந்து இறங்கினார். இந்தியா அவரைப் பெரிதும் ஈர்த்தது. “நற்செய்தி” அறிவிக்கும் தம் ஆர்வத்தைச் சோதித்துப் பார்க்க இந்தப் புதிய நிலமான இந்தியாவிலேயே இறுதிவரை தங்கிவிட்டார்.

அந்நிய நாட்டைச் சேர்ந்த தனக்கு நிலைகொள்ள முதலில் ஓர் இடமும், வேலையும் முதன்மைத் தேவையாக இருக்கின்றன என்பதை உணர்ந்தார். ஆசிரியராகும் வாய்ப்பு கிடைத்தது. எஞ்சிய நேரத்தில் கிறிஸ்தவ இறையியலை விரும்பிய மாணவர்களுக்குக் கற்றுத் தரமுடியும் எனக் கருதினார். இது அவரது நோக்கம். எனவே St. Xavier கல்லூரி முதல்வரைப் போய்ச் சந்தித்தார். நேர்காணலில் தகுதி, திறமை, படிப்புக் குறித்து விசாரிக்கப்பட்டது. Fr. Henry Heras ஸ்பெயின் வரலாற்றில் பட்டப்படிப்பை முடித்தவர். சரி, எந்தப் பாடத்தில் உங்களால் வகுப்பெடுக்க முடியும் எனக் கல்லூரி முதல்வர் கேட்டதற்கு இந்திய வரலாறு என உடனே பதிலளித்தார்.

நீங்கள் உங்கள் நாட்டில் ஸ்பெயின் வரலாற்றைப் படித்திருப்பது எனக்குத் தெரியும். இந்திய வரலாறுதான் உங்களுக்குத் தெரியாதே என்றார் கல்லூரி முதல்வர். அதற்கு Fr. Henry Heras நான் இந்திய வரலாற்றைக் கற்பேன், படித்ததை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுப்பேன் என்று பதிலளித்தார். அவரின் தீர்மானகரமான, மனவுறுதிமிக்க பதிலும் கல்லூரி முதல்வரை ஈர்த்தது. இந்த இளம் ஆசிரியரை பணிக்கு எடுத்தார்.

Fr. Henry Heras முன் இருந்தது மகத்தான பணி. மிகவும் ஈடுபாட்டுடன் இந்திய வரலாற்றைக் கற்றுக் கொண்டதோடு தம் சமகாலத்தின் சிறந்த ஆசிரியர்களில் ஒருவராகவும் மாறினார். Sir Jadunath Sarkar (1870 - 1958) , Dr. Surendaranath Sen (1890 - 1962) போன்ற புகழ்ப்பெற்ற வரலாற்றாசிரியர்களின் தரத்திற்கு உயர்ந்தார். மும்பையில் The Heras Institute என்கிற கல்வி நிறுவனம் அவரது வாழ்நாள் நினைவை போற்றும்விதமாக உயர்ந்து நிற்கிறது. தமக்குத் தெரிந்த ஐரோப்பிய வரலாற்றைச் சொல்லிக் கொடுத்திருந்தால் ஓர் ஆசிரியர் பணியிடம், அதற்கேற்ற சம்பளமும் பெற்றிருப்பார். ஆனால் அவருக்குள் உறைந்திருந்த மறைப்பணியுணர்வு இந்திய வரலாற்றைத் தேர்வு செய்ய வைத்தது. அந்த நாட்டு மக்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இந்திய வரலாற்றைக் கற்பிக்கும்போது மட்டுமே கிடைக்கும் என்பதை உணர்ந்திருந்தார். அதனால் ஒன்றும் தெரிந்திராத பாடத்தைத் தேர்வு செய்தார். வழக்கமான பணப்பயன், தற்காலிகமான உலகியல் வசதி வாய்ப்புகள் அவரை ஈர்க்கவேயில்லை.

## புதிய ஆற்றல் எழுந்தது

Gerard (1114 - 1187) இத்தாலியின் Cermona நகரின் Lombardy பகுதியில் பிறந்தவர். மத்திய கால (பொது யுகம் 5 - 15 வரை) கிரேக்க, அறபு மொழியிலிருந்த அறிவியல், தத்துவம், இலக்கியம் என பனுவல்களை இலத்தீனில் மொழிபெயர்ப்புச் செய்தவர். Hunain Ibn Ishaq (809 - 874) தன் காலத்தில் இவ்வாறு பிற மொழியிலிருந்த நூல்களை அறபியில் மொழியாக்கம் செய்த பணிக்கு இணையான பணியை Gerard செய்திருக்கிறார்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டச் சேர்ந்த Ptolemy எழுதிய நூல்களைக் கற்க ஸ்பெயினின் Toledo நகருக்குச் சென்று அறபு மொழியைக் கற்றுக் கொண்டார். டாலமி கிரேக்க வானியல், புவியியல், கணிதவியலாளர். Almagest என்பது பிரபஞ்சவெளியை

அளக்கக் கூடிய மிகப்பெரிய கணித விதிகளைக் கொண்ட வானவியல் நூல். ஒரு யூதரும், கிறிஸ்தவரும் இப்பணியில் ஜெரார்டிற்கு உதவி செய்தனர். முதன்முறையாக அறபியிலிருந்து கீழை ஞானம் மேற்கத்திய உலகிற்குத் திறந்துவிடப்பட்டது. பிற்காலங்களில் வந்தவர்கள் ஜெரார்டைப் பின்பற்றினர்.

Buqrat, Galen ஆகியோரின் நூல்கள், Hunain, Al-kindi எழுதிய ஏறக்குறைய அனைத்து நூல்களும், அறுவை சிகிச்சை, உடல் இயங்கியல் பற்றி Abul Qasim Zahrawi (936 - 1013) எழுதிய நூல்களும் (Aristotle (385 - 325 BC) எழுதியதாக நம்பப்படும் மடக்கோலையின் புதைபடிவ எச்சங்களையும் மொழிபெயர்த்தார். சட்டம் பற்றி Ibn Sina - Avicenna (980 - 1037)வின் மாபெரும் நூலும், (Al-Kindi (D 873), Al-Farabi (872 - 950), Ishaq, Thabit ibn Qurrah (836 - 901) ஆகியோரது நூல்களையும் இலத்தீனில் மொழிபெயர்த்தார்.

கி.பி.1187ல் ஸ்பெயினின் Toledo நகரில் அவர் நோயுற்றபோது இறந்துபோக இருப்பதை முன்கூட்டியே உணர்ந்தார். தான் இறந்துவிட்டால் என்னவாகும்? மேற்கத்திய மொழியில் வேறு யார் இவற்றை மொழிபெயர்க்கப் போகிறார்கள்? இந்த அறபு நூல்கள் பெரும் புதையலாயிற்றே எனத் துடித்தார். எஞ்சிய ஆற்றலை இதற்குப் பயன்படுத்த முடிவு செய்தார். நோய் முற்றிக் கொண்டிருந்தது. ஒரு மாத காலத்திற்குள் கிட்டத்தட்ட 80 நூல்களை மொழிபெயர்த்துவிட்டார்.

செயலின் தொடர்பு ஈடுபாட்டில் உள்ளதே தவிர உடல் நலம் அல்லது ஆற்றலில் இல்லை. செய்ய வேண்டிய பணி குறித்த தீ ஒருவருக்குள் எரிகிறது எனில் அப்பணி முடிந்துவிடும். அவர் மரணப் படுகையில் இருக்கிறார் என்பது ஒரு பொருட்டல்ல. புறக்காரணிகள் அனுமதிக்காவிட்டாலும் எடுத்த சபதம் நிறைவேறிவிடும்.

## பயனற்ற ஈடுபாடு

Aleksander Isayevich Solzhenistsyn (1918 - 2008) உருவகக் கதைகளை எழுதிய ருஷ்ய நாவலாசிரியர். அப்போதிருந்த சோவியத் பொதுவுடைமை அரசுக்கு இவரது படைப்புகள் ஏற்புடையதாக இருக்கவில்லை. அதனால் 1976ஆம் ஆண்டு நாடு துறக்க வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகி அமெரிக்காவில் தஞ்சம் அடைந்தார்.

1982ம் ஆண்டு அமெரிக்க அரசு வெள்ளை மாளிகையில் Aleksander Isayevich Solzhenistsynனுக்கு மரியாதை அளிக்கும்

விதமாக விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. அப்பொழுது Aleksander Isayevich Solzhenistsyn குடியரசுத் தலைவருடன் 15 நிமிடங்கள் உரையாடிக் கொள்ளவும் நேரம் ஒதுக்கப்பட்டது.

03-05-1982 அன்று Aleksander Isayevich Solzhenistsyn ஒரு கடிதத்தின் மூலம் இந்த ஏற்பாடுகளுக்காக தன் நெஞ்சார்ந்த நன்றிகள் என்று கலந்துக் கொள்ள தன்னிடம் இருக்கும் குறைவான நேரத்தில் இதுபோன்ற சடங்கான நிகழ்ச்சிகளில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை என்றும் தெரிவித்துவிட்டார்.

ருஷ்ய மக்களின் சோகக் கதைகளை நாவலாக எழுதும் Aleksandar Solzhenitsynனிடம் திட்டவட்டமான இலக்கு இருந்தது. அந்தப் பணி அவரது முழு நேரத்தைக் கோரியது. அதனால் ஒரு வல்லரசு நாட்டின் குடியரசுத் தலைவரின் அழைப்பைக் கூட புறந்தள்ளினார்.

பொருள் பொதிந்த குறிக்கோள் உள்ள மனிதர் எவரும் இதையே செய்வர். இப்படியே இருப்பர். குறிக்கோளற்ற மனிதர்களிடம் நேரத்தின் அருமை இருப்பதிலை. பிறரது விருப்பத்துக்கேற்ப வாழ்பவரின் ஆயுளும் அழிந்துவிடும். பரபரப்பான வாழ்க்கையில் அகவயமாக உள்ளீடற்று போகும்.

## செய்ய வேண்டிய பணி இன்னும் இருக்கிறது

நம் நாட்டை பிரிட்டிஷ் காலனியாக 18ஆம் நூற்றாண்டில் மாற்ற முயன்ற முன்னோடி Robert Clive (1725 - 1774). தன் பதினெட்டாம் வயதில் (மெட்ராஸ் என அன்று அழைக்கப்பட்ட இன்றைய) சென்னை நகருக்கு வந்துசேர்ந்தார். கிழக்கிந்தியக் கம்பெனியில் ஆண்டுக்கு 5 பவுண்ட் சம்பளம் கிடைத்தது. தனிப்பட்ட செலவைக்கூட இதைக் கொண்டு அவரால் ஈடுகட்ட முடியவில்லை. கடன் சுமை, மன அழுத்தம், சோகம் ஆகியவற்றால் உடன் பணிபுரிந்த சக ஊழியர்களுடன் பிணங்கிக் கொண்டே இருந்தார்.

இதற்கிடையில் நடந்த நிகழ்வு அவரது வாழ்க்கையில் திருப்புமுனையாக மாறியது. தோட்டா நிரப்பிய துப்பாக்கியைத் தன் தலைமீது குறி வைத்தார். விசைப் பொறியை அழுத்திய பின்பும் அவரது துப்பாக்கி சுடவில்லை. துப்பாக்கியின் வயிற்றைத் திறந்து பார்த்தார். குண்டுகள் இருந்தும் தற்கொலை முயற்சி வெற்றி பெறவில்லை. சாகத் தயாரான பிறகும் உயிரோடு இருப்பது எப்படி என யோசித்தார்.

இந்த நிகழ்ச்சிக்காக Robert Clive அழுதார். ஏதோவொரு பெரிய பணிக்காக இறைவன் தம்மை காப்பாற்றியிருக்கிறான் என்று கருதினார். கிழக்கிந்திய கம்பெனியின் குமாஸ்தா வேலையைத் துறந்து பிரிட்டிஷ் ராணுவத்தில் வீரனாக சேர்ந்து கொண்டார். அப்பொழுது பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரர்களும் இந்தியாவில் வணிகம் செய்யும் எண்ணத்தில் திட்டமிட்டுக் கொண்டிருந்தனர். இதனால் இரு நாட்டவர்களும் போரில் மோதிக் கொண்டனர். Robert Clive இராணுவத்தில் வியத்தகு தீரத்தை வெளிப்படுத்தினார். இதனால் தலைமை கட்டளை அதிகாரியாக பதவி உயர்வு கிடைத்தது. தற்கொலை செய்து கொள்ள இருந்தவரை பிரிட்டிஷ் இந்தியாவின் முதல் வெற்றி வீரனாக வரலாறு பதிவு செய்து வைத்துக் கொண்டது.

நம்மில் அனைவருக்கும் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படுகின்றன. கடுமையான ஆபத்தில் சிக்கிய பின்பு அற்புதம் போல மீண்டு விடுகின்றனர். Robert Clive போன்ற ஒரு சிலரே இதில் பாடம் கற்கின்றனர். “இன்னும் உனக்கான நேரம் வரவில்லை, செய்து முடிக்க வேண்டிய பணி இனியும் மீதியுள்ளது” என்கிற செய்தியை நமக்குத் தருகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மனிதருக்கும் குறிப்பிட்ட காலக்கெடுவும், சில வாய்ப்புகளும் அளிக்கப்படுகின்றன. இவற்றை இறைவன் ஒருபோதும் பறிப்பதில்லை. இரவில் உறங்கி காலை எழுந்து சூரிய உதயத்தைக் கண்டால் செயல்பட ஒரு நாள் உள்ளது என்பதை உணர வேண்டும். விபத்துக்கள் நிறைந்த இந்த உலகில் வாழ்க்கையை இறைவிருப்பத்துக்கு ஏற்ப அமைத்து முடிக்கப்படாத பெரும் பணியைக் கண்டறிய வேண்டும்.

## நில், கவனி, செல்!

வன விலங்குகள் உணவு தேவையின் பொருட்டு ஆறு, குளம் போன்ற நீராதாரங்களைக் கடக்கின்றன. அப்பொழுது (மான், முயல், நரி, நாய் போன்ற) உடலளவில் சிறியவை மிக வேகமாகவும் (யானை, எருமை போன்ற) பெருத்த உடலுள்ள விலங்குகள் மெதுவாகவும் செல்கின்றன. காரணம் யானை அளவில் பெரியது. பேருருவும், கன எடையும் கொண்டிருப்பதால் ஒவ்வொரு அடியையும் எச்சரிக்கையுடன் வைத்தாக வேண்டியிருக்கிறது.

முதலில் அவை ஆற்றுப் படுகையில் கால் வைத்து மண்ணின் உறுதித்தன்மை எப்படிப்பட்டது என பார்க்கின்றன. கடினமான

மண் என உறுதியானப் பின்பே முன்னங்காலை நகர்த்தி தன் உடலின் முழு எடையுடன் பின்னங்காலையும் வைக்கிறது. வண்டல் மண், களிமண் குறுக்கிடலாம், சிக்கிக் கொள்ள நேரிடும் என்பதால் எச்சரிக்கையுடன் நடக்கிறது. ஆற்றில் வைக்கும் ஒவ்வொரு அடியின் மீதும் யானை கவனத்தைக் குவிக்கிறது.

இதை யானை எங்கிருந்து கற்றது? உறுதியாக இறைவன் யானையின் உள்ளுணர்வில் உயிர் பிழைத்தலுக்கான இந்த அறிவை வைத்திருக்கிறான். இதிலிருந்து என்ன தெரிகிறது? ஆபத்து இருக்கக் கூடும் என சந்தேகமுள்ள இடங்களில் எச்சரிக்கையுடன் கடக்க வேண்டும். வழக்கமாக தினமும் நமக்குப் பாதையில் சற்று கவனமின்மையுடன் இருந்தாலும் சமாளிக்க முடியும். புதிய, புதிரான பாதைகளில் கவனம் தேவை.

யானையைவிட மனிதனுக்கு அறிவு அதிகம். ஆயுதக் கிடங்குக் அருகில் தீ பற்ற வைப்பது முட்டாள்தனம். சரக்கு இரயிலில் பெட்ரோல் கொண்டு செல்லும்போது இன்ஜின் டிரைவர் எச்சரிக்கையுடன் இருப்பார். ஆனால் பலரும் கூட்டு வாழ்க்கையில் இதை மறந்து விடுகின்றனர். சமூகம் என்பது மக்களின் தொகுப்பு. அவர்களால் தினந்தோறும் புதுவிதமான, சூழல் ஏற்பட்டு விடுகிறது. இங்கே பெட்ரோல், ‘முட்கள்’, ‘படுகுழி’ ஆற்றல் ஆகியவை இருக்கவே செய்கின்றன. இவற்றிலிருந்து ஒதுங்கிச் செல்வதே அறிவுடைமை. மாறாக இவற்றுடன் மல்லுக்கட்டி நின்றால் இலக்கை நோக்கிய பயணத்தைத் தவற விடுவோம்.

குறிக்கோள் இருப்பவர்கள் வழியில் காணப்படும் இடையூறுகளில் அகப்பட்டுக் கொள்வதில்லை. ஏனென்றால் அது இலக்கிலிருந்து நம்மை விலகச் செய்துவிடும். இடம், வலம் என எந்தப் பக்கமும் திரும்பிப் பார்க்காமல் நேர்கொண்ட பார்வையுடன் அவர்கள் இருப்பர். குறிக்கோளுள்ள மனிதர் தொலைநோக்குக் கொண்டிருப்பதால் உடனடி இலாபம் குறித்த சிந்தனை அவரிடம் இருக்காது. அவருக்கு நடைமுறை அறிவு எப்பொழுதும் இருக்கும். தன் விருப்பத்துக்கு ஏற்பப் பார்க்காமல் உள்ளதை உள்ளபடி பார்ப்பார்.

## நற்பண்பின் வலிமை

பண வலிமை, உடல் வலிமை இவை இரண்டையும் கொண்டிருப்பவர்களை மட்டுமே பெரிய மனிதர்களாக பாமரர்கள் எண்ணுகின்றனர். எதார்த்தத்தில் மல்யுத்த வீரனும் பெரும்

பணக்காரர்களும் பலசாலிகளே அல்ல. நற்பண்பே மாபெரும் வலிமையாகும். எளியவர்கள், ஏழைகளும்கூட நற்பண்பு மூலம் வலிமை பெற முடியும்.

மவ்லானா முஹம்மது காசிம் (பிறப்பு 1957) புது டில்லி ஹுஸைன் பக்ஷ் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராகவும் அருகிலுள்ள பள்ளிவாசலில் (இமாம்) தொழுகை நடத்தி வைக்கும் பணியிலும் இருந்தார். கைக்கடிகாரம் பழுது நீக்கும் சிறிய கடை ஒன்றை நடத்த அவர் விரும்பினார். அதை கவனித்துக் கொள்ள தேர்ந்த தொழிலாளியைத் தேடினார். அந்தப் பள்ளிவாசலில் தொழ வந்திருந்தவர்களில் 40 வயது மதிக்கத்தக்க ஒருவரும் இருந்தார் விசாரித்தபோது அவர் காஷ்மீரைச் சேர்ந்த முஹம்மத் தீன் என்பது தெரிய வந்தது. தாங்கள் ஏன் புதுடில்லி வந்திருக்கிருக்கிறீர்கள் என கேட்டதற்கு வேலை தேடி எனப் பதிலளித்தார். சரி, உங்களுக்கு கடிகாரம் பழுது நீக்கும் பணி தெரியுமா என மீண்டும் கேட்டதற்கு ஆம் அதில் தேர்ந்த அனுபவம் எனக்கு உண்டு என்றார். சரி, புது டில்லியில் உங்களுக்குப் பொறுப்பேற்கத் தங்களை முன் / பின் அறிந்தவர் யாரேனும் உண்டா எனக் கேட்டார். அல்லாஹ்வைத் தவிர வேறு யார் எனக்குப் பொறுப்பாளராக இருக்க முடியும்? உங்களுக்கு அதில் திருப்தி எனில் நான் இப்பணியை ஏற்றுக் கொள்கிறேன் என்றார்.

முஹம்மத் தீன் காஷ்மீரியின் இந்த உரையாடல் முஹம்மத் காசிமுக்குப் பிடித்துப் போனது. ஆகவே முஹம்மத் தீனை தன் கடையின் பணியாளராக அமர்த்திக் கொண்டார். இந்த நிகழ்வுக்குப் பின் பல ஆண்டுகள் கழிந்ததும் இருவரும் திருப்தியுடன் இருந்தனர். முஹம்மத் காசிமின் கடை வெற்றிகரமாக நடந்து கொண்டிருந்தது.

இதுபோன்ற நிகழ்வுகள் நற்குணத்தின் வலிமைக்குச் சான்று பகர்கின்றன. உண்மையில் நல்லியல்பு கொண்டிருப்பவர்களிடமே இதுபோன்ற திட்டவட்டமான உரையாடலை தன்னைப் பற்றி முன்வைக்க முடியும்? சூரியனுடன் ஒளியும் நீரோட்டம் பாயும் இடத்தில் பசுமையும் இருப்பதுபோல நன்னம்பிக்கை வெளிப்படும் எனில் வெற்றி கிடைப்பது உறுதி.

## நன்னம்பிக்கை ஏற்படுத்துங்கள்

நூறு ரூபாய் முதலீட்டில் புதுடில்லியில் ஒருவர் தொழில் ஒன்றை ஆரம்பித்தார். பெரிய ஆடைகளைத் தயாரிக்கும்போது மீதமாகும் துண்டுத் துணிகளை வாங்கித் தலையில் சுமந்தவராக

வீதிகளில் வீடு வீடாகச் சென்று விற்றுக் கொண்டிருந்தார். பிறகு ஒரு கடை வாசலில் சாலையோரம் அமர்ந்து வியாபாரம் செய்ய அனுமதி பெற்றார்.

இந்தச் சிறு நேர்மையான கொடுக்கல் வாங்கல்களால் மொத்த வியாபாரியோடு நல்லுறவை ஏற்படுத்தி இருந்தார். அவர் கடனாகவும் துணிகளைத் தர ஆரம்பித்தார். தவணை காலக்கெடு முடியும் முன்பே உரிய பணத்தையும் இவர் செலுத்தி வந்தார். நன்மதிப்பையும் பெற்றிருந்ததால் ரூ.1150,000/ கடனாக சரக்கு தர முன்வந்தார். இது ரொக்கக் கொள்முதல் போல் மாறிவிட்டது. இப்படி வேறு எவருக்கும் தந்ததில்லை.

இவ்வளவு பெரிய தொகைக்கான சரக்கு நடைபாதையில் வைக்க முடியவில்லை. ஆகவே ஒரு கடையைப் பிடித்து வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தார். வியாபாரம் வளர்ச்சி கண்டது. இப்பொழுது நகரின் முக்கியமான துணிக் கடை உரிமையாளராகி விட்டார்.

வாழ்க்கையில் பணம் என்பது பொருட்டே அல்ல. நன்னம்பிக்கையே முக்கியமானது. பணத்தைக் கொடுத்துப் பொருட்களை வாங்க முடிவதைப் போல நற்குணத்தின் அடிப்படையில் எதையும் வாங்க முடியும். நன்னம்பிக்கை வெறும் வாய் வார்த்தையில் வருவது அல்ல. இதை ஒரு நாளில் பெற்று விட முடியாது. நன்னம்பிக்கை நற்செயலின் விளைவு, நற்பலன். புறவுலகம் இந்த விஷயத்தில் முக தாட்சண்யம் பார்க்காது. குறை காண முடியாத நற்செயலை ஆண்டாண்டு காலமாகச் செய்து வரும்போது நன்னம்பிக்கை தானாக உருவாகும். மேற்கண்ட நடைபாதை சிறுவணிகர் பெருமுதலாளியிடம் அம்மாதிரியான நன்னம்பிக்கையின் அடையாளமாக இருந்தார்.

ഌ൴ഌ൴ഌ൴

## ஆர்வம் போதுமானது

உஸ்தாத் யூசுஃப் தெஹ்லவி (1907 - 77) உருது மொழியை அழகான வடிவில் எழுதும் Calligraphy கலைஞர். அந்தக் கலையில் வியப்பூட்டும் ஆளுமையாக இருந்தார். ஒருமுறை யமுனை நதிக்கரையில் போட்டி ஒன்றுக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

Ustad Yousuf Dehlavi நீண்ட மூங்கில் கழியைக் கையில் வைத்திருந்தார். உருது மொழியின் (Alif to Shin) முதல் 17 உயிரெழுத்துக்களை பெரிய அளவில் ஒரு Furlong தூரத்துக்கு எழுதிச் சென்றார். நிறுத்திவிடும்படி சொல்லப்பட்ட பிறகே Ustad

Yousuf Dehlavi நிறுத்தினார். இது பெரிய சாதனையாக, கண்ணைக் கவரும் விதமாக அத்துறையில் அவரின் மேதமையைக் காட்டியது. பின்னர் அந்த எழுத்துக்களின் மீது வண்ணப் பொடிகளைத் தூவி விமானம் மூலம் புகைப்படம் எடுக்கும்படி கேட்டுக் கொண்டார். அதைக் கொண்டு எல்லா எழுத்துக்களையும் ஒரே நேரத்தில் ஒருசேர பார்க்கும்படி அந்த புகைப்படம் இருந்தது. இப்பொழுதுதான் வழக்கமான தாளில் அழகிய முறையில் எழுதினால் எப்படி கலைநயத்துடன் ஒரே அளவில் இருக்குமோ அதேபோல இந்த ஒரு furlong தொலைவு வரை நீண்ட பெரிய எழுத்துக்களும் இருக்கும் எனச் சொன்னார். அதன் பிறகு போட்டியாளர்கள் எவருமே இந்த போட்டியில் கலந்துகொள்ளும் எண்ணத்தில் இல்லை.

நாடு விடுதலை அடைந்த பிறகு அவர் பாகிஸ்தானில் குடியேறி அங்கும் தன் திறமையை வெளிப்படுத்தினார். Shah Saud (1902 - 1969) பாகிஸ்தான் வந்திருந்தபோது அவரை வரவேற்கும் விதமாகத் தலைநகர எல்லையின் சாலை வளைவு ஒன்று கட்டப்பட்டது. அதில் அழகிய கலையெழுத்தைப் பொறிக்கும் பணிக்கு Ustad Yousuf Dehlavi தெரிவு செய்யப்பட்டார். இதை மேற்பார்வையிட நேரடியாக Governor General அந்த இடத்துக்கு வந்து பார்த்து இதை எழுதியது யார் எனக் கேட்டு வியந்து போனார்.

ஆகவே Ustad Yousuf Dehlavi மீண்டும் அழைத்து வரப்பட்டார். இதை எழுத உங்களுக்கு எவ்வளவு நாட்கள் ஆனது என விசாரித்தபோது ஏழு நாட்கள் என பதிலளித்தார். பாராட்டும் விதமாக மொத்தத் தொகையில் ஊக்கப்பரிசாக ரூ.7000/ தரும்படி ஆளுநர் உத்தரவிட்டார். உடனடியாக அவரது செயலாளர் அதற்கான காசோலையை அளித்துவிட்டார்.

இந்த Calligraphy எழுத்தணிக்கலையை எங்கு கற்றீர்கள் என்று Ustad Yousuf Dehlaviயிடம் ஒருவர் கேட்டார். அதற்கு அவர், எவரிடமிருந்தும் இல்லை என்றும் இத்தனைக்கும் தன் தந்தைகூட ஒரு Calligrapherதான் என்றும் கூறினார். பின் எப்படி இவ்வளவு பெரிய மேதமையைப் பெற முடிந்தது என்று கேட்டதற்கு சுயமாக டில்லி செங்கோட்டையில் என்றார். முகலாய ஆட்சியின் Calligraphy களின் மாதிரிப் படிகளில் ஏராளமானவை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. பத்தாண்டுகளுக்கும் மேலாக தினமும் அங்கு போய்க் கொண்டிருந்தார். அவற்றைப் பார்வையிட்டு ஒரு நாளைக்கு ஒன்று என அந்த அரிய பிரதிகளை மனதில் பதிய வைத்து தினமும் அதே போல் எழுதிப் பார்த்துக் கொண்டிருந்தார். மறுநாள் தான் எழுதியதை செங்கோட்டை அருங்காட்சியகத்திற்கு

எடுத்துச் சென்று மூலப் பிரதியோடு ஒப்பிட்டுப் பார்ப்பார். தேவையெனில் உரிய திருத்தங்களைச் செய்தார்.

இந்த வகையில் Ustad Yousuf Dehlavi-யின் எழுத்துக்கலை மேம்பட்டது, செம்மையானது. கற்றுக்கொள்ள குருவென்று யாருமில்லை. அவர் சீடராகவும் தேவைப்படவில்லை. பணமில்லாமல் வழிகாட்டியென யாருமில்லாமல் ஒருவரால் உச்சம் தொட முடியும். அவருக்குத் தணியாத ஆர்வமும் கடப்பாடும் இருந்தால் மட்டும் போதும்.

ஜஜஜ

## தடைகளுக்கு அப்பால்

சாலைப் பணிகள் நடந்து கொண்டிருக்கும்போது அதன் தொடக்கப் புள்ளியில் "சாலை அடைக்கப்பட்டுள்ளது" அதாவது 'முன்னே செல்ல வழியில்லை' என்ற அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். அந்தக் குறிப்பிட்ட சாலை என்றென்றைக்கும் மூடப்பட்டுள்ளது என்று இதன் பொருளல்ல. அந்தக் குறிப்பிட்ட சாலை மட்டுமே அடைபட்டுள்ளது என அனைவருக்கும் தெரியும். மாற்றுப் பாதையில் இடது / வலது பக்கம் திரும்பிப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்பது பொருள். சற்று சுற்றி வந்த பின் பயணிகளுக்கான சாலை கிடைத்துவிடும். தொடர் பயணம் எளிதாகும். இந்த மாற்றுப் பாதையில் சற்று தாமதமாகுமே தவிர ஒருபோதும் பயணம் நிற்கப்போவதில்லை.

வாழ்க்கையும் இது போன்றதே. வாழ்க்கைப் பயணம் நின்று போவது போல் தோன்றினாலும் வழி அடைபட்டதாகத் தெரிந்தாலும் மாற்றுப் பாதையில் முன்னேற முடியும். வேறொரு பாதையைக் கண்டறிய முடியும். முக்கிய சாலை அடைபட்டுள்ளது என்றால் துணைச் சாலைகள் இன்றும் திறந்தே இருக்கும்.

சுற்றி வளைத்துப் பார்க்க வேண்டிய விஷயம் இது. கஷ்டமான சூழலை எதிர்கொள்ள நேரிட்டால் தலைமோதி அதை ஒன்றும் செய்ய முடியாது. அதை மறைமுகமான வழிகளில் கடக்க முற்பட வேண்டும். சமரசம் செய்து, விட்டுக் கொடுத்து சரியான தீர்வை அடைய முடியும்.

ஒரு துறையில் வாய்ப்புகள் சுருங்கிப் போகின்றன அல்லது முற்றும் அற்று விடுகின்றன எனில் வேறொரு துறையில் கிடைக்கும் வாய்ப்புகளை க்கண்டறிவது அவசியம். முன் வரிசையில் இடம் கிடைக்கவில்லை எனில் பின் வரிசையில் இடமுள்ளதா எனப்

பார்க்கவும். உதவி செய்ய ஆட்கள் கிடைக்கவில்லையெனில் தனியாக எதிர்கொள்ளும் திறனை வளர்த்துக் கொள்ளவும். இரக்கமுள்ளவர்களை காணாவிட்டால் கழிவிரக்கம் கொள்ள வேண்டாம். இறைவனின் பேரருளில் தஞ்சம் அடையுங்கள். அடைபட்ட ஒவ்வொரு பாதைக்கு அருகிலும் அகலத் திறந்த ஒரு வழியுண்டு. திறந்த கண் உள்ளவர்களுக்கே அது புலப்படும். பிணங்கினால் கிடைக்காத பொருட்கள் இணங்கிச் செல்வதால் கிடைக்கக்கூடும். நேரடிப்போட்டியில் கிடைக்காதவை மறைமுகமாகக் கிடைக்கலாம். கூட்டாக முயன்றபோது கிடைக்காதவை தனி முயற்சியில் கிடைத்து விடும். மனிதர்களிடமிருந்து கிடைக்காதவை இறைவனிடமிருந்து கட்டாயம் கிடைக்கும்.

தாழிடப்பட்ட கதவுகளுக்கு மாற்றாக வேறொரு இடத்தில் வாசல் திறந்திருக்கும். துணிவு கொண்டவர்களுக்கே அது புலப்படும்.

ஐஐஐ

## அறிவைப் பயன்படுத்துதல்

புதுடில்லியில் ஓர் அச்சுக்கூடம் இருந்தது. அந்த அச்சகம் தன் பணியில் காண்பித்த நேர்த்தியைப் பார்த்து புதுடில்லி தூதரகம் தொடர்ந்து இவர்களிடம் அச்சுப் பணியைக் கொடுத்து வந்தது. வேறு எவருக்கும் அந்தப் பணி போகாது. பொதுவாக அச்சகத்தில் அச்சடிக்கத் தரும்போது முழுமையாக அச்சுக்குப் போகும் முன் அதன் மாதிரிப் பிரதி ஒன்றை பெரிய தாளில் உரியவர்களுக்குத் தருவது வழக்கம். இதனால் வடிவமைப்பின் குறைகள், பக்கங்களின் குறைகள் ஏதும் இருந்தால் அதைச் சரி செய்யும் இதனால் வாய்ப்பு அதிகம்.

முதன் முறையாக புது டில்லியிருந்த தூதரகம் ஒன்றின் அச்சுப் பணிக்கான டெண்டர் வந்தது. இந்தக் குறிப்பிட்ட பணியை முழு நூலாக பதிப்பித்து அதைக் கடினமான அட்டையில் பைண்டிங் செய்து தூதரகத்தில் மாதிரிப் பிரதியாக ஒப்படைத்தது. அது முழுமையான நூலாகவே இருந்தது.தூதரக அதிகாரிகள் இதைப் பார்த்ததும் மிகவும் மகிழ்ந்தனர். அங்குள்ள அச்சுப் பணி அனைத்தும் இவர்களுக்கே கிடைத்தது.

சில ஆண்டுகளுக்குப் பிறகு வேறொரு அச்சக உரிமையாளர் அந்தத் தூதுரகம் சென்று தாங்கள் ஏமாற்றப்படுகிறீர்கள். இந்த அச்சுப்பணிக்குத் தாங்கள் அதிக விலை தருகிறீர்கள் என்றார். இவரது பேச்சுக்கு மதிப்பளித்து அங்கிருந்த அச்சுப் பணி இவரிடம்

தரப்பட்டது. மாதிரிப் படி தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டது. தரக்குறைவான இந்தப் பணியில் அதிருப்தியடைந்த தூதரகம் சாதாரண தாளில் பழைய முறையில் இருந்ததைப் பார்த்துவிட்டு இனி அச்சடிக்க வேண்டாம் எனக் கூறி இரத்து செய்துவிட்டனர். வழக்கம் போலவே பழைய அச்சக உரிமையாளரைத் தொடர்பு கொண்டு இந்தப் பணி மேற்கொள்ள அறிவுறுத்தினர்.

உங்களிடம் வைரம் இருந்தால் அதன் மதிப்பு தெரிந்தவர் உறுதியாக உங்களைத் தேடி வருவார். திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதும் நிச்சயம்.

ஐஞஐஞஐஞ

## கொடுத்தால் பெறுவோம்

ஒன்றிய அரசின் சட்டப் பணியாற்றிய Surjit Singh Lamba (பிறப்பு 1931) புது டில்லி கீர்த்தி நகரில் வசித்து வந்தார். அவர் அபாரமான (Photographic memory) நினைவாற்றலைக் கொண்டிருந்தார். அதாவது தான் படிக்கும் நூலிலுள்ள செய்யுளை, கட்டுரையை முழுமையாக மீளக்கூறும் திறன் படைத்தவர். 12061983ந் தேதி அவர் நம் அலுவலகம் வந்திருந்த போது கிறீஸிவீஉணீறீணீ மாத இதழைப் படித்த பின் வரிக்கு வரி நினைவு கூர்ந்தார்.

அல்லாமா இக்பால் அவர்களின் கவிதை மீது தனி ஈடுபாடு உடையவர். அவரது ஆயிரக் கணக்கான உருது செய்யுளை மனனமாக கூறக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார். மேலும் அல்லாமா இக்பாலின் வாழ்க்கை வரலாறு குறித்தும் ஏராளம் அறிந்து வைத்திருந்தார். 1983ஆம் ஆண்டு பாகிஸ்தான் சென்றிருந்தபோது இக்பால் கவிதைகளில் Surjit Singh Lamba அறிஞர் என்பதால் கௌரவிக்கப்பட்டார். லாகூர் நகரைச் சேர்ந்த Amir Hussain Lahori என்பவரும் இக்பால் கவிதைகளில் அங்கு பாகிஸ்தானில் மேதை எனக் கருதப்படுபவர். ஆகவே தன்னைவிட அதிகக் கவிதைகளை ஒப்புவித்து போட்டிக்குத் தயாரா எனச் சவாவல் விட்டார். வெற்றி பெறுமபட்சத்தில் ரூ.50000/ பரிசு அளிக்கிறேன் என்று அமீர் ஹுசைன் லாஹுரி கூறினார்.

இக்பால் அவர்களின் ஏதேனும் ஒரு செய்யுளை எடுத்து ஒருவர் கூறிய பிறகு அடுத்த வரியை மற்றவர் பின்தொடர வேண்டும் என முடிவு செய்யப்பட்டது. Surjith Sing Lamba ஒரு பிழையும் செய்யாமல் முழுமையாக ஒப்புவித்தார். அமீர் ஹுசைனால் அவ்வாறு செய்ய முடியவில்லை, தோற்றுப் போனார்.

நான் இக்பாலின் கவிதைகளை விட்டில் பூச்சி விளக்கை சுற்றி வருவதைப் போல பல பத்தாண்டுகளுக்கு மேல் பயிற்சி செய்திருக்கிறேன். என்னைவிட அதிகமான காலம், அப்படி வாசித்து இருந்தால் மட்டுமே உங்களால் என்னைவிடச் சிறந்தவராக தங்களை நிறுவி இருக்கமுடியும் என்று Surjit Singh Lamba கூறினார்.

எந்தத் துறையாக இருந்தாலும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டால் அதில் வெற்றி பெற முடியும். கடும் உழைப்பும், போட்டியில் வெல்ல வேண்டும் என்கிற மனப்பான்மையும் இருந்தால் அது சாத்தியமே. வாழ்க்கை என்பது கொடுக்கல் வாங்கல் போன்றது. மூளை, உழைப்பு, திறமை, பணம் ஆற்றல் இவை எதுவாக இருந்தாலும் முதலீடு செய்வதற்கு ஏற்பப் பலன் கிடைக்கும். எவ்வளவு தருகிறோமோ அதற்கு ஏற்றபடி திரும்பப் பெற முடியும். எதையும் தராமல் இங்கு பெற முடியாது என்பதும் குறைவாக அளித்துவிட்டு அதிகமாகப் பெற நினைப்பதும் நடக்கப் போவதில்லை என்பதையும் புரிந்து கொள்வது நல்லது.

ஐஐஐ

## வெறுமனே...

“நான் ஒரு மனிதரைப் பார்க்கிறேன். எனக்கு பிடித்துப் போகிறது. பிறகு அவர் எந்த வேலையிலும் இல்லை என அறிய வரும்போது என் பார்வையில் அவரது மதிப்பு சரிந்து விடுகிறது” என கலீஃபா உமர் (584 - 644) கூறியதாக முஹம்மத் இப்னு ஆஸிம் அறிவிக்கிறார். இதேபோல “Talbees-e-Iblees” என்ற நூலில், உமரைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். “இளைஞர்களைக் காணும்போது பிடித்தமானவர்களாகத் தெரியவந்தால் உனக்கு ஏதும் வேலை உண்டா? என உமர் கேட்பாராம். இல்லை என்கிற பதில் கிடைத்தால் அவரை மதிக்க மாட்டார் என்று Ibn Jauzi (1116 - 1201) பதிவு செய்துள்ளார்.

வெறுமனே இருத்தல் மோசமான செயல். அவ்வாறு அமர்ந்திருந்தால் அது நற்பண்புகளை விழுங்கி விடும். வேலையற்று இருப்பவர் உயிருடன் இருப்பதாகத் தோன்றினாலும் நடைமுறையில் அவரொரு பிணம்.

கடின உழைப்பைக் கைவிடும்போது அல்லது கடின உழைப்பைக் கொடுக்காத ஒரு வேலையை கண்டுபிடிக்க முடியாமல் போகும்போது ஒரு நபர் வேலையில்லாமல் போய்விடுகிறார். அல்லது தான் விரும்பும் வேலை வாய்ப்புக்காகக் காந்திருந்து நேரத்தை விட்டு

விடுகிறார். நுண்ணுணர்வு மனிதனில் மேன்மையானது. மனிதனை மனிதனாக்கும் பண்பு நலன் அது.

பாகப்பிரிவினையில் மரபுரிமையாகச் செல்வத்தைப் பெறுதல்; எந்தவொரு உழைப்பும் இல்லாமல் எதேச்சையாக வருமான ஆதாரங்களைப் பெறுதல் மனிதனை சோம்பேறியாக்கும். ஒரு நபர் எவ்வளவு வசதியாக இருப்பதாகத் தோன்றினாலும் இவ்வகை வருமானம் அந்தத் தனிநபரின் வளர்ச்சிக்கே தீங்கானதாகும். முன்னேற்றத் தடைக் கற்களாகும். வட்டி, அசையா சொத்திலிருந்து கிடைக்கும் மாத வாடகை போன்றவை செயலற்ற தன்மைக்கு வழிவகுக்கும். தன்னிறைவு கொண்டிருப்பதாகத் தோன்றினாலும் இந்த வகை வருமானம் அவர்களின் வாழ்வை வீணடிக்கும்

ஒவ்வொரு நபருக்கும் வாழ்க்கையில் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். தனக்கென சில சட்டப்பூர்வமான தொழிலைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்த வேலையில் தன்னை எப்பொழுதும் ஈடுபடுத்தி வைத்திருக்க வேண்டும். அப்படி இல்லாதவர்களின் வாழ்க்கையில் உயிரோட்டம் இருக்காது. உயர் திறன் கொண்டவர்களை வேலையில்லாதவர்களாக நீங்கள் மிக அரிதாகவே கண்டிருக்க முடியும். வெறுமனே இருப்பவர்களிடம் உங்களால் ஆளுமையைக் காண முடியாது.

## தாமதம் கூடாது

மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் வாய்மொழித் தேர்வை நடத்திக் கொண்டிருந்தார். “இதயத் துடிப்பு அதிகமான ஒரு நோயாளிக்கு இந்த மருந்துகளில் எத்தனை தருவீர்கள் என்று ஒரு மாணவரிடம் கேட்டார். அதற்கு மாணவர் நான்கு” என்று பதிலளித்தார். ஒரு நிமிடம் கழித்து, பேராசிரியர் அவர்களே! என் பதிலைத் திருத்த எனக்கு அனுமதி கிடைக்குமா என்று அம்மாணவர் கேட்டார். “சரி! அதற்கு அனுமதிக்கிறேன்” என்று பேராசிரியர் தன் கைக்கடிகாரத்தை பார்த்துவிட்டு, ஆனால் நோயாளி இறந்து 40 நொடிகள் ஆகிவிட்டிருக்கும். அந்த வருத்தம் எனக்குள்ளது என்று கூறினார்.

நெருக்கடியான நேரங்களில் உடனடி முடிவும், சில செயல்பாடுகளையும் செய்ய வேண்டியுள்ளது. அதுவும் சரியான தீர்வாக இருக்க வேண்டும். இல்லா விட்டால் எதிர்பாராத மோசமான இக்கட்டில் சிக்க நேரிடும். வாழ்க்கையில் பரிதவிக்க நேரிடும். இதய நோயாளிகள் மிகவும் மென்மையான உடலைக் கொண்டிருப்பர்.

உரிய நேரத்தில் தேவையான மருந்து அளிக்கப்படுவது மிகவும் அவசியம். அந்தந்த நிமிடங்களில் முடிவெடுத்தாக வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு நொடியும் ஆபத்தானது. வாழ்க்கைக்கும் இதுவே பொருந்தும். சில விஷயங்களில் தாமதிக்காமல் உடனடியாகச் செயல்பட வேண்டியுள்ளது. அந்த இடத்திலேயே முடிவெடுப்பது தேவை. முழுமையான முடிவெடுப்பதில் ஏற்படும் தாமதங்கள் உயிரை பணயம் வைத்துவிடும்.

இரயில் பயணம் போன்றதுதான் வாழ்க்கையும். இரயில் பயணத்துக்கு முன்தயாரிப்பு அவசியம். தேவையான ஆடை, இதர பொருட்கள் நம்மிடம் உள்ளனவா என உறுதிப்படுத்திக் கொண்டு நம் சுமைகளைத் தயாராக வைத்திருக்க வேண்டும். பயணச் சீட்டு, இருப்பிடத்திலிருந்து இரயில் நிலையத்துக்குப் போக உரிய போக்குவரத்து ஏற்பாடு, நடைமேடையில் குறித்த நேரத்தில் இருப்பது என முன் முன்தயாரிப்பு இல்லாவிட்டால் தாமதமாக நேரிடும். இரயில் யாருக்காகவும் காத்திருக்காது. குறித்த நேரத்தில் இரயில் வரும், போய்விடும்.

மேலே குறிப்பிட்ட மருத்துவ மாணவர் முன் தயாரிப்பு இல்லாமல் இருந்தார். ஆகவே சரியான பதிலை மிகத் தாமதமாக அளித்தார். வாழ்க்கையின் ரயில் குறித்த நேரத்திற்கு வந்து புறப்பட்டுப் போய்விடும். அதுபோலவே வாய்ப்புகள் குறித்த நேரத்திற்கு வரும். அதைப் பயன்படுத்திக் கொள்பவர்கள் வளர்ச்சி நாயகர்களாகவும் இழந்தவர்கள் வீணாய்ப் போனதும் வரலாறு.

நமக்கான துறையில் முழு கவனத்துடன் நல்ல கல்வியை, பயனுள்ள அனுபவத்தைப் பெறுவதும் முக்கியம். மனரீதியான ஏற்பும், உடல் அளவிலான தயாரிப்புடன் இருந்து வாய்ப்புகளைக் கைப்பற்ற வேண்டும். குறிக்கோள் இல்லாமல் பைத்தியக்காரத்தனமாக ஆற்றலை வீணடிப்பது நிச்சயமற்ற தன்மையைக் கொண்டு வரும்.

## சிறந்ததை உருவாக்கு

ஒரு பள்ளிவாச்லில் இளம் மதகுரு இமாமாக நியமிக்கப்பட்டிருந்தார். கூடவே வழிபாடு தொழுகை நடத்தி வைப்பது மட்டுமின்றி திருக்குர்ஆன் விரிவுரை செய்வதும் அவருடைய கடமையில் இருந்தது. அதற்கு ரூ.25/ மாதச் சம்பளத்துடன் இரண்டு வேளை உணவும், தங்கும் அறையும் கொடுக்கப்பட்டது. இது மிகக் குறைவான சம்பளம் என்றபோதிலும் இருப்பிட வசதி இலவசமாகக் கிடைப்பதால் பணியை ஒப்புக்

கொண்டார். தான் இல்லாவிட்டாலும் தன் பிள்ளைகளாவது பொருளாதாரத் தன்னிறைவு பெற்றவர்களாக மாற முடியும் என நம்பினார். தங்குவதற்கான இந்த ஏற்பாட்டில் தனது பிள்ளைகளின் கல்வியும் வேறு வாய்ப்புகளும் பிறக்கும் என எதிர்பார்த்தார்.

பள்ளிவாசலில் அவர் மதகுரு, வழிபாடு நடத்திவைப்பவர். ஆனால் சாதாரண பணியாளரைப் போல நடத்தப்பட்டார். அற்பமான விஷயங்களுக்கு எல்லாம் அவர் இகழப்பட்டார். நகைக்கப்பட்டார். பானை எங்கே, அதில் தண்ணீர் ஏனில்லை? துடைப்பம் எந்த இடத்திலுள்ளது? ஏன் குப்பை அள்ளிப் போடவில்லை என கேள்வி மேல் கேள்வி கேட்டு வந்தனர். குறைவான வருமானம் என்பதைத் தாங்க முடிந்தது. ஆனால் இது போன்ற இழிவை சகிக்க முடியவில்லை.

மனநிறைவுக்காகவும், தன் பொருளாதார நிலைமையை மேம்படுத்தவும் வேறொரு பணியைத் தேடுவது அவசியம் எனக் கருதினார். இந்த பள்ளிவாசல் இமாம் வேலை போதும் போதுமென்றாகி விட்டது. ஆனால் இங்கிருந்து விலகி விடுவதன் முதல் நட்டம் தங்கும் அறை பறிபோவதும் வேறொரு இருப்பிடத்தை அந்த மாநகரில் தேடுவது பெரும்பாடு என்பது அவருக்குத் தெரிந்திருந்தது.

ஆனாலும் உள்ளூரின் மருத்துவக் கல்லூரியில் படிக்கச் சேர்ந்துவிட்டார். கூடவே வழக்கம்போல் இமாம் வேலையும் இருக்கவே செய்தது. ஐந்தாண்டுகளில் பள்ளிவாசலில் கிடைத்துக் கொண்டிருந்த மோசமான அனுபவத்தை இன்முகத்தோடு சகித்தார். புதிய படிப்பு முடியும் வரை இந்தக் கஷ்டத்தைத் தாங்கியாக வேண்டும் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. இழிவும் வேதனையும் முழு வாழ்க்கையில் நீடிக்கக் கூடாது எனில் ஐந்தாண்டுகள் வரை சகித்துக் கொள்வது குறைந்த நட்டம் அல்லவா?

கூட்டுப் பிரார்த்தனைக்காக வருகை தரும் பக்தர்களின் முன் தலையைத் தொங்கப் போடும் அவலம் வராத ஒரு காலம் கட்டாயம் வரும் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். எதிர்பார்த்தது போலவே மருத்துவப் படிப்பின் சான்றிதழ் கைக்கு வந்து சேர்ந்தது. பொறுமை வென்றது, புதிய ஆற்றல் பிறந்தது. வாழ்நாள் முழுக்க சகித்த கண்ணியக் குறைவும், சங்கடமும் இனி நீங்கிவிடும்.

இறுதியாக மருத்துவராக நல்லதொரு எதிர்காலம் அவரை எதிர்நோக்கிக் காத்திருந்தது. பள்ளிவாசல் இமாம் பணியை நன்றி கூறி துறந்தார். தனக்கென சிறிய கிளினிக் மருந்தகம்

ஒன்றை ஆரம்பித்தார். வாழ்க்கையில் நல்ல அனுபவத்தையும் போராட்டமாகக் கழிந்த நாட்களில் அறிந்துகொண்ட பாடங்களும் நிறைய கற்றுக் கொடுத்திருந்தன.

அவர் கடும் உழைப்பில் புத்திசாலித்தனமாக மருத்துவப்பணி செய்தார். வீடு ஒன்றை சொந்தமாக வாங்கிக் கொண்டார். ஓர் ஆண்டுக்குள் அவருக்கு மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர் பணியும் கிடைத்தது. இது அவரின் முழு வாழ்க்கையை மாற்றியமைத்தது. நேற்று 'முல்லாஜி' என்று அழைக்கப்பட்டவர் இன்று 'மருத்துவர் ஐயா' என மதிப்புடன், மரியாதையுடன் அழைக்கப்பட்டார். இப்பொழுது அவருக்கு பொருளாதாரச் சிக்கல்களும் இல்லை.

விரும்பத்தகாத நிகழ்வுகள் வருகிறதென்றால் வெறுப்பைக் கொண்டோ, முறையிட்டோ பயனில்லை, மாற்று வழியில் அதை எதிர்கொண்டு மீண்டெழ முடியும். அறிவைப் பயன்படுத்தி எதிர்காலத்தை உருவாக்குவதில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். தடைக்கற்களாக இருந்தவையே படிக்கல்லாக மாறி புதிய வாய்ப்புகளை அளிக்கும்.

## பெரிய பாய்ச்சல் எப்போது?

போட்டி மிகுந்த உலகில் போதுமான முன் தயாரிப்புகளுடன் செல்வது அவசியம். அவ்வாறு செய்யாவிட்டால் தோல்வியிலிருந்து தப்பிக்க முடியாது.

Neil Armstrong *(1930 2012)* அமெரிக்க விண்வெளி வீரர் *1969* ஜூலை மாதம் நிலவில் இறங்கி, "That's one small step for a man, one giant leap for mankind" என்று ஒரு செய்தியை பூமியிலுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பினார். அதாவது "அந்த ஒரு காலடித் தடம் மனித குலத்தின் மாபெரும் பாய்ச்சல்" என்பதாகும்.

மிக முக்கியமான விண்வெளி வீரர்களில் Neil Armstrong-ங்கும் மற்ற இரு வீரர்கள் என மூவருக்கு மட்டுமே அந்த வாய்ப்பு கிடைத்தது. அறிவாற்றல், உடல் வலு, தகவல்களை உட்கிரகிக்கும் தன்மை, மனவலிமை, சவாலை எதிர்கொள்ளும் விதம் ஆகியவற்றில் தேர்ச்சி என்பவை இதற்குக் காரணம்.

தேர்வு செய்யப்பட்ட பின்பு கடுமையான பயிற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். அதாவது நெடுநேரத்திற்குள் அமிழ்ந்து இருப்பதன் மூலம் எடையற்ற தன்மை இங்கே பூமியிலேயே உணர முடிந்தது. அவசர நேரத்தில் வான்வெளிப் பயணம்,

விமானப் போக்குவரத்து, நிலவின் இயற்பியல், கணினி தகவல் மைய விண்வெளித் தரவு போன்றவற்றையும் அறிந்து கொள்ள முடிந்தது.

Apollo II விண்ணூர்தி 3100 டன் எடை கொண்ட விண்கலம். அது 36 மாடி அளவுக்கு உயரமான 8 இலட்சம் கருவிகள் 91 இன்ஜின் அதன்மீது கொலம்பியா என்ற கட்டுப்பாட்டு அறையில் அமர்ந்து நிலவுக்குப் புறப்பட்டது வரலாற்றுப் பயணம்.

எரியூட்டப்பட்ட விண்கலம் சுமார் இரண்டரை மணிநேரங்கள் வட்டமடித்தது. பிறகு நிமிடத்துக்கு 403 கிமீ. என வேகம் கூட்டப்பட்டு 300 மைல் உயரத்தில் சுற்றுக்கு விடப்பட்டது. பிறகு கொலம்பியா தனித்து பிரிந்து சுழன்றது. ஏராளமான இயந்திரங்களுடன் இருவர் மட்டுமே அமரக்கூடிய சாதாரண டாக்சி கார் போல பறந்தது. இறுதியாக விண்வெளி வீரர்கள் நிலாவில் இறங்கினர். அங்கிருந்து 46 பவுண்ட் மண்ணை அவர்கள் தம்முடன் பூமிக்கு எடுத்து வந்தனர். இவர்கள் எடுத்துச் சென்ற 5 இலட்சம் பவுண்ட் எடை கொண்ட சாதனங்கள் அங்கே நிலாவிலேயே விட்டு அவர்கள் வந்தனர். விட்டு வந்த காலடித் தடம் இன்னும் 5 இலட்சம் ஆண்டுகள் அப்படியே இருக்கும் எனக் கருதப்படுகிறது.

இத்தனை பெரிய முன் தயாரிப்புக்கு பிறகுதான் சிறிய காலடித் தடத்தை மனிதனால் நிலாவில் பதிக்க முடிந்தது. அதுவே உண்மையில் மனித குலத்திற்கான பாய்ச்சலாக இருந்தது.

## பூச்சியத்திலிருந்து

நான் ஒவ்வொரு படியாக ஏறி இந்த நிலையை அடைந்திருக்கிறேன். லிஃப்டின் மூலமாக அல்ல, இதுவொரு தையல்காரரின் பார்வை. அவர் ஒன்றுமில்லாத பூச்சியத்திலிருந்து தொடங்கி வெறுமனே தம் இரண்டு கைகளால் உழைத்து முன்னேறியவர். நல்லதொரு கோட்டு சூட் தயாரிப்பது குழந்தைகளின் விளையாட்டல்ல.

இந்தப் பணி மிகவும் சிக்கலானது. இறுதி வரை கோட் தைப்பது என்பதில் ஒவ்வொரு தகவலும் அனுபவமில்லாமல், தொழில் திறனில்லாமல் முடிக்க முடியாது. உழைப்பின்றி இதை நிறைவேற்ற இயலாது. ஒரு முழு ஆயுளை ஒப்படைத்த பிறகே மக்களின் மனங்கவர்ந்த தையலகம் ஒன்றை நடத்துவதில் என்னால் வெற்றி கொள்ள முடிந்தது என்கிறார்.

முதலில் பயிற்சிக்காக நல்லதொரு தையல் மாஸ்டரிடம் சாதாரண தொழிலாளியாகப் பணியில் அமர்ந்தார். ஐந்து

ஆண்டுகளுக்குத் துணியை வெட்டுவது, தைப்பது என சிறு, சிறு பணியை கற்றுக் கொண்டார். அதன் பிறகே சிறியதொரு தையல் கடையை அவரால் தொடங்க முடிந்தது. இருந்தபோதும் தையல் கச்சிதமாக இல்லாததால் வாடிக்கையாளர் திருப்தி அடையவில்லை. இப்பிரச்சனை அவரை அலைக்கழித்தன. அதற்கான காரணம் பயிற்சியெடுத்த காலத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் உடலமைப்பைப் பொறுத்து வடிவ வேறுபாடுகள் உள்ளன என்பதைப் போதுமான அளவு கவனிக்கவில்லை என்பதே.

Human Anatomy மனித உடலின் வடிவ வேறுபாடுகளை அவர் கற்றுக் கொள்ளத் தொடங்கினால் அவ்வாறு மேலும் சில ஆண்டுகள் கழிந்த பின்பு கச்சிதமான கோட் தையல் கலைஞனாக அவர் உயர்ந்தார். பிறகு கூன் போன்ற உடல் ரீதியான குறைபாடு உடையவர்களுக்கும் ஏற்றவாறு உடையைத் தயாரித்துக் கொடுப்பவராகத் தேர்ச்சி அடைந்தார்.

“எந்தவொரு தொழிலிலும் பல்வேறு விஷயங்களை ஒருவர் சுயமாகக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. முன்கூட்டியே உணர முடியாத பிரச்சனைகள் வரக்கூடிய தடைகளைக் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது”.

தையல் கலைஞரின் பேச்சு பேராசிரியர் ஒருவரின் உரையைப் போல, அரசியல் தலைவரின் சொற்பொழிவைப் போலத் தனித்திறன் கொண்டிருந்தது.

எதார்த்தத்தில் நம் சமூக, பொருளாதார பிரச்சனைகளைத் தீர்க்க இதே போன்ற அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது சரியானதாக இருக்கும். ஏணிப் படிகளில் ஏறும் முறை, லிஃப்டில் ஏறும் முறை அல்ல! பட்டனை அழுத்திவிட்டால் தானாக மேலேறிச் சென்றுவிடும். லிஃப்ட் போல இதில்லை. படிப்படியாக மட்டுமே இங்கு வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவைகளை அடைய முடியும். உங்களால் ஒரு லிஃப்டை வாங்கிவிட முடியும். ஆனால் லிஃப்டைக் கொண்டு உங்கள் வாழ்க்கை மேலேறிச் செல்லாது.

## மேன்மேலும் திடம்

John Mennon என்ற ஆங்கிலேயர் Glasgow Advertiser என்ற நாளிதழை 1782ஆம் ஆண்டு தொடங்கினார். பிறகு Glasgow Herald என்கிற பெயரில் அது தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. அப்பொழுது அவரிடம் மரப் பலகையால் ஆன அச்சு இயந்திரம் ஒன்று 200 பவுண்டு பணம் மட்டுமே முதலீடாக இருந்தது. இன்று

Glasgow Herald மிகப் பிரபலமான நாளிதழ். 4 இலட்சம் பிரதிகள் நாள்தோறும் அச்சாகின்றன. இருநூறு ஆண்டுகளைக் கடந்த நிறுவனம் அது. புதிதாகத் தொடங்கப்பட்ட போது John Mennon னிடம் இருந்தது வெறும் ஆர்வம் மட்டுமே.

பங்குதாரர்களிடையே ஏராளமான முரண்கள் இருந்தபோதிலும் தொடர்ந்து செல்லும் ஆற்றலைக் கொண்டிருந்தார். எல்லாவிதமான சாதகமற்ற சூழலோடு, பலமுறை இந்நிறுவனம் மூடப்பட நாட்கள் குறிப்பிடப்பட்ட பிறகும் அது தொய்வின்றி வெளிவந்ததுடன் மேலும் அது திடமானதாகவும் மாறியது.

ஆரம்பத்தில் அது கையால், இயக்கப்படும் பலகை அச்சு இயந்திரத்தில் தொடங்கப்பட்ட நிலையில், இன்று முழுமையாக அதிநவீன இயந்திரத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. இரும்பு உருக்கு அச்சு வார்ப்புகளின் காலம் போய் விட்டது. அச்சும், மடிப்பும் ஒளி புகா லேசர் எழுத்துக்களில் உருவாகி ஞெகிழி உறையில் போடும் வரை தானியங்கிக் கட்டு கட்டாக பிரித்துக் கட்டி வினியோகப் பிரிவுக்கு அனுப்பி வைத்து விடுகிறது.

கணினி மயப்படுத்தப்பட்டு முழு வேகத்தில் பதிப்பக உரிமையாளர்கள், வாசகர்கள் அனைவருக்கும் இதனால் பெரிய மன நிறைவு உள்ளது. இது பதினெட்டாம் நூற்றாண்டிலேயே நின்று போயிருக்கக் கூடிய நாளிதழ்களில் ஒன்றாக இருந்தது. (Times of India 22-01-1984)

மேற்கூறப்பட்ட ஆங்கில நாளிதழ் இருநூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளியாகி வருகிறது. அச்சு, பதிப்பு வளர்ச்சிப் போக்கில் அது தன்னை இணைந்து முன்னேறியது. ஒருவேளை 25, 50 ஆண்டுகளில் அது நின்று போயிருந்தால் புறவுலகில் நடந்துள்ள மாறுதல்களுடனான உறவின்றி வரலாற்றின் பகுதியாக அது மாறியிருக்க முடியாது. தற்கால உலகில் எந்தவொரு வேலையும் இரண்டு நாட்களில் நடந்து விடுவதில்லை. இதைச் சாதிப்பதற்கு இரண்டு நூற்றாண்டுகள் தேவைப்பட்டிருக்கின்றன. அடங்காத ஆர்வம், தீவிர செயல்பாடு, இடைவிடா முயற்சி இவையன்றி பெரிய முன்னேற்றம் எதுவும் நிகழ்ந்து விடாது.

## மேலிடம் எப்பொழுதும் நிரப்பப்படாமல் இருக்கும்

அமைப்பியல் பிரச்சனை, ஆளெடுப்பதில் பாகுபாடு, வேலையின்மை தொடர்பாக முஸ்லிம் இளைஞர்கள் சிலர் உரையாடிக் கொண்டிருந்தனர். இதை அனைத்தையும் அமைதியாகக் கேட்டபடி

அனுபவம் வாய்ந்த ஒருவர் அமர்ந்திருப்பார். உங்களது முறையீடுகள் அனைத்தும் பொருளற்றவை. நிரப்பப்பட்ட பணியிடங்களில் நீங்கள் வேலை தேடிக் கொண்டிருக்கிறீர்கள். வெறுமனே காலியாக உள்ள இடங்களில் நீங்கள் முயன்று பார்ப்பதில்லை. உங்களது ஆளுமைத் திறன்களை வளர்த்துக் கொள்ளுங்கள். அதன் பிறகு முறையிட உங்களுக்கு காரணம் இருக்காது. கீழ்நிலைப் பதவிகள் பெரும்பாலும் காலியாக இருப்பதில்லை. ஆனால் உயர் பதவிகள் எப்பொழுதும் நிரப்பப்படாமல் உள்ளது என்பதை மனதில் வெறுப்பில்லாமல் பார்க்கும்போது உங்களுக்குப் புரியக்கூடும் என்று முத்தாய்ப்பாகப் பேசிமுடித்தார்.

தனித்திறனே வெற்றியின் இரகசியமாகும். நீங்கள் மாணவரோ, வணிகரோ, வழக்கறிஞரோ, மருத்துவரோ எந்த ஒரு துறையைச் சார்ந்திருந்தாலும் அது உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தனித்திறனை வளர்த்துக் கொண்டால் வெற்றி பெற முடியும். எலிப் பொறி ஒன்று உருவாக்க நீங்கள் கற்றுக் கொள்கிறீர்கள். அதில் உங்களை மிஞ்ச ஆளில்லை எனில் மக்கள் உங்கள் வாசல் கதவைத் தட்டி வாங்கிச் செல்வர். ஏற்கனவே புழக்கத்திலுள்ள அதே பழைய எலிப் பொறியை உருவாக்கிவிட்டுக் கொண்டிருப்பதே பொதுவான பிரச்சனை. நீங்கள் கடினமாக உழைத்தீர்கள் என்றால் சாதாரண அளவீடுகளிலிருந்து மேலெழுந்து விடுவீர்கள். அதன் பிறகு உங்களைத் தவிர்க்கவோ வேலையிலிருந்து எடுக்காமல் இருக்கவோ முடியாது. நீங்கள் திறமைசாலி எனில் எல்லா இடங்களிலும் உங்களுக்கு வேலை உள்ளது.

எல்லா சூழல்களிலும் வகுப்புவாத எண்ணம் கொண்டு, குறுகிய மனப்பான்மையில் இருந்து கொண்டிருக்கும் இயல்பான விஷயம் இது. ஆனால் அதற்கு ஒரு எல்லை உண்டு. அந்த எல்லையை உங்களால் கடந்துவிட முடிந்தால் வகுப்புவாத எண்ணம், குறுகிய மனப்பான்மை கொண்டவர்களால் பெரிய அளவில் நட்டம் எதையும் ஏற்படுத்திவிட முடியாது. நீங்கள் 45% உங்களது போட்டியாளர் 40% எனில் வகுப்புவாத எண்ணம் உங்களுக்குத் தடையாக மாறக்கூடும். ஒருவேளை நீங்கள் தவிர்க்கப்படலாம். ஆனால் போட்டியாளர் 40% உங்கள் மதிப்பெண் 60% எனில் வகுப்புவாத சாய்மானம், குறுக்கிய கண்ணோட்டம் எழுப்பும் அனைத்துச் சுவர்களும் வீழ்ந்துவிடும். உங்களது போட்டியாளருடன் நீங்கள் மிகைத்து இருப்பது உறுதி.

## எல்லாம் நமக்குள்ளே

புதுடில்லியில் அமைந்துள்ள பாராளுமன்ற வளாகத்தின் மைய மண்டபத்தில் இந்தக் கதை சொல்லப்பட்டது. முன்பு, Giani Zail Singh (1916 - 1994) குடியரசுத் தலைவராக இருந்தபோது கண் அறுவை சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றார். Texas மருத்துவமனைக்குச் சென்றபோது முன்னாள் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டியும் இங்குதான் மருத்துவம் பார்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது. அப்பொழுது அம்மருத்துவமனையின் தலைமை அறுவை சிகிச்சை நிபுணர் "தாங்கள் சிகிச்சைக்கு ரெடியா?" என்று கேட்டிருக்கிறார். உடனே அவர் "இல்லை, நான் ரெட்டி இல்லை, ஜைல் சிங்" என்று பதிலளித்திருக்கிறார். Hindustan Times December 4, 1982

மேலே கூறப்பட்டது நாம் இதுவரை கேட்டுவரும் எத்தனையோ சர்தார்ஜி நகைச்சுவைகளில் ஒன்று என கடந்து போக முடியாது. ஆனால் குடியரசுத் தலைவராக இருக்கும் ஒருவரைப் பற்றி இந்த மாதிரி மட்டமான ஜோக்கை உருவாக்கும் நெஞ்சுறுதி எப்படி ஏற்பட்டது என்கிற கேள்வி எஞ்சி நிற்கிறது. ஜவஹர்லால் நேரு, டாக்டர் ராதாகிருஷ்ணன் பற்றி இதுபோன்ற கீழ்த்தரமான கதைகளைப் புனைய முடியாது. காரணம் ஜைல் சிங் அவர்கள் பெரிய படிப்பாளி அல்ல என்பதே இதற்கான எளிய பதில்.

புறவுலகில் நீங்கள் எப்படி அறிமுகப்படுத்திக் கொள்கிறீர்களோ அந்தளவே அது உங்களை அறிந்து வைத்திருக்கும். அதன் பிரதிபலிப்பே உங்களுக்கு மீளக் கிடைக்கும். எவரேனும் உங்களுடன் முறைதவறி நடந்திருந்தால் பிறரைக் குறை காண்பதைவிட சுயமாக இதன் காரணத்தை ஆராயவும். உங்கள் தரப்பில் நடந்திருக்கும் குறைகளை ஏற்பதன் மூலம், அதற்குரிய உண்மைக் காரணங்களை கண்டறிவதன் மூலம் பிறர் உங்களைத் தரக்குறைவாக நடத்துவதிலிருந்து உங்களை நீங்கள் காத்துக் கொள்ள முடியும்.

முன்பொரு காலத்தில் கிரேக்க நாட்டின் சிற்பக் கலைஞர் ஒருவர் உருவாக்கிய மனித சிற்பத்தின் கையில் திராட்சை இருந்தது. அதைச் சந்தையில் காட்சிக்கு வைத்தார். அந்தச் சிற்பத்தைக் கண்ட அவரது நண்பர் "சிற்பத்தில் திராட்சை எந்தளவுக்கு தத்ரூபமாக இருக்கின்றன, அவை உண்மையானவை என்று கொத்திக் கொண்டிருக்கின்றன" என்றாராம். அந்த சிற்பக் கலைஞர் மகிழ்ச்சியுற்ற போதிலும் தன் சிற்பக் கலைப் படைப்பில் ஏற்பட்டுள்ள குறைகளை இனங்கண்டார். "உண்மையில் நான் உருவாக்கிய மனிதச் சிற்பத்தில் படைப்புத்தன்மை கைக்கூடவில்லை என்று நினைக்கிறேன். இல்லையெனில் பறவைகள் திராட்சையை

நெருங்கியிருக்கவே முடியாது” என்றார். பிறகு கலைஞர் இன்னுமொரு சிற்பத்தை உருவாக்கினார். அதுவும் இவ்வகையான சிற்பமே. மனித உருவத்தின் கையில் திராட்சைக் கொத்து. பறவை நெருங்கி வரும் ஆவலில் சிறகடிக்கின்றன. ஆனால் அந்த மனித சிற்பத்தின் உயிரோட்டம், மனித கண்ணிலுள்ள தத்ரூபம் அந்தப் பறவைகளை அச்சம்கொள்ள வைக்கின்றன.

நண்பரின் முதல் பாராட்டில் திருப்தி அடைந்திருந்தால் மிகச் சிறந்த கலைப் படைப்பை மீண்டும் உருவாகியிருக்க முடியாது. தனித்திறனுக்கான சுயமாக நடத்தும் போராட்டம் நம் ஆளுமையை வெற்றிப் படிகளில் ஏற வைக்கின்றன.

ஜஜஜ

## கனவும் வெற்றியும்

Ram Ratan Kapila பிரிட்ஜ், ரெஃப்ரிஜெரேட்டர், ஏசி போன்ற பொருட்களின் கடை ஒன்றைப் புதுடில்லியின் ஆசிப் அலி சாலையில் வைத்திருந்தார். அதைப் பிரபலப்படுத்த நல்லதொரு முழக்கம் ஒன்றைக் குறித்து யோசித்துக் கொண்டிருந்தார். அவ்வாறு ஒன்றை எழுதித் தருபவர்களுக்கு உரிய சன்மானம் தரப்படும் என்று பலமுறை விளம்பரம் செய்தும் மனநிறைவான பதில் எதுவும் வரவில்லை. மிகக் குறைவான சிலர் அனுப்பிய பதிலும் கபிலாவுக்குப் பிடிக்கவில்லை.

கபிலா இரவும் பகலும் இதே நினைவுடன் இருந்தார். பல்லாண்டுகளாக இதே சிந்தனை. ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு இரவில் கபிலா கனவு ஒன்றைக் கண்டார். “அழகான தோட்டம் ஒன்றில், ரம்மியமான காலச் சூழலில், பறவைகள் கீச், கீச் என்று மரத்தில் அமர்ந்திருந்த காட்சியைக் கண்டபின் அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அவர் தேடிக் கொண்டிருந்த வசனம் கிடைத்துவிட்டது. “Kapsons the weather masters” - kapson காலநிலையில் சிறந்தவர்கள் என்கிற முழுக்கமாகும்.

நனவிலிருக்கும்போது நினைவில் வைத்திருப்பதை உறங்கும் போது மனம் கனவில் மீட்டுருவாக்கம் செய்கிறது. கனவுச் செயல்பாடு என்பது நம் நாள்பட்ட ஆசை, ஏக்கங்களின் வடிகால். கனவில் கண்ட சிறு ஒளிகூட வரலாற்றின் மாபெரும் கண்டுபிடிப்புகளுக்கு வித்திட்டிருக்கின்றன. தீர்க்கப்படாத பல்வேறு பிரச்சனைகளுக்குக் கனவு தீர்வுகளைத் தந்துள்ளது. அவிழ்க்கக் காத்திருந்த புதிர்களின் விடைகள் கனவில் வந்துள்ளன. ஏதோ ஒரு விஷயத்துடன் நமக்கு அதீத ஈடுபாடு ஏற்படும்போது கனவில் அது தோன்றுகிறது.

அறிவார்ந்த விஷயத்தில் நம் மனம் அதிகமாக ஈடுபடும்போது தீர்வு கனவில் வரும். அர்ப்பணிப்புக்குரிய பணிகளில்தான் வெற்றி கிடைக்கும். கோரப்படாமல் இருக்கும் விஷயங்களில் அற்புதம் ஏற்பட்டு விடாது. இவ்வுலகிலும் மறு உலகிலும் இதுவே எந்தவொரு விஷயத்திலும் வெற்றியின் இரகசியமாக இருக்க முடியும்.

## வெற்றியின் உளவியல்

உலகப் போட்டி விருதாளர்கள் அனைவருடைய உடல் வலிமையும், செயல்திறனும், பயிற்சியும், அனுபவமும் கிட்டத்தட்ட சம அளவில் இருக்கும். பிறகு எப்படி ஒருவர் வெல்கிறார்? மற்றொருவர் தோற்கிறார்? வெற்றிக்கு எது காரணம். ஒருவரை வெற்றி பெற வைக்கும் வினையூக்கி எது? ஒருவர் தோற்கிறார் எனில் எந்த அடிப்படையில் தோற்கிறார்? இதுபோன்ற முக்கியமான கேள்விகளுடன் அமெரிக்க ஆய்வாளர்கள் நடத்திய ஆராய்ச்சிகள் மூன்று ஆண்டுகள் நீடித்தன. அதில் கண்டறியப்பட்ட முடிவுகள் வெளியிடப்பட்டன.

குத்துச் சண்டைப் போட்டியில் வென்ற, பங்கேற்ற வீரர்கள் பற்றிய ஆய்வு இது. உடல் வலு, மனச்சமநிலை குறித்து தரவுகளை ஒப்பிட்டுப் பார்த்தனர். உலகக் குத்துச் சண்டைப் போட்டியில் வென்றவர், மற்றவர்களுக்கு இடையில் ஒரு வேறுபாடு உடல் வலிமையில் அல்ல, மனச்சமநிலையில் தங்கியிருந்தது என்கிற விஷயத்தை ஆய்வின் முடிவு கூறியது. அதுவே வெற்றி அல்லது தோல்வியில் தீர்மானகரமானக் காரணியாக அமைகிறது.

தோற்பவரைவிட வெற்றியாளர் நெறிகளை, விதிகளை, சட்டத்தை, சுய ஒழுங்கைக் கடைப்பிடிப்பவராக இருக்கிறார். தோற்பவர் அதிகம் மன அழுத்தத்திலும், போட்டிக்கு முன் சற்று குழம்பிய மனதுடன் உள்ளார். வென்றவர் நேர்மறையாளராகவும், ஆசுவாசமுடனும் இருந்திருக்கிறார் என ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். (The Times of India, July 26 - 1981)

இதுவே வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தக் கூடிய முக்கிய அம்சமாகும். இரண்டு தனி நபர்கள் அல்லது குழுக்களுக்கு இடையில் முரண்பட்டு எதிரெதிராக நிற்கிறது எனக் கொள்வோம். அவர்களின் வெற்றியும் தோல்வியும் கைக்கொண்டிருக்கும் பொருள் வளத்தில் அல்ல. யாரிடம் அதிகம் உள்ளது, யாரிடம் குறைவாக உள்ளது என்பதைப் பொறுத்தும் அல்ல. மனம், அறிவு ஜீவித்தனம் ஆகியவை எப்படி உள்ளன என்பதில் உள்ளது. அவர்களே வெற்றி

பெறுவதில் முன்னணியினர். யாரிடம் அந்தப் பண்பு நலன் இல்லையோ அவர்கள் பின் தங்கி விடுகின்றனர். பொருள் வளம் அதிகம் இருந்தாலும் குணம் இல்லையென்றால் அதனால் ஒரு பயனும் இல்லை. நோக்கத்தில், இலக்கில், வாக்கினில் நேர்மை, ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல், சட்ட ஒழுங்கை மீறாதிருத்தல், சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடற்று இருத்தல், நெருக்கடியான காலக்கட்டத்திலும் நிதானமாக முடிவெடுத்தல், உணர்ச்சியின் மீது முழுமையான கட்டுப்பாடு, எப்பொழுதும் நன்கு யோசித்துச் செயல்பாடுகளை முன்னெடுத்தல் என இவை அனைத்தும் அறிவு, மனம் இரண்டுடனும் தொடர்புடையவை. இவையே வாழ்க்கைச் சமரில் தீர்மானகரமான முடிவை அறிவிப்பவை.

## கொடுத்துப் பெறுவதன் விதிகள்

அதிகம் படித்திராத இந்தியர் ஒருவர் முன்னொரு காலத்தில் இருந்தார். இரண்டு ஆண்டுகள் ஈராக்கில் பணியாற்றிவிட்டு நாடு திரும்பினார். “எவ்வளவு சம்பாதித்தீர்” எனக் கேட்டதற்கு “அதிகம் ஒன்றுமில்லை, என் தினசரி தேவைகளுக்கான செலவுகளைக் கழித்ததுபோக இரண்டு இலட்சம் ரூபாய் சேமிப்பாக உள்ளது என்றார். நண்பரும் விடவில்லை. அதன் இரகசியத்தைக் கூறவும் எனக் கேட்டதற்கு, “சகோதரரே! உங்கள் தேவைகளைக் குறைக்கத் தொடங்கினால் பணச் சேமிப்புத் தானாக நடக்கும்” என்றார்.

பணச் சேமிப்பின் இரகசியம் பொறுமையுடன் உழைக்க வேண்டும். தன் சொந்த முன்னுரிமைகளைப் பின் தொடர்ந்து செல்வதைக் கைவிட்டுத் தன் இலக்கை நோக்கிய பயணத்தில் பிறரையும் கவனத்தில் கொண்டிருக்க வேண்டும். செல்வதந்தர் ஆவதென்பது பிறரின் சட்டைப் பையிலிருந்து பணத்தை எடுத்தலாகும். இதில் பிறருக்கு சலுகை தரவில்லையெனில் அவர்கள் சட்டைப் பையிலிருந்து தம் பணத்தை எடுக்க உங்களுக்கு எப்படி வாய்ப்பளிப்பார்கள்?

செல்வத்தை உடைமையாக்குவதன் இரகசியம் என்பது உங்கள் ஆசைகளை அடக்குவதாகும். முன்னுரிமைகளின் பேரில் நடை போடுவதற்குப் பதிலாக பிறரது முன்னுரிமைகளைப் பின் தொடர்தல் என்பது ஆன்மிகம், உலகம் ஆகிய இரண்டுக்கும் பொருந்தும். இந்த உலகில் ஏராளமான பிற மனிதர்களுடன் ஒருசேர நடைபோடுதலும், ஒருங்கிணைந்து செயல்படுதலும் அவசியமாகிறது. அப்பொழுது

மனிதன் தன் சுயநலனைப் பறிகொடுக்கும் வரை பல சவால்களைச் சந்திக்க வேண்டியுள்ளது அன்றி வெற்றி சாத்தியமில்லை.

மனம் போன போக்கில் செயலாற்றாமல் பிற மனிதர்களுக்கு சலுகை தந்து தனக்குரிய வழியைத் திறந்துகொள்ளச் செய்யும்வரை வெற்றி சாத்தியமில்லை. புறவயமான சூழலுக்குச் சற்று வழிவிட்டு மற்றவருக்கு ஏதேனும் கொடுத்துவிட்ட பின்பே உலகில் நம்மால் ஏதேனும் திரும்ப எடுத்துக் கொள்ள முடியும்.

ஒஒஒ

## பெருஞ் சாதனையாளர்கள்

உலக மக்களை இரண்டு விதமாகத் தரம் பிரிக்கலாம். முதல் தரப்பினர் இப்பொழுது அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் உடனடி பலனாகக் குறைந்தபட்ச கூலியுடன் இலாபம் திரும்பக் கிடைக்க வேண்டுமென நினைக்கின்றனர். இரண்டாம் தரப்பினர் பொருளாதாரப் பலன் அணுவளவும் எதிர்பார்க்காதவர்கள் மட்டுமல்ல. செய்த நற்செயல்களை நினைவில் வைத்திருப்பதில்லை. அதற்கு எந்தவொரு பணமதிப்பு கிடைக்காவிட்டாலும் முறையீடு எதையும் செய்வதில்லை. நல்லதொரு பணியில் அவர்கள் அறிவு சார்ந்த பங்களிப்பில் திருப்தியடைந்து விடுகின்றனர். அதற்குரிய பிரதிபலனோ, உரிய அங்கீகாரமோ கிடைக்காவிட்டாலும் கோபப்படுவதில்லை. அவர்கள் கடமையைச் செய்துவிட்டுப் பலனை எதிர்பார்க்காத கர்மவீரர்கள்.

இரண்டு குழுவுமே பார்வையில் ஒன்றுபோலத் தோன்றினாலும் அடிப்படையில் பாரிய வேறுபாடு உள்ளது. முதல் குழு சந்தை மைய கொடுக்கல் வாங்கலில் ஈடுபாடுள்ளவர்கள். இரண்டாம் குழுவினர் மனித வரலாற்றின் புதிய பக்கத்தைத் திருப்பிக் கொண்டிருப்பவர்கள். இந்த மகத்தான வேறுபாடு இரண்டையும் பிரிகோடாகக் கொண்டிருக்கிறது.

இந்த இரண்டாம் தரப்பினரே விழுமியங்களுடன் ஒட்டுமொத்த மனிதகுலத்துக்கும் மதிப்பு மிக்க பங்களிப்பை அளிக்கின்றனர். பெரும் இலக்குள்ள பொது வேலைத் திட்டத்தில் இவ்வாறான தன்னலமற்ற பங்கேற்பில்லாமல் இவ்வுலகில் எதையும் சாதிக்க இயலாது. எப்பொழுதுமே கூட்டுழைப்பில் பொதுப் பணி ஒன்றை பொறுப்பேற்று நடத்தும்போது யாரேனும் ஒருவரோ, சிலரோ கூடுதல் அனுகூலங்களைப் பெறுவது நடக்கும். பிறருக்குக் குறைவாக கிடைக்கக் கூடும் அல்லது ஒன்றும் கிடைக்காமலே போகக் கூடும். சாதனைகளுக்காகச் சிலர் பாராட்டப்படுவார்கள். மற்றவர்களை

ஒருவரும் பொருட்படுத்த மாட்டார்கள். இறைத்தூதர்களின் அழைப்புப் பணியாக இருந்தாலும் சரியே. இயக்கங்கள் அமைப்புகள் ஆகியவற்றின் நிலையும் இதுவே. நற்பண்புள்ளவர்கள் உரிமையை வலியுறுத்தாமலும், கடமையில் மட்டும் கண்ணும் கருத்துமாக இருப்பர். இதுபோன்ற பொதுவான ஒருங்கிணைந்த உழைப்பைத் தொடர்ந்து இடைவிடாமல் மேலெடுத்துச் செல்வர்.

பொது இலக்கின் நெடும் பயணத்தில் ஒன்றுமே கிடைக்காமல் போவது ஒருபுறம் இருக்க, கிடைத்தவர்கள் இன்னும் அதிகமாக கிடைத்திருக்க வேண்டும் என்ற ஆசையும் கொண்டுள்ளனர். பலனை பகிர்ந்து அளித்த பின்னரும் மீண்டும் எல்லாவிதமான முறையீடுகளையும் தொடங்கிவிடுகின்றனர். இது எதுவுமே கிடைக்காவிட்டாலும் மனநிறைவு அடைவது அல்லது எவ்வளவு கிடைத்தாலும் திருப்தி அடையாமல் இருக்கும் போக்காகும்.

செயல்பாடே தமக்கான பலன் என்று ஏற்க முன்வருவதே பெரும்பணி செய்யக்கூடியவர்கள் நிலைமை, செயற்கரிய செயலைச் செய்தவர்கள் தமக்காக எதையும் பெற முன்வருவதில்லை. தாம் செய்த பணியே தமக்கான மதிப்புமிக்க ஊதியம் என்று அவர்கள் கருதுகின்றனர். வளமான அறிவுக் கொடையே அவர்களது முயற்சிகளுக்குத் தகுதிக்குரியவராகக் காட்டும்.

## திறனை நிரூபித்தல்

ஆஸம்கர் நகரத்தைச் சேர்ந்த சாதிக்கத் துடிக்கும் இளம் மணவர் A.M. Khan இந்துக் கல்லூரி முதல்வர் அறையில் நின்று கொண்டிருந்தார். “ஐயா! B.Sc., முதலாம் ஆண்டு இளங்கலை அறிவியல் வகுப்பில் என்னைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்றார். “மாணவர் சேர்க்கை நிறைவடைந்துவிட்டது” என்று மறுமொழி வேகமாக வந்தது. “அக்டோபர் மாதம் அனுமதி கிடைக்கும் என்று நீங்கள் எதிர்ப்பார்க்கிறீர்களா, பல மாதம் தாமதமாக எப்படி விண்ணப்பிக்க முடியும்” A.M. Khan என்ற இந்த இளைஞருக்குப் பட்ட வகுப்புக்கான சேர்க்கைக்கு விண்ணப்பிக்க முடியாதபடி எதிர்பாராத இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால் “அருள்கூர்ந்து என்னைத் தங்கள் கல்லூரியில் சேர உதவுங்கள், இல்லாவிட்டால் முழுமையான ஒரு கல்வியாண்டு என்னிடமிருந்து பறிக்கப்பட்டு விடும் ஐயா! எனத் தாழ்மையுடன் விண்ணபித்தார். கல்லூரி முதல்வர் “இனி மேல் என்னால் யாரையும் சேர்த்துக் கொள்ள முடியாது” எனக் கடுமையான குரலில் கூறினார்.

கல்லூரி முதல்வர் பேசிய தொனி அவரிடம் தொடர்ந்து வலியுறுத்திக் கேட்பதில் பொருளில்லை என உணர்த்தியது. விடாப்பிடியாக மாணவரும் அதிர்ஷ்டத்தைச் சோதித்துப் பார்க்க நினைத்தார். அவர் தன் அறையைவிட்டு வெளியேறுமாறு கூறிவிடுவாரோ என பயந்தார். மாணவரின் வற்புறுத்தலைச் சமாளிக்கக் கடைசியாக மேம்போக்காக இதற்கு முந்தைய அரசுப் பொதுத்தேர்வில் உன் மதிப்பெண்கள் எத்தனை என்று கல்லூரி முதல்வர் கேட்டார். காரணம் இந்த மாணவர் குறைந்த மதிப்பெண்ணை எடுத்திருக்கலாம். அதனால் வேறு கல்லூரிகளில் விண்ணபித்து மதிப்பெண் குறைவு என்பதால் மறுக்கப்பட்டு இருக்கலாம். இது உண்மையாக இருந்தால் அதைக் காரணம் காட்டி மாணவனின் விண்ணப்பத்தை ஏற்காமல் மறுத்துவிடலாம் என நினைத்தார். ஆனால் எதிர்பார்த்ததற்கு மாறாக 85% மதிப்பெண்கள் ஐயா என மாணவன் பதிலளித்தான்.

இந்த பதில் ஓர் அற்புதத்தை விளைவித்தது. கல்லூரி முதல்வரின் மனநிலை உடனடியாக மாறியது. மாணவனைப் பார்த்து, தன் எதிரில் இருந்த நாற்காலியில் அமரச் சொல்லி, மதிப்பெண் சான்றிதழைக் காட்டும்படி கூறினார். மாணவன் தன் பையிலிருந்து சான்றிதழ்களை எடுத்துக் கல்லூரி முதல்வரின் மேசை மேலே வைத்துக் காட்டினார் முதல்வர் அதைப் பார்த்து மாணவன் உண்மையைக் கூறுகிறான் என்பதை உறுதிப்படுத்தி முன்தேதியிட்டு விண்ணப்பத்தை எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டார்.

A.M. Khan என்கிற இந்த மாணவனுக்கு பட்ட வகுப்பில் இடம் கிடைத்தது. மேலும் கல்வி உதவித் தொகையும் (Scholarship) உடனடியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆரம்பத்தில் மறுத்த அதே முதல்வர் இவ்வளவு பெரிய உதவியைச் செய்தார்.

அதே மாணவர் ஒருவேளை மிகச் சாதாரண மதிப்பெண் பெற்றிருந்தால் அனுமதி மறுக்கப்பட்டிருப்பார். அப்பொழுது கல்லூரி முதல்வர் குறித்து வெறுப்புற்றிருப்பார். மேலும் பக்கச் சார்புடன், முன்முடிவுகளுடன் என் விஷயத்தை அணுகினார் எனத் தன் நண்பர்களிடம் கூறியிருப்பார். குறைந்த மதிப்பெண்ணே தனக்கு அனுமதி கிடைப்பதில் தடையாக இருந்தது என்பதை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார். பழியைக் கல்லூரி முதல்வர் மீது போட்டிருப்பார். நம் சொந்தக் குறைகளே நம்மிடமிருக்கும் பிரச்சனைகளுக்குக் காரணம். ஆனால் நாம் சமூகத்தின் மீது பழி சுமத்தி விடுகிறோம்.

மனிதன் தன் புறத்திலிருந்து அலட்சியம் காட்டியிராவிட்டால், உலகவாழ்க்கையில் முன் தயாரிப்புகளுடன் இறங்கியிருந்தால் உலகம் எதைத் தீர்மானித்து வைத்துள்ளதோ அதை அளித்தே ஆக வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகும். எல்லா சூழலிலும் தனக்குரிய இடத்தை அவன் அமைத்தே தீருவான். எல்லா சந்தையிலும் தன் முழு விலையைக் கேட்டுப் பெறுவான். அவனிடம் உயர் நற்பண்புகள் வளர்ச்சியுறும். தன் அனுபவத்தில் வீரம், தன்னம்பிக்கை, பரந்த மனப்பான்மை, நன்னடத்தை, பிறரின் மதிப்பை அங்கீகரித்தல், நடைமுறை அறிவு, எதார்த்த நோக்கு, ஒவ்வொருவரிடமிருந்தும் மனித உறவு குறித்த தொடர்பாடலின் பாடம் ஆகியவற்றைக் கற்பான். குறைகூறும் மனோநிலையிலிருந்து மேலெழுந்து சிந்திப்பான். சூழலை அங்கீகரிப்பான். அவனுக்குரிய பங்கைப் பெறுவதில் எந்தச் சூழலும் தடையாக இருக்காது. அதனால் அற விழுமியங்களுடன் வாழப் பழக வேண்டும்.

இதற்கு மாறாக ஒருவேளை தேவைப்பட்ட அளவீடுகளுக்கேற்பத் தன்னை முன்னிறுத்தவில்லையெனில் தன் திறமையை நிரூபிக்கத் தவறியிருந்தால் சமகால தரவரிசைப்படி தகவமைக்கத் தவறியிருந்தால் போதிய பயிற்சியின்றி வாழ்க்கைக்குள் நுழைந்திருந்தால் அவன் இந்த உலகில் தனக்குரிய இடத்தைப் பிடிப்பதில் தவறி தோற்றிருப்பான். வாழ்க்கையில் தோல்வி கோபம், முறையீடுகள், குற்றநடத்தை போன்ற எதிர்மறை மனோநிலை வளர்ந்திருக்கும். காரணம் மிகக் குறைவாகவே தம்மைப் பொறுப்பாக்குவது, நிகழ்ந்த தவறுக்கு பொறுப்பேற்பது நடக்கிறது.

கல் அனைவருக்கும் கடினமானது. ஆனால் கல் உடைக்கும் இயந்திரம் வைத்திருப்பவரிடம் அது பணிந்து போகிறது. நீங்கள் உரிய உயர் திறனுடன் வாழ்க்கைக்குள் இறங்கியிருந்தால் தங்களின் அசல் தகுதியைவிட அதிகமாகவே நீங்கள் பெறக்கூடும். “கடைசி தேதி” முடிந்த பிறகும் உங்களுக்கு முன் / பின் அறிமுகமில்லாத கல்லூரியில் பட்ட வகுப்புக்கான அனுமதி யாருடைய தயவுமின்றி கிடைத்துவிடும். ஆனால் உரிய தகுதி தேவைப்படும் திறமை ஆகியவை இல்லாவிட்டால் உங்கள் விருப்பத்துக்குரிய இடத்தை நீங்கள் அடைய முடியாது.

எந்தவொரு மனிதனும் இந்த உலகில் வெற்றி பெற விரும்பினால் அவன் தனக்குள் வெற்றியின் குணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும். தன் சூழலை அறிய வேண்டும். தன் ஆற்றலை ஒருமுகப்படுத்த வேண்டும். அந்த அகச்சூழல் உங்களுக்கு எதுபோல நுழைய வேண்டும் என்றால் தன்னை முழு தயாரிப்புடன் ஆக்கிக்

கொள்ள வேண்டும். தன் முக்கியத்துவத்தை உணர்த்த சூழலைச் சாதகமாக்க அறிந்து வைத்திருக்க வேண்டும். இதெல்லாம் நிகழ்ந்து விடுகிறது எனில் அதன் எதிர்வினை ஒன்று வெளிவரும். அதன் பெயர்தான் வெற்றி.

வாயு கீழே இருக்க முடியாது. மேலெழுந்து தனக்குரிய இடத்தைப் பெற்றுக் கொள்கிறது. தண்ணீரை மேலெழும்பிய தடைச்சுவர் தடுக்கிறது எனில் முட்டி மோதி பெயர்த்து விடுகிறது. மரம் பூமியின் மேற்பரப்பில் இருக்க முடியாது. அதனால் பூமியில் ஊடுருவி உயிர் வாழும் தன் உரிமையை அது நிலைநாட்டிக் கொள்கிறது. இந்த வழிமுறை மனிதர்கள் இல்லாத உலகில் இறைவன் தன் தரப்பிலான ஒழுங்கை நிறுவியுள்ளதைப் போல மனிதன் தன் சூழலுக்கு ஏற்பத் தேர்வு செய்ய வேண்டும். (24-11-1964)

தன் வழியில் வெற்றியை வரவேற்க வேண்டுமென்றால் இறைவனின் இந்த உலகம் அதற்குத் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ளச் சொல்கிறது. தன்னை முழு ஆயுததாரியாக ஆக்கிக் கொள்ளும்போது பிறரால் அவரது உண்மை மதிப்பைக் கணிக்கும்போது தவறிழைக்க முடியாது.

ஐஐஐ

## தனித்திறன்

பல ஆண்டுகளுக்கு முன் அயல்நாட்டு அறிஞர் ஒருவர் எழுதிய கட்டுரை ஒன்றை வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பணமும், புகழும் ஈட்டிய பல்வேறு சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றை படித்து ஆய்வு செய்திருந்தார். இந்தத் தனி நபர்கள் எப்படி பெரிய மனிதர்களானார்கள். எந்த குணம் அவர்களின் மேதமைக்குக் காரணமானது என்பதே ஆய்வுப் பொருள்.

துருவிப் பார்க்கும் மனம் விஷயத்தை விலகி நின்று பார்க்கும் அறிவு என்பதே சாதனையாளர்கள் அனைவரிடமும் விதிவிலக்கு இல்லாமல் இருந்தது. எடுத்துக் கொண்ட பணியை எங்கும் நின்றுவிடாதபடி பார்த்துக் கொள்ளல் என்பதே அந்த கண்டுபிடிப்பு.

அதேபோல "வெற்றிகரமான தனிநபர்களின் குணவியல்புகள்" என்கிற 108 பக்க ஆய்வறிக்கையை Anita Straker என்னும் Wiltshire பள்ளிக் குழுமங்களின் கணித ஆலோசகர் எழுதியுள்ளார். இரண்டாம் தரமாக இருக்கும் எதன்மீதும் மனநிறைவு அடையாமல் இருப்பதே சிறப்பான குழந்தைகளின் தனித்தன்மைகள் என்பதாக அவர் கண்டறிந்துள்ளார். (Hindustan Times, Ferbruary 2, 1983)

மிகச் சிறந்ததைவிட குறைந்த எதிலும் மனநிறைவு அடையாமல் இருத்தல் என்பதே வெற்றிகரமான மனிதனின் தனிச் சிறப்பாக இருக்க முடியும். அரை உண்மை என்பதெல்லாம் ஒன்றுமில்லை. முழு உண்மையை நோக்கி முன்னேற இந்த குணம் மனிதனை கட்டாயப்படுத்துகிறது. அது மனிதனை தாழ்நிலையிலிருந்து மேல்நிலைக்கு உந்தித் தள்ளுகிறது. அதனால் தொடர்ந்து அவன் வெற்றிக்கு மேல் வெற்றியை நோக்கிச் செல்கிறான். இந்தத் தன்மை தன் கடமையை உயர் தரத்தில் மட்டுமே செய்ய பணிக்கிறது. முழுமையைத் தவிர வேறு எதிலும் திருப்தியடையாதிருக்க இது ஊக்குவிக்கிறது.

## புது யுகம்

இஸ்லாமிய நாட்காட்டியின் 14வது நூற்றாண்டின் முடிவில் ஒரு புதிய துவக்கத்தை கண்டுள்ளது. ஹிஜ்ரி 15வது நூற்றாண்டின் தொடக்கம் இது. பொது யுகம் 21ஆம் நூற்றாண்டில் சாதகமான எல்லா வாய்ப்புகளும் அமைந்துள்ளன.

இரவு முடிந்ததும் இருள் கலைகிறது. உதய சூரியனின் வெளிப்பாடு வெளியுலகுக்கு மௌனமாக இயற்கையின் ஒரு சுழற்சி முடிவுக்கு வந்ததையும் இரண்டாம் சுழற்சியின் தொடக்கம் என்பதைச் சூசகமாக அறிவிக்கிறது. அதைக்கொண்டு அந்த வெளிச்சத்தில் பயணத்தைத் தொடரலாம்.

காலையில் சூரிய உதயம் எல்லோருக்கும் இரண்டு செய்திகளை அறிவிக்கிறது. ஒன்று கடந்துபோன, தவறவிட்ட வாய்ப்பு, இரண்டாவது சமகால வாய்ப்பு. இந்த நிகழ்கணத்தை பயன்படுத்தத் தெரிந்தவர் தன் இலக்கை அடைந்து கொள்வார். தேர்வு நிகழும் இடமான இவ்வுலகில் பயன்படுத்த தெரிந்தவருக்கே வாய்ப்புகள் பயனளிக்கும். பயன்படுத்தத் தெரியாதவருக்கு வாய்ப்புகள் ஒருபோதும் கிடைக்காது. நம் முன்னிருக்கும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதே வெற்றிபெற ஒரேவழி எனலாம்.

எந்தவொரு மனிதனும் கடந்து போன நேற்றிலிருந்து பயணத்தைத் தொடங்க முடியாது. இழந்து போன வாய்ப்பு குறித்து மறந்துவிட வேண்டும். இன்றிருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவும். இன்றைக்கூட நேற்றைய நினைவில் கழிப்பவர்களுக்கு இந்த உலகில் பேரழிவு காத்திருக்கிறது. நல்ல எதிர்காலமும் இல்லை. இறைவன் விரும்பினால் உங்களுக்கு வெற்றி நிச்சயம். கழிந்து போன நேற்று யாருக்கும் மீள வராது, உங்களுக்கும்தான்.

## வாய்ப்புகளைப் பயன்படுத்துதல்

மாபெரும் தொழில் சாம்ராஜ்யத்தை நிறுவி திறம்பட உச்சிக்கு அழைத்துச் சென்ற அம்சம் எதுவென்றும் வியக்க வைக்கும் வளர்ச்சிக்குக் காரணம் எது என்பதைக் கண்டறியும் ஆய்வு அமெரிக்க தொழிலதிபர்களிடம் நடத்தப்பட்டது. கடுமையான உழைப்பு, வீடு, குடும்பம், கேளிக்கை போன்றவை இரண்டாம்பட்சமாகி விடும். அளவுக்கு தொழிலில் கவனம் குவித்தல் ஆகியவை அவர்களுடைய வெற்றிக்கு முன்னணிக் காரணிகள் என ஆய்வு முடிவுகள் தெரிவித்தன. அதை இன்னும் திட்டவட்டமான சொற்களில் “வாய்ப்புகளைக் கச்சிதமாகப் பயன்படுத்தத் தெரிந்திருக்கும் தன்மை இவர்களிடம் மிகைத்திருப்பதும் தம் வளர்ச்சிக்கு ஏதேனும் ஒரு சிறு வாய்ப்பு கிடைக்குமா என கவனிக்கும் திறன் ஆகியவையும் என்கிறார். (Readers Digest, May 1982)

அச்சுறுத்தும் வாய்ப்புகளை எதிர்கொள்வது வீழ்ச்சியென்று சொல்லமுடியாது. அவ்வாறு செய்வது மலை ஓடையில் மூழ்குவதைப் போன்றது. ஒருவருக்கு என்ன தெரியும் அல்லது தெரியாது என்பதை அறிவதற்குச் சமமான காரணமுள்ளது. மிகக் குளிர்ந்த நீர், விரைவான நீரோட்டம், பாறைகளுக்கு எதிராக அடித்துச் செல்லப்படும் ஆபத்து, துடைத்தெறியும் வேகம், தலைகீழாக கொட்டும் நீர்வீழ்ச்சி எவ்வளவு ஆழமானது?

இதன் மறுகரையை அடைய விரும்பும் மனிதன் முதலில் பாதுகாப்பான, எளிதான வழியைத் தேடுவான். முதலில் பாலம் உள்ளதா எனத் தேடுவான். பாலம் ஏதும் இல்லையெனில் இயற்கையின் பேராற்றலுக்கு எதிராகத் தன் பலத்தை அளவிடுவார். அங்குள்ள நீரோட்டத்தை எதிர்த்து போராடுவதற்கு உரிய வலிமை, அனிச்சையான தகவமைப்பு, எதிர்பாரா நெருக்கடிகளைச் சமாளிக்கும் புத்திசாலித்தனம் உள்ளதா எனக் கணக்கிடுவான்.

தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க வழியுள்ளதா? ஆபத்துக்களைத் தடுக்க முடியுமா? நெருக்கடி மிக்கத் தருணங்களில் சரியானதைச் செய்ய முதலில் தன்னை நம்பமுடியுமா? நீரோடையின் மறுகரைக்குப் போய்ச் சேர உறுதி கொண்டிருக்கிறோமா? தனது வலிமை, வீரம், அறிவு அனைத்தையும் ஒருங்கிணைத்துக் கொண்டால் அவன் பனிக்கட்டியான நீரிலும் நேரடியாகப் பாய்ந்து விடுவார். உரிய வழிகளைக் கண்டுபிடிப்பான். அந்த நுழைவு வாயிலைக் கண்டுகொண்ட பின்னர் ஒருபோதும் தயங்க மாட்டார்.

சவால்களை எதிர்கொள்ளவே இந்த உலகம் உள்ளது. சிலருக்குப் பாதுகாப்பான விஷயங்கள் கிடைத்து விடுகின்றன. வேறு சிலருக்கு எளிதாக வெற்றி கிடைத்து விடுகிறது. ஆனால் மலை ஓடையில் இறங்கியாக வேண்டிய கட்டாயம் நிறைய பேருக்கு ஏற்பட்டு விடுகிறது.

திடீர் திடீரென்று வாய்ப்புகள் முளைக்கின்றன. அதைப் பயன்படுத்திக் கொள்வதும், நேரம் கனிந்ததை புரிந்துகொள்ளக் கூடிய விவேகமும் வெற்றி பெறும் திறனாகும்.

வாய்ப்புகள் எப்பொழுதாவது மட்டுமே இரண்டு முறை கதவைத் தட்டும். வெற்றிகரமான மனிதர் முதல் தடவை தட்டப்படும்பொழுதே கண்டுகொள்வார். உணரப்படும் வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்தும் திறனையும் அவர் கொண்டிருப்பார். உலர்ந்த விவகாரங்களில்கூட புதிய வாய்ப்புகளை மனநிறைவுடன் புறக்கணித்துவிட முடியாது.

வெற்றிகரமான மனிதர்கள் சூழ உள்ள நிலவரங்களை உயிர்ப்புடன் நோக்கிக் கொண்டிருப்பார்கள். நிகழ்வுகளை மேம்படவோ, சேதப்படவோ செய்கிறதா என கவனிப்பார்கள். “இரும்பு சூடாக இருக்கும்போது அதன் மீது தட்டுங்கள்” என்பது பழைய பொன்மொழியாகும்.

ஜஜஜ

## ஒவ்வொரு புலர்ச்சியும்

வெற்றி என்றால் என்னவென்று ஒரு வணிகரிடம் கேட்கப்பட்டது.

“அருமை, மகத்தான இன்னுமொரு நாள்” என்று காலையில் படுக்கையிலிருந்து எழுந்திருக்கும்போது கூறவும். பாருங்கள்! நீங்கள் வெற்றியாளராக மாறிவிடுவீர்கள் என்று பதிலளித்தார். உண்மை என்னவென்றால் இரவைத் தொடர்ந்து ஒரு பகல் வருவது உறுதி. அது மாபெரும் விஷயமாகும். பணியாற்ற அது நமக்கு மற்றுமொரு நாளை அளிக்கிறது. ஒருவரிடம் பணியின் மீதான நாட்டம் உண்டெனில் கிடைத்த நாளுக்காக ஆனந்தக் கூத்தாடுவார். ஒருநாள் கிடைத்ததற்காக யார் பூரிக்கிறாரோ அவரால் மட்டுமே இவ்வுலகில் பெரும்பணியைச் செய்யமுடியும்.

இரவும் பகலும் மாறிமாறி வருவது தனிச்சிறப்பு மிக்கது. புதன் (Mercury) போன்ற கிரகங்கள் தன்னைத்தானே சுற்றிக் கொள்ளாமல் சூரியனை வலம் வருகிறது. அதனால் ஒரு பக்கம் பகலாகவும் மறுபக்கம் இரவாகவும் எப்பொழுதும் இருக்கும். இந்த உலகம், இந்த பூமி விதிவிலக்கானது. தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றிவருகிறது. அதனால் இரவும் பகலும் அடுத்தடுத்து மாறிமாறி வருகிறது. பகலில் உழைக்கவும் இரவில் ஓய்வெடுக்கவும் இறைவன் செய்த அற்புதமான ஏற்பாடு இது.

இந்த முழு அமைப்பைக் குறித்துத் தீவிரமாகச் சிந்திக்கும் ஒருவர், இரவு பகல் பூமியில் வருவதைக் கண்டு தன் படுக்கையிலிருந்து எழுந்து இறைவனுக்கு நன்றி செலுத்துவார். அதிகாலையின் புலர்ச்சி ஆசிர்வதிக்கப்பட்டது. காலையை மதிப்புமிக்க அருள் எனக் கருதும் ஒருவரே புதிய வாய்ப்பைப் பயன்படுத்தி வெற்றி ஈட்டுவார்.

## குறையை ஈடுசெய்தல்

'பிரெஷ்யா' என்று முன்பு அழைக்கப்பட்ட நாட்டை இன்று 'ஜெர்மனி' என்கிறோம். பெரிய தந்தை இறந்த பிறகு மன்னரான William II (1859 - 1941) 1918 வரை முப்பதாண்டுகள் ஆட்சி செய்தார். 1941ஆம் ஆண்டு ஹாலந்தின் Doom என்ற இடத்தில் தன் 80வது வயதில் இறந்து போனார். இராணுவ பலம் யாரையும் தொடர்ந்து ஆட்சியில் நீடிக்க உதவி செய்யாது என்பதை அறியலாம். தன் நாடு, உலக நாடுகளின் விவகாரங்களை பகுத்தறியும் திறனே செயலூக்கம் கொண்டதாகும்.

William II சுவிட்சர்லாந்துக்கு அரச முறைப் பயணம் செய்தார். அது ஒரு சிறிய நாடானாலும் ஒழுங்கான கட்டமைப்புடன் கச்சிதமான படையைக் கொண்டிருந்தது. இராணுவ அணிவகுப்பின்போது வேடிக்கையாக சுவிட்சர்லாந்து வீரர் ஒருவரிடம் "ஜெர்மனியிடம் உங்களைவிட இரண்டு மடங்கு பெரிய படையுள்ளது, ஒருவேளை அவர்கள் உங்கள் நாட்டின்மீது படையெடுத்தால் என்ன செய்வீர்கள்" என்று கேட்டாராம். ஒன்றுமில்லை ஐயா! நாங்கள் இரண்டுமுறை சுடவேண்டியிருக்கும் அவ்வளவே என்றாராம். சுவிட்சர்லாந்து இராணுவத்தின் தொழில்முறைப் பயிற்சியே அந்நாட்டு வீரரிடம் இந்த திடமான பதிலாக வெளிப்படக் காரணமாகும்.

எண்ணிக்கை அளவில் மேலாதிக்கம் இருந்தால் பற்றுறுதி அதை மிகைத்துவிடும். வளங்கள் குறைவாகும்போது செயல்பாடுகளை முடுக்கிவிடுவதன் மூலம் அதை வெல்ல முடியும்.

உங்களது எதிரியை விட பாதியளவே நீங்கள் இருந்தால் இரட்டிப்பு உழைப்பை செலுத்தும்பட்சத்தில் வாழ்க்கையின் சவால்களை சமன் செய்யமுடியும். வாழ்க்கைப் போராட்டத்தில் சிலர் முன்னேறிவிடுவர். வேறு சிலர் பின்தங்கி விடுவர். சிலர் ஆதிக்கம் செலுத்துவர், வேறு சிலர் அடங்கிப் போவர். ஆனால் உலகில் வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. அதற்கு எல்லை இல்லை. பின் தங்கிவிட்ட அனைவரும் அதிக உழைப்பைச் செலுத்த முன்வந்தால் மீண்டெழ முடியும்.

வெற்றியின் இரகசியம் பொறுமை. தோல்விக்குக் காரணம் பொறுமையின்மை.

## அவநம்பிக்கை வேண்டாம்

நவீன அமெரிக்க சிற்பி எனப்படும் முன்னாள் குடியரசுத் தலைவர் Abraham Lincoln (1809 - 1865) புகழ்ப்பெற்ற அரசியல்வாதி ஆவார். ஆனால் அவருக்கு இந்த வெற்றி உடனே கைக்கூடவில்லை. இந்த வெற்றியீட்ட, அதுவரை போய்ச் சேர எண்ணற்ற தோல்வியை சுவைக்க வேண்டியிருந்தது.

ஆப்ரஹாம் லிங்கனின் வாழ்க்கையை ஒருவர் இவ்வாறு எடுத்துரைக்கிறார். “இவர் 1831ஆம் ஆண்டு வியாபாரத்தில் தோற்றார். 1832இல் அரசியலில் தோல்வியுற்றார். 1834யில் மீண்டும் வியாபாரத்தில் தோல்வி. 1841இல் நரம்புத் தளர்ச்சியால் பாதிப்புற்றார். 1843இல் தம் கட்சியின் சார்பாக காங்கிரஸ்இல் இடம் கேட்டுக் கிடைக்கவில்லை. 1855இல் செனட் சபைக்குப் போட்டியிட்டுத் தோற்றுப் போனார். 1858இல் மீண்டும் அதே தேர்தலில் தோல்வி. ஒருபோதும் வெற்றி பெறவே முடியாத தோல்வி மன்னர் என லிங்கனைப் பற்றிக் கூறினார். ஆனால் 1860ஆம் ஆண்டு அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். தோல்வியைத் தற்காலிகமாக்குவது எப்படி என்பது அவருக்குத் தெரியும். (செப்டம்பர் 1972)

தோல்விக்குப் பிறகு எப்பொழுதும் வெற்றி வரும். இந்த உலகில் தோல்வியை ஏற்கும் மனப்பக்குவம் உள்ளவருக்கே வெற்றி கிடைக்கும். ஒவ்வொன்றுக்கும் ஒரு விலை உண்டு. தோல்வியை அங்கீகரித்தலே வெற்றிக்கான விலையாகும். இந்த விலை அளிக்க முன்வராதவர்கள் வெற்றி இலக்கை அடையவே முடியாது.

இந்த உலகில் வெற்றிக்கான இரகசியம் ஒன்றுதான். அதாவது தோல்வி என்பது தற்காலிகமானது என்பதை அறிவது. பொறுமை இழக்காமல் தோல்வியை வெற்றியாக்குவது எப்படி என்பதை அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும். தோல்வியை வெற்றியாக மாற்றுவதற்கு எப்பொழுதும் தன்னம்பிக்கை இழக்காதிருத்தல் அவசியம்.

ഇരുഇരുഇരു

## தோல்வி : ஒரு பகுப்பாய்வு

1984ஆம் ஆண்டின் ஒலிம்பிக் உலக விளையாட்டுப் போட்டியில் கலந்துக் கொண்ட குழுவில் 62 பேர்கள் இருந்தனர். நாடு திரும்ப லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து புதுடில்லி வந்து இறங்கியபோது வரவேற்க ஒருவரும் விமானநிலையத்தில் இல்லை. தங்கம், வெள்ளி, வெண்கலம் என ஒரேயொரு பதக்கமும் வெல்லவில்லை என்பதே இப்புறக்கணிப்புக்கான தெளிவான காரணமாக இருக்கமுடியும்.

“இந்தியா மிகவும் மோசமாகத் தோற்றதற்கு அறிவியல் ரீதியான, அமைப்பு முறை பயிற்சி இல்லாததே காரணம்” என்று ஓய்வுபெற்ற விளையாட்டு வீரர் ஒருவர் கூறினார். இந்தப் பயிற்சி வெகுகாலத்துக்கு முன்பே தொடங்கியிருக்க வேண்டும். வழக்கமாக மூன்று மாதங்களுக்கு முன்பு அவசரகதியில் செய்யப்படக் கூடாது என்றும் நம்மால் முடிந்ததை வெளிப்படுத்தினோம். ஆனால் துரதிஷ்டவசமாக அவை போதுமானதாக இல்லை என்றும் கூறியுள்ளார்.

விளையாட்டுப் போட்டிக்கு மட்டுமல்ல, வாழ்க்கையின் எல்லா விவகாரங்களுக்கும் இது பொருந்தும். பதவிக்காக ஒவ்வொருவரும் போட்டியிட்டுக் கொள்ளும் காலமிது. அதற்கு முழுமையாகத் தயார்படுத்திக் கொள்வது அவசியம். முன்தயாரிப்பு இல்லாவிட்டால் தோல்வி ஏற்படுவது உறுதி.

முழுமையாகக் காலத்தின் தேவையை நிறைவு செய்யக்கூடிய தயாரிப்புகளில் ஈடுபட வேண்டும். நவீனமடையாத போது வெற்றி என்பது கானல் நீராகிவிடும். காரணம் சமூகம் கண்டுபிடிப்புகளை துரத்திக்கொண்டிருக்கிறது. அதன் நாடித்துடிப்பு நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுது மட்டுமே மாறும் காலத்துக்கேற்பச் சரியானபடி நம்மை தகவமைத்துக் கொள்ளமுடியும்.

ഇരുഇരുഇരു

## தோல்வியே வெற்றியாக மாறும்

சென்னையின் புகழ்ப்பெற்ற வணிக வளாகங்களில் ஒன்று Spencer Plaza. இங்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு தீவிபத்து ஏற்பட்டுக் கட்டடம் முற்றிலும் சேதமடைந்தது. உடனடியாக மொத்தக் கட்டடத்தையும் தரைமட்டமாக்கி மீண்டும் புதியதாக கட்டிமுடித்து புதுப் பொலிவுடன் வணிக சேவையில் ஈடுபட்டபோது “You can bet ours is the only store today with nothing but fresh stock” என்று ஓர் அறிவிப்பை இதன் உரிமையாளர்கள் செய்தனர். அதாவது “எங்களிடம் உள்ள பொருட்கள் மட்டுமே முற்றிலும் புத்தம் புதியவை” என சவால் விடுக்கிறோம் என்று பத்திரிகைகளில் வந்த விளம்பரம் பரபரப்பானது.

பேரிழப்புக்குப் பிறகும் அறிவுச் சமநிலை இழக்காத அறிவாளிக்கு வெற்றி கிடைத்துவிடும் என்பதற்கு இதுவொரு எடுத்துக்காட்டு. Spencer Plaza தீவிபத்து உண்மையிலேயே பேரிழப்பாகும். இருந்தபோதிலும் விபத்தைக்கூட வெற்றிபெற அந்த உரிமையாளர் பயன்படுத்திக் கொண்டது அவரது கெட்டிக்காரத்தனமாகும்.

தீ விபத்தால் வணிக வளாகத்திலிருந்த கடைகளின் இருப்பு மொத்தமும் எரிந்து சாம்பலானது. புதுப்பிக்கப்பட்ட பின்பு அக்கடைகளில் உடனடியாக புதிய சரக்கு கொண்டு வரப்பட்டது. வாடிக்கையாளருக்கு புதிய சரக்கு, புதிய வடிவங்களில் மோகம் அதிகம் என்கிற மன உளவியலைத் திட்டமிட்டு பயன்படுத்திக் கொண்டார் அந்த வியாபாரி, அவ்வளவே. வணிக வளாகம் தீ விபத்தில் முற்றிலும் சேதமடைந்து விட்டதை அறிந்து வைத்திருந்த மக்கள் இந்த விளம்பரத்தை அப்படியே நம்பினர். வணிக வளாகம் தீவிபத்தில் முற்றிலும் சேதமடைந்துவிட்டதை அறிந்து வைத்திருந்தனர். இவை புதிய சரக்கு என்பதும் அவர்களால் நம்ப முடிந்தது. ஆகவே கூட்டம் பொருட்களை வாங்க அலைமோதியது. முன்பு ஏற்பட்ட இழப்பு புதிய விற்பனையின் மூலம் ஓரளவு ஈடுகட்டப்பட்டது.

இந்த உலகத்தில் புதிய வாய்ப்புகளும், சூழல்களைக் கண்டறிய காத்திருக்கின்றன. ஒருவரது முழு வளங்களும் எரிந்து சாம்பலாகி இருந்தாலும் நம்பிக்கை இழக்காதிருக்க வேண்டும். அறிவைப் பயன்படுத்தி புதிய வழிகளைக் கண்டறிய வேண்டும். பழைய வாய்ப்பு முடிந்து போன இடத்தில் புதிய சிறந்ததொரு வாய்ப்பு அவருக்காகக் காத்திருக்கிறது. வரலாற்றின் ஒரு கட்டம் முடிந்து போயிருந்தால் அதைவிடச் சிறந்த வரலாறு வடிவெடுக்கும். எங்கு ஒரு வரலாறு முடிவடைகிறதோ அங்குதான் புதிய வரலாறும் பிறக்கிறது.

## கால மாற்றத்திற்கு எதிராக

*மாநகரின் உயர் குடியிருப்புப் பகுதி ஒன்றில் "பழைய பாத்திரம் கலாய் பூசுதல்" என்று கைத்தொழில் ஒன்றை தொண்டை கிழிய உரக்கக் கூவி அந்தப் பகுதி முழுவதும் ஒரு தொழிலாளி அலைந்து கொண்டிருந்தார்.*

இத்தனைக்கும் கோட்டை, மாளிகை போன்ற பெரிய வீடுகள் அங்கிருந்தன. ஒருவரும் அந்தத் தொழிலாளியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. எவரும் தம் வீட்டுப் பாத்திரத்தை முன் வந்து அவரிடம் தரவில்லை.

இதென்ன வகுப்புவாத பிரச்சனையா? "பாத்திரம் கலாய் பூசுதல்" என்ற இந்தத் தொழிலாளிக்கு அநியாயம், தலைக்கனம் காரணமாக இந்தக் குடியிருப்புவாசிகள் எதையும் தரவில்லையா? ஒருவேளை அந்த தொழிலாளியின் மனநிலை அதுவாக இருந்திருக்கக் கூடும். இதில் வியப்படைய ஒன்றுமில்லை. அந்தத் தொழிலாளி படிப்பறிவற்றவர். இது அவருக்குப் பரம்பரைத் தொழில். அவரது தந்தையும், பாட்டனும் இதையே செய்துவந்தனர். அவரும் கடந்த நாற்பதாண்டுகளாக இதைத் தவிர வேறெதையும் செய்யவில்லை. "பாத்திரம் கலாய் பூசுதல்" என்று இத்தனை நீண்ட காலத்துக்குத் தெருவெங்கும் கூவித் திரிந்தது அவரது முழு மனவமைப்பைக் கட்டமைத்திருக்கும் என்றால் வேறு சிந்தனையே அவரிடம் இருக்க முடியாது அளவுக்கு ஆகிவிட்டது.

"பாத்திரம் கலாய் பூசுதல்" என்கிற இந்தத் தொழிலைப் பற்றியும் பாத்திரங்களின் இன்றைய தயாரிப்பு பற்றியும் அதன் வகை பற்றியும் தெரிந்து வைத்திருப்பவருக்கும் புறவுலகம் குறித்த குறைந்தபட்ச நடைமுறை அறிவு கொண்டவருக்கும் இந்தத் தொழிலாளிக்கு வேலை கிடைக்காமல் போனதற்கான காரணம் தெரியும்.

பித்தளை, ஈயம் போன்ற உலோகப் பாத்திரங்களின் மீது மட்டுமே "கலாய் பூச முடியும்" அலுமினிய பாத்திரங்களின் பயன்பாட்டுக்கு இன்றைய வாழ்க்கை மாறிவிட்ட பிறகு "கலாய் பூச வேண்டிய" தேவையென்ன?

இந்த உலகில் வெற்றி பெற இன்றைய சமகாலத்தை அறிந்து வைத்திருத்தல் அவசியம். சமகாலத் தேவை குறித்த புரிதல் இல்லாதவர் மேற்குறிப்பிட்ட மனிதனின் நிலையை அடைவது உறுதி. அலுமினிய பாத்திரங்களைப் பயன்படுத்தக் கூடிய குடியிருப்புவாசிகளுக்கு இடையில் "கலாய் பூசுதல்" என்று கரடியாகக் கூவியும் ஒரு வாடிக்கையாளரைக் கூட பெறமுடியாது.

பிறரைக் குறை கூறி என்ன பயன்? இதைப் புரிந்து கொள்ளாமல் வகுப்புவாதம், அநியாயம் காரணமாக என் தொழிலில் தடையை ஏற்படுத்தினர் என்று புலம்பலாம். காலத்தை மதிப்பிட முடியாத அறிவீனத்துக்குப் பழிசுமத்திக் கொண்டிருக்க வேண்டியதே.

எந்தவொரு தொழிலை தேர்வு செய்திருந்தாலும் அதில் வெற்றி பெறுவதற்குக் காலத்தில் அதற்குரிய இடம் எது என்பதை அறிந்துவைத்திருத்தல் முக்கியம். இந்த அறிவியல் யுகத்தில், தகுதிக்கும் திறமைக்கும் மட்டுமே மதிப்பு உண்டு. அதை மீறுவோர் வழுக்குப் பாறையில் சறுக்கிக் கீழே விழுந்து விடுவர்.

பொருள் மிகுந்த அர்த்தம் செறிந்த உலகில் வெறும் வார்த்தை ஜாலம், வாய்ப்பந்தல் போடுவது போன்றவை காலத்துக்கு எதிரான செயல்பாடு. அதாவது முடிவு நற்பலன் என்பதே இதுபோன்ற முயற்சிகளில் இருக்காது.

## யார் அறிவாளி?

“வெற்றியிலிருந்து பயனடைவது ஒன்றும் பெரிய விஷயமில்லை. எந்த முட்டாளும் அதைச் செய்வான்; இழப்பிலிருந்து பயனடைவது மிக முக்கியமானது, அதற்கு அறிவு தேவைப்படுகிறது. அறிவாளிக்கும் முட்டாளுக்கும் இடையிலுள்ள வேறுபாடு அதுவே” என்று Dale Carnegie என்கிற நவீன சிந்தனையாளர் கூறுகிறார்.

மனிதன் இந்த உலகில் சில நேரங்களில் வெற்றியின் அருகில் இருக்கிறான். வெற்றியிலிருந்து அளவற்ற பலனை அனுபவித்தபடி இருப்பான். ஆனால் வேறு சில நேரங்களில் கடினங்களுக்கும் இழப்புகளுக்கும் இடையில் இருக்க வேண்டியிருக்கும். இவற்றைக் கடந்து போய்த் தன் இலக்கை அடைய வேண்டியிருக்கும்.

இழப்பிலிருந்து பயனடைவது என்கிற விஷயம் தர்க்கமில்லாததாக தோன்றுகிறது. தனி மனிதனாகட்டும்; குழு, நாடு எதுவானாலும் அதை இலக்காகக் கொள்வது வெற்றிகரமானதே. யாருக்குக் கஷ்டகாலம் வரவில்லையோ அவர் வெற்றிகரமானவர் அல்லர். கடினங்கள் இருந்தபோதும் வெற்றி பெறுவதே சிறந்தது. வழியில் எதிர்படும் கடினங்களை மீறி வெற்றி கொண்டவனே சிறந்தவன்.

## தலைகீழ் பாய்ச்சல்

ஆஸ்திரேலியாவின் சிட்னி நகர சிறையொன்றிலிருந்த கைதி ஒருவன் தப்பிக்கும் முயற்சி ஒன்றில் ஈடுபட்டான். சிறைச்சாலைக்கு வந்த பெரிய சரக்கு ட்ரக் வண்டியின் அடிபாகத்தில் புகுந்து அவன் அமர்ந்துகொண்டான். மிகவும் சிரமப்பட்டு வெளிவந்து பார்த்தபோது அது மற்றுமொரு சிறைச்சாலை. முன்பிருந்த இடத்திலிருந்து 6.5 கி.மீ. தொலைவில் அமைந்திருந்தது.

சிறையிலிருந்ததால் பதற்றம் காரணமாக தப்பிக்கவும் வெளியில் வருவதைப் பற்றியும் எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருந்தான். இதற்கிடையில் சிறையில் தற்செயலாக ஒரு ட்ரக் வண்டியைப் பார்த்ததும் அதன் பொந்தில் போய் அமர்ந்து கொண்டான்.

அது சிறையிலிருந்து தன்னை வெளிக்கொணர்ந்துவிடும் என்றே அவன் நினைத்தான். ஆனால் ட்ரக் வண்டி அந்த சிறையிலிருந்து வேறொரு சிறைக்குப் போய்க் கொண்டிருந்தது.

இது போன்ற நிகழ்வுகள் சில நேரங்களில் இலக்கிலிருந்து நம்மை வெகு தொலைவிலாக்கும் அல்லது எங்குமே கொண்டு போய்ச் சேர்க்காது. அதாவது எடுத்த முயற்சியில் தோல்வியடைந்து முன்பிருந்த இடத்துக்கே போய்ச் சேர்ந்து விடும். பயணி, வாகனம் என இரண்டு விஷயங்களின் கூட்டுச் சேர்க்கையே வாழ்க்கை. எந்தவொரு பயணியும் வாகனம் எங்கு போகிறது எனத் தெரியாமல் ஏறி அமர்ந்து விடுவதன் மூலம் தான் விரும்பிய இடத்துக்குப் போய்ச் சேர்த்துவிட முடியாது. மேற்குறிப்பிட்ட சிறைவாசி எப்படி ஒரு சிறைச் சாலையிலிருந்து மற்றொரு சிறைச்சாலைக்குள் போய் மாட்டிக் கொண்டாரோ அப்படி ஏற்படுவது மோசமல்லவா? தற்செயல்கள் எப்பொழுதும் பலனளிப்பதில்லை.

## சுயமாக அறியவேண்டும்

தையல் கலைஞரிடம் (டைலர்) "கோட்" தைக்கும்போது அவர் நம் உடலின் அளவெடுப்பார். ஒவ்வொருவரின் உடல் அளவிலும் வடிவிலும் நுண்ணிய வேறுபாடு உண்டு. சரியாகத் தைக்கப்பட்ட ஆடை, கச்சிதமாக உடலை மறைக்கும். இல்லாவிட்டால் அது இறுக்கிப் பிடித்தோ தளர்ந்தோ இருக்கும். ஆனால் தையல் கலைஞர் தோள், கை, மணிக்கட்டு, கால்கள், இடுப்பு என எடுக்கும் அளவு ஒரு கோட் தயாரிக்க போதுமானதாக இருப்பதில்லை. தையல் கலைஞருக்கு அதைவிட வேறு உடல் அளவின் கனபரிமாணங்கள்

குறித்த அறிவும் இருக்க வேண்டும். அது கொண்டிருக்கும் ஏற்ற இறக்கங்கள் வளைவுகளின் துல்லியம் மிகவும் அவசியம். என்னதான் இருந்தாலும் அளவெடுக்கப்பட முடியாத, முடிவெடுக்கத் தெரியாத நல்லதொரு கோட் ஒருபோதும் தைக்க முடியாது. சிறந்த தையல் கலைஞர் ஆக இயலாது.

வீட்டை நிர்வகித்தல், மத விவகாரம் என எல்லாவற்றிலும் இதே விதியைக் கொண்டு அளவிட வேண்டியுள்ளது. மதச் சீர்திருத்தம், பிரச்சாரப் பதிப்பகம் எனத் எந்தத் துறையாக இருந்தாலும் சொல்லப்படாத விஷயங்களை எதிர்கொள்ளும்போது முடிவெடுக்கத் தெரிந்தவரிடம் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டால் அந்த அமைப்பு வெற்றிபெறும். எல்லா சூழல்களிலும் மனநிறைவான தீர்வுகளைப் பெற முடிந்தவரின் இயக்கம் வளர்ச்சியுறும்.

பட்டியலிட்ட விஷயங்களை மட்டுமே அறிந்திருந்தால் எங்கு அட்டவணை முடிகிறதோ அங்குத் தன் பணியை முடித்து விடுபவரால் பெரிய பணி எதையும் செய்துவிட முடியாது. அதேபோல எந்தவொரு இயக்கம் / அமைப்பை நடத்தி வரும்போது அடிக்கடி சில விஷயங்கள் குறுக்கிடும். அதுபற்றி முன்பு சொல்லப்பட்டிருக்காது. முன்னறிவிப்புகளாக ஏதும் வழிகாட்டுநெறி தர இயலாது. அல்லது விழிப்புணர்வு அவ்வளவு இல்லாதபட்சத்தில் மேல்நிலை பொறுப்பாளர்களின் அறிவுரைக்குச் செவி சாய்க்க வேண்டும்.

ஓர் இயக்கத்தில் இதுபோன்ற திறமையாளர்கள் இல்லையென்றால் முறையீடுகள் கூறிக்கொண்டே இருப்பர். விஷயங்களின் உண்மைத் தன்மை அறியாமல் தனக்கென ஒரு நிலைப்பாட்டை எடுத்திருப்பர். அதன் பிறகு தனியணி கொண்டு பிளவுபடுவார். உண்மை அறியாமல் ஒருதலைப்பட்சமான முடிவை கொண்டிருந்தால் அங்கு மையத்திலிருந்து விலகி தொலை தூரம் கடந்து போய்விடுவர்.

ஓர் இயக்கத்தை வெற்றிகரமானதாக்க ஆழ்ந்த அறிவு, பெரிய மனம் கொண்டிருக்க வேண்டும். போஸ்டர்களில் பிரச்சார வலிமையில் பெரிய ஆளுமையாக நின்றிருந்தாலும் அப்படியான தன்மை கொண்டிருக்கா விட்டால் வரலாற்றின் குப்பை மேட்டில் போய்விடுவர்.

# வெற்றியின் எளிய விதிகள்

பூட்டுச் சாவி விற்கும் பகுதியில் ஒருவர் கடை திறந்தார். ஏராளமானோர் அங்கு வருவதும் போவதுமாக இருந்தனர். ஆனால் ஒருவரும் இவரது கடைக்குள் நுழைந்ததுமில்லை, எதையும் வாங்கியதுமில்லை. ஓர் அனுபவம் வியாபாரத்தின் இரகசியத்தை அவருக்கு விளக்கிக் காட்டியது. ஒரு நாள் துணிக்கடை வீதி பக்கம் சென்றார். அடுத்தடுத்து கடைகள் இருந்தன. எங்கு போவது என்ற குழப்பம் ஏற்பட்டது. அப்பொழுது ஒரு கடைக்காரர், ஐயா! உள்ளே வந்து பொறுமையாக பார்க்கவும்" என்று சொன்ன போது, இதனால் உள்ளே நுழையும் ஆர்வம் ஏற்பட்டது.

இந்த அனுபவம் அவருக்கு ஒரு விஷயத்தை உணர்த்தியது. பொதுவாக கடைத்தெருவுக்கு வரும் வாடிக்கையாளர்களில் பலருக்கும் அது புதிய இடம் அல்லது எந்தவொரு குறிப்பிட்ட குறிப்பிட்ட கடையுடனும் வாடிக்கையாளருக்குத் தனிப்பட்ட பிணைப்பு இருப்பதில்லை. யாரேனும் அனுதாபத்துடன் அழைத்தால் உள்ளே நுழைய அந்த குரல் உதவி செய்கிறது. பிறகு எங்கும் பொருள் குறித்து முடிவெடுக்கிறார்கள்.

அப்படிப்பட்ட மனமுள்ள கடைக்காரர் தன் கடையின் உள்ளே வாடிக்கையாளரை ஈர்ப்பதில் வெற்றி பெறுவார். பலரும் தாம் எதை வாங்குவது என்பதைக் குறித்து முன்முடிவு கொண்டிருப்பதில்லை. இந்த இரகசியத்தை உணர்ந்து கொண்டவர்களால் குறைந்த புத்திசாலித்தனத்துடன் ஏராளமான வாடிக்கையாளரைப் பெற்றுவிட முடியும் இதுவே வாடிக்கையாளர் நட்பு அணுகுமுறை. பூட்டுச் சாவி வியாபாரி இதே அணுகுமுறையைத் தன் கடையில் பின் தொடர விரும்பினார். அவர் தன் கடையின் முன்வாசலில் அமர்ந்து வருவோர் போவோர்களின் முகங்களை உற்றுப் பார்த்தபடி இருப்பார்.

இந்தப் பழக்கம் அவரைப் பெரும் நிபுணராக்கியது. தெருவில் கடந்து போவோர் யார், பூட்டு சாவி வாங்க விரும்பும் தேவை உள்ளவர் யார் எனப் பிரித்தறிய முடிந்தது. பூட்டு சாவி வாங்க விரும்பும் நபராக உள்ளவரை இந்தக் கடைக்காரர் அடையாளம் கண்டதும் அவரைத் தன் கடைக்குள் வருமாறு அழைப்பார். இவ்வகையில் அவரது வியாபாரம் நன்கு சூடு பிடித்தது, ஒரு கட்டத்தில் மிக அதிகமான விற்பனை நடக்கும் கடைக்காரர்களில் ஒருவராக மாறினார்.

வெற்றியின் இரகசியம் இதுபோன்ற எளிய விதிகளால் ஆனது. பெரும்பாலானவர்கள் வெற்றி என்பது பெரிய விலை கொடுத்து

பெறப்படுவது எனவும், பெரிய வளங்களை மூலாதாரமாகக் கொண்டு அடைவது என்றும் நினைக்கின்றனர். ஆனால் அன்பான சொற்களால் சொந்த கை, கால்களின் உழைப்பால் இருக்கிற சிறிய வளங்களைச் சரியானபடி பயன்படுத்துவதுதான். செய்து கொண்டிருக்கும் பணியை விடாமல் பின்தொடர்வதன் மூலம் பொறுமையுடன் தன் பணியைச் செய்வதைக் கொண்டு வெற்றியீட்ட முடியும். மேற்குறிப்பிட்டவை எதுவுமே பெரிய விஷயமல்ல, கடினமுமல்ல; இவை பொது மக்களுக்குக் கிடைக்காதவையும் அல்ல.

ஃஃஃ

## வெற்றிக்கான திட்டமிடல்

மேற்கத்திய நிறுவனம் ஒன்று கார் சக்கரங்களைத் தயாரிக்கத் தொடங்கியது. எங்களுடைய டயர்களில் ஏதேனும் குறையைச் சுட்டிக்காட்டக் கூடியவருக்கு ரூ.50,000/ பரிசுப் பணம் அளிக்கப்படும் என அது விளம்பரம் செய்தது. மக்கள் அதை வாங்க அலைமோதினர். குறை கண்டுபிடித்தால் ரூ.50,000/ இல்லாவிட்டால் டயராவது கிடைத்துவிடுகிறது அல்லவா என மக்கள் நினைத்தனர்.

ஏராளமான குறை இருப்பதாக டயர் கம்பெனிக்கு புகார் வந்தது. அதில் 20% உண்மையானதாக இருக்கலாம் என அக்கடிதங்கள் குறிப்பிட்டன. ஆகவே அந்த மாதிரி கடிதம் எழுதியவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை அழைத்து கலந்தாலோசனைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்களுக்கான போக்குவரத்து செலவையும், தரமான ஹோட்டல்களில் தங்கும் அறை வசதியும் செய்து தரப்பட்டது. தம் குறையைச் சுட்டிக்காட்டிப் பேச வாய்ப்பும் அளிக்கப்பட்டது. முடிவில் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் கலந்து கொண்டவர்களுக்குப் பரிசு அளிக்கப்பட்டது.

இந்த ஆலோசனையின்படி டயர் தயாரிக்கப்பட்டது. தரம் கூட்டப்பட்டிருந்ததால் விலையேற்றமும் சற்று உயர்த்தப்பட்டிருந்தது. விற்பனை இரட்டிப்பானதும் அந்த நிறுவனம் முதல் டயரை தன் விருப்பப்படி தயாரித்தது. இரண்டாவது முறை தயாரிக்கப்பட்ட டயர் வாடிக்கையாளரின் கருத்தைக் கேட்டு அதற்கேற்ப உற்பத்தி செய்யப்பட்டது. ஆகவே மக்கள் தம் யோசனையும் இதில் சேர்ந்துள்ளதால் நன்றாகத் தரம் மேம்பட்டிருக்கும் என நம்பியது.

இந்த உலகில் மக்கள் அனைவரும் தயாரிப்பாளர், வாடிக்கையாளர் உறவைப் போலப் பிணைப்பு கொண்டவர்கள். இவ்வுலகில் பிறரைப் பங்காளியாக்கிய பின்பே வெற்றி பெற

முடியும். கொடுத்துப் பெறுதல் என்கிற அம்சம் பெரும் செயலூக்கம் கொண்டது. இருவழிப் பாதையைப் போன்றது. இந்த உலகம் ஒரு வழிப் பாதையல்ல.

பிறரின் இருப்பை உறுதி செய்வதன் மூலம் உங்களால் வெற்றி பெற முடியும். இந்த உலகில் வெற்றி பெற பிறரின் தயவு தேவை. வெற்றியைப் பங்கிட்டுக் கொள்பவராக மாற வேண்டும். பிறரிடமிருந்து பெறக்கூடியவர் ஏதேனும் மீளத் தருவோர் என்கிற நம்பிக்கை அளிக்க வேண்டும். பிறருக்கு அளிக்க எதுவுமில்லை என்றால் அவருக்குப் புகாரும், முறையீடுகளும் இருக்கக் கூடாது, பிறரும் அவருக்கு எதையும் தரப் போவதில்லை.

ஐஐஐ

## வேலை உண்டு, பணியாளர் இல்லை

சில ஆண்டுகளுக்கு முன்பு மோடி ரயில் நிலையத்தில் பயணிகள் காத்திருந்தனர். அப்பொழுது ஓர் இளைஞர் (பின்னர் அவரின் பெயர் ரமேஷ் தோபி என தெரிய வந்தது) வேகமாக வந்து கொண்டிருந்த விரைவு ரயில் தண்டவாளத்தில் தன் கைகளை வைத்துவிட்டார். பயங்கரமான இந்த நிகழ்வைப் பார்த்தவர்கள் அதிர்ந்துவிட்டனர். காப்பாற்ற சிறிய வாய்ப்பும் கிடைக்காத நொடிப் பொழுதில் அவரின் இரண்டு கைகளும் துண்டிக்கப்பட்டன.

கடைசி வாய்ப்பாக உயிரையேனும் காப்பாற்ற அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்து முடித்த பிறகு பேச்சுக் கொடுத்துப் பார்த்தனர். இவ்வளவு குரூரமான கொடூரமான கேட்டை ஏன் செய்து கொண்டீர்கள் எனக் கேட்டனர். Times of India 14-08-1981

வேலையில்லாத் திண்டாட்டத்தால் அவர் மன உளைச்சலுக்கு ஆளானதாகவும் இதனால் தன் கைகளை துண்டிக்கும் எண்ணத்திலேயே இரயில் நிலையம் வந்திருந்ததாவும் தெரிகிறது.

வேலையில்லை என்பதால் எனக்கு கைகள் இருந்தும் பயனில்லை, வேலையின்றி வாழ நேரிடுவது வெட்கக் கேடானது.

இந்தச் செய்தி படித்துக் கொண்டிருந்தபோது ஒருவர் அறையில் நுழைந்தார். மன அழுத்தத்துடன் காணப்பட்டார். என்னிடம் நீர்வளம் கொண்ட ஏராளமான நிலங்கள் உள்ளன. பொறுப்பான ஒருவர் கிடைத்தால் என் நிலங்களை நீர்ப்பாசனத்தை கவனித்துக் கொள்ளமுடியும் என்றார். உழைப்பு, கடமையுணர்ச்சி இருந்தால் ஒரு இலட்சம் ரூபாய் ஆண்டு வருமானம் கிடைக்கும். இதுவரை

நான் மட்டுமே இதை கவனித்து வந்தேன். என்னிடம் இப்பொழுது நேரமில்லை, என்னால் அதைச் சரிவர கவனிக்க முடியவில்லை. பொறுப்புணர்வு மிக்கவரிடம் இதை ஒப்படைக்க விரும்புகிறேன். அது முடியவில்லையெனில் நிலத்தை விற்றுவிடலாம் என்று நினைக்கிறேன் என்றார்.

வாழ்வின் நகைமுரண் இது. ஆயிரக் கணக்கானவர்கள் வேலையில்லாத திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். மறுபுறம் ஆட்கள் கிடைக்காமல் வேலை காத்திருக்கிறது. இவையிரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அறிய வருவது உலகில் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஏதுமில்லை. வேலை செய்ய ஆட்கள் பற்றாக்குறை உள்ளது என்பதே. உழைப்பு, நேர்மை என்னும் இரண்டு இயல்புகளை வளர்த்துக் கொண்டால் வேலை வாய்ப்பு அவர்களைத் தேடி வரும்.

ஐஐஐ

## கொடுப்பவராக மாறுங்கள்

Bata Shoe Company குடும்பத் தொழில் நிறுவனமாகும். Czecholovakia நாட்டில் பாட்டா குடும்பம் வசித்து வந்தது. 1620ஆம் ஆண்டு முதல் இந்தக் குடும்பம் இத்தொழிலில் இருப்பதாக தெரிகிறது. Thomas John Bata Senior நவீன Bata Shoe Company-யை நிறுவியவர். அவர் தனக்குச் சொந்தமான விமானத்தில் போய்க் கொண்டிருந்த போது பனிமூட்டம் காரணமாக அது விழுந்து நொறுங்கியதில் பாட்டா குழுமத்தில் உரிமையாளரும் எரிந்து சாம்பலானார். அதன் பிறகு அவரது மகன் கையில் நிறுவனம் வந்து சேர்ந்தது.

Bata Shoe Company 114 நாடுகளில் கிளை பரப்பியுள்ள மாபெரும் நிறுவனமாகும். கடந்த (1982) ஆண்டு 31 கோடி ஜோடி செருப்புகளை விற்றுள்ளது. கனடாவில் மிக அதிகமான வியாபாரம் நடந்துள்ளது. இந்தியாவுக்கு இரண்டாம் இடமாகும். 90,000 நேரடி ஊழியர்களும் எண்ணற்ற மறைமுகத் தொழிலாளர்களும் உள்ளனர்.

Thomas John Bata junior 40வது முறையாக இந்தியா வந்திருந்தார். 1983ஆம் ஆண்டின் பாட்டா வெற்றிக்கு அடிப்படை எது, உங்களை அந்த உச்சிக்குக் கொண்டு போய்ச் சேர்த்து எது என செய்தியாளர்கள் கேட்டனர். "நாம் மலிவான, உயர்தரமான என எல்லா வகை செருப்புகளையும் உற்பத்தி செய்கிறோம். ஆனால் வாடிக்கையாளர்களின் தேவையை முழுமையாக நிறைவேற்றி

வைக்கிறோம், குறிப்பாக வேறு எதையும்விட நாம் வாடிக்கையாளரின் தேவையை மிக அதிகமாக கவனித்துக் கொள்கிறோம்" என்றார்.

Bata Shoe Company வெற்றி தரும் பாடம் என்னவென்றால் நீங்கள் எதையாவது பெற விரும்பினால் தரக் கூடியவராக மாற வேண்டும் என்பதாகும். பிறருக்குத் தருவதன் மூலமே ஒருவர் தமக்கென எதையும் அடைய முடியும்.

ஜஜஜ

## கடின உழைப்பின் மூலமாக

Joseph Conrad (1857 - 1924) போலந்து நாட்டின் Berdiczew நகரில் அனாதையாக பிறந்தார் முறையான கல்வியின்றி உறவினர்களின் அரவணைப்பின்றி வளர்ந்தார். இளம் வயதில் கடலோடியாக மாறி தன் வாழ்வைத் தொடங்கினார்.

பல்வேறு நாடுகளில் பயணம் செய்து 1886இல் இங்கிலாந்து வந்தடைந்து பிற்பாடு பிரிட்டிஷ் குடியுரிமையையும் பெற்றுக் கொண்டார். இங்கிலாந்தில் தங்கியிருந்த ஆரம்பக் கட்டத்தில் ஆங்கில மொழி கற்கக் கடுமையாக உழைத்தார். இறுதியில் நாவலாசிரியராகும் அளவுக்கு ஆங்கில மொழியில் புலமை பெற்றார். ஆங்கில இலக்கியத்தில் அவரது சமகாலத்தவரான Thomas Har (1840 - 1928) க்கு அடுத்தபடியாக மதிக்கப்பட்டார்.

Joseph Conradஇன் எழுத்துக்களை படிக்கவும். அவர் அருமையான ஆங்கிலத்தில் எழுதுகிறார்" என்று கல்லூரியில் படிக்குமோது பேராசிரியர் ஒருவர் பரிந்துரைத்தார். அவர் எழுதிய சிறந்த கலையிலக்கியப் படைப்பு. ஆனால் 19வது வயதாகும் வரை ஆங்கித்தில் ஒரு சொல்கூட அவர் பேசத் தெரியாதவராக இருந்தார். ஆங்கிலம் அவரது தாய்மொழியல்ல, இருந்தபோதும் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் Joseph Conrad-இன் நூல்கள் இடம் பெற்றிருந்தன.

Joseph Conrad-இன் வாழ்க்கை உழைப்பின் மூலம் வெற்றியீட்ட முடியும் என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது. ஏழையாகப் பிறக்கலாம். தாய்மொழி வேறு, பயிற்சி மொழி வேறு என இருந்தாலும் பயிற்சியின் மூலம் அந்நிய மொழியில் தேர்ச்சியடைய முடியும். அதில் நிபுணத்துவம் பெற முடியும் என்பதைக் காட்டுகிறது. ஏழையின் வீட்டில் பிறந்தாலும் பெரிய கல்விமானாக மாறமுடியும். தாய்மொழி ஒன்றாக இருந்தாலும் வேறு மொழியில் பயிற்சியும் தேர்ச்சியும் இருந்தால் பெரிய இலக்கியவாதியாகலாம். உலகின்

பார்வையில் முக்கியத்துவமற்று இருந்தாலும் கடும் உழைப்பால், சிறப்பான எழுத்து நடையால் இந்தப் பண்பாட்டின் மாபெரும் மனங்கள் அதைப் படிக்கும் கட்டாயத்துக்கு உள்ளாகும்.

## தொழிலில் ஈடுபாடும் முனைப்பும்

பரபரப்பான நிறுவனம் ஒன்றில் முழுநேர ஊழியராக இருந்த ஒருவர் அதேநேரம் ஆங்கில நாளிதழ் ஒன்றில் துணையாசிரியர் பொறுப்பிலும் இருந்தார். தொழில் நிறுவனத்தில் தன் கடமையைச் சரிவர ஆற்றிக் கொண்டு நாளிதழ் வேலையையும் கவனித்துக் கொண்டிருந்தார். "இரண்டு இடங்களில் பண்புரிகிறீர்களே, உங்களுக்கு எப்படி நேரம் கிடைக்கிறது எனக் கேட்டனர்" அதற்கு "நம் ஆர்வமும் செயல்படும் தன்மையுமே நேரம் என்பதாகும்" என்று பதிலளித்தார்.

எந்தவொரு வேலையையும் முடிக்க வேண்டுமானால் நேரம் மட்டும் முக்கியமானது அல்ல. அதில் நம் ஈடுபாடும் எவ்வளவு என்பதைப் பொறுத்தது. ஆர்வமே நம்மை எல்லாப் பணிகளிலும் முடுக்கிவிடும் வினையூக்கியாகும். ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட ஒருவரால் குறைவான நேரத்தில் அதிகமான பணியைச் செய்ய முடியும்.

வெளிநாட்டிலிருந்து ஒருவருக்கு வேலை வாய்ப்புக்கான அழைப்பாணை (work permit) கிடைத்தது. இத்தனைக்கும் கடவுச் சீட்டு passport கூட அவரிடம் அப்பொழுதில்லை. மூன்று வாரங்களில் வந்து சேரும்படி பணியாணை (work order)யில் எழுதி இருந்தது. இந்த குறைந்த அவகாசத்தில் முடிக்கவேண்டிய சட்ட நடைமுறை ஏராளம் இருந்தது. கூறப்பட்ட குறித்த நேரத்தில் / நாளில் பணியை ஏற்க முடியாதபடியே சூழல் இருந்தது. பயணம் ஒரு கனவு போல் தோன்றியது. இரவும் பகலும் எஞ்சியிருந்த தம் பணியை ஒவ்வொன்றாக முடித்து வந்தார். பயண நாளில் கடவுச் சீட்டும் வந்து சேர்ந்தது. ஒருவழியாக விமானம் ஏறியாகி விட்டது.

இதேபோன்ற ஒரு சூழல் வேறொருவருக்கு ஏற்பட்டது. மாநகரிலிருந்து வெகுதொலைவிலுள்ள கிராமம் ஒன்றில் இருந்தபடி மாநகரிலிருக்கும் தன் உறவினருக்கு "என்னால் மாநகருக்கு வர இயலவில்லை. ஆகவே எனக்குக் கடவுச் சீடை ஏற்பாடு செய்யவும்., அதற்குரிய பணத்தைத் தந்துவிடுகிறேன்" என்று கடிதம் எழுதினார். உறவினரும் சரி என்று பதில் அனுப்பினார். குறிப்பிட்ட கிராம நபரும் மனநிறைவுடன் இருந்துவிட்டார். அவரிடம் முழுமையான

இரண்டு மாதங்கள் இருந்தன. ஆனால் ஒரு பணியும் நடக்கவில்லை. குறித்த நேரத்தில் கடவுச் சீட்டும் தயாராகவில்லை. அதனால் அவர் வெளிநாட்டுக்கும் போக முடியவில்லை. அதன்பிறகு அவரது மாநகர உறவினரிடமிருந்து “இந்த இந்த காரணத்தால் கடவுச் சீட்டு ஏற்பாடு செய்ய முடியவில்லை” என்று பதில் வந்தது.

முதல் நபர் தன் சொந்த பொறுப்பில் கடவுச் சீட்டுக்கு விண்ணபப்பித்துப் பெரும் ஆர்வத்துடன் கிடைத்த / குறித்த நேரத்தில் பெற்றுக் கொண்டார். இரண்டாம் நபர் நேரடியாக விண்ணப்பிக்காமல் தம் உறவினரிடம் அந்தப் பொறுப்பை தள்ளிவிட்டார். நேரம் கிடைத்தும் அவரால் கடவுச் சீட்டு எடுத்து வெளிநாடு போக இயலவில்லை.

ஒருவர் தன் பணியில் ஆர்வம் எடுத்துக்கொண்டால் அறிவின் வாசல் அவருக்குத் திறந்துகொள்ளும். அவர் எடுத்த பணியை முடிக்கக் கடைசி வரை தியாகம் செய்ய முன்வருவார். விளைவு வாரங்களில், மாதங்களில் முடியவேண்டிய பணி நாட்களில் முடிந்துவிடும் அற்புதம் இது.

ஐஐஐ

## சிறந்த திட்டமிடல்

S.N. Kohli (1916 - 1997) இந்திய கடற்படைத் தளபதியாகப் பணியாற்றி ஓய்வுப் பெற்றவர். புதுடில்லி நகரத்தில் சொற்பொழிவாற்றும்போது “வெற்றி என்பது முழுமையாக மனம் தொடர்பான விஷயம்” என அவர் குறிப்பிட்டார். ஒருவரிடம் உறுதியான எண்ணம் இருந்தால், அவர் இலக்கை அடைந்து விடுவார். அதேபோல திடமான சிந்தனை இல்லாதபோது “இது முடியாத செயல்” என்று கூறி அமர்ந்து விடுவார். இது தொடர்பாக 1971ஆம் ஆண்டு நடந்த இந்தியா பாகிஸ்தான் போரின் ஒரு எடுத்துக்காட்டை மேற்கோள் காட்டினார்.

கராச்சி துறைமுகத்தைத் தாக்கும் முடிவு எடுக்கப்பட்டது. அப்பொழுது நம்மிடமிருந்த போர்க் கப்பல் தற்காப்புக்காக மட்டும் வடிவமைக்கப்பட்டு இருந்தது. ஆனால் அதே கப்பலைக் கொண்டு தாக்குதல் போர் தொடுத்து கராச்சி துறைமுகத்தைச் சேதப்படுத்தினோம். பாகிஸ்தானியர்கள் அதிர்ந்து விட்டனர். நம்மிடமிருந்தவை நவீன மேம்பட்ட ஆயுதமாக இல்லாத நிலையிலும் கிடைத்துள்ள / கையிருப்பிலுள்ள ஆயுதத்தைக் கூர்மையான அறிவுடன் பயன்படுத்தியதே காரணம்.

அட்மிரல் S.N. Kohli கூறியது தனி நபருக்கும் நாட்டுக்கும் பொருந்தும். வெற்றிக்கு அடிப்படை மனிதன் கொண்டிருக்கும் திடநம்பிக்கையே இரண்டாவதாக முழு எச்சரிக்கையுடன் கையிலுள்ள வளங்களின் கச்சிதமான பயன்பாடே.

மனிதனின் தோல்விக்குக் காரணம் வளமின்மை அல்ல, மாறாக வளங்களின் மீதான முழு கட்டுப்பாட்டின்மையும், முறைகேடாக அதைப் பயன்படுத்துவதும் ஆகும்.

கிராமவாசி ஒருவர் கட்டிடம் கட்ட விரும்பினார். அவரிடம் சொற்ப வளங்களே இருந்தன. கடைக்கால், கட்டிட அஸ்திவாரம், மிக ஆழமாக அமைத்தார். நீங்கள் என்ன கோட்டையா கட்டப்போகிறீர்கள் என மக்கள் வியந்தனர். வீடாவது, இவர் கட்டி முடிப்பதாவது என யாரோ விமர்சனம் செய்தனர்.

கட்டிட மூலப்பொருள் ஏராளம் அஸ்திவாரப் பணிக்கே செலவாயிற்று. தரை மட்டத்துக்கு மேல் கட்ட பொருட் தட்டுப்பாடு ஏற்பட்டது. மிகவும் கஷ்டப்பட்டு மதிற்சுவர்களை எழுப்பினார். கூரை வேய பணமில்லாமல் கஷ்டப்பட்டு ஒரேயொரு அறையின் மேல்தளம் எழுந்தது. வேறு அறைகளின் சுவர்கள் மட்டுமிருக்க மேற்கூரையின்றி வானம் பார்த்து மொட்டையாக நின்றது. அஸ்திவாரப் பணிகளில் தேவைக்கும் அதிகமாகச் செலவழித்து விட்டதால் அவரால் ஒரு வீட்டைக் கூட முழுமையாகக் கட்ட முடியவில்லை. அவர் வீட்டு அஸ்திவாரம் தேவைக்கதிகமான வலுவோடும், தரை மட்டத்திற்கு மேல் கட்டிடம் அரைகுறையாகவும் எஞ்சியிருந்தது.

மனவுறுதி கொண்டவர்களால் மட்டுமே தமது இலக்கை அடைய முடியும். உரிய வளங்களைச் சரியான வழியில் செலவழித்தால் வெற்றி பெற முடியும்.

## தவறு செய்யும் துணிவு

அஹ்மத் பட்டப் படிப்பை முடித்தவர். இக்பால் எட்டாம் வகுப்பு வரை மட்டுமே பள்ளிக்கூடத்திற்குச் சென்றவர். ஒரு நகரத்தில் இந்த இரண்டு நண்பர்கள் வசித்து வந்தனர். ஒருமுறை இக்பாலுக்கு அரசு அலுவலகம் ஒன்றுக்குச் செல்ல வேண்டியிருந்தது. கூடவே அஹ்மதும் இணைந்து கொண்டார். அங்கு இக்பால் மோசமான ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தார். பணி முடிந்தபிறகு இருவரும் வெளியில் வந்தபோது அஹ்மத் கூறினார்.

நீ மோசமான ஆங்கிலத்தில் பேசியதைப் போல் ஒருபோதும் நான் பேசத் துணிந்திருக்க மாட்டேன். இந்த விமர்சனத்தால் இக்பால் நாண உணர்ச்சி எழவில்லை, நம்பிக்கையுடன் பதிலளித்தார். "தவறாகப் பேசும் துணிவு இருந்தால் மட்டுமே சரியாகப் பேச வரும்" என்றார். இக்பால் மேலும் கூறினார் : நீ பட்டதாரி, நானோ படிப்பறிவற்றவன், ஆனால் நீ பார்த்துக் கொண்டே இரு, ஒருநாள் நான் நன்கு ஆங்கிலம் பேசுவேன், நீயோ வெறுமனே நான் பேசுவதை மட்டும் பார்த்துக் கொண்டிருப்பாய், உன்னால் ஒருகாலத்திலும் ஆங்கிலம் பேச முடியாது" என்றார்.

இது நடந்து இருபதாண்டுகள் கழிந்து விட்டன. இக்பால் சொன்னது உண்மை, அஹ்மத் அதே பழைய நிலையிலேயே இருந்தார். ஆனால் இக்பாலின் துணிச்சலான ஆர்வம் பலனளிக்கத் தொடங்கியது. சரளமாக ஆங்கிலம் பேசக் கற்றுக் கொண்டார். இலக்கணத்திலும் சொல் பயன்பாட்டிலும் வேறு எவரும் குறை காணமுடியாதபடி இருந்தது அவரது உரையாடல்.

இக்பாலுக்கு இதனால் நற்பலன் கிடைக்கத் தொடங்கியது. நகரத்தில் சிறு கடை ஒன்றை ஆரம்பித்தார். இப்பொழுது தொழிற்சாலை ஒன்றுக்கு உரிமையாளர். "தவறாக பேசு, ஆகவே உன்னால் என்றேனும் ஒருநாள் சரியாகப் பேச வரும்"

இக்பாலின் இந்த முறை மொழியுடன் மட்டும் தொடர்புடையது அல்ல. வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் பொருந்தும். இந்த உலகில் துணிச்சல் மிக்கவர்கள் மட்டுமே அச்சமற்று முன்னேறிச் செல்லவும், சவால்களை எதிர்கொள்ளவும் செய்வர். இந்த உலகில் தவறு செய்ய தயங்காதவர்களால் மட்டுமே சரியான செயலைச் செய்ய முடியும். தான் எங்கு தவறு செய்து விடுவோமோ என்று தயங்கக் கூடியவர்களால் வாழ்க்கையின் ஓட்டத்தில் பின்தங்கிவிட நேரிடும். ஆகவே இலக்கை நோக்கி போய்ச் சேருவது பாலைவன கானல்நீர் போலாகிவிடும்.

ஜஜஜ

## சொல்லாமலே

Sir Charles Napier (1782 - 1853) சிந்துப் பகுதியை 1843இல் வென்றார். அப்பொழுது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த Lord Dalhousie (1812 - 1860) அவர்களுக்கு Peccavi என்று இலத்தீன் மொழிச் சொல்லில் பூடகமாகத் தந்தி அனுப்பினார்.

சங்கேதமொழியைக் கட்டுடைத்துச் சரியாகப் புரிந்துகொண்டது வியப்பான செய்தி. இராணுவ தளபதிக்கும் ஆளுநருக்கும் இடையில்

இரகசியப் பரிவர்த்தனை குறித்து முன்பு எந்தவொரு புரிந்துணர்வும் இருந்ததில்லை. அதனால் பொருள் கொள்வதற்கு வழிகாட்டுதல் இருக்கவில்லை. இருந்தபோதும் கவர்னர் ஜெனரல் ஒரு நிமிடமும் தாமதிக்கவில்லை.

அதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது "I have sinned" என்று பொருள் வருகிறது. ஆனால் மறைமுகமாக "I have Sindh" சிந்து எனக்கு கிடைத்து விட்டது" சிந்துப் பகுதி வெற்றி கொள்ளப்பட்டதை அறிந்து மகிழ்ச்சியுற்றார். செய்தி உண்மையாக இருந்தாலும் இரகசியமாகப் பரிமாறப்பட வேண்டியது. அப்பொழுது தேவையாக இருந்தது. இக்கட்டான மாபெரும் வரலாற்று கணங்களில் பெரும் பதவியில் இருப்பவர்கள் மிகவும் அறிவுக் கூர்மை உள்ளவர்களாக, திட மனமுள்ளவர்களாக இருப்பது அவசியம். அதாவது குறிப்புகளால் முழுத் தகவலை உள்வாங்கக் கூடியவர்களாக இருப்பது முக்கியம். வரிகளாக நேரடியாக எழுதப்பட்டதுடன் அதற்கு இடையில் எழுதப்பட்டிருக்காதச் செய்திகளையும் புரிந்து கொள்ளும் திறமை கொண்டிருக்க வேண்டும்.

மிகவும் முன்னுணர்வு, கூர்மையான அறிவு, ஆழமான படிப்பு இருந்தால் மட்டுமே இவ்வாறான தலைவராக இருக்க முடியும். வாழ்க்கையின் எதார்த்தம் என்னவென்றால், எல்லாம் உடனடியாக வெளிப்படையாக சொல்லப்படாதவை, அறிவிக்கப்படாதவை. நிறைய விஷயங்கள் கண்டறியப்பட வேண்டியவை. அவ்வாறான திறன் கொண்டவர்களிடமே மதிப்புமிக்க பணிவந்து சேரும். அதிலிருந்து படிப்பினையைப் பெற முடியும்.

இந்தத் திறமையில்லாதவர்களை விளையாட்டுத்தனமான செயல்களில் ஈடுபட்டுப் பிறகு முறையீடுகளைச் செய்யத் தொடங்குவர். மௌன மொழிகளை அறிந்த நண்பர்களைப் பெற்றவர்கள் பெரும் பேறுடையவர். சொல்லப்படாதவற்றைக் கேட்கும் திறன் படைத்தோர் எழுதப்படாதவற்றை வாசிப்போர், பாக்கியசாலிகள். வெற்றிடங்களால் இட்டு நிரப்பப்படும் வரிகளுக்கு இடையிலுள்ளதை கிரகிக்கும் திறன் கொண்டிருப்பதால் வானம் இவர்களின் வசமாகும்.

## சாதாரண முன்னெடுப்பு

ஒரு டாக்டர் சிறிய மருத்துவமனையைத் திறந்தார். குறுகிய காலத்தில் அது வெற்றிகரமாக இயங்கத் தொடங்கியது. அங்கு வரக்கூடிய நோயாளிகளை முதலில் முகமன் கூறி வரவேற்ற பின்பு

ஆறுதலாகப் பேசத் தொடங்குவார். பொதுவாக நோயாளிகள் உள்ளே நுழைந்ததும் மருத்துவருக்கு வணக்கம் செய்வது வழக்கம். இதை மருத்துவர்களும் விரும்பவே செய்தனர். ஆனால் இங்கு நிலைமை தலைகீழ். மருத்துவர் நோயாளியை வரவேற்கிறார். இன்முகம் பாராட்டுகிறார். இதனால் நோயாளிகளால் நிரம்பி வழிந்தது இந்த மருத்துவமனை. புகழும் கைராசியான மருத்துவர் என்கிற பெயரும் வந்து சேர்ந்தது. இத்தனைக்கும் அவர் M.B.B.S. படித்தவருமல்ல, வெறுமனே R.M.P. மருத்துவர்.

வாடிக்கையாளரிடம் பல ரூபாய் நோட்டுகள் இருந்தால் நல்ல நோட்டுகளைத் தம்மிடம் வைத்துக் கொண்டு பழைய, கிழிந்த நோட்டுகளைக் கடைக்காரரிடம் கொடுப்பதை ஒரு கடைக்காரர் கவனித்தார். வாடிக்கையாளர்கள் புதிய ரூபாய் தாள்களை விரும்பியதை உணர்ந்தார். ஆகவே இந்த உளவியலைத் தன் வாடிக்கையாளரிடம் பயன்படுத்த விரும்பினார் அதிகமான பொருட்களை வாங்கும் வாடிக்கையாளர் தரும் பணத்திற்குப் புதிய ரூபாய்த் தாள்களை சில்லறையாகத் தருவதை வழக்கமாக்கிக் கொண்டார்.

கடைக்காரர் தம் பணப்பெட்டியில் எல்லா வகையான ரூபாய் நோட்டுகளையும் வைத்தார். பழைய கிழிந்த ரூபாய் நோட்டுகளைத் தனியிடத்தில் சேகரித்து அந்தப் பழைய ரூபாய் தாள்களை வங்கியில் செலுத்தி அதற்குப் பதிலாக புதிய ரூபாய் நோட்டுகளை பெற்று வந்தார். பணப்பெட்டியில் பழைய தாள்களைத் தனித்து வைத்துப் புதிய ரூபாய் நோட்டுகள் எடுப்பதை வாடிக்கையாளர் காணும் வகையில் அமைத்துக் கொண்டார்.

எதார்த்தத்தில் கடைக்காரரின் இந்தச் செயல் பெரும் வரவேற்பைப் பெற்றது. கடைக்காரர் தம் நலம்விரும்பி என வாடிக்கையாளர்கள் கருதினர். மிகச் சாதாரணமான இந்தச் செயல் வாடிக்கையாளரின் மனதைக் கவர்ந்தது. அவரது கடை வாடிக்கையாளர்களால் நிரம்பி வழிந்தது.

வெற்றியின் இரகசியம் உங்களுக்குள் சில திறன்களை வளர்த்துக் கொள்வதிலும் பிறரின் நலன் நாடுவதும் உங்கள் இயல்பு என்பதைப் புரிய வைப்பதிலும் இருக்கிறது இந்தக் கடைக்காரர் செய்தது. இதமான சொற்களில் பேசியதைப் போல, பழைய ரூபாய்த் தாள்களுக்குப் பதிலாகப் புதிய தாள்கள் தந்ததைப் போல எதுவானாலும் சரியே.

ஐஐஐ

# பிரச்சனைகளும் வாய்ப்புகளும்

“பிரச்சனைகளைப் பட்டினிப் போடு, வாய்ப்புகளுக்குத் தீனி போடு” என்று ஆங்கில பழமொழி ஒன்றுள்ளது. மிகக் குறைவான சொற்களில் பொருள் நிறைந்த வாக்கு இது. சமகால உலக வெற்றியின் இரகசியமும் இதிலேயே உள்ளது. இதைப் புரிந்துக்கொண்டு அதன்படி செயல்படக் கூடியவர்களுக்கு வெற்றியின் வாசல் திறந்துகொள்ளும்; அறியாமை கொண்டு இயங்கக் கூடியவர்களுக்கு அது மூடிக் கொள்ளும்.

இந்த ஞானச் சொல்லை அறிந்தவர்க்கு உலக வெற்றி வசமாகும். அறியாதவர் பயனற்றுப் போவார். அவர் ஈடுபட்டது எதுவும் விளங்காது. இந்த உலகில் மக்கள் இரண்டு விதமான விஷயங்களுக்கு மத்தியில் இருப்பர். ஒன்று பிரச்சனை; மற்றொன்று வாய்ப்புகள். இவ்விரண்டுக்கு இடையில் கழிவதே வாழ்க்கை. எவ்வளவு பிரச்சனை இருந்தாலும் நல்வாய்ப்புகளும் அதைச் சுற்றி இருந்து கொண்டிருக்கும். இது தனிநபர், குழு, சமூகம், நாடு என அனைவருக்கும் பொருந்தும்.

இந்த இடத்தில்தான் உலகில் மனிதர்கள் சோதிக்கப்படுவர். எந்த மனிதன் வெறும் பிரச்சனைகளை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறானோ அவன் தன் வாய்ப்பை பறிகொடுப்பான். மறுபுறம் வாய்ப்புகளின் மீது கவனம் குவிப்பவர் கவலைப்படுவதில்லை. தன்னை பாதிக்கும் விஷயத்தில் தன் நேரத்தை செலவழிக்க மாட்டான். பிரச்சனைகளுக்கு தீனி போடுவது வாய்ப்புகளுக்குப் பட்டினிப் போடுவதைப் போன்றது. வாய்ப்புகளுக்குப் பட்டினிப் போடுவதைப் போன்றது. வாய்ப்புகளுக்கு தீனிப் போடுவதால் பிரச்சனை பட்டினி கிடக்கும். வாய்ப்புகளை பயன்படுத்துவதன் உண்மைநிலை பிரச்சனையை கண்டுகொள்ளாமல் இருப்பதில் அடங்கியுள்ளது.

பிரச்சனையில் ஈடுபாடு காட்டுவதில் பெரிதாக உதவி எதுவும் நேரிடையாக செய்ய முடிவதில்லை. மாறாக பிரச்சனையில் அகப்பட்டு விடுவதே பெரும்பாலும் நடக்கிறது. நடைமுறையில் நேர விரயம், அழுத்தம் தவிர வேறு பயன் ஏதும் விளைவதில்லை. யார் வாய்ப்புகளைப் பயன்படுத்துகிறாரோ அவர் அதனால் பலன் அடைவது ஒரு புறமெனில் பிரச்சனை எனச் சொல்லப்படுவது தனகுத் தானே தீர்ந்து போகிறது.

ஐஐஐ

# புலியிடமிருந்து கற்றல்

Jim Corbett உலகப் புகழ்ப் பெற்ற புலி ஆர்வலர், வனவிலங்குக் காப்பாளர். இவரது பெயரை புலிகளின் வனக் காப்பகம் ஒன்றுக்கு சூட்டப்பட்டுள்ளது. "சீண்டப்படாதவரை புலிகள் எந்தவொரு மனிதனையும் தாக்குவதில்லை" என்று அவர் முன்பு எழுதியுள்ளார். காட்டில் அங்கும் இங்கும் அலைந்து திரிந்து வாழ்ந்து கொண்டிருக்கும் பழங்குடியினர் இதை உறுதிப்படுத்துகின்றனர். காட்டில் நேருக்கு நேர் சந்திக்கும் சூழல் ஏற்படும்போது பழங்குடியினர் அச்சப்படுவதில்லை, பொருட்படுத்துவதில்லை. பொதுவாக புலி தன் பாதையில் அமைதியாக சென்றுவிடும். அதை தொந்தரவுப்படுத்தாதவரை புலியால் ஆபத்து எதுவும் ஏற்படுவதில்லை.

எதார்த்தத்தில் புலி தன் இயல்பில் மனித விரோதி விலங்கல்ல. "ஆட்கொல்லிப் புலி" என்பது வெறுமனே தற்செயலான சொல் மட்டுமே. "ஆட்கொல்லிப் புலி" என்றெல்லாம் ஒன்றுமில்லை ஒருசில புலியை "ஆட்கொல்லிப் புலி: எனக் கூறலாம். ஆனால் அதுவும் பிறவி "ஆட்கொல்லிப் புலி" அல்ல. இயற்கையில் "ஆட்கொல்லி புலி"யாக எந்தவொரு புலியும் மாறுவதில்லை. பயிற்சியற்ற வேட்டைக்காரர்கள் புலியைக் கொல்வதில் வெற்றி பெறாமல் புலியை காயப்படுத்தி விடுகின்றனர். புலியை வீழ்த்தும் எண்ணத்தில் துப்பாக்கியில் சுடுகின்றனர். ஆனால் தேர்ச்சி இல்லாததால் சரியானபடி இலக்கை வீழ்த்த முடிவதில்லை. புலி மிகச் சாதாரண அடி அல்லது காயத்துடன் தப்பித்துவிடுகிறது, சாவதில்லை. இந்த வகை புலியே "ஆட்கொல்லிப் புலி"யாக மாறக் கூடியவை. அதன் பிறகு எந்த மனிதனைக் கண்டாலும் அது எதிரியாகக் கொல்லும் . புலி உள்ளிட்ட பிற வனவிலங்குகளின் நிலையும் இதுவே.

இயற்கை உலகில் நமக்கு இதில் இரண்டு பாடங்கள் உள்ளன. யாரையும் எதிரியாகக் கருதி பகைமை பாராட்டக் கூடாது. வேட்டை விலங்குகூட கடைப்பிடிக்கும் நெறியது. யாரேனும் நம்மை வெறுத்தால் அவர்களை எதிரியாக நடத்தாவிட்டால் அவர்களும் நம்மிடம் தவறாக நடக்கும் வாய்ப்பு குறைவு.

இரண்டாவது குறை, தயாரிப்பில் எவர்மீதும் எதிர்த் தாக்குதல் நடத்திவிடக் கூடாது. தீர்மானமில்லாத செயலில் நாம் ஈடுபட்டால் அது இழப்பில் நம்மைக் கொண்டு போய்ச் சேர்க்கும். அதன் பிறகு இரண்டு தரப்பிலும் பதற்றம் உச்சத்தைத் தொடும்.

போதிய முன்னேற்பாடுகளின்றி முன்னெடுக்கப்படும் செயல்கள் அரைகுறையில் முடியக்கூடியவை. இதனால் எதிர்தரப்பினரோடு முன்பைவிடத் தீவிர விரோதப் போக்கு

வளரும். இந்த உலகில் எல்லோருக்கும் சில குறிப்பிட்ட ஆசைகள் உள்ளன. அதை அடைந்து கொள்ள ஒவ்வொருவரும் முனைந்துக் கொண்டிருக்கின்றனர். வாழ்வின் இரகசியம் பிறரின் வழியில் குறுக்கே நிற்பதோ வழிமறிப்பதோ அல்ல. இது இயற்கையின் ஏற்பாடு. நீங்கள் பிறரைச் சீண்ட வேண்டாம். பிறரின் அநியாயம் உங்களை ஒன்றும் செய்துவிடாது. கொடுமையிலிருந்து தப்பித்து விடுவீர்கள். உங்களின் வழி ஒருபோதும் தடுக்கப்படாது. அவரவருக்கு அவரவர் பாடு திண்டாட்டம். பிறரைக் குறித்தும் எதிர் எதிராகச் சிந்திக்கவும் எவரிடமும் நேரமில்லை.

## அடிப்படைக் கட்டுமானம்

வீட்டின் கட்டுமானப் பணி கடைக்கால் அஸ்திவாரத்திலிருந்து தொடங்குகிறது. (கட்டுமானப் பணி ஒப்பந்த நிறுவனப் பொறியாளர்) வானுயர பல்லடுக்கு மாளிகையைக் கட்ட இருந்தாலும் இந்த முதல் பணி அஸ்திவாரத்திலிருந்தே தொடங்கியாக வேண்டும். அஸ்திவாரத்திலிருந்து தொடங்குவது என்னவென்றால் எதார்த்தத்தை ஏற்பது. எந்தப் புள்ளியிலிருந்து தன் பயணத்தை தொடங்குவது என்பதாகும். இந்த உலகில் நாம் மட்டும் தனித்தில்லை. வேறு சில மனிதர்களும் உள்ளனர். இயற்கை எப்பொழுதும் தனித்த, நிலைமாறா விதிகளால் தொடர்ந்து இயங்கி வருகிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கம் உள்ளது. அந்த நோக்கத்திற்காக ஒவ்வொருவரும் ஓயாது உழைக்கின்றனர். இந்த சூழலில் அவசியமான ஒன்று, எதார்த்தத்தை அங்கீகரிப்பதாகும். அந்த நடைமுறையின்படி நாம் நம் நோக்கத்தை அடைய வேண்டும்.

வாழ்க்கையின் பெரிய இரகசியம் நிகழ்வுகளை அங்கீகரித்தல். எதார்த்தத்தை ஏற்பவரால் தன் பலத்தையும் பலவீனங்களையும் கணக்கில் கொள்ள முடியும். இந்த விழிப்புணர்வு தனக்கு எது நன்மை, எது தீமை என்பதை அவருக்கு உணர்த்துகிறது.

ஒருவர் தொடக்கம், முடிவு ஆகிய இரண்டுக்குமான வேறுபாட்டை அறிந்திருந்தால் தன் முதல் அடியை எங்கு வைப்பது என்பதையும் போய்ச் சேர வேண்டிய இலக்கை எப்படி அடைவது என்பதையும் தெரிந்து கொள்வார்.

அங்கீகரித்தல் கோழைத்தனம் அல்ல. உண்மையில் அது துணிச்சலான செயல்பாடு. அங்கீகரிப்பதால் மனிதன் இழிவு அடைவதில்லை. மாறாக அதீத மரியாதையைப் பெற்றுக் கொள்வார்.

இந்த எதார்த்தத்தை ஏற்காதவர் மாயையில் உழல்வார். மாறாக நடைமுறைப் போக்கை உணர்ந்தவர் கற்பனையிலிருந்து விடுபட்டு நடப்பு நிலவரத்துடன் பொருந்திப் போவார். மனக்கோட்டையின் மந்திரங்களை உடைத்தெறிவார். எதார்த்த உலகில் மூச்சு விடுவதால் இருப்பதை இருக்கிறபடி தீட்சண்யப் பார்வையுடன் காண்பார்.

பொருளை அதன் தன்மையில் நோக்குதலே ஞானம். இந்தத் தகுதி கொண்டவர் வெற்றி பெறுவார். இந்தத் திறமையைக் கொண்டிருக்கா விட்டால் பயணத்தை யாராலும் தொடங்கவே முடியாது. ஒருக்கால் பயணம் புறப்பட்டு விட்டாலும் பாதி வழியில் அகப்பட்டுக் கொள்வார். இலக்கை கடைசி வரையிலும் ஒருகாலத்திலும் அவரால் போய்ச் சேரவே இயலாது.

ஐஐஐ

## தவற்றை ஏற்றுக்கொள்வதால்...

புகழ்பெற்ற நிறுவனத்தின் இயக்குனர் ஒருமுறை ஒரு நூலைப் பதிப்பிக்க விரும்பினார். ஐயாயிரம் பிரதிகளை அச்சிடக் கூறினார். அதேபோல அச்சுப்பணி முடித்தபின் அவருக்கு நூல்கள் அனுப்பி வைக்கப்பட்டன. பிரதியைப் பெற்றுக் கொண்ட நிர்வாகி உடனடியாக அச்சகத்துக்குத் தொலைபேசியில் அழைத்தார். உடனடியாகத் தன்னை சந்திக்கும்படி கூறியதற்கு ஏற்ப அச்சக உரிமையாளர் அங்குப் போய்ச் சேர்ந்தார். அங்குப் போன பிறகு இயக்குனர் கடுங்கோபம் கொண்டு கடுமையாகப் பேசினார்.

தான் அனுப்பி வைத்த நூலின் சில பிரதிகளை எடுத்துக்காட்டி இந்த நூலின் book cutting படுமோசமாக உள்ளது என்பதைக் காட்டினார். அச்சக முதலாளி நூல்களை எடுத்துப் பார்த்தபோது உண்மையிலேயே அவை கோணலாக வெட்டப்பட்டிருப்பதைக் கண்டார். இதனால் நூலின் ஒருபுறம் ஒழுங்கற்று குறுகிய இடைவெளியில் இருந்தது. இது எப்படி நிகழ்ந்தது என்பது அவருக்கும் புரியவில்லை. அவர் நூல்களை அமைதியாக எடுத்துப் பார்த்துவிட்டு அமைதியாக அமர்ந்துகொண்டார்.

நிர்வாக இயக்குனரின் கோபம் தணியவேயில்லை. அவர் தன் மனக் குமுறலை கொட்டித் தீர்த்த பிறகு, அச்சக உரிமையாளர் தீர்மானமான குரலில் பதிலளித்தார். “நீங்கள் ஏன் இவ்வளவு பதற்றப்படுகிறீர்கள். உண்மையில் இழப்பு என்னுடையவை, நானல்லவா வருத்தப்பட வேண்டும்?” என்றார்..

“இது தங்களின் இழப்பு எப்படியாகும்?” என்று கேட்டார்.

நான் அச்சடித்த நூல்களை இதே நிலையில் தங்களுக்குத் தருவது முறையல்ல. இவற்றை நானே எடுத்துக் கொண்டு வேறு புதிய நூல்களை அச்சடித்துக் கொண்டு வருகிறேன். சரியாக அச்சடித்து தரவே தாங்கள் பணம் அளித்துள்ளீர்கள். இதன் இழப்பு என் பொறுப்பு" என்றார்.

அச்சக உரிமையாளரின் இந்தப் பணிவு நிர்வாக இயக்குனரின் மனதை இளகச் செய்தது. முன்பு கடுஞ்சொற்களுடன் பேசியவர் அனுதாபத்துடன் நோக்கியதற்குக் காரணம் அச்சக உரிமையாளர் தன் தவற்றை ஏற்றுக் கொண்டதே ஆகும். இதற்கு முன்பு நிர்வாக இயக்குனருடைய நடவடிக்கைகள் இது போன்ற சூழ்நிலைகளில் கசப்பானவை. இந்த அச்சக உரிமையாளர் தன் தவற்றையும் ஏற்கிறார். நட்ட ஈடாக புதிய நூல்களாக அச்சிட்டு வருவதாகவும் கூறுகிறார்.

"இல்லை, இவ்வளாவு பெரிய இழப்பை உங்களால் தாங்க முடியாது" என்றார். நிர்வாக இயக்குனரின் மனமாற்றத்தைக் கண்டு அச்சக உரிமையாளர் "இதற்கு ஒரு தீர்வு குறித்த எண்ணம் உள்ளது, அது சரியாக வந்தால் நூல்களை முழுவதுமாக திரும்பவும் அச்சிட வேண்டிய தேவையிருக்காது. என்னிடம் இந்த நூல்களிலிருந்து பத்தை தரவும், நான் முயன்றுப் பார்க்கிறேன்.

தாங்கள் செய்து பார்த்துவிட்டுக் கூறவும் என்றார் நிர்வாக இயக்குனர். மாதிரிப் பிரதிகளைக் கச்சிதமாக வெட்டியபின் எடுத்து வந்தார், அச்சக உரிமையாளர். கூர்மையான தானியங்கி இயந்திரத்தில் நூல்களில் மூன்று ஓரங்களையும் சரியான அளவில் வெட்டியெடுத்து வந்தார் அச்சக உரிமையாளர். இதைக் கண்ட நிர்வாக இயக்குனர் மகிழ்ச்சியடைந்து சரியாக உள்ளது, இதே போல எஞ்சியுள்ள அனைத்து புத்தகங்களையும் அப்படியே வெட்டியெடுத்து வரவும் என்று கூறினார்.

"வாடிக்கையாளரின் ஒரு இன்ச் குறை என்னளவில் ஒரு அடி குறை" என்றார் அச்சக உரிமையாளர். எந்தவொரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் இந்த நடைமுறை மிக முக்கியமானது. வாடிக்கையாளரை திருப்திப்படுத்துவதன் மூலமே இரு தரப்பு பலன் சாத்தியம்.

"என் தரப்பில் ஏதும் குறை ஏற்பட்டு விட்டால் அதை உடனே சொல்லி விடுவேன். அதை சரி செய்யவும் நினைப்பேன். நீங்கள் எதையேனும் பரிந்துரைத்தாலும் அதையும் பரிசீலிப்பேன். ஆக வாடிக்கையாளரின் மனநிறைவே தொழில் வெற்றியின் இரகசியம்" வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் இடைஞ்சல் சரி செய்யப்பட்டால்

வாடிக்கையாளரின் மனதை வெல்லமுடியும்; பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்பட்டுவிடும் ” என்றார்.

ஐஔஐஔஐ

## பிராயச்சித்தம்

கல்லூரி ஒன்றில் உருதுப் பேராசிரியர் இலக்கியப் பாடம் எடுத்துக் கொண்டிருந்தார். “பஞ்ச சீலத்தால் அன்புக்குரியவரின் தலைகோதி விடுவார்” என்று ஒரு செய்யுள் இருந்தது. “பஞ்ச சீலம்” என்பது அம்மிக் கல் என்பதாகும் என்றார், பேராசிரியர்.

பேராசிரியர் விளக்கிய பின்பு பொருள் மயக்கம் உள்ளது என மாணவர்கள் கருதினர். அய்யா! எனக்குப் பேச வாய்ப்பு கிடைக்குமா? என்று மாணவர் ஒருவர் எழுந்து நின்றார். இதில் எழுத்துப் பிழை உள்ளது போல தெரிகிறது.

இது அச்சுப் பிழையாகும், “பஞ்ச சீலம்” என்பதல்ல “பஞ்ச ஷால்” எனக் கொண்டால் “செயலற்றை கை” அதாவது “சீப்பு மனித கைகளின் குறியீடு” ஆகும். “அன்புக்குரியவளின் முடியைத் தலைவாரி அழகுபடுத்திக் கொள்ள முடியாத நிலை” சீப்பு போன்ற அஃறிணைப் பொருள் தொட்டுத் தலை வாரும் துக்கம்” எனக் கவிஞன் ஏங்குகிறான், என்றார்.

மாணவனின் இந்த புதிய விளக்கம் பிற மாணவர்களால் வரவேற்கப்பட்டது. பேராசிரியரால் விளக்க முடியாததை மாணவர் புதிய கோணத்தில் சொன்னது எடுபட்டாலும் அதைப் பேராசிரியர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இதை ஏற்கனவே இல்லை, சரி தவறு, பஞ்ச சீலம், பஞ்ச ஷால் இரண்டும் ஒன்றே என்று அறியாமையும், பிடிவாதமும் கொண்டார். உண்மை வெட்ட வெளிச்சமான பின்பும் ஏற்கவில்லை எனில் உண்மை சிறியது. தன் அகங்காரம் பெரியது என்றும் நினைக்கிறார். உண்மை இதற்கு நேர் எதிரானது. இதனால் மனிதன் தன்னைத் தாழ்த்திக் கொள்வதில் போய் முடிகிறது.

ஐஔஐஔஐ

## வணிக இரகசியம்

என் குடியிருப்பு பகுதியில் ஏராளமான உணவகங்கள் உள்ளன. பல பத்தாண்டுகளாக அவற்றை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவற்றில் ஒரே ஒரு உணவகம் சீரான, வேகமான வளர்ச்சி அடைந்து வருவதை கண்டிருக்கிறேன். பிற உணவகங்கள் முன்பு

இருந்ததைப் போல தேங்கிய நிலையில் கிடக்கின்றன. அந்த உணவக முதலாளியிடம் தங்கள் தொழில் வெற்றிகரமாக நடந்து வருவதன் இரகசியத்தைக் கூறமுடியுமா எனக் கேட்டேன்.

மிகவும் எளிது, பிறர் கிலோ கணக்கில் மூலப்பொருட்களை வாங்கும்போது நான் நூறு கிலோ வீதம் அதிகமான கொள்முதலில் பெரிய மொத்த வணிகச் சந்தையில் எடுக்கிறேன். அதிக கொள்முதல், ரொக்கப் பணத்தில் நான் வாங்குவதால் அது சந்தையின் நிலவரத்தைவிட மலிவாகக் கிடைத்து விடுகிறது என பதிலளித்தார். இலாபம் வாடிக்கையாளரிடமிருந்து அல்ல, மூலப் பொருட்கள் வாங்கும் கொள்முதல் சந்தையிலிருந்து எடுப்பது என் வழக்கம், என்றார்.

பொதுவாக எதிர்ப்படும் வாடிக்கையாளர்களிடமிருந்து எவ்வளவு இலாபம் எடுத்துவிட முடியுமோ அதுவே சிறந்த வணிகம் என நினைப்பது கடைக்காரர்களின் மனோநிலை. இதன் பெயர் கொள்ளை, வணிகமாகாது. அதிக இலாபம் வைக்கும் கடையை மக்கள் விரும்புவதில்லை. அந்த மாதிரி கடைகள் அதிக நாள் ஓடுவதில்லை.

மூலப் பொருளை வாங்கும்போது தள்ளுபடி போன்ற காரணங்களால் இலாபம் ஈட்டப்பட வேண்டும், அதைக் கொண்டு நியாயமான விலையில் வாடிக்கையாளருக்கு விற்கப்பட வேண்டும்; அதுவே நல்ல வணிகமாகும். இந்த விதி எல்லா வணிகத்துக்கும் பொருந்தும். கடைக்காரர் விற்கும் பண்டம் எங்கோ ஒரு பெரிய சந்தையிலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

அந்தக் கொள்முதல் ஒரே ஒரு முறையோ, பல்முறையோ இருக்கக் கூடும். பொதுவாகக் கடைக்காரர் கடின உழைப்பு, அலைச்சலைத் தவிர்க்க குறுக்குவழி தேடுவது வழக்கம். ஆனால் நியாயமாகக் கஷ்டப்பட்டால் சற்று மெனக்கெட்டால் மூலப்பொருளை குறைந்த விலையில் வாங்கிக் கொள்ளமுடியும்.

கொள்முதலின்போது கவனம் செலுத்தாத, உழைப்புத் தராத கடைக்காரர் மட்டுமே வாடிக்கையாளரை சுரண்டுவார்.

இது வெற்றிகரமான வணிக நடைமுறையல்ல, இதனால் வளர்ச்சியும் சாத்தியப்படுவதில்லை. வாடிக்கையாளரிடம் அதிக விலை பெறுவது இலாபம் ஆகாது. கொள்முதலின் சிக்கனம் தொடங்கி கடைசி வரை அதைத் தொடர வேண்டும்.

வாடிக்கையாளருக்கு நியாயமான விலையில் விற்கப்படுவது உறுதி செய்ய வேண்டும். சந்தையில், கொள்முதலில், அடக்கவிலையில்,

செலவினங்களைக் குறைப்பதன் மூலம் இலாபத்தை எடுக்கத் தெரிய வேண்டும். வாடிக்கையாளரிடமிருந்து குறைவாக இலாபம் எடுப்பதன் வழியாக ஏராளமான வாடிக்கையாளரை அமைத்துக் கொள்ளமுடியும் (17-08-1980)

ஜஜஜ

## உச்சித் தொட்ட மனிதர்கள்

"Peak Performers" அமெரிக்காவில் 1986இல் வெளியிடப்பட்ட நூல். அதாவது கதாநாயகர்களைப் போல் உச்ச சாதனை செய்த சாதனையாளர்களின் வாழ்க்கையை ஆய்வு செய்து எழுதியது. மாபெரும் திட்டம் ஒன்றை தனி நபர்களிடம் பெரும் உத்வேகத்தை ஏற்படுத்துகிறது. இதனால் அந்தத் தனி நபர்கள் ஊக்கம் கொண்டு மிக அசாதாரண சாதனைகளை நிகழ்த்தி விடுகின்றனர்.

1967இல் அமெரிக்கா, மனிதகுல வரலாற்றில் முதன்முறையாக நிலவுக்கு விண்கலத்தில் ஆட்களை அனுப்பும் திட்டத்தில் ஈடுபட்டது. விண்ணூர்தி (ராக்கெட்) செலுத்துவது என்பது பலநூறு நிபுணர்களின் கூட்டு உழைப்பில் உருவானது. கணினி நிரலை எழுதும் computer programmer ஒருவரும் அக்குழுவில் இருந்தார். இந்தக் குழு திட்டப்பணியின்போது ஒவ்வொருவரும் அதீத ஈடுபாட்டுடன் இயங்கினர்.

ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் இந்தத் திட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். கிட்டத்தட்ட அனைவரும் உச்சபட்ச அர்ப்பணிப்பையும் செலுத்திக் கொண்டிருப்பது கண்கூடாகக் காணமுடிந்தது. அவர்களின் வாழ்நாளில் இவ்வாறான பணித்திறனுடன் விளங்கியதாகத் தெரியவில்லை.

பதினெட்டு மாத கூட்டுழைப்பில் எல்லாப் பணிகளும் நிறைவடைந்தன. "நாம் ஏன் இவ்வளவு சிறப்பாகப் பணிபுரிகிறோம்?" என்று ஒருவர் திட்ட இயக்குனரிடம் கேட்டார். இடது வானில் சந்திரன் தெளிவாகத் தெரிந்தது. "அங்கு செல்ல மக்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகக் கனவு கண்டு வருகின்றனர். இப்பொழுது அதை நாம் நனவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம்" என்றார்.

இது மறுக்க முடியாத உண்மை. ஏதாவதொரு பெரும்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது தனி மனிதனின் "சுயம்" தூண்டப்படுகிறது. அது மனிதனில் உள்ளுறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணர்கிறது. எல்லா தியாகங்களுக்கும் தயார்படுத்துகிறது. அதுவே உச்ச சாதனையாளர் ஆகும் காரணி.

உழைப்பதை நிறுத்தியவர், கனவு காணாதவர் எதையும் படைக்க முடியாது. அச்சத்தால் சூழப்பட்டு இருந்தால் நம்மால் எதையும் அடையமுடியாது.

ஃஃஃ

## அதீத எதிர்ப்பார்ப்பு

இத்தாலியிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய ஏழைப் பெற்றோருக்குப் பிறந்தவர் Lee Iococca (1924 - 2019) புலம்பெயர்ந்த குடியேறிகளின் குடும்பம் இது. Lee Iococca மிகவும் கடினமாக உழைத்துப் பொறியியல் பட்டமேற்படிப்பை முடித்தார். அதன் பிறகு Ford Company பணியில் சேர்ந்து ஒவ்வொரு ஏணிப்படியாக ஏறி இறுதியில் குழுமத் தலைவராக முன்னேறினார்.

Ford குழும உரிமையாளருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக Chrysler Corporation-இல் சேர்ந்தபோது அக்கம்பெனி நொடிந்து போயிருந்தது. கடன் சுமை, தொழிலாளர் பிரச்சனை, நிதியாதாரம் இன்றி முதலீட்டாளர்களிடம் கெட்ட பெயருடன் இருந்தது. ஆனால் மூன்று ஆண்டுகள் கடுமையாக உழைத்து "I am the company" என்ற தன் வரலாற்று நூலை Lee Iococca எழுதினார்.

"வெற்றி என்பது தகவலை அறிந்து வைத்திருப்பதோ, பட்டப் படிப்பை முடித்திருப்பதோ அல்ல. மனிதர்களே அதன் பலம். நான் கம்பெனியில் பெரும் பொறுப்புக்குத் தேர்வு செய்வது பணியை, வேலையைக் காதலிப்பவர்களையே. உற்பத்தியை உழைப்பைத் தரக்கூடியவர்களை கம்பெனி விரும்புகிறது என்று எழுதியுள்ளார். (The Times of India, September 22, 1985)

எதிர்பார்த்ததைவிட அதிகமாக வேலை செய்யும் தீவிரமான செயலாற்றுதல் உழைப்பாளியின் பண்பு. இவ்வாறு உழைக்கும் கல்விமானுக்கு வெற்றி வசமாகும். அவரே தலைமை தாங்கும் வழிகாட்டியாவார்.

ஃஃஃ

## வெற்றியின் விலை

மாணவர் ஒருவரின் காப்பாளர் guardian-கல்லூரி முதல்வரைச் சந்தித்து "பல்கலைக்கழக பட்ட வகுப்புப் பாடத் திட்டம் மிக அதிகமாக உள்ளது. மாணவர்கள் மிக அதிகமான நேரம் படிப்பதில் செலவிட வேண்டியுள்ளது" என்றார். இந்தப் பிரச்சனைக்கு எளிய

தீர்வு உள்ளதே! எந்தத் தரத்தை நீங்கள் விரும்புகிறீர்கள் என்பதை பொறுத்தது என்று கல்லூரி முதல்வர் பதிலளித்தார்.

கருவாலி oak மரம் வளர நூறாண்டுகள் எடுத்துக் கொள்கிறது வெள்ளரி போன்ற காய்கறிகள் வெறுமனே ஆறு மாதங்களில் வளர்ந்து விடுகின்றன. சாதாரண கல்வித் தகுதிக்குச் சில ஆண்டுகள் பயிற்சி போதுமானது. உயர்திறன் அடைவதற்கு அதிக நேரமும், உழைப்பும் செலுத்தப்பட வேண்டியிருக்கும்.

இதுவே வாழ்க்கையின் பிரச்சனைகளுக்கான தீர்வாகும். மிகக் குறைந்த உழைப்பில் சாதாரண வாழ்க்கையே அமையும். பெரிய வெற்றிக்கு அதிக உழைப்பு தேவைப்படும். ஆகவே சிரமப்பட வேண்டியிருக்கும். சாதாரண முயற்சிகளால் பெரிய வெற்றி கிடைத்து விடாது.

"ஒவ்வொரு வெற்றியும் தன் மீது ஒரு விலைப்பட்டியலைக் கொண்டுள்ளது. உரிய பொருளை வாங்க நினைத்தால் கடின உழைப்பு, தியாகம், பொறுமை, நன்னம்பிக்கை, சகிப்புத்தன்மை என எவ்வளவு விலையை உங்களால் தரமுடியும். அதற்கு நீங்கள் தயாரா?" என்பதே கேள்வி என்கிறார் Harold Sherman.

சந்தையில் உரிய விலை கொடுத்த பிறகே நாம் விரும்பியதை வாங்க முடியும். ஒவ்வொரு பதவி உயர்வும், வளர்ச்சியும் அதற்குரிய விலையைக் கோரி நிற்கிறது. முன்னேற்றம், வெற்றியை விரும்பினால் அதற்குரிய விலையைத் தந்த பிறகே அது கிடைக்கும்; கூடவோ, குறையவோ அல்ல.

ஐஐஐ

## பெரிய வெற்றிக்கு

"பொது மக்கள் தூங்கிக் கொண்டிருக்கும்போது விழித்திருந்து உழைப்பவர்களால் மட்டுமே பெரிய வெற்றியை ஈட்ட முடியும்" என்று ஒரு ஆங்கிலக் கவிஞர் கூறுகிறார்.

பொதுவாக மக்கள் பகலில் வேலை செய்வார்கள். அப்பொழுது அவர்களுடன் சேர்ந்து கஷ்டப்பட்ட பின் அவர்கள் ஓய்வெடுக்கும் போதும், தூங்கிக் கொண்டிருக்கும்போதும் உழைப்பவர்களே சாதிக்க முடியும். அதனால்தான் சாதனையாளர்களால் கூடுதல் வெற்றியை ஈட்ட முடிகிறது. பாமரர்களைவிடக் கூடுதல் உழைப்பு அங்கு செலுத்தபப்டுகிறது. பெரிய வெற்றி உழைப்பின் பலனாகும்.

"பெரிய கண்டுபிடிப்புகள் பெரும்பாலும் தற்செயல் நிகழ்வே, ஆனால் அதை விஞ்ஞானிகள் தம் கண்டுபிடிப்பாகக்

கூறிவிடுகின்றனர்" என்று நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ் ஞானியான C.V. Raman (1888 - 1970) அவர்களிடம் யாரோ கூறினர். உடனே "ஆம்" இருந்தாலும் இவ்வாறான தற்செயல்கள் விஞ்ஞானிகளுக்கு மட்டுமே வெளிப்படுகின்றன" என்று ராமன் கூறினாராம்.

விஞ்ஞானிகள் தங்கள் சோதனைக் கூடத்தில் வேறு ஆய்வுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது தற்செயலாகக் கண்டறியப்பட்டவையே மின்சாரம் போன்றவை. மின்னலைப் போன்று உடனடியாக மனதில் தோன்றியவையே. தொடர்ந்து மேலதிக ஆராய்ச்சியில் உறுதிப்படுத்தப்பட்டவையே. வெறுமனே வீட்டில் அமர்ந்திருப்பவர்களிடம் இதுபோன்ற அற்புதங்கள் நிகழ்ந்துவிடாது.

இதுவே வாழ்வின் எல்லா வெற்றிகளுக்கும் அடிப்படை. தொடர்ந்து இரவு பகலும் தன் வேலையில் மும்முரமாக இருப்பவர்களுக்கே வெற்றி கிடைக்கும். அங்கே அப்பொழுதே திடீரென்று ஒரு வாய்ப்பு வருமேயானால் அவர்கள் அதைக் கண்டு முன்னேறிச் செல்வர். வாய்ப்பு சொல்லிக் கொள்ளாமல் சில நேரங்களில் நள்ளிரவிலும் வரும். பகல் இரவு என்று நேரங்காலம் பார்க்காமல் உழைப்பவர்களால் இரவில் வரும் வாய்ப்புகளைப் பற்றிக் கொள்ள முடியும். வாய்ப்புகள் எதிர்பாரா தன்மை கொண்டவை. நேர வரையறைக்குள் பெரிய வெற்றி என்பது கடும் உழைப்பால் விளையக்கூடியது. அதைத் தவிர வேறு எந்த வழியிலும் மாபெரும் சாதனைகளைச் செய்ய வழியேதுமில்லை.

## பொருள் பொதிந்த வாழ்க்கை

பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் கேள்விப்பட்ட ஒரு நிகழ்வு வெற்றிகரமான மனிதனுக்கு எடுத்துக்காட்டாகும். 12 வயது சிறுவன் பசியோடு வீட்டிற்குள் நுழைந்தான். கடும் பசியிருந்ததால் வேகமாக வந்தவன். அங்கு தனக்குச் சாப்பிட ஏதும் கிடைக்குமா என விசாரித்தான். "உனக்குக் கொடுக்க வீட்டில் ஏதுமில்லை; என்னிடம் பணமும் இல்லை" என தாய் வேகமாக பதிலளித்தார்.

தந்தை ஒரு ஏழை; ஒரு தினக்கூலி. கிடைத்துக் கொண்டிருந்த குறைந்த கூலியும் போகப் போக குறையத் தொடங்கியது. குடும்பம் பட்டினி கிடைக்க வேண்டி வந்தது. வேலை வாய்ப்பின்மை தொல்லைப்படுத்தியது. "கூலிவேலை கிடைத்தால் உணவு; கிடைக்காத நாட்களில் பட்டினி, அதை நோன்பாக மாற்றிக்

கொள்வது" என்பதே வாடிக்கை. இதனால் மிகவும் மனம் வருந்திய மகன் தன் தாயிடம் 25 பைசா கிடைக்குமா எனக் கேட்டான். என்னிடம் உள்ளது என்றாள் தாய். மகன் அந்தக் காசுகளை பெற்றுக் கொண்டான்.

அதற்கே வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டியதாயிற்று. கோடைக் காலமான அப்பொழுது ஒரு வாளியில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு அருகிலிருந்த கடையில் பனிக்கட்டி வாங்கி வந்து ஊரின் சினிமா கொட்டகைக்குள் நுழைந்தான். ரசிகர்கள் டிக்கெட் வாங்கும் வரிசையின் அருகே நின்று குளிர்ந்த நீர், குளிர்ந்த நீர் எனக் கூவி விற்கத் தொடங்கினான். கடும் வெயிலில் நீரின் தேவை அதிகம் இருந்தது.

சிறுவன் இவ்வாறு தண்ணீர் விற்றுக் கொண்டிருப்பதைக் கண்ட இளகிய மனம் கொண்டவர்கள் சற்று அதிகமாகவே பணம் தந்தனர். இதில் கிடைத்த பணத்தில் மேலும் அதிகமான ஐஸ் வாங்கி இன்னும் அதிகக் குளிர்ந்த நீரை விற்கத் தொடங்கினான். சினிமா கொட்டகையில் ரசிகர்களின் வரிசை காலியாகும்வரை தினமும் இவ்வாறு விற்றுக் கொண்டிருந்தாள். விற்பனை முடிந்தபின் வாளி, ஐஸ் குடுவை கிளாஸ் ஆகியவற்றுடன் வீடு திரும்பியபோது பதினைந்து ரூபாய் கையில் இருந்தது. தாயிடம் வெற்றிப் பெருமிதத்துடன் அமர்ந்தான்.

அன்று முதல், ஏதாவது ஒன்றை விற்றுக் கொண்டிருந்தான். பகலில் பள்ளிக்கூடத்தில் படித்தான். மாலையில் சிறிய வேலைகளில் ஈடுபட்டு பணம் சம்பாதித்தான். இதுபோல பத்தாண்டுகள் வரை தொடர்ந்து செய்து விட்ட படிப்பை நிறைவு செய்தான்.

ரூ.850/ மாதச் சம்பளத்தில் பணியில் சேர்ந்து மாலையில் பகுதி நேர வேலையைத் தொடர்ந்து செய்து வந்தான். அந்தச் சிறுவன் இளைஞனான பிறகு திருமணமும் முடித்தான். குழந்தைகள் பிறந்தன. உறவினர்கள் மதித்தனர். பெற்றோர்கள் ஆசிர்வதித்தனர். பழைய வீட்டை இடித்துத் தரைமட்டமாக்கிப் புதிய வீட்டைக் கட்டிக் கொண்டான்.

கடினச் சூழல்கள் மனிதனின் வளர்ச்சிக்கு உதவக் கூடியவை. வெறுப்புணர்வில் மனிதன் உழன்றுவிடக் கூடாது. மாறாக புதிய உறுதிப்பாட்டை உண்டாக்க வேண்டும். சரியான தொடக்கத்தை கொண்டிருப்பதே வாழ்க்கையில் முக்கியம்.

ஒரு தனி நபர் புதிய பயணத்தைச் சரியான புள்ளியிலிருந்து தொடங்கும் விருப்பம் கொண்டிருந்தால் போதுமானது, அதன் பிறகு

எடுத்து வைக்கப்படும் ஒவ்வொரு அடியும் வளர்ச்சியே. 25 காசுகள் போன்ற குறைந்த முதலீடுகள் எல்லோருக்கும் சாத்தியமானதே. அவ்வகையான பயணம் வெற்றியில் நிச்சயம் முடியும்.

ஐஐஐ

## ஆளுமையைக் கட்டமைத்தல்

இறைவன் மரக்கட்டையைப் படைத்துள்ளான்; மரக்கலத்தை அல்ல. அவன் இரும்பை பூமியில் வைத்துள்ளான். ஆனால் இரும்பு இயந்திரத்தை நேரடியாக படைக்கவில்லை. அலுமினியம் படைத்த இறைவன் விமானத்தைத் தயாரிக்கவில்லை. இதன் காரணம் என்ன?

மூலப் பொருளைப் படைத்த இறைவன் மீதி எஞ்சிய பணியை மனிதனிடம் விட்டு வைத்துள்ளான் என்பதே காரணம். இறைவன் எல்லா மூலப் பொருட்களையும் படைத்தான். அதன்பிறகு மனிதனுக்குப் பகுத்தறிவு, நுண்ணறிவு கொடுத்துள்ளான். வடிவமைக்கப்படாத பருப் பொருட்களுக்கு ஒரு வடிவம் தரப்பட வேண்டும் என்பது இறைவனின் விருப்பமாகும்.

இயற்கையான மூலப் பொருட்களைப் பண்பாடாக மாற்றும் செயல்பாடு மனிதனிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இறைவன் மனிதனைப் பேராளுமையாகப் படைத்துள்ளான். இயற்கையில் இருப்புக்கு சிறந்த வளங்களை அளித்துள்ளான். மனித ஆளுமை அதன் இயற்கை மூல வளத்தில் இருப்பது அச்சு அசல் அல்ல. ஆக இறைவன் அளித்ததை மனிதன் வேறொரு வடிவத்துக்கு, கட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இயற்கை கொடுத்திருக்கும் வெற்றுத் தாளில் எழுதுவதைப் போன்றது இது.

இதுவே மனிதனுக்கான தேர்வு. இதில் அடையும் வெற்றி அல்லது தோல்வி மனிதனின் எதிர்காலத்தில் தாக்கம் செலுத்தும் விழிப்புணர்வை, மெய்யுணர்வை அறிதலாக மாற்றிக் கொள்ள அது மனிதனை கோருகிறது. தன் உணர்வுகளை இறை நினைவுகளாக தியானமாக மாற்றிக் கொள்ள வேண்டும். அத்தனை செயல்பாடுகளும் தெய்வீகத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

பண்புள்ள இறையடியமையாகத் தன்னை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அவன் தாயின் கர்ப்பப் பையிலிருந்து பிறந்தான். அதன் பிறகு தன்னளவில் உருவாக்கிக் கொள்ளும் ஆளுமை இரண்டாம் கட்டம். மனிதன் பேச்சுத் திறமையுடன் படைக்கப்பட்டுள்ளான். அந்த திறனை சத்தியத்திற்குச் சான்று பகரப் பயன்படுத்த வேண்டும்.

அந்தப் பேச்சுத் திறனை உண்மையை மறைப்பதற்காக முறைகேடாகப் பயன்படுத்துவது தவறு. அந்த பிறப்புரிமை உயர் பண்பாக வேண்டும். இப்பொழுது அந்தத் திறமையை உடனடி பலன்களை வேண்டி பயன்படுத்துகிறான். வேறு சிலரோ உயர் நோக்கத்துக்காகத் தன்னை அர்ப்பணிக்கின்றனர். ஒவ்வொரு மனிதனும் இயற்கையின் வெளிப்பாடேயாவர். சிலர் பூமியில் முட்களை அறுவடை செய்கிறார்கள். மற்றவர்கள் பூந்தோட்டமாகி விடுகின்றனர். சிலர் சொர்க்கக் குடிமகனாக தம்மை தகுதிப்படுத்தும் போது எஞ்சிய மக்கள் நரகவாசிகளாகி விடுகின்றனர்.

ஐஐஐ

## பழியெனும் வெஞ்சினம்

“வெறுப்புணர்வு அமிலத்தைப் போன்றது, யார் மீதேனும் வீசப்பட்டால் ஏற்படும் சேதத்தைவிட அந்த அமிலம் வைக்கப்பட்டிருக்கும் குடுவைக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்திவிடும்” என்று கூறுகிறார் இங்கிலாந்து மனோதத்துவ அறிஞர் ஒருவர்.

நீங்கள் யாரையேனும் வெறுத்துத் தீங்கு விளைவிக்க நினைத்தால் உங்கள் உள்ளத்தில் இரவும் பகலும் வெறுப்புத் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும். பிறர் மீதான வெறுப்புணர்வு நடைமுறையில் அவருக்குப் பாதிப்பு ஏற்படுத்தும்போது மட்டுமே நிஜமாகும். ஆனால் நினைத்தபடி பிறரை இழப்புக்குள்ளாக்குவது அரிது. வெறுப்புணர்வில் உருவாகும் திட்டங்கள் பெரும்பாலும் வெற்றி பெறுவதில்லை.

எல்லாச் சூழ்நிலையிலும் வெறுப்புணர்வு கொண்டவர்களுக்கு இரண்டில் ஒரு தண்டனை உறுதி பிறருக்கு பாதிப்பை ஏற்படுத்துபவருக்கு வெஞ்சினம் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருக்கும். அதில் வெற்றி பெற்றுவிட்டால் சொந்த மனசாட்சி பின்தொடரும். எதிரியைக் கொல்லும்போது மனிதன் மனநிம்மதி இழக்கிறான். வெறுப்புணர்வின் பேரவா மனிதத் தன்மையைக் கொல்கிறது. எதிரியின் மீதான வெற்றி வெறுப்புணர்வின் பேரவா சற்று அடங்கும்போது அவரது மனசாட்சி விழித்தெழுந்து எஞ்சிய வாழ்நாள் முழுவதும் குற்றமுள்ள நெஞ்சைக் குத்திக் காட்டிக் கொண்டே இருக்கும்.

குற்றவியல் வழக்குகளில் கொலைக் குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்காகப் பல்லாண்டுகள் வாதாடிய வழக்கறிஞர் ஒருவர் என்னிடம் பேசும்போது “கொலைக் குற்றவாளிகள் முழு வாழ்நாளிலும் குற்றவுணர்வில் இருந்ததைக் கண்டிருக்கிறேன்” என்று

கூறினார். சந்தர்ப்பச் சூழ்நிலையில் இவர்கள் கொலைக் குற்றத்தில் ஈடுபட்ட பிறகு இதற்காகப் பெரிதும் வருந்தவும் செய்தனர். பொதுவாக எல்லா குற்றவாளிகளின் நிலையும் இதுவே.

வெறுப்புணர்வும், குற்றமனமும் தணியும்போது சொந்த மனசாட்சியே கேள்விக்குட்படுத்தும். கொலைக் குற்றத்துக்குப் பிறகு ஒவ்வொரு கொலையாளியும் மனோவியாதிச் சிறையில் தானாக அகப்பட்டுக் கொள்வதால் அது நிலையான வேதனையாக மாறி எதிர்மறைச் சிந்தனைகளை தன்னளவில் உருவாக்கிக் கொள்வது ஒருவகையான சுயவதையாகும். அது தனக்கு எதிராகவே போய் முடியும். எதிர்மறைச் சிந்தனையின் விளைவு பிறரைத் தாக்குகிறதோ இல்லையோ முதலில் தன்னையே சீரழித்து விடுகிறது.

நேர்மறைச் சிந்தனையை வளர்க்க விரும்பும் ஒருவர் வெறுப்புணர்விலிருந்து முழுமையாக வெளியேறியாக வேண்டியது அவசியமாகிறது.

ഇരുഇരു

## இரட்டை நிலைப்பாடு வேண்டாம்

Sir Richard Dobson (1914 - 1993) இங்கிலாந்தின் வெற்றிகரமான தொழிலதிபர். பிரிட்டிஷ் டுபாக்கோ கம்பெனியின் உயரதிகாரியாக இருந்தவர். இரட்டை அடுக்கு பேருந்து (பஸ்) தயாரிப்பில் முன்னோடி நிறுவனமான British Leyland கம்பெனியின் தலைவராகவும் இருந்தவர். இங்கிலாந்தின் இலண்டன் மாநகரின் உயர்குடிப் பகுதியான Richmondக்கு செல்லும் Marchmont சாலையில் அவரது வீடு இருந்தது. இது அமைதியான சாலை, அங்கு பெரும் கோடீஸ்வரர்கள் வசித்த பகுதி.

அவர் வசித்த Marmont Road பழுதடைந்துவிட்டது. அந்தச் சாலையில் தடம் எண் 65 மாநகர போக்குவரத்துப் பேருந்து இயங்கிக் கொண்டிருந்தது. Richmond Dobson மாளிகை போன்ற வீட்டில் வசித்து வந்தார். அவர் குடியிருந்த சாலையில் புகை கக்கிக் கொண்டிருக்கும் Double Ducker பஸ் ஒன்று போவதை அவர் விரும்பவில்லை.

“பஸ்ஸிலிருந்து வெளிப்படும் டீசல் புகை உடல்நலத்துக்குக் கேடு அபாயகரமானது” என்று எழுதியிருந்த அவரது கடிதத்தை மேற்கோள் காட்டி The Gaurdian நாளிதழ் 14-08-1983 அன்று செய்தி வெளியிட்டிருந்தது

Richmond Dobson பஸ் தயாரிக்கும் தொழிலிலும், பீடி, சிகரெட் வணிகத்திலும் உள்ளவர். இந்த இரண்டு வியாபாரமும் புகையை வெளிப்படுத்தக் கூடியவை. பிறரது வீட்டிற்குள் இந்தப் புகை உட்புகுந்தபோது அதைக் குறித்து அவர் கவலைப்படவில்லை. ஒரேயொரு முறை அதுவும் தற்காலிகமாக அவர் இருக்கும் வீட்டில் இதே புகை பரவிய போது கூச்சல் போடத் தொடங்கினார், எதிர்ப்பு தெரிவித்தார்.

எல்லோருமே தமக்கு ஒன்றையும் பிறருக்கு வேறு ஒன்றையும் விரும்புகின்றனர். உண்மையில் மனிதனின் பெரிய பலவீனங்களில் ஒன்று இது.

## மனநிறைவான வாழ்க்கை

ஒருவர் மிகச் சாதாரண மாதச் சம்பளத்தில் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். இப்பொழுது அவருக்குப் பெரிய அளவிலான சொந்தத் தொழில் உள்ளது. நான் ரூ.200/ சம்பாதித்துக் கொண்டிருந்த போது ரூ.100/க்கு மட்டுமே என் வருவாயை மதிப்பிட்டு வந்தேன். இப்பொழுது ரூ. இரண்டு கோடி புரளும் பெரும் தொழிலாக மாறிய பின்பும் ரூ. ஒரு கோடிக்கு மட்டுமே அதை மதிப்பிடுகிறேன். மதம் இதை "தன்னடக்கம்" என்று வகைப்படுத்துகிறது. இது தனி மனித அளவிலும் சமூகம் போன்ற கூட்டுறவிலும் பொருந்தக் கூடியது.

இது ஒருவரது சாதாரண, எளிய நேரடிக் கூற்று என்றாலும் பொருள் பொதிந்தது. வாழ்க்கையின் எல்லா வெற்றிகளுக்கும் அடிப்படையானது. ஒரு சூழ்நிலையில் வெற்றி பெற முடியாமல் போவதற்கான காரணம் தன்னைப் பற்றி மிகை மதிப்பீடே ஆகும். அதாவது தன் தகுதியைவிட பெரும் பணியில் ஈடுபடுவதும், குறைவான விஷயத்தில் மனநிறைவு அடையாமல் இருப்பதும்; எப்பொழுதும் அதிகம் வேண்டும் என்று துரத்திக் கொண்டே செல்வதும் மனிதனின் செயலாக உள்ளது. மேலே குறிப்பிட்ட வணிகரைப் பின்பற்றிச் சென்றால் தோல்வி அடைய வேண்டியிருக்காது. ஒருவர் தன் சக்திக்கு உட்பட்டு மட்டுமே செலவு செய்தால் பொருளாதார சிக்கலிலிருந்தும் பொருளிழப்பு நெருக்கடியிலிருந்தும் தப்பித்து விடலாம்.

ஓடும் ஆற்றலுள்ளவர் வெறுமனே மிதமான நடை பயின்றால் களைத்துப் போனால் வழியில் அமர்ந்து சென்றால் விபத்தைச் சந்திக்க வேண்டியிருக்காது. ஒருவர் தன் எதிரியைத் தாக்கும் ஆற்றலை கொண்டிருந்தும் பொறுமையுடன் நடந்து கொண்டால்

எதிரியுடன் மோதி தோற்க வேண்டியிருக்காது. பெரும்பணி செய்யும் வாய்ப்பு இருந்தும் சிறிய பணியில் ஈடுபட்டால் வெறுத்துப் போக நேரிடாது. அரசியல் போட்டியுணர்வில் வெல்லும் வாய்ப்பிருந்தும் அரசியலற்ற பிற துறையில் ஈடுபடுபவர் போராட்டம், ஆர்ப்பாட்டம், கூச்சல் முறையீட்டிலிருந்து தப்பித்து விடுவர்.

பிரபலமடையக்கூடிய வாய்ப்பிருந்தும் பெயரும், புகழும் கிடைக்காத வேலையில் ஈடுபட்டு வந்தாலும்கூட ஒருவருடைய செயல்பாடுகள் பெரிய விளைவை ஏற்படுத்தும். பிறகு கிடைக்கும் பெரிய பலன்களுக்காக இப்பொழுது கிடைக்கக்கூடிய சிறிய பலன்களை தியாகம் செய்யலாம். இது வெற்றியின் முக்கியமான அடிப்படை என்பதில் சந்தேகமில்லை. தொலைநோக்குப் பார்வை கொண்டவர்களால் மட்டுமே இதைப் புரிந்து கொள்ள முடியும். கோபத்தில் கொந்தளிப்பவரால் வெற்றி பெறவே முடியாது.

## மிகப் பெரிய உத்திரவாதம்

Lord William Bentinck (1774 - 1839) பிரிட்டிஷ் இந்தியாவில் கவர்னர் ஜெனரலாக (1828 - 1835 வரை) இருந்தவர். தாஜ் மகாலை இடித்துத் தள்ளிவிடும் உத்தரவைப் போட்டவர் என்கிற அவப்பெயரும் இவருக்கு உள்ளது. Lord Curzon (1859 - 1925) நூறாண்டுகள் கழித்து 1907ல் இதை வெளிப்படையாகக் கூறினார். அதாவது கிழக்கிந்தியக் கம்பெனி (1600 - 1874)யின் பொருளாதார நிலைமை மோசமாக இருந்தபோது தாஜ் மகால் கட்டிடத்துக்கு சலவைக் கற்கள் விற்று ரூ. ஒரு இலட்சம் வரை நிதி திரட்ட முடியும் என்றும் அதனால் கடனிலிருந்து மீட்சி பெறலாம் என்றும் ஆலோசிக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்தத் திட்டத்தைக் கேள்விப்பட்ட மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இதனால் கடுங்கோபம் கொண்ட Lord William Bentinck என்னவானாலும் சரி, தாஜ் மகாலை இடித்துத் தரைமட்டமாக்கும் முடிவில் உறுதியாக இருந்தார். இந்தப் பைத்தியகாரத்தனம் மக்களின் கொந்தளிப்பை அதிகப்படுத்தியது. இந்துமுஸ்லிம் என ஒன்றுபட்ட எதிர்ப்பலை எழுந்து போராட்டம் தீவிரமடைந்தது. தாஜ் மகாலுக்கு ஏற்படுத்தும் சேதம் கலகம் ஒன்றை உருவாக்கி விடுமோ என்கிற அளவுக்குச் சூழல் மாறியது. இதனால் கவர்னர் ஜெனரலின் ஆலோசகர்கள் இம்முடிவை திரும்பப் பெறும்படி அறிவுறுத்தினர். அதன்படி கவர்னர் ஜெனரலும் தன் ஆணையை இரத்து செய்துவிட்டார். (Nav Bharath Times 18-06-1969)

"தாஜ் மகாலை மக்கள் அழிவிலிருந்து காப்பாற்றவில்லை" என்றும் "தாஜ்மகாலின் ஒப்பற்ற அழகு தன்னைத் தானே காப்பாற்றிக் கொண்டது" என்றும் இத்தனை அழகான அந்த கட்டிடம் இருந்திருக்கா விட்டால் மாபெரும் வலிமை பொருந்திய பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராக இந்துக்கள் முஸ்லிம்கள் என பெரும் ஆதரவு அதற்குக் கிடைத்திருக்காது என்றும் யாரோ ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

தாஜ் மகாலைக் கட்டியவர்கள் அந்த அழகைத் தமக்குள் உருவாக்கவேயில்லை. சலவைக் கற்களின் தொகுப்பின் மீது அமைதியாக பேரெழில் வந்து அமர்ந்தது. அகம் சிறப்புற்றிருந்தால் அதுவே வாழ்க்கையின் பெரிய உறுதிப்பாடு. அது எதிரி முகாமிலும் நட்பைப் பெற்றுக் கொள்ளும். முற்றிலும் அந்நியர்களிடமிருந்தும் பாராட்டுதலைப் பெற்றுக் கொள்ளும். உண்மையில் ஒருவரிடம் திறமை இருந்தால் அதை உலகம் கொண்டாடியே தீரும்.

இந்த அழகு எப்படி இருக்க வேண்டுமென்றால் பாம்பின் அழகைப் போல இருக்கக் கூடாது. பாம்பு எவ்வளவு அழகாக இருந்தாலும் எவரும் அதை விரும்புவதில்லை. மனித அகம் சிறப்பாக இருந்துவிட்டு நாக்கில் நஞ்சு இருந்தால் என்ன செய்வது? மனிதர்களின் அரசியல்,பொருளியல் நலன்களை யாரும் தொல்லைக்கு ஆளாக்கக் கூடாது. மக்களுடன் ஒருபோதும் பொருளற்ற மோதலில் இறங்கிவிடக் கூடாது. தன் உணர்ச்சி பூர்வமான செயல்களால் மக்களை எதிர்நிலையில் ஆக்க வேண்டாம். அப்படிப்பட்டவர்கள் திறமைசாலியாக இருந்து என்ன பயன்? அவர்களால் மக்களின் அன்பைப் பெற முடியாது.

அமைதியாக அழகில் சொக்கி விடும்போது தாஜ் மகாலிலுள்ள அன்பைக் காணமுடியும். அழகாக இல்லாவிட்டால் தாஜ் மகாலை எவரும் பொருட்படுத்த மாட்டார்கள். தாஜ் மகாலின் அழகு அதன் கலைத்தன்மையில் உள்ளது போல மனிதனின் அழகு அவனது இயற்கையான இயல்பில் உள்ளது.

## முன் தயாரிப்பு

ஆடை தயாரிப்புத் துறையில் pre-treatment முன் சிகிச்சை முறை என்று ஒன்றுள்ளது. துணி தயாரிக்கும் முறையில் அடுத்தடுத்த கட்டங்களில் செய்யப்படும் வேதிவினைகளை ஏற்கத் தகுந்ததாக மாற்றுவது அதன் அடிப்படை. முறையாக pre-treatment ஆகாத

துணிகளுக்குச் சாயமேற்ற வேண்டும் என்றால் முதலில் அவற்றை தூய்மைப்படுத்த வேண்டும்.

பிறகுதான் அதில் வண்ணங்களை ஏற்ற முடியும். சரியாகத் தூய்மையாகாத துணி / ஆடைச் சாயங்களை உள்ளிழுக்காது. பிறகு வண்ணங்கள் எவ்வளவு சேர்த்தாலும் அது ஆடையின் மேல் தங்கியிருக்காது. குறைபாடு என கழித்துக் கட்டப்பட்ட துணிகளில் 70% இந்த pre-treatment முறையாக செய்து முடிக்காதவை என்று ஓர் ஆய்வு கூறுகிறது.

சாயங்களை fabric ஏற்கும் பக்குவம் துணிகளிடம் உருவாக்குவதே pre-treatmentஇன் நோக்கம். முன் தயாரிப்பு என்பது ஆடைத் தொழிலுக்கு மட்டுமல்ல மனித விவகாரங்களுக்கும் பொருந்தும். நம் முன்னெடுப்புகள் வெற்றி பெற வேண்டுமானால் களத்தை அதற்கேற்பத் தூய்மைப்படுத்தி முன் தயாரிப்புக்கு உட்படுத்தி இருக்க வேண்டும். உரிய தயாரிப்புகள் செய்யாமல் முன்னெடுக்கப்பட்டால் அது தோல்வியில் முடியும். முன்தயாரிப்பு இல்லாத துணி சாயங்களை ஏற்கும் தன்மையில் இருக்காதது போல இவையும் அமைந்துவிடும்.

பத்திரிக்கைத் தொழிலில் சாதிக்க விரும்பினால் தங்களிடம் உரிய தொழில்துறை உதவி இருக்க வேண்டும். தொழில் துறையே பத்திரிக்கையின் உயிர்நாடி. தொழில்துறை இல்லாதவர்களிடம் பத்திரிகையுலகமும் இல்லை. அதேபோல உயர் தொழில்நுட்பம் இல்லாத நிலையில் போட்டி மிகுந்த பத்திரிகையுலகில் நீடித்து இருக்க முடியாது.

அரசியல் விவகாரங்களும் இது போன்றவையே. ஒரு கட்சி குறிப்பிட்ட அளவு வாக்கைத் திரட்ட விரும்பினால் அது முதலில் உட்கட்டமைப்பில் ஒற்றுமையாக இருக்க வேண்டும். கட்சிக்குள் ஒழுங்கு இல்லையென்றால் அதில் மக்கள் எப்படி அணிதிரள முடியும்? ஓட்டுச் சிதறல் இருந்ததென்றால் அரசியல் சக்தியாக மாறவே முடியது. தனி மனித வாழ்க்கையிலும் பொது வாழ்விலும் முன்தயாரிப்பு மிகவும் அவசியம். உயர் இலட்சியங்களை அடைய நினைப்பவர்கள் முதலில் கள உழைப்புக்குத் தம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அது மணல் வீட்டைப் போல காலவெளியில் தூசாக பறந்துவிடும். அந்த ஆசைகள் என்பவை வெறும் மாயையே. நடைமுறை களநிலவரத்துடன் அதற்குத் தொடர்பேதுமில்லை. தாங்கள் கூட்டுறவு முயற்சியில் இறங்க நினைத்தால் கூட்டுத்தலைமை அவசியம். அதாவது ஒரு தலைவர்

அவரது ஒரு சொலுக்கு மறுபேச்சு இல்லாமல் அனைவரும் ஏற்க வேண்டும். ஒருமித்த தலைமை அமையாமல் கூட்டு முயற்சியில் இறங்குவது தோல்வி எனும் படுகுழியில் தாவும் முயற்சியாகும்.

ஜஜஜஜஜ

## பொறுமையின்மையின் விளைவு

15-01-1986ஆம் தேதி இந்த நிகழ்வு நடந்தது. இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் மும்பையிலிருந்து புதுடில்லிக்கு பறந்தது. 15 நிமிடங்களில் மீண்டும் புறப்பட்ட மும்பை விமான நிலையத்திலேயே வந்து இறங்கியது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அரை மணி நேரம் தாமதமானது. ஒரு பயணி "ஏன் இந்தத் தாமதம்?" என்று கேட்டு கேப்டன் பட்நாகரிடம் துண்டுச் சீட்டு அனுப்பினர்.

கேப்டன் அந்தப் பயணியை தன் cockpit அறைக்கு அழைத்துச் சிறிது விளக்கம் கொடுத்தார். பயணி மனநிறைவு கொள்ளவில்லை. கேப்டனின் முதுகில் ஓங்கிக் குத்திவிட்டு; "உன்னைப் போன்ற விமானிகள் பலரை நான் பார்த்து இருக்கிறேன்" என்றார் The Times of India January 16, 1986

கேப்டன் பட்னாகர் பதற்றமடைந்து, உடனே விமானத்தை மும்பைக்கே மீண்டும் தரை இறக்கிவிட்டார். விமான நிலையத்தில் ஏகப்பட்ட குழப்பம் ஏற்பட்டது. கடைசியில் விமான நிறுவனம் வேறொரு விமானியை அவசர அவசரமாக அழைத்து மீண்டும் விமானத்தைப் பறக்க வைத்தனர்.

இந்தக் குளறுபடியால் விமானம் மும்பையிலிருந்து புதுடில்லி போய்ச் சேர "மூன்று மணி நேரங்கள் தாமதமானது. வெறும் அரை மணி நேரத் தாமதம் ஆரம்பத்தில் இருந்ததைப் பயணியால் சகிக்க முடியவில்லை. இப்பொழுது மூன்று மணி நேரத் தாமதமாகும் கட்டாயச் சூழல் உருவாகிவிட்டது" இந்தியன் ஏர்லைன்ஸின் உயர்மட்ட நிர்வாகம் விசாரணைக் குழுவை அமைத்தது. பிரச்சனையில் தொடர்புடைய பயணி தண்டனையிலிருந்து தப்பிக்க ஏதோவொரு காரணத்தைக் கண்டிருக்கலாம். ஆனால் நேர விரயம் என்கிற விளைவிலிருந்து தப்பிக்க வழியில்லை. நேரம் பொன் போன்றது, விலை மதிப்பற்றது.

பொறுமையின்மை எதிர்மறை விளைவைத் தரக்கூடியது. பொதுவாகத் தன் இலக்கை அடைவதாக மனிதன் நினைக்கிறான். தன் இலக்கை நோக்கி வேகமாகச் செல்வதாக நினைக்கிறானே தவிர நடைமுறையில் தன் நோக்கத்திலிருந்து திசை மாறிச் செல்கிறான்.

அவனுடைய அணுகுமுறை இலக்கிலிருந்து விலகிச் செல்வதன் விளைவே இது.

ꕥꕥꕥ

## அமைதி காத்தல்

Apoll-8 விண்கலம் மூன்று விண்வெளி வீரர்களுடன் பசிபிக் பெருங்கடலில் தரையிறங்கிக் கொண்டிருந்தது. விண்வெளிப் பயணத்திலேயே மிகவும் சிக்கலான ஆபத்தான பகுதி இறுதி நிகழ்வான விண்கல தரையிறக்கம்தான். அமெரிக்க வீரர்கள் பூமியிலிருந்து நிலா வரையான பயணத்தை ஆறு நாட்கள் மூன்று மணி நேரத்தில் கடந்தனர். விண்கலம் பூமிப் பரப்பை நெருங்கியபோது புவியீர்ப்பு விசையால் ஏழு மடங்கு வேகம் கூடியது. இதனால் அசாதாரண வேகமெடுத்து மணிக்கு 39000 கி.மீ. ஆக மாறிவிட்டது. இதனால் 3,300 degree celcius அளவுக்கு விண்கலத்தின் வெளிப்பகுதியில் சூடு பரவியது.

சிவப்புப் பந்தாக நெருப்புக் கோளமாக வெப்பம் கூடியது. வெறும் 100 டிகிரி வெப்பத்தில் தண்ணீர் கொதித்து நீராவி ஆகி விடுவதை நாம் கண்டிருக்கிறோம். 3,300 degree celcius மனிதனும், விலங்கும் உயிருடன் தப்பி இருக்கமுடியாது. மூன்று அமெரிக்க வீரர்கள் உயிருடன் எந்தவித பாதிப்பும் இல்லாமல் திரும்பியது எப்படி? நரகம் போன்ற வெப்பத்திலிருந்து தப்பித்தது எப்படி? புற வெப்பம் உட்புகாதவாறு விண்கலம் வடிவமைக்கப்பட்டு அசாதாரண வெப்பம் நிலவியபோதும் உட்புறம் தட்பவெப்பம் 21°C மட்டுமே இருந்தது.

விண்வெளிப் பயணமும், விண்கல அமைப்பும் நமக்கு ஒரு பாடத்தை வைத்துள்ளன. நம் வாழ்க்கையிலும் இது போல கடினமான சூழல் ஏற்பட்டு விடுகிறது. வெளிப்புறம் தாங்கமுடியாத நிலைமை. புறச் சூழல் நம் அகச் சூழலைத் தாக்காதபடி உயிர்த்திருக்க வேண்டும். இந்த நிலைமையிலிருந்து பாதுகாப்பாக இருக்க ஒரே வழியுள்ளது. அதாவது அகவயமான உணர்வுகளைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டும். அமைதியாக இன்முகம் காட்டவேண்டும். அப்பொழுது மட்டுமே வெளிப்புற சூடு நம்மை தாக்காது. நடுநிலைமை பேணி இறுதி இலக்கை அடைய வேண்டும். இந்தப் புறச் சூழலின் வெப்பம் தாக்கத்தை செலுத்துகிறதோ இல்லையோ அகவயமான கொந்தளிப்பு நம்மை அழித்துவிடும். இந்தச் சமநிலை பேணப்பட்டால் வெளிப்புறச் சூட்டிலிருந்து பாதுகாப்பும் இறுதி இலக்கை பத்திரமாக போய் சேரவும் உதவும்.

வெளிப்புறம் வெறுப்பும் கோபமும் காட்டப்படும் சூழலில் அது நம்மை நம் அகத்தைப் பாதிக்காதவாறு கட்டுப்பாடு பேணவும் அன்பு செலுத்தவும், சகிப்புத்தன்மை வளர்த்துக் கொள்ளவும், மன்னிக்கவும் நாம் பழகிக் கொள்ள வேண்டும். முழு உலகமும் தீயதை நோக்கும்போது நல்லுணர்வைப் பதிலடியாகத் தர வேண்டும். இதைத் தவிர வெற்றி பெற வழியேதுமில்லை. வெளிப்புறம் உள்ள விரும்பத்தகாத சூழலை உட்புறமும் அனுமதித்தால் வாழ்க்கை சகிக்க முடியாததாகி விடும். வெளிப்புறம் தீய சூழலுக்கு உட்புறத்தின் நன்மை பதிலாகத் தரப்பட வேண்டும். இதுவே வெற்றிக்கான வழி. சூழலில் இருக்கிற மாதிரியே தாங்களும் மாறிவிட்டால் இவ்வுலகில் வெற்றி பெற முடியாது.

## இப்படியும் ஒரு வழி உண்டு

Napoleon Bonaparte (1769 - 1821) முதல்முறையாகக் கைது செய்யப்பட்ட போது Elba தீவில் சிறை வைக்கப்பட்டிருந்தார். அப்பொழுது விசுவாசமிக்க வீரர்களின் சிறு குழுவே அவருடன் துணைக்கு இருந்தது. பிரான்ஸ் ஆட்சியாளராக மீண்டும் வர வேண்டி போராட திட்டமிட்டார். முதல் மோதலின் போதே இருபதாயிரம் பிரெஞ்சு வீரர்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. உலகம் கண்ட வீரமிக்க தலைவர்களில் ஒருவர் நெப்போலியன். தன் பலவீனமான சூழலை உணர்ந்திருந்த நெப்போலியன் நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

பைத்தியக்காரத்தனமான இராணுவ தவறுகள் செய்யவில்லை. நெப்போலியன் தன் சிறு குழுவினரோடு எதிர்தரப்பை நேர்காணும் சூழல் இருந்தது. எதிரில் எண்ணிக்கையில் பல மடங்கு பெரிய படை. ஆயுதங்களைக் களைந்துவிட்டு முன்னோக்கி வந்து அமைதியாகத் தன் எதிரிப் படை முன் நின்றார். தன் மேல் சட்டை பொத்தான்களை அமைதியாக களைந்துவிட்டு வெற்று நெஞ்சை திறந்து காட்டினார். "தன் தந்தையின் வெற்று நெஞ்சின்மீது துப்பாக்கி சூடு நடத்தப் போகிறவர் யார்?" என்று உணர்ச்சிகரமாக தன் எதிரி வீரர்களிடம் பேச ஆரம்பித்தார். அவர்களில் பலர் நெப்போலியனுடன் முன்பு சிறிது காலம் பணிபுரிந்தவர்கள்.

"ஒருவருமில்லை, ஒருவருமில்லை" என்று உணர்ச்சி தூண்டப்பட்ட பதில் எதிர்தரப்பிலிருந்து வந்தது. உடனடியாக அப்படையிலிருந்த பெரும்பாலானவர்கள் நெப்போலியனுடன் இணைந்துகொண்டனர். இராணுவ வலிமை எதுவுமில்லாமல் மிகச்

சிலருடன் தனித்திருந்தும் நெப்போலியன் வெற்றி வீரராக பிரான்ஸின் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். வெறுங்கையுடன் இருந்த சூழலில் வீரம் பெரிது என எண்ணி நெப்போலியன் மோதலில் இறங்கியிருந்தால் போர்க்களத்தில் கொல்லப்பட்டிருப்பார்.

தன்னிடம் எஞ்சியுள்ள வளங்களைச் சூழலுக்கு ஏற்பப் பயன்படுத்துவது எப்படி என்பதை ஆய்வு செய்ய வேண்டும். பதற்றமடைந்தால் அவர்களால் எதுவும் செய்ய முடியாது. வாய்ப் பேச்சு அடைத்துப் போகும். உணர்ச்சி வசப்படாத நிலையில் மனதைத் திறந்து வைத்திருந்தால் நடைமுறை அறிவின்படி வழியில் இருக்கும் இடையூறுகளைக் களைய முடியும். பொருளாதார பலம், மனச் சமநிலையுடன் தீர யோசித்துச் செயல்பட்டால் வெற்றி உறுதி.

பலவீனமானவர்கள் வலுமிக்கவர்களை வீழ்த்தி இருப்பதை வரலாறு பதிவு செய்து வைத்துள்ளது. வெளிப்படையாகத் தெரிவதைவிட குறைந்த ஆற்றலை அவர்கள் கொண்டிருந்ததே இதற்கு காரணம். வெளியில் தெரிவதைவிட எதிரி அப்படியொன்றும் மாபெரும் வீரனல்ல. அதுபோக ஒவ்வொருவரின் பலவீனமும் வெவ்வேறானது. தனிநபர் அல்லது குழு எவ்வளவுதான் தன்னை வலுப்படுத்திக் கொண்டாலும் அதற்குள் குறை கட்டாயம் இருக்கும். அதுவே உலகத்தின் இயங்கியல் விதி. அந்தக் குறையை பயன்படுத்தி எதிரியை வீழ்த்த முடியும். ஒருவரின் ஒரே பலம் எதிர்த்தரப்பின் பலவீனமே. இந்த ஆற்றல் எப்பொழுதும் எல்லோரின் பயன்பாட்டிற்கும் காத்திருக்கிறது. அந்த எச்சரிக்கையுணர்வைப் பயன்படுத்தும் சான்றைத் தரவேண்டும். எதிரியின் பலவீனத்தைப் பயன்படுத்தி வெல்லப் பழக வேண்டும்.

## எதிர்வினையின்றி

“சொல்லடியைத் தாங்கும் மனம் கொண்டவர்கள் வழிநடத்தும் குருவுக்கு இணையானவர்கள் பிறர் அவரது சீடர்களாகி பணிவிடை செய்பவர்” என இந்திப் பழமொழி ஒன்று உள்ளது.

“தடிகளும் கற்களும் என் எலும்பை உடைக்கலாம், ஆனால் பெயர்கள் ஒருபோதும் என்னை வருத்தமடையச் செய்யாது” என்னும் ஆங்கிலப் பழமொழி ஒன்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சொற்களைக் கேட்டு யாரும் இரத்தம் சிந்துவதில்லை. எவரின் எலும்பும் உடைவதில்லை. ஆனால் சொல்லடியைத் தாங்குவது மிகவும் கடினமான பணியாகும். "ஆழமான மனமும், புறவயமான நிலையிலிருந்து மேலெழுந்து பார்க்கும் அறிவு கொண்டவர்களால் மட்டுமே இது சாத்தியம்"

மாபெரும் சிந்தனையாளர் J. Krishnamurti (1895 - 1986) . ஆங்கிலத்தில் சரளமாகவும் இலக்கிய நுட்பமிக்கச் சொற்பொழிவை ஆற்றிக் கொண்டிருந்தவர். இந்தியாவிலும் வெளிநாட்டிலும் ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்வத்துடன் அவரைப் பின்தொடர்ந்தனர். இருந்தபோதிலும் அவரது வழிகாட்டுதலை ஒருவருமே நடைமுறைப்படுத்துவதில்லை என்கிற குறை. Krishnamurti அவர்களுக்கு இருந்தது. கடந்த ஐம்பதாண்டுகளாக உலகம் முழுக்கப் பயணம் செய்து என் கருத்துக்களை பகிர்ந்து வருகிறேன். ஆனால் செயல்படுத்துவதில்லை. "நீங்கள் உங்களை மாற்றிக் கொள்வீர்களா?" என சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் அமர்ந்திருந்தவர்களிடம் ஒருமுறை கேட்டார்.

பிறகு அவர் "நீங்கள் இதை கேட்டுவிட்டு திரும்பி விடுவீர்கள், முன்பு எப்படி வாழ்ந்து கொண்டிருந்தீர்களோ அப்படியே இருக்கப் போகிறீர்கள்" என்றார். ஒவ்வொரு ஆண்டும் இதே விஷயத்தை திரும்பத் திரும்ப கூறிக் கொண்டிருக்கிறீர்கள் என அங்கிருந்த பார்வையாளர்களில் ஒருவர் எழுந்து நின்று கோபத்துடன் சொன்னார்.

J. Krishnamurti மிருதுவான குரலில், ஐயா! ரோஜா ஏன் மலர்கிறது என கேட்பீர்களா? Hindustan Times 24-02-1984

விமர்சனங்களுக்கு பிறகு பொதுவாக மனிதன் சீண்டப்படுவான். அவ்வாறு ஈடுபடுவது முதலில் தனக்கு இழப்பை ஏற்படுத்துகிறது. எதிரியின் விமர்சனத்தால் தங்களுக்குக் கோபம் வந்துவிட்டால் சுடு சொற்களைக் கூற ஆரம்பிப்பீர்கள். ஆனால் அந்தச் சூழ்நிலையில் சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டால் உணர்வுகளை ஒழுங்குபடுத்திக் கொண்டால் எதிரியை வாயடைத்து போகச் செய்ய முடியும். கோபத்தில் கட்டுப்பாடு இழந்து எதிர்மறை உணர்வு கொண்டால் தீமையே விளையும். உணர்வுகள் கட்டுக்குள் வைக்கப்பட்டால் பதிலடி சரியாகத் தரப்படும். தவறான விமர்சனங்களை மௌனிக்கச் செய்ய முடியும்.

## விரும்பத்தகாத சூழல்

(இலை, தழைகளை, உண்டு வாழும் மான், முயல், எருது போன்ற) தாவரபட்சினி விலங்குகளுக்கு காட்டில் வன விலங்குகளின் அச்சத்தில் வாழ வேண்டியுள்ளது. இதனால் அவை எப்பொழுதும் எச்சரிக்கையுணர்வுடன் இருப்பது அவசியம். இது அதன் உயிர் வாழ்தலுக்கு அடிப்படையும்கூட. இந்த வகையில் அதன் இயற்கையான வளர்ச்சியும், முழுக்க அற்றுப் போகாமல் அதன் ஆபத்தில் சிக்காமல் இருக்கும். அதனால்தான் வனவிலங்கு காப்பகங்களில் வேண்டுமென்றே உயிர் கொல்லும் (புலி, சிங்கம், சிறுத்தைப் போன்ற) விலங்குகளை வாழும்படி விட்டு வைப்பர்.

இதனால் முயல், மான், ஆடு போன்ற குட்டி விலங்கினங்கள் எச்சரிக்கையுணர்வு உயிர்ப்புடன் இருக்கும். வாழ்தலின் வேட்கை அவற்றை உயிர்த்திருக்கும்படி செயலூக்கம் கொண்டிருக்கும். இப்படி செய்யாவிட்டால் கொஞ்சம் கொஞ்சமாக இயற்கையின் கொடையை இழந்து அவை ஜடமாகும் மனிதர்கள் விஷயத்திலும் இது உண்மையே. மனிதனுள் எல்லையற்ற ஆளுமைத் திறனுள்ளது. சாதாரண காலங்களில் அது மறைந்திருக்கும், உறங்கிக் கிடக்கும். அதை வம்புக்கு இழுத்தால் அட்டுமே துடிப்புறும், இயல்பாகத் தொடங்கும். இதை எங்கும் காணக்கிடைக்கும் நிகழ்ச்சியே. வசதிமிக்கக் குடும்பங்களில் மந்தமான உயிரற்ற நிலை காணக் கிடைக்கும். வாரிசுகள், ஒழுங்கின்மை, முட்டாள்தனம் கொண்டிருப்பதைக் காணலாம். அந்தக் குடும்பத்தில் அறிவு மேதமையும், செயல்திறனும் முழு வெளிப்பாட்டில் இருக்கும். இந்தியாவில் குறிப்பாகவும், உலக அளவில் பொதுவாகவும் முஸ்லிம்கள் அடையாளச் சிக்கலில் உழல வைக்கப்பட்டிருப்பதாக முறையிடுகின்றனர். மெக்கா மதீனா போன்ற இஸ்லாமின் ஆரம்ப மையங்களில் அதன் தொடக்க கால வரலாற்றில் இதைவிடப் பெரிய சவால்களைக் கடந்து வந்தனர். இது தன்னளவில் தீமையும் அல்ல. அவ்வாறு இருந்திருந்தால் நபிகள் நாயகமும் அவரது தோழர்களும் அதிலிருந்து விலகியிருப்பர். இறைவனும் அவ்வாறு செய்யவில்லை. அவர்களின் வாழ்க்கையில் எப்பொழுதும் நிம்மதியும் ஓய்வும் கிடைக்கவேயில்லை. அழுத்தம் இருந்தால் மீறி மேலெழும் உயிர்ப்பைக் கொண்டு உலக இயக்கத்தை இறைவன் வடிவமைத்திருக்கிறான்.

கடினம் என்கிற பள்ளியில் பயிற்சி தர வைக்கிறான். பாதுகாப்பற்ற சூழலில் அமைதியை வெளிப்படச் செய்வான். எச்சரிக்கையுணர்வே பாதுகாப்பற்ற சூழலில் மனித ஆளுமையில் பெரிய வினையூக்கியாகப் பங்காற்றுகிறது.

சூழலின் அழுத்தத்திற்கு முகங் கொடுத்தவர்கள் உச்ச வெற்றியை அடைந்தவர்கள் என்பதை வரலாற்றில் காண முடியும். இயற்கையின் இந்த விதி தனி மனிதர்களுக்கும் சமூகத்திற்கும் முழு நாட்டிற்கும் பொருந்தும். தனி மனிதன் பெறும் பயிற்சியும் கற்கும் பாடமுமே மகத்தானது.

## தோல்வியை ஏற்றுக் கொள்ளுதல்

அமெரிக்கர் 1831இல் வியாபாரம் செய்தார். 1832இல் அந்த வியாபாரம் தோல்வியில் முடிந்தது. அதன் பிறகு அரசியலில் நுழைந்தார். அங்கும் அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை. 1834இல் மீண்டும் தன் தொழிலை கவனித்தார். இந்த முறையும் தோல்வியே கிடைத்தது.

1841இல் அவருக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டது. 1843இல் மீண்டும் அரசியலில் இறங்கினார். அமெரிக்க காங்கிரஸ்சுக்குத் தன்னை வேட்பாளராக (குடியரசுக் கட்சி) நியமிக்கும் என அவர் கருதினார். அப்படி எதுவும் நடக்கவில்லை. வேட்பாளர் பட்டியலில் பெயரில்லை. 1855இல் செனட் சபைக்குப் போட்டியிட்டுத் தோற்றார். 1858இல் இரண்டாம் முறையும் அதே செனட்டில் உறுப்பினராக முடியவில்லை.

தொடர்ந்து தோல்வி மட்டும் கண்ட இவரது பெயர் Abraham Lincoln (1809 - 1865) அமெரிக்க குடியரசுத் தலைவராக 1860இல் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தக் காலக்கட்டத்தில் செய்யப்பட்ட சாதனைக்காக நவீன அமெரிக்காவின் சிற்பியாக மதிக்கப்படுகிறார்.

Abraham Lincoln-னுக்கு அமெரிக்க தேசிய அரசியலில் இந்தப் புகழும் பெயரும் கிடைத்தது எப்படி? ஆப்ரஹாம் லிங்கன் தோல்வியைக் கையாள, அதை எதிர்கொள்ளப் பழகியிருந்தார் என்று Dr.Norman Vincent Peel அவர்கள் கருதுகிறார்.

தோல்வியை ஏற்பது நடைமுறை அறிவின் உயர் பண்பாகும். தோல்வியை ஏற்பது என்ற எதார்த்தத்தை ஒப்புக் கொள்வதாகும். தாங்கள் எந்த இடத்தில் நின்று கொண்டிருக்கிறீர்கள் என்பதை அது காட்டும். தோல்வியை ஏற்பது என்பது புதிய வாழ்க்கைப் பயணத்தை உடனடியாகத் தொடங்கும் நிலையாகும். எங்கு நின்று கொண்டிருக்கிறீர்களோ எங்கு தங்கி விட்டீர்களோ அங்கிருந்து

புதிய பயணம் சாத்தியம். போய்ச் சேருமிடத்திலிருந்து தொடங்க முடிவது பயணமல்ல. அது வெறும் மாயை.

ஜஒஜஒஜஒ

## நொறுங்கிய பின்

பருப்பொருளின் அடிப்படை அலகு அணு என்பதைப் போல சமூகத்தில் தனி மனிதன் ஆவான். அணுவைப் பிளக்கும் முயற்சி வெற்றி பெற்றால் அது அழிவதில்லை. மாறாக ஆற்றலாக வெளிப்படும். பருப்பொருள் ஆற்றலாக திடநிலையிலும், ஆற்றல் பருப்பொருளாகச் சிதறலாக இயங்குநிலையிலும் காணப்படும். அணு தன் இயல்புநிலையில் கொண்டிருக்கும் ஆற்றலைவிட பிளக்கப்படும்போது பேராற்றலாக மாறி விடுகிறது. சாதாரண ஆற்றலுக்கும் அணு ஆற்றலுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

இரண்டு டன் நிலக்கரி ஒரு ரயில் வண்டியை 70 கி.மீ. தொலைவு இழுத்துச் செல்லும். 9 காலன் (சுமார் 34 லிட்டர்) பெட்ரோல் மோட்டார் காரை 500 கி.மீ. இழுத்துச் செல்லும். ஆனால் 12 யுரேனியத்தை அணு ஆற்றலாக மாற்றினால் 40,000 மைல் அதிவேகத்தில் விண்கலத்தைப் பறக்க வைக்கும். இதுவே சாதாரண ஆற்றலுக்கும் அணு ஆற்றலுக்கும் உள்ள வேறுபாடு.

சமூகத்தில் ஆகச் சிறிய அலகான மனிதன் விஷயத்திலும் உண்மை இதுவே. ஒரு மனிதன் “உடைபடும் பிளக்கப்படும் போது” பெருமளவு விரிவடைகின்றான். உடைப்பதால் பருப்பொருளை அழிக்க முடியாததைப் போல தோல்வி மனிதனை அழித்து நாசமாக்கி விடாது. உடைபடும்போது பருப்பொருளின் ஆற்றல் அதிகரிக்கும். அதே போல மனிதன் தோற்கடிக்கப்படும்போது புதிய ஆற்றலைப் புதுப்பித்துக் கொள்கிறான்.

தோற்கும்போது மனிதனின் அக ஆற்றல் வெளிப்படுகிறது. உணர்வுகள் மேலெழுகின்றன. தோல்வியிலிருந்து மீள மூடி வைக்கப்பட்ட ஆற்றல் (திரும்ப) வரும்வரை ஓய்வதில்லை. புதிய தீர்மானமும் உறுதிப்பாடும் இழந்து விட்டதை மீளப் பெற தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்றன. தீவிரமான ஆன்ம நிலை விழிப்படைகிறது. அவனது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடிவதில்லை. கடலை நோக்கி ஆறு பாய்வதைப் போல இலக்கை நோக்கிய பயணத்தில் தடைபடும் அனைத்தையும் மோதி உடைக்கிறது.

போட்டியில் இழந்ததை மீண்டும் ஈட்டும் வரை அடங்காத உணர்வு கிளர்ந்தெழுகின்றன. அணு பகுப்பு அளவற்ற ஆற்றலை

வெளிப்படுத்துகிறது. அதேபோல மனிதனுக்குள்ளும் பேராற்றல் மறைந்திருக்கிறது. இந்த வாய்ப்புகளை பயன்படுத்தும்போது மனிதன் பேராளுமையாக உருக்கொள்கிறான்.

விபத்துபோல ஏதும் மனிதனை துவளச் செய்யும்போது வாழ்க்கை நட்சத்திரத்தை ஊதி அணைத்து விடாது. பேரிடர் தாக்கும்போது அது தன்னை விடுவித்துக் கொள்கிறது. கிழித்து எரியும்போது வாழ்க்கையின் ஒத்திசைவு தொடங்கும்.

## உறுதியான தியாகம்

சுரேஷ் காம்தார் ஒருமுறை தன் உறவினர்களைக் காண கல்கத்தா மருத்துவமனை சென்றிருந்தார். அறுவை சிகிச்சைக்காக அப்பொழுது ஒரு நோயாளி அழைத்து வரப்பட்டார். அவருக்காக இரத்த தானம் செய்ய வேண்டியிருந்தது. சுரேஷ் காம்தார் A Positive வகை இரத்தப் பிரிவைச் சேர்ந்தவர். ஆகவே அந்த நோயாளி மீது இரக்கம் கொண்டு இரத்த தானம் செய்ய முன்வந்தார். இதனால் வாழ்வா, சாவா என்ற நிலையிலிருந்த அந்த நோயாளியின் உயிர் காப்பாற்றப்பட்டது.

1962இல் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. அப்பொழுது அவருக்கு வெறும் 29 வயது மட்டுமே ஆகியிருந்தது. அதன்பிறகு இரத்த தானம் செய்வதை தன் நிலையான வழக்கமாக்கிக் கொண்டார். கடந்த 24 ஆண்டுகளில் நூறு முறைக்கும் மேலாக இரத்ததானம் செய்து இருக்கிறார். செஞ்சிலுவைச் சங்கம் பதக்கங்கள் தந்து அவரை கௌரவித்துள்ளது. (The Times of India 02-12-1985)

தற்செயலான தூண்டுதல்களால் மனிதர்கள் இரத்ததானத்துக்குத் தயாராகி விடுகின்றனர். ஆனால் மேற்குறிப்பிட்ட நபர் அரிதானவர். தீர ஆலோசித்துத் தொடர்ந்து தன் வாழ்வின் கடைசி வரை குருதிக் கொடை வழங்குபவர்கள் மிகக் குறைவானவர்களே.

இவர்கள் செய்வது சாதாரண பணியாகத் தெரிகிறது. ஆனால் உலகின் பெரும்பணியைச் செய்து வரலாற்றை உருவாக்குவதும் இவர்களே. தனி மனித நிலையில் செய்யும் தியாகத்தால் முழு சமூகத்திற்கும் பெரும் தொண்டாற்றுகின்றனர். முதல் வகை தியாகம் தலைவர்களை உருவாக்குகிறது. இரண்டாம் வகைத் தியாகம் நாட்டை கட்டமைக்கிறது. சமகாலத்தை முதல் வகையினரும் எதிர்காலத்தை இரண்டாம் வகையினரும் சமைக்கின்றனர்.

*பெரிய வீடு ஒரே நாளில் அதன் அஸ்திவாரத்திலிருந்து மேலெழுந்து நிற்பதில்லை. ஒவ்வொரு செங்கல்லாக முழு ஆண்டு கட்டடப் பணி நடக்கும் அதன் தொகுப்பே சுவர், கூரை என வீடு முழுமையடைகிறது. ஒரு ஏரி திடீரென்று நிரம்பிவிடுவதில்லை. துளித் துளியாகப் பெய்யும் மழைநீர் திரளும்போதே ஏரியாக மாறுகிறது. இதுவே மனிதனுக்குப் பொருந்தும். ஏராளமானவர்கள் தமது சிறிய பங்களிப்பை நீண்ட காலத்துக்குச் செலுத்தும்போது மனித வாழ்க்கையின் பெரிய சாதனை நிகழ்த்தப்படுகிறது. குறுகியகால முன்முயற்சியால் மனித வெற்றி சாத்தியமாவதில்லை. பொறுமை, மனவுறுதி ஆகிய செயல்பாடுகளின் பின்விளைவே இவை.*

ஐஐஐ

## மெய்ப்பொருள் காண்பது அறிவு

*1985ஆம் ஆண்டின் பனிக்காலத்தில் பார்வையாளர்கள் புது டில்லியின் பறவைகள், விலங்கு சரணாலயத்திற்குச் சென்று இருந்தனர். ஒவ்வொரு விலங்காகப் பார்வையிட்டு வந்தபின் கூண்டிற்குள் வெண்ணிறப் புலி ஒன்று அடைக்கப்பட்டிருந்தது. வேலியால் கட்டுப்படுத்தப்பட்டு இருந்தாலும் ஓரளவு சுதந்திரமாக குகைக்கு வெளியே அது நடமாடிக் கொண்டிருந்தது. அதனால் பார்வையாளர்கள் அதை நன்கு பார்க்க முடிந்தது. “ரேவாவின் அரசரிடம் நாடு விடுதலை அடைவதற்கு முன்பு இரண்டு வெண்ணிறப் புலி இருந்தன. அதை அவர் இந்திய அரசரிடம் கொடுத்து விட்டார். அவற்றில் ஒன்று இறந்துவிட்டது. முழு உலகில் எஞ்சியுள்ள வெண்ணிறப் புலி இது மட்டுமே. ஆக அரிதான விலங்கு இது” என்று ஒருவர் அங்கு சொல்லிக் கொண்டிருந்தார்.*

*இந்த நபர் இன்னும் சற்று நடந்திருந்தால் ஓர் அறிவிப்புப் பலகையைக் கண்டிருப்பார். வன விலங்குக் காப்பக அதிகாரிகள் அந்த பலகையின் அறிவிப்பில் ஆங்கிலம் மற்றும் இந்தி மொழியில் எழுதி வைத்திருந்தனர். “இந்த உலகில் மொத்தம் 69 வெண்ணிறப் புலிகள் உள்ளன, அதில் 25 இந்தியாவில் இருப்பதாக அதில் எழுதப்பட்டிருந்தது.*

*எந்த அடிப்படையுமின்றி இந்த வனக் காப்பகத்திற்குள் நின்றபடி உண்மைக்குப் புறம்பாகப் பேச முடிகிறது. அறியாமை நிறைந்த மக்கள் அந்த அறிவிப்பைப் படிப்பதில்லை போலும். இது எளிய எடுத்துக்காட்டு. நடைமுறை அறிவின்றி பொய்த் தகவல்கள் எங்கும் கேட்கக் கிடைப்பது உலகின் வழக்கமாகி விட்டது. செய்தியின் நம்பகத்தன்மையை ஒருவரும் ஒப்பிட்டுப் பார்ப்பதில்லை. தமக்குத்*

தெரியாத விஷயங்களைப் பற்றியும் தொடர்பில்லாத துறையைப் பற்றியும் தயக்கமின்றிப் பேசுவது தம் இயல்பாக்கி கொண்டுள்ளனர். கருத்து கூறுவதற்கு முன்பு தகவல்களை சரி காணவும் ஆய்வு செய்து சொல்லவும் வேண்டும். தீர விசாரிக்காமல் பேசுவது அறியாமை, அசட்டுத்தனம், சேட்டை போன்ற தீய செயலாகும். இந்த உலகில் மனிதர்கள் தமக்குத் தெரியாதது எதுவுமேயில்லை என்று பேசி விடுகின்றனர். ஒரு விஷயத்தைக் குறித்துப் பேசும் முன் அதைப் பற்றிய தகவல்களைத் திரட்டுவது முக்கியம். அரைகுறைத் தகவல்கள் தவறாக வழிநடத்திச் செல்லக் கூடியவை.

ൟൟൟ

## தன்னம்பிக்கையின் இரகசியம்

ஹைதராபாதின் ஹபீப் அவர்கள் 1984இல் சுவிட்சர்லாந்தின் Lausanna நகரின் ஒரு கடையில் புகைப்படக் கருவி கேமரா ஒன்றை வாங்கினார். அதன் விலை இந்திய மதிப்பில் ரூ.5000/ ஆகும். பிறகு அதிக விலை கொடுத்து விட்டோம் என்ற உணர்வு அவருக்கு ஏற்பட்டது.

ஐரோப்பாவிலிருந்து வரும் வழியில் சௌதி அரேபியாவின் மெக்கா நகருக்குப் புனிதப் பயணமாக இடையில் தங்கிவிட்டு நாடு திரும்புவதாக ஏற்பாடு செய்து வைத்திருந்தார். இதே வகைக் கேமரா ரூ.3000/க்கு மெக்காவில் கிடைப்பதாக அறிய நேர்ந்தது. ஆகவே சுவிட்சர்லாந்தில் தான் வாங்கிய கடைக்குத் திரும்பச் சென்று இந்த கேமரா தனக்குத் தேவையில்லை என்று கூறினார். அதற்கு முன் கடைக்காரர் ஏன் கேமராவைத் திருப்பித் தருகிறீர்கள், இதில் ஏதும் குறை உள்ளதா எனக் கேட்பார் என இவர் நினைத்தார். ஆகவேதான் அந்தக் கேமராவில் குறையைத் தேடிக் கொண்டிருந்ததாகவும் ஆனால் அப்படி குறிப்பிடத்தக்க குறை எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதையும் உணர்ந்தார்.

நான் இந்தக் கேமராவை இந்தக் கடையில் வாங்கினேன். இப்பொழுது திருப்பிக் கொடுத்துவிட்டு என் பணத்தை அளிப்பீர்களா எனக் கேட்டார். இவர் நினைத்ததைப் போல ஏன் வாங்கிய பொருளை திருப்பித் தருகிறீர்கள் என அவர் கேட்கவில்லை. இது வழக்கத்துக்கு மாறானது. பணம் டாலரில் வேண்டுமா அல்லது சுவிஸ்சின் உள்நாட்டுப் பணம் தேவையா என்று மட்டும் கேட்டார்.

அந்த விற்பனைப் பிரிவுப் பெண்மணி கேமராவைப் பெற்றுக் கொண்டதாக ஒரு ஒப்புகைச் சீட்டு தந்தார். அடுத்திருந்த cash

counterஇல் உரிய பணம் கிடைத்து விட்டது. பணம், கேமரா என அந்த கடையைப் பொறுத்த வரை வேறுபாடு காட்டவில்லை.

சுவிட்சர்லாந்தின் கடைக்காரர்களுக்கு தாம் விற்கும் பொருட்களின் தரம் குறித்து முழு நிறைவு இருந்தது. ஆகவே எதுவுமே கூறாமல் கேமராவைத் திரும்ப எடுத்துக் கொண்டு பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டனர். இது தரமானது, குறைகளற்றது என்பதால் ஒருவர் இல்லாவிட்டால் மற்றவர் இதை வாங்கிக் கொள்வார் என்கிற நம்பிக்கை அவர்களிடம் இருந்ததே இதற்குக் காரணமாகும்.

## பெரிய மனிதன்

“How to stop worrying and start living” ‘கவலைப்படுவதை நிறுத்து வாழ்வைத் தொடங்கு’ என்கிற நூலை 1948இல் Dale Carnegie எழுதினார். யாரேனும் இது தொடர்பாக உண்மை நிகழ்வைக் குறித்து பகிர்ந்துகொண்டால் 20 டாலர் பரிசு வழங்குவதாக அறிவிப்பு வெளியிட்டார். ஏராளமான பதில்கள் வந்ததில் இரண்டு முக்கியமானதாக இருந்தது. C.R. Burton என்பவர் “How I Conquered Worry” ‘கவலையை வெல்வது எப்படி?’ என்று எழுதிய ஒன்றும் இருந்தது.

ஒன்பது வயது சிறுவனாக இருந்தபோது என் தாயார் இறந்துவிட்டார். பனிரெண்டு வயதில் என் தந்தை இறந்து போனார். மிக இளம் வயதில் ஆதரவு இழந்து வீதியில் நின்றேன். அனாதை என்று மக்கள் அழைத்தனர். பிறகு Loftin தம்பதியினர் என்னை தங்களுடன் அழைத்துக் கொண்டு பண்ணை வீட்டிற்குச் சென்றனர். அங்கிருந்த சிறுவர்கள் என்னை எள்ளி நகையாடினர். என் மூக்கைக் குறித்துப் பழித்தனர். இதனால் மனம் வருந்தினேன். சண்டை பிடிக்க நினைத்தேன். ஆனால் Loftin தம்பதியினர் “நினைவில் கொள்! சண்டை போட எல்லோராலும் முடியும், ஆனால் அதிலிருந்து விலகியிருப்பவனே ஆளுமையாகக் கருதப்படுவான் என்றனர்.

மண் பானைக்குள் கூழாங்கற்களைப் போட்டால் சிற்றலை எழும். அதேநேரம் கடலுக்குள் முழு மலையை போட்டாலும் அதனால் ஒரு சிறு அசைவும் எழாது. சிறிய மனம் கொண்டவர் கடுஞ்சொல் கேட்டுக் கொதித்து எழுவான். ஆனால் பெரிய மனம் உள்ளவன் புயலடித்தாலும் அவன் நிம்மதி இழப்பதில்லை. இங்கு “பெரியவன்” என்பது என்ன? உயரமாகவோ வலிமையாகவோ இருப்பது அல்ல. பெரிய மனம் கொண்டிருப்பது உயர்ந்த

சிந்தனையுடன் இருப்பது, பெரியவன் என்னும் அறத்தின் வலுவுடன் இருப்பதாகும்.

## அங்கீகரிக்காமல்

புது டில்லியின் ஒரு குடும்பத்திற்கு "Nani Expired" 'பாட்டி இறந்துவிட்டார்' என்று ஒரு தந்தி* வந்தது. மின்னஞ்சல், குறுஞ் செய்தி போன்ற சேவை முறையின் முன்னோடி என இதைக் கூறலாம்.

அவர்கள் 'பாட்டி இறந்து விட்டாள்' என பொருள் கொண்டனர். குடும்பத்தினர் வருத்தத்துடன் வீட்டில் குழுமி, பாட்டி வசித்து வந்த ஊருக்குச் செல்லத் திட்டமிட்டனர். அங்கு போய்ச் சேர்ந்ததும் அங்கு பாட்டி நலமுடன் இருப்பதைக் கண்டனர்.

விசாரித்துபோது பாட்டி வந்து சேர்ந்தாள் என்கிற செய்தியைத் தகவல் தொலைத் தொடர்புத்துறை ஊழியர்களின் தவறுகளால் "Nani Expired"- 'பாட்டி இறந்துவிட்டார்' என்று தந்தி அனுப்பிவிட்டனர்.

தொலைத் தொடர்புத்துறையின் கவனத்துக்கு இந்த விஷயம் கொண்டு செல்லப்பட்டது. "அஞ்சல் துறை இதற்கான பொறுப்பேற்க முன்வரவில்லை, தவறுக்கு வருந்துகிறோம் என்பதோடு முடித்துக் கொண்டது (The Times of India 06-12-1983)

இந்தப் பொறுப்பு துறக்கும் நிலை அஞ்சல் துறையின் எடுத்துக்காட்டு மட்டுமல்ல. உலகின் பெரும்பாலான மக்களின் நிலையும் இதுவே. "நான் தவறு செய்து விட்டேன்" என்பது வெறும் நான்கு சொல் வார்த்தை. ஆனால் இந்தச் சொல்லை உச்சரிக்கும் நான்கு பேரைக் கூட இப்பொழுது காண முடிவதில்லை. மக்களிடம் இன்று "நீ தவறு செய்து விட்டாய்" என்றுள்ளதே தவிர "நான் தவறு செய்துவிட்டேன்" என்பது அவர்களின் அகராதியில் இல்லை. தவறை ஒப்புக் கொள்ளும் எண்ணமே மக்களிடம் குறைந்து விட்டது. இதற்காக உண்மையைப் பலி கொடுக்கவும் அவர்கள் தயாராக இருப்பர். ஒரு தவறை மறைக்க நூறு தவறுகளைச் செய்வர்.

நேர்மறைச் சிந்தனையை வளர்த்துக் கொள்வதென்பது தவறுகளை ஏற்றுக் கொள்வதில் உள்ளது.

---

(*தந்தி என்பது 1844ஆம் ஆண்டு மோர்ஸ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு 1999ஆம் ஆண்டு வரை புழக்கத்தில் இருந்த அரசு பொதுத் துறை தகவல் தொடர்பு முறை)

# தொடர் பிழை

தன் தவற்றை ஏற்றுக் கொள்ளாத மனிதன் எப்பொழுதும் பிறரைக் குறை காண்பதில் தீவிரமாக இருப்பான்.அடுத்தவர்களின் தவற்றை பெரிதுபடுத்துவதன் மூலம் தன் குறையை மறைக்கும் முயற்சியில் இருப்பான்.

வேலை வாய்ப்பில்லாத ஒருவனைப் பார்த்து அவனுடைய நண்பன் வியாபாரம் செய்யும்படி கேட்டதற்குத் தன்னிடம் நிதியாதாரம் இல்லை என்றான். நீ எப்படியாவது பத்தாயிரம் ரூபாய் கொண்டு வா, நான் உனக்கு அதேயளவு பத்தாயிரம் ரூபாய் கடனாகத் தருகிறேன். இந்த இருபதாயிரம் ரூபாயில் சிறு தொழில் ஒன்று தொடங்க முடியும். முதல் நபர் எப்படியோ பத்தாயிரம் ரூபாயைத் திரட்டிக் கொண்டு வந்த போது இரண்டாம் நபர் கடன் தர மறுத்துவிட்டார். அதன் பிறகு தன் நண்பரைக் குறித்து நேரம் கிடைக்கும் போதெல்லாம் சாடத் தொடங்கினார்.

நண்பர் ஏன் இதுபோல் மாறிவிட்டார். வாக்களித்தபடி பணத்தைத் தர முடியாத தன் தவற்றை மறைக்க அறிந்தோ அறியாமலோ தன் நண்பரையே குற்றஞ்சாட்டிக் கொண்டிருந்தார். நான் உதவ நினைத்தேன். அதற்கான தகுதியே அவரிடம் காண முடியவில்லை. என் மீது தவறு ஒன்றுமில்லை என்றார். மனிதன் தன் தவற்றை ஏற்க வேண்டும் அல்லது பிறரைக் குறை காண வேண்டும். இதிலிருந்து தப்பிக்கவே முடியாது.

குற்றவுணர்விலிருந்து தப்பிக்க வழியில்லாமல் அலைகழிப்புக்கு உள்ளானார். வாக்கு மீறல் குறித்து ஏங்கும் மனம் வரவேயில்லை.

இவ்வாறாகத் தான் புத்திசாலி என மனிதன் நினைக்க முற்படுகிறான். ஆனால் இந்தத் தவற்றின் மூலம் கெடுதலே விளையும். கொடுத்த வாக்கை மீறியது முதல் விஷயம். நண்பனைக் குற்றஞ் சாட்டுவது இரண்டாவது விஷயம். தவறு நடந்துவிடும் போது பொறுப்பேற்பது அவசியம். செய்த தவற்றை ஏற்றுக் கொள்வதன் மூலம் பிரச்சனை அங்கேயே முடிந்து விடுகிறது. தன் தவற்றை ஏற்காததன் மூலம் பிறரை குறை காண்பான். அதனால் தவறு மீண்டும் நிகழ வழியேற்படும். தவறுக்கு மேல் தவறு நடந்துவிடும். மனிதன் தன் தவற்றை ஏற்றுக்கொண்டு மனநிறைவு அடைய வேண்டும். முதல் விஷயத்தைத் தவறும்போது இரண்டாவது

விஷயத்தைச் செய்யும் நிலை ஏற்படும். இரண்டாவது விஷயம் முதல் விஷயத்தை விட மோசமானது. தவறு செய்வது மனித பலவீனம். பிறரை நியாயமில்லாமல் குற்றஞ்சாட்டுவது தவறு. பலவீனத்தைவிடக் குற்றச் செயல் பெரிய பாவமாகும்.

## மாபெரும் வெற்றி

தற்கால உலகில் எந்தத் துறையில் பெரும் சாதனை நிகழ்த்த வேண்டுமென்றாலும் மாயமந்திரம் எதையும் செய்ய வேண்டியதில்லை. சாதாரண பாமரன்கூட உயர்ந்த சாதனைகளைச் செய்ய முடியும். வாழ்க்கையின் எதார்த்தங்களை அறிந்து அவற்றைப் பயன்படுத்துவது எப்படி என்பதை அறிந்திருந்தால் போதும்" (Readers Digest, October 1986)

"வணிகம், அரசியல், விளையாட்டு, கலை போன்ற துறைகளில் மாபெரும் சாதனையாளர்களில் 90 நபர்களை தொடர்பு கொண்டேன். 'தவறான தொடக்கம்' தங்களின் தோல்விக்குக் காரணமானதாகப் பலரும் சுட்டிக்காட்டினர். இங்கு ஏதேனும் திறப்பு இருக்கும். ஒரு வழி பிறக்கும். அதைக் கண்டறிய வேண்டியது அவசியம் என்பதைச் சாதனையாளர்கள் உணர்ந்தே இருப்பர். மனதில் தோன்றும் சிந்தனைகளைச் சோதித்துப் பார்க்கும் மனம் கொண்டிருப்பர். தோல்வியில் துவண்டு பிறர் மீது பழி போடுவதால் கடும் உழைப்பிற்கான அடுத்தக் கட்ட நகர்வு தடைப்பட்டுப் போகும். பிறருக்கு எதிராகப் போராட்டம், முறையீடு என நீங்கள் அதில் மூழ்கி இருப்பீர்கள். அதனால் வேறு எதையும் உங்களால் செய்ய முடியாது. அந்தத் தோல்விக்கு நீங்களே பொறுப்புச் சாட்டும்போது தவறான முன்னெடுப்பு காரணமென அறிய நேரும்போது தங்களின் மனம் புதிய மாற்றுத் திட்டங்கள் குறித்து சிந்திக்கும் வாய்ப்பு ஏற்படும்.

சோர்ந்து போவதற்குப் பதில் சுறுசுறுப்பான செயலூக்கம் பெறுவீர்கள். புதிய முயற்சி மாபெரும் வெற்றியாக மாறக்கூடும். தோல்விக்குப் பொறுப்பேற்பதனூடாகத் தங்களின் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். ஒரு யுக்தி தோற்கும்போது வேறொன்றை முயற்சி செய்யுங்கள். மாபெரும் வெற்றி கிடைப்பது உறுதி.

# பிறருக்கு எதிரான முறையீடு

முறையீடுகளுக்கு எல்லை இல்லை. சாதாரண பாமரனுக்கு என்றில்லாமல் தீர்க்கதரிசிகள் போன்ற பெரும் ஆளுமைகளைக் குறித்து நிறைய புகார்கள் உள்ளன. அவ்வளவு ஏன்? இறைவனைக் குறித்து உலகில் எவ்வளவு மோசமாக பேசப்படுவதை பார்த்துக் கொண்டிருக்கிறோம். இவற்றில் விதிவிலக்கே இல்லை. மனிதர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்கு இறைவன் நிந்திக்கப்படுவதைக் காண முடிகிறது. "தீமையின் பிரச்சனை" என்கிற தலைப்பில் மெய்யியலில் ஒரு விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இறைவன் இல்லை என்பது இத்தரப்பின் வாதம். அப்படியே இருந்தாலும் அவன் முழுமையானவன், நிறைவானவன், அப்பழுக்கற்றவன் இல்லை. காரணம் இறைவன் இருந்தால் "தீமையின் பிரச்சனை" இந்த உலகில் இருக்க முடியாது என்பதாக இவர்கள் பேசி வருகின்றனர்.

முறையீடுகளுக்கான நியாயங்கள் சில நேரங்களில் எழலாம். "நம்பிக்கையாளர்களே! தீயவன் ஒருவன் உங்களிடம் ஏதேனும் செய்தி கொண்டு வந்தால் அதைத் தீர விசாரித்து தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். ஏனெனில் நீங்கள் அறியாமையினால் ஒரு சமூகத்திற்குத் தீங்கிழைத்துவிட்டு அதற்காக வருந்தக் கூடியவர்களாகி விடக்கூடாது" என்று (49:06) திருக்குர்ஆன் கட்டளையிடுகிறது.

முறையீடுகள் பல வகையானவை. இதில் மிக மோசமானது தாழ்வு மனப்பான்மையால் உருவாவது. ஏராளமானவர்கள் தம்மைக் குறித்து மிகை மதிப்பிடு செய்து கொள்கின்றனர். இறைவன் சிலரை மேன்மைப்படுத்துகிறான். அதைக் காணக்கூடியவர்களில் பலருக்கும் இது மனக்கசப்பைத் தருகிறது. ஒருவன் தன்னைவிட உயர்நிலையில் இருக்கிறான் என்பதை மனம் ஏற்பதில்லை. பொதுவாகத் தன் தற்பெருமை உடைப்படுவதையும் காணச் சகிப்பதில்லை.

தன் பிம்பம் சிதைவதை ஒருபோதும் யாரும் அனுமதிப்பதில்லை. இது ஆளுமைச் சிதைவே அன்றி வேறில்லை.

ஒருவன் பிறரை இழிவுபடுத்தி வருகிறான். இதனால் அவனது தற்பெருமைக்கு நிம்மதி ஏற்படுகிறது. ஒருவர் ஆளுமையாக மாற விரும்பினால் முதலில் நேர்மறைப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒருவரது கண்ணியத்தின் மீது தாக்குதல் நடத்தி, அவமதித்துத் தன் தற்பெருமைக்கு ஊட்டமளிக்கிறான். புனைவுகள், பொய்ப் பரப்புரைகள் மூலம் எதிர்த்தரப்பு நபர் பெரிய ஆள் இல்லை என நிறுவ முயற்சி செய்கிறான். அதனால் முறையீடுகளை மீறி சிந்திக்கவும் உண்மை வெற்றி பெறவும் முடிவதில்லை.

# மனித ஆளுமை

பாத்திரத்தில் தண்ணீருள்ளது. அதில் கழிவு நீரின் ஒரு துளி விழுந்துவிடுகிறது. அதனால் அந்த நீர் முழுவதும் மாசடைந்து போகிறது அல்லவா! அதைக் குடிநீராகப் பயன்படுத்த இயலாதுதானே. ஒரு துளி நீர் முழு பாத்திரத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும். ஒரு சொட்டு நீர் அந்த முழு பாத்திரத்தின் நீராகவே பாவிக்கப்படும். சொட்டு சொட்டாக வடியும் நீர்த் துளியிலிருந்து முழு நீரையும் மதிப்படுவது போலவே அவ்வப்போது வெளிப்படும் மனித குணங்களிலிருந்து அவனுடைய அகம் எப்படிப்பட்டது என்பதை அறியமுடியும். சிலரிடமிருந்து வெளிப்படும் சாதாரண ஒரு சொல் அவரது முழு ஆளுமையை மதிப்பிடப் போதுமானது. சிந்திக்காமல் உதிர்க்கும் சொல் நியாயமில்லாதது. கொடுக்கல் வாங்கலில் வெளிப்படைத்தன்மை இல்லாமல் இருத்தல், அனுதாபமும் ஆதரவும் தேவைப்படும்போது ஒதுங்கிச் செல்லுதல் இவை யாவும் குடிநீரில் கலக்கும் கழிவுநீரைப் போன்றது. இது உறுதியாக பலவீன நடத்தையே ஆகும், நம்பகத்தன்மையைக் கேள்விக்குட்படுத்தும்.

மனித ஆளுமையையும் நீரைப் போலவே ஒத்த தன்மையைக் கொண்டிருக்கிறது. மனித ஆளுமையின் குறைபாடு தனித்ததாகவோ விதிவிலக்காகவோ கருதப்படாது. ஒரு சிறிய சறுக்கல் முழு ஆளுமையையும் அம்பலப்படுத்திவிடும். ஏதேனும் ஒரு விவகாரத்தில் பலவீனம் வெளிப்பட்டால் எல்லாமே அவ்வாறுதான் இருக்கும் என நினைக்க வைக்கும். ஒரேயொரு விஷயத்தில் நம்பகத்தன்மையை இழந்துவிட்டால்கூட ஒட்டுமொத்தமாக இனி எங்கும் எப்பொழுதும் யாரும் அவரை நம்பப் போவதில்லை. தொடர்ந்து தன் ஆளுமையின் குறைகளை இனம்கண்டு வருபவன் அவற்றைக் களைய முனைந்து கொண்டிருப்பவன் எனில் சுயபரிசோதனைக்குத் தயாராக இருக்க வேண்டும். தன் மனதுக்குள் எட்டிப் பார்ப்பவன், செய்தது சரியா தவறா என துருவிக் கொண்டிருப்பவன், நியாயமாகவும் நியாயமின்றியும் செயல்பட்டப் பொழுதுகளை தானாகவே கண்டறிய முடியும். வழிதவறி விட்டவன் தன் தவறை உணர்வதன் மூலம், மன்னிப்பு தேடுவதன் மூலம், கெடுபேறான அனுபவத்திலிருந்து தவறின் தடங்களை அழித்து விட முடியும்.

தவறுக்குப் பொறுப்பேற்பதன் வழியாக, மன்னிப்பு கேட்பதன் மூலமாக மனிதன் திருந்த வாய்ப்புள்ளது. சொல்லாலும், செயலாலும் தவறிழைத்துவிட்டு அதற்காக வருந்தவில்லையோ, நெஞ்சு பதைக்கவில்லையோ அவனுக்கு எந்த மதிப்பும் கிடைக்கபோவதில்லை.

மனசாட்சியற்றவர்களால் பிறரது மென்னுணர்வுகளைப் புரிந்து கொள்ளமுடியாது. அப்படிப்பட்டவர்களின் சமூக உறவு சீராக இருக்காது. ஊரில் எவரும் மதிக்க மாட்டார்கள். தன்னிடம் தவறைக் கண்டுகொண்டதுமே பணிவாக அதற்குப் பொறுப்பேற்க முன்வராமல் போவது எவ்வளவு தாழ்ந்த செயல்?

ஐயத்துக்கு இடமேயில்லாத நடத்தை கொண்டவனாக, ஒருமுகப்பட்ட மாமனிதனாகத் தன்னை ஒருபோதும் நிறுவ முடியாமல் போவது எவ்வளவு மோசமானது. ஆத்ம விசாரணை செய்தால் மட்டுமே இது சாத்தியம்.

ஐஐஐ

## நற்குணத்தின் வலிமை

Mr.Ajwani என்பவர் கல்கத்தா நகரிலுள்ள மருந்துக் கம்பெனி ஒன்றில் விற்பனைப் பிரதிநிதியாக 1965ஆம் ஆண்டு பணியில் சேர்ந்தார். அவருக்கு முன்பு அப்பணியில் இருந்தவருக்கு ரூ.1200/ மாதச் சம்பளமாகக் கிடைத்தது. இரயில் பயணங்களை அலுவலக வேலைக்காகப் பயன்படுத்திக் கொள்வது என்கிற ஏற்பாடு இருந்தது. அஜ்வானி ரூ.3000/ மாதச் சம்பளத்தையும் அலுவலக வேலைக்கு விமானச் சீட்டு தேவை என்றும் கோரினார். மருந்துக் கம்பெனி இயக்குனர் நேர்காணலின்போது அஜ்வானி கோரும் சம்பளமும், விமானச் சீட்டு என்கிற முன்நிபந்தனையும் மிக அதிகம் என்றார். அதற்கு அஜ்வானி நான் பெரிய உழைப்பாளி, எனக்கு ஒரு வாய்ப்பை அளித்துப் பார்க்கவும் என்றார். அஜ்வானி தன் தரப்பை எடுத்துரைத்த விதம் இயக்குனரைக் கவர்ந்தது. அதனால் அவர் பணி நியமனத்தை உறுதி செய்து குஜ்ராத் மாநில விற்பனைப் பிரிவுக்கு பொறுப்பாளார் ஆக்கப்பட்டார்.

அந்தக் காலங்களில் குஜ்ராத்தின் ஒரு நகரத்தில் பெண் டாக்டர் ஒருவர் கிளினிக் (சிறிய மருத்துவமனையை) நடத்தி வந்தார். அங்கு நிறைய மருந்துகள் தேவைப்பட்டன. மருந்துக் கம்பெனியிலிருந்து ஆண் விற்பனைப் பிரதிநிதிகள் வந்தால் இந்தப் பெண் டாக்டர் சந்திக்க மறுத்துக் கொண்டிருந்தார். இதற்கு முன்பு யாரோ விற்பனைப் பிரதிநிதி தனக்குக் கைரேகை, ஜோதிட சாஸ்திரம் தெரியும் என்று சொல்லி கைநீட்டிய மருத்துவரை முத்தமிட்டு விட்டதாகவும் கூறப்படுகிறது. அதனால் ஆண் விற்பனைப் பிரதிநிதிகள் என்றாலே எரிச்சலடைந்து ஒருவரையும்

சந்திப்பதில்லை என்பதோடு மட்டுமில்லாமல், கிளினிக் உள்ளேகூட அனுமதிப்பதில்லை என்பதையும் வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்.

தம் வணிகச் சுற்றுப் பயணத்தில் குறிப்பிட்ட அந்தப் பெண் மருத்துவர் இருக்கும் ஊருக்கும் போக வேண்டியிருக்கும் என்பதை மருந்துக் கம்பெனி இயக்குனர் கூறினார். அந்தப் பெண் மருத்துவரை மருந்து வாங்க வைக்கிறேன் என்று அஜ்வானி உறுதியளித்தார். அது அவ்வளவு எளிதில்லை, அலட்டிக் கொள்ள வேண்டாம் என்று இயக்குனர் கூறினார். மருந்துக் கம்பெனியும் ஆண் விற்பனைப் பிரதிநிதி அனுப்புவதை நிறுத்தி விட்டது. மருந்து கொள்முதலும் பெற முடிந்ததில்லை. இது அனைவரும் அறிந்த விஷயம்.

எதைப் பற்றியும் கவலைப்படாமல் அஜ்வானி புறப்பட்டார். விமானப் பயணத்தில் இவருக்கு அடுத்துள்ள இருக்கையில் வசதி மிக்க குடும்பத்தின் வயதான பெண்மணி அமர்ந்திருந்தார். விமானம் உயரே பறக்கத் தொடங்கிய போது அம்மணி இருமத் தொடங்கினார். வாய் நிறைய எச்சிலும், சளியும் ஒழுகியது. அந்தப் பெண் ஒன்றும் செய்ய இயலாமல் திகைத்துவிட்டார். அஜ்வானி தன் மென்மையான குணத்தின்படி அந்த மூத்த பெண்மணி மீது பரிவு ஏற்பட்டது. உடனடியாகத் தன் கைக்குட்டையை எடுத்து அவர் முன்னே நீட்டினார். மூதாட்டியிடம் வேறு வழி இருக்கவில்லை. அந்தக் கைக்குட்டையில் துப்பிவிட்டார். எந்தத் தயக்கமும் இல்லாமல் அஜ்வானி விமானக் கழிவறைக்குச் சென்று அந்தக் கைக்குட்டையை எறிந்துவிட்டுத் தன் கைகளை கழுவிக் கொண்டு இருக்கைக்குத் திரும்பினார். இதனால் நன்றிப் பெருக்குடன் அந்தப் பெண் பேசத் தொடங்கினார். விமானம் தரையிறங்கிய போது ஒன்றாக இருவரும் இறங்கினர். மூதாட்டி வைத்திருந்த கைப்பையை வாங்கிக் கொண்டு உதவி செய்தார். விமான நிலைய “வருகை” பகுதிக்கு வந்து சேர்ந்தபோது மீண்டும் பிரச்சனை. அந்தப் பெண்மணியை வரவேற்க ஒருவரும் வந்திருக்கவில்லை. அஜ்வானி இரண்டாம் முறையும் உதவத் தயாரானார். இந்தப் பெண் வருவது குறித்த செய்தியில் குளறுபடி. அதனால் குடும்பத்தினர் கார் அனுப்பவில்லை.

என் தங்கும் விடுதிக்குச் செல்ல வாடகைக் கார் எடுக்க உள்ளேன். முதலில் தங்களை இறக்கி விட்ட பிறகு என் அறைக்குச் சென்று விடுவேன் என்றார். அந்தப் பெண்ணுக்கு இவரை விட்டால் உதவ அப்பொழுது அங்கு வேறு ஆளில்லை. அதனால் மகிழ்ச்சியுடன் சம்மதித்தார். வீட்டிற்குச் சேர்ந்த போது அஜ்வானியின் முகவரி,

தொலைபேசி எண்களைப் பெற்றுக் கொண்டு நன்றி தெரிவித்தார். அஜ்வானியும் ஓட்டல் திரும்பினார்.

வீட்டிற்குச் சென்றபோது, தாங்கள் மிகவும் கஷ்டப்பட்டுத் தனியாக வந்து விட்டீர்கள் என்றார் அவரது மகன். அப்படியெல்லாம் இல்லை என்று பரிவுணர்வுடன் விவரித்தார் அந்தத் தாய். விமானத்தில் தனக்கு இருமல், சளி வந்ததையும், அதை ஒருவர் தன் கைக்குட்டையில் தாங்கிப் பிடித்ததையும் வீடு வரை டாக்சி வாடகைக் காரில் விட்டுப் போனதையும் முழு கதையாகக் கூறினார். உடனே மகன் ஓட்டலுக்கு போன் செய்து அஜ்வானியை இரவு உணவுக்கு வீட்டிற்கு வரும்படி அழைப்பு விடுத்தார். அதை ஏற்று குறிப்பிட்ட நேரத்தில் அஜ்வானி அங்கு போய்ச் சேர்ந்தார். பரஸ்பரம் அறிமுகம் செய்து கொண்டனர். மருந்து விற்பனையின் ஈடுபட்டுள்ளார் என்பதை அறிந்து தன் கிளினிக்கிற்காக நிறைய மருந்துகளைக் கொள்முதல் செய்ய ஆர்டர் கொடுத்தார். பிறகு மருந்து விற்பனை செய்யும் ஆண் விற்பனைப் பிரதிநிதிகளைச் சந்திக்க விரும்பாத அதே பெண் மருத்துவர்தான் இவர் என்பதையும் அறிந்துகொண்டார். நிரந்தர வாடிக்கையாயாளராகவும் விருப்பம் தெரிவித்தார். அந்த இரவு உணவு சந்திப்புக்குப் பிறகு ஓட்டல் திரும்பிய அஜ்வானி கல்கத்தாவிலுள்ள தன் கம்பெனி இயக்குனர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். தனக்கு இத்தனை ஆயிரம் ஆர்டர் கிடைத்துள்ளதாக கூறினார். இயக்குனரால் நம்பவே முடியவில்லை. வேடிக்கையாகப் பேச வேண்டாம் என்ற போது சில நாட்களுக்குப் பிறகு பணவோலையை அனுப்பி வைத்தார். நீ தவறாகப் பேசுகிறாய், இது சாத்தியமேயில்லை என்றார். (21-11-1960)

தங்களின் வெற்றி குறித்து சுருக்கமாக என்னிடம் கூறமுடியுமா என்று கேட்டேன். இனியவை கூறல், நன்னடத்தை என்றார். எந்த உடனடி பலன் கிடைக்கா விட்டாலும் இவை அவசியமே என்றேன். இனிய சொற்களுடன் நல்லவிதமாக எல்லோருடனும் பழகுவது எப்பொழுதுமே பலனளிக்கக் கூடியது. இதுவே இயல்பாக மாறி விட்டால் பெறக்கூடிய நன்மைகளுக்கு அளவேயில்லை.

நன்னடத்தை இரண்டு வகைப்படும். உறவினர்கள், நண்பர்கள், குடும்பத்தினர் என நெருங்கிய தொடர்பில் இருப்பவர்களின் நலனை நாடுதல். இதனால் உறவு சுமுகமாகவும் மிருதுவாகவும் பண்பட்டும் செயற்கையாகவே இருந்தாலும் நேர்மறையாகவும் சமூக மதிப்புடனும் இருக்கும். அடுத்த வகை மிகவும் இயற்கையானதாகவும் நேரடியானதாகவும் இதயத்தின் பொங்கு உணர்வாகவும் பிறரைக்

கவனத்தில் கொள்வதாகவும் இருக்கும். நன்னடத்தையை தம் பொது இயல்பாக்கிக் கொள்ளுதல், ஒவ்வொருவருடனும் அவர்கள் யாராக இருந்தாலும் நலன் நாடுதல் தினசரி பழக்கமாக மாறிவிடும்போது எதிர்படும் அனைவர் மீதும் மதிப்பு தானாக உருவாகும். உடனடி பலன் கிடைக்கா விட்டாலும் பிறகு என்றேனும் ஒருநாள் அளவிட முடியாத நன்மை வந்தே தீரும். சமூக நல்லிணக்கம் மலர்ந்தே தீரும்.

## உறுதியான பண்பு

பண்பாடு மனிதனின் இயற்கைத் தன்மையின் நீட்சியாகும். மனிதன் மிகச் சாதாரண மூலப் பொருட்களைக் கொண்டு நவீன உலகமாகக் கட்டிடங்கள், இயந்திரங்கள், தொழிற்சாலைகள், கலைக்கூடங்கள் என நிறுவுகிறான். மனிதனால் இவ்வாறு செய்ய முடிவது எப்படி? பொருட்களில் சில நிலையான குணங்கள் உள்ளன. இயற்கைத் தன்மைகளைக் கண்டுகொண்ட பின் அதைப் பயன்படுத்தித் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்கிறான். அதன் தன்மைகளை முன்கூட்டியே கணிக்க முடிவதால்தான் இவ்வாறு செய்ய முடிகிறது. இதனால்தான் வாழ்க்கையின் அனைத்துச் செயல்பாடுகளும் வளர்ச்சியும் சாத்தியமாகின்றன. இந்த நிச்சயத்தன்மை நிலைகொள்ளாவிட்டால் முழு மனிதப் பண்பாடும் மணல் வீடாக சரிந்துவிடும். இந்தக் கல்யாண குணங்களின் அடிப்படை அம்சம் நிலைத்தன்மை ஆகும்.

நதியைக் கடக்க மேம்பாலம் கட்டும்போது அதன் உறுதித்தன்மைக்காக ஒருவர் இரும்பைப் பயன்படுத்துகிறான். ஆனால் மெழுகைப் போல் அது மிருதுவாகிவிடுகிறது என வைத்துக் கொண்டால் முழு பாலமும் இடிந்து விழுந்து விடும். கற்களும், சிமெண்டும் கொண்டு உறுதியான கட்டிடம் கட்டப்படுகிறது. ஆனால் அந்த கற்களும் சிமெண்டும் மணல் போலாகி விட்டால் கட்டிடம் உருக்குலைந்து போகும். காந்த அலைகள் எலக்ட்ரான் இயங்காற்றலாக மாறும்போது மின்சாரம் கிடைக்கிறது. இது மட்டும் நிகழாவிட்டால் உலகம் இருண்டு விடும்.

இன்ஜினில் பெட்ரோல் நிரப்பி ஓட்டும்போது ஆற்றல் கிடைக்கா விட்டால் என்னவாகும். இது போல் போல விஷயங்கள் உள்ளன. ஒரு தனிமம் தன் சிறப்புத் தன்மையுடன் எப்பொழுதும் இருந்தாக வேண்டும். அதுவே பண்பாட்டுக் கட்டுமானத்தின் அடிப்படை அப்படி இல்லாவிட்டால் பொருட்கள் தன் நிலைப்

பண்புகளை இழந்து விட்டது எனப் பொருள். அதன் பிறகு பண்பாடு உருக்கொள்வது சாத்தியமற்றுப் போகும். மூலப் பொருட்கள் இயற்கைப் பண்புகளை அப்படியே தக்க வைப்பது அவசியம். பனிக்கட்டிக் கூடத்தில் பனி திரள்வதற்குப் பதில் அவை நீராவியாகி விட்டால் ஐஸ் ஃபேக்டரி என்பதற்குப் பொருள் ஏதும் இருக்குமா? பட்டறையில் கொல்லன் இரும்பை உருக்கிக் கார் உற்பத்திக்குத் தேவையான இரும்புப் பொருட்களைத் தயார் செய்யும்போது இரும்பு உருகாவிட்டால் இயந்திரங்கள் செய்ய முடியுமா?

அதேபோல பண்பாடும் செழித்தோங்க தனி மனிதர்கள் தன் இயற்கைப் பண்பில் நிலைத்திருக்க வேண்டும். கூட்டு வாழ்க்கையும் தனி மனிதர்களின் பங்களிப்பில் நிலை கொண்டுள்ளது. ஆகவே சில அடிப்படைப் பண்புகளை அதன் இயற்கை நிலையில் பராமரித்து வர வேண்டும். இயற்கை மூலப் பொருட்களில் இயல்புத்தன்மை எப்பொழுதும் இருப்பதைப் போல மனிதர்களும் இருக்க வேண்டும். எல்லாச் சூழ்நிலையிலும் அடிப்படைப் பண்புகளைத் தனி மனிதர்களும் வெளிப்படுத்த வேண்டும். மாமனிதனாக நடந்துக் கொள்ள வேண்டும்.

நற்குணங்களை வெளிப்படுத்தத் தயங்கக் கூடியவரை மனிதனாக இருப்பதன் தகுதியை இழந்துவிட்டவர் என்றே சொல்லிவிடலாம். அந்தச் சமயத்தில் அமைதியின்மையும் அதிருப்தியும் பெருகி அழிவேற்படும். தனி நபர்கள் சிறந்தவர்களாக இருக்கும்வரை மட்டுமே எந்தவொரு சமூகமும் வளமாக இருக்க முடியும். ஒழுங்கின்மையும் சீரழிவும் கொண்ட தனிநபர்கள் அதிகமாகிப் போகும் சமூகம் நிலைகுலைந்து வீழும்.

கொடுத்த வாக்கைக் காப்பாற்றாமல், சொன்ன பேச்சை மாற்றிப் பேச நாணாதவர்களே சமூகத்தில் பதற்றத்தை உருவாக்குகிறார்கள். கீழ்கண்ட விதமாக இருப்பவர்களைக் காண நேர்ந்தால் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும்

திறந்த மனதுடன் இல்லாமல் கீழ்த்தன்மையுடன் இருத்தல்

தாராளமாக இல்லாமல் கஞ்சத்தன்மையுடன் இருத்தல்

தன்மையச் சிந்தனையுடன் இயங்கிப் பொதுநலத்தை கைவிடுதல்

மன்னித்தலைக் கைவிட்டுப் பழிவாங்கத் துடித்தல்

அரவணைக்காமல் கலகம் செய்தல்

பிறரின் உரிமைகளை மதிக்காமல் சுயநலமாக வாழுதல்

மக்களுக்கு உதவாமல் அவர்களைக் கீழே தள்ளிவிடுதல்

பிறர் நம்மை எப்படி நடத்த வேண்டுமென நாம் நினைக்கிறோமோ அதற்கு மாறாக அவர்களிடம் நடந்துகொள்ளுதல்

மனிதன் என்கிற சொல்லுக்கேற்ப அதன் உண்மையான பொருளில், எதிர்பார்ப்பதை எல்லாம் தயக்கமின்றி செய்துகாட்டி நிரூபிக்கும் மனிதர்களைக் கொண்ட சமூகமே வலிமையுடன் இயங்க முடியும். பிரச்சனையெழும் போது உருக்கைப் போல திடமாக நிலைத்திருக்க வேண்டும். நெகிழ்வுதன்மை தேவைப்படும்போது ஓடும் நீரைப் போல வழிந்தோட வேண்டும். மௌனம் கோரப்படும் இடங்களில் கற்களைப் போல, மலைகளைப் போல உறுதியுடன் நிலைத்திருக்க வேண்டும். திடமான முன்முயற்சிகளில் ஈடுபடும்போது நீரோட்டம் போன்ற உற்சாகத்துடன் பாய வேண்டும். சொல்லிலும் செயலிலும் அவர்களே உண்மையான மனிதர்கள். அவர்களால் மட்டுமே நிலையான மனித சமுதாயம் உருவாகும்.

இத்தகையவர்களே பெட்ரோலைப் போல, உருக்கைப் போல பண்பாட்டு வளர்ச்சிக்கு இன்றியமையாத பங்காளிகள். எதிர்பார்த்ததைச் செய்யவில்லை என்றால் பண்பாடு உயிர்த்திருக்க முடியாது. மக்களின் நிலைத்தன்மை, நம்பகத்தன்மை, நன்னடத்தை ஆகியவை முன்கூட்டியே கணிக்க முடியாவிட்டால் மனிதச் சமூகம் நொறுங்கி விடும்.

இரும்பு எந்நிலையிலும் இரும்புத்தன்மையை இழப்பதில்லை. அதுபோல சோதனைக்குரிய காலக்கட்டத்தில் மனிதனும் தன் இயல்பில் நிலைத்திருக்க வேண்டும். எதிர்பார்ப்புக்கேற்ப நடந்துக் கொள்ள வேண்டும்.

ஐஐஐ

## தனி நபர் மீது கவனம்

ஒருவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். திடீரென்று அவ்வண்டியில் ப்ரேக் பிடித்துக் கொண்டது. அருகிலிருந்த பழுது நீக்கும் கடைக்குக் கொண்டு சென்றார். ப்ரேக் கெட்டிப்பட்டுப் போன இடத்திலிருந்து சற்றுத் தள்ளி வேறொரு இடத்தில் சுத்தியால் அடித்தார். சைக்கிளோட்டி வியப்பிலிருந்து மீளவே இல்லை. சக்கரங்கள் ஒழுங்காகச் சுழலத் தொடங்கின.

இதுவே மனித வாழ்க்கையின் விஷயத்திலும் உண்மை. சமூகத்தில் பிரச்சனை எழும்போது அவ்வெளிப்பாட்டு இடத்தின் மீதே கவனம் குவிகிறது. அங்கு சிகிச்சை தரத் தொடங்கிவிடுகிறான்.

ஆனால் நோயின் மூலம் வேறொங்கோ தங்கியுள்ளது. வேரில் சிகிச்சை தராத வரையில் நோய் குணமாக வழியேயில்லை.

எடுத்துக்காட்டாக சமூக நல்லிணக்கம் இல்லை எனக் கொள்வோம். அங்கு ஏமாற்றத்தனம் மிகைத்திருக்கிறது. இன்னாரோடு அநியாயம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் குழுவினருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அக முரணில் எதிர் முகாமோடு சமரசம் பேசுகின்றனர். கூட்டு விழாவின் உரத்தக் குரல் கேட்கவில்லை என்பன போன்ற பேச்சுக்கள் உள்ளன. இதைக் காணும் / கேட்கும் சிலரின் உணர்வுகள் போங்கி எழுகின்றன. பொதுக் கூட்டங்கள், மாநாடுகள் ஏற்பாடு செய்யப்பட்டு ஏராளமானவர்களை ஒன்றுதிரட்டி கொந்தளிப்பான உரைகள் முழுங்கப்படுகின்றன. தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. இதனால் சமூகத்தில் தீமைகள் குறையப் போவதில்லை.

இவை நோய்க் கூறுகள் மீதான சிகிச்சை போன்றவை. நோயின் காரணி அப்படியே விடப்படுகிறது. பிரச்சனை ஓரிடத்தில் தோன்றினாலும் அதற்கான தீர்வுகளை வேறிடத்தில் தேட வேண்டும். சமூக ஒற்றுமை சீர்குலைந்தால் அதன் பொருள் அந்தச் சமூகத்தில் இருக்கும் உறுப்பினர்களின் பிளவுபடும் மனப்போக்கு காரணமாக இருக்க முடியும். அப்பொழுது “ஒற்றுமை மாநாடுகள்” நடத்துவதால் பயனில்லை. மனிதர்கள் ஒன்றுபட்டு நிற்காமல் தனித்துப் போவது ஏன் என்பதை அறிந்து அவர்களுக்கு இடையில் பிணைப்பை உருவாக்க வேண்டும். ஒற்றுமை தனி மனித கனவு நிலைக்குக் கொண்டுச் செல்லும்போது சமூகத்தில் அதன் விளைவாகக் கூட்டுறவும் ஒத்துழைப்பும் அதிகரிக்கும். பழங்கள் மீது உழைப்பு செலுத்தினால் பழங்கள் கிடைப்பதில்லை. விதையின் மீது கவனம் வைத்து செடிக்கு நீரூற்றி, களை பறித்து, உரம்போட்டு, பூச்சியிலிருந்து காப்பாற்றினால் இறுதிப் பலனாக கிடைப்பதே பழங்களாகும்.

ஐஐஐ

## சுய மதிப்பீட்டின் தேவை

William Blake (1757-1827) “மனிதனும் மலையும் ஒன்றிணையும்போது பெரும்பணிகள் நடக்கின்றன. கடைத் தெருவில் வெறுமனே இடித்துத் தள்ளி செல்லும்போது அல்ல...” என்கிறார்.

இது முழு உண்மை. பெரிய இலக்கிற்காக பெரிய செயல்பாடுகள் தேவைப்படுகின்றன. பாறைகளின் மீதான செங்குத்துப் பயணத்திற்குப் பிறகே மலையுச்சியை அடையமுடியும்.

வெறுமனே சாலையில் முழக்கமிட்டுக் கூட்டங்களில் பேசித் திரிவதால் எந்தப் பயனுமில்லை.

பெரும் பணிகளில் ஈடுபட்டு அதை நிறைவேற்ற வேண்டும் என்றால் திட்டப் பணிகளை முதலில் மதிப்பிட வேண்டும். சூழலை உள்வாங்க வேண்டும். முதலில் நம்மிடமுள்ள மூல வளங்களைக் கணக்கிலெடுத்த பிறகு புறவெளியின் சாத்தியங்களைக் கண்டறிய வேண்டும். பயணத்தை தொடங்கும்போது வழியில் ஏராளமானவர்களும் உள்ளனர் என்கிற எதார்த்த உணர்வு தேவை.

ஈடுபட்ட பணி உரிய தியாகத்தைக் கோரி நிற்கிறதெனில் அதை அளிக்க முன்வர வேண்டும். தேவையான பொருள் தியாகம், நேர தியாகம் அளிக்கப்பட வேண்டும். நம் பார்வை, கருத்து நிலைப்பாடு ஆகியவற்றைக்கூட தியாகம் செய்ய வேண்டியிருக்கும். பிறரோடு தொடர்பு கொண்டு செயல்களை ஒருங்கிணைக்க வேண்டியிருக்கும். சில நேரங்களில் சுய பரிசோதனைக்கு முன்வர வேண்டும். நெடுந்தூரம் கடந்த பின்பு நிற்க வேண்டுமெனில் சற்று காத்திருக்கவும் வேண்டும். நடப்பதும், நிற்பதும் சூழலைப் பொறுத்தது.

சாதனைகள் பெரும் கஷ்டத்திற்குப் பிறகே இடையூறுகளைக் கடந்த பிறகே நிகழ்த்தப்படுகின்றன. பெரும் போராட்டம் நம் ஆயுளை உறிஞ்சியெடுத்து விடுகிறது. தலைமுறை கடந்த பின்பும் பயனளிக்கும் சாதனைகள் நம் இறப்புக்குப் பிறகும் பேசப்படும். வேண்டுமெனில் ஓய்வறியா உழைப்பும், முடிவிலி ஞானமும் தரப்பட வேண்டும். எதிர்காலத்தை வடிவமைக்கும் செயல்பாடாக அது அமையும். வரலாற்றின் செல்திசையை மாற்றிவிடும். இது போன்ற பணிகள் செங்குத்தான மலையேற்றம் போன்றது. வெறும் ஊர்வலம், பொதுக் கூட்டம், முழக்கங்கள் என இருப்பது நம் முன்னுள்ள பணியைக் குறைத்து மதிப்பிடுவதாகும். அந்த எதிர்மறைச் செயல்கள் நிலைமையை மோசமாக்கும்.

நேர்மறைச் செயல்கள் நிலைமை தீவிரமடைவதிலிருந்து காத்து நிற்கும்.

## தம் குறைகளை அறிதல்

அவர் முதுமையின் வாசலில் இருந்தார். தனக்குரியப் பெண்ணைத் தேடுவதில் காலத்தைக் கழித்தவர். ஆதலால் திருமணம் செய்து கொள்ளவில்லை. என்ன! உங்களுக்கு ஒரு பெண்ணுமா

பொருத்தமாகத் தெரியவில்லை. என மக்கள் கேட்டனர். "ஒரு பெண்ணைக் கண்டுபிடித்தேன். ஆனால் அவளும் தனக்கான இலட்சிய ஆணைத் தேடிக் கொண்டிருந்தாள். துரதிஷ்டவசமாக அவள் வைத்திருந்த அளவுகோலின்படி நான் இருக்கவில்லை.

பொதுவாகப் பிறரின் குறைகளைத் துருவி அறிவதில் மக்கள் ஆர்வத்துடன் இருப்பர். அதனால் ஒருவருடனும் அவர்கள் ஒத்துப் போவதில்லை. மனிதன் தன் குறைகளை அறிந்து கொண்டால் பிறரிடமுள்ள குறைகளைப் போலவே தன்னையும் அதே இடத்தில் நிற்கக் காண்பான். தன் குறைகளை அங்கீகரிப்பவன் பணிவும் ஒற்றுமையுணர்வும் கொள்வான். அதற்கு மாறாகக் தற்பெருமையும், திமிரும் உள்ளவர்களால் எவரோடும் எங்குமே இருக்க முடியாமல் போகும்.

அனைத்து நற்பண்புகள் எந்த ஒரு தனி மனிதனிலும் மட்டும் ஒருசேர கிடைப்பதில்லை என்று உளவியல் ஆய்வொன்று கூறுகிறது. ஒவ்வொருவரிடமும் ஒரு சில நற்குணங்கள் இருக்கும். ஒருவரிடம் ஏதேனும் சில நல்லியல்புகள் இருக்கும். அதன் புற விளைவாக ஒரு சில விரும்பத்தகாத அம்சங்களும் கூடிவிடும். எடுத்துக்காட்டாக ஒருவன் வீரனாக இருப்பது நல்ல விஷயமே. ஆனாலும் அவனது செயல்கள் கடினமாக மாறியிருக்கக் கூடும். ஒருவன் கணவானாக, பெரிய மனிதனாக இருந்தால் அவனிடம் பணிவு கூடியிருக்கும். ஒருவன் படு எச்சரிக்கையுணர்வுடன் வாழ்ந்தான் எனில் முன்கோபியாக இருப்பான். ஒருவன் அறிவாளியாக இருந்தால் விமர்சனமும் செய்வான். ஒருவனிடம் நடைமுறை செயல்பாடு இருந்தால் அவனிடம் தொலைநோக்குப் பார்வை இருக்காது.

இதுபோன்ற சூழல்களில் செய்யக்கூடியது ஒன்றே. ஒருவரிடம் இருக்கும் ஆற்றல் மிக்க நற்பண்புகளிலிருந்து பயனடைந்து கொண்டு ஆற்றல் குறைவானதை கண்டுகொள்ளாமல் விட்டு விடுவதாகும். பிறரின் தனித் தன்மைகளிலிருந்து இவ்வாறே நாம் எதையாவது பெற்றுக் கொள்ளமுடியும். முதலாளி தொழிலாளி, கணவன் மனைவி, கடைக்காரர் வாடிக்கையாளர் என எல்லா உறவுகளிலும் இவ்விதியைப் பின் தொடர வேண்டும். பூ வேண்டுமென்றால் முட்களை அனுசரித்துப் போக வேண்டியதுதான். முட்களைச் சகிக்க முடியவில்லை என்றால் பூக்களும் அதன் வாசத்தையும் நுகரவே முடியாது.

தனி மனிதன் பெரும் சாதனைகளைச் செய்வதற்கு வாய்ப்புகள் குறைவு. பெரும் சாதனைகள் நிகழ்த்தப்பட பலரின் ஆற்றல் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அதனால்தான் பொதுத் துறை,

கூட்டுறவு நிறுவங்களின் தேவையை உருவாக்கின. பொறுமை, சகிப்புத்தன்மை, பரந்த மனப்பான்மை குணங்களை கொண்டிருந்த ஒருவர் பிறருடன் தாராளமாக, மென்மையாக இருத்தல் அவசியம். சிறு சிறு விஷயங்களுக்காக எவருடனும் பிணங்கிக் கொள்ளக் கூடாது. இலட்சியத்தன்மை நல்லதே. ஆனால் அது அடைவது இயலாது என வெளிப்படையாக தெரியும் போது நடைமுறைக்கு ஏற்ப செயல்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இலட்சியத்தன்மை என்பது நல்லதே ஆனால் அதை அடைவது இயலாது என ஆகும்பட்சத்தில் நடைமுறையில் எது சாத்தியமோ அதைச் செய்துவிட்டுப் போக வேண்டியது தான்.

ஜஜஜ

## பொறுமை, உறுதி, அன்பு

“நிதானமான முடிவு, அலைபாயாத மனம், கூர்ந்த பார்வை, தன்முனைப்பு, சிறுசிறு விஷயங்களில் அறுபடாத, தொடர்ச்சியான கவன ஈர்ப்பு ஆகியவற்றின் கலப்பே வெற்றியாகும்” என்று கூறும் Campbell Rogers(1910 - 1971) திடமான அர்ப்பணிப்பை, தனி ஈடுபாட்டை மட்டுமே வலியுறுத்தவில்லை. வேறு விஷயங்களும் உள்ளன என்கிறார்.

இவர் எழுதிய “Profitable poultry Keeping in India and the East” ‘(கிழக்கிலும், இந்தியாவிலும் இலாபகரமான கோழி வளர்ப்பு) என்ற பிரபலமான நூலை D.B.Taraporevala Sons & Co., Bombay - 1959யில் வெளியிட்டது. இத்துறையில் இவர் உலக புகழ்பெற்ற நிபுணர். பெரிய அளவிலான கோழி வளர்ப்பில், பொறுமை சோதிக்கும் தொடர் உழைப்பை, கோரி நிற்கும் சிறப்பியல்பு தேவைப்படுகிறது. ஒரே வேலையை தினமும் சலிக்காமல் செய்யக் கூடிய பழக்கம் இல்லாதவர்களால் இதைச் செய்ய முடியாது. விடுமுறை என்கிற பேச்சே எடுக்காமல், லாபம் பற்றி சிந்திக்காமல், எப்பொழுதும் சக உயிரிகளின் மீது இரக்கம், அன்பு, பரிவு உள்ளவர்களாக இருந்தால் மட்டுமே இதில் ஈடுபட முடியும். ஓய்வெடுத்து, மறுநாளுக்கென்று பணியை தள்ளிப் போட்டுவிட்டுக் கோழி வளர்ப்பில் இயங்க முடியாது.

மேற்குறிப்பிட்ட கருத்து வாழ்க்கையின் பெரும்பாலான சூழ்நிலைகளில் பொருந்தக் கூடியது, வெற்றிகரமானது, தர்க்கரீதியானது. அதில் பொருளாதார நலன் மட்டுமல்ல, பயனுள்ள நல்லிணக்கமான சமூக வாழ்வும் கைக்கூடும். கோழி வளர்ப்பில் தம் விருப்பத்துக்கு இருக்க முடியாது. கோழியின் பழக்க வழக்கங்கள்,

தேவைகள் குறித்த புரிதல் தேவைப்படும். அதேபோல வாழ்க்கையில் பிற உயிர்களின் நலனில் அக்கறை காட்ட வேண்டும், சலுகை தர வேண்டும். பிறரை மதிப்பதனூடாகப் பிறரிடம் நாம் மரியாதையை பெற முடியும். பிறருக்கு நன்மை செய்வதன் மூலம் நன்மை செய்யக் கூடியவர்களாக மாற்ற முடியும். இவ்வுலகில் வெற்றி பெறுவது பிறரை வெற்றி பெற உதவுவதில் உள்ளது. சுயநலன் கொண்டு, பிறர் நலன் குறித்த அக்கறை இல்லாதவர்களால் ஒருபோதும் வெற்றி பெறவே முடியாது.

ஐஐஐ

## நல்லிணக்க வாழ்வின் இரகசியம்

Indira Gandhi (1917 - 1984) பிரதமராக இருந்தபோது ஒரு முஸ்லிம் தலைவர் அவருக்குக் கடிதம் எழுதினார். சிறுபான்மை மக்களுக்கு இந்தியாவில் பாரபட்சமும் அநீதியும் இழைக்கப்படுவதாகவும் “இந்தச் சூழல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், இல்லாவிட்டால் சத்யாகிரகம் தொடங்கப்படும்” என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அதற்குப் பதிலளித்து பிரதமர் எழுதிய கடிதத்தில் “பெரும்பான்மை அயல்வாசி தொந்தரவுக்கு உட்படுத்தப்பட்டால் எந்தச் சிறுபான்மையும் நிம்மதியாக வாழமுடியாது” என்று பதிலளித்திருந்தார்.

பாரபட்சமில்லாமல் முன்னாள் பிரதமரின் கூற்றைப் பரிசீலித்தால் நிகழ்கண சூழ்நிலையைச் சரிவர படம்பிடித்துக் காட்டுவதோடு அவர் குறிப்பிடும் பிரச்சனைக்கான தீர்வும் மறைந்துள்ளதை அறிந்துகொள்ள முடியும்.

போட்டி மிக்க இந்த உலகில் ஒருவர் பிறர் மீது குறை கூறுவது தவிர்க்க முடியாது. அவர்களின் செயல்களில் அதிருப்தியும் ஏற்படுவது இயல்பு. யாரேனும் பொருளாதார வலுவுற்றால் தமக்குக் கிடைக்கவில்லை என்கிற ஏக்கம் முறையீடுகளாக மாறுகிறது. கோபம், பழியுணர்வு போன்றவை உணர்ச்சிகரமானவை. ஆனால் அதன் சிக்கல் என்னவென்றால் அவை உள்ளங்களில் மறைந்திருப்பவை. மக்களின் தினசரி அலுவல்களைக்கூட உரிய முறையில் வெளிப்படுத்த முடிவதில்லை. ஆனால் அசாதாரண சூழல்களில் அடக்கப்பட்டு, உள்ளூறைந்திருந்த இவ்வுணர்வுகள் தம்மை பகிரங்கப்படுத்திக் கொள்கின்றன.

சமூக நல்லிணக்கம் என்பது எதிர்மறைச் செயல்பாட்டை ஒடுக்கி வைப்பது என்றைக்கு அது மேலெழுகிறதோ அன்றிலிருந்து சமூகத்தில் பதற்றம் உருவாகிவிடும்.

இதுவே மனித சமூகத்தின் தவிர்க்க முடியாத எதார்த்தம். போட்டி மிகுந்த உலகில் எந்தக் குடும்பமும் சமூகமும் விதிவிலக்காக இருக்க முடியாது. இந்த நிலையில் பொறுமை, ஞானமுள்ள வழிமுறைகளைக் கையாண்டு மக்கள் உணர்வுகளுடன் விளையாடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். சுயம் எப்பொழுதும் உறைநிலையில் இருக்க விட்டுவிட வேண்டும். அதை உசுப்பி விட்டால் பெரும் பிரச்சனையாகிவிடும். சகிப்புத்தன்மை மேலோங்கினால் மட்டுமே சமூகத்தில் அமைதி நிலவ வழியேற்படும்.

“ஒவ்வொரு மனிதனும் பெரிய புதைகுழி ஒன்றைக் கொண்டிருக்க வேண்டும், அதில் பிறரின் குறைகளை உடனே புதைத்துவிட வேண்டும்” என்று உளவியல் நிபுணர் ஒருவர் கூறியது சரியான கூற்று.

ஐஐஐ

## நடைமுறைத் தீர்வு

“ஒருவரின் Ego தன் முனைப்பைத் தொட்டுவிட்டால் அது பெருநெருப்பாக மாறி, பெருநாசம் விளைவிக்கு என்று உளவியல் அறிஞர் ஒருவர் கூறுகிறார். 1300 ஆண்டுகளுக்கு முன்பு Umair Ibn Habib Hamashah என்கிற நபித்தோழர் கடைசிக் காலத்தில் தன் பேரன் Abu Jafar al-Khatmi என்பவருக்குப் பொறுமை குறித்து நீண்ட அறிவுரை கூறினார்.

“முட்டாளின் சிறு தீமையைச் சகிக்க முடியாதவன் பெரும் தீங்கைச் சந்திக்க வேண்டியிருக்கும்” வேறு வேறு சொற்களில் சொல்லப்பட்டிருந்தாலும் இந்த இரண்டு கருத்துக்களும் ஒன்றே.

“உலகில் மக்களின் தீங்கிலிருந்து தப்பிக்க ஒரே வழி தம்மைப் பிறரிடமிருந்து தொலைவில் தள்ளி வைத்திருப்பது மட்டும்தான்” ஒவ்வொரு தனி மனிதனும் பிறக்கும்போதே தன் அகங்காரம் என்பதைக் கொண்டே பிறக்கிறான். பொதுவாகத் தீங்கிலிருந்து தப்பித்திருக்க அதை “உறைநிலையில் வைத்திருக்க வேண்டும். அது பாம்பைப் போன்றது, அதைச் சீண்டினால் படமெடுத்து கொத்தித் தீர்த்துவிடும்”

பொதுவெளியில் சிலரின் முட்டாள்தனமான அல்லது வேண்டுமென்றே செய்யும் தீங்கு சமூகத்தைப் பாதிக்கும். முடிந்தவரை சகிப்புத்தன்மையுடன் இதை அனுக வேண்டும். அப்படி செய்யாமல் எதிர்வினையாற்றினால் மறுதரப்பு பதிலடி தரும். தீங்கு படுமோசம்

என்ற நிலைக்குச் சென்றுவிடும். சிறு தீங்கின் காயம் சகிக்கா விட்டால் பெருந்தீங்கின் பாதிப்புக்கு உள்ளாக நேரிடும்.

ஒருவர் சிறு கூழாங்கல்லை எறிகிறார் எனில் அதைப் பொறுத்துக் கொள்ளாதபோது கருங்கல் தலைமேல் விழும்போது அதை எப்படி பொறுத்துக் கொள்ள முடியும்?

## சமூக ஒற்றுமை

இயற்கையுலகம் ஒழுங்கில் அமைந்துள்ளது. மனித உலகம் குழப்பம் சூழ்ந்து காணப்படுகிறது. இயற்கை விதிகளின்படியும் மனிதனின் உலகம் சீர்குலைந்தும் போயுள்ளது. இயற்கை உலகம் தமக்குரிய ஒழுங்கிற்குள் நிற்கும்போது, மனிதன் எந்தவொரு சட்டங்களுக்கும் கட்டுப்படாத நிலையில் உள்ளான். மனிதன் மனிதனாக நடந்து கொள்ளும்போது நல்லரசு அமையும். சட்ட ஒழுங்கில்லாத சமுதாயம் மின்சாரம் இல்லாத தொழிற்சாலை போன்றதாகும். இது ஒருபோதும் வேலை செய்யாது என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

நன்மையை ஏவுதலும், தீய குணங்களைத் தடுத்தலும் சமூகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைபெற உதவும் காரணிகளாகும். தாராளமனம், ஈகைக்குணம், மன்னிக்கும் இதயம், அரவணைக்கும் நெஞ்சு போன்றவை கஞ்சத்தனத்தை, குறுகிய மனப்பான்மையை, மன்னிக்காத இழிகுணத்தை, இதயமற்ற நடத்தையை அகற்றும். பிறர் நலன் நாடுதல் எந்தவொரு சூழலிலும் முதன்மைச் செயலாக இருக்க வேண்டும். பிறரின் தவறுகள், அற்பத்தனம் ஆகியவற்றால் கெட்ட எண்ணம் ஓங்கி வளரும் என்பதால் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவது முக்கியமானதாகிறது. குறிப்பாகப் பிறரின் அந்தரங்கத்தை காப்பாற்ற வேண்டிய நிலையில் அடிப்படையாகவே எச்சரிக்கையுடன் இருத்தல் தேவையாக இருக்கிறது.

நற்குணங்கள் இயல்பாகவே சட்ட ஒழுங்கை நிலைநாட்ட துணை செய்யக்கூடியவை. எல்லா சூழ்நிலையிலும் நல்லிணக்கம் கொண்டிருப்பது அவசியம். எதைச் சொன்னாலும் எப்பொழுது பேசினாலும் கவனமாக இருக்க வேண்டும். எங்கு மௌனமாக இருப்பது என்பதை அறிந்து வைத்திருப்பது கட்டாயம். எந்த இடத்தில் கடுமையாக உறுதியாக எப்பொழுது மென்மையாக, நெகிழ்வாக நடந்துகொள்ள வேண்டும் என்பது சம அளவில் இருத்தல் முக்கியம்.

இதுபோன்ற சிறுசிறு விஷயங்களை அறிந்துவைத்திருப்பது சமூக நல்லிணக்க இருப்புக்கு முக்கியம். அதை செயல்படுத்த ஒற்றுமை தேவைப்படும். அது இல்லாமல் போகும்போது கலகமும், சீர்குலைவும் ஏற்படும்.

## கால மாற்றம்

பூட்டப்பட்ட பூட்டைத் திறக்க யாரேனும் சந்திக்கும் இடரை கவனித்து இருக்கிறீர்களா? அப்பொழுது அவர் லேசான பொறுமையின்மையில் தொடங்கி கடுங்கோபம் கொள்வது வரை செல்லக்கூடும். அப்பொழுது கையில் வைத்திருந்த சாவியை எறிந்துவிட்டுப் பூட்டின்மீது பெரிய கல்லைக்கூட எறியக்கூடும். அப்பொழுது இரண்டாம் நபர் அருகில் வந்து இந்தச் சாவியைக் கொண்டு முயன்று பார்க்கவும். இது புதிய பூட்டு, தங்களின் பழைய சாவியில் இது திறக்காது என்கிறார். இந்தச் சூழலில் முதல் நபர் ஒதுங்கி நின்று வேடிக்கை மட்டுமே பார்க்க முடியும். இரண்டாம் நபர் சாவியைச் செருகியதும் பூட்டு திறந்து கொண்டதை, முதல் நபர் வேடிக்கை மட்டுமே பார்க்க முடியும்.

முதல் நபர் மாறிவரும் உலகின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாதவர். மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதைக் கண்டு திகைத்து நிற்பவர். தேங்கிப் போன திறனுடன், காலாவதியான முறையிலும் அணுகி வருபவர். இது புதுப்பூட்டைப் பழைய சாவி கொண்டு திறப்பத்தைப் போன்றது. என்ன செய்வதென்று அறியாமல் இருப்பதால் நேரமும், ஆற்றலும் வீணாகும். இவர் விரும்பும் விதமாகக் காலம் பழைய நிலைக்குத் திரும்பப் போவதில்லை. மாறிவிட்ட சூழலைக் கண்டு கோபப்படுவார்கள். அது தீவிரமடையவும் அனுமதிப்பார்கள். பூட்டையும் அவர்கள் விரும்பாத அனைத்தையும் நொறுக்கத் தயாராகி விடுவர். இவர்களின் அருகில் சரியான சாவியை வைத்திருக்கும் இரண்டாம் வகை நபர்கள் இருப்பது அவசியம்.

மக்கள் பொதுவாகத் தங்களுக்கான சாவியைக் கண்டுபிடித்து விடுகிறார்கள். ஆனால் எல்லோராலும் அப்படி முடிவதில்லை. கடும் முயற்சி கைக்கொள்பவர்களால் மட்டுமே அதை கையகப்படுத்த முடிகிறது. அத்தகைய போக்கைத் தொடங்குவதற்கு முன், வாழ்க்கையின் புதுமையை நவீனத்துவத்தை அங்கீகரிப்பது முன் நிபந்தனையாகும்.

நம்மைச் சுற்றி நாம் காண்பதென்ன? தெருமுனைக் கூட்டங்கள், இட ஒதுக்கீடு கோரிக்கைகள், சிறப்புச் சலுகை கோரும்

மடக்கோலைகள் என எங்கும் அவர்களுடைய சொற்களின் எதிரொலிகள்.

சமூக ஒதுக்கல், பாரபட்சமான நடத்தை எனக் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்கிறது. தீமையான தந்திரங்களைக் கையாண்டு நல்ல விஷயங்கள் மடியில் வந்து விழும் என எப்படி எதிர்பார்க்க முடியும்? இது புதிய பூட்டை பழைய சாவியுடன் திறக்க நினைக்கும் முட்டாள்தனம் போன்றது. தன்னுடைய படைப்பாற்றலை, அக / புற வயமான வளர்ச்சிக்காக முன்னுதாரணமாக்கி உழைப்பைத் தரவேண்டும். அங்கு தொடங்கி அனைத்து மட்டங்களிலும் வளர்ந்து சமூக முன்னேற்றமாக அது மாறும்.

## உண்மையை ஏற்க மறுத்தல்

“தோற்கடிக்க முடியாதபடி பேசினால், சாதுரியமான நாவன்மை கொண்டிருந்தால் அவரால் ஏழைகளிடம் அனுதாபத்துடன் நடந்துகொள்ள முடியாது” என்று Socrates (470 B.C. - 399 B.C.) கூறியுள்ளார்.

அசைக்க முடியாத வாதத்திறமைக்கும் ஏழைகளுக்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் என்று தெரியவில்லை. ஆனால் ஆழமாக சிந்திக்கும்போது இரண்டுக்கும் இடையில் நெருங்கிய இழையொன்று இருப்பதை உணரமுடியும். உண்மையை ஏற்கும் நெஞ்சுரமுள்ளவர் மட்டுமே ஏழைகளிடம் நியாயமுள்ளது எனில் அனுதாபத்துடன் நடந்துகொள்ள முடியும்.

கீழ்க்கண்ட நிகழ்வு இதை விளக்கப் போதுமானது. ஒரு பண்ணையார் தன் மாம்பழம் விளையும் நிலத்தை அதில் சாகுபடி செய்துக்கொண்டிருந்த குத்தகைதாரருக்கு விற்றுவிட்டார். மரங்களில் பழம் காய்க்கத் தொடங்கியபோது புயல் அடித்தது. அதனால் நிறைய பழங்கள் மரத்திலிருந்து விழுந்து விட்டன. குத்தகைதாரனுக்கு கவலை ஏற்பட்டது. பழங்களைச் சந்தையில் விற்கும்போது உரிய விலை கிடைக்காது. பெரும் இழப்பு ஏற்படும் என அஞ்சினார். மரத்திலிருந்து விழுந்த பழங்களைக் கூடையில் நிரப்பி பண்ணையாரிடம் சென்று புயல் அடித்தபோது நிறைய பழங்கள் சேதமடைந்துவிட்டன. ஆகவே குத்தகைக்கான தொகையை குறைத்துக் கொள்ளவும் எனக் கேட்டுக் கொண்டார்.

பண்ணையார் இதைக் கேட்டுக் கோபத்துடன் “என் தோட்டத்தை வாங்கும்போது, புயல் அடித்தால் பழங்களைப் பாதுகாக்கத் தடுத்து நிறுத்தத் தோட்டத்தைச் சுற்றி பெரிய

மலையோ, சுவரோ இல்லை என்பதை பார்க்கவில்லையா என்றார். குத்தகைத்தாரர் ஏமாற்றத்துடன் திரும்பினார்.

பண்ணையாரின் நண்பர் ஒருவர் அப்பொழுது அங்கு இருந்தார். முழு உரையாடலையும் கேட்டவர், அந்தக் குத்தகைக்கார் போன பிறகு, நீ கடின மனங்கொண்டவன், ஏழை குத்தகைக்காரனிடம் இரக்கம் காட்ட உனக்குத் தெரியவில்லையே என்றார். இதைக் கேட்ட பண்ணையார், தங்களைப் போன்ற படித்தவர்கள் ஒரு மனிதன் பிற மனிதனுக்கு உணவளிக்கிறான் என நினைக்கின்றனர். ஆனால் ‘எல்லோருக்கும் உணவளிப்பவன் இறைவன்; ஒவ்வொருவருக்கும் வாழ்வாதார பொறுப்பை ஏற்றிருப்பவன் அவனே” என்றார்.

வலிமையானவர்களுக்கு எதிராக மனிதன் அதிகம் பேச முடிவதில்லை. ஆனால் அதே நேரம் ஏழையிடம் மிக சாதுரியமாகப் பேசி விடுகிறான். மிகவும் ஆழமாகவும் தீவிரமாகவும் விவகாரங்களை அணுகவும் உண்மையை ஏற்று அதற்கேற்ப செயல்படவும் முடிவதில்லை.

ஐஐஐ

## கடினமான சூழ்நிலையை எதிர்கொள்ளல்

கண்ணாடிச் சட்டகங்கள் (Glass Frames) விற்பனை செய்யும் கடைகளில் பேனா போன்ற ஒரு இயந்திரத்தைக் கொண்டு அக்கண்ணாடிகளை இரண்டு துண்டுகளாக வெட்டுவதைப் பார்த்திருப்பீர்கள். அந்தப் பேனாப் பட்டை போன்ற சிறிய கைக்கருவி வைரம் பதிப்பிக்கப்பட்ட கூர்முனையால் ஆனது. வைர முனையால் இழுக்கும்போது கண்ணாடி துண்டாகிவிடும். அதேபோல ஆழ்துளைக் கிணறு தோண்டும் இயந்திரத்தில் நூற்றுக்கணக்கான அடிகள் கீழேயுள்ள பாறைகளை வெட்டியெடுக்க இதே வைரமுனை ஊசிகளே பயன்படுத்தப்படுகின்றன.

வைரம் மிகவும் உறுதியானது. அதன் மீது கீறல் விழாது. அமிலம் படும்போதும் அதற்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை. இதை சூடுபடுத்தும்போது பிற தனிமங்களைப் போல ஆவியாகி மறைவதில்லை. மாறாக கார்பன் டை ஆக்சைடு ஆகும். வைரத்தின் உள்கட்டமைப்பை அறியும் திறனுள்ளவர் எந்த இடத்தில் இந்த குறிப்பிட்ட வைரம் நெகிழ்வாக உள்ளது என்பதை அறிந்து அதற்கேற்ப நகை தயாரிப்புக்காக பிளப்பார்.

ஒரு பொருளை அதன் கடினத்தன்மையின் வலுவான பகுதியில் கைவைத்து உடைக்க முடியாது. ஆனால் அதே பொருள் வேறொரு இடத்தில் பலவீனமாக இருக்கும். அங்கே அதை உடைத்து விடலாம்.

அதேபோல பெரிய கடினம் ஒன்றை எதிர்கொள்ளும்போது வைர வியாபாரி வைரத்தை உடைக்க எப்படி ஆய்வு செய்கிறாரோ அப்படி நாமும் செய்ய வேண்டும். பிரச்சனையின் பலவீனமான பகுதியிலிருந்து அணுகிப் பார்ப்பதே சரியானது. வன்முறையின்போது கோபம் நெகிழ்வின்மை ஆகியவற்றைக் கையாளக்கூடாது. கடின சொல் கூறாமல் மென்மையாக அணுக வேண்டும்.

சில தனிநபர்கள் வைரம் போன்று கடினமானவர்கள். வெளிப்படையாகப் பார்க்கும்போது கவர்ச்சியும், ஈர்ப்புமற்றுத் தகுதியற்றவர்களாகத் தெரிவார்கள். ஆனால் உள்ளுக்குள் பெரிய திறன் கொண்டிருப்பார்கள். அதை வெளிக் கொணரும்போது அவர்களின் உண்மை மதிப்பு சமூகத்திற்குத் தெரிய வரும். நேர்கொண்ட பார்வையுள்ள மனிதன் இயற்கையில் அழகானவன். உடையும் தன்மையுள்ள நகைகளைக் கலைஞன் படுநேர்த்தியாகச் செய்வதைப் போல இலாவகமாகக் கையாள வேண்டும். யாரையும் கடுஞ் சொற்கள் பேசி அவரைச் சம்மதிக்க வைக்க முடியாது. இன்சொற்கள் பேசி எதையும் சாதிக்க முடியும். தங்களின் கோரிக்கைகளை ஆர்ப்பாட்டம், போராட்டம் என வென்றெடுக்க முடியாதபோது உழைப்பு, தகுதியின் அடிப்படையில் உயரிய இடத்தை அடையமுடியும். அமிலத்தைப் பயன்படுத்தியும் வைரத்தை ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் வெப்பமடையும்போது நெகிழ்ந்து கொடுக்கிறது. இதுவே மனிதனுக்கும் பொருந்தும். ஒருவர் கடினமாகத் தென்பட்டால் எல்லா நேரங்களிலும் அவர் அப்படி இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒருவகையில் கடினமாக இருக்கும் ஒருவர் வேறொரு நிலையில் அன்பாக இருக்கக் கூடும். ஒவ்வொரு பொருளுக்கும் இரு நிலைகள் உண்டு. சில நேரம் கடினம், மற்ற நேரங்களில் மென்மை, ஒரு வகை உறவாடலில் கடினம் காட்டும் ஒருவர் இன்னுமொரு முறையில் மென்மையானவராக ஆகக் கூடும். எல்லா நிபந்தனைகளையும் ஏற்கக் கூடும். இந்த இரகசியத்தை உணர்வதன் மூலம் வாழ்க்கையின் எல்லா இரகசியமும் புரிய ஆரம்பிக்கும்.

## ஆய்வு செய்யுங்கள்

இந்தியர் ஒருவர் சௌதி அரேபியா சென்றிருந்தார். மதீனா நகரில் அரபுப் பழங்குடியினர் ஒருவரைச் சந்தித்தார். அவரது கைகள் துண்டிக்கப்பட்டிருந்தன. கைகள் துண்டிக்கப்பட்டு இருந்ததால் அந்த அரேபியரை திருட்டு வழக்கில் தொடர்புடையவராக இந்தியர் நினைத்துக் கொண்டார். திருடன் என்கிற எண்ணம்

இருந்ததால் அரேபியர் குறித்த வெறுப்புணர்வு இந்தியரின் மனதில் தோன்றினாலும் சிறிய ஐயம் இருந்து கொண்டிருந்தது. அதனால் துருவிப் பார்க்கும் மனதுடன் அரேபியரை நோக்கித் திரும்பினார். அனுதாப உணர்வுடன் “அஸ்ஸலாமு அலைக்கும்” என்று முகமன் கூறி பேச ஆரம்பித்தார். அவரும் பதில் சொல்லிக் கொண்டிருந்தார். அரேபிய Yutma என்கிற ஊரைச் சேர்ந்தவர் என்றும், 23 ஆழ்துளை கிணறுகள் கொண்ட ஏராளமான நிலங்கள் இவருக்கு சொந்தமாக இருப்பதாகவும் தெரிந்து கொண்டார். விளையக்கூடிய காய்கறி, பழங்களை மதீனாவின் சந்தையில் கொண்டு வந்து விற்பதாகவும் கூறினார். மேலும் 1948ஆம் ஆண்டு யூதர்கள் அரேபியர்களுக்கு இடையிலான பாலஸ்தீன போரில் இந்த அரேபியரும் கலந்து கொண்டாராம். அப்பொழுது அவரது தோள் பட்டையில் ஆறு குண்டுகள் பாய்ந்ததால் மருத்துவமனையில் பல மாதங்கள் அனுமதிக்கப்பட்டு இருந்தாராம். தீவிர சிகிச்சை அளித்தும் காயங்கள் முழுமையாக ஆறவில்லை. இறுதியில் வேறு வழியின்றி கைகளைத் துண்டித்து விட்டார்களாம்.

இந்த எடுத்துக்காட்டிலுள்ள நபரின் எதார்த்த உண்மை. ஆனால் தன் முன்முடிவுகளால் ஒரு அப்பாவியை தவறாக திருடன் என நினைத்துக் கொண்டது நிகழ்ந்துள்ளது. அரைகுறைத் தகவல்கள் பெரிய தவறான புரிதலை அளித்துவிடும் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஒரு போராளியை, வெற்றிகரமான விவசாயியைப் போய் திருடன் என நினைத்தது எவ்வளவு மோசம். பிறரைப் பற்றி கருத்து கூறுவதில் அவசரம் காட்டக் கூடாது. எந்த ஒரு விஷயம் என்றாலும் தீர விசாரித்து அறிந்துக் கொள்வது அவசியம். அதற்கு முன்பு வாயைத் திறக்கவே கூடாது.

தகவல்களைச் சரிகாண வழியேதுமில்லை என்றால் அமைதி காப்பது மட்டும் நம் முன் உள்ள ஒரே வாய்ப்பு. பேசுவது வெள்ளி என்றால் மௌனம் காப்பது தங்கம் என்பார்கள். அரைகுறைத் தகவல்களுடன் ஒருபோதும் பேசவே கூடாது. பேசுவது எவ்வளவு தேவையோ, மௌனமாக இருப்பதும் அவ்வளவு அவசியமே.

## இளைஞர்களை ஊக்குவித்தல்

Charles Darwin (1809 - 1882) ஆரம்பப் பள்ளியில் இருக்கும்போது, சராசரி மாணவராகவே இருந்தார். படிப்பில் சுட்டியாக, கெட்டிக்காரனாக இருக்கவில்லை. “நீ வெறும் வேட்டைக்குப் போகத்தான் பொருத்தம், நாய்களை வைத்துக்

கொண்டு பெருச்சாளி பிடித்துக் கொண்டு திரியப் போகிறாய்” என்று கோபத்துடன் அவரின் தந்தை திட்டிக் கொண்டிருப்பார். பள்ளிப்படிப்பு முடிந்தபிறகு மருத்துவக் கல்லூரியில் டார்வின் சேர்க்கப்பட்டார். நாட்டமில்லாமல் கல்லூரியில் வெறுமனே சுற்றிக் கொண்டிருந்தார். மருத்துவப் படிப்பை முழுமையாக முடிக்க டார்வினால் முடியவில்லை. புகழ்பெற்ற Cambridge பல்கலைக் கழகத்தில் மெய்யியல் துறையில் சேர்ந்து பாதிரியாராக நினைத்து அதுவும் சரிபட்டு வரவில்லை. அங்கும் தோல்வியுற்றார்.

ஆனால் Cambridge நாட்களில் இயற்கை வரலாற்றில் ஆர்வம் ஏற்பட்டது. பட்டப்படிப்பில் இந்த தலைப்பு சேர்க்கப்பட்டிருக்கவில்லை. தனிப்பட்ட ஆர்வம் காரணமாக மண்ணியலை விரும்பிப் படித்தார். இந்த ஈடுபாடு காரணமாக J.S. Henslow-விடம் நெருங்கத் தொடங்கினார். விரிந்த பார்வை கொண்ட J.S. Henslow தொடர்பு டார்வினை உலகப் படிப்பின் உச்சாணிக்கு கொண்டு போய்ச் சேர்த்தது.

அட்லாண்டிக், பசிபிக் பெருங்கடல் ஓரங்களில் நிலவரைவு எடுக்க ‘Beagle’ என்கிற ஆய்வுக் கப்பலை பிரிட்டிஷ் அரசு ஏற்பாடு செய்தது. பேராசிரியர் Henslowவின் தனிப்பட்ட செல்வாக்கின் காரணமாக சுமார் ஐந்தாண்டுகள் (1831 - 1836) நீடித்த இந்த ஆராய்ச்சிக் குழுவில் டார்வினுக்கு இடம் கிடைத்தது. “இயற்கை வரலாற்றாளர்” என்கிற பொறுப்பில் அந்த நியமனம் இருந்தது. டார்வினின் சொந்தத் தகுதியில் அக்கப்பலின் ஆய்வுப் பணியில் இடம் கிடைத்திருக்க அறவே வாய்ப்பு இருந்ததில்லை. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கப்பல் பயணத்தில் செல்ல டார்வினின் திறமையைக் கண்டறிந்து வாய்ப்பளித்த பேராசிரியர் Henslow முன்னுணர்வுக்குப் பெரிய பங்குள்ளது.

இந்த ஐந்தாண்டு பயணத்தில் டார்வின் ஏராளமான நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. கடலோரம், அடர்ந்த காடு, மலைகள் என நிலப்பரப்பை ஊடறுத்துச் சென்றார். நடந்தும் குதிரையின் மீதும் இப்பயணம் நிகழ்ந்தது. ஆயிரக் கணக்கான வகை பயிர்களை, விலங்குகளை ஆய்வு செய்தார். கற்பாறைகளில் இயற்கை பாதுகாத்து வைத்திருக்கும் தொல்லெச்சங்களின் மாதிரிகளைச் சேகரித்தார்.

பல்வேறு விலங்குகளில் வேறுபாடு இருந்தாலும் அவற்றுக்கு இடையில் பொதுப் பண்புகள் உள்ளன. குறிப்பாக “இயற்கையுடன்

இயைந்த வாழ்வு” பரிணாம வளர்ச்சியில் கொண்ட தாகம்” போன்ற கோட்பாடுகளை முன்மொழிந்தார். பிறகு இதுவே இன்னும் மேம்பட்டுப் “பரிணாமக் கோட்பாடு” என பிரபலமானது.

மூத்தவர்களின் வழிகாட்டுதலை இளம் ஆய்வாளர்களை எவ்வளவு நெறிப்படுத்துகிறது என்பதை டார்வின் ஹான்ஸ்லு இடையிலான குரு சீடன் உறவு காட்டுகிறது. எந்தச் சமூகத்திலும் பெரியவர்கள் வளரும் இளைஞர்களை இனம் கண்டு ஊக்குவித்தால் குறிப்பிட்ட தனி மனிதன் மட்டுமல்ல, முழு சமூகமும் பலனடையும். இளைஞர்களின் திறனில் ஆர்வம் காட்டாது போனால் புதிய கண்டறிதலின் வாய்ப்புகள் அற்றுப் போகும். பொதுவாகப் பெரியவர்கள் துதிபாடிகளின் புகழுரை கேட்கப் பழகிப் போவதால் பொது முன்னேற்றம் புதிய உச்சியைத் தொடுவது தள்ளிப் போகிறது.

டார்வினுடைய வாழ்க்கையில் இன்னுமொரு நிகழ்வு படிப்பினைக்குரியது. 1852 - 1858 ஆண்டுகளில் “இயற்கைத் தேர்வு” குறித்து எழுதினார். ஆனால் அவற்றை இன்னும் பதிப்பித்திருக்கவில்லை. Alfred Wallacce என்பவரும் கிட்டத்தட்ட இதே கருதுகோளை முன்மொழிந்திருந்தார். ஆகவே தன் கோட்பாட்டை அச்சிடும் கட்டாயம் டார்வினுக்கு ஏற்பட்டது. ஆயினும் முதலில் தானே இக்கோட்பாட்டை வடிவமைத்தவர் என்பதை டார்வின் நிறுவாமல் இலண்டன் Linnean Society-யில் Alfred Wallace-சுடன் சேர்ந்து இக்கோட்பாட்டை ஒரு சேர பதிப்பிக்கும் முடிவுக்கு வந்தார். இதன்மூலம் இக்கோட்பாட்டுக்கு வலுகூடும்., ஆதரவு அதிகரிக்கும் என டார்வின் திட்டமிட்டார். 20-06-1858 அன்று இலண்டன் மாநகர அறிவுஜீவிகளின் மத்தியில் தன் கருதுகோளை டார்வின் முன்வைத்தார். தனிப்பெருமை, ஒளிவட்டம் ஆகியவற்றைத் துறந்துவிட்டுக் கூட்டுப் பங்காளியாக சம்மதித்தார். தனக்கு மட்டும் அங்கீகாரம் கிடைக்க வேண்டும் என டார்வின் நினைக்கவில்லை. தன் புதிய கோட்பாடு உரிய முறையில் ஏற்கப்பட வேண்டும் என்பதே அவரின் அவா. சுய அடையாளத் துறப்பு என்பது அரிய பண்பு. இதுவே மாபெரும் சமூகத்தை உருவாக்கும். மனிதன் தன் தனிப்பட்ட ஆசைகளை பொறுத்துக் கொண்டு கூட்டு வாழ்க்கைக்குப் பழக்கிக் கொண்டால் இது சாத்தியம்.

# குழு விசுவாசம்

“நண்டுகளைப் பிடித்து ஒரு கூடையில் போட்டு வைக்க வேண்டி வந்தால் மூடி எதையும் போட்டு அடைக்க வேண்டிய தேவை எழுவதில்லை” என்று ஒரு மீனவர் என்னிடம் கூறினார். ஒருவேளை நண்டுகள் கூடையின் மேற்புறம் நோக்கி முன்னேறினால் அதை உடனே வேறு சில நண்டுகள் பிடித்து இழுத்து உள்ளே கொண்டு வந்துவிடும். (Charles Allen, The Miracle of Love)

நண்டுகளின் இந்த இயல்பை வைத்தது இறைவன். இறைவனின் நடைமுறையின்படியே நண்டுகள் இவ்வாறு செய்கின்றன. கூட்டு வாழ்க்கையை எப்படி நடத்தி கொள்வது என்பதற்கு இந்தச் செயல்பாட்டில் மனிதனுக்குப் பல்வேறு படிப்பினைகள் உள்ளன. கூட்டு வாழ்வில் ஒற்றுமை என்பது மிக முக்கியமான அம்சம். நண்டுகள் ஒற்றுமையைக் கடைப்பிடிக்க கையாளும் முறை மனிதர்களுக்கும் பொருந்தும்.

ஒரு கூட்டு அமைப்பில் உறுப்பினராக உள்ள தனி மனிதன் யாரேனும் வரம்பு மீறினால் பொதுச் சமூகத்திலிருந்து விலகி தனியே வெளியேற நினைத்தால் சமூகப் பொறுப்புள்ள நபர் அவரை உள்ளீர்க்க முயல வேண்டும். கூடையில் உள்ளவர்களே தம்மிலிருந்து ஒருவன் பிரிந்து செல்லும்போது தடுத்து நிறுத்த வேண்டும். பொதுவான நடைமுறையில் மனிதத்தன்மையுடன் நாகரிகமாகத் திரும்ப அழைக்கப்பட வேண்டும்.

இஸ்லாமிய வரலாற்றில் இதற்கு அழகான எடுத்துக்காட்டைப் பார்க்கலாம். Saad Ibn Ubadaah மதீனாவைச் சேர்ந்த நபித்தோழர். நபிகள் நாயகம் (570-632) மறைந்தபோது அன்றிருந்த முஸ்லிம் சமூகத்துக்குத் தலைவராக மெக்கா நகர் குறைஷ் இனக்குழுவிலிருந்து ஒருவரை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதாக பெரும்பாலோர் கருதினர். ஆனால் Saad Ibn Ubadaah மதீனாவின் அன்சார்களில் ஒருவர் இப்பொறுப்புக்கு வரட்டும் அல்லது குறைஷ், அன்சார் இரண்டு தரப்பிலிருந்து இரண்டு கலீஃபாக்கள் இருந்து கொள்ளட்டும் எனச் சொன்னார். Saad Ibn Ubadaah அப்பொழுது மதீனாவின் அரசரைப் போன்று செயல்பட்டு வந்தவர். ஆனாலும் மக்கள் இந்த அத்துமீறலை அனுமதிக்கவில்லை.

# தலைகீழ் பிரமிடு

Vikas Minar புதுடில்லியின் உயரமான கட்டிடங்களில் ஒன்று. இது கட்டப்பட்ட போது நாளேடுகளில் "மாநகரின் 21 அடுக்கு மாடிகள் கொண்ட நவீன கட்டிடம் பயன்பாட்டுக்கு வந்துள்ளது" என்று செய்தி வெளியானது. வாசகர்களின் கவன ஈர்ப்புக்காக 21 மாடி கட்டப்பட்டது கடைசியில். முதலில் அஸ்திவாரமும், ஒவ்வொரு சுவராக மாடிகளுக்கு ஒன்றுக்கு மேல் ஒன்றாகப் பல ஆண்டுகளில் இப்பணி நிறைவடைந்தது. ஆனால் நாளேட்டின் செய்தியில் 21வது மாடி முதலில் வெளியானது. நவீன செய்தி வெளிப்பாட்டு முறையும் இதுவே. இது 'தலைகீழ் பிரமிடு முறை' என்று அழைக்கப்படுகிறது. அதாவது கவன ஈர்ப்புக்குரிய விஷயத்தை முதல் தகவலாகச் சொல்லும் முறை இது. தொடக்கம், நடுநிலை, இறுதிமுடிவு என வரிசை முறைப்படி இன்றி வழக்கமான நிகழ்ச்சி நிரலாக இல்லாமல் செய்தியாளருக்கு இப்படி கூறுறி கவனக் குவிப்பு செய்வது.

பெரிய விஷயத்தை முதலில் கூறுவதன் மூலம் வாசகர்களை கவரும் உத்தி. இதனால் பத்திரிகையின் விற்பனை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. பரப்பரப்புச் செய்திகளை வெளியிடுவதும், செய்தியைப் பரபரப்பாக்குவதும் நிகழ்கிறது. வழக்கத்திற்கு மாறான ஒன்று ஆசிரியர் குழுவின் கவனத்திற்கு வந்தவுடன் முடிந்தவரை பத்திரிகையின் விற்பனையைக் கூட்டும் வகையில் அந்த செய்தி மாற்றப்படுகிறது.

'தலைகீழ் பிரமிடு' செய்தி ஊடகத்திற்கு வேண்டுமானால் பொருந்தலாம். ஆனால் நம் வாழ்க்கையில் அதற்கு இடமில்லை. இந்த விதியால் நடைமுறையை, கள எதார்த்தத்தை மாற்றியமைக்க முடியாது. ஒரு சமூகத்தைக் கட்டமைக்க நினைக்கும்போது உச்சி கூரை மாடியிலிருந்து தொடங்க முடியாது. ஒரு சமூகத்தைக் கட்டமைக்க நினைக்கும்போது மாடியின் உச்சி கூரையிலிருந்து தொடங்க முடியாது. அஸ்திவாரத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். படிப்படியாக மேல்நோக்கி உயர வேண்டும். சமூகக் கட்டுமானம், தேச நிர்மாணம் போன்றவை தேனாறும், பாலாறும் ஓடும் சொர்க்க பூமி குறித்துப் பேசுவது கடைசி படிநிலையாகும். ஆனால் பணிகள் முதலில் ஆரம்பமாக வேண்டும். ஆனால் சொற்பொழிவாளர்கள் "21வது மாடி"யின் கனவிலிருந்து பேச ஆரம்பிக்கின்றனர். இதனால் செயல் என்கிற தொடக்கம் அற்றுப் போய்விடுகிறது. அஸ்திவாரக் கட்டுமானக் கல் முக்கியமல்லவா? படைப்பாற்றல் அடிப்படையிலிருந்து எழுதுவதே, உறுதியான கட்டிடம் பலமான அஸ்தீவாரத்தில் மட்டுமே நிற்க முடியும்.

ஐ௸ஐ௸ஐ௸

## சந்தேகங்கள்

முக்கால் நூற்றாண்டுகள் கடந்திருக்கும். நான் ஒருமுறை Aazamgarh ரயில் நிலையத்தில் நின்று பயணச் சீட்டு வாங்கிக் கொண்டிருந்தேன். வண்டி நடைமேடையில் இருந்தது. வண்டி புறப்பட இருந்த நேரத்தில் கிராமவாசி பயணச் சீட்டு வாங்க வந்திருந்தார். அவர் போக இருந்த ஊருக்கான பயணச் சீட்டின் கட்டணம் சில ரூபாய்கள் அவர் தன் மூடிய கைகளைப் பயண டிக்கெட் கொடுக்கும் கௌண்ட்டர் இடுக்கின் உள்ளே செலுத்தி ஏராளமான சில்லறைகளை டேபிளில் கொட்டி டிக்கெட் வேண்டி நின்றார். உள்ளே அமர்ந்திருந்த பயணச் சீட்டு அலுவலர் கோபப்பட்டு இத்தனை சில்லறைகளை எண்ணி முடிக்க நேரம் பிடிக்கும். எனக்கு அதற்கெல்லாம் நேரமில்லை. ரூபாய் நோட்டுகளாக கொடுக்கவும் என்றார். எனக்கு அந்த கிராமவாசியின் மீது அனுதாபம் வந்தது. நான் என்னிடமிருந்து ரூபாய் நோட்டை அவரிடம் நீட்டினேன். பதிலாக அதற்குரிய சில்லறைகளை கொடுக்கும்படி கேட்டுக் கொண்டேன். ஆனால் அந்த கிராமவாசி அதற்குச் சம்மதிக்கவில்லை. அவர் சந்தேகக் கண்களோடு வேறொரு திசை நோக்கி அகன்று விட்டார். பிறகு வேகமாக எனக்குரிய ரயில் வண்டியை நோக்கி விரைந்தேன்.

இருந்தும் அவரைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தேன். குறித்த நேரத்தில் ரூபாய்த் தாள்களைக் கொடுத்து அவரால் பயணச் சீட்டு எடுக்கு முடியவில்லை. அதனால் பயணச் சீட்டும் எடுக்கவில்லை. அனேகமாக அவர் அன்று பயணிக்கவில்லை. கிராமவாசி என் உதவியை மறுக்கக் காரணம் என்ன? சந்தேகம்தான் அந்த கிராமவாசியை அப்படி போகச் செய்தது. நான் அவரது பலவீனத்தைப் பயன்படுத்தி பலனடைய நினைக்கிறேன் என்று அவர் கருதியுள்ளார்.

சில்லறை நாணயங்களுக்குப் பதிலாக ரூபாய்த் தாள்களைப் பெற்றுக் கொண்டு ரயில் பயணச் சீட்டு வாங்கி ஊருக்குப் போக வேண்டும் என்பதைக் கூட அவருக்கு மறந்து போக வைத்துள்ளது. அவர் இல்லாமல் ரயில் வண்டி போய் விட்டது.

இதுவே, நம் சமூகத்தின் இன்றைய நடைமுறை. ஒவ்வொருவரும் பிறரைச் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்றனர். ஒவ்வொருவரும் பிறரை நம்பமுடியாத நிலைக்குச் சென்றுவிட்டனர். அதனால் சமூகம் முழுவதும் பரஸ்பரம் நம்பிக்கையின்மை எங்கும் பரவியுள்ளது. ஒவ்வொருவரும் ஏராளமான நன்மைகளை இழந்து தவிக்கின்றனர். ஒன்றுகூடி உழைக்க நேரும்போது பலரது பங்களிப்பு

தேவைப்படுகிறது. ஆனால் சந்தேகம் பலரை ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்து விடாமல் தடுத்துவிடுகிறது. அதனால் கிடைக்க கூடிய நியாயமான பலனையும் அடைய முடிவதில்லை. சந்தேகம் சந்தேகத்தையும் நம்பிக்கை நம்பிக்கையையும் பிறக்க வைக்கிறது.

ஒருவரை நீங்கள் சந்தேகமாகப் பார்த்தால் எதிர்நபரும் உங்களைச் சந்தேகத்தோடு பார்ப்பார். இருவருக்கும் இடையிலான தொலைவு அதிகரித்தபடி இருக்கும். நீங்கள் ஒருவரிடம் நம்பிக்கை கொண்டால் அவரும் உங்களை நம்புவார். அதனால் ஒருவர் மற்றவருடன் நெருங்க வாய்ப்பு உருவாகும்.

ஒரு மனிதனுக்கு உள்ளிருக்கும் ஆன்மாதான் வேறு மனிதனுக்குள்ளும் இருக்கிறது. தான் பிறரைவிட முற்றிலும் வேறானவன் என்னும் எண்ணத்தை பொதுவாக மனிதர்கள் தவறாகவே புரிந்து கொள்கின்றனர்.

ஜஜஜ

## ஆரோக்கியமான விமர்சனம்

ஜூன் 1983 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பொதுத் தேர்தல் நடந்தது. Conservative (பழமைவாத) கட்சியின் Margaret Thatcher (1925 - 2013) எளிதாக இரண்டாம் முறையும் பிரதமர் ஆகிவிட்டார். அதன் பிறகு அவர் செய்த முதல் வேலை வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த Francis Pym (1922 - 2006) அவர்களைப் பதவி நீக்கம் செய்ததுதான்.

அவர் John Pym (1584 - 1643) என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர். Charles I இங்கிலாந்து அரசராக இருந்த காலத்திலிருந்தே King Pym என அழைக்கப்படும் செல்வாக்குள்ள பின்னணி கொண்டது இக்குடும்பம். அமைச்சரவையில் மிக முக்கியமானவராக இருந்த Sir Francis Pym நீக்கப்பட்டது ஏன், எதற்கு, எப்படி என்கிற கேள்வி எழுகிறது. Sir Francis Pym தேர்தல் பரப்புரையின்போது பேசியவற்றை Margaret Thatcher ரசிக்கவில்லை. பொதுக்கூட்டத்தில் "சிறந்த அரசு ஒன்று அமைய வேண்டுமானால் வலுவான எதிர்க்கட்சி ஒன்று இருக்க வேண்டியது அவசியம்" என்று Francis Pym கூறியிருந்தார். இது கேட்கப் பிடிக்காமல் தேர்தல் முடிவுகள் வந்தவுடன் அமைச்சரவையிலிருந்து தாட்சர், Francis Pymஐ நீக்கிவிட்டார். பொதுவாக மனிதர்கள் விமர்சனத்தை விரும்புவதில்லை. சகிப்பின்மை நல்ல திறமையான நண்பர்களையும் பிரித்து விடுகிறது.

பொதுவாக மனித மனம் விமர்சனங்களை ஏற்காமல் இருப்பது அதன் ஆகப் பெரிய பலவீனம். அது நல்ல நண்பர்களை உடனிருக்க விடுவதில்லை, கூடவும் வைத்துக் கொள்வதில்லை.

பெரும் பணிகளைக் கையாள உயர் தகுதியும், செயல் திறனுமுள்ள உண்மையான தோழர்கள் உதவியின்றி நடைபெறாது. அப்படிப்பட்டவர்களைப் பிணைத்து வைத்திருக்க அவர்கள் முன்வைக்கும் விமர்சனங்களைச் சகிக்க வேண்டியுள்ளது. அறிவுஜீவிகள் தம் சுதந்திரச் சிந்தனையை வெளிப்படையான கருத்துக்களை தமக்குள் புதைத்து வைத்து வைத்துக்கொள்ள இயலாது. இருந்தபோதும் கோபப்படாமல் தொடர்ந்து நட்பை பராமரிக்க வேண்டும்.

ஆகவே பரந்த மனப்பான்மை கொண்ட தலைவர்கள் இம்மாதிரி அறிவுஜீவிகளைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள். இவ்வாறாக தன்னைச் சுற்றி எப்பொழுதும் உண்மை பேசும் நெஞ்சுறுதி மிக்க ஆளுமைகளின் நட்பும் புடைசூழ இருப்பர். இதேபோல குறுகிய எண்ணம் கொண்டவர்களுக்குத் திறந்த கருத்துக்களை ஏற்கும் மனமும் இருக்காது. அவ்வாறு பேசக் கூடியவற்றைக் காது கொடுத்தும் கேட்க மாட்டார்கள். இதன் விளைவு துதிபாடிகளும், வஞ்சக மனம் கொண்டவர்களைக் கொண்ட அமைப்பாக அரசும், அதிகார வர்க்கமும் மாறும். அங்குப் பணியாற்ற திறமையானவர்கள் கிடைக்க மாட்டார்கள். குறைந்தபட்ச அறிவு நாணயம் அங்கு இருக்காது.

ஸ்ஞஸ்ஞஸ்ஞ

## அறிவின் போதாமை

“பிரச்சனையின் தீவிரம் குறித்த புரிதல் இல்லாதவர்களால் வெகு எளிதாக அறிவுரைகளைக் கூறிவிட முடியும்” Malcolm Forbes (1919 - 1990)

முட்புதருக்குள் சிக்க விட்ட சேலை போன்ற சமூகக் கூட்டு வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளை நெளிவு சுளிவு, வகை தொகை அறியாமல் பிடித்து இழுத்தால் அது மேன்மேலும் சிக்கிவிடும். விடுபட்டாலும் முட்களால் கீறப்பட்டு கிழிந்து கந்தலாக மட்டுமே வெளியில் வரும். இதுபோன்ற சூழல்களில் சகிப்புணர்வோடு இருக்கப் பழக வேண்டும். மிகவும் எச்சரிக்கையாகத் தம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். பிரச்சனையைத் தீவிரமாக ஆராயவும் முள் போன்ற சங்கடங்களைப் பொறுமையுடன் பிரித்தெடுக்க வேண்டும்.

தொலைவிலுள்ள நபர்களால் பிரச்சனையின் தீவிரத்தை முழுமையாக மதிப்பிட முடியாது. எந்த முன் யோசனையுமின்றி தீர்வுகளை மனம் போன போக்கில் பேசிக் கொண்டிருப்பர். பொருளற்ற தீர்வுகளைக் கேட்காமலேயே பரிந்துரைப்பர். பிறரின் கருத்து அறியாமல் எடுக்கப்படும் முன்னெடுப்புகள் விருப்பத்தக்கவை அல்ல. கூட்டு வாழ்வில் தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கக் கூடாது. சமூக வாழ்வில் பிறரின் செல்வாக்கை கணக்கிலெடுக்க வேண்டியுள்ளது. பொது விருப்பங்களைக் கண்டுகொள்ளாமல் புறந்தள்ளிவிட முடியாது,

எல்லா வாய்ப்புகளையும் காரணிகளையும் கணக்கிலெடுத்துப் பொறுமையாக தனக்குரிய வாய்ப்புள்ள நேரம் எதுவெனக் காத்திருந்து செயல்பட வேண்டும். மோதல் போக்கை அறவே தவிர்க்க வேண்டும்.

சிக்கலான விவகாரங்களில் சமூக எதார்த்தங்களுக்கேற்ப நூறுமுறை சிந்தித்துத் தீர்வுகளை முன்மொழிய வேண்டும். ஒருவேளை அந்தத் தீர்வுகள் பிறரை நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கக் கூடும். சமூக வாழ்வின் நெருக்கடிகளை அறிந்த ஒருவர் எச்சரிக்கையுணர்வுடன் இருப்பார். அவ்வாறு இல்லாதவர்களின் மூளை தீர்வுகளின் தொழிற்சாலையாகி விடும்.

## நமது பாத்திரம்

தேசத்தந்தை காந்தியடிகளைக் குறித்து ஒரு திரைப்படத்தை எடுக்க வேண்டுமென இருபதாண்டுகளாக எண்ணிக் கொண்டிருந்தனர். எந்தத் தயாரிப்பாளரும் காந்தி பற்றிய சினிமா எடுக்க முன்வரவில்லை. அது வெறும் ஆவணப்படமாக எஞ்சிவிடும். வணிக வெற்றி சாத்தியமில்லை என பயந்ததால் எதுவும் சரியானபடி அமையவில்லை. இறுதியில் 13 மில்லியன் பவுண்ட் முதலீட்டில் Richard Attenborough (1923 - 2014) இயக்கிய திரைப்படத்தில் Ben Kingsley (பிறப்பு 1943) மையப் பாத்திரத்தில் நடித்தார். பலரின் கணிப்புகளை மீறி இப்படம் எட்டு ஆஸ்கர் விருதுகளை வாங்கி மிகப் பெரும் இலாபத்தையும் மக்களின் ஏற்பையும் பெற்றுக் கொண்டது.

Ben Kingsleyயின் தந்தை இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து ஆங்கிலேயப் பெண்மணியை மணந்துகொண்டவர். அவரது இயற்பெயர் Krishna Bhanji என்பது. Ben Kingsley அவர்களின் உடல்வாகு காந்தியடிகலுடன் கொண்டிருந்த பொருத்தப்பாட்டின்

காரணமாக இப்படத்தின் முக்கிய கதாபாத்திரத்திற்கு தெரிவு செய்யப்பட்டார். அதன்பிறகு உடல்மொழி, நடை, பேச்சு என காந்தியடிகள் எப்படி இருந்தாரோ அப்படியே அச்சு அசலாகக் காட்சி தரக் கூடுதல் பயிற்சி எடுத்தார் Ben Kingsley.

படப்பிடிப்பு தொடங்குவதற்குப் பல மாதங்களுக்கு முன்பே Ben Kingsley இந்தியா வந்துவிட்டார். காந்தியடிகள் வழுக்கைத் தலையர் என்பதால் Ben Kingsleyயும் மொட்டை அடித்துக் கொண்டார். இயற்கையாக கனமான உடலைக் கொண்டிருந்த Ben Kingsley *20* கிலோவை உடற்பயிற்சி செய்து குறைத்துக் கொண்டார். Ben Kingsley வெண்ணிறம், காந்தியடிகளோ மாநிறம். ஆகவே வெயிலில் நாட்கணக்கில் நின்று கறுத்துப் போய் காந்தியடிகள் கொண்டிருந்த கறுநிறத்திற்கேற்ப மாறிக் கொண்டார். திரைப்படத்தின் முழு கதையையும் ஆரம்பம் முதல் இறுதிவரை மனனம் செய்துகொண்டார். அவர் தன் அறை முழுவதையும் காந்தியடிகளின் புகைப்படங்களை ஒட்டி வைத்துக் கொண்டார். ஐந்து மணிநேரங்கள் ஓடக்கூடிய காந்தியடிகள் பற்றிய ஆவணப்படத்தை அடிக்கடி போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார். மேற்கத்தியர்கள் தரையில் கால்களை மடக்கி உட்காரும் பழக்கம் இல்லாதவர்கள், Ben Kingsleyயும் இதற்கு முன்பு அப்படி உட்கார்ந்ததில்லை. ஆனால் தினமும் இரண்டு மணிநேரங்கள் யோகாசனம் செய்து தரையில் உட்கார பயிற்சி எடுத்துக் கொண்டார். ராட்டினம் சுற்றுவதையும் கற்றுக் கொண்டார். திரைப் படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பே ஆண்டுக் கணக்கில் Ben Kingsley இவ்வளவு சிரமப்பட்டார். திரைப்படத்தில் தத்ரூபமாக நடிக்க இந்த கஷ்டங்கள் அவருக்கு உதவிகரமாக இருந்தன. News Week 13-12-1982

Ben Kingsley முக்கிய வேடத்தில் நடிக்க வேண்டியிருந்தது. இதனால் இவ்வளவு கடின உழைப்பை மேற்கொண்டார். இந்தக் கடின முயற்சிகளுக்குப் பிறகே பெரும் புகழும், பணமும் Ben Kingsley-யிற்குக் கிடைத்தது. முஸ்லிம்கள் தங்களை சிறந்த சமூகம் என்று கூறிக் கொள்கின்றனர். அது உண்மையெனில் சமகால வரலாற்றின் செல்திசையில் முக்கியப் பங்களிப்பை அளித்தாக வேண்டும். அதற்காக எந்த முயற்சியும் பயிற்சியும் கஷ்டமும் படாமல் சிறந்த சமூகம் என்கிற பாத்திரத்தில் நடித்துவிட முடியுமா, என்ன?

## இணைந்து / ஒன்றுகூடி பணிபுரிதல்

தேன் சேகரிப்பு மிகவும் கடின உழைப்புக்குரிய பணியாகும். ஏராளமான தேனீக்கள் இரவும் பகலும் செய்யும் கூட்டு முயற்சியில் சேகரிக்கப்படுகிறது. ஒற்றைப் பூவில் தேன் மிகவும் குறைந்த அளவே இருக்கும். எண்ணற்ற பூக்களிலிருந்து எடுக்கப்படும் தேன் இவ்வாறு தேனடையில் சேமிக்கப்படுகிறது.

ஒரு பவுண்ட் தேன் தயாரிக்க மூன்று இலட்சம் மைல் அளவுக்குத் தேனீக்கள் பறக்கின்றன. தேனீக்கள் ஆயுள் ஒரு சில மாதங்களே. ஆகவே தனியொரு தேனீ இவ்வளவு தேனை சேகரித்துவிட முடியாது. தன் முழு ஆயுளில் எந்தவொரு தேனீக்கும் இது சாத்தியமில்லை.

இந்தப் பிரச்சனைக்குரிய தீர்வை தேனீக்கள் கண்டுபிடித்துள்ளன. ஒரு தேனீயால் முடியாத செயலை இலட்சக் கணக்கான தேனீக்கள் கூட்டு உழைப்பால் இதைச் சாத்தியப்படுத்துகின்றன, இதற்காகக் கஷ்டத்தை எதிர்கொள்கின்றன. தனியொரு தேனீ இவ்வளவு தொலைவு தூரத்தைத் தன் வாழ்நாளில் கடந்துவிட முடியாது. பெரும் எண்ணிக்கையில் பூரசத்தை உறிஞ்சவும் இயலாது. ஒரு தேனீயால் முடியாததை இலட்சக் கணக்கான தேனீக்கள் தமது கூட்டுச் செயல்பாட்டால் நடத்திக் காட்டுவதைக் காண்கிறோம்.

தேன் தயாரிக்க ஏன் இவ்வளவு சிக்கலான வேலைப்பளு தேவைப்படுகிறது. இது இயற்கையின் ஏற்பாடு தேனாறை இறைவனால் அமைத்திருக்க முடியும். தண்ணீரும் பெட்ரோலும் அப்படித்தானே கடலாக கொட்டிக் கிடக்கிறது. தேன் சேமிப்பைக் கடினமான மலைக்க வைக்கும் இயற்கை ஒழுங்கில் வைத்திருக்கிறான், இறைவன்.

சிக்கலான இந்தத் தேன் சேமிப்பு முறையில் மனித குலத்திற்கு நிறைய படிப்பினைகள் உள்ளன. தனிப்பட்ட உழைப்பின் மூலம் சில பணிகளை மனிதனால் முடித்துவிட முடியும். வேறு சில பணிகள் உள்ளன. தனியொரு ஆளாக அல்லது ஒரு சிலரால் மட்டும் முடிக்கக் கூடியவை அல்ல.

அந்தப் பணிகளை செய்துமுடிக்க உள்ள ஒரே வழி. தேனீயிடம் காணப்படுவதைப் போல பெரும் எண்ணிக்கையில் ஒன்றிணைந்து பணிபுரிதலே தனி நபர்களின் தியாகம் கூட்டுச் செயல்பாட்டில் தரப்படும் விலையாக இருக்கும். ஒருவருக்கொருவர் பொறுமையை கைக்கொண்டு விட்டுக் கொடுத்து பிறரின் தேவையில் நம் சொந்தத் தேவையைப் பின்னுக்கு தள்ளி தான் விரும்பியதைப் பிறருக்காகச்

சிந்தித்து அயலான் நலன் நாடுதல் போன்றவையே அது. தனி நபர்களின் தியாகம் இன்றி குவிமுக முயற்சி கைக்கூடாது. கூட்டுக் கச்சேரிக்கு வாய்ப்பு அமையாது.

## தாமாக அறிந்து கொள்ளல்

தீப்பற்ற வைக்கும் lighter-ம், matchesவும் (தீப்பெட்டி) இந்திய கிராமப் புறங்களில் அண்மைக் காலத்தில்தான் புழக்கத்தில் வந்தது. ஐம்பதாண்டுகளுக்கு முன்பு அடுப்பைப் பற்ற வைக்க அண்டை வீடுகளில் எஞ்சியிருக்கும் தீக்கங்குகளின் அணையப்படாத சாம்பலிலிருந்து மீண்டும் நெருப்பை எடுத்து கொள்ளும் வழக்கம் இருந்தது. ஒருமுறை ஒரு பெண் அண்டை வீட்டிற்குச் சென்று நெருப்பு உள்ளதா எனக் கேட்டார். ஆம் சகோதரி, அடுப்பின் மீதுள்ளது என்றார். வயது மூப்பின் காரணமாகக் காது சற்று மந்தம் வேறு. ஆனால் நிறைய பேருக்குக் கண், காது, மூக்கு செயல்பட்டும் அதைப் பயன்படுத்தும் வழக்கமில்லை என்பது வேறு விஷயம்.

இந்திய ராணுவத்தில் பணியாற்றிய J.N. Chowdhury 1971ஆம் ஆண்டு தேசப் பாதுகாப்பு குறித்து கருத்தரங்கம் ஒன்றில் பேசினார். உள்நாட்டுப் பாதுகாப்பில் உளவுத் துறையின் பங்கு மிக முக்கியமானது என்று அதில் அவர் குறிப்பிட்டிருந்தார். எதிரிகள் நிகழ்த்த விரும்பும் சேதங்கள் குறித்து முன்கூட்டி அறிந்துகொள்வது போரில் வெற்றி தோல்வியை முடிவு செய்யும். ஆகவே அதைக் குறித்து அறிந்து வைத்திருப்பது அவசியம். உளவுத் துறை எச்சரிக்கையுடன் இல்லாவிட்டால் அபாயகரமானது. அது குறித்த சுவையான நிகழ்வு ஒன்றை அவர் நினைவு கூர்ந்தார். 1961ஆம் ஆண்டு போர்ச்சுகீசியர்கள் கோவாவைக் கைப்பற்ற முனைந்தனர். அப்பொழுது இந்திய ராணுவத்தின் Indian Southern Command தாக்குதலை நடத்தியது. போர்ச்சுக்கீசியர்களிடம் டாங்கி கவச வாகனம் உள்ளதா என wirelessல் கேட்டனர். டாங்கி சரியாக உள்ளது, ஆனால் 15 ஆயிரம் காலன் தண்ணீர் மட்டுமே கொள்ளளவு என பதில் வந்தது. கேள்வி tank கவச வாகனம் குறித்து இருந்ததை மாற்றி water tank தண்ணீர் தொட்டி என மறுமுனையில் இருந்தவர்கள் புரிந்துகொண்டது எவ்வளவு அபத்தம்.

ஒவ்வொருவருக்கும் அவருக்கு ஒதுக்கப்பட்ட பணியைச் செவ்வனே செய்து வந்தால் மட்டுமே கூட்டு வாழ்க்கைக்குப் பொருள் இருக்கமுடியும். மனநிறைவான முறையில் அனைவரும் பணிபுரிந்து நல்லமுடிவை எட்ட வழியேற்படும். அதில் ஒருவர்

செய்யும் சிறு தவறு முழு திட்டத்தையும் சேதப்படுத்தி விடும். ஒருவரின் வேலையை பிறர் செய்ய முடியாது.

மற்றபடி எல்லா வேலைகளையும் சொல்லிக் கொடுக்கவும் முடியாது. நிறைய விஷயங்களை தொடர்புள்ளவர்கள் தாமாகவே அறிந்து வைத்திருக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். சொல்லப்படா விட்டாலும் அறிந்து வைத்திருக்க வேண்டும். எந்தவொரு விஷயத்திலும் அவரவருக்குரிய பங்கைச் செலுத்த வேண்டும். அல்லது கூட்டான பங்களிப்பில் தமக்கென ஒதுக்கப்பட்ட சிறிய பணியைச் செய்து முடிக்க வேண்டும்.

ஆகவே ஒரு போர் வீரனிடம் தன் சக வீரன் "டாங்கி"யைக் குறித்துக் கேட்கும்போது அதை விளக்கமாகக் கேட்காவிட்டாலும் அது போர் டாங்கியைக் குறித்தது என அறிந்து வைத்திருக்க வேண்டும். தண்ணீர் டாங்கி குடிநீர் தொட்டி என நினைப்பது அறிவீனம்.

ஸஓஸஓஸஓ

## உண்மையான தீர்வு

"நூறு முறை ஊடல் கொண்டேன், நூறு முறை அன்பு செலுத்தினேன், ஆனால் அவள் என் சண்டையை, நேசத்தை எதையுமே அறிந்து கொள்ளவில்லை; இவை அனைத்தையும் எனக்குள் நானே செய்து வந்தேன்" இது ஒரு பாரசீகப் பழமொழி.

நிஜவாழ்விலும் இக்கவிதையின் பொருத்தப்பாடு முக்கியமானது, வாழ்க்கையை எதிர்கொள்ளும்போது சந்திக்கும் இடர்களைத் தமக்குள் புதைத்துக் கொள்வதை இக்கவிதை பேசுகிறது.

பெரிய இலக்கு எதையும் தனி மனிதர்களால் அடைய முடிவதில்லை. பலரும் கூடி ஒன்றிணைந்து பணியாற்றும்போது பெரிய செயல் கூடிவிடும். அதேநேரம் கூட்டாகச் செயல்படும்போது பிரச்சனைகளும், கருத்து வேறுபாடுகளும் எழுவது இயல்பு. முறையீடுகளுக்கான வாய்ப்புகள் தோன்றுகின்றன.

(பாகப்) பிரிவினை (இலாபப்) பங்கீடு போன்றவை சிலருக்குக் குறைவாகக் கிடைக்கும், வேறு சிலருக்கு நிறைவாகக் கிடைக்கும். சிலர் உயர் பதவிகளைப் பெறும்போது மற்ற சிலர் சிறிய பொறுப்புகளுடன் திருப்தியடைய வேண்டியிருக்கும், இதன் விளைவாகக் கோபப்படுவதால் நம் மனக்குறை சக மனிதர்களிடம் பொறாமை, பகைமை, பழியுணர்வு கொள்ள வைக்கிறது.

தன் மனதில் எழும் கீழ்மையான குணங்களை மருந்து தடவி ஆறப் போட வேண்டும். இவற்றைத் தன்னளவில் சீர்செய்து கொள்ள வழிகாண வேண்டும். முடிந்தவரை மறப்போம், மன்னிப்போம் என்பதைக் கடைபிடிக்க வேண்டும். அதன் பிறகே ஒன்றுகூடி செயல்பட வழி கிடைக்கும்.

இரண்டாம் கலீஃபா உமர், இஸ்லாமிய படைத் தளபதி காலித் இப்னு வலீதைப் பதவி நீக்கம் செய்துவிட்டார். இது காலிதிடம் மனக் கசப்பையும் எதிர்வினையையும் தோற்றுவித்தது. ஆனால் உடனடியாக தமக்குத் தாமே சமாதானம் செய்து கொண்டார். "காலித்! நீ இறைவனுக்காக போராடுகிறாய்! கூலியும் அவனிடமிருந்தே கிடைக்கும். பிறகு நீ ஏன் உமருடன் கோபித்துக் கொள்கிறாய் என்று தனக்குத் தானே கூறிக் கொண்டார்.

## ஒருங்கிணைந்த பணி

முன்பொரு காலத்தில் ரயில் வண்டிகளில் நீராவி என்ஜின் பயன்படுத்தப்பட்டு வந்தது. நிலக்கரி தணலின் சூடு எப்பொழுதும் இருந்தபடியே டிரைவர் பணியாற்றிக் கொண்டிருப்பார். அதேபோல தனி நபர்கள் பொதுச் சமூகத்தில் காணப்படும் கோபத்தை எதிர்கொள்ளும்போது அதைச் சகிக்க வேண்டியிருக்கும்.

டிரைவர் இன்ஜினை இயக்கிக் கொண்டிருக்கும் அதேநேரம் நெருப்பிலிருந்து விலகி நின்று ரயிலைக் கட்டுப்படுத்தி வழிநடத்துகிறார். அதேபோல மனிதன் சமுகத்தில் காணப்படும் விரும்பத்தகாத, பாதகமான சூழ்நிலைகளிலிருந்து தப்பித்துத் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். சமூகம் எப்பொழுதும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக இருக்க எதிர்ப்பாளர்கள், ஊறு விளைவிப்பவர்கள் ஆகியோரை அரவணைக்கத் தெரிய வேண்டும். கருத்து வேறுபாடு எழாத இடம் எங்கும் இல்லை. மனக்குறையும், மனக்கசப்பும் அறவே இல்லாத சமூகம் என்று எதுவுமில்லை. எல்லாமே வெகு இயல்பாக இருக்க வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பது நடைமுறையில் சாத்தியமில்லை.

அப்படியானால் மக்கள் ஒன்றாக எப்படி வாழ்வது, பணிபுரிவது? தனிநபர்களிடம் எழும் கருத்து வேறுபாடுகளை அவ்வப்போது சீர்படுத்திக் கொள்ள வேண்டும். உடன்படவும் மாறுபடவும் அந்தச் சமூகத்தில் இடம் இருக்க வேண்டும். மென்மையாக, பகுத்தறிவுடன் நடந்து கொள்ளாவிட்டால் சங்கடங்களிலிருந்து வெளியேறும் வழியைக் காணவே முடியாது. பிறருடனான பொதுச்

சமூகத்துடனான தனிநபர் கடமைகள் என்ன என்பதை அறிந்து வைத்திருப்பது அவசியம்.

இது சாத்தியமில்லை என்பது போலத் தோன்றலாம்! தனி நபர்கள் தங்களுக்குள் இயல்பாக இதைத் தொடங்கும்போது விஷயங்கள் இயல்பானவைகளாக மாறத் தொடங்கும். குடும்பங்களில் கருத்து வேறுபாடுகள் தோன்றுவது சாதாரண விஷயம். அன்பும் உறவின் பிணைப்பும் மேலோங்கினால் குறைகள் தானாகப் புதைந்து போகும். குடும்பம் இப்படித்தான் கட்டி வைக்கப்படுகிறது. உடன்படவும் மாறுபடவும் நடைமுறைப்படுத்தவும் குடும்பமே சிறந்த இடமாகும்.

கொடுப்பதும், பெறுவதும் உள்ளூறைப் பண்பாக மாறுவது குடும்பத்தின் அடிநாதமாகும். பிறகு அது படிப்படியாகச் சமூகத்தில் தாக்கம் செலுத்தும். சக மனிதர்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு இருந்தால் ஆரோக்கியமான சூழலாக அது மாறும். உணர்வுப்பூர்வமான பிணைப்புச் சிதைவிலிருந்து தடுத்து நிறுத்தும். பகுத்தறிவு பூர்வமான ஒன்றிணைவு சமூகக் கட்டுமானத்தின் அடிப்படை நற்குணத்தால் மட்டுமே நாட்டை, சமூகத்தை உச்சிக்குக் கொண்டு செல்லும்.

ஓஓஓ

## நற்குணத்தின் முக்கியத்துவம்

Toyoto Motor Company ஜப்பானில் காரை தயாரித்து வருகிறது. கடந்த முப்பதாண்டுகளாக அது ஒரேயொரு நாளையும் வீணாக்காமல் உற்பத்தியை நிறுத்தியதே இல்லை. இது வெறும் ஒரு எடுத்துக்காட்டு மட்டுமே. ஜப்பான் எப்படி பொருளாதார வல்லரசாக உள்ளது, வளர்ச்சி காண்கிறது என்பதற்கான பதில் இதுவே. அமெரிக்காவின் General Motors, Ford Motor Company போன்றவற்றின் சராசரி கார் உற்பத்தி 11 கார்கள் என்கிற நிலையில் Toyoto-வோ 33 கார்களைத் தயாரித்து விடுகிறது.

இவ்வளவு பெரிய மேம்பட்ட உற்பத்தி வேறுபாட்டிற்கு ஜப்பானிய தொழிலாளர்களே காரணம். இவர்களின் ஆக்கப்பூர்வ செயல்பாடு ஜப்பானின் மிகப் பெரிய சொத்து. நிலக்கரி, இரும்பு, பெட்ரோல் போன்ற கனிமங்கள் எதுவுமே ஜப்பானில் இயற்கையாகக் கிடைப்பதில்லை, அல்லது மிக மிகக் குறைவான அளவே அங்குள்ளது. இருந்தபோதிலும் பிற நாடுகளைவிட ஜப்பான் இக்குறைகளை எதிர்கொண்டு வெற்றி பெற்றுள்ளது. பொருளாதார முன்னேற்றத்தில் முன்னணி வகிக்கிறது. “ஜப்பானியர்களின் இந்த

தேசியப் பண்பே அந்த நாட்டு தொழிலாளிகளிடம் மிகைத்துள்ளது" என்று Hindustan Times (August 25, 1981) ஏட்டில் எழுதியுள்ளது. நாடு, கம்பெனி, குடும்பம் ஆகியவற்றின் நலனுக்காக தற்காலிகப் பின்னடைவுகளை புறக்கணிப்பது இதில் முதன்மையாக நிற்கிறது. ஒத்துழைப்பு, அனுசரித்துப் போகும் தன்மை அவர்களை உற்சாகம் கொள்ளச் செய்கிறது.

இந்த இயல்பு தனி மனிதர்களிடம் வளர்த்தெடுக்கப்பட்டால் எந்தவொரு நாடும், சமூகமும் வளர்ச்சியில் தனி மனிதர்களின் வகிபாகம் செங்கல்லுக்கு ஈடானது. சுடப்படாத வெறும் களிமண் சுவர் உறுதியாக இருக்காது. சிறு மழை, சூறைக்காற்று, நிலநடுக்கத்தின் சிறு குலுக்கல் இக்கட்டிடத்தை அசைத்துப் போட்டுவிடும். அதே நேரம் சுடப்பட்ட செங்கல் மீது பெருவெள்ளம் கூட ஒன்றும் செய்யாது.

நற்குணம் கூட சுடப்பட்ட செங்கல்லைப் போன்றது. இதனால் சமூகமும் நாடும் உறுதியாக நிலைத்து நிற்கும், முன்னேற்றம் அடையும். ஆகவே நற்பண்பை வளர்த்துக் கொள்வது எல்லா விதத்திலும் முக்கியமானது.

## உறுதியான நாட்டைக் கட்டமைத்தல்

இந்தியத் தொழிலதிபர் ஒருவர் 1965ஆம் ஆண்டு மேற்கு ஜெர்மனி சென்றிருந்தார். அங்கு ஒரு தொழிற்சாலைக்குள் சென்று பார்க்கும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. அப்பொழுது அங்கிருந்த தொழிலாளியிடம் நின்று பேச்சுக் கொடுத்தார். ஆனால் அத்தொழிலாளி இந்த விருந்தினரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. எக்கேள்விக்கும் பதிலளிக்கவில்லை. இது இந்தியப் பயணிக்கு வியப்பளித்தது.

சிறிது நேரம் கழித்து உணவு இடைவேளைக்கான மணி ஒலித்தது. தொழிலாளிகள் உணவு கூடம் நோக்கி விரைந்தனர். அப்பொழுது வரை மௌனமாக இருந்த அந்தக் குறிப்பிட்ட தொழிலாளி இந்தியரிடம் தாமாகவே வந்தார். கைகுலுக்கிவிட்டு "உங்கள் நாட்டில் தொழிலாளிகள் பணியிலிருக்கும் போது பேசுவீர்களா?" என்று பணிவாக கேட்டார். "ஒருவேளை தங்களின் கேள்விக்கு நான் உடனடியாக பதிலளித்திருந்தால் நேரம் செலவாகியிருக்கும். அது தொழிற்சாலைக்கு, இழப்பு அல்லவா? நாம் நம் நாட்டிற்கு இலாபம் ஈட்டித் தர இங்கு பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறோம். ஆகவேதான் நேரத்தை வீணடிக்கவில்லை" என்றார்.

இதுபோன்ற பண்பு நலன்களே மேற்கத்திய நாடுகளின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் காரணம். நேசநாடுகள் இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியை முற்றாக இராணுவ ரீதியில் தோற்கடித்து இருந்தது. வெறும் 20/25 ஆண்டுகளில் ஜெர்மனி மீண்டும் முன்பைவிட வலுவுடன் எழுந்து நின்றது. இதற்கான காரணம் முன்னேற்றத்திற்கான வேட்கை, முனைப்பு ஒவ்வொரு ஜெர்மனியரிடமும் இருப்பதுதான். நாட்டுப்பற்றுடன் தனக்குரிய கடமையை நேரம் தவறாமல் செய்துவருவது ஒரு குடிமகனாக நாட்டு நலனுக்காகத் தன்னை ஒப்புக் கொடுப்பதும் அதற்குக் கட்டுப்படுவது முதன்மை எனக் கருதுவதாலும் தான் ஒவ்வொரு தொழிலாளியும் சம்பளத்துக்காகப் பணிபுரிந்தாலும் நாடு முக்கியம் என்கின்றனர்.

சுயநலனும், நாட்டு நலனும் முரண்படும்போது தன் விருப்பத்தைத் துறந்துவிட்டுப் பொதுவான தேசநலனுக்கு முன்னுரிமை தருகிறான். மக்களே நாட்டின் அடிப்படையான பலம். ஒரு நாடு வளர்ச்சியடைவதும், வீழ்ச்சியடைவதும் குடிமக்களின் பங்களிப்பில் உள்ளது. நாடு என்பது மக்களைச் சார்ந்திருப்பது. ஆகவே குடிமகன் சிறந்து விளங்குவதன் மூலம் நாடு வலுவடையும். குடிமகன் வீழ்வதன் மூலம் நாடும் தாழ்வுறும். நாடு என்பது இயந்திரம் போன்றது. இதர உதிரி பாகங்கள் நல்ல நிலையில் இருந்தால் மட்டுமே இயந்திரம் நன்றாக வேலை செய்யும். உதிரி பாகங்களை ஒழுங்காக பிணைத்து எண்ணையிட்டுப் பராமரிக்க வேண்டும். தேசக் கட்டுமானம் என்பது அடிப்படையில் மனித ஆளுமையைக் கட்டமைப்பது. தன் மனித இயல்புகள் சரியானபடி இல்லாமல் போனால் அந்தச் சமூகம் சரிவர இயங்காது. சுயநலமற்ற அர்ப்பணிப்பு நாட்டின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் முன்நிபந்தனை. தனி நபர்களைச் சீர்திருத்தாமல் நாடு சிறப்புறாது. அவை வெறுங்கனவாகக் கற்பனையில் மட்டுமே எஞ்சும்.

## ஆக்கப்பூர்வமான நடத்தை

புதுடில்லிவாசி Dr. Abdul Jaleel 1970ஆம் ஆண்டு ஜப்பான் சென்று ஆறுமாத காலம் தங்கியிருந்தார். பிற்காலத்தில் (14-10-1984 அன்று) என்னிடம் அதை நினைவுகூர்ந்தார். டோக்கியோவில் தங்கியிருந்தபோது 15 நிமிட பயண தூரத்தில் புறநகர் இரயிலில் அவர் பயணம் செய்வது வழக்கம். அந்தக் குறிப்பிட்ட நேரம் கழிந்த பின்பும் அவர் இறங்க வேண்டிய இரயில் நிலையம் வரவில்லை. அதனால் சற்று பதற்றம் அடைந்தார். வண்டி நின்றபோது இறங்கினார்.

அது அவருக்கான இரயில் நிலையம் அல்ல. வேறு இரயிலில் ஏறிவிட்டதாகச் சந்தேகம் எழுந்தது. அருகிலிருந்த ஜப்பானிய இளைஞரிடம் பேசி உதவி கேட்டார். இவருக்கு ஜப்பானிய மொழி தெரியாது. அந்த இளைஞருக்கு ஆங்கிலம் தெரியாது.

Dr. Abdul Jaleel இறங்க வேண்டிய இடத்தின் பெயரை எழுதிக் காட்டியபோது அந்த நிலையம் ஏற்கனவே கடந்து விட்டதாகத் தெரியவந்தது. உடனே அந்த ஜப்பானிய இளைஞர் இரயிலில் இருந்த அவசரச் சங்கிலியைப் பிடித்து வண்டியை நிறுத்தச் செய்தார். எதிர் திசையில் இருந்த நடைமேடைக்கு இந்திய மருத்துவரை இழுத்துச் சென்று வேறொரு இரயிலில் ஏற்றி கூடவே அவரும் இணைந்து கொண்டார். இரயிலில் இருவரும் பயணித்தனர். உரிய இடம் வந்ததும் இந்தியரை இறங்கச் செய்து இந்த ஜப்பானிய இளைஞர் மீண்டும் வேறொரு இரயில் பிடித்து தன் பயணத்தைத் தொடர்ந்தார். இத்தனைக்கும் இருவரும் ஒரு சொல்ப் பேசிக் கொள்ளவில்லை. மொழிச் சிக்கல் இருந்தபோதும் குறிப்பிட்ட இரயில் நிலையத்துக்கு போய்ச் சேர்ந்தனர்.

அதேபோல இந்திய மருத்துவர் வேறொரு நாளில் டோக்கியோ நகரில் வெறுமனே நடைப்பயிற்சி செய்து கொண்டிருந்தபோது ஒரு நிகழ்வு. இரண்டு ஜப்பானியர்கள் இரண்டு கார்களுடன் எதிரும் புதிருமாகச் சிறிதாக உரசிக் கொண்டன. இருவரும் வண்டியைவிட்டு இறங்கி தலைதாழ்த்தி “என் மீது தவறு உள்ளது, மன்னிக்கவும்” என்றனர். எதிரில் இருந்த ஜப்பானியரும் இதையே கூறினார். இதன் பெயர் ஆக்கப்பூர்வ சிந்தனை. இந்த குணமே நாட்டு வளர்ச்சியில் முக்கியக் காரணிகள். எதைப் பற்றியும் கவலைப்படாமல் சுயநலனுடன் இயங்கும்போது வெற்றியடையவும் முடியாது. அவர்கள் நாட்டு வளர்ச்சியில் எந்தப் பங்களிப்பையும் அளிக்க முடியாது.

ஐப்பானிய அனுபவம்

## ஜப்பானிய அனுபவம்

இரண்டாம் உலகப் போர் (1940-44) நடைபெற்றதில் ஆகஸ்ட் 1945 ஆம் ஆண்டு அமெரிக்கா ஜப்பானின் மீது அணுகுண்டை வீசியது. இதனால் இவை இரண்டும் தரைமட்டமாயின. ஆனால் அமெரிக்கா மீது ஜப்பானியர்களுக்கு முறையீடு, கெட்ட எண்ணம் எதுவும் ஏற்படவில்லை என்பது வியப்பான செய்தி. ஜப்பானியர்களின் முதல் நடவடிக்கைக்கு எதிர்வினையே அமெரிக்கா செய்தது என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். இந்த நடைமுறை அறிவு

ஜப்பானியர்களை மிக மோசமான சூழ்நிலையிலிருந்து விரைவில் வெளிக் கொணர்ந்தது. வளர்ச்சியின் பக்கம் திரும்பி நவீன காலத்தில் புதிய உச்சத்தைத் தொட்டது.

Hiroshima & Nagasaki நகரங்கள் மீது விழுந்த அணுகுண்டுகள் ஒரு சில நிமிடங்களில் 10 நிமிடங்களில் 10 மைல் சுற்றளவில் முழு நிலப்பரப்பையும் அடியோடு அழிந்தன. அங்கு குடியிருந்த மக்களை, விலங்குகளை, தாவரங்கள், செடிகொடிகள், மரங்கள், நீர்நிலைகள் என அனைத்தும் கருகின. பதினைந்து இலட்சம் பேர்கள் உடனடியாக கருகிப் போயினர். பத்தாயிரம் பேர் எந்தச் சுவடுமின்றி காற்றில் காணாமல் போயினர். பிறகு நெடிய அகலமான வீதிகள், பரந்த வீடுகள், பூங்காக்கள், தோட்டங்கள் என முழு நகரமும் புதிய பொலிவுடன் கட்டப்பட்டன. நவீனத்தின் சாயலை இது தன்னுள் கொண்டு பொலிவுற்றது. இரண்டாம் உலகப் போரின் கொடும் நினைவு என்றென்றும் இருக்க வேண்டும் என்பதற்காக ஒரேயொரு வீடுமட்டுமே அது இருந்த நிலையில் அப்படியே விட்டு வைக்கப்பட்டது.

“அணுகுண்டு வீச்சுக்குப் பிறகு அமெரிக்காவுக்கு எதிரான பிரச்சாரம் உலகம் முழுவதும் காணப்பட்டாலும் உண்மையில் பாதிப்புக்குள்ளான ஜப்பானில் அவ்வாறு எதுவும் காணப்படாதது வியப்பாக உள்ளது. இது தொடர்பாக ஜப்பானியர்களிடம் குஷ்வந்த் சிங் உரையாடினார். அதற்கு, “அமெரிக்காவின் பியர்ல் துறைமுகத்தை நாங்கள்தான் தாக்கினோம், ஏராளமானவர்கள் இதில் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங்கப்படும் என அமெரிக்கா முன்கூட்டியே எச்சரித்தது. நாம்தான் அதை அலட்சியப்படுத்தி இது வெறும் பூச்சாண்டி என நினைத்தோம். சொன்னபடி அவர்கள் ஒவ்வொரு செயலுக்கும் பதிலடி தந்தனர். கணக்கு சரியாகிவிட்டது. ஆகவே நாம் அதை மறப்போம், மன்னிப்போம் என்றெண்ணி நேசக்கரம் நீட்டினோம்” என்று ஒரு ஜப்பானியர் பதிலளித்தார்.

Khushwant Singh (1915 - 2014) பிரபல பத்திரிகையாளரும் சமூக விமர்சகருமான ஜப்பான் சென்று வந்த பிறகு எழுதிய பயணக் குறிப்பு (Hindustan Times, April 4, 1981)

இந்தக் கொடூர நிகழ்வில் இறந்துபோன அப்பாவிகளை நினைவுகூர பிரமாண்டமான அருங்காட்சியகம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இதில் பலியானவர்களின் புகைப்படங்கள், மாதிரி உருவங்கள், எஞ்சிய கலைப்பொருட்கள் ஆகியவற்றை காட்சிப்படுத்தியுள்ளனர். இதைப் பார்வையிடவும், அஞ்சலி செலுத்தவும் ஒவ்வோர் ஆண்டும் எழுபது இலட்சம் மக்கள் வந்து

செல்கின்றனர். பாமர ஜப்பானிய மக்களிடம் அமெரிக்க எதிர்ப்பு உளூறைந்த நிலையில் இருக்கிறது. ஆனால் அதைச் செயலளவில் மேலெழ அங்குள்ள சமூக அமைப்பு அனுமதிப்பதில்லை. இந்த வெறுப்பு பரப்புரை மூலம் இன்னுமொரு முறை வாழ்க்கையையும் எதிர்காலத்தையும் இழக்க ஜப்பானியர்கள் தயாரில்லை. ஜப்பானியர்களின் இந்த இயல்பு போர் முடிந்த பிறகு சிறிய காலகட்டத்திலேயே அதன் பாதிப்பிலிருந்து விடுபட்டுப் பெரும் வளர்ச்சியடைய உதவி செய்தது. அவர்களிடம் பெட்ரோல், எண்ணெய் வயல்கள், கனிம வளங்கள் இல்லை, இந்த இயற்கை மூலப் பொருட்கள் வெளிநாட்டிலிருந்தே இறக்குமதியாகின்றன. இருந்தபோதிலும் உலகச் சந்தையில் ஜப்பானியர்கள் கொடிகட்டிப் பறக்கின்றனர். தாம் தயாரிக்கும் பொருட்களை தரமிக்கதாக்கியதன் மூலம் இந்தச் சாதனை எட்டப்பட்டது.

Khushwant Singh ஜப்பானிய வழக்கறிஞர்களைப் பற்றியும் தகவல் சேகரித்தார். அப்பொழுது அத்தொழிலில் பெரிய வருமானம் இல்லை என்றும், நீதிமன்றத்தை மக்களும் பெரிய அளவில் நாடுவதில்லை, பிரச்சனைக்குரியவர்களுடன் சுமுகமாகப் பேசி சமாதனம் செய்து கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கிறார்.

பொறுப்பேற்கும் நடைமுறைப் பண்பால் கருத்து வேறுபாடு முடிவுக்கு வந்து விடுகிறது. பொதுவாகப் பிரச்சனையின்போது எதிர்தரப்பின் மீதே முழு தவறு எனக் குற்றஞ்சாட்டுவதால் மறுதரப்பும் பிடிவாதம் காட்டியபோது நிலைமை மோசமாகிறது. முதல் தரப்பு தன் தவறை ஏற்றுக்கொள்வதால் மறுதரப்பும் தன்னை மீளாய்வு செய்துகொள்ள முன்வருகிறது. அதனால் பிரச்சனை இயற்கையான முறையில் எளிதாக முடிந்து விடுகிறது. பல்வேரு வகையில் இந்த நடைமுறைப் பண்பு ஜப்பானியர்களுக்கு உதவியாக உள்ளது. அவர்கள் ஒருவரையொருவர் நம்புகின்றனர். இதனால் நேரமும் பணமும் மீதமாகிறது. சட்ட நடவடிக்கைகளுக்காக அமெரிக்காவில் ஐம்பதாயிரம் வழக்கறிஞர்கள் உள்ள நிலையில் ஜப்பானில் வெறுமனே பதினோரு ஆயிரம் பேர்களே உள்ளனர். ஜப்பானில் வழக்கறிஞர்களுக்கான தேவை மிகவும் குறைந்துள்ளதையே இது காட்டுகிறது.

ஜப்பானில் சொற்களுக்கான சட்டபூர்வ நிபுணர்களின் அவசியம் இல்லை. இந்தியா போன்ற நாடுகளில் வணிக ஒப்பந்தங்கள், கடிதங்கள் பொதுவாக நுணுக்கமான சட்ட அறிவு கொண்டவர்களால் இறுக்கமான சொற்களுடன், கறாரான விதிகளை அறிந்தவர்களால் வடிவமைக்கப்படுகின்றன. ஜப்பானில்

வியாபார நிறுவனங்கள் வெறும் வாய்ப் பேச்சைக்கூட மதித்துச் செயல்படுகின்றன. இப்பொழுது மேற்கத்திய நாடுகளின் முதலீட்டாளர்களிடமும் இது விரும்பப்படுகிறது.

தேவையற்ற சட்ட நிபந்தனைகளைத் தவிர்ப்பதால் வேலை செய்வதில் வேகம் அதிகரிக்கிறது. அத்தியாவசியமான இந்தப் பழக்கம் ஒற்றுமையை வளர்த்துள்ளது. இது நாட்டின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய ஆற்றலை சந்தேகமின்றி அளிக்கிறது. “தமக்குள் பிணங்க வேண்டாம், பணிகளை ஒன்றுகூடி செய்வோம்” என்பது ஜப்பானிய அறிஞர் ஒருவரின் கூற்று. (Hindustan Times, Apil 1981)

## சுய முயற்சியில்...

மனிதன் தன் திறமைகளில் வெறும் 10% மட்டுமே பயன்படுத்துகிறான். ஹார்வர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியர் William James “நாம் எதுவாக ஆக வேண்டுமோ அவ்வாறாக நாம் தயார் நிலையில் இல்லை என்பதே உண்மை” என்கிறார். அவர்கள் நமக்கான பங்கை அளிக்க மறுக்கின்றனர் என பிறரைக் குறை கூறுகிறோம். ஆனால் முதலில் நம்மை நாமே குற்றஞ்சாட்டிக் கொள்ள வேண்டும். பிறக்கும்போதே இயற்கையில் உலகில் நம் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் இயற்கை உறுதிப்படுத்தி வைத்திருந்ததைவிட பின்தங்கிய வாழ்க்கைக்கு நாம் பழகிக் கொண்டோம். ஒவ்வொரு மனிதனும் பிறரைப் பார்ப்பதைவிடுத்துத் தனக்குள் பார்க்கும் அகவழிப் பயணத்தை அறிந்து வைத்திருப்பது அவசியம். ஏனெனில் மனிதன் தனக்குத் தானே நண்பனும் எதிரியும் ஆவான். மனிதன் தனக்கு வெளியே நண்பனையும் எதிரியையும் காணமுடியாது. மனிதன் தனக்குரிய வாய்ப்புகளைக் கொண்டு வெற்றி பெறுவதைப் போல அந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தாதவன் உதவாக்கரையாகிறான்.

ஆகவே நாம் முயற்சி செய்து சரியான திசையில் இருப்பது அவசியம். தவறான முறையில் செய்யப்படும் உழைப்பு ஆற்றல்களை வீணடிப்பதாகும்.

வரலாற்றின் மத்திய காலம் வரைகூட இரும்பைத் தங்கமாக மாற்றி பணக்காரனாக மாற கடும் முயற்சியையும், ஆயுளின் பெரும்பகுதியையும் பலர் இழந்து வந்தனர். இறந்து போகும்வரை காத்திருந்து ஏமாந்தனர். ஆனால் இயற்கை தன்னுள் அதைவிட மதிப்புள்ளதை வைத்திருந்தது. கற்பனைக்கு அப்பாற்பட்ட வளமும், பணமும் அதில் கொட்டிக் கிடந்தது. இரும்பைப் பொன்னாக்க வேண்டியதில்லை. எடுத்துக்காட்டாக இரும்பை இயந்திரமாக

மாற்றத் தெரிந்தால் போதும். மூலப் பொருளாக அதிக உறுதியான கட்டிடமாக மாற்றும் கலை அவர்களுக்குத் தெரியாமல் போனது. இன்றைய நவீன காலத்தில் மேற்கத்திய நாடுகள் இந்த இரகசியத்தைக் கண்டுபிடித்தன. தன் ஆற்றலை இதற்காகக் குவியப்படுத்தி ஒருமுகமாக ஆய்வில் ஈடுபட்டனர். அதிநவீன தொழில்நுட்பம் கைவசமானது. தங்கம், வெள்ளியைவிட பெரிய அளவில் செல்வம் குவிந்தது. வெற்றிபெற முடிந்தது.

## ஒன்றன்பின் மற்றொன்று

இரண்டாம் உலகப் போர் (1939 - 45) என மொத்தம் ஐந்து ஆண்டுகள் நடந்ததில் முதல் இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தது. எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல், வெளிப்படையாக எதையும் தெரிவிக்காமல் அமெரிக்காவின் Pearl Harbour அருகில் அமைந்திருந்த பெரிய இராணுவ முகாம் மீது ஜப்பான் தாக்குதல் நடத்தியது. 07-12-1941 அன்று முழு துறைமுகமும் அழிந்து நாசமானது. அமெரிக்கா, இங்கிலாந்து ஆகியவை நேசநாடுகள் கூட்டணி அமைத்திருந்தது. அதுவரை ஜப்பானின் எதிரி நாடுகளுக்கு ஆயுத விற்பனை மட்டுமே செய்து வந்தது அமெரிக்கா. மனித குல வரலாற்றில் அணுகுண்டை ஆகஸ்ட் 1945இல் முதல் முதன்முறையாக அமெரிக்கா பயன்படுத்தியது. வீசப்பட்ட இந்த அணுகுண்டுகள் ஜப்பானின் பொருளாதார வலிமையை நிலைகுலைய வைத்துவிட்டது.

பியர்ல் துறைமுகத்தை தாக்கியது ஜப்பான் செய்த முட்டாள்தனம். சந்தேகமின்றி இராணுவ ரீதியாகவும் தவறான முடிவு. இதனால் தேவையில்லாமல் அமெரிக்கா இப்போரில் ஜப்பானுக்கு எதிரணியில் சேர காரணமானது. ஜப்பான் தவறு செய்திருந்தாலும் அது ஓர் உயிர்த் துடிப்பும், விழிப்புணர்வும் கொண்ட மக்கள் வாழும் நாடு. ஆகவே தன் குற்றத்தை உணர்ந்து கொள்ள அதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அமெரிக்க தாக்குதலை எதிர்த்து நிற்பது என்கிற இரண்டாம் தவறையும் ஜப்பான் செய்யவில்லை. மாறிய புதிய சூழ்நிலையை உடனடியாக அது உள்வாங்கிக் கொண்டது. இராணுவ படைப் பிரிவிலுள்ள வாய்ப்புகளை புறந்தள்ளிவிட்டுக் கல்வி, கனரகத் தொழிற்சாலை போன்ற துறைகளில் அது கவனம் செலுத்தத் தொடங்கியது.

இராணுவ நடவடிக்கையில், அரசியல் செயல்பாடுகளில் அமெரிக்காவின் மேலாண்மையை ஜப்பான் ஏற்றுக் கொண்டது. இதன் மூலம் ஜப்பானின் முழு கவனம் தொழில்துறை மீது அமைதி

வழியின் மீதும் நடைபோட்டது. வெறும் முப்பது ஆண்டுகளில் முன்பைவிட ஜப்பான் வீரியமுடன் எழுந்து நின்றது.

"இது Pearl Harbour"ன் வியப்பான முடிவு. வரலாற்றில் இவ்வாறான நிறைய நிகழ்வுகள் இருந்த போதும் Pearl Harbour அதில் முதன்மையானது" என்று விமர்சனப் பத்தியில் எழுதப்பட்டது. (Hindustan Times, November 30, 1981)

ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும், வெற்றிக்கான புதிய வாய்ப்புகள் இருந்து கொண்டே இருக்கும். வெறுப்புணர்வு கொள்ளாமல் புதியதாகத் தொடங்கியும், குறிப்பாக எதிர்மறை அணுகுமுறையைக் கைவிட்டு விட வேண்டும்.

Dale Carnegieயின் புகழ்பெற்ற நூலான "How to win Friends and Influence People?" என்கிற நூலை எழுதினார்.

"எதிரிகளை வெறுக்கும்போது நாம் நம் உறக்கத்தை, ஆற்றலைத் தருகிறோம். உணவின் மீதான நம் ஆசையை மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்கிற நோக்கத்தை அளிக்கிறோம். இதனால் நம் மீது ஆதிக்கம் செலுத்த எதிரியை அனுமதிக்கிறோம் என்பதை அறிந்து எதிரி ஆனந்த நடனம் ஆடுவான். நம் வெறுப்புணர்வு எதிரியைத் தாக்குவதேயில்லை. ஆனால் அது நம் இரவையும் பகலையும் நரகமாக மாற்றி விடுகின்றன.

பிறரை வெறுப்பது என்பது உண்மையில் சுயவெறுப்பு. நம் சொந்த மனத்தைக் காயப்படுத்தும் செயல். பிறர் மீது அன்பு கொள்வதால் நன்மையே விளையும் என்பது கண்கூடு.

## பீனிக்ஸ் பறவைப் போல்

இரண்டாம் உலகப் போர் (1939 - 45) நடந்தபோது அமெரிக்கா நேரடியாக அதில் ஈடுபடவில்லை. பிரிட்டன், அதன் நேச நாடுகளின் அணிக்கு ஆயுத வினியோகம், விற்பனை என மறைமுகமான ஆதரவு என்றளவிலேயே இருந்தது. இதனால் ஜப்பானின் பார்வையில் அமெரிக்காவும் எதிரியாகவே இருந்தது. 07-12-1941 இரகசிய நடவடிக்கையில் அமெரிக்காவின் Pearl Harbour-ன் மீது தாக்குதல் நடத்தி அதை முற்றிலும் அழித்தது. அமெரிக்க விமானப்படை பல்வேறு இடங்களில் சிதறி இருந்ததால் ஜப்பானால் அதை ஒன்றும் செய்ய முடியவில்லை. இவ்வாறாக அமெரிக்க விமானப் படை தப்பித்தது.

அதே காலகட்டத்தில் அமெரிக்கா தன் அணுகுண்டு சோதனைக்குத் தயாராகிக் கொண்டிருந்தது. நிபந்தனைகள் இல்லாமல் சரணடையும்படி அமெரிக்கா கட்டளையிட்டது. அணு ஆயுதம் அமெரிக்காவிடம் இருப்பது ஜப்பானுக்குத் தெரியாததால் அலட்சியமாக இருந்தது. 14-08-1945-இல் அமெரிக்கா அணுகுண்டுகளை Hiroshima, Nagasaki நகரங்கள் மீது போட்டது. இதனால் ஜப்பானின் இராணுவ வலிமை மீளமுடியாதபடி வீழ்ந்தது. அதன் பிறகு ஆயுதங்களைக் கீழே போடுவதாக ஜப்பான் கூறிவிட்டது.

Dauglas MacArthur (1880 - 1964) அமெரிக்கப் போர் வீரர்களுடன் ஜப்பானில் நுழைந்தார். ஜப்பான் முழுமையாக அமெரிக்கக் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. இருந்தபோதும் ஜப்பானியர்களிடம் போர் வெறி உள்ளுக்குள் இருந்தது. உடலில் ஆயுதங்களைக் கட்டிக் கொண்டு அமெரிக்க கப்பல்களின் நீராவி சிமிழுக்குள் குதித்து அதை அழித்தனர். Dauglas MacArthur முன்பு ஜப்பானியர்களிடம் இருந்த இந்தப் போர் வெறியை எப்படி அமைதியாக நேர்மறையாகத் தணிப்பது என சிந்தித்தார். ஜப்பான் 40 ஆண்டுகளுக்கு முன்பு சரணடைந்தபோது Dauglas MacArthur வெறுமனே இராணுவ ஆக்ரமிப்பு மட்டும் செய்யவில்லை. ஜப்பானை மறுகட்டமைப்பு செய்ய விரும்பினார். உங்களது மிகப் பெரிய விருப்பம் என்னவென்று அப்பொழுது அவரிடம் கேட்டிருந்தால் “ஜப்பானியர்களைப் போர் வெறியிலிருந்து மீட்பதும், பொருளாதார மேம்பாட்டில் கவனம் செலுத்துவதும்” என பதிலளித்திருப்பார். 26-08-1985 Times of India இதழில் Lewis என்பவர் எழுதினார்.

ஜப்பானியர்கள் அமெரிக்கர்களுக்கு எதிராகக் கொரில்லா போர் முறையை நடத்தும் சூழல் இருந்தது. ஆனால் ஜப்பான் தன் மீது வெற்றி கொண்ட அமெரிக்காவின் நிபந்தனையை உடனடியாக ஏற்றுக் கொண்டது. தன் ஆற்றலைப் போரிலிருந்து திசைமாற்றி ஆக்கப்பூர்வ முடிவை நோக்கி நகர்ந்தது. அமெரிக்காவுடன் நேரடியாக மோதலைக் கைவிட்டு, அறிவியல், தொழில்நுட்பம், கல்வி வளர்ச்சிப் பணிகளில் கவனம் செலுத்தியது. இதனால் ஜப்பானின் மிகப்பெரிய பொருளாதார வெற்றி சாத்தியமானது. 1971ஆம் ஆண்டு ஜப்பானின் பொருளாதார ஏற்றுமதி 6 பில்லியன் டாலராகும்.

“The 40 year Miracle” (நாற்பதாண்டு அற்புதங்கள்) என்கிற கட்டுரை ஒன்று வெளியானது. புராண இதிகாசங்களில் புனையப்பட்ட phoenix என்கிற கற்பனைப் பறவை தன்

சாம்பலிலிருந்து மீண்டு வருவது போல ஜப்பான் எழுந்து நிற்கும் என்று எழுதினார் (Newsweek, August 12, 1985)

ஜப்பான் 1971ஆம் ஆண்டு 6 பில்லியன் டாலருக்கு ஏற்றுமதி செய்திருந்தது. சொன்னபடி ஜப்பான் பொருளாதார வளர்ச்சி அடைந்துவிட்டது. அமெரிக்காவின் வணிகப் பற்றாக்குறை 45 பில்லியன் டாலர் வரை சென்றுவிடும் என அஞ்சப்படுகிறது. Times of India 14-09-1985

தன்னை ஆக்ரமித்த அமெரிக்காவைவிட ஜப்பானின் இந்த மகத்தான வெற்றிக்கு அடிப்படை தன் இயலாமையை ஜப்பான் ஏற்றுக்கொண்டதே காரணமாக இருக்க முடியும். நடைமுறை எதார்த்தத்தை ஏற்பதே வாழ்க்கையை வெற்றிக் கொள்வதன் இரகசியமாகும். ஆனால் நடைமுறை எதார்த்தத்தை மறுத்துக் கொண்டு வெற்றியைத் தேடி அலையும் ஏராளமானவர்கள் உள்ளனர் என்பதே வேடிக்கையான உண்மையாகும்.

## பொருளாதாரத் தாக்குதல்

பசிபிக் பெருங்கடலின் Hawaiiயில் Pearl Harbour அமைந்துள்ளது. அமெரிக்காவின் கடற்படைத் தளமாக அத்துறைமுகம் விளங்கி வந்தது. இது வலிமையானதாகவும், அளவில் பெரியதாகவும் இருந்தது. 07-12-1941-ஆம் தேதி ஜப்பானின் விமானப் படை இரண்டாம் உலகப் போரின்போது முன்னறிவிப்பு எதையும் கொடுக்காமல் திடீரென்று தாக்குதலை நடத்தியது. நூற்றுக்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள் இங்கு நங்கூரமிட்டு இருந்தது. அவற்றில் வெகு சில மட்டுமே தப்பித்தன. இதற்குப் பதிலடி கொடுக்கும் நோக்கத்தில் நேசநாடுகள் அணியில் சேர்ந்துகொண்டு போரில் அமெரிக்கா குதித்தது. அதுவரை வெறும் இராணுவ ஆயுதங்களை விற்பனை செய்யும் நாடாக மட்டுமே அமெரிக்கா விளங்கி வந்தது. ஜப்பானின் இந்தத் தாக்குதல் முட்டாள்தனமானது, தாம் செய்யக்கூடிய தவறுக்கான விளைவு எவ்வளவு மோசமாக இருக்கும் என 1945ஆம் ஆண்டு வரை ஜப்பான் உணரவேயில்லை. Hiroshima, Nagasaki பொருளாதார மையங்கள் மீது அமெரிக்கா வீசிய அணுகுண்டுகள் ஜப்பானை இராணுவ ரீதியாக வீழ்த்தியது. ஜப்பானின் தோல்வியுடன் இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது. அதிர்ச்சிகரமான இந்தப் புதிய சூழலை ஜப்பான் உடனடியாக உணர்ந்து கொண்டது. அதற்கேற்றபடி பழைய நிலைக்கும், அதைவிட மேம்பட்ட நிலைக்கும் திரும்ப வேண்டும் என்று

ஜப்பான் எடுத்த முடிவு வியப்பானது. இரண்டாம் உலகப் போருக்கு முன்பு வரை ஆயுதங்கள் மீது ஜப்பான் நம்பிக்கை வைத்திருந்தது. ஆனால் போருக்குப் பிறகு, அதில் கண்ட படுதோல்விக்குப் பிறகு சுயவிருப்பத்தின் பேரில் ஆயுதங்களைக் கையளித்தது. அமைதியான வழியில் புதிய கட்டமைப்பை உருவாக்க முனைந்தது. இனிமேலும் போரைத் தொடர்ந்து நடத்த முடியாது என்ற நிலையில் பின்வாங்கிக் களத்திலிருந்து வெளியேறியது. திறந்திருந்த வாசல்கள் வழியாகத் தேசக் கட்டமைப்புக்காக பொருளாதார நடவடிக்கையில் ஈடுபட ஆரம்பித்தது. சூழலுக்கேற்ப தகவமைத்துப் பொருந்திக் கொள்ள நெகிழ்ந்து கொடுத்தது. நெளிவு சுளிவுடன் தன்னிடம் எஞ்சிய ஆற்றலை ஒருமுகப்படுத்தியது. அதனால் முழு உலகிலும் மூன்றாவது மிகப்பெரிய பொருளாதார வல்லரசாக மாறியது. 2016ஆம் ஆண்டு ஜப்பானின் ஏற்றுமதி 1368 பில்லியன் டாலரானது.

வெற்றி பெற்ற நாடான அமெரிக்காவைத் தோற்றுப் போயிருந்தது ஜப்பான் பொருளாதாரத் துறையில் முறியடித்தது. ஆக்ரமிப்பும், இராணுவ பதிலடியும் பலனளிக்காது என்பதை உணர்ந்தவுடனே ஜப்பானிடம் திசைமாற்றம் வந்தது. உலகின் பிற நாடுகளை மீறி ஜப்பான் எழுந்தது ஒரு அற்புதமேயன்றி வேறில்லை.

அமெரிக்காவைவிட ஜப்பான் பொருளாதாரத்தில் முன்னேறிச் சென்றது. வெகுவிரைவில் இங்கிலாந்தையும் கடந்து சென்றுவிடும் என கணிக்கப்படுகிறது. ஜப்பான் வணிக நடவடிக்கைக்குத் திரும்பியதால் அமெரிக்கா பெரும் வருத்தத்தில் உள்ளனர் என்பதே உண்மை நிலவரமாகும். “Japan Number One” (முதலிடத்தில் ஜப்பான்) என்பது அதிக விற்பனையான நூல். 1984ஆம் கணக்கின்படி அன்னியச் செலாவணி இருப்பில் 74 பில்லியன் டாலர் ஜப்பானிடம் இருந்தது. இது ஜப்பானை உலகின் பணக்கார நாடாகக் காட்டப் போதுமானது. (The Times of India, June 13-14, 1985)

இராணுவத் தோல்வியை ஜப்பான் பொருளாதார வெற்றியாக மாற்றியது எப்படி? சூழ்நிலை கொண்டு போய்ச் சேர்த்த இடத்திலிருந்து ஜப்பான் தன் புதிய பயணத்தைத் தொடங்கியது. அத்துமீறலைத் தவிர்ப்பது, பொறுமையைக் கடைப்பிடிப்பது, வன்முறையை முற்றாகக் கைவிடுவது, அமைதி வழியில் ஆற்றலை ஒருமுகப்படுத்துவது என ஜப்பான் கொடுத்த பதிலடி நல்ல பலனை அளித்தது. இன்னுமொரு தவறு நடந்துகொள்ளாதபடி பார்த்துக் கொண்டது. ஜப்பான் Pearl Harbour நிகழ்வை துர்க்கனவாக எண்ணி கிடைத்த புதிய வாய்ப்புகளின் மீதும் கவனம் செலுத்தியது. தான்

வீழ்ந்ததற்குப் பிறரை குறை கூறாமல் பழியைத் தன் தலையில் சுமந்தது. இதனால் பொருளாதார வெற்றி சாத்தியப்பட்டது.

இந்தப் பூமியில் நாம் மட்டுமே பயணிக்கவில்லை. உடன் வேறு பலரும் கூடவே உள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ளவது அவசியம். நம்மைப் போலவே பலரும் முன்னேறிச் செல்லவும் மேலோங்கி நிற்கவும் முயல்கின்றனர். இந்த நிலையில் இரண்டு விதமான வாய்ப்புகளே நம்மிடம் உள்ளன. நம் வழியில் குறுக்கிடும் அனைவருடனும் மோதிக் கொள்வது. உரசி நிற்பது அல்லது விலகி வழிவிட்டு நம் பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுப்பது. முதல் வழி நாசகரமானது. இரண்டாவது மோதலை தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சி அடைவது, முன்னேறிச் செல்வது. கப்பல் கடலில் செல்லும்போது பனிப்பாறை, மலைத்தீவு குறுக்கிட்டால் ஒதுங்கிக் கடந்து விட வேண்டும். அதனால் போய்ச் சேர வேண்டிய துறைமுகம் வரை பயணம் பாதுகாப்பாக அமைந்துவிடும். இல்லாவிட்டால் அதுவொரு கனவாக மட்டுமே எஞ்சி நிற்கும். இராணுவ மேலாதிக்கத்தை முற்றாக விட்டொழித்ததன் மூலம் பொருளாதார வல்லாதிக்கம் பெற முடிந்தது. அது இதனினும் மேலானது.

Hiroshima, Nagasaki அடைந்த பேரழிவு ஜப்பானின் இராணுவத் தோல்வியை நினைவுபடுத்தும் 70 ஆண்டுகளுக்குப் பிறகு ஜப்பானில் உண்டான பொருளாதார வெற்றியாக உருப்பெற்றது சிறப்பான நிகழ்வாகும்.

## கல்வியின் முக்கியத்துவம்

கல்வி என்பது வேலை வாய்ப்புக்கான சான்றிதழ் மட்டுமல்ல. மனித மனதில் அறிவொளியை, விழிப்புணர்வை ஏற்றுவது அதன் முதன்மை நோக்கமாகும். ஒவ்வொரு தனி நபருக்கும் கல்வியைத் தருவது தேசக் கட்டுமானத்தில் முதல் பணியாக இருக்கும். ஒரு நாட்டின் பயணம் இந்தப் புள்ளியிலிருந்தே தொடங்க வேண்டும். அதைத் தவிர்த்து எங்கிருந்தும் புறப்பட முடியாது.

மக்களை விழிப்புணர்வூட்டுவது என்றால் என்ன? நாட்டு மக்களைக் கடந்த காலம், நிகழ்காலம் என இரண்டோடும் பொருத்தி வாழ்க்கைப் பாடுகளை முழு பிரபஞ்ச இயக்கத்தோடு விளங்கிக் கொள்வது. தம் பலம் என்ன? பலவீனம் என்ன என்று கண்டறிந்து முடிவுகளை எடுப்பது? தம் விருப்பத்தை இறை விருப்பத்தோடு இணைக்க முயல்வது இதனால் மட்டுமே உலகில் நம்மால் வெற்றி

காணமுடியும். விழிப்புணர்வு கொண்ட மனிதனே உண்மையில் மனிதனாவான். விழிப்புணர்வு இல்லாதவன் அவ்வாறால்ல. அக விழிப்புள்ள மனிதன் தன்னைப் பற்றியும் பிறரைப் பற்றியும் சரியான நிலைப்பாட்டை எடுக்க தகுதி கொண்டிருக்க முடியும். அதன் பிறகு தன்னுடைய எந்தக் கருத்து நேர்மறைச் செயல்பாட்டிலும் எது எதிர்மறைச் செயல்பாட்டிலும் உள்ளது என்பதைக் கிடைக்கும் வாய்ப்பிலிருந்து புரிந்து கொள்கிறான். தீங்கிலிருந்து நன்மையை, பொய்யிலிருந்து உண்மையைப் பிரித்தெடுக்கும் வழிமுறை கைவசமாகும். முன் நெற்றிகளில் உள்ள கண்கள் என்பது ஒன்று. கல்வி மனிதனுக்கு அகக் கண்களைத் தருகிறது. உடலிலுள்ள கண்கள் உலகின் புறவயமான காட்சிகளைத் தருகிறது. கல்வி வாழ்வின் பொருளை ஆழமாகவும் நடைமுறை உண்மையையும் சுட்டிக்காட்டும்.

விவசாயி விதையை மரமாக மாற்ற உழைக்கிறான். கல்விக் கூடங்கள் அறிவுப் பயணத்தில் கனிகளை அளிக்கும். கல்வி மனிதனுக்கு வேலை வாய்ப்பை அளிக்கிறது. அது கல்வியின் இரண்டாம் தரப் பயனே. ஆனால் கல்வியின் முதன்மை நோக்கம் வாழ்க்கைக் கலையைக் கற்றுத் தருவது. அது மனிதனை முழு மனிதனாக்கும்.

## கவனமின்மை என்பது அறநெறிக் குறைபாடு

ஆட்கொல்லி புலியைவிட ஆபத்தான விலங்கு எது? புலியும் கரடியும் மனிதனுக்கு அச்சுறுத்தலா என்றால் இல்லை என்பதே பதில். மனிதனுக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்கள், வைரஸ்கள் உள்ளன. அவற்றை வெற்றுக் கண்ணால் பார்க்கமுடியாது. இந்த பாக்டீரியாக்களின் பிறப்பு விகிதம் எவ்வளவு வேகமாக இருக்கிறது என்றால் பத்து மணி நேரத்தில் பத்தாயிரம் மடங்கு அதிகரித்துவிடுகிறது. புலியும் கரடியும் எங்கோ ஒரு மனிதனை எப்போதோ அடித்துப் போட்டிருக்கும். ஆனால் பாக்டீரியாக்களின் பிடியில் மனிதன் எந்நேரமும் உள்ளான். இந்த பாக்டீரியாக்களில் பல்லாயிரம் வகை உள்ளன.

நம் நற்பேறாக 99% கேடில்லாதவை அல்லது மனித குலத்துக்கு நன்மை தரக்கூடியவை, வெறும் 1% மட்டுமே ஊறு விளைவிப்பவை. அறிவியலின்படி உயிருக்கு அச்சுறுத்தலைத் தரும் இந்த 1% பாக்டீரியாக்கள் மட்டுமே கொடியவை. இந்த பாக்டீரியாக்கள் மிகவும் சிறியவை. நுண் கிருமிகள். இவை மனித உடலுக்குள்

நுழைவதைத் தடுத்து நிறுத்த முடிவதில்லை. தற்காப்பு நடவடிக்கை உடனடியாக இயல்வதில்லை.

மனிதர்கள் பெரிய விபத்துக்களை அவை ஏற்படுத்தும் நாசத்தை அறிந்து வைத்துள்ளனர். ஆனால் சிறிய எதிரிகள் பெரிய எதிரிகளைவிட அதிக சேதம் உண்டாக்கி விடுகின்றனர். அதேபோல சிறிய பிழைகளை நாம் உணர்வதில்லை. அது நம் வாழ்க்கையை நாசமாக்கி விடுகின்றன. அசட்டையான, அலட்சியமான பிழைகள், கண்டுகொள்ளாமல் விடப்படும் சிறிய தவறுகள் பாக்டீரியா நம் உடலில் நுழைவதைப் போல நம் ஆன்மாவினுள் நுழைந்து தீங்கு விளைவிக்கின்றன. மனத்தை அரித்து விடுகின்றன.

எடுத்துக்காட்டாக மனிதன் தினமும் தன் நேரத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பயன்படுத்தாமல் வீணாக்குகிறான். அதேபோல அவசியமற்ற விஷயங்களில் பணத்தைச் செலவழிக்கிறான். இந்த நேரமும், பணமும் வீணடிப்பது சிறியதாகத் தோன்றலாம். ஒரு நாளில் சில ரூபாய், சில மணித் துளிகள் என்பதை ஒட்டுமொத்தமாகக் கூட்டிக் கணக்குப் பார்க்கும்போது ஓர் ஆண்டுக்கு, முழு ஆயுளுக்கு என கணக்குப் பார்க்கும்போது 50% அளவுக்கு மேல் வீணாகிறது. ஒரு நாட்டில் இவ்வாறு வீணாவது எத்தனை கோடி மனித நேரமும் பணமும் என்று கணக்கிட முடியாது. இந்த சராசரி இழப்பு அளவுக்கு அதிகமானது.

## நிலைத்தன்மை

மனிதனுக்குத் தொடர் வழிகாட்டுதல் தேவை. இறைவனின் வழிகாட்டுதல் பலவிதமானது. பல மடங்கானதும் கூட. இந்த உலகில் இயற்கையினூடாக பல்வேறு அடையாளங்களைச் செய்முறை எடுத்துக்காட்டுகளாக நம் கண் முன்னே உள்ளன.

வளர, பரவ, பூக்க, காய்க்கும் செடி கொடிகள் சில மாதங்களின் இறுதியில் அழிந்து போகின்றன. நெடுநாள் நீடிக்காவிட்டாலும் இது அழகானது, ஊட்டமிக்கது. சிறிது காலம் கழிந்த இவை இருந்ததற்கான சுவடு எதுவுமே மிஞ்சுவதில்லை.

கனி கொடுக்கும் பெரு மரங்களோடு ஒப்பிட முடிவதில்லை. மரங்கள் மெதுவாக வளர்ந்து, மெல்லப் பூத்து, நெடுநாள் கழித்துக் கனியைத் தருகிறது. அவை பல்லாண்டுகள் வாழும்; சில மரங்கள் நூற்றாண்டுகளும்கூட. உயிருடன் இருக்கும் காலமெல்லாம் அவை நிழலையும் பழங்களையும் தருகின்றன. இவ்வாறு இரண்டு

விதமான எடுத்துக்காட்டுகளின் வழியே இறைவன் தன் மௌன மொழியில் நாம் சரியான வழியில் சென்றால் வாழ்க்கையில் வெற்றி பெறமுடியும். அதைவிட்டு விலகிச் செல்லும்போது தோல்வியில் முடியும் என்பதையும் சுட்டுகிறான்.

அதேபோல நாடு, சமூகக் கட்டமைப்புப் பணி என்பதைச் செடி கொடிகளைப் போல வேகமாகக் கிளை பரப்பிப் பூப்பூத்து வேகமாகக் கனி கொடுத்துக் காய்த்துப் போகக் கூடாது. ஒரு மரம் முழுவதுமாக வளர பல்லாண்டுகள் காத்துக் கிடக்கிறது. வேர்களைப் பல அடிகள் ஆழத்தில் செலுத்துகிறது. (மரம் மண்ணுக்கு மேல் உள்ளது போலவே பூமிக்கு அடியிலும் அதே அளவுக்கு வேர் பிடித்திருக்கும்.

வளர்ந்து கொண்டிருக்கும் போதே கல்லைப் போல உறுதித்தன்மை, எவருக்கு தீங்கு விளைவிக்கும் எந்தப் பிரச்சனையும் செய்யாமல் மனித குலத்துக்கு நன்மையை மட்டும் கொண்டு வரும். எந்தவொரு நாடும் உறுதித்தன்மையுடனும், சமூகம் நிலைத்தன்மையுடனும் விரிவடைய வேண்டும். இந்தப் பண்புகள் இல்லாமல் இருப்பது அஸ்திவாரம் அற்ற வீட்டைப் போன்றது.

மரத்துக்கு உள்ள அதே விதிகள் மனிதனுக்குப் பொருந்தும். அதன் அஸ்திவாரம் உறுதியாகவும் நீடித்து நிலைக்கவும், பொறுமை, கடின உழைப்பு ஆகியவை அவசியம்.

வாழ்க்கை என்பது குழந்தைகளின் விளையாட்டில் கட்டும் மணல் வீடு அல்ல; அது ஒரு சில நிமிடங்களில் சரிந்து விழுந்து விடும். அது வேர்களை பூமிக்குள் செலுத்துவது மேல்நோக்கிய வளர்ச்சிக்காகப் பொறுமை காத்திருப்பது தேவைப்படுகிறது.

## விழுமியங்களும் தொழில்நுட்பமும்

மும்பையில் உயரமான பல அடுக்கு மாடிக் கட்டிடம் "ஆகாஷ் தீப்" முழுவதும் தரைமட்டமாக நொறுங்கி விழுந்தது. அதில் தரங்குறைந்த சிமெண்டும் அதுவும் குறைந்த விகிதத்தில் கலக்கப்பட்டு இருந்ததைப் பிறகு கட்டுமானப் பொறியாளர்கள் கண்டறிந்து கூறினர்.

தொழில்நுட்பக் கூடத்தின் இயக்குனர் தன் விசாரணை அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டு இருந்தார். "தகுதி வாய்ந்த அனுபவமிக்கவர்களால் கையாளப்பட்டால் "RCC கட்டுமானம் என்பது அறிவியல் முறைமையாகும். தகுதியற்ற பொறியாளர்கள்,

தொழிலாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் அதை ஆபத்துமிக்கதாக மாற்றிவிடுகின்றனர்." (Times of India, September 4, 1983)

முறையான விளக்கமாக இது தோன்றலாம். ஆனால் உண்மையில் இந்தக் கூற்றில் ஒரு பிழை உள்ளது. "தகுதியற்ற" என்ற சொல்லை எடுத்துவிட்டு "நேர்மையற்ற" பொறியாளர்களும், ஒப்பந்தக்காரர்கள் என மாற்றிப் படிக்க வேண்டும். நம் நாட்டில் இது போன்ற பிரச்சனைகளும், விபத்துகளும், "தகுதியின்மையால்" ஏற்படுவதில்லை. மிகக் குறைந்த தொழில்நுட்பத்தாலும் ஏற்படுவதில்லை. மாறாகப் பேராசை, ஊழல் போன்றவையே அடிப்படையான பிரச்சனையாக இருக்கின்றன.

பெரிய பொறியாளர்கள் பணியாற்றிய Bhakra Dam அரசின் மிகப் பெரிய அணைக்கட்டுத் திட்டமாகும். ஆனால் கட்டப்பட்டுப் பயன்படுத்த இருந்த நிலையில் அணையின் சுவர்களில் விரிசல் விழுந்துவிட்டது. மீள்கட்டுமானம் செய்து சுவர்களை வலுப்படுத்த மீண்டும் பலகோடி ரூபாய் செலவானது.

இது போன்ற நிகழ்வுகள் நம் நாட்டில் அடிக்கடி நடக்கின்றன. இவை அனைத்தும் தொழில்நுட்ப நிபுணர்களால் மேற்பார்வையில்லாமல் கட்டப்பட்டவை. எத்தனை நெடுஞ் சாலைகள், பாலங்கள் குறுகிய காலத்தில் சேதம் அடைந்துள்ளன. பெருந்திட்டங்கள் நிறைவடைந்த பின்பும் முற்றுப் பெற்றனவா எனக் கேட்கத் தோன்றுகிறது. குறைந்தபட்சம் அவற்றின் வடிவமைப்பு வரைபடம்கூடக் கிடைப்பதில்லை.

இதற்கெல்லாம் காரணம் நிபுணத்துவம் இன்மையல்ல. பணவெறியும் ஊழல் மலிந்திருப்பதுமே ஆகும். உளவியல் பிரச்சனையும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலம் சரிசெய்ய நாம் உண்மையில் நல்லதொரு சமூகம் இந்த நாட்டில் உருவாவதை விரும்புகிறோம் என்றால் உளவியல் ரீதியாக அறவிழுமியங்களைச் சொல்லிக் கொடுத்து சீர்திருத்த வேண்டும். தொழில்நுட்ப வகுப்புகளை அதிகம் நடத்துவன் மூலம் ஓர் இலையைக் கூட புரட்டிப் போட முடியாது.

ஐஞஐஞஐஞ

## புதிய தலைமுறை

George Menezes என்கிற பத்திரிகையாளர் எழுதிய குறிப்பின்படி; G.P. Kher முன்பு மகாராஷ்டிரா மாநில கல்வி அமைச்சராக இருந்தவர். G.P. Kher-ன் சிறுவனாக இருந்தபோது அவரது தந்தை அம்மாநிலத்தின் கல்வித்துறை செயலாளராக இருந்திருக்கிறார்.

மேல்நிலைப்பள்ளி தேர்வு முடிவுகள் வெளியாக இருந்தபோது அவரது சகோதரன் சில மதிப்பெண்கள் குறைவாகப் பெற்றுக் கணக்குப் பாடத்தில் தோல்வி அடைந்து இருந்தார். ஆசிரியர் ஒருவர் மாணவரின் நலனைக் கருத்தின் கொண்டு மாணவரின் தந்தையை சந்தித்தார். (மாணவனின் தந்தை அப்பொழுது கல்வித்துறை செயலாளர் பொறுப்பில் அரசுப் பணியில் இருந்திருக்கிறார்) "தாங்கள் தேர்வு கட்டுப்பாட்டாளருக்குத் தொலைபேசியில் அழைக்கும்படியும், பிரச்சனைகள் எல்லாமே தீர்ந்துவிடும்" என்றும் நெறியாளர் கூறுகிறார். "என் மகன் உண்மையில் உரிய மதிப்பெண்கள் பெறவில்லை எனில் எல்லோரையும் போல அவனும் தேர்ச்சியடைய வேண்டாம்; இதனால் அவனுக்கு ஒரு படிப்பினை கிடைக்கும்" என்று அமைச்சர் கூறியதாக பத்திரிகையாளர் தொடர்ந்து எழுதுகிறார்.

இந்த நிகழ்வைக் கோடை விடுமுறையின் தொடக்க நிகழ்வுரையில் கூறிவிட்டு இளம் மாணவர்களின் எதிர்வினைக்காகக் காத்திருந்தார். ஆனால் அவர்கள் முக்கியத்துவமற்ற மிகச் சாதாரண விஷயத்தைக் கேட்டது போல அமர்ந்திருந்தனர். ஒரேயொரு மாணவன் மட்டும் எழுந்து நின்று, ஏளனமான உடல்மொழியில் "அந்த மாணவரின் தந்தை முட்டளாக இருந்திருப்பார் போல் தெரிகிறது. எனக்கு இதுபோல நடந்திருந்தால் என் தந்தையைக் கொன்று போட்டிருப்பேன்" என்றான்.

மேலே குறிப்பிட்ட இளைஞனின் கேலிப் பேச்சு போல இன்றைய இளைய தலைமுறையில் பெரும்பாலானவர்கள் உள்ளனர் என்பது வெட்கக்கேடானது. ஆனால் இளைய தலைமுறையில் இவ்வளவு அறப்பிறழ்வு ஏற்பட்டது எப்படி? இந்த நடத்தையின் பழிபாவம் நேரடியாக வெளிப்படையாக சுயநலமிக்க தலைவர்களைச் சாரும். பல்கலைக் கழக வளாகத்தில் இளைஞர்களிடம் வெறுப்பையும் மாணவர்களிடம் பகைமையும் வளர்த்துவிட்டது இவர்களே.

காலங்காலமாக மதிக்கப்பட்டு வந்த மரபுகள், விழுமியங்கள் மீறப்பட்டன. உடைக்கப்பட்டன, நொறுக்கப்பட்டன. நிலைமை கைமீறிச் செல்லும் முன்பு அவற்றைச் சரிசெய்ய வேண்டும். மீளவும் வழிக்குக் கொண்டு வரப்பட வேண்டும். தீமையைக் கற்றுத்தரும் தலைமையை அறச் சீற்றத்துடன் எதிர்த்து நின்றால் மட்டுமே இதுபோன்ற சமூக நோய் மேன்மேலும் பரவாமல் தடுக்கப்படும். இளைய தலைமுறையின் எதிர்கால நன்மை இதிலேயே உள்ளது.

# தொடக்கம் கீழிருந்து

வேலை வாய்ப்புக்கான குறிப்பிட்ட நேர்காணல் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. அங்கு நுழைந்த ஒருவர், நான் படை வீரனாக விரும்புகிறேன், வேலை கிடைக்குமா என்று கேட்டார். அங்கிருந்த அதிகாரி, "தங்களின் வயது என்ன" என்று திருப்பிக் கேட்டார். "60 ஆண்டுகள்" என்று பதில் வந்தது. "இவ்வளவு வயதான பிறகு தங்களால் போர் வீரனாக முடியாதே?" என்றார். "சரி, போகட்டும் உங்களுக்குத் தளபதி வேண்டாமா? அதற்கு ஆள் எடுப்பீர்கள்தானே?" என்று ஒரே போடு போட்டார்.

ஒருவர் தம் பணியைத் தளபதி பொறுப்பிலிருந்து தொடங்கி விட முடியுமா என்ன? பெரும் பாய்ச்சலாக இறுதி இலக்கிற்குத் தாவி விடுவது, எங்ஙனம்? நாம் வெற்றி பெற வேண்டுமானால் விதைத்து, மெதுவாக இலைவிட்டுக் கிளை பரப்பி, பூப் பூத்து உரிய நேரத்தில் கனி கொடுப்பது. அதேபோல வணிகத்தில் முதலீடு செய்து உழைத்த பிறகே இலாபம் கிடைக்கும். வீடு கட்டும்போது அஸ்திவாரம் போடுவது முதலில், கூரை எல்லாம் கடைசி வேலை. விதைத்த பிறகே சாப்பாடு கிடைக்கும். மேசை போடுவதால் அல்ல. தொழிற்சாலையில் முதலில் இயந்திரங்களை நிறுவி பணியாற்ற வேண்டும். அதன் உற்பத்திப் பொருள் முதலில் வராது.

கூட்டு வாழ்க்கையும் இத்தகையதே. தனி நபர்களிடம் உயர்நோக்கம், கடுமையான உழைப்பு, பொறுமை, ஒற்றுமை போன்ற அடிப்படைப் பண்புகளை வளர்க்க வேண்டும்.

சமூகத்தில் தனி மனிதர்களிடம் இந்தக் குணநலன்களை உயர்வான தரத்தில் உருவாக்காதவரை செயல்பாடுகளை முன்னிலைப்படுத்தக் கூடாது. தனி மனித மனித நடத்தையின் இந்த கட்டுடைத்தலுக்கு முன் இவற்றை நடைமுறைப்படுத்தினால் தோல்வியிலேயே முடியும். நாட்டின் அடிப்படை கட்டுமானமின்றி மக்கள் இயக்கத்தை முன்னெடுப்பது சுவரே இல்லாமல் கூரை போடுவதற்குச் சமம். இவ்வாறு உருவாக்கப்படும் கூரை பிறரின் தலையில் விழுந்து நொறுங்கிவிடும். அதேபோல் தனி மனித ஆளுமையை உருவாக்காமல் சமூக முன்னேற்றம், நாட்டின் வளர்ச்சி என்பதெல்லாம் உரிய பயனளிக்காது. மாறாக பேரிழப்பையே தரும். உண்மையான நோக்கத்திலிருந்து மேன்மேலும் விலகிச் செல்வதைக் காணமுடியும்.

ஐஐஐ

# மனவுறுதியின் தேவை

"மக்களிடம் ஆற்றல் இல்லை என்பதல்ல, மனவுறுதி இன்மையே உண்மையே பிரச்சனை" என்று ஒரு சிந்தனையாளர் கூறினார். மக்கள் திறன் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அதைப் பயன்படுத்துவதில்லை அல்லது அதைக் கையாளத் தெரிவதில்லை. அவர்களால் தம் உள்ளூறைப் பண்புகளை வெளிக்கொணர முடிவதில்லை என்பதே காரணம். நாம் எதையேனும் அடைய நினைத்தால் நீண்ட தொடர் முயற்சிகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. தங்களின் செயல்பாடுகளுக்குத் திட்டவட்டமான பலனளிக்கும் முடிவுகள் கிடைக்க வேண்டுமானால் நீண்ட காலத்துக்கு உழைக்கவும், காத்திருக்கவும் வேண்டும். உங்களிடம் இந்தப் பொறுமை இல்லையென்றால் நிலையான வெற்றியை எதிர்ப்பார்த்திருக்க வேண்டாம். "எவ்வளவு அதிக உழைப்பை செலுத்துகிறீர்களோ அவ்வளவு தூரம் முன்னேறிச் செல்வீர்கள்" என்பதே வாழ்க்கையின் இரகசியமாகும்.

நாட்டின் வளர்ச்சி, சமூகக் கட்டுமானம் ஆகியவை குறுகிய காலத்தில் ஒருவேளை நடக்கலாம். ஆனால் பெரும்பாலான நேரங்களில் நீண்டகாலம் தேவைப்படுகிறது. இது எவ்வகையான வளர்ச்சி நமக்குத் தேவை என்பதைப் பொறுத்த விஷயமாகும். உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, கும்பலாக திரண்டு, வெற்றுக் கோஷங்களைப் போடுவதே உங்கள் நோக்கம் என்றால் மக்களை உங்களால் திரட்டிக் கொள்ள முடியும். மாநாடுகளில் பேரணிகளில் திரளுவதால் தலைவர்களும் இயக்கங்களும் உருவாகலாம். ஆனால் நடைமுறையில் அதனால் சமூகத்திற்குப் பயனும் இல்லை. நாட்டு நலனும் இல்லை.

தலைவர்கள் மக்களைக் கவர எடுக்கும் நடவடிக்கைகள் தற்காலிகமாகப் பலன் அளிக்கின்றன. ஆனால் நிலையாக எதுவும் கிடைப்பதில்லை என்பதே உண்மை. தேச நிர்மாணம் என்பது தேக்கு மரம் வைப்பதைப் போன்றது. வெள்ளரிக் காய் போன்று அல்ல. அதாவது மரம் வைப்பது நீண்ட காலம் பிடிக்கக் கூடியது. செடிகொடி பயிரிடுவது எளிய, ஓரிரு மாதங்களில் முடிந்துவிடக் கூடியது. நீண்ட காலம் தேவைப்படக் கூடிய செயல்பாடுகளுக்குத் திட்டமிடல் மிக முக்கியமானது. அவசர கோலத்தில் எவற்றையும் அடைந்துவிட முடியாது. ஒரு தலைவர் முழக்கமிடுவதில் நம்பிக்கை கொண்டால் வெகுமக்கள் அப்பாவிகளின் உணர்வுகளைச் சீண்ட மட்டுமே முடியும். நீண்டகாலக் கடின உழைப்பைத் தராமல் நாட்டின் வளர்ச்சியைக் காண விரும்பும் குடிமகன்கள் பகற்கனவு

காண்கின்றனர். எதார்த்தம் அவர்களுக்குத் தெரியவில்லை என்றே பொருள் கொள்ளமுடியும். ஒரு சமூகம் நீண்ட காலத்துக்குக் காத்திராமல் தங்களின் வளர்ச்சிக் கோட்டையைக் கட்ட விரும்புகிறது என்றால் மனக்கோட்டைத் தவிர நடைமுறை உண்மையல்ல.

ஐஐஐ

## நோபல் பரிசை வெல்வது எப்படி?

Prof. Abdus Salam (1926 - 1996) நோபல் பரிசைப் பெற்ற இயற்பியலாளர். 1986ஆம் ஆண்டு இந்தியப் பெருநகரங்களில் சுற்றுப் பயணம் செய்து கருத்தரங்குகளில் உரையாற்றினார். அந்தச் சொற்பொழிவுகள் உடனுக்குடன் நாளிதழ்களில் வெளியிடப்பட்டு வந்தன. “தென்கொரியா வேகமாக முன்னேறிய நாடுகளுக்கு முன்னோடியாகும். 15 ஆண்டுகளுக்கு முன்பு அதன் GDP இந்தியாவின் தேசிய உற்பத்திக்கு இணையாகவே இருந்தது. தனிநபர் ஒன்று என்கிற கணக்கில் அந்த நாட்டு மக்களின் கடும் உழைப்பிற்குப் பிறகு இப்பொழுது அது பல மடங்கு உயர்ந்துள்ளது. இத்தாலியின் Trieste நகரில் Prof. Abdul Salam வசித்து வந்தார். “நோபல் பரிசை வெல்வது எப்படி?” என்பதை அறிந்துகொள்ளத் தென் கொரியாவின் ஒரு குழு என்னைக் காண என் வீட்டிற்கு வந்திருந்தது. இந்த ஆய்வு மனமே மூன்றாம் உலக நாடுகளின் வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்க முடியும். கேள்வி மனம் துருவிப் பார்க்கும் கண்ணோட்டம் வளர்ச்சிக்கு முக்கியம். யார் தேடலையும் முடிவுறாத உணர்வுகளையும் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கே இது வாய்க்கும். தேடலிலுள்ள ஆர்வம் மனிதனிடம் தேங்கிய மனமில்லை என்பதைக் காட்டுகிறது. நாடோ இவ்வுலகமோ மறு உலகமோ எதுவாக இருந்தாலும் சரியே. (The times of India, January 16, 1986)

தேக்கம் வந்தபிறகு மேன்மேலும் என்கிற ஆர்வம் அற்றுப் போய்விடுகிறது. வளர்ச்சிப் பணிகள் மூடுவிழா கண்டுவிடுகின்றன. முயற்சிகளுக்குப் பதிலாக செயலின்மை கோலோச்சும். இந்த நிலையில் ஒரு நாடு வீழ்ச்சிக் கட்டத்தில் நுழைந்துவிட்டது என்றே பொருள். ஒழுங்கின்மையும், அழுகியதன்மையும் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும். வெட்கக்கேடான இழிவுநிலையிலிருந்து விடுதலை பெற தேடலும், கடும் உழைப்பும் தேவை. இது அமைந்து விட்டால் வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போட்டு விடலாம். கேள்வியும் ஆய்வு மனமும் ஏணிப்படியில் உச்சத்தைத் தொட்டு விடும் தூரமே. மேலும் என்று துருவாத மனிதன்தான் நிற்கும் நிலத்தைக்கூடப் பறிகொடுப்பான். கையிலுள்ளதும் பறிபோகும். இன்னும் சொல்லப்

போனால் பின்னோக்கிச் சென்றுவிடுவான். கடைசி வரிசைக்குப் போகும்வரை அந்த வீழ்ச்சி நிற்காது..

ஐஜஐஜஐஜ

## வேறுபாட்டிற்கான காரணம்

செப்டம்பர் 1986ல் மொத்தம் 16 நாட்களுக்கு தென் கொரியாவின் சியோலில் 10வது ஆசிய விளையாட்டுப் போட்டி நடந்தது. அதில் முதல் எட்டு இடங்களைப் பிடித்த நாடுகளின் பதக்கப் பட்டியல் இதோ :

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 94 | 82 | 46 | 222 |
| தென்கொரியா | 93 | 55 | 76 | 224 |
| ஜப்பான் | 58 | 76 | 77 | 211 |
| ஈரான் | 6 | 6 | 10 | 22 |
| இந்தியா | 5 | 9 | 23 | 37 |
| பிலிப்பைன்ஸ் | 4 | 5 | 9 | 18 |
| தாய்லாந்து | 3 | 10 | 13 | 26 |
| பாகிஸ்தான் | 2 | 3 | 4 | 9 |

சீனா, தென்கொரியா, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகள் பதக்கங்களை அள்ளிச் சென்றன. தென் கொரியாவைவிட இந்தியா மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் மிகப் பெரிய நாடு. ஆனால் அட்டவணைப்படி இந்தியா மிகக் குறைவான பதக்கங்களுடன் பின்தங்கியுள்ளதைக் காணலாம். The Indian Express October 6, 1986

தென் கொரியா போட்டிக்கான வீரர்களைத் தேர்ந்தெடுத்தவுடன் ஒவ்வொரு பிரிவுக்கும் பத்து இலட்சம் டாலர்களைச் செலவழித்துப் பயிற்சியை இரண்டு ஆண்டுகள் தந்தது. இந்தியாவோ மோது, இல்லையெனில் தோற்றுப் போ" என தன் வீரர்களை அனுப்பி வைத்தது. அவ்வாறு அனுப்பப்பட்டவர்களும் கூட குறுகிய கண்ணோட்டத்துடன் இறுக்கமான மூடுமந்திரமாக, சிலருக்குச் சலுகையும், வேறு பலருடன் ஓரவஞ்சனை, பாரபட்சம் காட்டித் தேர்வு செய்தனர். இதில் பிராந்தியவாதம், சாதி, மதம் என எல்லாமே சலுகைக்கும் நிராகரிப்புக்கும் காரணமாக இருந்தது.

வேறு சொற்களில் இரத்தினச் சுருக்கமாகக் கூறுவதானால் தென் கொரியா போட்டியாளர்களைத் திறமையின் அடிப்படையில் தேர்ந்தெடுத்த நிலையில் இந்தியாவோ முன்பின் அறிமுகம், பரிந்துரை என்கிற நோய்க்கூறுகளுடன் குழு தெரிவு செய்யப்பட்டது. தென் கொரிய வீரர்களின் பெயர்கள், திறமைகள் ஆகியவற்றைக் கணினியில் உள்ளீடு செய்து சொந்த விருப்பு / வெறுப்பு இன்றி தேர்வு செய்தது. இந்தியாவோ இவர்கள் என் உறவினர்கள், என் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என எடுத்து அனுப்பிய ஆட்கள் படு மோசமாக தோற்றுப் போய் திரும்பினார்கள். தேர்வு செய்யப்பட்டதில் காணப்பட்ட வேறுபாடு பரிசு பெறுவதிலும் எதிரொலிப்பது இயல்பானது, அல்லவா?

ஐஐஐ

## கூட்டுச் செயல்பாடு

அமெரிக்காவில் கப்பல் கட்டும் தொழிற்கூடங்கள் ஐம்பதாயிரம் டன் டாங்கர் தயாரிக்க 16 மாதங்கள் எடுத்துக் கொள்கிறது. ஸ்பெயின் நாட்டுக்காரர்கள் அதே போன்றதொரு கப்பலைக் கட்ட இன்னும் சற்று அதிக நேரம் அதாவது இரண்டு ஆண்டுகளை எடுத்துக் கொள்கின்றனர். ஆனால் ஜப்பானியர்கள் இதே போன்ற ஒரு கப்பலை வெறும் எட்டு மாதங்களில் கட்டி முடித்து விடுகின்றனர்.

இந்த அற்புதத்தை ஜப்பானியர்கள் சாதிப்பதன் இரகசியம் என்ன? கூட்டு உழைப்பே இதன் அடிப்படை என ஒரு ஆய்வு கூறுகிறது. ஜப்பானிய தொழிலாளிகள், பொறியாளர்கள் , நிர்வாகிகள் என இதில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு இடையிலும் முழுமையான புரிந்துணர்வும், ஒத்திசைவும் உள்ளது. இந்தத் திட்டப்பணி நிறைவேறும் காலம் முழுமைக்கும் இந்தப் பிணைப்பும் உறுதியும் குலைவதேயில்லை. இதனால் குறைந்த காலத்தில் தரமான கப்பலை உருவாக்கிவிட முடிகிறது.

ஜப்பானிய பண்பாட்டில் பணிபுரியும் முறையில் குழு ஒத்துழைப்பும், கூட்டுறவும் அடிநாதமாக உள்ளன. சிறு / பெரு தொழிற்சாலைகள், வீடு அல்லது வெளி நிறுவனங்களில் கூட்டுச் செயல்பாடு ஜப்பானிய தனித்தன்மையாக உள்ளது. “ஜப்பானில் ஒவ்வொரு செயல்பாடும் கூட்டுச் செயல்பாடே, தனி மனித பெருமை, தனிமனித துதிபாடலுக்கு அங்கு இடமேயில்லை” என்று ஜப்பானிய இயலின் அறிஞர் William Ouchi (1943...) என்பவர் கூறுகிறார். (Hindustan Times, February 1986)

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஒருங்கிணைந்து பணிபுரிவதால் மாபெரும் வெற்றி கைக்கூடும். ஒருங்கிணைந்து பணிபுரிவதால் தனி மனித ஆளுமை வளர்ச்சி தடைபடுகிறது என்பது மட்டும் குறை. தனிநபர்கள் தத்தம் ஆளுமையை மட்டும் சுயநலமாக வளர்த்துக் கொள்ள முனையும்போது கூட்டுழைப்பும், கூட்டு வளர்ச்சியும் சாத்தியமில்லை. அதனால் அப்படியான சமூகத்தால் பெரிதாக வளர்ச்சியடைய முடிவதில்லை. மக்கள் தன் நலன் மறந்து தியாகம் செய்ய முன்வரும்போது அந்த நாடு உறுதியாக வெற்றியடையும். தனி மனிதர்கள் எதிரெதிர் திசையில் இருக்கவும், தள்ளவும் செய்யும்போது பெரிய முன்னேற்றத்தை அந்நாடு அடைய முடியாது.

கூட்டுறவின் ஆன்மபலமும், ஒருங்கிணைப்பும் உள்ள நிறுவனத்தில் நல்லிணக்கமும், புரிந்துணர்வும் நிலவினால் அதற்கு வானமே எல்லை. உற்பத்தியின் தரமும், எண்ணிக்கையும் கூடும். ஒற்றுமையே வெற்றியின் சாவி. பெரிய வளர்ச்சியடைய விரும்பினால் ஒற்றுமையே எளிய முறையாகும். ஒற்றுமையை யாரேனும் கட்டமைத்துவிட்டால் முயற்சி அதைப் பெருக்கிக் காட்டிவிடும்.

## கொடுத்தால் பெறுவோம்

சீனாவின் சிறியதொரு பகுதியான Hongkongஐ (இந்தியாவைப் போல) இங்கிலாந்து முன்பு ஆட்சி செய்து கொண்டிருந்தது. Elizabeth (1926 - 2022) அரசி சீனாவுக்குப் போகும் ஆசையில் நீண்டநாட்களாக இருந்து வந்தார். இது சீனாவுக்குப் பிடிக்கவில்லை. அதனால் அதுவரை அப்பயணம் சாத்தியமாகாமல் இருந்தது. 1984ஆம் ஆண்டு சீன - இங்கிலாந்து ஒப்பந்தத்தின்படி 1997இல் அனுமதி கிடைத்தது. Times Magazines 17-10-1986

பிரிட்டனின் மகுடத்திலிருந்து ஒரு முத்தை இழந்து விடுவதைப் போல Hongkongஐ சீனாவிடம் திருப்பிக் கையளிப்பது அவ்வளவு எளிதாக இருக்கவில்லை. அரசியின் நெடுநாள் விருப்பத்தை மதிப்பதும், பொருளாதார நலனும் சீனாவுடனான வர்த்தக உறவும் பிரிட்டனை இக்கடுமையான முடிவை எடுக்கச் செய்தது. சீனாவுடன் இங்கிலாந்தின் உறவு நூறாண்டு காலமாக சுமுகமாக இருக்கவில்லை. இங்கிலாந்து அரச குடும்பத்திலிருந்து சீனாவுக்குச் சென்ற முதல் நபர் என்கிற முறையில் அரசியின் பயணம் வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. இடையில் இரு நாடுகளுக்கு இடையேயான 1.5 பில்லியன் டாலர் ஒப்பந்தம் கையெழுத்தானது.

மகுடத்திலிருந்து ஒரு முத்து பறிபோய் விட்டது என்றாலும் அதற்குப் பதிலாக ஏராளமானதை இருதரப்பும் பெற்றுக் கொண்டது. “கொடுப்பதால் பெற முடியும்” என்கிற பழமொழி உள்ளது. உலகின் வழிமுறை இதுவே, உலக இயக்கமும் அப்படியே.

ஸஞஸஞஸஞ

## ஆக்கப்பூர்வ சிறுபான்மை

Arnold Joseph Toynbee (1889 - 1975) இன் புகழ்ப்பெற்ற நூல் “A study of History” (வரலாற்றை வாசித்தல்) 1934 - 1961ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் 12 தொகுதிகளாக வெளிவந்தது. உலகில் இதுவரை முகிழ்த்த 23 பண்பாடுகளைத் தத்துவ நோக்கில் ஆய்வு செய்துள்ளார்.

“இன மேட்டிமையும், புவியியல் ரீதியான அனுகூலமும் எந்தவொரு பண்பாட்டையும் உயர்த்தி விடுவதில்லை. மாறாக எதிர்பாராத சவாலான காலக்கட்டங்களில் எப்படி எதிர்வினையாற்றுகிறது என்பதைப் பொறுத்தே எந்தவொரு பண்பாடும் எழுச்சி கொள்கிறது. எளிமையான, சொகுசான சூழலைவிடக் கடினமான நிலவரங்களே பண்பாடு மேலெழ காரணமாகிறது” என்கிறார். (vol 4, p 659)

Arnold Joseph Toynbeeயின் கருத்துப்படி “ஆக்கப்பூர்வ சிறுபான்மை”யே பண்பாட்டை உருவாக்குகிறது.“சவால் எதிர்வினை” என்கிற நெறிமுறையில் ஒரு பண்பாடு வடிவமெடுக்கிறது. அந்தச் சமூகத்திலிருந்து எழும் தலைவர்கள் புது உலகைப் படைக்கின்றனர். “இன்மை” என்பது சாபமல்ல, வரம்; அது மதிப்பற்றது. இழப்பு மனிதனுக்குப் பெறுவதற்கான உத்வேகத்தைத் தருகிறது. அந்த வகையில் அங்கு எழும் செயல்கள் ஊக்கமுள்ளதாகிறது. பெரிய வெற்றிக்கான வாய்ப்புக்களை அளிக்கிறது. நெருக்கடியான சூழ்நிலையில் தள்ளப்படும்போது முறையீடு, போராட்டம் என திசை மாறுகிறது. ஆனால் சூழ்நிலையிலிருந்து மேலெழுந்து சிந்தித்தால் கடினமான சூழ்நிலைகள் வெற்றிப்படிகளையும் சேர்த்தே கொண்டுள்ளன என்பதை அறிந்து கொள்ளலாம்.

ஸஞஸஞஸஞ

## நெகிழ்வான அணுகுமுறை

ஒருமுறை பயணியொருவர் ரயில் நிலையம் சென்றிருந்தபோது அவரது வண்டி புறப்பட்டுப் போய் விட்டிருந்ததை அறிந்துகொண்டார். அங்கிருந்த சுமை தூக்கும் தொழிலாளி “ஐயா!

கவலைப்பட வேண்டாம்!" அடுத்த வண்டி இன்னும் இரண்டு மணி நேரங்களில் வந்துவிடும், அதில் போய் விடலாம்; அதுவரை சற்று ஓய்வெடுத்துக் கொள்ளவும்" என்று கூறினார். பயணி அந்த ஆலோசனையை ஏற்று பிறகு வந்த வேறொரு ரயில் ஏறித்தான் போக வேண்டிய ஊருக்கு புறப்பட்டார்.

ஒரு வண்டி விட்டால் வேறொரு வண்டியைப் பிடிக்கலாம் என்பது எல்லா பயணிக்கும் தெரியும். இது ரயில் நிலைய நடை மேடையிலிருந்து அறியக் கூடிய படிப்பினை. ஆனால் வாழ்க்கை ஓட்டத்தில் வாய்ப்பு ஏதும் நழுவிப் போகும்போது மக்களில் பலரும் அதை மறந்து விடுகின்றனர். முதல் முறை தோற்றுப் போகும்போது அவர்கள் மனமுடைந்து முறையீடு, போராட்டம் எனக் கிளம்பி விடுகின்றனர். அதற்குரிய சரியான வழி என்பது வேறொரு செயல்பாட்டுக்கு மறுபடியும் புதிய திட்டப் பணிகளில் இறங்கி தம் இலக்கைப் போய்ச் சேருதல்; அதாவது புதிய "அடுத்த வண்டி பிடித்தல்" என்பதைப் போன்றதாகும்.

எதிரி ஒருவர் தங்களுடன் மோதலில் இறங்கினால் அந்த எதிர்ப்பு முறையில் உரிய பலன் ஏதும் விளையவில்லையெனில் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளவும். அவரை மென்மையான முறையில் தன் வழிக்குக் கொண்டு வரப் பாருங்கள். ஒருவேளை தங்களின் அடாவடி தந்திரங்களைக் கைவிட்டு மென்மையாக நடந்து கொள்ளுங்கள். அதனால் அவர் உங்களுடன் நட்பு பாராட்டலாம். தங்கள் மாதச் சம்பளத்தில் பணிபுரிந்த ஊழியம் பறிபோகிறது, எனில் அதைக் கைவிட்டு விடுங்கள். வேறொரு துறையில் வேலை வாய்ப்பைத் தேடிக் கொள்ளுங்கள்.

புதிய பணி, தொழில், வணிகம் முன்பைவிட அதிக பொருளாதாரப் பலனை உங்களுக்கு அளிக்கக் கூடும். யாரேனும் தங்களின் உரிமையை எடுத்துக் கொள்ளும்போது அவருடன் சண்டை ஏற்பட்டு விடுகிறது. பறிபோன உரிமைகளை மீளப் பெறுவதில் பல்லாண்டுகள் கழிந்து விடுகின்றன. வழிமுறை மாற்றிப் பாருங்கள். அவரை மறந்து விட்டுக் கடுமையாக முயன்று பாருங்கள். உழைப்பு அவற்றை உங்களுக்குப் பெற்றுத் தரும். எதற்குப் பிறரிடம் யாசித்து நிற்க வேண்டும்?

குறுகிய எண்ணம் வாழ்க்கையின் பல்வேறு பிரச்சனைகளுக்குக் காரணம். தாங்கள் பரந்த மனப்பான்மை கொண்டால் அங்கு ஏராளமான வண்டிகள் புறப்படக் காத்திருக்கின்றன என்பதை கண்டுகொள்வீர்கள். முறையீடுகள் பெற முடியாததை நல்ல தொடர்பின் மூலம் அடைந்துவிட முடியும்.

கோபப்பட்டுப் பெற நினைத்தது கிடைக்காத நிலையில் உழைத்து அந்த இலக்கை அடையமுடியும். பிறரது பேச்சுக்காக கொந்தளித்து தன்னை கட்டுப்படுத்த முடியவில்லை எனில் பொறுமை காத்து அவற்றை வெல்ல முடியும்.

ஃஃஃ

## உலகத் தலைமை

04-11-1847-ந்தேதி ஸ்காட்லாந்து மருத்துவமனையில் மருத்துவர்களின் அறையில் பணியாளர் ஒருவர் நுழைந்தபோது மருத்துவர், செவிலியர்கள் தம் இருக்கையிலிருந்து கீழே குப்புற விழுந்து கிடந்தனர். அவர்கள் கள், சாராயம் குடித்து போதையில் உள்ளனர் எனக் கருதி அங்கிருந்து வெளியேறி விட்டார். ஆனால் உண்மை முற்றிலும் வேறு. அப்படி சுயநினைவு இழந்து கிடந்த Sir James Simpsonனும் அவரது இரண்டு பயிற்சி மருத்துவர்கள், செவிலியர்கள் chloroform என்கிற புதிய வாயுவைத் தம்முள் செலுத்திக் கொண்டு மனித உடலில் அது எத்தகைய விளைவை ஏற்படுத்துகிறது என்கிற அனுபவத்தை கண்டறிய விரும்பினர்.

ரொட்டி சுடும் ஏழை ஒருவருடைய பிள்ளைகளில் Sir James Simpson (1811 - 1870) மிகவும் இளையவர். நான்கு வயதில் ஊரில் இருந்த ஒரு பள்ளியில் சேர்க்கப்பட்டார். அவர் படிப்பில் காட்டிய ஆர்வத்தால் அவரது தந்தையும் மற்ற ஆறு சகோதரர்களும் James Simpsonனை அடுத்துள்ள நகருக்குப் படிக்க அனுப்பி வைத்தனர். Edinburgh பல்கலைக் கழகத்தில் அந்தக் காலத்தில் மிக உயர்ந்த படிப்பாகக் கருதப்பட்ட M.D. பட்டம் பெற்றார்.

Dr. Simpson படித்த / தெரிந்து கொண்ட தகவலின்படி Chloroform என்கிற வாயுவில் மயக்கமடையச் செய்யும் பண்பு இருப்பதைத் தெரிந்து கொண்டார். Chloroform செலுத்துவதன் மூலம் தற்காலிகமாக நோயாளியைத் மயக்கமடையச் செய்யலாம். அறுவை சிகிச்சையில் நரம்பு வெட்டி, வயிற்றை அறுக்கும்போது ஏற்படும் வலியிலிருந்து விடுதலை பெறலாம் என சிந்தித்துத் தன் ஆய்வைத் தொடர்ந்தார். அதைத் தன் மீதும் தன் தோழர்கள் மீதும் பரிசோதித்துப் பார்க்க முடிவு செய்தார். Chlorofom இழப்போ, தீங்கோ ஏற்படுத்துவதில்லை என்பதையும் அறிந்து கொண்டார். ஆகவே அதை வெற்றிகரமாக மருத்துவ சிகிச்சையில் இணைக்கும் வழிவகைகளைக் கண்டடைந்தார். சாதாரண ரொட்டிக் கடைக்காரரின் மகன் மனித குலத்துக்குக் கொடுத்த கொடை "வேதனையில் துடித்த நோயாளி குழந்தைகளுக்கு இறைவனின் பரிசு இது என்று Dr.Brown கூறினார்.

Dr.Simpson தன் உடலைப் பரிசோதனைக்கு உட்படுத்திக் காட்டிய துணிச்சல் தன்னைக் கொடுத்து மனித குலத்தை காப்பாற்றிய செயலாகும். தன்னை ஆபத்தில் உட்படுத்தி பிற எல்லா மக்களையும் காப்பாற்றினார். மேற்குலகம் இன்று உலகத் தலைமையைப் பெற்றிருப்பதன் இரகசியம் இதுவே.

## ஒரு நாட்டின் வளர்ச்சி

அற்புதமான முறையில் மரம் எப்படி வளர்கிறது. ஒரு சிறிய விதை தன்னை பலி கொடுத்து மண்ணிலிருந்து பசுமையான மரமாக எழுந்து நிற்கிறது. வீடு எப்படி கட்டப்படுகிறது? செங்கற்களிடம் கேளுங்கள். ஒவ்வொரு செங்கல்லும் தன்னைப் புதைக்க அனுமதிப்பதன் பிறகே வீடு ஒன்று கம்பீரமாக எழுந்து நிற்கிறது.

ஒவ்வொரு செங்கல்லும் கூடி நிற்கும்போது எடுக்கும் பேருருவம் வீடு. அப்படியே தியாகத்தின் மூலம் மனித வாழ்க்கையையும் கட்டமைக்க வேண்டும். மனித குலத்தின் எதிர்காலக் கட்டமைப்பு எப்பொழுது சாத்தியமாகும்? தங்களின் சுயநலத்தை, நிகழ்காலத்தைத் தியாகம் செய்யும்போது மனித குல எதிர்காலம் கட்டமைக்கப்படும். எந்தச் சமூகத்தில் குறிப்பிட்ட சிலர் ஆபத்தை, கஷ்டத்தை எதிர்கொள்ள முன்வரவில்லையோ அது துரதிஷ்டமே. கட்டுமானம் என்பதே தியாகம் கொண்டு உருவாவது. இது இயற்கையின் பிரபஞ்ச விதியாகும் இதில் என்றென்றைக்கும் மாறுதல் ஏற்படுவதில்லை.

ஒவ்வொரு மாளிகையும் நாம் பார்க்கும்படியான கோபுர மாடத்தைக் கொண்டிருக்கும். ஆனால் அஸ்திவாரம் நம் கண்ணுக்குத் தென்படுவதேயில்லை. காரணம் பூமிக்கு அடியில் அது புதையுண்டு இருக்கும். இந்தக் கண்ணுக்கு தெரியாத அஸ்திவாரத்தின் மீதே முழு கட்டிடமும் நின்று கொண்டிருக்கும். சமூகம், நாடு என்பதற்கும் இது பொருந்தும். தனி மனிதர்கள் சமூக கட்டமைப்பிலும் நாட்டின் நிர்மாணத்திலும் அதன் அஸ்திவாரக் கல்லாகச் சம்மதிக்க முன்வருவது யார்? குறியீட்டு ரீதியாக தம்மைப் புதைத்துக் கொள்ளும் தியாகம் யாருடையது?

உணர்ச்சிக் கொந்தளிப்பில் உயிரை நன்னோக்கத்திற்காகத் தர முன்வருவதல்ல தியாகம்! மறைவாக சிறிய அளவில், யாருக்கும் தெரியாமல் நீண்ட காலத்துக்கு ஆக்கப்பூர்வமான நற்பணிகள் செய்வது எவ்வளவு பெரியது. தொலை தூரத்துக்கு வெற்றி கண்ணுக்குப் படாதபோதும் உழைத்துக் கொண்டிருப்பதன்

பெயரே தியாகமாகும். அதில் ஈடுபடும்போது செல்வமோ, புகழோ, பிரபல்யமோ கிடைக்காது. சமூகக் கட்டமைப்புக்காக ஒருவர் தன்னைப் புதைத்துக் கொண்டு பணிபுரியும்போது நிகழ்காலம் அவருக்கு இல்லை; செய்வது எல்லாமே எதிர்கால நலன் பொருட்டே.

நாட்டின் வளர்ச்சி தனி நபர்களின் அர்ப்பணிப்பில் அடங்கியுள்ளது. சமூகத்திலுள்ள இளைஞர்களின் தியாக மனப்பான்மையில் தங்கியுள்ளது. அவர்கள் பூமியில் புதைக்கப்பட்ட விதைகளைப் போல, கட்டுமான செங்கற்களைப் போன்றவர்கள். மனித குலத்துகு உயிர் கொடுத்து புதிய உலகம் சமைக்க உதவியவர்கள்.

## அமைதியான கட்டமைப்பு

Swami Vivekananda (1863 - 1902)வுக்கு சத்தியத் தேடல் இருந்தது. அதன் பொருட்டு அங்கும் இங்குமாக சுற்றியலைந்து விட்டு கன்யாகுமரி வந்தார்.

அங்கு கடற்கரையிலிருந்து தொலைவிலுள்ள கடலில் கற்பாறைத் தீவு ஒன்றுள்ளது. கடற்கரையிலிருந்து கடலில் இறங்கி நீந்தியபடி அந்தக் கற்பாறைத் தீவுக்குச் சென்று தியானம் செய்தார். அங்கிருந்து திரும்பிய பிறகு இந்து மதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார்.

சுதந்திரத்துக்குப் பிறகு அந்தக் கற்பாறைத் தீவில் இரண்டு கோடி ரூபாய் செலவில் விவேகாந்த கேந்திரம் 1970இல் நிறுவப்பட்டது. "மனித ஆளுமையை வளர்ப்பது" அதன் முக்கிய இலக்காகும். இதன் பொருட்டு கேந்திரம் விடுத்த அழைப்பை ஏற்று உயர் கல்வி கற்ற நூற்றுக்கணக்கான இளைஞர்கள், ஆண், பெண் தன்னார்வலர்களாக முன்வந்தனர். அவர்கள் தம் வாழ்க்கையை இந்த நோக்கத்திற்காக ஒப்புக்கொடுக்கத் தயாராயினர். சாகும் வரையிலான பணிக்கு அர்ப்பணித்து விவேகானந்தரின் கனவுக்கு உயிர் கொடுத்தனர். Time of India 27-01-1984

H. R. Nagendra (b.1943 - ) அவ்வாறு முன்வந்த தன்னார்வலர்களில் ஒருவர். இதற்கு முன்பு அமெரிக்க விண்வெளி மையத்தின் பொறுப்பில் இருந்தவர். அந்த உயர் பதவியையும் வாழ்வாதாரத்தையும் பறிகொடுத்து விவேகானந்தா மையம் தந்த சொற்ப ஊதியமும் குறைந்த வசதிகளையும் ஏற்றுக் கொண்டார். எளிய வாழ்க்கைக்குப் பழகிக் கொண்டார். "நான் இங்கு எனக்கு

இடமில்லை என்று உணராத நிலையில் மகிழ்ச்சியுடன் கழிக்கிறேன். ஒரு விஞ்ஞானியின் வேலை உண்மையைத் தேடுவதாகும். என் தேடல் இன்றும்கூடத் தொடங்குகிறது. முன்பு இயந்திரப் பொறியியல் துறையில் தேடிக் கொண்டிருந்தேன். இப்பொழுது மனிதப் பொறியியல் என்பது மட்டுமே துறையில் வேறுபாடு" என்றார்.

கல்வி வளர்ச்சி, கிராம முன்னேற்றம், யோகா ஆய்வு, இலக்கியப் பதிப்புத் துறை என தற்சமயம் விவேகானந்தா மையம் செலுத்தி வருகிறது. நாடு முழுவதும் நூற்றுக் கணக்கானவர்கள் பெரிய பதவிகளையும், வசதியான வாழ்க்கையையும் உதறிவிட்டு இந்தத் திட்டப் பணிகளில் வெவ்வேறு மாநிலங்களில் மௌனமாகப் பெரும் உழைப்பில் ஈடுபட்டு வருகின்றனர். H. R. Nagendra சொற்களில் கூறுவதானால் "இதுவே நிறைவான வாழ்க்கை இப்பணியில் மனநிறைவு."

உயிரோட்டமுள்ள சமூகம் மட்டுமே தனித் திறனைக் கொண்ட நபர்களை உருவாக்க முடியும். உயர் இலட்சியத்துக்காகத் தம்மை ஒப்படைத்துத் துறவி போல வாழும்போதே இறந்து போகும். துணிச்சலைப் பெற முடியும். அறிவுஜீவிகள் அற்ப நலனுக்காக ஓடிக் கொண்டிருந்தால் அந்த நாடு தன் பார்வையை நோக்கை உயிராற்றலை இழந்துவிட்டது என்றே பொருள்.

ஐஐஐ

## தவறான முன்னெடுப்பு

Lima என்பது தென் அமெரிக்க நகரங்களில் ஒன்று. அங்குள்ள பெண் ஒருத்திக்கு மனநிறைவான பணி கிடைக்கவில்லை. ஆகவே வட அமெரிக்காவை குறித்தும் அதன் வளங்களை குறித்தும் கேள்விப்பட்டிருந்தாள். தன் அதிர்ஷ்டத்தை நம்பி அங்கு செல்ல முடிவெடுத்தாள். ஆனால் வட அமெரிக்கா செல்வதற்கான விமானப் பயணச் சீட்டு எடுக்கும் வசதியோ, முறையான விசா வாங்கவோ அவள் முயற்சிக்கவில்லை.

எப்படியோ ஒரு விதமாக Los Angeles நகருக்கு செல்லும் விமானத்தில் ஒரு சூட்கேஸில் தன்னை அடைத்த நிலையில் வேறு சிலரின் உதவியால் லக்கேஜ் பயணமாக விமானத்தில் ஏற்றப்பட்டார். இது அரைகுறைத் திட்டம். விமானம் தன் இலக்கின்படி Los Angeles போய்ச் சேர்ந்தது. பிற பயணிகள் தம் லக்கேஜ் பெட்டியை பெற்றுக் கொண்டு வெளியேறி விட்டனர். ஒரேயொரு பெட்டி மட்டுமே கேட்பாரற்று நெடுநேரம் கிடந்தது. ஆகவே காவல்துறை

பெட்டியைத் திறந்து பார்த்தபோது அந்த பெண் சடலமாக மீட்கப்பட்டார். புலனாய்வாளர்களின் கருத்துப்படி "அப்பெண் பிற பெட்டிகளின் சுமை தாங்காமல் பளுவால் நசுங்கிச் செத்திருக்கலாம்" எனக் கருதப்பட்டது. (UPI செய்தியறிக்கையின்படி...)

எங்கேனும் போக வேண்டுமானால் மனிதன் ஏதேனும் ஒரு நடவடிக்கையில் இறங்கி விடுவது மட்டும் போதுமானதல்ல என்பதை இந்நிகழ்வு காட்டுகிறது. வாழ்க்கையின் உண்மையும் இதுவே. காரணம் புறவயமான கண்ணுக்குப் புலப்படாத பல்வேறு காரணிகளும் நம் செயல்பாடுகளுடன் பிணைந்துள்ளது. அதன் ஒத்திசைவு நமக்குத் தேவைப்படுகிறது. அப்பொழுது மட்டுமே நாம் முன்னெடுக்கும் செயல்பாடுகள் உரிய முறையில் நம்மை இலக்கிற்கு அழைத்துச் செல்லும்.

மேற்படி பெண் முன்னெடுத்த திட்டம் வெறுமனே தனிநபர் சாகசம். அது தோல்வியில் முடிந்த நிலையில் அதற்குரிய விலையாக அப்பெண்ணிடம் இருந்த ஒரே உயிர் அதையும் கொடுத்துவிட நேர்ந்தது. அதேபோல ஒரு தலைவர் எடுக்கும் முடிவு வெறுமனே தனிநபர் முடிவாக இருந்துவிட முடியாது. அது கூட்டு முடிவாகக் கருதப்படும். அதன் விளைவை முழு சமூகமும் துக்கம், சோகம் என அனுபவிக்க வேண்டியிருக்கும். தலைவர் என்பவர் படு எச்சரிக்கையாக கவனமுடன் இருந்தாக வேண்டும். மேற்படி அப்பெண்ணைப் போல முட்டாள்தனமாக நடந்துகொள்ளாமல் பாதகமான அம்சங்களைக் கணக்கில்கொண்டு முடிவெடுக்க வேண்டும். பலமுறை சிந்தித்து கவனமுடன் காலடி எடுத்து வைக்க வேண்டும். தலைவரின் தவறான முடிவு முன் யோசனையில்லாத பாய்ச்சல் மன்னிக்க முடியாத குற்றமாகக் கருதப்படும். அதற்குப் பதிலாக அவர் செயல்படாமல் இருந்திருந்தால்கூடப் போதும், பெரும் சேதம் தவிர்க்கப்பட்டிருக்கும். பிரச்சனையும், வேதனையும் வந்திருக்காது.

ஐஐஐ

## முதலில் மனவிழிப்பு

பள்ளிவாசல் மதகுரு விடிகாலை தொழுகை நடத்த சற்று முன்னரே எழுந்து கொண்டார். பொழுது புலராத இருட்டு இன்னும் மீதமிருந்தது. அருகிலிருந்த கடைக்காரர் கதவைத் திறந்தார். வழக்கத்திற்கு மாறாக இதை கவனிக்க சற்று நின்று வேடிக்கை பார்த்தார். இந்த இருட்டில் கடைக்காரர் முதலில் எதைச் செய்வார். கடையில் இருள் கவ்விக் கிடக்கிறதே என யோசித்துக்

கொண்டிருக்கும்போதே கடைக்காரர் எதிர்ப்பார்த்தபடியே மின்விளக்கின் பொத்தானை அழுத்தினார். காரணம் மின்னொளி வெளிச்சம் இல்லாமல் கடைக்குள் எதையும் செய்யும் சூழல் அங்கில்லை. அவர் நினைத்தபடியே முதலில் விளக்கு எரியத் தொடங்கியது. பிறகு மெல்ல கடைக்காரர் தன் பணியைத் தொடங்கினார்.

இந்த எடுத்துக்காட்டின்படி நாட்டின் பிரச்சனைகளையும் புரிந்துகொள்ள முடியும். முதலில் ஒளியேற்றுவதே சமூகத்தில் உள்ள பிரச்சனைக்கு தீர்வாகும். அதாவது மனசாட்சியின் விழிப்புணர்வே அறிவொளியாகும். இருளான வீடும், நாடும் ஒளி பெற வேண்டுமானால் விளக்கேற்ற வேண்டும். நாட்டில் நற்பணியை மேற்கொள்ளத் தனி மனிதர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். சிந்திக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள ஊக்குவிக்க வேண்டும். மனசாட்சி குறித்த விழிப்புணர்வின் அறிவொளி இல்லாமல் வேறெந்த வேலைக்கும் மதிப்பில்லை.

## சமூக மரம் நடும் முன்

John F. Kennedy (1917 - 1963) அமெரிக்க குடியரசுத் தலைவராக இருந்தபோது Hubert Lyautey (1854 - 1934) என்பவரை மேற்கோள்காட்டி "முன்பொரு முறை என் தோட்டக்காரனிடம் ஒரு மரத்தை நட்டுவை என்றேன். ஆனால் அது மெதுவாக வளரும் மரம். முழுமையாக வளர குறைந்தபட்சம் நூறு ஆண்டுகளை எடுத்துக் கொள்ளும் என்றும் ஆகவே அம்மரத்தை நட வேண்டாம் என்று என்னிடம் ஆட்சேபணை தெரிவித்தார். இது உணமையெனில் நேரத்தை வீணாக்க வேண்டாம். உடனே நடவு செய்யுங்கள் என்று நான் பதிலளித்தேன். (Chartered Accountant Supplement, New Delhi, 1979)

நாட்டின் வளர்ச்சியும் முன்னேற்றமும் நெடுங்காலம் பிடிக்கும் வேலை. தனி மனித நிலையிலும் சமூக அளவிலும் எண்ணற்ற உள்ளீடுகளையும் களச் செயல்பாடுகளையும் செலுத்திய பின்பே முழுப் பொலிவுடன் உயிர்த்தெழுகிறது. ஆற்றல் மிக்க நாடாகவும் மலர்கிறது. உலகில் பிற நாடுகளுக்கு மத்தியில் தனக்குரிய இடத்தை நிறுவிக் கொள்கிறது. இதைப் பற்றி மக்களிடம் எடுத்துரைக்கும்போது நூறு ஆண்டுகள் பிடிக்கும் எந்தவொரு கட்டுமானப் பணியிலும் நாட்டை ஈடுபடுத்த முடியாது எனக் கூறுகின்றனர். ஆனால் உண்மையில் நாம் கூற வேண்டியது. என்னவெனில் அவ்வளவு

நீண்டகாலம் எடுக்க வேண்டுமென்றால் ஒரு சிறு நேரம்கூட வீணடிக்க முடியாது. இன்றைய முதல் வாய்ப்பில் நம் “மரம்” நடவு செய்துவிட வேண்டும். விதைத்து விட வேண்டும்.

பெரிய வலிமையான மரம் உருப்பெற எப்பொழுதும் நூறு ஆண்டுகள் பிடிக்கும். யார் அவ்வாறான பெருமரத்தை விரும்புகிறார்களோ அவர்கள் உரிய காலம் வரை காத்திருக்க வேண்டும், அதைவிட்டு வீதியில் இறங்கி “மரம் வளர்க்கும் இயக்கம்” என முழக்கமிடுவதாலோ “மர சத்தியாகிரகம்” என தொடர் மறியல் செய்வதாலோ அல்லது “நூறு ஆண்டு பெருமரம்” எனப் பேரணி சென்றாலோ ஒரு மரம்கூட வளராது. ஒரேயொரு புல்லையும் உரிமை கொள்ள முடியாது. இவ்வாறான பொருத்தமில்லா வேலைகள் இருக்கிற நேரத்தை வீணாக்குவதைத் தவிர வேறில்லை.

நல்ல சொற்பொழிவை ஆற்றி ஒரு வீட்டைக் கட்டிவிட முடியாது. இது மடமை. அரசியல் செயலாடுகளில் இறங்கி நாட்டில் ‘கோட்டை’ கட்டிவிடும் அற்புதம் சாத்தியமில்லை. கவிதையும் இலக்கியப் படைப்புகளும் புரட்சியைக் கொண்டு வந்துவிட முடியாது. புலவரின் நயமிக்க உரை பெருங் கூட்டத்தை மயக்கிக் கட்டிப் போடும். ஆனால் நீண்டகாலத் திட்டங்களால் அர்ப்பணிப்பு நிறைந்த செயல்பாடுகளால் மட்டுமே உண்மையான பலன்கள் விளையும். பொறுமையும் கடப்பாடும் இப்போராட்டத்தில் துணைக்கு வரக்கூடியவை. சரியான திட்டமிடலும் நீண்டகாலப் பணிகளும் இதற்குத் தேவைப்படுகிறது.

## பிறருக்கு வழிவிடுதல்

பெரு நகரங்களில் ஒவ்வொரு நாளும் லட்சக்கணக்கான மக்கள் பேருந்துகள், கார்கள், வேன்களில் முன்னும் பின்னுமாக வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு என்று எதிர்த் திசைகளில் பயணிக்கின்றனர். அந்த வாகனங்கள் நிலவமைப்பின் சூழமைவைப் பொறுத்து, சில நேரங்களில் சீராகவும், சீரற்றும் வெட்டவெளியில் வேகமாக பயணிக்கின்றன. போக்குவர ஓட்டங்களில் பொதுவாக எந்தக் குழப்பங்களும் இல்லை, மோதல் இல்லை, ஏனென்றால் நகரின் ஒவ்வொரு முக்கிய சந்திப்பு மையங்கள், முனையங்களில் உரிய சமிக்ஞை கொடுக்கும் சிவப்பு, பச்சை, மஞ்சள் விளக்கு ஒளிர்ந்து உரிய வழிகாட்டுதல்களை நிலையாக அளித்துக் கொண்டிருக்கிறது. சிவப்பு விளக்குகள் ஒரு திசையில் செல்லும் போக்குவரத்தை நிறுத்துகின்றன, அதே நேரத்தில் பச்சை விளக்குகள் சரியான

கோணத்தில் இப்போது தொடர பாதுகாப்பானது என்பதைக் காட்டுகிறது.

அனைத்து ஓட்டுநர்களும் நெடுஞ்சாலைக் குறியீட்டைக் கடைப்பிடித்து, சிவப்பு விளக்குகளில் நிறுத்தி, பச்சை விளக்குகளில் மட்டுமே முன்னோக்கிச் சென்றால், சீரான, விபத்தில்லா போக்குவரத்து இருக்கும். மற்றவர்களுக்கு வழிவிட வேண்டிய அவசியத்தை ஓட்டுநர்கள் மதிக்க வேண்டும். வாழ்க்கையின் விஷயங்களில் இதுவே அதிகம். மற்றவர்களுக்கு வழிவிட்டு அவர்களின் உரிமைகளை வழங்க வேண்டியதன் அவசியத்தை மக்கள் உணர வேண்டும். இந்த வழியில் மட்டுமே அவர்கள் தங்கள் சொந்த உரிமைகளை கோர முடியும். அப்படிச் செய்யாவிட்டால், குழப்பம், குழப்பம், சாலை மறியல் செய்யும் ஓட்டுநர்களைப் போல் ஆகிவிடுவார்கள்.

ஐஐஐ

## நன்றி


ராஸ்–எ–ஹயாத் (Secret of Success) என்கின்ற நூல் உருதுவில் 1987ல் வெளிவந்து உருது வாசகர்களிடம் புகழ்ப்பெற்றது. இதுவரை இதன் இலட்சக்கணக்கான பிரதிகள் வெளியாகியுள்ளன. இது உருது மொழியில் மிக அதிகம் வாசிக்கப்பட்ட நூலாகும். ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட இந்நூல் மேலதிக வாசகர்களிடம் மவ்லானாவின் வாழ்க்கைக் கலை தொடர்பான கட்டுரைகளைக் கொண்டு போய்ச் சேர்க்க வழிவகுத்தது.

தற்பொழுது இந்நூல் ‘வெற்றியின் வாசலில்...” எனும் பெயரில் தமிழில் வெளிவருகிறது. தமிழ் வாசகர்களிடமும் இந்நூல் மிகுந்த வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

இம் மொழிபெயர்ப்புப் பிரதியைக் கவனத்துடன் வாசித்துப் பரிந்துரைகள் தந்த ஃபைஸ் காதிரி, வழக்கறிஞர் ஆம்பூர் முஷ்தாக் ஆகியோருக்கும், குறிப்பாக மொழியாக்கம் செய்த கொள்ளூ நதீம் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

Goodword Books,
Chennai
ஜனவரி 2023

# நிகரற்ற ஆளுமை
# மவ்லானா வஹீதுத்தீன் கான்



*1925ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி உத்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள 'ஆஸம்கர்' எனும் ஊரில் பிறந்து வளர்ந்து, மரபு வழியில் இஸ்லாமியக் கல்வியைப் பயின்று, பல ஆண்டுகளாக தில்லியில் வசித்து வந்த இஸ்லாமிய மார்க்கத்தின் மாபெரும் ஆளுமை; மாபெரும் அறிஞர், மவ்லானா வஹீதுத்தீன்கான் அவர்கள். தமது தொன்னூற்று ஆறாவது வயதில் 21–04–2021 அன்று காலமான மவ்லானா அவர்கள் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்லாமிய மார்க்கப் பணியையும் எழுத்துப் பணியையும் எவ்விதத் தொய்வுமின்றி செய்துவந்தவர்.*

*இஸ்லாம் குறித்த பல தவறான கருத்துக்களைக் களைந்து 'இஸ்லாம் ஓர் அமைதி மார்க்கம்' என்பதைத் தம்முடைய கட்டுரைகள் மூலமாகவும் சொற்பொழிவுகள் மூலமாகவும் தொடர்ந்து பரப்பிவந்தவர்; உலக அமைதிக்காகவும் மத நல்லிணக்கத்திற்காகவும் தொடர்ந்து குரல் கொடுத்தவர்.*


*உலக அமைதிக்கான மவ்லானாவின் பங்களிப்பை அங்கீகரித்துப் பல்வேறு நாடுகளும் அமைப்புகளும் விருதுகளை வழங்கி கவுரவித்துள்ளன. அவற்றுள் சில:*

1) Demiurgus Peace International Award by the Nuclear Disarmament Forum AG.
2) Ambassador of Peace Award by the International Federation for World Peace, Korea.
3) Rajiv Gandhi National Sadbhavna Award
4) National Citizen's Award, presented by Mother Teresa.
5) Sayyidina Imam Al Hassan Ibn Ali Peace Award in Abu Dhabi
6) Padma Vibhushan (second-highest civilian award- 2021)

*1976இல் மவ்லானா அவர்கள் உருது மொழியில் தொடங்கிய 'அர்ரிஸாலா' எனும் மாத இதழ், கடந்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகளாக இடைவெளியின்றி தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் ஆங்கில வடிவம்* Spirit of Islam *எனும் பெயரில் பெங்களூருவிலிருந்து வெளியிடப்பட்டு வருகிறது.*

*மவ்லானா அவர்கள் உருது மற்றும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த திருக்குர்ஆனின் எளிய தமிழாக்கம் தற்பொழுது செம்பதிப்பாகத் தமிழில் வெளிவந்து மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.*

மனிதனிடம் மறைந்திருக்கும் ஆற்றல்கள் அறிவார்ந்த வெளிப்பாடுகளாக மாற இந்நூலாசிரியர் பல்வேறு எடுத்துக்காட்டுகளை முன்வைக்கிறார். வழக்கமாக, சாதாரண சூழ்நிலைகளில் ஒருவரின் ஆற்றல்கள் செயலற்ற நிலையில் இருக்கும். ஆனால் நெருக்கடியான சூழ்நிலையை, அதிர்ச்சியை எதிர்கொள்ளும் தருணத்தில் மனம் அசாதாரணமாக எதிர்வினையாற்றுகிறது; சவால்களை சந்திக்கத் தயாராகிறது. கற்பனை செய்திராத தடைகளைத் தாண்டிச் செல்வதும், உரிய திசைகளை நோக்கி தம்மைச் செலுத்திக் கொள்வதும் இச்செயல்பாடுகளில் அடங்கும். தனிநபராகிய ஒவ்வொருவரிடமும் இருக்கும் அளப்பரிய ஆற்றல்கள், திறன்கள் ஆகியவற்றை அடையாளம் காணும் வண்ணமாக சாதாரண/ அசாதாராண வாழ்வனுபவங்களை இந்நூல் வாசகர்களின் முன் வைக்கிறது. மனச்சோர்வடையவோ தளர்வடையவோ தேவையில்லை என்பதைக் கூறி, உள்ளாற்றல்களை பயன்படுத்தக் கூடிய உடன்பாடான வழிமுறைகளைச் சோதித்துப் பார்க்க வேண்டும் என வலியுறுத்துகிறது.



மவ்லானா வஹீதுத்தீன் கான் (1925-2021) ஓர் இஸ்லாமிய அறிஞரும் ஆன்மிகத் தலைவரும் அமைதிச் செயல்பாட்டாளரும் ஆவார். உலக அமைதிக்கான அவரது முக்கிய பங்களிப்பிற்காக அவரது பணி சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

மவ்லானா அவர்கள் 200 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்.

அவை இஸ்லாத்தின் ஆன்மிக ஞானம், இறைத்தூதரின் வன்முறையற்ற அணுகுமுறை, நவீனத்துவம் மற்றும் பிற சமகால பிரச்சினைகளுடன் இஸ்லாத்தின் உறவு ஆகியவற்றைக் குறித்துப் பேசுகின்றன.

அமைதியின் கலாச்சாரத்தைப் பிரபலப்படுத்தவும் இஸ்லாத்தின் ஆன்மிகச் செய்தியை மக்களுடன் பகிர்ந்து கொள்ளவும் 2001 ஆம் ஆண்டு அவர் அமைதி மற்றும் ஆன்மிகத்திற்கான சர்வதேச மையத்தை (Cps International) தில்லியில் நிறுவினார்.

Goodword

www.goodwordbooks.com
www.cpsglobal.org

ISBN 978-93-91969-99-8
9 789391 969998
₹ 250 INR